

# விவசாய முதல் அமைச்சர்

சோமலெ

# விவசாய முதலமைச்சர்

(ஓமந்தூரார் வாழ்க்கை வரலாறு)

"சோமலெ"

வடலூர்
சுத்த சன்மார்க்க நிலையத்திற்காக
வெளியிடுவோர் :
குருகுலம் வெளியீட்டுப் பகுதி
வேதாரண்யம்.

குருகுலம் வெளியீட்டு எண் : 7

நூலின் பெயர் : விவசாய முதலமைச்சர்

ஆசிரியர் : சோமலெ

பொருள் : O. P. ராமசாமி ரெட்டியார் வாழ்க்கை வரலாறு

வெளியிட்டோர் : கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் வெளியீட்டு பகுதி

அச்சிட்டோர் : குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம்.

பதிப்பு : முதற்பதிப்பு டிசம்பர் 1979

பிரதிகள் : 2000

விலை : ரூ. 20-00

---

Gurukulam Publication No. 7

**Title** : VIVASAYA MUDALAMAICHAR

**Author** : **'Somalay'**

**Subject** : O. P. Ramasami Reddiar's Life History

**Publishers** : K. G. K. G. Publication Division

**Printers** : Gurukulam Printers, VedaranIam

**Edition** : First Edition December 1979

**Copies** : 2000

**Price** : Rs. **20-00**

# பதிப்புரை

*

நமது இந்திய வரலாற்றில் காந்தியடிகள் காலம் ஒரு பொற் காலமாகும். காந்தியடிகளால் நல்ல பல தலைவர்கள், நாட்டில் உருவானார்கள்.

தமிழகத்தில் ஆன்மீகத்துறையில் நால்வர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். அதேபோல தமிழகத்தில் காந்தியடி களால் உருவான அஹிம்சைப் போராட்ட வீரர்களில் அண்ணாச்சி நால்வர். திரு. ந. ம. ரா. சுப்பராமன், திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார், திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார், திரு. சர்தார். அ. வேதரத்தினம் இவர்கள் நால்வரும் அரசியல் தொண்டோடு காந்தியடிகளின் நிர்மாணத் தொண்டிலும் ஈடுபட்டு ஆக்கப்பணிகள் புரிந்து காந்திய வழி நின்றவர்கள். திரு. சுப்பராமன் அவர்கள் மதுரையைச்சுற்றி அந்த நாளிலேயே அரசாங்கம் அரிசன நலத்துறை யை எடுத்துக்கொள்ளும் காலத்திற்கு முன்பே சேவாலயம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அரிசனமாணவர்கள் தங்கிப்படிக்கும் மாணவர் விடுதிகளை நடத்தி தொண்டு செய்கின்றவர்கள். திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கோவையில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம் தொடங்கி காந்தியம், ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயக்கம், இவைகளை அடிப் படையாகக் கொண்டு பணியாற்றி வருகின்றவர்கள், திரு. ஓ. பி. ஆர். அவர்கள் வடலூரை முக்கியமாகக் கொண்டு காந்தியம், அருட்பெரும் ஜோதி வள்ளலார் அவர்களின் சுத்த சமரச சன்மார்க்கத்தை குறிக் கோளாகக்கொண்டு நிறுவனம் ஏற்படுத்தி தொண்டாற்றிவந்தவர்கள்,

திரு. சர்தார் அ. வேதரத்தினம் அவர்கள் வேதாரண்யத்தில் ஏழைப் பெண்களின் நல்வாழ்வை பேணும் அமைப்பாக கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் அமைத்து காந்திய வழியில் பணியாற்றியவர்கள்.

இந்த அமைப்புகள் இன்றும் தொடர்ந்து நல்ல பணி புரிந்து வருகின்றது. வேதாரண்யத்தில் குருகுலத்தின் மூலம் நல்ல நூல்கள் பல கொண்டு வரவேண்டும் என்ற ஆவலுடன் ஒரு பதிப்பகமும் பெண்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை நல்ல நூல்கள் சில வந்திருக்கின்றது. அந்த முறையில் குருகுலத்துடன் நெருங்கிய தொடர்புடைய திரு. ஓ. பி. ஆர். அவர்கள் வரலாறும் குருகுலத்தின் மூலம் வெளிவருவது மிகவும் பொறுத்தமாக இருக்கும் என்று ஆவல் கொண்டோம்.

குருகுலம் பணியில் மிகவும் ஈடு பாடு கொண்டு குருகுலத் தந்தையவர்கள் காலமான பிறகு பலவகையிலும் பொருளுதவியும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் சொல்லி குருகுலம் சிறந்து வலுப் பெற்று வளர்வதற்கு உதவி வருகின்றவர்கள் பொள்ளாச்சி வள்ளல் திரு. நா. மகாலிங்கம் அவர்கள். அவர்கள் உதவி இல்லா விட்டால் இந்த அளவு வளர்ச்சிகாண முடியுமா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. தனது இளமைப் பிராயம் முதலே தொண்டு உள்ளத்துடன் தனது பொருளீட்டும் திறன் அனைத்தும் காந்தியடிகளின் தர்மகர்த் தாக்கொள்கைகளுக்கு இணங்க பயன் உள்ள வகையில் பயன் படுத்தி வருகின்ற பாங்கு தமிழகம் அறியும். அதிலும் வடலூர் வள்ளல் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி அன்பு, அருள் உள்ளத்திலே திளைத்து வாழ்கின்றவர்கள்.

தமிழர் நாகரிகத்தின் தொன்மை பற்றி பல வானநூல் வல்லு நர்களைக்கொண்டு பெரும் ஆராய்ச்சியும், திரு. நா. மகாலிங்கம் அவர் கள் செய்து வருகிறார்கள். இது வரை அவர்கள் ஆராய்ச்சியின் மூலம் தமிழர் நாகரிகம் முப்பதாயிரம் ஆண்டு பிராயம் உள்ளது என துணிய இடம் இருக்கிறது. இத்தகைய நல்ல ஆராய்ச்சிப்பணி இவர்களுக்கே தகும்.

அவர்களுக்கு திரு. ஓ. பி. ஆர். அவர்கள் வரலாற்றைத் தொகுக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்ததில் வியப்பில்லை. தனது முயற்ச்சி ஊக்கத்தால் ரூபாய் பத்தாயிரத்திற்குமேல் செலவிட்டு இந்நூல் வெளிவர பெரிதும் நமது ஆசிரியர் திரு. சோமலெ அவர்களை ஊக்குவித்திருக்கின்றார்கள். திரு. சோமலெ அவர்களும் உலகம் பூராவும் சுற்றி பலருடன் பழகி நல்ல ஆழ்ந்த அனுபவம் உள்ளவர்கள்/

ஆகையால் ஒரு வரலாறு எப்படி அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணமாக உயர்வு நவிற்சி முதலிய அலங்காரங்கள் இல்லாமல் ஆனல் மனதில் ஆழத்தில் பதியும் வண்ணம் நூலை அமைத்திருக்கின்றார்கள். காந்தியடிகளுடைய சத்திய சோதனை போல நேரடியாக விஷயங்களை அணுகி நன்கு வரலாற்றை உருவாக்கி இருக்கின்றார்கள். இதற்கு அவர்களை எத்துணையும் பாராட்டத்தகும்.

இத்தகைய நல்ல நூலை நமது குருகுலத்தின் மூலம் கொண்டு வர வேண்டும் என்ற பெரும் ஆவல் கொண்டேன். இது பற்றி நமது தலைவர். திரு. நா. மகாலிங்கம் அவர்களை அணுகி ஆவலைத் தெரியப் படுத்தினேன். குருகுலமும் அவர்கள் வழியில் வந்து தொண்டாற்றி வருவதால் குருகுலம் இதைச் செய்வது பொறுத்தமாகும் என்று பெரும் உவப்புடன் அவர்கள் இப்பணியினைக் குருகுலத்திற்கு அளித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு குருகுலம் என்றென்றும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றது.

இப்பணியை செவ்வையாகச் செய்ய நண்பர் பகீரதன் அவர்கள் ஆலோசனையும் உதவியும், என்றுமே உள்ள ஆர்வம் ஊக்கம் இவற்றுடன் கிடைத்து வந்திருக்கின்றது. எங்கள் அனைவரையும் பின்னின்று ஊக்குவித்து பல சிரமங்களுக்கு இடையிலும் முகத்தில் புன்சிரிப்புடன் ஒவ்வொருமுறை நாங்கள் அணுகும் போதெல்லாம் உதவி வருகின்றார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுதான் எவ்வாறு என்று புரிய வில்லை.

நூலாசிரியர் திரு. சோமலெ அவர்களும் அவ்வப்போது தக்க ஆலோசனைகள் கூறி நூல் செம்மையாக வர உதவி இருக்கின்றார்கள் அவர்களும் குருகுலத்துடன் தந்தையவர்கள் காலத்தில் இருந்தே தொடர்புடையவர்கள். அவர்களுக்கும் நன்றிக் கடைப்பாடு உடைவர்கள் ஆவோம்.

தமிழ்ச் சமுதாயம் இந்த மாமனிதரின் வரலாற்றைப் படித்து பயன்பெற வேண்டும் என்று பெரிதும் விரும்புகின்றோம். அதிலும் தற்காலம் இளைஞர்கள் பலவிதமான அரசியல் நிகழ்ச்சிகளால் பாதிப்புற்று நாட்டின் விடுதலை இயக்கத்தின் வரலாறு பற்றி முழுமையாக தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்நூல் ஒரு நல்ல வாய்ப்பாகும்.

தற்காலம் இருக்கும் காகித விலை, நூல் தயாரிக்க ஏற்படும் செலவு இவைகளைக் கணக்கிட்டால் புத்தகத்தில் விலை மிகக் கூடுதலாகி விடும். இருப்பினும் ஓரளவு நிதானப்படுத்தியே விலையும் வைக்கப்பெற்று இருக்கின்றது. எனவே இந்த நூல் மக்கள் பால்

நல்ல வரவேற்பைப் பெறும் என்றே நம்புகின்றோம். அவசியம் இளம் தலைமுறையினர் இதைப் பெற்றுப் பயன் பெறுவர் என்று நம்புகின்றோம்.

இப்புத்தகத்தை குருகுல அச்சுப்பள்ளி மாணக்கியர்கள் மிகவும் உற்சாகத்துடன் செய்து முடித்திருக்கின்றனர். அவர்களுக்கும் இந் நூலை ஆக்குவதில் நல்ல ஊக்கம் இருந்திருக்கின்றது. இல்லா விட்டால் இந்த குறுகிய காலத்தில் இந்நூல் அச்சாகி வெளிவருவது சிரமமாக இருந்திருக்கும். அச்சகத்தைச் சார்ந்த அனைவருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டவன் ஆவேன்.

குருகுலத்தின் எங்கள் இந்த முயற்ச்சிக்கு அனைவரின் ஆதரவை யும் வேண்டிக்கொள்கின்றேன்.

வேதாரண்யம்
25—12—79

வே. அப்பாக்குட்டி,
மானேஜிங் டிரஸ்டி,
குருகுலம்.

# அணிந்துரை

நா. மகாலிங்கம்
*(இராமலிங்கர் பணிமன்றத்தலைவர்)*

யுக புருஷர் காந்தி அடிகளின் அடியொற்றி சத்யசோதனையாகத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட ஒரு சில தலைவர்களில் தமிழ் நாட்டில் பிறந்த திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும் ஒருவர்.

காந்தியடிகளை முழுக்க முழுக்க பின்பற்றி வந்த, வாழ்ந்து சிறந்த உத்தமர்.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருடன் நெருங்கிப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. அவர் அஞ்சா நெஞ்சர். ஒழுக்க சீலர். கொள்கைப் பிடிப்பு உள்ளவர். சத்தியம் தவறாதவர். எளிய வாழ்வை மேற்கொண்டவர். ஆற்றல் மிக்கவர். மனதில் தோன்றும் உண்மையைத் தயங்காமல் சொல்லக்கூடியவர். இராமகிருஷ்ண பரமஹம்சரிடமும், வள்ளலாரிடமும் பரம பக்தி கொண்டவர்.

நமது நாட்டின் மிகப்பெரிய தொழிலான விவசாயத் தொழிலின் நுட்பங்களை நன்கு அறிந்த நிலையான விவசாயி. தரிசு நிலங்களை உழுது வெற்றிக்கொண்ட பண்ணைப் புலவர். வேளாண்மை பண்டிதர், அடக்கமே உருவானவர். ஆழ்ந்த அறிவாளி. நிறைகுடம். படோடோபம், பகட்டு, போலி விளம்பரங்கள் இன்னதென்றே அறியாதவர்.

அரசியலில் தூய்மை காத்தவர். தமிழகத்தில் முதல்வர் பதவி அவரைத் தேடி வந்தது. ஆந்திரம், கேரளம், கர்னாடகம் ஆகிய மாநிலங்களின் பகுதிகளைக்கொண்ட பழைய சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சர் பதவியில் அவர் இருந்தபோதும் இறைவனையே நினைத்திருந்தார்.

அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் வடலூரிலே சென்று வாழ ஆரம்பித்தார். தம்முடைய செல்வம், செல்வாக்கு எல்லாவற்றையும் அர்ப்பணித்து 'சுத்த சன்மார்க்க நிலையம்' கண்டார்.

அதன் பணிக்கே தம்மை முழு மகிழ்ச்சியுடன் ஈடுபடுத்திக் கொண்டு, அங்கேயே கடைசிவரை வாழ்ந்தார். மாகாண முதல்வராக இருந்தபோதுகூட கிடைக்காத மகிழ்ச்சியை அந்த நிலையத்து ஏழை அனாதைக் குழந்தைகளின் தொண்டில் அடைந்தார்.

சுத்த சன்மார்க்க நிலையத்துக்கு இருநூறு ஏக்கருக்குமேல் நிலங்களை வாங்கிச் சேர்த்து அது நிலையாக நடைபெறுவதற்கான அறக்கட்டளையையும் உருவாக்கினார்.

வடலூரில் சுத்த சன்மார்க்க நிலையம் வள்ளல் பெருமானின் லட்சியப்படி நடைபெற்று வருகிறது.

அதில் ஒரு அனாதை மாணவர் இல்லமும், சுத்தசன்மார்க்க சாதனையில் ஈடுபடும் சான்றோர் வாழ ஓர் இல்லமும், மனத்திற்கு பேரமைதியைத் தரும் ஓர் அழகிய தியான மண்டபமும், உயர் தரப் பள்ளிக்கூடமும் இயங்கி வருகின்றன.

அவர் இருந்தபோது ஏழை எளிய மக்களுக்கு இலவச மருத்துவமனை ஒன்றையும் அங்கே நடத்தி வந்தார்.

இன்றும் இந்த ஸ்தாபனங்கள் எல்லாம் வடலூரில் ஒப்பற்ற கல்விப் பணிகளையும், அருள் பணிகளையும் ஆற்றி, வடலூரின் சூழ்நிலையை உயர்த்தி வருகிறது.

ஓ. பி. ஆர். போன்ற ஒழுக்கச் சீலர்கள் பல தலைமுறை களுக்கு ஒரு முறைதான் தோன்றுவார்கள். இப்பேர்ப்பட்ட உத்தமர்களைப் பற்றி அடிக்கடி சொல்லிவந்தால்தான், இந்த நாட்டில் மேலும் உத்தமர்கள் தோன்றுவார்கள். அதனால்தான்

நம் காலத்தில் வாழ்ந்த இந்தப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளிப்படச் செய்யவேண்டும் என்று எண்ணினேன். ஓ. பி. ஆருடன் நெருங்கிப் பழகியவர்களான சிலரை அணுகி அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதும்படி தூண்டினேன். அவர்களுக்கு விருப்பம் இருந்தும் அவர்கள் மேற்கொண்டிருக்கும் வேலை காரணமாக அவர்களால் முடியாமல் போய்விட்டது.

ஓ. பி. ஆர். அவர்கள் 1970ல் அமரத்வம் பெற்றபோது அவர் வாழ்க்கை வரலாற்றை விரைவில் எழுதி வெளியிட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்தேன் அவருடன் பழகியவர்கள் எல்லாம் எழுபது வயதையும் எண்பது வயதையும் தாண்டியவர்களாக இருந்தார்கள். அவர்களும் மறைந்து விட்டால் ஓ. பி. ஆர். அவர்களைப் பற்றிய செய்தியே எதிர்காலத் தலைமுறைக்குத் தெரியாமல் போய்விடுமே என்று கவலைப்பட்டேன்.

என்னுடைய கவலையை எழுத்தாள நண்பர் சோமலெயிடம் தெரிவித்தேன். அவர் ஓ. பி. ஆர். வரலாற்று நூலை எழுதுவதற்கு முன்வந்தார்.

இந்த நூலை எழுதுவதற்காக திரு. சோமலெ பத்து மாத காலம் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். ஓ. பி. ஆர். உடன் பழகிய முன்னூறுக்கு மேற்பட்ட வயது முதிர்ந்த பெரியோர்களைச் சந்தித்து விஷயங்களைச் சேகரித்தார்.

சோமலெயின் பிரயாணச் செலவையும் இதர செலவுகளையும் என் தந்தையார் பெயரில் இருக்கும் நாச்சிமுத்து அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள முன் வந்தது.

சோமலெயைச் சந்தித்த பெரியார்களில் பாதிபேர் இன்று இல்லை. இன்னும் கால தாமதம் ஏற்பட்டிருந்தால் ஓ. பி. ஆரைப் பற்றிய எவ்வளவோ விஷயங்கள் மக்களுக்குத் தெரியாமல் போயிருக்கும்.

சோமலெ தாம் சந்தித்த முன்னூறுக்கும் மேற்பட்ட வயது முதிர்ந்த பெரியவர்களிடமிருந்து சேகரித்தச் செய்திகளுடன் அரசாங்க பத்திரங்களிலும் கிடைத்த பல தகவல்களையும் முறைப்படுத்தித் தொகுத்தும் வகுத்தும் இந்த அருமையான நூலை எழுதி இருக்கிறார்.

ஓ. பி. ஆர். சென்னை மாநில முதல் அமைச்சராக இருந்த காலத்தில் நாடு பெற்ற நலனை இந்த நூலில் காணமுடிகிறது.

ஐதராபாத் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கு ஓமந்தூராரின் ராஜதந்திரம் எவ்வளவு கைகொடுத்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது.

இதுபோலவே பிரஞ்சு நாட்டின் ஆதிக்கத்தில் இருந்த பாண்டிச்சேரி காரைக்கால் ஆகிய பகுதிகள் இந்தியாவுடன் இணைவதற்கும் திரு. ஓ. பி. ஆரின் சாதனை எவ்வளவு மகத்தானதாக இருந்திருக்கிறது என்பதையும் பார்த்துப் பிரமிக்கவேண்டி இருக்கிறது.

திரு. ஓ. பி. ஆர். சென்னை மாநில முதல் அமைச்சராக இருந்தபோது விவசாயத் துறையில் பல்வேறு ஆய்வுகளைச் செய்ய வழி வகுத்திருக்கிறார். பழத்தோட்ட வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டில் உள்ள வாய்ப்புக்களைப் பற்றி ஓ. பி. ஆர். எவ்வளவு ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

பயிர் பாதுகாப்பு இன்ஷியூரன்ஸ் திட்டத்தைக்கொண்டு வருவதற்கு திரு. ஓ. பி. ஆர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் இப்போதுதான் பயன்பட ஆரம்பித்திருக்கிறது.

சுதந்திரம் பெற்ற உடனே சென்னை மாநிலத்தின் இரண்டாவது முதல் அமைச்சர் பதவியை திரு. ஓ. பி. ஆர். ஏற்றதால் பல சிக்கலை அவர் எதிர்பட வேண்டியிருந்தது. அவற்றை அவர் எவ்வளவு துணிவுடனும் தீர்க்க தரிசனத்துடனும் தீர்த்திருக்கிறார் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

இளமையில் இருந்தே திரு. ஓ. பி. ஆர். அவர்களுக்குத் தமிழ் மொழியிலும் வள்ளலாரின் சுத்த சன்மார்க்கக் கொள்கையிலும் இருந்த ஈடுபாட்டை இந்த நூலில் காணலாம்.

திரு. ஓ. பி. ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலுக்குள் 100 பேருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளையும், தமிழ்நாட்டின் அந்த நாளைய சூழ்நிலையையும்மிக அற்புதமாக இணைத்திருக்கும் ஆசிரியரின் உத்தி பாராட்டுக்கு உரியது.

கரடு முரடான பல சங்கதிகளை நகைச்சுவையுடன் ஆசிரியர் எடுத்துக் கூறும் அழகு படித்து அனுபவிக்கவேண்டிய சுவையான பகுதிகளாகும்.

தமிழ் மக்கள் கோழைகளாக அஞ்சி அஞ்சிச் சாகாமல் அவ்வப்போது பதவியில் இருப்பவர்களுக்குத் தாளம் போடாமல் நேர்மைக்கும் நியாயத்துக்கும் மதிப்பளித்து வாழ்வதற்கு இந்த ஓ. பி. ஆர். வரலாற்று நூல் வழிகாட்டும் என்று நம்புகிறேன்.

இந்த அருமையான வரலாற்று நூலை இராமலிங்கர் பணிமன்றத்தின் மூலமாவது ஓ. பி. ஆர். அவர்கள் நிறுவிய சுத்த சன்மார்க்க நிலையத்தின் மூலமாவது வெளியிட வேண்டும் என்று நான் நினைத்துக்கொண்டிருந்த போது திரு. அப்பாக்குட்டி அவர்கள் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலப் பதிப்பகத்தின் மூலமாக வெளியிடுவதற்கு முன்வந்தார்.

திரு. ஓ. பி. ஆர் அவர்களுடன் நெருங்கிப் பழகிய நண்பர் களில் ஒருவர் சர்தார் வேதரத்னம் அவர்கள் ஓ. பி. ஆர். அவர் களைப்போலவே காந்தி அடிகளின் லட்சியப்படி வாழ்க்கையை நடத்தி வந்த சத்திய சீலர்.

அவர் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் என்ற நிறுவனத்தின் மூலம் பெண்களுக்கு கல்விப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும் அளித்து வந்தார்.

சர்தார் வேதரத்தினம் அவர்கள் ஆரம்பித்த அந்த குருகுலத்தை அவருடைய மகன் திரு. அப்பாக்குட்டி அவர்கள் சிறந்த முறையில் இப்போது நடத்தி வருகிறார்.

அனாதைப் பெண்களின் எதிர்கால வாழ்க்கைக்காகவே ஆரம்பிக்கப்பட்டது கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலப் பதிப்பகம். அந்தப் பதிப்பகத்தின் மூலம் இந்த நூல் வெளி வருவது மிகவும் பாராட்டுக் குரியது என்பதில் சந்தேகமில்லை.

சிறந்த முறையில் குறைந்த காலத்தில் அச்சிட்டு நூலை வெளி கொணர்ந்திருக்கும் திரு. அப்பாக்குட்டியைப் பாராட்டு கிறேன்.

''விவசாய முதல் அமைச்சர்'' என்ற இந்த நூல் ஒவ்வொரு தமிழனுடைய வீட்டிலும் இருக்கவேண்டிய ஒப்பற்ற வரலாற்று நூல். வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் ஒவ்வொரு சோதனை யிலும் எப்படி ஈடுகொடுத்து உயரலாம் என்பதையும் இந்த நூல் போதிக்கிறது. இந்த நூலைப் படிப்பதின் மூலமாக ஒரு மனிதன் எப்படித் தூய்மையாக வாழவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்வதற்கு இந்த நூல் பெரிதும் உதவும்.

திருவருளின் துணையினாலேயே இந்த நூல் வெளி வந்திருக்கிறது. தமிழ்ப் பெருமக்கள் படித்துப் பயன்பெறவேண்டும் என்று அன்புடன் வேண்டுகிறேன்.

இராமலிங்கர் பணிமன்றம்,
31, போயஸ் தோட்டம்,
சென்னை-600 086.

நா. மகாலிங்கம்.

# முன்னுரை

ஒழுக்க சீலராகவும் அஞ்சாநெஞ்சினராகவும் நம் நாட்டின் பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்கியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை இளைஞர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு காலப் பகுதியை எழுத விழைபவருக்கும் அவருடைய வாழ்க்கை விவரங்கள் இன்றியமையாது தேவைப்படும்.

இதனை உணர்ந்த சன்மார்க்கத் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் இந்த வாழ்க்கை வரலாற்றை உருவாக்க முடிவுசெய்து, அப்பொறுப்பை என்னிடம் ஒப்புவித்தார்கள்.

ஓமந்தூராரை நான் இரண்டு முறை சந்தித்து அவருடன் விரிவாக உரையாடியுள்ளேன். அவருடைய வரலாற்றை எழுது வதற்குப் பயன்படக்கூடிய எந்தச் செய்தியையும் அந்தச் சந்திப்புக்களில் நான் கேட்கவும் இல்லை. அவர் சொல்லவும் இல்லை. தம் வரலாறு எழுதப்படுவதை அவர் விரும்பவும் மாட்டார்:

ஓமந்தூராரின் குடும்பத்தினர், உறவினர்கள், நீண்டகால நண்பர்கள், அவருடன் சிறையில் இருந்தவர்கள், அவர் முதலமைச்சராக இருந்தபோது உயர் பதவிகளில் இருந்தவர்கள், முதலமைச்சரின் அலுவலகத்தில் பணிபுரிந்தவர்கள், அவர் நியமித்த அமைச்சர்கள், அவருடைய அரசியல் கட்சியினர்

மாற்றுக் கட்சியினர், அவருடைய உடல்நலத்தைப் பேணிய மருத்துவர்கள், விமானம் ஓட்டியவர்கள், முடிவெட்டியவர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் அமைந்த நூலே இது; நெருங்கிப் பழகி சொந்த அனுபவத்தில் எழுதப்பட்ட நூல் அன்று.

தமிழக அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்திலும், ஆவணக் காப்பகத்திலும் உள்ள ஆதாரங்களையும், சட்டசபை, மேலவை நிகழ்ச்சிகளையும் படித்துப் பார்த்துக் குறிப்புகளை எழுதிக் கொண்டேன். இதற்குத் தேவையான இசைவை வழங்கிய தமிழக அரசாங்கத்திற்கும் தலைமைச் செயலர் திரு. வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ். அவர்கட்கும் என் நன்றி உரியது. ஆவணக் காப்பகத்தின் ஆணையர்களான திரு. எஸ்பி. இளங்கோவன் ஐ. ஏ. எஸ்., திரு. ஏ. என். நடராஜன், ஐ. ஏ. எஸ். மற்றும் அங்குள்ள அலுவலர்கள் ஆகியோர் செய்த உதவியை மறப்பதிற்கில்லை.

இந்த ஆராய்ச்சிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் திரு. மகாலிங்கம் அவர்கள் பேரன்புடன் செய்து கொடுத்ததோடு தக்கவர்களுக்கு அறிமுகக் கடிதங்களும் வழங்கினார்கள்.

ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த பெருமக்கள் இந்த முயற்சியை வரவேற்று ஒரு வேண்டுகோளை அச்சிட்டனர். அதைப் படித்த சிலர் என்பணியில் ஒத்துழைக்க முன்வந்தனர்.

துறவிகளையும் அரசியல் தலைவர்களையும் எழுத்தாளர்களையும் அலுவலர்களையும் – தமிழ் நாட்டில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முக்கியமானவர்களையும்–சந்தித்து அவர்களுடைய ஆசியைப் பெறும் பேற்றினை எனக்கு இந்தப் பணி நல்கியது. 20, 25 ஆண்டுகளுக்கு முன் வேறு நிலைகளில் நான் அறிந்திருந்த பெருமக்களின் நட்பைப் புதுப்பித்துக் கொள்ளவும் நேரிட்டது.

எனக்கு உதவி செய்தவர்களின் நீண்ட பட்டியலை நூலின் இறுதியில் காணலாம். தங்களுக்குத் தெரிந்த நிகழ்ச்சிகளைக் கூறியும் தங்களிடமிருந்த கடிதங்களையும் நூல்களையும் அளித்தும்,

போட்டோக்களையும் பிளாக்குகளையும் தந்தும் மேலும் இன்னாரைச் சந்திக்கலாம் என்று வாய்ச்சொல் அருளியும் பலர் துணை செய்தனர். வயது முதிர்ச்சியால் நினைவாற்றலை இழந்தவர்கள், என் செவிக்கு உணவு தராத குறையை, வயிற்றுக்கு உணவு ஊட்டி நிறை செய்தனர்!

திரு. பகீரதன், திரு. ஊரன் அடிகள், திரு. மூலசூர் மாதவ ரெட்டியார், கயப்பாக்கம் ஜமீன்தார் திரு. முத்துலிங்க ரெட்டியார் அவர் தம்பி திரு. முத்துமல்லா ரெட்டியார் ஆகியோர் மன முவந்து செய்த உதவிகள் இன்றும் என்றும் என் நினைவில் இருக்கும்.

நான் பேட்டி கண்டவர்களில் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, திரு. சேலம் சுப்பிரமணியம், திரு. வரதப்ப செட்டியார் ஆகியோர் இறந்துவிட்டது, மனிதனின் நிலையாமையை நமக்கு அறிவுறுத்துகின்றது. விவரங்கள் தெரிவித்திருக்கக்கூடிய வேறு பலர், இந்தநூல் எழுதும் திட்டம் உருவாகு முன்னரே உயிர் நீத்துவிட்டனர்.

நூலின் அமைப்பு முறைக்கும் கூறப்பட்டுள்ள கருத்துக் களுக்கும் நானே பொறுப்பு ஆவேன். ஓமந்தூராரின் கொள்கை களை, அவர் சொற்களிலேயே தெரிவித்துள்ளேன். அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் உண்மை வடிவம், கற்பனையைவிடச் சுவையாக உள்ளது. எனவே, மூக்கு முழி வைக்கும் வேலை இந்த எழுத்தாளனுக்கு ஏற்படவில்லை!

சம்பந்தப்பட்டவர் சிலரின் வாழ்க்கையை கையடக்கமாக அடிக்குறிப்பில் இணைத்திருக்கிறேன். நேற்றைய வரலாற்றை இன்றைய இளைஞர்களுக்கும் அடுத்த தலைமுறையினர்களுக்கும் புரியவைக்க இந்த உத்தியைக் கையாண்டேன். நாடகத்துக்குள் நாடகம்போல, ஒரு வாழ்க்கை வரலாற்றுக்குள் பல வாழ்க்கை வரலாறுகளாக இது அமைந்துள்ளது.

இந்த நூல் எனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தந்திருக்கிறது; வாசகர்களுக்கும் தரும் என்பது என் நம்பிக்கை

நல்லவர் ஒருவரைப்பற்றி எழுதும் நல்ல வாய்ப்பை வேறு யாருக்கும் வழங்காமல் எனக்கு வழங்கிய நல்லவருக்கு மீண்டும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே**
**நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே**
**அவரோடு இணங்கி யிருப்பதுவும் நன்றே.**

— மூதுரை.

சாஸ்திரி நகர் அஞ்சல்
நிலையக் கட்டிடம்,
சென்னை 600 020,
30—11—1978

**'சோமலெ'**

# பொருளடக்கம்


| எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | குடும்பமும் இளமைக்காலமும் | 4 |
| 3. | விடுதலை இயக்கம் | 21 |
| 4. | சிறை வாழ்க்கை | 43 |
| 5. | அண்ணாச்சிமார் | 57 |
| 6. | இயல்புகள் | 66 |
| 7. | தியானமும் பிரார்த்தனையும் | 95 |
| 8. | தமிழ்ப் பற்று | 105 |
| 9. | சைவசமயத்தில் ஆர்வம் | 119 |
| 10. | பாரதநாடு பழம்பெரும்நாடு | 133 |
| 11. | துறவிகளிடம் ஈடுபாடு | 144 |
| 12. | பண்ணைப் புலவர் | 161 |
| 13 | கூட்டுறவு இயக்கம் | 182 |
| 14. | பொருளாதாரக் கருத்துக்கள் | 185 |
| 15. | ஹரிஜன இயக்கம் | 199 |
| 16. | கிராமங்களில் மறுமலர்ச்சி | 206 |
| 17. | கதர்த் துறை | 219 |
| 18. | குஷ்ட நிவாரணம் | 223 |
| 19. | பதவியேற்றல் | 231 |
| 20. | விடுதலையும் விளைவுகளும் | 255 |
| 21. | மகாத்மாவின் மரணம் | 274 |
| 22. | வேலை நிறுத்தங்கள் | 279 |
| 23. | ஊழல் ஒழிப்பு | 284 |
| 24. | அநுமானின் கதை | 293 |
| 25. | புதுச்சேரி | 301 |
| 26. | இந்துசமய அறநிலையச் சட்டம் | 311 |
| 27. | சில சாதனைகள் | 329 |
| 28. | பதவி விலகல் | 334 |
| 29. | வள்ளலார் கருத்துக்கள் | 346 |
| 30. | வடலூர்ப் பணி | 360 |
| 31. | பெரும்பிரிவும் சமாதியும் | 391 |
| 32. | ஓமந்தூராருக்குப் பின் | 411 |

# பிற்சேர்க்கை

❋

ஓமந்தூரார் குடும்பம்

ஆண்டுவாரியாக வாழ்க்கை நிகழ்ச்சிகள்

உதவிய நூல்நிலையங்கள்

பேட்டிமூலம் உதவியவர்கள்

பயன்பட்ட பழைய இதழ்கள்

மற்றும் உதவியவர்கள்

பெயர்க் குறிப்பு அகர வரிசை

சென்னை இராசதானி – நிலப்படம்



திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்

தோற்றம்: 1895 மறைவு: 1970

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்"
— திருக்குறள்.

# 1

# முன்னுரை

வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்ட குடும்பத்தில் பிறந்தவர், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார். இவருடைய முன்னோர்கள் நன்செய்நிலங்களை மட்டும் பயிரிட்டனர். இவர் தரிசாகக் கிடந்த புன்செய் நிலங்களிலும் பயிர்களை உண்டாக்கினர். பழத்தோட்டக்கலையில் வல்லவராக விளங்கினர். ஔவையார் அதியமானுக்கு வழங்கியதால் புகழ்பெற்ற நெல்லியைக் காய்க்க வைப்பதில் கைதேர்ந்தவராக இருந்தார். எலுமிச்சை மரம் வைத்து வளர்ப்பதில் இவர் கைராசி உடைய வராகத் திகழ்ந்தார்.

இவருடைய ஊர் ஓமந்தூர். அங்கிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது திண்டிவனம் என்னும் நகரம். தம் பண்ணையிலிருந்து மாட்டு வண்டியில் திண்டிவனத்திற்குப் போனர். அங்குப் போய்ச் சேர்ந்ததும் ஒரு பெரியவரைப் பார்க்க விரும்பினர். பண்ணை யிலிருந்து எலுமிச்சம்பழம் கொண்டு வராததால், திண்டிவனம் சந்தைக்குள் நுழைந்து விலைக்கு எலுமிச்சம்பழம் வாங்கினர். அப்போது கூடைக்காரிக்கும் இவருக்கும் நடந்த உரையாடல் இது :

ஓமந்தூரார்: 4 எலுமிச்சம்பழம் கொடம்மா, என்னம்மா விலை?

கூடைக்காரி: பழம் 10 காசு சாமி.

ஓமந்தூரார்: 5 காசு என்று கொடு அம்மா.

கூடைக்காரி: 5 காசுக்கு வேண்டுமானுல் அதற்கு வேறு எலுமிச்சம்பழம் இருக்கு, தாரேன். இந்தக் கூடையில் இருக்கிறது, நல்ல பழம்; நிறமானது; சாறு ரொம்பப் பிழியலாம்; பம்பாய் மெட்ராசுக்கு எல்லாம் லாரி லாரியா போவுது. சாறு பிழிந்து பாட்டல் பாட்டலா சீமைக்கு விக்கிருங்க; திண்டிவனம் பஜார் பூராவும் விசாரிச்சுப் பாரு, பெரியவரே; ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தோட்டத்துப் பழம்னு கேளு. ஒருத்தரும் 10 பைசாவுக்குக் குறஞ்சு தர மாட்டாங்க. இது பேரம் பண்ணுகிற சரக்கு இல்லே.

## யார் இந்த ஓமந்தூரார்?

பொது வாழ்வில் ஈடுபடுவோர் மூவகையினர். சுயநலமி, அரசியல்வாதி, நாட்டை உருவாக்கும் சான்ருேர்.

சுயநலமி, தன் குடும்பத்துக்குப் பணம் சேர்ப்பதிலும், தன் உறவினர்களுக்கு வேலே கொடுப்பதிலும், தன் புகழைப் பரப்புவதிலும், தனக்குச் சிலேகள் முதலியன வைத்துக் கொள்ளுவதிலும், தனக்குப் பிறகு தன் உறவினர்களே அரியாசனத்தில் அமர்த்துவதிலும் கவனம் செலுத்துவான்.

அரசியல்வாதி அடுத்த தேர்தலில் தானும் தன் கட்சியும் வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளே நிறைவேற்ற எதையும் துணிந்து செய்வான்.

நாட்டை உருவாக்கும் சான்ருேர்கள் (Statesmen) அடுத்த தலேமுறையினரைப் பற்றியும் நாட்டு நலனேப்பற்றியும் மட்டுமே சிந்திப்பார்கள்.

ஓமந்தூரார் மூன்ருவது வகையினர். மனேவி இறந்தபோது இவர் கவலேப்படவில்லே. "இவனுக்கு இந்த அளவில் இல்வாழ்க்கை போதும் என்பது இறைவனின் ஆணே" என்று கருதினுர். மறுமணம் செய்துகொள்ள இசையவில்லே.

மகன் இறந்தபோது இவர் அழவில்லை, பரிபக்குவ நிலை அடைந்துவிட்டார். பிணத்தைப் பார்க்கவும் செல்லவில்லை. தம்பியை அனுப்பி ஈமச் சடங்குகளைச் செய்ய ஏற்பாடு செய்தார்.

பதவி வந்தபோது ஏற்கத் தயங்கினர்.

பதவியிலிருந்து விலகியபோது, நிலைகுலையவில்லை. மனம் கலங்கவில்லை. ''என் பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்ற செல்வமன்றோ'' என்று இராமபிரான் பரதனிடம் அரசை ஒப்புவித்தார் அல்லவா? அதுபோல திரு பி. எஸ். குமாரசாமி ராஜாவிடம் ஒப்படைத்துவிட்டு, காட்டுக்குச் சென்ற இராமனைப் போலவே ''அன்றலர்ந்த செந்தாமரை மலர்'' போன்றமுகத்துடன் விவசாயியாக செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வந்த ஓமந்தூரார் விவசாயியாகவே, தம் பண்ணைக்குத் திரும்பினர்.

ஆனல், ஹைதராபாத் நிஜாம் தன் சமஸ்தானத்தைச் சுதந்திர நாடாக அறிவித்தபோது, மனம் கலங்கினர். நாட்டுக்கு ஏற்பட்ட ஆபத்தை உணர்ந்து அஞ்சினர். அல்லும் பகலும் அதே சிந்தனையாக இருந்தார்.

புதுச்சேரியை இந்திய யூனியனுடன் இணைப்பதில் ஏற்பட்ட காலதாமதமும் ஓமந்தூராருக்குப் பெரும் கவலை கொடுத்தது. புதுக்கோட்டை, புதுச்சேரி, ஹைதராபாத் மூன்று பகுதிகளையும் இந்தியாவில் இணைக்கக் காரணமாக இருந்தவர்களுள் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு அடுத்த இடம் ஓமந்தூராருக்கு உரியது.

"ஓமந்தூ ராரென்பா ரோப்பியா ரென்பார்கள்
நாமங்கள் மேலும் நவிலுங்கால் — சேமஞ்சால்
பேருழவின் பண்பால் பெரியவள வென்பாரன்
பாரிராம சாமிரெட்டி யார்"

# 2

# குடும்பமும் இளமைக் காலமும்

## மாவட்டம்

தமிழ்நாட்டில் சிறப்புமிக்க மாவட்டம் என்று சொல்லத் தக்கது "தென் ஆர்க்காடு". அடைமொழியின்றி 'கோயில்' என்னும் சொல்லால் சைவர்கள் போற்றும் சிதம்பரம் இம் மாவட்டத்தில் உள்ளது. தேவாரம் பாடிய அப்பரும், சுந்தரரும், மங்களாசாசனம் பாடிய ஆழ்வார்கள் பலரும், நம்பியாண்டார் நம்பியும், நாதமுனி ஆச்சாரியாரும், மெய்கண்டாரும், மெய்கண்டாருடைய மாணவர் அருள் நந்தி சிவாச்சாரியாரும் அவருடைய மாணவர் மறைஞான சம்பந்தரும், அவருடைய மாணவர் உமாபதி சிவாச்சாரியாரும், நாயன்மார்களில் ஒன்பது பேரும், அருட்பா அருளிய இராமலிங்க சுவாமிகளும் அவதரித்தது இம்மாவட்டத்தில்தான். இத்தனை சிறப்புடைய மாவட்டமே ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த பெருமையைப் பெற்றிருக்கிறது.

வட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வடகோடியில் இருப்பது திண்டிவனம் என்னும் வட்டம். இவ்வட்டத்தின் தலைநகர் திண்டிவனம். சங்க நூலான சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக்கோடன் என்னும் சிற்றரசன் ஆட்சிபுரிந்த ஒய்மா நாடு என்று இப்பகுதி கல்வெட்டுக்களில் குறிக்கப் படுகின்றது. சிவபெருமான் கோயில்கொண்ட திண்டீச்சுரம் என்னும் திருக்கோயில் இப்பொழுது திண்டிவனத்தின் உட்கிடை யாக ஒடுங்கியிருக்கும் கிடங்கில் என்னும் ஊர்; இதுவே முன்னாளில் ஒய்மாநாட்டின் தலைநகராக இருந்தது என்கிறார், சொல்லின் செல்வர் பேராசிரியர் டாக்டர் சேதுப்பிள்ளை. இக்கோயிலை இராஜராஜ சோழனும், ஏனைய சோழ மன்னர்களும் ஆதரித்து வந்தனர். திண்டீச்சுரத்தில் நாள்தோறும் இன்னிசை நிகழ்தல் வேண்டுமென்று எண்ணிய இராஜராஜன், வீணைவாசிக்க வல்லுநர் ஒருவருக்கும், வாய்ப்பாட்டில் வல்லுநர் ஒருவருக்கும் நன்கொடை யாக நிலங்கள் வழங்கியதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இராஜராஜன் வெட்டிய ஏரி ஒன்றும் திண்டிவனத்தில் உள்ளது.

சிற்றூர்

திண்டிவனத்திலிருந்து 10 கி. மீ. தொலைவில் (கிளியனூர் வழியாக) புதுச்சேரிக்குச் செல்லும் சாலையோரமாகச் சற்று தெற்கே அமைந்த சிற்றூர் ஓமந்தூர். இது, ஆரவாரமற்ற கிராமம்.

சோழர் காலத்திய கல்வெட்டுக்களில் இவ்வூர்ப் பெயர் 'திருச்சுரவி ஓமந்தூர்' என்று பொறிக்கப் பெற்றிருக்கிறது.

இரண்டு பழமையான கோயில்கள், ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடம், 50, 60 சிறு வீடுகள், அங்குமிங்கும் இடிந்த கட்டிடங்கள், ஊரைச் சுற்றி வயல்கள், தெற்கு நோக்கிப் பார்த்தால் அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்றதும் மயில் வடிவமாக அமைந்த மலை மீது கட்டப் பெற்றதுமான மயிலம் முருகன் கோயில் – இதுதான் இன்றைய ஓமந்தூர்.

திருச்செந்தூர் முதல் விசாகப்பட்டினத்துக்கு வடக்கே வரை பரந்திருந்த ஒரு மாபெரும் சென்னை இராசதானியின் முதலமைச்சராக இருந்த ஒருவரின் ஊர் இது என்பதற்கு இங்கு

எவ்வித அறிகுறியோ அடிச்சுவடோ இல்லை. இதற்குக் காரணம் இராமசாமி ரெட்டியார் தன்னை, சென்னை இராசதானியின் முதலமைச்சராகக் கருதினரே தவிர, ஓமந்தூருக்கு முதலமைச்சர் என்று நினைக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், தாம் ஒரு முதலமைச்சர் என்ற சிந்தனைகூட இவருக்கு ஏற்பட்டதில்லை.

ஊர்ப் பெயராகிய ஓமந்தூர், இவருடைய பெயருடன் இணைந்து, பிற்காலத்தில் மக்கள் இவரை ஓமந்தூரார் என்றே அழைக்கலாயினர். இக்காரணத்தால் சின்னஞ்சிறு ஓமந்தூர், தமிழ்நாட்டு வரலாற்றில் நிலைத்த புகழைப் பெற்றிருக்கிறது.

ஓமந்தூரார், தாம் ஒரு கிராமவாசி என்பதை ஒருபோதும் மறக்கவில்லை. **1949** இல் திருவாரூரில் நடைபெற்ற தமிழ் விழாவில் தலைமை உரை நிகழ்த்தும்போது "பாவலனும் நாவலனும் இல்லாத கிராமவாசியும் வேளாளனுமான என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறேன்" என்று கூறித் தொடங்கினர்.

## ரெட்டியார்கள்

தமிழ்நாட்டுக்கு ஏற்றமும் பெருமையும் அளித்துவரும் இனத்தவர் பலர் ஆந்திரப் பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டில் சில நூற்றாண்டுகளுக்குமுன் குடியேறினர். இவ்வாறு குடியேறினவர்களுள் நெல்லூர்ப் பகுதியிலிருந்து வந்து தென் ஆர்க்காட்டிலும், அதன் சுற்றுப் புறத்திலும் உள்ள ஓரளவு வளமான பகுதிகளில் வாழும் பண்ட ரெட்டியார் என்ற இனத்தவர் குறிப்பிடத் தக்கவர்கள். பண்டரெட்டியார் என்பது பண்டகாப்பு ரெட்டியார்கள் என்பதன் சுருக்கமாகும். பண்டகாப்பு என்ற சொற்றொடர் தெலுங்கு மொழியில் உழவர் பெருமக்களைக் குறிக்கும்.

இவர்கள் தொன்றுதொட்டு விவசாயிகள் ஆவர். இன்னும் இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விவசாயத்தையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். வானம் தரும் மழையை மட்டும் அல்லாது பூமிக்கு அடியில் குமுறும் நீரையும் நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொண்ட பாட்டாளிகள் என்று ரெட்டியார்களைச் சொல்லலாம்.

இவ்வாறு உழவுத் தொழிலில் தனிசிறந்து விளங்கும் ரெட்டியார்கள், விருந்தோம்பும் கலையாலும் வல்லவர்கள் ஆவர். "வந்தவர்களுக்குச் சாப்பாடு, வராதவர்களுக்கு உலை" என்பது

இவர்களிடையே வழங்கும் பழமொழி. தங்கள் வீட்டுக்கு எதிரில் மாட்டுப்பண்ணை வைத்து, அதில் கறவை மாடுகளையும் உழவு மாடுகளையும் வண்டிமாடுகளையும் பேணி வருகின்றனர்.

தமிழ்நாட்டுக்கு வந்தபோது இவர்கள் அனைவரும் வைணவ, ராக இருந்தனர். தமிழ் நாட்டில் லிங்காயத மடங்கள் தோன்றிய பின்னர் இவர்களில் பாதிப்பேர் சைவராயினர். எஞ்சிய பாதிப் பேர் வைணவராகவே இருந்து வருவாராயினர். சைவ வைணவ பேதமின்றி, இவர்கள் சம்பந்தம் செய்து கொள்கின்றனர்.

ரெட்டியார்கள் அனைவரும் தோற்றப்பொலிவும், உடற் கட்டும் உடையவர்கள். சைவ உணவையே உட்கொள்கின்றனர். புலால் உணவினை மறந்தும் உண்ணார். பச்சரிசி உண்ணும் பழக்கமும் இவர்களிடம் நிலவுகிறது. மேற்கண்ட இயல்புகள் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களிடமும் இருந்தன.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் புதுச்சேரியிலுமாக ரெட்டியார்கள் மூன்று இலட்சம் பேர் உள்ளனர். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்த்திருத்தச் சட்டங்களின்படி சென்னை இராசதானியின் முதலமைச்சர் பதவியை முதல் தடவையாக வகித்த சுப்பராயலு ரெட்டியார்,[1] புதுச்சேரி மாநிலத்தின் முதல்வராக இருந்த வெங்கடசுப்பா ரெட்டியார் ஆகியோர் இவ்வினத்தவருள் குறிப்பிடத்தக்கவர்.

## குடும்பம்

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருடைய குடும்பம் அந்த ஊரில் பரம்பரையாக மணியக்காரக் குடும்பமாகும். எனவே இவர்களுக்கு வழிவழியாக நிறைந்த செல்வாக்கு இருந்தது.

---

1. திவான் பகதூர் அ. சுப்பராயலு ரெட்டியார் (1855—1921). இவர் சிவில் கிரிமனல் வழக்கறிஞராகப் பெரும்புகழ் பெற்றதோடு ஜஸ்டிஸ் கட்சியின் முக்கியமான தலைவர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார். கடலூரிலிருந்து பாகூர்-தூக்கனப்பாக்கம் செல்லும் வழியில் 13 கி. மீ. தொலைவிலுள்ள மலையப்பெருமாள் அகரம் என்னும் ஊரினர். இவர் குடும்பத்தாரும் பரம்பரை மணியக்காரர் ஆவர். இவர் 1906 முதல் 1920 வரை கடலூர் நகராண்மைக் கழகத்தின் தலைவராகவும் 1920—21 இல் முதலமைச்சராகவும் பதவி வகித்தார். இப்பதவிகளையும் தென் ஆர்க்காடு மாவட்டக் கழகத்துத் தலைமைப் பதவியையும் பெற்ற முதல் இந்தியர் இவரே என்பது குறிப்பிடத் தக்கது. பிற்காலத்தில் முதலமைச்சராக இருந்த பனகல் அரசர், சென்னை மாநில கவர்னர் சர் கே. வி. ரெட்டி ஆகியவர்கள் சுப்பராயலு ரெட்டியாரின் அமைச்சரவையில் உறுப்பினராக இருந்தனர்.

வளமான நிலங்களும் மனை இடங்களும் இருந்த காரணத்தால் இவர்கள் வீட்டுக்கு 'பெரிய வளைவு' என்ற பெயர் வழங்கி வந்தது. 'ஓ' என்ற எழுத்து இவருடைய ஊரையும் 'பி' என்ற எழுத்து பெரிய வளைவு என்ற குடும்பப் பெயரையும் குறிப்பதாகும்.

இராமசாமி ரெட்டியாரும் தம் முன்னோர்களைப்போல சில காலம் ஓமந்தூரில் மணியக்காரராக இருந்திருக்கிறார். இந்த முறையில் இவர் பெற்ற நிர்வாக அனுபவம், முதலமைச்சர் பொறுப்பை இவர் திறம்பட நிறைவேற்றுவதற்கு உதவியாக இருந்தது. ஐ. சி. எஸ். தேர்வில் வெற்றிபெறுபவர்கள் வேலை நியமனம் செய்யப்பெற்ற உடனே, ஒரு சிற்றூரில் மணியக்காரர் முதலிய கிராம அதிகாரிகளுடன் தங்கியிருந்து, கிராம மட்டத்தில் அரசாங்க நிர்வாக முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலமைச்சராக இருந்த போது ஓமந்தூராரிடம் பணியாற்றிப் பின்னர் ஓய்வுபெற்ற ஐ. சி. எஸ். அதிகாரிகள் சிலர் " வேலையில் சேர்ந்தபோதும் ஒரு மணியக்காரரிடம் வேலை பார்த்தோம். வேலையிலிருந்து விலகிப் போகும்போது ஒரு மணியக்காரரிடம் வேலை பார்த்து ஓய்வுபெறுகிறோம்" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள்.

## பெற்றோர்கள்

ஓமந்தூராரின் தகப்பனார் பெயர், முத்துராம ரெட்டியார் தாயார் பெயர், அரங்கநாயகி அம்மாள். 1895-ஆம் ஆண்டில் அதாவது ஜெயஆண்டு தைத்திங்கள் 20-ஆம் நாள் வெள்ளிக்கிழமை யன்று ஓமந்தூரில் பிறந்தார்.

## படிப்பு

இவருடைய தகப்பனார் இவரை ஆறுவதுவயதில் ஓமந்தூர்ப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். நான்கு ஆண்டுகள் சொந்த ஊரில் படித்த பிறகு, தகப்பனார் இவரை 1905-இல் திண்டிவனம் ஆர்க்காட் மிஷனைச் சேர்ந்த வால்டர் ஸ்கட்டர் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார்.

இந்தப் பள்ளி தமிழ்நாட்டின் மிகச் சிறந்த உயர்நிலைப் பள்ளிகளுள் ஒன்று. வேலூர் மருத்துவமனையை உண்டாக்கிய புகழ்பெற்ற ஐடா ஸ்கட்டரின் தகப்பனாரால் 1872-இல் தொடங்கப்பெற்றது.

## உடன் மாணவர்கள்

இப்பள்ளியில் ஓமந்தூராருடன் படித்தவர்களில் இருவரைக் குறிப்பிட்டாக வேண்டும்.

ஒழுக்கத்தாலும் ஞானத்தாலும் சிறந்து விளங்கி உலகெல்லாம் புகழ்பெற்றிருக்கும் தவமுனிவர் காஞ்சி காமகோடி பீடம் 68ஆவது பீடாதிபதி ஸ்ரீ ஜெகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், பூர்வ ஆஸ்ரமத்தில் திண்டிவனத்துக்கு அடுத்த விழுப்புரத்தில், சுவாமிநாதன் என்ற பெயரில் அவதரித்தார்கள். அவர்கள் ரெட்டியாருக்கு எட்டு மாதம் மூத்தவர்கள். திண்டிவனத்தில் படித்துக்கொண்டிருந்த போது அதாவது 1907 பிப்ரவரி 13இல் அவர்கள் காமகோடி பீடத்தில் அதிபதியானூர்கள்.

சென்னையில் தென்னிந்திய கல்வி அறக்கட்டளை (எஸ். ஐ. இ. டி.) நிறுவி, மகளிர் கல்லூரி நடத்தி வருபவரும், சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியும், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமாகிய திரு. பஷீர்அகமதுசாயீத், மற்றொருவர் ஆவார்.

இவ்விரு பெருமக்களும் ஓமந்தூராருடன் திண்டிவனத்தில் படித்தனர். 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஆச்சாரிய சுவாமிகள் திண்டிவனத்தில் முகாம் போட்டிருந்தபோது அவர்களுக்கு பெரிய வரவேற்புக் கொடுக்க ஓமந்தூரார் முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் கவனித்தார். 1960-ஆம் ஆண்டில் விழுப்புரத்தில் சங்கர ஜெயந்தி நடைபெற்றதை அறிந்து வடலூரிலிருந்து சிறு நன்கொடை அனுப்பினூர்.

## தந்தையார் மறைவு

திண்டிவனத்தில் ஓமந்தூரார் மூன்று ஆண்டுகள்கூட முழுமையாகப் படித்து முடியவில்லை. தந்தையார் இறந்துவிட்டார். 'தகப்பனோடு கல்வி போகும்' என்ற பழமொழி பலித்துவிட்டது.

மூத்த மகனான காரணத்தால் குடும்பத் தலைவராகி விட்ட ஓமந்தூரார் அப்பொறுப்பு ஏற்று விவசாயத்தில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்.

## சென்னையில் படிப்பு

ஓமந்தூராரின் சிறிய தந்தையார் கிளியனூர் சின்னசாமி ரெட்டியார் என்பவர். தந்தையார் இறந்த பிறகு இவரே ஓமந்தூராருடைய வாழ்க்கையைப் பெரிதும் உருவாக்கினார். இவர் அக்காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கினார். சென்னையில் திருவல்லிக்கேணிப் பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தார். ஓமந்தூராரை அந்த வீட்டிலேயே தங்கியிருக்கச் செய்து, இந்து உயர்நிலைப்பள்ளியில் படிக்கவைத்தார்.

## தாயார்

'கணவனை இழந்தார்க்குக் காட்டுவது இல்' என்றார் இளங்கோவடிகள். மூத்த மகனாகிய இராமசாமி ரெட்டியார் உடனே திருமணம் செய்துகொண்டு, ஓமந்தூரிலேயே தங்கி, குடும்பப் பொறுப்புக்களை மீண்டும் கவனிக்கவேண்டுமென்று இவர் தாயார் விரும்பினார். சின்னசாமி ரெட்டியார் அக்கருத்துக்கு ஆதரவாக இல்லாவிட்டாலும் அவரால் அதைத் தடுக்க முடியவில்லை. எனவே ஓராண்டு மட்டும் படித்த பிறகு இராமசாமி ரெட்டியார் ஓமந்தூருக்குத் திரும்பினார். தாயாரிடத்தில் ஓமந்தூராருக்கு இருந்த பக்தி சொல்லி முடியாது.

தாயார் அரங்கநாயகி அம்மாள் பள்ளியில் படித்தவர் இல்லை. பட்டங்கள் பெற்றவரும் இல்லை. அக்காலத்துக்கு ஏற்றவாறு தெய்வபக்தி நிறைந்தவராகவும், பிறருடைய துயரங்களைக் காணச்சகிக்காதவராகவும், நல்ல பழக்கவழக்க ஒழுக்கங்கள் உடையவராகவும், கடமையுணர்ச்சி மிக்கவராகவும் இருந்தார்.

'தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை' என்பர். மேலே குறிப்பிட்ட இயல்புகள் தாயாரிடமிருந்து இவருக்கு அமைந்தன. இளமையில் பெற்ற பயிற்சி இவருடைய வாழ்க்கைப் பாதையைச் செம்மையாக அமைத்தது. தாயாரிடம் இவர் கொண்டிருந்த பற்று, அந்த அம்மையார் நினைவாக இவர் தமது முதுமைக்காலத்தில் வெளிவரச் செய்த நூல்களிலிருந்து தெரியவரும். அரங்கநாயகி அம்மாள் 1913 அளவில் இறந்துவிட்டார். ஓமந்தூராரின் வாழ்க்கையில் வீசிய முதல் புயல் இதுவே.

பிற்காலத்தில் சான்றோன் என்று தமிழ் மக்கள் பாராட்டக்கூடிய ஒரு மகனை உலகுக்கு வழங்கினோம் என்று அமைதியோடு அரங்கநாயகி அம்மாள் உயிர்நீத்தார்.

சித்தப்பா

கிளியனூர் சின்னசாமி ரெட்டியார், ஓமந்தூராரின் சித்தப்பா என்பதையும் அவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதையும் முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம்.

பிஞ்சிளம் வயதிலேயே ஓமந்தூராரின் நெஞ்சில் கல்வியில் ஆர்வமும் பொதுப்பணியில் ஈடுபாடும் முளைவிடக் காரணமாக இருந்தவர் சின்னசாமி ரெட்டியார்தான்.

கிளியனூர் என்னும் ஊர் திண்டிவனம் – புதுச்சேரிச் சாலையிலுள்ளது. மருத வளம் மிக்க ஊர் இது. இவ்வூர்ச் சிவன் கோயிலிலுள்ள பல கல்வெட்டுக்கள் இவ்வூரின் பெருமையைக் குறிப்பிடுகின்றன.

ரெட்டியார் சமூகத்தினர் இவ்வூரில் செல்வாக்குப் பெற்றுள்ளனர். இவர்களில் பலர் ஓமந்தூராரின் உறவினர் ஆவர். பிரெஞ்சு ஆட்சியில் இருந்த புதுச்சேரி சுதந்தர இந்தியாவுடன் இணைவதற்குக் காரணமாக இருந்தவரும் தமிழ்நாடு சுதந்தரக் கட்சியின் தலைவராக இருந்தவருமான கே. எஸ். வேங்கடகிருஷ்ண ரெட்டியார் இவ்வூரினர். அவரும் ஓமந்தூராரின் உறவினரே ஆவார்.

சின்னசாமி ரெட்டியார் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அப்பகுதியில் அளவுகடந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். செல்வாக்கு என்பது பெரும்பாலும் செல்வத்தோடு சேர்ந்தது தான். அந்நாளில் செல்வம் என்பது வேளாண்மைச் செல்வமே. நிலபுலன்கள் ஏராளமாக இருந்ததால் வளமான வருமானத்தைப் பெற்றுவந்த சின்னசாமி ரெட்டியார், அந்தப் பணம் ஊருணி நீர்போலப் பலருக்கும் பயன்படச் செய்தார். கிளியனூரில் வெள்ளம் ஏற்பட்டுப் பெரிய அளவில் சேதம் உண்டாயிற்று. அப்போது அந்த ஊர்மக்கள் 3,000 பேருக்கும் கோடி (சலவை செய்யாத) வேட்டி அல்லது சேலையை அன்பளித்தார்.

சின்னசாமி ரெட்டியார் காலத்தில் சென்னையிலிருந்து திண்டிவனம் வரைதான் இரயில்பாதை போடப்பட்டிருந்தது. சென்னையில் பதவி வகித்த ஆங்கிலேய அதிகாரிகள் புதுச்சேரியைப் பார்க்க விரும்பினால் சின்னசாமி ரெட்டியாருடைய உதவியை எதிர்பார்ப்பார்கள். திண்டிவனம் வரையில் அந்த

வெள்ளைக்காரர்கள் இரயிலில் வருவார்கள். அங்கிருந்து புதுச்சேரிக்கு கிளியனூர் வழியாக அவர்கள் குதிரைச் சவாரி செய்வார்கள், அல்லது குதிரை வண்டிகளில் செல்லுவர். இரண்டு வகை ஏற்பாடுகளில் எதுவாகயிருந்தாலும் அதைச் செய்யக் கூடியவர் சின்னசாமி ரெட்டியார் ஒருவரே ஆவார். திண்டிவனத்திலிருந்து புதுச்சேரிவரை ஒரே குதிரையில் செல்வதும் இயலாது. மாற்றுக் குதிரைகளில்தான் செல்லவேண்டும். தமது குதிரைகளையும் மற்றவர்களுடைய குதிரைகளையும் வழங்கி, சின்னசாமி ரெட்டியார் அதிகாரிகளுக்கு வேண்டிய பயண ஏற்பாடுகளைச் செய்துவந்தார்.

ஜமாபந்தி நடத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சின்னசாமி ரெட்டியாருடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டார்கள். கிளியனூரிலேயே ஜமாபந்திகள் நடத்தி வந்தனர். ஒவ்வொரு தடவையும் ஜமாபந்தி 20 நாட்கள் முதல் ஒரு மாதம் வரை நிகழும். அதற்காக அக்காலத்தில் சின்னசாமி ரெட்டியார் ஆண்டுதோறும் 5,000 ரூபாய் வரை செலவுசெய்து வந்தார். அப்போது 8 கிராம் எடையுள்ள தங்கப் பவுன் 8 ரூபாய் விலைக்கு வந்தது. இப்போது (1979இல்) 1200 ரூபாய் விலைக்கு விற்பனையாகிறது என்பதை நம் நினைவில் கொள்ளத்தக்கது.

பொதுப்பணிகள் பலவற்றில் சித்தப்பா சின்னசாமி ரெட்டியார் ஈடுபட்டுச் செல்வாக்கும் புகழும் பெற்றுவந்ததை இளமையிலேயே உடனிருந்து உன்னிப்பாகக் கவனித்துவந்த இராமசாமி ரெட்டியார், தாமும் பொது வாழ்க்கையில் பங்கு கொள்ள வேண்டும் என்று விழைந்தார். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு, மனைவியும் மகனும் இறந்தமையால் மிக வேகமாக இவருக்கு உண்டாயிற்று.

### படிப்பினை

சித்தப்பா சின்னசாமி ரெட்டியார் பொதுப்பணிகளில் அளவுகடந்த பணத்தை வாரி இறைத்துவிட்டதால் பிற்காலத்தில் அவருடைய குடும்பம் ஓரளவு வறுமையால் வாடிற்று. ஓமந்தூரார் இதை நன்கு உணர்ந்து, ஒரு படிப்பினையாகக் கொண்டார். 'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித்கெடும்' என்பதை உணர்ந்தார். தன்னுடைய அன்றாட வாழ்வில் மிகச் சிக்கனமாக நடந்து வந்தார். இதைப்பற்றிய விவரங்களைப் பின்னர் கூறுவோம்.

இவ்வாறு இராமசாமி ரெட்டியார் நெஞ்சில் சிக்கன மனப்பான்மை உருவானதற்கு சின்னசாமி ரெட்டியாரின் வாழ்க்கையே காரணமாகும்.

சின்னசாமி ரெட்டியாருடைய குடும்பத்தின் முன்னேற்றத்திலும் நல்வாழ்விலும் ஓமந்தூரார் தமது இறுதிக்காலம்வரை அக்கறை காட்டினார். சின்னசாமி ரெட்டியாரின் மகன் முத்துராம ரெட்டியார் இதைப்பற்றி இந்நூலாசிரியரிடம் கூறிய பின்வரும் தகவல்கள் குறிப்பிடத்தக்கவை (பேட்டி: *2—12—1977*):

> "என் மக்கள் படிப்பதற்கு ஓ. பி. ஆர். மிகவும் ஆதரவாக இருந்தார்கள். என் மகன் ஒருவன் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்பதற்காக அவனுடைய படிப்பை நான் நிறுத்திவிட்டேன். அதைக் கேள்விப்பட்டு ஓ. பி. ஆர். அவர்கள், அவன் திண்டிவனத்திலேயே தங்கி அந்தப் படிப்பைத் தனியாகப் படிப்பதற்கும் அடுத்த ஆண்டில் பள்ளியில் படிப்பதற்கும் ஏற்பாடு செய்து, அவனுக்கு ஆண்டுதோறும் *300* ரூபாய் அனுப்பினார்கள். வடலூரில் போய் அவர்கள் நிலையாக இருந்தபோது என் மகன் இன்னொருவன் படிப்பதற்கும் ரூ. *3,000*/– அனுப்பினார்கள். அவர்களுடைய வாழ்த்தாலும் உதவியாலும் என் மக்கள் இன்று நல்ல நிலையில் உள்ளனர். என் மாமனார் ரெட்டணை துரைசாமி ரெட்டியார் திடீரென்று நோய்வாய்ப்பட்டிருந்தார். ஓ. பி. ஆர். அவர்கள் உடனே வக்கீல்களை அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்று உயில் பத்திரம் எழுதச் செய்து தானே சாட்சிக் கையெழுத்துப் போட்டு, பெண் குழந்தைகளுக்கும் உரிய பங்கு கிடைக்க ஆவன செய்தார்கள்."

## திருமணம்

*1910* ஆம் ஆண்டில் ஓமந்தூராருக்குத் திருமணமாயிற்று. மனைவி பெயர் சிங்காரத்தம்மாள். இவர்களுடைய மணவாழ்க்கை இனிய முறையில் அமைந்து *1916* ஆம் ஆண்டில் சுந்தரம் என்ற ஒரு மகன் இவர்களுக்குப் பிறந்தான். *1919*–இல் ஒரு பெண் குழந்தை பிறந்து, சில நாளில் இறந்துவிட்டது. *1920*–இல் மனைவி சிங்காரத்தம்மாளும் இறந்துவிட்டாள். ஓ. பி.ஆருடைய வாழ்க்கையில் வீசிய இரண்டாவது புயல் இது. 'தீதிலள் முதுமகள்

செவ்வியள்' எனச் சிலப்பதிகாரம் கூறும் குணநலன்களைப் பெற்றிருந்த மனைவி இறந்தவுடனேயே தன்னுடைய வீட்டை விட்டு ஓ. பி. ஆர். வெளியேறினர். ஊரின் எல்லையில் சாலைக்கு மறுபுறத்தில் தென்னந்தோப்புக்குள் ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு அங்கேயே இருந்து வரலாயினர். தனக்கும் தன்னைக் காண வருபவர்களுக்கும் உணவு ஆக்க சமையல்காரன் ஒருவனை ஏற்பாடு செய்து கொண்டார். மனைவி இறந்த நாள் முதல் அவர் எந்தப் பெண்ணையும் பார்த்ததுகூட இல்லை. பதவி காரணமாகச் சில பெண்கள் அவரைக் காண வந்தபோதும் அவர் நாணினர், அஞ்சினர், வெறுத்தார்.

அந்த ஆசிரமத்தைச் சுற்றியிருந்த புன்செய் நிலங்களைப் பயிர் செய்வதிலும் அந்த வருவாயைப் பொதுப்பணிகளுக்குச் செலவிடுவதிலும் தன் வாழ்க்கையைக் கழித்தார்.

## தம்பிமார்

ஓமந்தூராரின் தம்பிமார் இருவர். ஒருவர் முத்துக்குமரப்ப ரெட்டியார்; இவர் இளமையிலேயே இறந்துவிட்டார். இவருடைய மகனுகிய ஓ. எம். வெங்கட்டராம ரெட்டியார், இப்போது ஓமந்தூரில் கிராம மணியக்காரராகப் பணிபுரிந்து வருகிறார்.

மற்ருெருதம்பி லெட்சுமிநாராயண ரெட்டியார். இவரைப் பற்றி, இந்நூலில் பிற இடங்களிலும் குறிப்பிடுவோம். இவரும் ஓமந்தூராரும் வாழ்க்கை முறைகளில் வெவ்வேறு கருத்துடையவர் களாக இருந்தும் அண்ணனிடம் தம்பி மிகுந்த மரியாதை வைத்தி ருந்தார். இவர்கள் இருவருக்குமிடையே ஒன்றரை வயதுதான் வேறுபாடு. எனினும், அண்ணனுக்கு அருகே சென்று லெட்சுமிநாராயண ரெட்டியார் பேசமாட்டார். திண்ணை ஓரமாக நின்றுதான் பேசுவார்.

தன்னுடைய குடும்ப விவகாரங்களிலும் எந்த அளவு அண்ணனுக்குக் கட்டுப்பட்டு லெட்சுமிநாராயண ரெட்டியார் நடந்துகொண்டார் என்பது ஓ. பி. ஆர். சிறையில் இருந்தபோது லெட்சுமிநாராயண ரெட்டியார் அவருக்கு எழுதிய பின்வரும் கடிதத்திலிருந்து தெரியவரும். சென்ற தலைமுறையில் ஒற்றுமை யாக இருந்த இந்து குடும்பங்களில் நிலவிய பழக்கவழக்கங்களை யும் இதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

ஓ. பி. ஆர். சிறையிலிருந்தபோது அவருக்கு அவர் தம்பி லெட்சுமிநாராயண ரெட்டியார் 25—4 —1942-இல் எழுதியது:

> "சிரஞ்சீவி வெங்கட்ராமன் கல்யாண விஷயம் அதிக நிர்பந்தமாக இருக்கிறது. கல்யாணம் இந்த வருஷம் நடத்திவிடலாமா, தெரிவிக்கக் கோருகிறேன். ராதாபுரம் பங்காரு ரெட்டியார், கீழ்பிருசிப்பட்டு சுந்தர ரெட்டியார் பெண்கள் ருதுவாகி இருக்கிறது. தவிர கோழிப்பாக்கம் வெங்கிடசாமிரெட்டியார் பெண்இருக்கிறது. ராமனுபுரம் பெரியவர் பெண் ஒன்று இருக்கிறது. இதுகளில் எது உசிதம் என்று தெரிவிக்கிறீர்களோ அதன்படி நடந்து கொள்கிறேன்."

சிறையில் இருந்த ரெட்டியாரைப் போய்ப் பார்க்கக்கூட தம்பி லெட்சுமி நாராயணன் அஞ்சுவார். "தங்களை வந்து பார்க்கப் பெர்மிஷன் இருந்தால், தெரிவித்தால் வருகிறேன்" என்று எழுதியிருக்கிறார். சிறைச்சாலை அதிகாரிகளுடைய இசைவைப் பெறுவதைவிட அண்ணனின் இசைவைப் பெறுவது கடினமாக இருக்கும்.

## உறவினர்கள்

ஓமந்தூரார் உறவினர்கள் மணப்புத்தூரிலும், திருவாமூரிலும் இன்றும் வாழ்கின்றனர். இந்த உறவினர் வீடுகளுக்கு இவர் இளமையில் அடிக்கடி சென்றுவந்தார்.

மணப்புத்தூர் என்பது மணம்தவிர்த்தபுத்தூர் என்ற சொற்றொடரின் சிதைவு. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இவ்வூரில் திருமணம் நிகழ்வதாக இருந்தது. ஆனால் அந்தத் திருமணம் நடைபெற விடாமல் இறைவனால் தவிர்க்கப்பட்டது. தேவார நாயன்மாராகிய இவர் தொடர்புள்ள இந்த ஊரில் உள்ள தம் உறவினர் வீடுகளுக்கு அடிக்கடி சென்றதால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் அவரிடம் ஈடுபாடு காட்டவும் ஓமந்தூராருக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. இதனால் சுந்தரர் தேவாரத்தை நெஞ்சுருகப் பாடினார்; தன் மகனுக்குச் சுந்தரம் என்று பெயரிட்டார்.

ஓமந்தூராரின் உறவினர்கள் இன்றளவும் வாழ்ந்துவரும் மற்றொரு ஊர், அப்பர் என்றும்திருநாவுக்கரசர் என்றும் போற்றப்

பெறும் சைவசமயக் குரவர் தோன்றிய திருவாரூர். ''இந்தியாவின் முதல் சத்தியாகிரகி, அப்பர் பெருமான்தான்'' என்று ஓமந்தூரார் அடிக்கடி பெருமிதத்துடன் கூறுவார்.

## கல்வி

ஓ. பி. ஆர். எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கிறார். ஆனால், அக்காலத்து எட்டாம் வகுப்புப் படிப்புக்கும் இன்றைய எட்டாம் வகுப்புப் படிப்புக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. இதை விவரித்தால் சிலர் மனம் புண்படக்கூடும்.

தன்னுடைய அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக இருந்ததால் ஓ. பி. ஆர். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஓரளவு நல்ல புலமை பெற்றிருந்தார். இயல்பாகவே தெலுங்கும் தெரிந்துகொண்டிருந்தார். இசை முதலிய துறைகளில் இவருக்கு நல்ல ஆர்வம் இருந்தது.

பள்ளிப்படிப்பை முடித்தபின்னருங்கூட இவர் படித்த வண்ணமாகவே இருந்தார். 'சாந்துணையும் கல்லாதவாறு' என்ற திருக்குறளுக்கு இலக்கியமாக ஓ. பி. ஆர். திகழ்ந்தார். தமது 70-ஆவது வயதில் இவர் சமஸ்கிருதத்தைக் கற்றுக்கொண்டதே இதற்குச் சான்று பகரும்.

கல்வி, கேள்வி, என்ற இருவகையாலும் இவர் தமது அறிவை வளர்த்துக் கொண்டார்.

ஏராளமான நூல்களை ஓ. பி. ஆர். படித்தார். இவருடைய நாட்குறிப்பில் வாங்க வேண்டிய புத்தகங்களின் பட்டியல் பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. பலவகை நூல்களைப் படிக்கும் பழக்கம் ஓ. பி. ஆரிடம் இருந்ததை அறிந்த ஆங்கிலேய கவர்னர் சர். ஆர்ச்சிபால்டு நை, தாம் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போன பிறகு அங்கிருந்து சில ஆண்டுகள்வரை இவருக்கு ஏராளமான நூல்களை அனுப்பிய வண்ணமாக இருந்தார்.

தனக்குப் பயனுள்ள அல்லது ஈடுபாடுள்ள துறைகளில் வெளிவரும் பத்திரிகைகளுக்குச் சந்தாக் கட்டவும் ஓ. பி. ஆர். தயங்கமாட்டார். எத்தனையோ பத்திரிகைகளுக்கு ஆயுள் சந்தாக் கட்டினார். அது அவருடைய ஆயுளுக்குச் சந்தாவாக இல்லாமல் அந்தப் பத்திரிகைகளின் அற்ப ஆயுளுக்கே சந்தாவாக முடிந்தது.

ஆங்கில மொழியிலும் ஓ.பி. ஆருக்கு நல்ல பயிற்சி இருந்தது. சரளமாக ஆங்கிலம் பேசினுர். பேச்சிலும் எழுத்திலும் ஒருசில இலக்கணப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் இருக்கும். அதற்காக அவர் கூச்சப்பட்டதோ, வருத்தப்பட்டதோ கிடையாது. இன்னொருவரை எழுதித் தரச் சொல்வதும் கிடையாது. முதலமைச்சர் என்ற முறையில் தன்னுடைய ஆணைகளையெல்லாம் தாமே தம் கைப்பட எழுதி வந்தார்.

இந்தியாவின் வைஸ்ராயாகவும் கவர்னர் ஜெனரலாகவும் இருந்த மவுண்ட்பாட்டன்பிரபு போன்றவர்களைச் சந்தித்த போதும் அவர் தனியாகத்தான் சென்ருர். யாரையும் உடன் அழைத்துச் செல்லவில்லை. அந்த அளவுக்கு அவருக்குத் தன்னம்பிக்கை இருந்தது.

> மவுண்ட்பாட்டன்பிரபு: *ஹிந்துக்கள் தங்களை ஆளுவதற்கு ஒருபோதும் முஸ்லிம்கள் சம்மதிக்க மாட்டார்கள். ஏனென்ருல் பிரிட்டிஷார் இந்த நாட்டைக் கைப்பற்று வதற்கு முன்பாக மொகலாயர் ஆட்சிதான் இந்தியாவில் நடைபெற்றது.*

> ஓ. பி. ஆர்: *முஸ்லிம்கள் தங்களை ஆள சீக்கியர்கள் ஒருபோதும் விடமாட்டார்கள். ஏனென்ருல் முஸ்லிம்கள் இந்தியாவுக்குள் நுழைவதற்குமுன்னரே ஆப்கானிஸ்தானத்தையும், வடமேற்கு எல்லை மாகாணத்தையும் சீக்கியர்கள் ஆண்டுவந்தார்கள். ஆகையால் அந்தப் பகுதியில் சீக்கியர்களுடைய ஆட்சி மீண்டும் நடைபெற நீங்கள் வழி வகுக்க வேண்டும். ஹிந்துக்களின் நாகரிகமும் பண்பாடும் உருவான மொஹஞ்சதாரோ ஹிந்துக்களிடம் இருக்கவேண்டாமா?*

தெலுங்கு மொழியில் யாருடனும் உரையாடவேண்டிய அளவுக்கு ஓமந்தூரார் பயிற்சி பெற்றிருந்தார். தெலுங்கிலும் சில நூல்களைப் படித்தார்.

வேலூர் நாராயண ரெட்டியார் என்ற தெலுங்குப் புலவரை வரவழைத்துத் தெலுங்கு இலக்கிய நயங்களைத் தெரிந்து கொண்டார்.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது, சில தெலுங்குப் பழமொழிகளைச் சொல்லிக்காட்டித் தம் கருத்தை வலியுறுத்துவார்.

ஏழைகள் இவரிடம் உதவிகேட்டால் உடனே உதவுவார். ஆனால் வசதி நிறைய உள்ளவர்கள் இவரிடம் வந்து பணம் கேட்டால், "நூருவலுவாரே ஆருவலு அடியேக" (100 பசு வைத்திருப்பவன் 6 பசு வைத்திருப்பவனிடம் தானம் கேட்ட மாதிரி இருக்கு) என்ற தெலுங்குப் பழமொழியைச் சொல்லுவார்.

வேமன சதகம் என்பது வேமனு என்ற கவிஞரால் இயற்றப் பட்ட நூறுபாடல்களின் தொகுப்பு: தமிழில் விவேகசிந்தாமணிக்கு உள்ள பெருமை தெலுங்கில் வேமன சதகத்துக்கு உண்டு. அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டும் இந்த நன்னூலை ஓமந்தூரார் மனப்பாடம் செய்தார்.

வடலூரில் இவர் நிறுவிய குருகுலத்தில் தங்கிப் பயிலும் மாணவர்க்கான விடுதியோடு கூடிய சமையற்கூடத்துக்கு வேமன பெயரைஇட்டார்.

சிறையில் ஹிந்தி படித்தார். ஹிந்தியைப் படிக்கும்படி யாரையும் கட்டாயப் படுத்த வேண்டாம். ஆனால் அந்த மொழியைப் படிப்பது நல்லது என்பது அவர் கருத்தாக இருந்தது,

அருட்பா, கீதை, வாசிட்டம், கைவல்யம், தேவாரம். திருவாசகம், பிரபுலிங்கலீலை, திருமூலரின் திருமந்திரம், இரட்சண்ய யாத்திரீகம் முதலிய நூல்களிலிருந்து தமக்குத் தேவையான மேற்கோள்களை எழுதிவைத்துக் கொண்டு அடிக்கடி படித்துப் பார்க்கும் பழக்கமும் ஓ. பி. ஆரிடம் இருந்தது.

## ஆங்கில அறிவு

ஓமந்தூரார் சட்டமன்ற மேலவையில் பிரதமராக முதல் நாள் (21—4—1947) அமர்ந்தபோது, கேள்விகளுக்கு தமிழில் விடைகூறுவதாக மேலவைத்தலைவரிடம் தெரிவித்தார். "பிரதான கேள்விக்கு உரிய பதிலை நீங்கள் ஆங்கிலத்தில் படிக்கலாம். ஆனால் துணைக் கேள்விகளை உறுப்பினர்கள் எழுப்பும்போது, தமிழில் பதில் சொல்லலாம்" என்று மேலவைத் தலைவர் மாண்புமிகு ஆர். பி. இராமகிருஷ்ண ராஜு அறிவித்தார். ஓமந்தூரார் அவைத் தலைவர் கருத்தை ஏற்றுக்கொண்டு, அச்சிட்ட விடைகளை, ஆங்கிலத்தில் படித்தார். ஓமந்தூரார் படித்து முடித்ததும், அவைத் தலைவர் பின்வருமாறு கூறினர் :

"மிக நன்ருகப் படித்தார். துணைக் கேள்விகளுக்கும் ஆங்கிலத்திலேயே உடனுக்குடன் பதில் சொல்லுவதில் மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களுக்கு எவ்விதமான சிரமமும் இராது என்பது என் கருத்து"

**மகன்**

ஓ. பி. ஆருடைய ஒரே மகன் சுந்தரம் என்பவன். அவன் இளமையிலேயே தாயாரை இழந்துவிட்ட காரணத்தால் குருகுலக் கல்வியே அவனுக்கு ஏற்றது என்று கருதி, ஓ. பி. ஆர். அவனை திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் வ. வே. சு. ஐயர் நடத்திய குருகுலத்தில் படிக்க வைத்தார். அந்தக் குருகுலத்தில் பிராமணப் பிள்ளைகளுக்குத் தனியாகவும் ஏனைய சாதிப் பிள்ளைகளுக்குத் தனியாகவும் உணவு படைக்கப்பட்டது. பெரியார் ஈ. வே. ரா. காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிக் கொண்டதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு முக்கியமான காரணமாகும். சேரன்மாதேவி குருகுலத்திற்கு நிதி உதவ வாக்களித்திருந்த பலரும் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டனர்.

இந்தச் சூழ்நிலையில், ஓ. பி. ஆர். தன் மகனை அங்கிருந்து வரவழைத்துக் கொண்டார்.

சுதந்திரப் போராட்ட வீரரும் விழுப்புரம் ஊரினருமான திரு ஜி. ஆதிநாராயணு, ஓ. பி. ஆர். மகன் சுந்தரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிருர்:

> "1927–ஆம் ஆண்டு நீலனுடைய சத்தியாக்கிரக இயக்கம் சென்னையில் நடந்துகொண்டிருந்தபோது அவரை ஓமந்தூரில் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.
>
> நான் அடிக்கடி அரசியல் பிரச்சினைகளில் அவரைக் கலந்து பேசிவந்தேன். பிறகு பெங்களூருக்கு அடுத்துள்ள 'கெங்கேரி' கிராமத்தில் ஏற்படுத்தப்பட்ட 'ஆசிரமத்தில்' ஆசிரியராகப் பதவி ஏற்றேன். அதன் தலைவர் 'பிரம்மச்சாரி இராமச்சந்திரன்' என்பவர். அவரிடத்தில் உழைத்து வரும்போது ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தன் மகன் சுந்தரத்தை அந்த ஆசிரமத்தில் படிக்கச் செய்தார். சுந்தரம் "நந்தி மலை"க்கு சுற்றுலாக் குழுவில் சேர்ந்து போய் இருந்தான். அதன் பிறகு அவனுக்கு உடம்பு ஜுரம் ஏற்பட்டு ஆசிரமத்திற்குத் திரும்பிய பிறகு,

அவனை பெங்களூரில் உள்ள டாக்டர் ஸ்ரீ ராமராவ் என்பவரிடம் சிகிச்சைக்கு அழைத்துக்கொண்டு போனோம். அதில் பிரயோசனப்பட வில்லை. மூன்றும் நாள் மகன் இறந்துவிட்டான். அச்செய்தியை ஓமந்தூராருக்கு (தந்தியில்) அனுப்பினேன். தந்தி போய்ச்சேர்ந்த சமயம் ஓமந்தூரார், சென்னைக்குப் போயிருந்தபடியால் பெங்களூருக்கு உடனே வரமுடியவில்லை. அவருடைய மகனைத் தகனம் செய்ய முடிவு செய்தோம். அந்தச்சமயம் (கல்கி பத்திரிகையின் உரிமையாளர்) திரு. சதாசிவம் அவர்கள் பெங்களூர் நகரிலுள்ள கதர் வஸ்திராலயத்தில் மேலாளராக இருந்தார். அவர் உதவியைக் கொண்டு ஓமந்தூரார் மகனை மாலைஆறுமணிக்குத் தகனம்செய்தேன். அவன் உடலுக்கு நெருப்பு ஊட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மறுநாள் காலை ஓமந்தூரார் தம்பி லெட்சுமிநாராயண ரெட்டியார் வந்தார். வழக்கப்படி பால் தெளித்த பிறகு பையனுடைய எலும்பை எடுத்துக் கொண்டு ஊருக்குப் போய்விட்டார்.''

மகன் சுந்தரத்தின் மரணம் எதிர்பாராத விதமாகவும் திடீரென்றும் நிகழ்ந்தது. குடும்ப பாசத்தை முற்றிலும் அறுத்துக் கொண்டு தேசியப் பணியில் தாம் வாழ்நாள் முழுவதும் ஈடுபட வேண்டும் என்பது இறைவனின் திருவுள்ளம் என்று ஓ. பி. ஆர். அந்தத் துயரத்தைத் தாங்கிக்கொண்டு தம் கடமைகளைச் செய்து வந்தார்.

செல்லமாக வளர்த்த மகனின் நினைவு என்றும் இருப்பதற்காக அவன் படம் ஒன்றை எப்போதும் தன் அருகே வைத்திருந்தார்.

"ஈதல் இசைபட வாழ்த லதுவல்ல
ஊதிய மில்லை யுயிர்க்கு"
—குறள்.

# 3

# விடுதலை இயக்கம்

பெற்ற தாயைப் போற்றிய ஓமந்தூரார், தாம் பிறந்த பொன்னுடான இந்தியாவையும் வழிபட்டார். இந்தியாவில் அரசியல் விடுதலை இயக்கம் பாலகங்காதர திலகர், லாலாலஜபதிராய், சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய ஏராளமான தலைவர்களால் வளர்க்கப்பட்டு, மகாத்மா காந்தியடிகளுடைய ஒப்பற்ற தலைமையில் கிராமங்களிலும் பரவி கோடிக்கணக்கான மக்களை அதில் ஈடுபடச் செய்தது.

அடிமைத் தளைகளை அறுத்து, சுதந்திரம் பெறவேண்டும் என்ற கருத்தை ஒவ்வொரு கிராமத்திலும் பரப்புவதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட தியாகிகள் நூற்றுக்கணக்கில் உருவாயினர். இந்தத் தியாகிகள்தான் சுதந்திர இயக்கத்தின் வெற்றிக்கு அடித்தளமாக விளங்கினர்.

பின்தங்கிய தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பட்டி தொட்டி தோறும் தேசபக்தியை ஊட்டிய பெருமை ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கு உரியது.

1910 அளவில் சென்னைப் படிப்பை முடித்துக்கொண்டு சொந்த ஊருக்குத் திரும்பி, தாயார் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, திருமணம் செய்து கொண்டு நிலபுலன்களைக் கவனித்து வந்தார். இருந்தபோதிலும் இடையிடையே சென்னைக்குச் சென்று அங்கே யுள்ள தன் நண்பர்களைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந் தார். இதனால் நம் நாட்டு அரசியல் நிலைமைகளை இவர் தமது 20-ஆம் வயதிலேயே நன்றாகஅறிந்துகொள்ள வாய்ப்புஏற்பட்டது. இவருடைய நண்பர்கள் சிலர் சென்னை லிங்கிச் செட்டித் தெருவில் கெய்த்னஸ் ஹால் என்னும் மாளிகையில் தங்கிப் படித்தனர்.

அந்த மாளிகையில் தங்கிக் கொண்டு அருகேயிருந்த சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்த பலர் பிற்காலத்தில் இந்திய அரசியலில் பெரும் பங்குகொண்டனர். [1]

## ஆர். கே. எஸ். உடன் சந்திப்பு

1912-ஆம் ஆண்டில் முண்டியம்பாக்கத்திற்கு அருகேயுள்ள இராதாபுரம் என்னும் ஊரில் ஓமந்தூராரின் நண்பர் அப்பாஜி ரெட்டியார் என்பவருக்குத் திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணத்திற்கு ஆர். கே. சண்முகம் செட்டியார் வந்திருந்தார். [2]

---

1. கிறிஸ்தவக் கல்லூரி 1937-இல் பாரிமுனையிலிருந்து தாம்பரத்துக்கு மாற்றப் பட்டது.

2. ஆர். கே. சண்முகம் செட்டியார் கோவையில் 1893-இல் பிறந்தவர். மோதிலால் நேருவின் செயலாளராக இருந்தவர். ஆங்கிலேயர் ஆட்சியில் மத்திய சட்டசபைத்தலைவராகவும், உலகப்பொருளாதார மாநாடுகள் பலவற்றில் இந்தியாவின் பிரதிநிதியாகவும் இருந்தவர். ஆட்டவா (ஒட்டாவா) ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பாகக் கையெழுத்திட்டவர். கொச்சி சமஸ்தானத்தின் திவானாக இருந்தவர். மகாத்மா காந்தியடிகள் விரும்பியபடி இவர் சுதந்தர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக நியமிக்கப் பெற்றார். தமிழ் இசைச் சங்கத்தின் தலைவராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வும் இருந்தவர். 1954-இல் காலமானார்.

திருமண வீட்டில் சண்முகம் செட்டியாரை ஓமந்தூரார் சந்தித்து நாட்டின் அரசியல் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தார். அரசியலில் அவர்கள் இருவருடைய கருத்துக்களும் இரு வேறு துருவங்களாக இருந்த போதிலும், ஓமந்தூரார் அன்று தொடங்கி இறுதிவரை சண்முகம் செட்டியாரிடம் மிகமதிப்பு வைத்திருந்தார். முதலமைச்சராக இருந்தபோது ஓமந்தூரார் பரிந்துரைத்ததன் காரணமாக, சண்முகம் செட்டியார் சென்னைச் சட்டசபையிலிருந்து காங்கிரஸ் வேட்பாளராக அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் நிர்ணய சபையே இடைக்கால நாடாளு மன்றமுமாக இருந்தது. எனவே, சண்முகம் செட்டியார், சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக நியமனம் பெற்றதற்கு ஓமந்தூராரே காரணமாவார். 1947-இல் நடந்த இந்த தேசிய முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சிக்கு வித்திட்டது 1917-இல் இராதாபுரம் திருமண வீட்டுச் சந்திப்பு.

## வெங்கந்தூர் கணபதி சாஸ்திரி

விழுப்புரத்திலிருந்து 10 கி. மீ தொலைவில் வெங்கந்தூர் என்னும் சிற்றூர் இருக்கிறது. அவ்வூரினரான கணபதி சாஸ்திரி என்பவர், சமஸ்கிருதத்திலும் சமய இலக்கியங்களிலும் புலமை பெற்றிருந்ததோடு தேசியவாதியாகவும் இருந்தார். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காங்கிரஸ் இயக்கத்தை 1912-ஆம் ஆண்டில் ஆரம்பித்தவர் இவரே. இவர் மாவட்டத்திலுள்ள சில நகரங்களுக்குச் சென்று தேசியத்திற்கு அடிகோலிய போது ஓமந்தூராரும் இவருடன் சென்றார்.

## 1918-ஆம் ஆண்டு

1918-ஆம்ஆண்டு முழுவதும் ஓமந்தூரார் நாட்டின் அரசியல் நிலைமையை மிகக் கூர்ந்து ஆராய்ந்துகொண்டிருந்தார். பொது வாழ்க்கையில் முழு மூச்சாக ஈடுபடுவதற்கான வாய்ப்பை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

## மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

1919-ஆம் ஆண்டில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டங்கள்[1] இந்தியாவெங்கும் அமுலுக்கு வந்தன. அதன் ஒரு கூருக, அன்றைய சென்னை இராசதானியின்[2] லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலுக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் தேசபக்தி நிறைந்த இந்தியர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. ஆதலால், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று தேசியத் தலைவர்கள் கருதினர்கள். எனவே, தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தென் ஆர்க்காடு மாவட்டத்து வாக்காளர்கள் அதைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் வாக்காளர் களைக் கேட்டுக் கொண்டார்.


தென் ஆர்க்காடு மாவட்டத் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சி யின் சார்பாக அந்தத் தேர்தலில் இரண்டாவது கட்டுரையில் நாம் விரிவாகக் குறிப்பிட்டுள்ள சுப்பராயலு ரெட்டியார் போட்டி யிட்டார். இவர் பெருஞ்செல்வர்; செல்வாக்கு மிக்கவர்; முதலமைச்சராகப் பதவி ஏற்றவர். இவருடைய செல்வாக்கு முதலியவற்றை நன்கு உணர்ந்திருந்தும், இவர் தன் இனத்தவராக

---

1. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டங்கள் என்பவை மாண்டேகுதுரை செம்ஸ்போர்டு துரை என்ற இரண்டு ஆங்கிலேயர்களால் தீட்டப்பட்ட திட்டம். இந்தச் சட்டங்களின்படி, மாகாணங்களில் சில அதிகாரங்கள் ஆங்கிலேய அதிகாரிகளிடம் இருந்த போதிலும், வேறுசில அதிகாரங்களைச் செலுத்த முதல் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவைகள் ஏற்பட்டன.

2. சென்னை இராசதானி என்பது (1) இன்றைய தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய பகுதிகளையும், (2) இப்போது கேரளமாநிலத்தி லுள்ள கண்ணனூர், கோழிக்கோடு, மலைப்புரம், பாலக்காடு மாவட்டங்களை யும், (3) இப்போது கர்நாடக மாநிலத்திலுள்ள தென்கன்னட மாவட்டத்தை யும், பெல்லாரி மாவட்டத்தையும், (4) இப்போது ஆந்திர பிரதேசத்திலுள்ள அனந்தபூர், சித்தூர், கடப்பா, கர்நூல் ஆகிய ராயலசீமை மாவட்டங்களையும் குண்டூர், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணு, பிரகாசம், நெல்லூர், விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம் ஆகிய கடலோர மாவட்டங்களையும், (5) இன்றைய ஒரிசா மாநிலத்திலுள்ள கஞ்சம் மாவட்டத்தையும் உள்ளடக்கி இருந்தது.

அந்நாளில் ஒருசில அதிகாரங்கள் மட்டுமே இராசதானிகளுக்கு இருந்தன, அந்த அதிகாரங்கள்கூட கவர்னரின் நிர்வாக சபையில் உறுப்பினராக இருந்த ஆங்கிலேயர்களிடம் இருந்தன. இராசதானிக்கென்று ஒரு லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் மட்டும் இருந்தது. இந்த அவையில் சரிபாதி ஆங்கிலேயர்களாகவும் மற்ற அதிகாரிகளாகவும் கவர்னரால் நியமனம் செய்யப் பட்டவர்களாகவும் இருந்தனர், மற்றொரு பாதி மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.




ஓ. பி. ஆர். முதலமைச்சர் பொறுப்பேற்றபோது இருந்த சென்னை இராஜதானி

இருந்தும்கூட சற்றும் அஞ்சாமல் ஓமந்தூரார் அந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டார். ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தனித்தனியாக வாக்காளர்களைச் சந்தித்து "நீங்கள் தேர்தல் சாவடிக்குச் செல்லாதீர்கள். உங்களுடைய வாக்கைப் பயன்படுத்தாதீர்கள். ஆங்கிலேய அரசாங்கத்திற்கு நம்முடைய எதிர்ப்பை தெரிவிக்க இதுதான் வழி" என்று கூறினார்.

## காங்கிரஸ் பிரசாரம்

தேர்தல் முடிவடைந்த பிறகு ஓமந்தூரார் அந்த அளவில் அமைதியடையவில்லை. காங்கிரசின் கொள்கைகளைப் பரப்புவதில் அல்லும் பகலும் முனைந்தார்.

நண்பர்கள் ஐந்துபேரை அழைத்துக் கொண்டு கிராமம் கிராமமாக நடந்து சென்றார். இவர்களே தமுக்குப் போட்டு, காங்கிரஸ் பிரசாரம் செய்தார்கள். இக்குழுவினர் வருமாறு:

1. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்
2. இராதாபுரம் அப்பாஜி ரெட்டியார்
3. நெம்மலி வெங்கட்டராம ரெட்டியார்
4. குச்சிபாளையம் சாந்தானந்த ரெட்டியார் (சாந்தானந்த சுவாமிகள்)
5. ரெட்டிக்குப்பம் கோவிந்த ரெட்டியார்
6. முலசூர் மாதவ ரெட்டியார்[1]

## நாகபுரி காங்கிரஸ்

1920-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகா சபையின் மாநாடு நாகபுரியில் நடைபெற்றது. அந்த மாநாட்டுக்குச் சேலத்தின்

---

1. முலசூர் மாதவரெட்டியார்: இவர் ஓமந்தூராருக்கு ஆறேழுமாதங்கள் மூத்தவர். 1894-இல் பிறந்தவர். இப்போது மயிலத்தை அடுத்த திருவக்கரை அருகேயுள்ள எறையூர்-நெம்மலியில் வாழ்ந்து வருகிறார். இவர் இளமையில் முலசூரில் இருந்தார். முலசூருக்கும் ஓமந்தூருக்கும் 2 கி. மீ. தொலைவு. எனவே, அடிக்கடி இருவரும் சந்தித்தனர். 1916 முதல் 1970 வரை இருவரும் இணைபிரியாதுஇருந்தனர் என்றும் சொல்லலாம். சென்னையில் முதலமைச்சராக இருந்தபோதும், டில்லியில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்த போதும் ஓமந்தூராருடனேயே முலசூர் மாதவ ரெட்டியார் தங்கியிருந்தார். மாதவ ரெட்டியார் மணமாகாதவர். எவ்விதச் சிபாரிசும் செய்யமாட்டார். எனவே ஓமந்தூரார் இவரை உடன் வைத்துக் கொண்டார்.

முதுபெரும் கிழவர் என்ற அடைமொழியைப் பிற்காலத்தில் பெற்ற சி. விஜயராகவாச்சாரியார் என்று புகழ்பெற்ற வழக்கறிஞர் தலைமை தாங்கினர்.

தென் இந்தியாவிலிருந்து பிரதிநிதிகள் செல்லுவதற்கு வசதியாகச் சென்னையிலிருந்து தனி இரயில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. கீழ்க்கண்டவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு ஓமந்தூரார் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

1. லெட்சுமிநாராயண ரெட்டியார் (ஓமந்தூராரின் தம்பி)
2. மேல்பாக்கம் சதாசிவ ரெட்டியார்
3. இடையானம் ரங்கா ரெட்டியார்
4. முலசூர் மாதவ ரெட்டியார்
5. கட்டளை முத்துக்குமரப்ப ரெட்டியார்

நாகபுரி மாநாட்டு நிகழ்ச்சிகளைக் குறித்து ஓமந்தூர் ரெட்டியார் அங்கு வந்திருந்த பிரதிநிதிகளுடன் கலந்து பேசினர்.

மாநாடு முடிவடைந்த பிறகு காசிக்கும், கல்கத்தாவுக்கும் போய் அந்த நகர்களில் சில நாட்கள் தங்கிவிட்டு ராஜமகேந்திரபுரம் வழியாகச் சென்னைக்கு நண்பர்களுடன் திரும்பிவந்தார்.

## அன்னை பெசன்ட் சந்திப்பு

1921 ஆம் ஆண்டில் கடலூரில் பிரம்மஞான சபை (தியாசபிகல்சொசைடி) மாநாடு நடைபெற்றது. டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையார் அந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். ஓமந்தூரார் அங்கே சென்று அந்தச் சபையின் கருத்துக்களையும் கொள்கைகளையும் துருவி விசாரித்துக் கொண்டார். பெசன்ட் அம்மையாரைச் சந்தித்து அவருடன் உரையாடினர்.

## விழுப்புரம் மாநாடு

தென் ஆர்க்காடு மாவட்ட அரசியல் மாநாடு 1920 - இல் முதல் தடவையாக நடைபெற்றது. நாகபுரி மாநாடு முடிந்து எல்லோரும் திரும்பி வீடுவந்து சேர்ந்திருந்த சமயம் அது.

விழுப்புரத்தில் நடைபெற்ற அந்த மாநாட்டை மிகச் சிறப்பாக் நடத்திய பெருமை வெங்கந்தூர் கணபதி சாஸ்திரி, விழுப்புரம் வக்கீல் சிதம்பர ஐயர், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், மஞ்சக் குப்பம் சுதர்சனம் நாயுடு, சிறுவந்தாடு தேவநாயகஜயா ஆகியோ ருக்கு உரியது. மாநாட்டுக்குச் செலவுக்குப் பணம் வசூல் செய்யும் பொறுப்பைப் பெரும்பகுதி ஓமந்தூராரே ஏற்றுக்கொண்டார்.

திருமதி அசலாம்பிகை அம்மாள், அனுமந்தராவ், கிருஷ்ண சாமிசர்மா, 'ஹிந்து' நாளிதழின் ஆசிரியர் ரெங்கசாமி ஐயங்கார் முதலியவர்கள் கலந்துகொண்டு இந்த மாநாடு வெற்றிபெறச் செய்தனர். இந்த மாநாட்டால் தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் அதன்சுற்றுப் புறங்களிலும் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது.

## திண்டிவனத்தில் தெருவெல்லாம் தேசிய முழக்கம்

1926-அளவில் தான் மாவட்டம் முழுவதும் தேசிய இயக்கத்தைப் பரப்பும் பொறுப்பை ஓமந்தூரார் ஏற்ருர். அதற்கு முதல் படியாக திண்டிவனம், விழுப்புரம் வட்டங்களேத் தேசியக் கோட்டையாக்கினர்.

1924-இல் அமாவாசை தோறும் ஓமந்தூராரும், ராஜம் செட்டியாரும், மண்டி சிங்காரம்பிள்ளேயும் பாரதமாதா படத்தை யும், மகாத்மா காந்தி படத்தையும் கைகளில் தாங்கிக்கொண்டு தெரு வெல்லாம் பஜனேக் குழுக்களுடன் கதர்மூட்டைகளேச் சுமந்து சென்று நகர்முழுவதும் விற்று வந்தனர்.

மற்ற நாட்களில் கள்ளுக்கடை, சாராயக்கடைகளே மறியல் செய்வதில் ஈடுபட்டார்கள்.

திண்டிவனத்தில் 1924ஆம் ஆண்டில் ஓமந்தூராரும் ராஜம் செட்டியார் என்ற அவர் நண்பருமாகச் சேர்ந்து தேசியப் பாட சாலே ஒன்றை ஆரம்பித்துச் சில ஆண்டுகள் வரை நடத்தி வந்தார்கள்.

## யூனியன் ஜாக் கொடி ஏற்ருதே!

1927-ஆம் ஆண்டு அளவில் பண்ணுருட்டியில் தமிழ் நாடு வன்னியர் (படையாச்சிகள்) மாநாடு நடைபெற்றது. அம்மாநாட் டில் கலந்து கொள்ளும்படி அன்றைய சென்னே இராசதானி

யின் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் கேட்டுக்கொள்ளப் பட்டார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் சின்னமாகிய யூனியன் ஜாக் கொடியை மாநாட்டில் ஏற்றிவைத்து உரை நிகழ்த்து வதாக டாக்டர் சுப்பராயன் தெரிவித்தார். அவ்வாறு நிகழ்ச்சி நிரலும் அச்சிடப்பெற்றது.

இதை அறிந்த ஓமந்தூரார் வெகுண்டு எழுந்து, படையாச்சி சமூகத்திலுள்ள தேசிய இளைஞர்களையெல்லாம் ஒன்று திரட்டி யூனியன் ஜாக் கொடி அந்த மாநாட்டில் ஏற்றப் படுவதைத் தடுத்தார். அதற்குப்பதிலாக வன்னியர் கொடி திடீரென்று உருவாக்கப்பட்டு, அதை, டாக்டர் சுப்பராயன் ஏற்றிவைத்தார்.

அன்று டாக்டர் சுப்பராயனைப் பற்றி ஓமந்தூராருக்கு ஏற்பட்ட கருத்து, ஓமந்தூரார் மனத்தில் நிலைத்துவிட்டது போலும். ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்தபோது, போலீஸ் அமைச்சராக டாக்டர் சுப்பராயன் இருந்தார். அப்போது (அதாவது 1948) இருவருக்கும் ஏற்பட்ட மோதலுக்கு, பண்ணு ருட்டி நிகழ்ச்சி காரணமாக இருக்கலாம்.

## உப்பு சத்தியாக்கிரகம்

வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரகம்[1] நடந்தபோது, ஓமந்தூரார், மாதவ ரெட்டியார், விழுப்புரம் ஆதிநாராயண, வெங்கட்ட ராம ரெட்டியார் முதலிய ஆறு பேருடன் கால்நடை யாகவே வேதாரண்யத்துக்குப் புறப்பட்டார். யாத்திரையின் மூன்றுவது நாளில் ஓமந்தூரார் கைது செய்யப்பட்டார்.

சிறையிலிருந்து வெளிவந்த பிறகு ஓமந்தூரார் தம் நண்பர் களுடன் கிராமப் பிரசாரம் ஆரம்பித்தார்.

## கதர் பிரசாரம்

கதர் பிரசாரத்தில் ஓமந்தூரார் 1931இல் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். பின்வருவதுபோன்ற அறிக்கையை அச்சிட்டு, பலரிடமும் உறுதிமொழி எழுதிவாங்கினர்.

---

1. விவரம் அடுத்த கட்டுரையில் காண்க.

உப்புச்சட்டம் மீறி அதை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு, தர்மயுத்தம் துவக்கி ஏராளமான தேசபக்தர்கள் சகோதர சகோதரிகள் உப்புக்காய்ச்சி உற்பத்தி செய்து, அதனால் இவ்வாக்ஷிமுறையால் சிறை முதலிய தண்டனைகளை உற்சாகத்துடன் அடைந்து வருகிறார்கள்.

இந்த அரிய சந்தர்ப்பமாகிய நம் தேச சோதனைக் காலத்தில் நான் தெய்வசாக்ஷியாய் இன்று முதல் கைராட்டினத்தில் நூற்ற கைத்தறியில் உற்பத்தியாகும் கதரை ஆதரித்து மஹாத்மா காந்தி, வகுத்த திட்டப்படி ஏழை மக்கள் அதன் அன்பிற்குப் பாத்திரமாகும் வண்ணம் கதரைத் தவிர வேறு ஆடைகளை அணிவதில்லை என்று பிரதிக்ஞை செய்கிறேன். என் நண்பர்களையும் என் வழிக்கு திருப்ப முயலுவேன்கடவுள் துணை செய்க.

கையெழுத்து.

தேதி: வயது:

விலாசம்:

---

உறுதிமொழியில் கண்ட விஷயங்களை நன்றாய் ஆலோசித்து தயவுசெய்து கையெழுத்து செய்யவும். ஒருபாதியை தாங்கள் வைத்துக்கொண்டு, மற்றொரு பாதியை அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்,

பெ. இராமசாமி ரெட்டி
ரு. ச. இராஜம் செட்டி
கதர்சாலை, திண்டிவனம்.

## அரசியல் மாநாடுகள்

புதுச்சேரி மாநிலத்தின் எல்லையிலுள்ள சொர்ணவூர், சிறுவந்தாடு என்ற சிற்றூர்கள் ஓமந்தூராரின் வாழ்க்கையில் சிறப்பிடம் பெறுபவை. இந்த ஊர்களில் இன்றும் ஏராளமான தியாகிகளைக் காணலாம். ஓமந்தூராரின் முயற்சியால் அக்காலத்தில் பெரிய அளவில் அரசியல் மாநாடுகள் இந்தச் சிற்றூர்களில் நடைபெற்றன.

சொர்ணூரில் மகாத்மா காந்தியடிகளின் கிராமப் புனருத்தாரணத் திட்டத்தின்படி, ஓமந்தூரார் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தார். அந்த ஊரில் பெரிய நிலச்சுவான்தாராக உள்ள எஸ். ஆர். லெட்சுமிநாராயண ரெட்டியார் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தார். அந்த மாநாடு நடைபெறுவதற்கு எத்துணை இடையூறுகள் செய்ய முடியுமோ அத்துணையையும் போலீஸார் செய்தார்கள். கொடிமரம் ஊன்றக்கூடாது என்று போலீஸார் தடுத்துவிட்டனர். கொடிமரம் நட்டவர்களை அவர்கள் கைது செய்தனர். மாநாட்டில் தலைமைவகிக்க ஓமந்தூரார் அவ்வூருக்கு வந்தார். "தேசியக் கொடிகூடக் கட்டாமல் என்னய்யா மாநாடு நடத்துகிறீர்கள்" என்று உள்ளூர்க்காரர் களைக் கடிந்து கொண்டார். நடந்ததைச் சொன்னார்கள்.

"சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் கல்யாணம் நின்று விடுமா? கொடிமரம் ஊன்றாவிட்டால் தேசியக் கொடியை ஏற்ற முடியாதா? உங்கள் ஊரில்தான் நூற்றுக்கணக்கில் பனைமரங்கள் இருக்கின்றனவே. பனைமரத்து நுனிகளில் கொடியைக் கட்டுங் கள்" என்று சொன்னார். உடனே நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் பனைமரங்களில் ஏறி எங்கும் தேசியக்கொடியைப் பறக்கவிட்டு,

"தாயின் மணிக்கொடி பாரீர்!
அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!"

என்று பல்லவி பாடினர். ஓமந்தூரார் முகம் மலர்ந்தது; வெற்றிக் களிப்பால் சிரித்தார். அவருடைய 75 வயது வாழ்க்கையிலேயே அவர் சிரித்த சந்தர்ப்பங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

காமராஜர், ப. ஜீவானந்தம், எஸ். என். சோமயாஜுலு முதலிய தலைவர்களும் சிறந்த பேச்சாளர்களும் சொர்ணூர் மாநாட்டில் கலந்துகொண்டனர். மற்றும் திருமதி கோதைநாயகி அம்மாள், பிற்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் அமைச்சரவைகளை ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்றிருந்த ஜனக சங்கர கண்ணப்பர் ஆகியோர் முக்கியமான தீர்மானங்களின்மீது உரையாற்றினர்.

## சிறுவந்தாடு

சொர்ணவூருக்கு அருகே — ஆனால் புதுச்சேரி மாநில எல்லையைக் கடந்து — சிறுவந்தாடு என்னும் சிற்றூர் உள்ளது. இந்த ஊரும் தமிழ் நாட்டின் தேசிய வரலாற்றில் புகழ்பெற்ற ஏராளமான தியாகிகளை வழங்கியிருக்கிறது. கே. சீனிவாச ரெட்டியார், எஸ். பி. வீராசாமி ரெட்டியார், மணியக்காரர் எஸ். கே. லெட்சுமிநாராயண ரெட்டியார், எஸ். ஏ. தேவநாயக ஐயா போன்ற ஏராளமான தியாகிகள் இவ்வூரினர் ஆவர். மற்றும், ஓமந்தூராரின் வலதுகரமாக விளங்கிய சின்னசாமி ரெட்டியாரும் இவ்வூரினரே. சின்னசாமி ரெட்டியாரும் அவருடைய மனைவியாரும் ஓமந்தூராரின் கருத்துக்கு இணங்க, தேசியப் போராட்டத்தில் சிறை சென்றது குறிப்பிடத்தக்கது. இவருடைய முயற்சியாலும் மணியக்காரர் எஸ். கே. லெட்சுமிநாராயண ரெட்டியார் முயற்சியாலும் இவ்வூரில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பெயரால் பொதுமக்களுடைய நன்கொடையால் ஒரு மருத்துவமனை அமைக்கப்பட்டு 25—1—1953-இல் அன்றைய முதலமைச்சர் இராஜாஜி அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. இது இப்போது கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கிவருகிறது.

இவ்வூரில் 1927-ஆம் ஆண்டிலேயே ஓமந்தூரார், காந்தி ஆசிரமம் ஏற்படுத்தி கதர் கொள்கையையும், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தையும் பரப்புவதில் இவ்வூர் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். 1927-க்கும் 1934-க்கும் இடையில் இவ்வூரில் மூன்று தடவை அரசியல் மாநாடுகளை ஓமந்தூரார் நடத்தினர்.

## கள் குடியாதே, கள் இறக்க மரம் விடாதே:

1930 முதல் 1934 வரை இடையிடையே நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு திண்டிவனம், விழுப்புரம், கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் வட்டங்களில் பாத யாத்திரை சென்று,

"கள் குடியாதே"
"கள் இறக்க மரம் விடாதே"
"கதர் கட்டு"

என்று பிரசாரம் செய்தார்.

கடலூர் மைதானக் கிளர்ச்சி

மாவட்டத் தலைநகரமாகிய கடலூரில் ஓமந்தூரார் பெரிய கூட்டங்களை நடத்தினர். அவ்வாறு கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்ற இடம் கடலூர் மைதானமே என்று முடிவு செய்தார்.

ஆங்கிலேயர்களுடைய ஆட்சியில் கடலூர் முக்கியத்துவம் பெற்றிருந்தது. சென்னை இராசதானிக்கு அந்த நகரம் 1746 முதல் 1749 வரை தலைநகராக இருந்தது. ஆங்கிலேயருடைய ஆட்சியை இந்தியாவில் நிலைக்கவைத்த ராபர்ட் கிளைவ், டிபுடி கவர்னராக இந்த நகரிலிருந்து ஆட்சி புரிந்தார். 1705-இல் அவர் அமைத்துக் கொண்டு வாழ்ந்த 'கார்டன் ஹவுஸ்' என்னும் மாளிகையே தென் ஆர்க்காடு மாவட்டத்துக் கலெக்டரின் இல்லமாக இருந்து வருகிறது.

மஞ்சக்குப்பத்துக்கு ராபர்ட் கிளைவ் வழங்கிய மற்றொரு பெருமை, அந்நகரின் அழகிய மைதானம், இந்தியாவிலுள்ள மிகப் பெரும் மைதானங்களுள் ஒன்றாக இது விளங்குகிறது. இதன் நீளம் 800 மீட்டர்; அகலம் 600 மீட்டர்; பரப்பளவு 15 ஏக்கர் இருக்கலாம். மஞ்சக்குப்பத்திலிருந்து கலெக்டர் ஆபீஸ் ரோடு முடிய நான்கு பெரிய தெருக்களின் நடுவே அமைந்து சுற்றுபுறத்துக்கு நல்ல காற்றை வழங்கும் காலி மனையாக இது இருந்துவருகிறது

ஒரு தடவை ஓமந்தூரார் இந்த மைதானத்தில் அரசியல் கூட்டம் ஏற்பாடு செய்தார். அன்று முதல், பொதுக்கூட்டங்களுக்குக் கடலூர் மைதானத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று அரசினர் ஆணையிட்டனர்.

இவ்வளவு பெரிய மைதானத்தைப் பயன்படுத்த வாய்ப்பு மறுக்கப்பட்டபோது, மாவட்டக் காங்கிரஸ் அலுவலகத்தைக் கடலூரில் வைத்திருப்பதில் பயனில்லை என்று ஓமந்தூரார் கருதினர். அதன் விளைவாக 1936 வரை திண்டிவனத்திலேயே அந்த அலுவலகத்தை வைத்துக்கொண்டார்.

கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று தொடர்ந்து ஓமந்தூரார் கிளர்ச்சி செய்தார். 1937-இல் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டது. அப்போது முதலமைச்சராக இருந்த

CONNEMARA PUBLIC LIBRARY
23 MAR 1980
MADRAS




தென் ஆர்க்காடு மாவட்டம் சிறுவந்தாடு
என்னும் ஊரில் இருக்கும் ஓ. பீ. ஆர்.
மருத்துவமனை.

இராஜாஜியிடம் ஓமந்தூரார் வேண்டிக்கொண்டதன் பயனாக, அந்த மைதானத்தில் பொதுக்கூட்டங்களை நடத்திக்கொள்ளும் உரிமையை அரசியல் கட்சிகளுக்கு வழங்கி 1938-ல் சென்னை அரசு ஓர் ஆணை பிறப்பித்தது.

### சீமைத் துணி மறியல்

1932-33-ஆம் ஆண்டுகளில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சீமைத்துணி விற்பனை செய்யும் கடைகளின் முன்பாக மறியல் நடைபெற்றது.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இந்தப் போராட்டத்தின் தளபதியாக விளங்கினார் ஓமந்தூரார். தமது போராட்டத்துக்குக் களமாக அவர் விழுப்புரத்தைத் தேர்ந்தெடுத்தார். அந்த நகரில் சோமு செட்டியார் என்பவரின் கடை சீமைத்துணி விற்பனையில் சிறந்துவிளங்கியது. அந்தக் கடை முன்பாக ஓமந்தூரார் ஆறு மாத காலத்துக்கு மறியல் நடத்தினார்.

மறியலில் கலந்துகொள்ள சொர்ணாவூர், சிறுவந்தாடு முதலிய ஊர்களிலிருந்து அறுபதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் தங்குவதற்கு ஓமந்தூரார் விழுப்புரத்தில் ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். காலையில் எழுந்ததும் பிரார்த்தனை. கஞ்சி குடித்தபிறகு தேசியக்கொடி ஏந்தி, தேசிய கீதங்களைப் பாடி நகரத்து வீதிகள் வழியாக ஊர்வலம் வருதல். அதன் பின்னர், சோமு செட்டியார் கடைமுன் மறியல் என்பது அன்றாட வழக்கமாக இருந்தது

இந்தக் கிளர்ச்சிக்கும் இதுபோன்ற பிற கிளர்ச்சிகளுக்கும் ஓமந்தூரார் எவ்வித நிதியையும் வசூலிக்கவில்லை; தன்னுடைய பணத்தையே செலவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சீமைத்துணி மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களில் சிலர் ஒட்டிய வயிறு, பார்வை மங்கிய கண்கள், குழிவிழுந்த கன்னங்கள் ஆகியவற்றுடன் முதிர்ந்த வயதினராய் இன்றும் உயிருடன் உள்ளனர். பழைய நினைவுகளைக் கேட்டபோது அவர்கள் நூலாசிரியரிடம் பின்வருமாறு கூறினர்.

"விழுப்புரம் மறியலை இன்று நினைத்தாலும் மயிர்க் கூச்சல் ஏற்படுகிறது. ஒரு புத்துணர்ச்சியைப் பெறுகிறோம். நிலம் இருந்தால் மட்டும் போதாது, படிப்பும் முக்கியம்; தேசியப் பற்றும் முக்கியம் என்பதை எங்களுக்கு அறிவுறுத்தியவர், ஓ. பி. ஆர். அவர் சத்தியசீலன். சத்தியம், நீதி, நேர்மை இல்லாதவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார். கண்டிப்பானவர்; கட்டுப்பாடானவர் எங்களுக்கெல்லாம் அவரைக் கண்டாலே பயம்."

## தியாகிகளுடன் தொடர்பு

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட தொண்டர்களையும் ஏனைய தியாகிகளையும் ஓமந்தூரார் நன்கு தெரிந்து வைத்திருந்தார். அவர்களுடைய குடும்ப நிலைமையையும் அறிந்து, கூடுமானவரை அவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவியைத் தன் சொந்தப் பணத்திலிருந்து செய்து வந்தார் இவ்வாறு அவர் ஒருவருக்குச் செய்த உதவியை வேறு யாரிடமும் தெரிவித்தது இல்லை. உதவி பெற்றிருப்பவர்கள் ஓமந்தூராருக்கு நன்றி தெரிவித்து எழுதிய சில கடிதங்கள் எமது (இந்நூலாசிரியருக்கு) ஆராய்ச்சியில் கிட்டியிருப்பதாலே தகவல் தெரியவருகிறது.

குறிப்பிட்ட தியாகியின் குடும்பம் வறுமையாக இருப்பதாக ஓமந்தூராருக்கு நேரில் நன்றாகத் தெரிந்திருந்தபோதிலும், அவர் "முறைப்படியும் சட்ட விதிகளுக்கு உட்பட்டும் உரிய அதிகாரிகளுக்கு மனுச் செய்து இன்ன இன்ன சலுகைகள் உங்களுக்குக் கிடைக்கும், பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லுவார். இன்ன சலுகை கிடைக்காவிட்டால் விணாக அலைய வேண்டாம், என்றும் திட்டவட்டமாகச் சொல்லிவிடுவார். "நான்தான் முதலமைச்சர், உடனே உத்தரவு போடுகிறேன்" என்று ஆசைவார்த்தை சொல்லவும் மாட்டார்; கையிலேயே அந்த மனுவை வாங்கிக் கொள்ளவும் மாட்டார்.

## விழுப்புரத்தில் மாநில மாநாடு (1933—34)

ஓமந்தூராருடைய ஆதரவில் விழுப்புரத்தில் மாநில அரசியல் மாநாடு ஒன்றும் நடைபெற்றது. அம் மாநாட்டுக்கு நாமக்கல் வெங்கடாசல ரெட்டியார் தலைமை வகித்தார். அந்த

மாநாட்டை இராஜாஜி திறந்துவைத்தார். விழுப்புரம் வழக்கறிஞர் சிதம்பர ஐயர் வரவேற்புக் குழுவின் தலைவராக நியமிக்கப் பெற்றார். 3,000 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

## காங்கிரஸ் மகாசபையின் பொன் விழா

1934 இல் காங்கிரஸ் மகா சபையின் பொன்விழா கொண்டாடப் பெற்றது. அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த பாபு இராஜேந்திர பிரசாத் அப்போது தமிழ் நாட்டில் விரிவாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அவருடைய சுற்றுப்பயணத்தை ஓமந்தூரார் ஏற்பாடு செய்தார். இராஜேந்திர பாபுவை ஓமந்தூரார், திருவண்ணாமலைக்கு அழைத்துச் சென்று பகவான் ரமண மகரிஷிக்கு அறிமுகப் படுத்தினர். இருவரும் ரமண ஆசிரமத்தில் ஒருவாரம் தங்கியிருந்தனர்.

காங்கிரஸ் பொன் விழா நினைவாக ஓமந்தூரார் விழுப்புரத்தில் ஜவஹர்லால் நேருவின் மனைவி பெயரில் 'கமலா நகர்' என்று ஒரு குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்த முடிவு செய்தார். 1936 இல் ஜவஹர்லால் நேருவைக் கொண்டு, இக்குடியிருப்புக்கு அடிக்கல் ஊன்றச் செய்தார். இந்த ஏற்பாடுகள் யாவும் ஓமந்தூரார், தென் ஆர்க்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபோது, சுதந்திரப் போராட்ட வீரர் விழுப்புரம் ஆதிநாராயண அவர்களின் ஒத்துழைப்புடன் நிகழ்ந்தன.

மயிலத்தை அடுத்துள்ள கூட்டேரிப்பட்டில், கமலா நேரு பெயரால் ஓமந்தூரார் ஒரு பள்ளிக்கூடம் அமைத்து மகாத்மா காந்தியைக் கொண்டு திறக்கச் செய்தார்.

## மத்திய சட்டசபைத் தேர்தல் (1934)

1934 ஆம் ஆண்டில் மத்திய சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்றது. செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களும் அடங்கிய தொகுதிக்குக் காங்கிரஸ் கட்சியினர் தங்கள் வேட்பாளராக சி. என். முத்துரங்க முதலியாரை நிறுத்தினர். ஜஸ்டிஸ் கட்சியார் அவருக்கு எதிராகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ஜம்புலிங்க முதலியாரின் ஆதரவுடன் நடேசன் என்பவரை நிறுத்தியிருந்

தனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் தேர்தல் வேலைகளை முத்துரங்க முதலியாரே கவனித்துக்கொண்டார். தென்ஆர்க்காடு மாவட்டத்தில் தேர்தல் பணி ஓமந்தூராரிடம் ஒப்படைக்கப் பெற்றது. அந்த மாவட்டம் முழுவதும் "ஓமந்தூராருடன் நானும் சுற்றுப்பயணம் செய்தேன். ஒவ்வொரு கிராமத்திலும் இவருக்கு அபாரமான செல்வாக்கு இருந்ததை நான் கண்கூடாகக் கண்டேன்!" என்கிறார் முத்துரங்க முதலியாரின் மருமகனும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான மீ. பக்தவத்சலம்[1] அவர்கள்,

## மாவட்டக் கழகத் தேர்தல் (1936)

சென்னை இராசதானி எங்கும் எல்லா மாவட்டக் கழகங்களுக்கும் 1936 இல் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டக் கழகங்களுக்குக் காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஓமந்தூராரையும் சேர்த்துக் கொண்டது. ஆனால் தென் ஆர்க்காடு மாவட்டக் கழகத்துக்குக் காங்கிரஸ் வேட்பாளர்களை நியமிப்பதற்கும், தேர்தல் பிரசார ஏற்பாடுகளைச் செய்யவும் அனைத்து அதிகாரங்களும் ஓமந்தூராருக்கே கொடுக்கப்பட்டன. இம்மாவட்டக் கழகத்தில் இருந்த 56 இடங்களில் 45 ஐக் காங்கிரஸ் கைப்பற்றியது.

ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாக இருந்த தென் ஆர்க்காடு மாவட்டம் ஓமந்தூராரின் செல்வாக்காலும் மக்கள் ஆதரவாலும் காங்கிரஸ் கோட்டையாக மாறிற்று. எனினும் அவர் அந்தத் தேர்தலில் நிற்கவில்லை.

---

1. திரு மீ. பக்தவத்சலம்

சேக்கிழார் பரம்பரையில் தோன்றியவர். சட்டக்கல்லூரியில் படித்த போதே விடுதலை இயக்கத்தில் தடியடிபட்டவர். பலமுறை சிறை சென்றவர். இருபதாண்டுகள் அமைச்சராகவும், 1963 முதல் 67 வரை முதலமைச்சராகவும் இருந்தவர். தமிழ்நாட்டின் பழுத்த அரசியல் தலைவர்.

## நகராட்சித் தேர்தல்கள் (1936)

மாவட்டக் கழகத் தேர்தல்களைத் தொடர்ந்து நகராட்சிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அந்நாளில் கடலூர், சிதம்பரம், விழுப்புரம் ஆகிய மூன்று நகர்களில் மட்டுமே நகராண்மைக் கழகங்கள் இருந்தன. இந்த மூன்று கழகங்களையும் காங்கிரஸ் கட்சி கைப்பற்றுவதற்கு ஓமந்தூரார் காரணமாக இருந்தார். ஆயினும் அவர் எந்த நகராண்மைக் கழகப் பதவிக்கும் போட்டியிடவில்லை.

தேர்தல் பிரசாரங்களுக்குத் தூத்துக்குடி, எஸ். என். சோமயாஜுலு, கோவை சி. பி. சுப்பையா போன்ற சிறந்த பேச்சாளர்களையெல்லாம் ஓமந்தூரார் வரவழைத்தார்.

"தூத்துக்குடி சோமையாஜுலுவும்
தொண்டர் சுப்பையாவும் பேசிவர
சாத்துக்குடிப் பழச் சாறுபோல் சனங்கள்
உள்ளத்தில் வீறு வரும்''

என்று தொண்டர்கள் பேசிக்கொண்டனர்.

## ஸ்தல ஸ்தாபனங்கள் — தமிழ்நாடு காங்கிரசின் குழு

தமிழ்நாட்டில் பெரும்பாலான நகராண்மைக் கழகங்களையும் எல்லா மாவட்டக் கழகங்களையும் காங்கிரஸ் கைப்பற்றியது. காங்கிரஸ் கட்சி அவற்றை நிர்வகித்த முறையைப்பற்றிப் பல குறைகள் தெரிவிக்கப்பட்டன. குறைகளைக் களைய ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள காங்கிரஸ் கட்சிகளுக்கு யோசனை சொல்லவும், அந்த உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டிய நடைமுறை சம்பிரதாயங்களை வகுக்கவும், அவர்களைக் கண்காணிக்கவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கீழ்க்கண்ட குழுவை 1937-இல் நியமித்தது.

1. திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்
2. திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா
3. திரு. மீ. பக்தவத்சலம்

பல ஆண்டுகளுக்குப் பிறகு முதலமைச்சர் பதவி வகித்த மூவர் அக்குழுவில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

குழுவினர் தமிழ்நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து விரிவான அறிக்கையை வழங்கினர். சலுகை, ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றும், தேசிய உணர்ச்சியை மக்களிடம் பரப்பவும், தேசிய இயக்கத்தை வலுப் படுத்தவுமே காங்கிரஸ்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங்களைப் பயன் படுத்தவேண்டும் என்றும் அந்த அறிக்கை அறிவுறுத்தியது.

## சென்னை மாகாண சட்டசபைத் தேர்தல் (1937)

1935-ஆம் ஆண்டில், இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றம் இந்திய மாகாணங்களுக்கு 1937 ஏப்ரல் முதல் நாளிலிருந்து மாகாண சுயாட்சி வழங்கும் சட்டத்தை நிறைவேற்றிற்று. இந்தச் சட்டத்தின்கீழ், முதல் தடவையாகச் சென்னையில் மாகாண சட்டசபை ஒன்று அமைக்கப்பெற்றது.

இந்தச் சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு பொதுத் தேர்தல் 1937 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் ஓமந்தூராருக்கு வழங்கியது. அந்தத் தேர்தலிலும் ஓமந்தூரார் நிற்கவில்லை.

கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் ஆகிய இரண்டு வட்டங் களும் (தாலுக்காக்களும்) சேர்ந்து இரட்டை உறுப்பினர் தொகுதியாக இருந்தது. ஓரிடம் ஹரிஜனங்களுக்காகவும் மற்றோர் இடம் பொது இடமாகவும் இருந்தது. அந்தத்தொகுதியில் ஜஸ்டிஸ் கட்சியின் வேட்பாளராக தசகண்ட இராவணன், என்ற இரும்புத்தலை ஜம்புலிங்க முதலியார் நின்றார்.

காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்டு அவரைத் தோற்கடிக்கக் கூடிய ஆள் ஒருவரும் தென்ஆர்க்காடு மாவட்டத் தில் கிடைக்கவில்லை என்பதை ஓமந்தூரார் உணர்ந்தார். எப்படி யும் ஜஸ்டிஸ் கட்சியார் அந்தத் தொகுதியில் வெற்றிபெற விடக் கூடாது என்று உறுதிகொண்டு அண்டை மாவட்டமாகிய சேலத்திலிருந்த ஏ. சுப்பிரமணியம் அவர்களை அத்தொகுதியில் நிறுத்தி வெற்றிபெறச் செய்தார். சேலம் சுப்பிரமணியம் பழுத்த தியாகி; 1937 முதல் தொடர்ந்து பல்லாண்டுகள் சட்டசபை உறுப்பினராக இருந்தவர், மிகச் சிறந்த பேச்சாளர். இதேபோல்

ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்துக்கு நீலகிரிமாவட்டத்தாராகிய வி. ஐ. முனிசாமி பிள்ளையைக் காங்கிரசின் சார்பாக ஓ. பி. ஆர். நிறுத்தினர். இருவரும் வெற்றிபெற்றனர். முனுசாமி பிள்ளை இராஜாஜி அமைச்சரவையில் அமைச்சர் ஆனர்.

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல்

1932-இல் ஓமந்தூராரின் ஆதரவுடன் தான், சி. என். முத்துரங்க முதலியார், தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானர் ஓமந்தூரார் துணைத் தலைவராக இருந்தார்.

1938-இல் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் ஓமந்தூரார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்தத் தேர்தலுடன் சேர்த்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தலும் நடைபெற்றது. அந்தப் பதவிக்கு மகாத்மா காந்தியடிகளின் ஆதரவுடன், டாக்டர். பட்டாபி சீதாராமையாவும் அவருக்கு எதிராக, தீவிரவாதியான நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸும் போட்டியிட்டனர். அந்தக் காலத்தில் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றவில்லை. ப. ஜீவானந்தம் பி. இராமமூர்த்தி போன்ற (பிற்காலத்துக் கம்யூனிஸ்ட் தலைவர்கள்) சிறந்த பேச்சாளர் பலர் அந்நாளில் காங்கிரசுக்குள்ளேயே ஓர் அணியாக இயங்கிய சோசியலிஸ்டுக் கட்சியில் இருந்தனர். அவர்கள் அனைவரும் மாநிலத் தேர்தலில் ரெட்டியாரையும் அனைத்திந்தியத் தேர்தலில் நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸையும் ஆதரித்தனர்.

ஓமந்தூரார் நேத்தாஜிக்காக வெளிப்படையாகப் பிரசாரம் செய்யாவிட்டாலும் நேத்தாஜியைத்தான் ஆதரித்தார். ஓமந்தூராருக்கு காந்தியத்தில் அழுத்தமான நம்பிக்கைஇருந்தது. காந்தி மகானின் கொள்கைகளிலிருந்து அணுவளவும் அவர் பிசகியதில்லை. ஆனல் காந்திஜி சொன்ன அல்லது காந்திஜி ஆதரித்த தனி நபர்களைத் தாமும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஓமந்தூரார் நினைத்ததில்லை. அது காந்தியத்துக்கு முரண் என்று அவர் கருதவும் இல்லை.

## இராஜாஜி விவகாரம்

பாக்கிஸ்தான் என்ற தனிநாடு ஏற்படுவதற்கு ஆதரவாக 1944 அளவில் இராஜாஜி தீவிரமாகப் பிரசாரம் செய்தார். பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் அதை விரும்பவில்லை. ஆகையால் இராஜாஜியின் தலைமை வேண்டாம் என்று திருப்பரங்குன்றத்தில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் தீர்மானித்தது. காந்திஜி இதை வரவேற்கவில்லை. இராஜாஜிக்கு விரோதமாகத் தமிழ்நாட்டில் ஒருகும்பல் (CLIQUE) வேலைசெய்வதாக காந்திஜி "ஹரிஜன்" வார இதழில் எழுதினர். இவ்வாறு எழுதிச் சில மாதங்களுக்குப் பின்னர், மகாத்மா தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தார். மக்கள் திரளாகக் கூடினர். "இராஜாஜிக்குத் தமிழ்நாட்டில் எவ்வளவு ஆதரவும், செல்வாக்கும் இருக்கிறது என்பது எனக்குக் கூடும் கூட்டத்தால் புலனுகிறது" என்று மகாத்மா ஒரு கூட்டத்தில் சொன்னுர். இதை மறுத்து, விரிவான ஓர் அறிக்கையை ஓமந்தூரார் வெளியிட்டார்.

> "கூட்டம், காந்திஜிக்காகத்தான்
> கூடுகிறது. இராஜாஜி தலைமை
> பற்றிய பிரச்சினைக்கும் மகாத்மா
> வுக்குக் கூட்டம் சேருவதற்கும் எவ்
> வித சம்பந்தமும் இல்லை."

என்று ஓமந்தூரார் தமது கருத்தைத் தெளிவாகவும் துணிவாகவும் எடுத்துச் சொன்னுர்.

இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்த சமயம். "வெள்ளையனே வெளியேறு" என்ற 1942-ஆம் ஆண்டு இயக்கத்தில் கலந்துகொள்ளாமல் இராஜாஜி விலகியிருந்ததையும் ஓமந்தூரார் கண்டித்தார்.

## இராஜபாளையம் மாநாடு

29—12—1938-இல் 40-ஆவது தமிழ் மாகாண அரசியல் மாநாடு இராஜபாளையத்தில் கூடிற்று. காங்கிரஸ்கட்சி அதிகாரத்தில் இருந்த காரணத்தாலும் செயல்வீரரான பி. எஸ். குமாரசாமீ ராஜா அவர்களை வரவேற்புக் குழுத் தலைவராகக் கொண்டு அவருடைய சொந்த ஊரிலேயே நடைபெற்றதாலும், இந்த மாநாடு மிகப் பெரிய அளவில் அமைந்தது. தமிழ்நாடு காங்கிரசின் வரலாற்றில் இது சிறப்பிடம் பெறும். நான் (நூலாசிரியர்) இந்த மாநாட்டிற்குச் சென்றிருந்ததால், இதை நேரில் அறிவேன்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். இவரை வரவேற்று, வரவேற்புக் குழுத் தலைவர், திரு. குமாரசாமிராஜா தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "மகாநாட்டுத் தலைவர், ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் அவர்களைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவர் கர்மவீரர், சாத்வீக நெறியோடொழுகும் சற்குணர்; அரசியல் ஞானி. இப்பதவிக்கு முற்றிலும் தகுந்தவர். அத்தகைய பெரியார் இந்நகரத்தில் கூடுகிற மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதை எங்கள் பாக்கியமாகக் கருதுகிறோம்."

மாநாட்டை ஆரம்பித்துவைத்த, அன்றைய சென்னை மாகாணத்தின் பிரதமமந்திரி[1] கனம் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், "தமிழ் மாகாண 40 வது மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி புனிதமான ஆத்மாவான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினார்.

---

1. முதல் மந்திரி – பிரதம மந்திரி – பிரதமர் – முதலமைச்சர்

1920 முதல் 1937 மார்ச்சு 31 முடிய, சென்னை இராசதானி அரசாங்கத்தின் நிர்வாகத் தலைவருக்கு முதல் மந்திரி என்ற பெயர் இருந்தது.

1937 ஏப்ரல் முதல் நாளில் அமுலுக்கு வந்த மாகாண சுயாட்சிச் சட்டப்படி சென்னை மாகாண அரசாங்கத்தின் நிர்வாகத் தலைவருக்கு, பிரதம மந்திரி (பிரைம் மினிஸ்டர்) என்ற பதவிப் பெயர் ஏற்பட்டது.

1947 மார்ச்சு மாதத்தில் பதவியேற்ற ஓமந்தூரார் 'பிரதம மந்திரி'யாக இருந்தார். அதே ஆண்டு ஆகஸ்டு 15-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. தில்லியில் ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியானார். மாகாணங்களிலும் பிரதம மந்திரி என்ற பதவிப் பெயர் நிலவியதால் ஏற்பட்ட குழப்பத்தைத் தடுக்க மாகாணப் பிரதம மந்திரியின் பெயர் 'இந்தியா முழுவதும்' பிரதமர் என்று மாற்றப்பட்டது. எனவே ஓமந்தூரார் பிரதமர் ஆனார். இவர் பதவியில் இருந்தவரை பதவிப் பெயர் இவ்வாறே இருந்தது. 1950 ஜனவரி 26—ல் (அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய) சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டப்படி மாநிலங்கள் ஏற்பட்டன. அந்த அரசுகளின் தலைவர்கள் முதல் அமைச்சர் எனப்பட்டனர். ஆதலால் ஓமந்தூராரை முதலமைச்சர் என்று இந்நூலில் குறிப்பிட்டுள்ளோம்.

ரெட்டியார் தமது உரையில், பண்டைக்காலத்தில் நமது நாட்டின் நிலையையும், தற்கால நிலையையும், மாகாண அரசாங்கத்தால் ஏற்பட்ட நன்மையையும் நிலவரி முறையும், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகளைப் பற்றியும் மிக விரிவாகப் பேசி, தமது கருத்துக்களைக் கூறினார்.

ராஷ்டிரபதி சுபாஷ்சந்திரபோஸ், சேலம் விஜயராகவாச்சாரியார் ஆகியோர் மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். காங்கிரஸ் ராஷ்டிரபதித் தேர்தலில் தோல்வியடைந்த டாக்டர் பட்டாபி சீத்தாராமையா அனுப்பிய வாழ்த்துச்செய்தியில் "மாநாட்டுக்கு இராமசாமி ரெட்டியாரைப் போல சிறந்ததொரு தேசபக்தர் தலைமை வகிப்பது உங்கள் பாக்கியம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

## மாவட்டக் காங்கிரஸ் தலைமை

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பதவியேற்கும் வரை பல ஆண்டுகளுக்கு ஓமந்தூரார், தென் ஆர்க்காடு மாவட்டக் காங்கிரஸ் தலைவராக இருந்தார்.

அக்காலத்தில் ஒவ்வோர் ஆண்டும், ஆண்டு அறிக்கை அச்சிட்டு வெளியிட்டார். அந்த அறிக்கைகளில் செய்த காரியங்களையும், இனிச் செய்யவேண்டிய காரியங்களையும் குறிப்பிட்டு வந்தார். "சுயராஜ்யம் என்றால் என்ன?" என்பதை விளக்கும் துண்டு அறிக்கைகளையும் பிரசுரித்தார்.

*வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்*
*மன்னனென மீண்டான் என்றே*
*கேளாத கதை விரைவிற் கேட்பாய் நீ*
*வருந்தலைஎன் கேண்மைக் கோவே.*

— *பாரதியார்*

# 4

# சிறை வாழ்க்கை

## இன்றைய அலங்கோலம்

ஓர் அரசியல்வாதி, ஒரு மாதத்துக்குள்ளேயே ஐந்து தடவை கட்சி மாறினார் என்று செய்தித்தாள்களில் இப்போது படிக்கிறோம். ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், ஒவ்வொரு நாளும் காலையில் தம் கட்சி அலுவலகத்திற்குப் போய் "இன்று நம் கட்சிக்குப் புதிதாக எத்தனைபேர் வந்திருக்கிறார்கள்? நேற்று நம் கட்சியிலிருந்தவர்கள் எத்தனை பேர் இன்று வேறு கட்சிக்கு மாறியிருக்கிறார்கள்?" என்று விசாரித்துக் கொள்கிறார்.

இது இன்றைய அரசியலின் அலங்கோல நிலை. யார் எந்தக் கட்சியில் அல்லது கட்சியின் எந்த அணியில் (பல்குழுவிலும் பாழ் செய்யும் உட்குழுவிலும்) இருக்கிறார்கள் என்பதை அவ்வப்போது தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நாள்

தோறும் பழைய ஆடைகளைக் களைந்து புதிய ஆடைகளை உடுப்பதுபோலக் கட்சிகளை மாற்றிக் கொள்கிறார்கள்.

### ஒரே கட்சி

ஓமந்தூரார் கட்சியைத் தன் உயிரினும் மேலாக மதித்தார். இவர் அறிவு விளக்கம் பெற்ற நாளில் தேசியக் கட்சியான காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். இறுதி மூச்சு வரை அந்தக் கட்சியிலேயே இருந்தார். கட்சியின் அனைத்திந்தியத் தலைவர்களும், தமிழ்நாட்டுத்தலைவர்களும், மாகாண அரசாங்கமும் செய்த செயல்கள் அல்லது மேற்கொண்ட கொள்கைகளில் தமக்குக் கருத்துவேறுபாடு இருந்தபோதிலும் அதற்காக இவர் கட்சிக்குத் துரோகம் செய்யவில்லை.

### பிரஜா சோசியலிஸ்டுக் கட்சி

1952-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பாகக் காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக் கட்சியாக அனைத்திந்தியாவிலும் பிரஜா சோசியலிஸ்டுக் கட்சியை ஆச்சாரிய ஜே. பி. கிருபாளனி போன்ற தலைவர்கள் தொடங்கினார்கள். அந்தக் கட்சியைத் தமிழ்நாட்டில் கால்கொள்ளச் செய்வதற்கு ஓமந்தூராரின் ஆதரவை அவர்கள் நாடினார்கள். அதிருப்தி அடைந்த காங்கிரஸ்காரர்கள் ஏராளமான பேர் ஓமந்தூருக்கு யாத்திரை சென்று "ஐயா, காங்கிரசுக்கு முழுக்குப் போட்டுப் புதுக்கட்சியைத்தொடங்க இதுதான்சமயம்" என்றனர். ஓமந்தூர், பாறையான பூமி. அந்த மண்ணின் அழுத்தம் ஓமந்தூராரின் கருத்துக்களிலும் இருந்தது. பல நாளிதழ்களை நடத்திய திரு. சி. பா. ஆதித்தனார் "ஐயா, என் பத்திரிகைகள் யாவும் உங்களுக்கு முழு அளவிலும் மின்னல் வேகத்திலும் பிரசாரம் செய்யும்" என்று உறுதி கூறினார். இந்த ஆசை வார்த்தைகளில் ரெட்டியார் மசியவில்லை. யாருடைய வலையிலும் இவர் விழவில்லை. "நான் வளர்த்த காங்கிரசுக்கு நானே குழிதோண்டிப் புதைப்பதா? போங்க ஐயா, போங்க" என்று அனுப்பிவைத்தார்.

### சுதந்திரா கட்சி

மற்றொரு முறை இராஜாஜி அவர்கள் சில தூதர்களை அனுப்பி சுதந்திரா கட்சியில் ரெட்டியார் சேர்ந்து அந்தக் கட்சிக்கு வலுவூட்ட வேண்டுமென்று விரும்புவதாகத் தெரிவித்

தார். ரெட்டியார் உடன்படவில்லை. இராஜாஜியே கடலூருக்கு வரப்போவதாகத் தூதர்கள் தெரிவித்தார்கள். 'வரவேண்டாம்' என்று ரெட்டியார் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பின்னர் ஒருமுறை இராஜாஜி, ஓமந்தூராரைச் சந்தித்தபோது, சுதந்திரா கட்சியில் நீங்கள் சேரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். "உங்கள் கட்சியின் கொள்கை என்ன?" என்று ஓமந்தூரார் வினவினார். 'ஹிந்தி எதிர்ப்பு' என்று மறுமொழி கூறினார் இராஜாஜி.

"1937-இல் ஹிந்தியை நுழைத்து நாட்டைக் கெடுத்தீர்கள்; இப்போது ஹிந்தியை எதிர்த்து நாட்டைக் கெடுக்கிறீர்கள்" என்று ஓ. பி. ஆர். சுடச்சுடப் பதில் சொன்னார்.

## சிறையிலிருந்த கைதிகளுக்கு உதவி

1921வாக்கில் கடலூர்ச் சிறைக்கு கேரள, கர்நாடக, ஆந்திர தேசியவாதிகள் கொண்டுவரப்பட்டனர் அவர்களுக்குவரவேற்புக் கொடுக்கவும், சிறையில் இருக்கும்போது தேவைப்பட்டால், தனிச்சாப்பாடு ஏற்பாடு செய்யவும், விடுதலையானதும் ஊருக்கு அனுப்பவும் உதவ ஓமந்தூரார், கடலூர் வக்கீல்கள் சிலரை ஒரு குழுவாக நியமித்தார். இக்குழுவிற்கு ஜி. சுப்பிரமணிய ஐயர் தலைவராக இருந்தார்.

## தேசிய இயக்கம்

தேசிய இயக்கங்கள் அனைத்திலும் ஓமந்தூரார் பங்கு கொண்டார். இவற்றின் விவரங்களை இப்போது கூறுவோம்.

## நாகபுரி தேசியக்கொடி சத்தியாக்கிரகம்

நாகபுரியில் சில இடங்களில் தேசியக்கொடியைத் தாங்கி எவரும் — தனி நபர்கூட — செல்லக்கூடாதென்று போலீசார் 1923-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் உத்தரவிட்டனர். கொடி தாங்கி எவரும் செல்ல, தங்களுக்கு உரிமை உண்டு என்று கூறி தேசத் தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர். பலர் சிறை சென்றனர். ஆகஸ்டு 18 வரை இந்தக் கிளர்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாட்டிலிருந்தும் பலர் நாகபுரிக்குச் சென்று இக் கிளர்ச்சியில் கலந்துகொண்டு, சிறை சென்றனர். சிறுவந்தாடு முதலிய பல ஊர்களிலிருந்து இளைஞர்களை ஓ. பி. ஆர். நாகபுரிக்கு அனுப்பிவைத்தார்.

## 1926-இல் தொண்டர் படைக்கு உதவி

கடலூரில் காங்கிரஸ்காரர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் 1926-ஆம் ஆண்டில் மோதல் ஏற்பட்டன. சுதர்சனம் நாயுடு உள்பட காங்கிரஸ்காரர்கள் பத்துப் பேர் சிறையில் அடைக்கப் பட்டனர். வாயில் வைக்க முடியாத மோசமான உணவு அப்போது அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதை அறிந்த ரெட்டியார், அவர்கள் சிறையில் இருந்த மூன்றுமாத காலமும் நாள்தோறும் இரண்டுவேளை அவர்களுக்குச் சோறு சமைத்து, குதிரைவண்டியில் கொண்டுபோய், சிறையில் கொடுத்துவந்தார். வழக்கறிஞர்கள்மூலம் வழக்காடி நீதி கிடைக்கவும், அவர்களை விடுதலை செய்யவும் ஓமந்தூரார் பாடுபட்டார். இத்தகவல்களை 95 வயதான சுதர்சனம் நாயுடு 1978-இல் இந்நூலாசிரியரிடம் உருக்கமாகத் தெரிவித்தார்.

## ம. பொ. சி. க்கு விடுதலை

ஒருமுறை தஞ்சாவூர் சிறையில் ஓமந்தூராருடன் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும் உடன் கைதியாக இருந்தார். சிலம்புச் செல்வரின் உடல்நிலை குன்றி அவர் மயக்கம் அடைந்தார். ஓமந்தூரார் உடனே அரசினருக்குத் தந்தி கொடுத்து, அவரை விடுவிக்க ஏற்பாடு செய்தார்.[1]

---

**திரு ம. பொ. சி.[1]**

இவர் தமிழ்நாட்டின் சிறந்த அரசியல் தலைவராகவும் இலக்கியச் செல்வராகவும் இருந்துவருகிறார். புகழ்பெற்ற எழுத்தாளர். சிலப்பதிகாரத்தைச் சாதாரண மக்களிடையேயும் பரப்பி, 'சிலம்புச் செல்வர்' என்ற பட்டம் பெற்றவர். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் இவருடைய நூல் சாகித்திய அகாடமி பரிசு பெற்றது. இவர் சிறந்த பேச்சாளரும் ஆவார். தமிழரசுக் கழகத்தை நிறுவியவர். தமிழ்நாட்டின் வட தென் எல்லைகளைக் காக்கப் பாடுபட்டவர். 'சென்னை நகரம் தமிழருக்கே' என்று கிளர்ச்சி செய்தவர். இந்திய அரசு 'பத்மபூஷண்' என்ற விருதினை இவருக்கு வழங்கியுள்ளது. 1978இல் தமிழகச் சட்டமன்ற மேலவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

## 1930-இல் உப்புச் சத்தியாக்கிரகம்

ஏழைகளின் உணவிலும் இடம்பெறும் பொருள் உப்பு. "உப்பில்லாத பண்டம் குப்பையிலே' ஆகையால் யார் வேண்டு மானாலும் கடலில் உப்புக் காய்ச்சிக் கொள்ளலாம். அதைத் தடுக்கும் சட்டங்களை மீறுவோம், என்று காந்திமகான் சொன்னார். இதற்காக ஓர் இயக்கம் தொடங்குவதென்று 1929 டிசம்பர் 31-இல் காங்கிரஸ் மகாசபையின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. பூரண சுயராஜ்யமே வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. 1930-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் இந்தியா வெங்கும் மக்கள் கூட்டம் கூடி, பூரண சுதந்திரம் பெறுவதற் காகப் பாடுபடுவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார் கள். கடலூரிலும் பண்ணுருட்டியிலும் சிதம்பரத்திலும் திண்டிவனத்திலும் ஓமந்தூரார் இத்தகைய கூட்டங்களை நடத் தினர். குமாரசாமிப்பிள்ளை, சுதர்சனம் நாயுடு, இரத்தினம் பிள்ளை, சிறுவந்தாடு எஸ். ஏ. தேவநாயக ஐயா ஆகியோர் இவருக்கு உறுதுணையாக இருந்தனர்.

அதே ஆண்டு மார்ச்சு மாதம் 12 ஆம் நாளில் குஜராத்தில் மகாத்மா காந்தி உப்புச் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கினர். 'மோகனகிருஷ்ணன் வெண்ணெய் திருடினன்; மோகன காந்தி உப்பு திருடுகிறர்' என்று குஜராத் பெண்கள் பாட்டுப் பாடினர் கள்.

ஆமதாபாத் சபர்மதி ஆசிரமத்திலிருந்து மகாத்மா காந்தி புறப்பட்டு 200 மைல் தூரத்திற்கு யாத்திரையை மேற் கொண்டு, ஏப்ரல் ஆரும் நாளில் தண்டி கடற்கரையில் அரசின் சட்டங்களை மீறி உப்புக் காய்ச்சினர்.

தமிழ் நாட்டிலும் இதுபோன்ற கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்ற எண்ணம் தேசிய வட்டாரங்களில் நிலவியது. வேதாரண்யத்தில் 150 சதுர மைல் பரப்பளவுள்ள உப்பளத்தில் லட்சக்கணக்கான மணங்கு உப்பு, தாஞக விளைவதை சர்தார் வேதரத்தினம் அவர்கள் மூலமாக அறிந்த இராஜாஜி, அந்த ஊரையே, சத்தியாக்கிரகத்துக்குத் தளமாகத் தேர்ந்தெடுத் தார்.

தமிழ்ப் புத்தாண்டு பிறந்த ஏப்ரல் 12 ஆம் நாளில் திருச்சியிலிருந்து இராஜாஜி அவர்களின் தலைமையில் தொண்டர்கள் 150 மைல் பாத யாத்திரையை மேற்கொண்டு 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பாடலைப் பாடிக்கொண்டு, வேதாரண்யத்துக்குப் புறப்பட்டனர். போலீசாரின் அடக்கு முறைகளையும் தொல்லைகளையும் சற்றும் பொருட்படுத்தாமல், பேரறிஞர் இராஜாஜியின் தலைமையாலும் தியாகச்சுடர், சர்தார் வேதரத்தினத்தின் செயல் திறமையாலும் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம் மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது.

ஓராண்டுக் காலத்துக்கு நடைபெற்ற இந்தப்போராட்டத்தில் இந்தியாவெங்கும் 95,000 பேர் சிறையில் அடைக்கப் பட்டனர். ஆயிரக்கணக்கானவரின் மண்டைகள் உடைக்கப் பட்டன. சில இடங்களில் போலீசார் சுட்டனர். வரிகொடா இயக்கமும் நடந்தது.

1931 மார்ச்சு 5 ஆம் நாளில் மகாத்மாவுக்கும் அன்றைய வைஸ்ராயாக இருந்த இர்வின் பிரபுவுக்கும் ஒப்பந்தம் ஏற் பட்டது. இதுவே 'காந்தி-இர்வின் உடன்பாடு' என்று இந்திய வரலாற்றில் இடம் பெறுகிறது. இந்தச் சமரசத்தின் விளைவாக உப்புச் சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன. உப்பு விதிகள் தளர்த்தப்பட்டன. ஏழைகள் இலவசமாக உப்புக் காய்ச்ச அனுமதிக்கப்பட்டனர். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட்டார்கள்.

இந்த இயக்கத்தில்தான் ஓமந்தூரார் முதல் முறையாகச் சிறை சென்றார். வேதாரண்யத்துக்குத் தொண்டர்களை அழைத்துச் செல்ல முயன்ற குற்றத்திற்காக இவர் ஆறு மாதக் காலம் தண்டிக்கப்பட்டார்.

## 1932 ஆம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கம்

லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மகாநாட்டிற்குச் சென்று 1931 டிசம்பர் 28 இல் மகாத்மா காந்தி இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து லண்டனில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பயன்தரவில்லை.

மகாத்மா, இந்தியாவுக்குத் திரும்பி வருவதற்குள் (1) இப்போது உத்திரப் பிரதேசம் என்று வழங்கப்படும் ஐக்கிய மாகாணங்கள் (2) இப்போது பாக்கிஸ்தானில் ஒரு பகுதியாக இருக்கிற வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகியவற்றில் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டு ஜவஹர்லால் நேருவும் எல்லைக்காந்தி எனப்படும் கான் அப்துல் கபார் கானும் கைது செய்யப்பட்டார்கள்.

இந்திய மண்ணில் கால்வைத்த ஒரு வாரத்திற்குள் 1932 ஜனவரி 4 இல் மகாத்மா கைது செய்யப்பட்டார் சர்தார் வல்லபாய் படேலும் சிறையில் வைக்கப்பட்டார். அவசரச் சட்டங்கள் அள்ளி இறைக்கப்பட்டன அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டது. காங்கிரஸ் குழுக்களும் தேசியக் கல்வி நிறுவனங்களும் விவசாயிகள் சங்கங்களும் சட்ட விரோதமானவை என்று அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான காங்கிரஸ் ஊழியர்கள் காவல் கைதிகளாக வைக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அயல்நாட்டுத் துணிக்கடைகள்முன் மறியல் செய்யும் போராட்டம் நாடு தழுவிய இயக்கமாக 1933 மே மாதம் வரை நடைபெற்றது. இதில் ஒரு இலட்சம் பேர் இந்தியாவெங்கும் சிறை சென்றனர்.

ஓமந்தூரார் இந்த இயக்கத்தில் விழுப்புரத்தில் நடத்திய கிளர்ச்சியைப்பற்றி, மூன்றுவது அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இந்தச் சட்டமறுப்பு இயக்கத்திலும் இவர் ஆறுமாதக் காலம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

விழுப்புரத்தில், இவருடைய இயக்கத்தால் அயல் நாட்டுத் துணி வியாபாரம் ஸ்தம்பித்துவிட்டது துணி வாங்க ஒருவரும் கடைகளின் படிகளைக்கூட ஏற முடியவில்லை. 'இருக்கிற இருப்பை மட்டும் விற்றுவிட்டு, வியாபாரத்தை நிறுத்திக்கொள்ளுகிறோம்' என்று கடைக்காரர்கள் கூறினர். ஓமந்தூரார் அதற்கு இணங்கவில்லை.

## 1937 இல் காங்கிரசாருக்கு நேர்ந்த இன்னல்கள்

1937 ஆம் ஆண்டில் மாகாண சட்டசபைக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஏதாவது ஒரு சாக்கில் காங்கிரஸ்காரர்களில் முக்கியமானவர்களைச் சில நாட்களுக்குப் போலீஸ்

காவலில் வைத்திருப்பது என்று அன்றைய ஆளும் கட்சியான ஜஸ்டிஸ் கட்சியின் தென் ஆர்க்காடு மாவட்டத்துக் கிளை முடிவு செய்திருந்தது. இதை அறிந்த ஓ. பி. ஆர், கடலூர் நடராஜ ஐயர், விழுப்புரம் சிதம்பர ஐயர் போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்களை உடன் அழைத்துக்கொண்டு, மாவட்டக் காவல்துறைத் தலைவராக இருந்த எஸ். பார்த்தசாரதி ஐயங்காரிடம் சென்று இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று கடுமையாகக் கேட்டுக் கொண்டார்.[1]

## தனி நபர் சத்தியாக்கிரகம் (1940)

1939 ஆம் ஆண்டில் ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் போர் மூண்டது. அதைத் தொடர்ந்து, இந்தியாவும் ஜெர்மனிமீது போர் தொடுத்ததாக அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தில்லியிலிருந்து அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பை எதிர்த்துத் தேசியத் தலைவர்கள் கூட்டம் போட்டுப் பேசினர் அவ்வாறு பேசுவது தடை செய்யப் பட்டது.

'பேச்சு சுதந்திரம், மக்களின் பிறப்புரிமை' என்பதை அடிப்படையாகக் கொண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தை மகாத்மா காந்தி 1940 இல் தொடங்கினார். இந்த இயக்கத்தின் முதல் சத்தியாக்கிரகியாக வினோபாபாவேயை, காந்திஜி நியமித்தார். போர் முயற்சிக்குக் குந்தகம் விளைக்கும் முறையில் பேசிய குற்றத்திற்காக வினோபாபாவே கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்தாரால் தண்டிக்கப்பட்டார்.

வினோபாபாவேயைத் தொடர்ந்து இந்தியாவெங்கும் 30,000 பேர் இந்த இயக்கத்தில் சிறை சென்றனர். இவர்கள் அனைவரையும் ஆங்கிலேய அரசாங்கம் 1941 டிசம்பர் மாதத்தில் விடுதலை செய்தது

---

1. தகவல்: திரு பார்த்தசாரதி ஐயங்கார். இவர் ஓமந்தூரார் ஆட்சியில் டி. ஐ. ஜி. ஆக (Deputy Inspector General of Police) இருந்தவர். 1960 இல் சென்னை நகரத்துப் போலீஸ் கமிஷனராக இருந்து ஓய்வு பெற்றவர்.

இந்த இயக்கத்தில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின், ஐந்தாவது உட்பிரிவின் கீழ் ஓராண்டுக்காலம் சிறைத்தண்டனை வழங்கப் பட்டார். அப்போது இவர் திருச்சி மத்திய சிறையில் தண்டனையை அனுபவித்தார். உடனிருந்த கைதிகளில் குறிப்பிடத்தக்கவர் கல்கி கிருஷ்ணமூர்த்தி ஆவார். சில மாதங்களுக்குப் பிறகு அங்கிருந்து ஓமந்தூரார் வேலூர் சிறைச்சாலைக்கு மாற்றப் பெற்றார்.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் தனி நபர் சத்தியாக்கிரகி களின் பட்டியலை ஓமந்தூராரே தயாரித்தார். சிதம்பரம், கடலூர், விழுப்புரம், திண்டிவனம் வட்டங்களில் இந்த இயக்கம் பெரிய அளவிலும், ஏனைய வட்டங்களில் அதைவிடக் குறைந்த அளவிலும் நடைபெற்றது. சிதம்பரம் வட்டத்தில் திரு. விநாயகம் பிள்ளை தலைமையில் முதல் பட்டியலில் இடம்பெற்ற 346 பேர் சத்தியாக்கிரகம் செய்தனர். இவர்களில் 58 பேர் இரண்டாம் முறையாகவும், 17 பேர் மூன்றும் முறையாகவும் சிறை சென்றனர்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942)

இந்தியாவின் சுதந்திரத்துக்காக இறுதியான ஒரு மாபெரும் இயக்கத்தை நடத்திவிடவேண்டும் என்ற எண்ணம் மகாத்மாவுக்கு 1942 இல் தோன்றிற்று. இந்த இயக்கத்தை ஆங்கிலத்தில் "குவிட் இந்தியா மூவ்மெண்ட்" என்றும், தமிழில் "வெள்ளையனே வெளியேறு இயக்கம்" என்றும் கூறுவர்.

1942 ஆகஸ்டு 8 ஆம் நாள் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி, பெரியதொரு இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்தது. அன்று இரவே காந்தியடிகளும் காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். தலைமையை இழந்த மக்கள் தாங்களே தலைவர்களானார்கள். இமயம் முதல் குமரி வரையுள்ள கோடிக்கணக்கான இந்தியர்கள் கிளர்ந்து எழுந்தார்கள். புரட்சி செய்தார்கள். வரி கொடுக்க மறுத்தார் கள். பீதியடைந்த ஆங்கிலேய அரசு, அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தது. ஆட்சியாளர்களின் அடக்குமுறை அநியாயத்தின் உச்சிக் கட்டத்தை அடைந்தது.

ஆத்திரம் அடைந்த மக்கள், தந்திக் கம்பிகளை அறுத்தார்கள். இரயில் தண்டவாளங்களை அகற்றினார்கள். பாலங்களைத் தகர்த்தார்கள். விமான நிலையங்களுக்குத் தீ வைத்தார்கள். அரசாங்கக் கருவூலங்களைக் கொள்ளையடித்தார்கள். சிறைச் சாலைகளை உடைத்தார்கள். ஆங்கில அதிகாரிகள் சிலரைக் கொலை செய்தார்கள். நீதி மன்றங்கள் நடக்கவிடாமல் செய்தார்கள். பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் இயங்குவதற்கு ஊறு செய்தனர். தடை செய்யப்பட்ட ஜெர்மன், ஜப்பான் வானொலி நிலையங்களின் அறிக்கைகளைக் கேட்டார்கள்.

இந்த இயக்கம் ஓமந்தூரார் தூண்டுதலால் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் பரவிவிடுமென அஞ்சி, ஆங்கிலேய அரசினர் இவரைத் தடுப்புக்காவல் சட்டப்படி கைது செய்து 15 மாதக் காலம் சிறையில் வைத்திருந்தனர்.

எனினும் தாம் சிறைக்குச் செல்லுமுன்னரே மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் இந்த இயக்கம் பரவுவதற்கு ஓமந்தூரார் ஏற்பாடு செய்துவிட்டார்.

## சிறையில் அன்றாட வாழ்க்கை

கடலூர், தஞ்சாவூர், திருச்சி, வேலூர் ஆகிய சிறைகளில் ஓமந்தூரார், தனது தண்டனைக் காலத்தில் வைக்கப்பட்டிருந்தார்.

சிறையில் இவருடைய நேரத்தை ஒரு மணி நேரம் நூல் நூற்பதிலும் பல மணிநேரம் நூல்களைப் படிப்பதிலும் செலவிட்டார். இவர் சிறையில் படித்த நூல்களில் சில: (முழுப் பட்டியல் கிடைக்கவில்லை.)

1. நமது தாய்நாடு – சுவாமி விவேகானந்தர்
2. பாரதி நூல்கள் (காவியங்கள்) – ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி
3. முருகன் அல்லது அழகு – திரு வி கல்யாணசுந்தரனார்
4. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் – திரு வி. கல்யாணசுந்தரனார்
5. அருட்சுடர் வள்ளலார் – ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதி

6. பாரத சக்தி – ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதி

7. இன்றைய மனிதனும்
இனிவரும் மனிதனும்– – ஷை –

8. ஸ்ரீரமண நாற்பது – நிரஞ்சனானந்த சுவாமிகள்

9. ஸ்ரீராமலிங்க விஜயம் – ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதி

10. யோகசித்தி – – ஷை –

11. திருமந்திர விளக்கம் – – ஷை –

12. அருணாசல மகாத்மிய வசனம் – ஸ்ரீ ஈஸ்வர சுவாமிகள்

13. முக்கூடற்பள்ளு – பதிப்பாசிரியர் – மு. அருணாசலம்

14. பழநி தல வரலாறு – ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழநி.

இந்நூல்கள் 'தணிக்கை செய்யப்பட்டது' என்ற முத்திரையுடனும் சிறை அதிகாரியின் கையெழுத்துடனும் இருப்பதை வடலூரில் சுத்த சன்மார்க்க நிலைய நூலகத்தில் காணலாம்.

திருச்சி சிறையில் இவர் நடந்துகொண்ட முறையை திரு. எல். எஸ். கரையாளர், "திருச்சி ஜெயில்" என்னும் நூலில் பின் வருமாறு கூறுகிறார்:

> தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி மாஜி தலைவர் ஓமந்தூர் ஸ்ரீ. ராமசாமி ரெட்டியாரும் காலையில் உலாவுபவர்களில் ஒருவர். உலகத்தின் மீதே ஒரு வெறுப்புத் தட்டியவர் போல் இவர் தோன்றுவார். ஜெயிலுக்குள்ளே யாராவது அந்நிய நாட்டு பிஸ்கோத்து வரவழைத்தால் இவர் ஒரு பெருமூச்சு விடுவார். ஓவல்டினைக் கண்டால் பயந்து ஓடுவார். ஜெயிலில் காலையில் "பன்" ரொட்டியைச் சாப்பிடுபவர்களைப் பார்த்து, "அந்த ரொட்டியின்மேல் பளபளப்புக்காக முட்டை தடவுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று ஒரு நாள் ஒரு போடு போட்டார். அவ்வளவுதான், சிலர் "பன்" சாப்பிடுவதையே விட்டுவிட்டார்கள்.
>
> "விதேசி சாமான்கள் யார் யார் வரவழைக்கிறார்கள் என்று ஒரு ஜாபிதா தயார் செய்யவேண்டும். இந்த அநியாயம் எங்காவது உண்டா?" என்று இவர் காட்டமாகப் பேசுவார். விதேசி சாமான்கள் வாங்குபவர்களை

அலட்சியமாகப் பார்ப்பார். இவருக்கு 46 வயது ஆகிறது. ஆயினும் கோபம் அதிகமுடையவர். இவர் பதவிகளில் கொஞ்சமும் ஆசையில்லாத உத்தமர். வேண்டுமென்றால் இவர் தென் ஆர்க்காடு ஜில்லா, போர்டுக்குத் தலைவராக யிருக்கலாம். குற்றமற்ற சீலமுடைய இவருக்கு, பிடிவாதத் திற்குப் பதில் தைரியம் அதிகமாகயிருந்தால் இன்னும் செல்வாக்குடன் பிரகாசிப்பார்.

விவசாயிகள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே யிருக்கும் அசல் விவசாயி இவர். நிலத்திற்கு என்னென்ன உரம் போடவேண்டும், எப்படி உழவேண்டும் என்று ஸ்ரீ ரெட்டியாரைக் கேட்டால்தான் தெரியும். விவசாயி கள் விஷயத்தில் இவ்வளவு அன்பு வைத்திருப்பதனால் தான், ஸ்ரீ ரெட்டியார் காங்கிரசில் சந்தேகமில்லாமல் வலதுசாரிக்காரராயிருந்தும் இடதுசாரி என்று அரசாங்கத் தார் அபிப்பிராயப்படுவதாக நான் கேள்விப்பட்டேன்.

ஸ்ரீ ரெட்டியார் 9-நிர் கைதி. தண்டனை ஒருவருஷம். வெளியே வந்த பின்னரும் விவசாயிகளுக்கு நெடுநாள் இவர் வேலை செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.''

## திரு. டி. ஆர். அருணசலம்[1]

வேலூர் சிறையில் ஓ. பி. ஆருடன் இருந்த திரு. ந. ம. ரா. சுப்பராமன் கூறுகிறார்: "இவர் காலை 4 மணிக்கு எழுந்துவிடுவார். மாலையில் வால்மீகி இராமாயண வகுப்புக்கள் நடத்துவார். சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் விவசாயத் தைப் பற்றியும் பழத்தோட்டம் போடுவது பற்றியும் எங்களுக்குச் சொல்லித் தருவார்.''

1942-இல் வேலூரிலும், 1945-இல் தஞ்சை போர்ஸ்டல் பள்ளியிலும் ஓ. பி. ஆருடன் சிறைவாசம் செய்த தேவகோட்டைத் தியாகி திரு. டி. ஆர். அருணசலம் (இந்நூலாசிரியரிடம்) கூறுகிறார்:

"ஓ. பி. ஆர். அடக்கமானவர். வலிய யாருடனும் பழகமாட்டார். நீண்டதூரம் சிறைக்குள்ளேயே நடப்பார்.

1. இவர் தேவகோட்டையில் 1942-இல் நடைபெற்ற போராட்டத்தில் பெரும்பங்கு கொண்டவர். ஓ. பி. ஆருடன் இவர் சிறையில் இருந்திருக்கிறார். தமிழ் இலக்கியத்திலும் இசையிலும் ஈடுபாடுடையவர். தஞ்சை மாவட்டத்தில் பல கோயில்களில் அறங்காவலராக இருந்திருக்கிறார்.

கைதிகளுக்காக ஒரு நிர்வாகக் குழு அமைத்து அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க ஆவன செய்தார்.

"படிப்பு ......படிப்பு" ......எப்போதும் படிப்புத்தான்.

"உடன் கைதிகளாக இருக்கும் பல ஊர்க்காரர்கள் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோரிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்துகொள்வார்."

"சிறையில் திரு. அவிஞசிலிங்கம் செட்டியார் நடத்திய திருக்குறள் வகுப்புகளுக்கும், திரு. ஆர். வெங்கட்டராமன் நடத்திய பொருளாதார வகுப்பு களுக்கும் ஓ. பி. ஆர். தவருமல் வந்துவிடுவார்."

திருச்சி சிறையில் 1930 இல் இராஜாஜி நடத்திய திருக்குறள் வகுப்புக்களுக்கும் ஓமந்தூரார் தவருமல் சென்ருர்.[1]

## போர் எனின் துடிக்கும் தோள்கள்

தேசபக்தர்கள் ஓரிருவர் சில போராட்டங்களில் கலந்து கொள்வதும், சில போராட்டங்களில் கலந்துகொள்ள இயலாமல் போவதும் உண்டு. 1942-இல் ஓமந்தூரார் உடல்நலம் குன்றி யிருந்தார். அதனுல் அரசியலிலிருந்து சற்று ஒதுங்கியிருந்தார். ஆனுல் போராட்டம் ஒன்றைக் காந்திஜி தொடங்கப் போகிருர் என்று தெரிந்தவுடன் இவர் அதற்குத் தயாராகிவிட்டார். போர் எனிற் புகலும் புனைகழல் மறவர் ஆகிவிட்டார்.

## அரியலூர் மாநாடு

காங்கிரஸ் கட்சியானது 1942 இல் சட்டவிரோதமாக்கப் பட்டது. கட்சியின் கூட்டங்களை நடத்த முடியாத அந்த நேரத் தில் திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூரில் காங்கிரஸ் சங்கங் களின் மாநாடு ஒன்றை ஓமந்தூரார் நடத்தியதிலிருந்து இவருடைய துணிவு தெரியவரும்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கூறியதுபோல, ஓமந்தூரார் "1920-21-ஆம் ஆண்டி லிருந்தே அரசியலில் நீங்காத் தொடர்புகொண்டு, சுதந்திரப்

---

1. தகவல்: முலதூர் மாதவ ரெட்டியார்.

போராட்ட காலத்திலே அழைத்தபோதெல்லாம் தன்னை அத்துடன் ஈடுபடுத்தி அதன் காரணமாகக் கொடுக்கப்பட்ட கடும் தண்டனையை ஏற்று அதையெல்லாம் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள்.''

ஓமந்தூரார் போன்ற அரும்பெரும் தலைவர்கள் செய்த தியாகம் என்ற வேள்வியிலே மலர்ந்ததுதான் இன்றைய சுதந்திரம். அவர்கள் கண்ணீரும் செந்நீருமே சுதந்திரப் பயிர் முளைக்கப் பயன்பட்டன.

உலகிலுயர் தமிழ் நாட்டில் ஓமந்தூரில்
உயர்பண்ட குலத்துதித்தோன் மகாத்மா காந்தி
சொலும்வழியைத் துணிந்ததிலே தோய்ந்த நெஞ்சன்
தொன்னெறியாம் நன்னெறியே சொல்லு நாவன்
பலகலையும் நுழைந்தறியும் நுண் புலத்தன்
பார்வியக்கக் காமாதி பாறச் செய்தோன்
தொலைவறியாச் சுயநலமாம் பேயை ஓட்டும்
தூநலத்தன் பாநலத்தன் சொல்லின் மாதோ.

காங்கிரஸே நாங்கருதும் சபையென் றெண்ணிக்
கருதி அதில் சார்ந்துதலை மையுமே தாங்கி
ஈங்கிவர்போல் சுயநலமில்லா(து) உழைப்போர்
யாவர்? என விரோதியுமே இயம்பும் வண்ணம்
ஓங்கு பணி புரிந்து மக்கள் உள்ளத்தேறி
உறுசென்னை அரசியலில் தலை அமைச்சாய்ப்
பாங்குறும்அப் புகழ்மடந்தை நடனம் செய்யப்
பணிபுரிந்த குணமிருந்தோன் பாரின் மன்னே!

---

**மேற்கண்ட பாடல்கள் வளவனூர் மகாவித்துவான் கி. வேங்கடசாமி ரெட்டியாரால் இயற்றப்பெற்றவை.**

"உங்கள் நண்பர்கள் யார்யார் என்று
சொல்லுங்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்கள்
என்பதை நான் சொல்லுகிறேன்"
— ஓர் ஆங்கிலப் பழமொழி.

# 5

# அண்ணுச்சிமார்

## காந்தியின் அப்போஸ்தலர்கள்

இயேசு கிருஸ்துவுக்குத் தலையாய சீடர் பன்னிருவர் இருந்தனர். இந்தப் பன்னிரண்டு பேர்களையும் அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிடுவது மரபு. இவர்களே இயேசுவின் செய்தியை உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரப்பினர்கள். இவர்களால் தான் இயேசுநாதரின் கொள்கைகளும் கருத்துக்களும் உலகில் நின்றுநிலவுகின்றன.

இவ்வாறே காந்தியடிகளுக்கு அப்போஸ்தலர்களாக வாய்த்த பலர் இந்தியா முழுவதும் இருந்தனர். தமிழ்நாட்டில் காந்தியடிகளின் அப்போஸ்தலர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அண்ணுச்சிமார்.

அண்ணுச்சிமார் என்ற பெயரில் நான்கு பேர் தமிழ்நாடு காங்கிரசின் பணிகளில் சிறப்புடன் பங்குபெற்றனர்.

1. திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்
2. திரு. சர்தார் அ. வேதரத்தினம்
3. திரு. ந. ம. ரா. சுப்பராமன்
4. திரு. தி. சு. அவிஞசிலிங்கம் செட்டியார்

ஆகிய நான்குபேருக்குமே இவ்வாறு ஒரு பொதுப்பெயர் நிலவியது. ஓமந்தூராரும் சர்தாரும் ஏறத்தாழ ஒருவயதினர். திருவாளர்கள் சுப்பராமனும் அவிஞசிலிங்கமும் ஒருவயதினர். வெவ்வேறு மாவட்டங்களையும் வெவ்வேறு சாதிகளையும் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், காந்தியடிகளின் கருத்துக்களை ஏற்றுச் செயல் படுத்தித் தன்னலமற்றவர்களாகத் தங்கள் வாழ்க்கையை வகுத்துக் கொண்டார்கள். அதனால் ஒரு குடும்பத்தினராக வாழ்ந்தார்கள்.

## சர்தார் வேதரத்தினம்

சர்தார், ஓமந்தூராரைவிட இரண்டு ஆண்டுகள் இளையவர். சர்தாருடைய படிப்பும் ஏழாம் வகுப்பு அளவில் நின்றது. ஓமந்தூராரைப் போலவே சர்தாரும் பிற்காலத்தில் பன்மொழி அறிவையும் பொது அறிவையும் வளர்த்துக் கொண்டார். தனக்கெனத் தனி நூலகம் அமைத்துக் கொண்டார். ஓமந்தூராரைப் போலவே சர்தாரும் விவசாயத் தொழிலை மேற்கொண்டார். வேதாரண்யத்துக்கு உரிய சிறப்புத் தொழிலான உப்புக் காய்ச்சுதல், உப்பு வாணிபம் ஆகியவற்றையும் மேற்கொண்டார்.

தாம் நூற்கும் நூலையே நெய்து, அந்தத் துணியைமட்டுமே உடுத்துவதை சர்தார் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார். சட்டை அணியும் பழக்கத்தை இளமையிலேயே கைவிட்டார். கதர் ஆடை அணியும்படி அனைவரையும் தூண்டினார்.

1926-ஆம் ஆண்டில் திரு எஸ். சீனிவாசஅய்யங்கார் தலைமையில் ஓர் அரசியல் மாநாட்டையும், 1929-ஆம் ஆண்டில் சர்தார். வல்லபாய்பட்டேல் தலைமையில் மாகாண அரசியல் மாநாட்டையும் சர்தார் வேதரத்தினம், வேதாரண்யத்தில் நடத்தினர். இரண்டு மாநாடுகளையும் சிறப்பாக நடத்தியது, இவருடைய செல்வாக்குக்கும் செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாகத்திகழ்ந்து தமிழ்நாட்டு அரசியலை ஒரு குலுக்குக் குலுக்கிற்று.

1930-இல் உப்புசத்தியாக்கிரகம் நடைபெற எல்லாஏற்பாடுகளையும் சர்தார் செய்தார். இதனால் இவர்மீது ஆத்திரமடைந்த

ஆங்கிலேய அரசு இவருடைய உப்பு நிலங்களைப் பறிமுதல் செய்து ஏலம் போட்டது.

1930, 1931, 1932, 1940-ஆம் ஆண்டுகளில் சர்தார் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

இவர் குடும்பத்துக்கு அயல்நாட்டுத் துணி விற்பனைக்கடை இருந்தது. 'நம்நாட்டுத் துணிகளையே-சுதேசிப் பொருள்களையே பயன்படுத்தவேண்டும்' என்ற காந்தியக்கொள்கைகளில் கொண்ட உறுதிப்பாட்டால், கடையை மூடிவிட்டார். இவ்வாறே ஓமந்தூராரும், காந்தியடிகளின் கைக்குத்து அரிசிக் கொள்கையில் கொண்டிருந்த நம்பிக்கையில், தம் தம்பி தொடங்கிய நெல் அறவை ஆலையை மூடி, அந்த இயந்திரங்களை விற்பனை செய்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

சுதந்தரப் போராட்டத்தின்போது தென்னாட்டு சர்தார் வல்லபாய்பட்டேலாக, சர்தார் வேதரத்தினம் விளங்கினார். பெற்ற சுதந்திரத்தை, பேணிக் காத்து இந்தியாவின் ஐக்கியத்தை நிலைநாட்டுவதில் சர்தார் வல்லபாய்பட்டேலின் வலதுகரமாக ஓ. பி. இராமசாமி ரெட்டியார் திகழ்ந்தார்.

1946 ஆம் ஆண்டில் சர்தார் வேதரத்தினம் வேதாரண்யத்தில் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் என்ற பெண் பாடசாலையை ஆதாரக்கல்வி நிலையமாக அமைத்தார்.

1948 இல் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் வேதாரண்யம் கன்யா குருகுலத்திற்கு வந்திருந்தார். மறுநாள் காலையில் அண்ணாச்சி (சர்தார் வேதரத்தினம்) வேடிக்கையாக ஒரு கேள்வி கேட்டார் 'உங்களை ஒரு கட்டுரை எழுதச் சொன்னால் என்ன எழுதுவீர்கள்? நாங்கள் பேசியதையெல்லாம் குறிப்பெடுத்து வைத்திருக்கின்றீர்களா ?'' என்று குழந்தைகளைக் கேட்டார்.

பெரிய அண்ணாச்சி (ஓமந்தூரார்) ஆகையினாலே, ஆகையினாலே என்று 50 தடவைகள் சொன்னார்கள். சின்ன அண்ணாச்சி(சர்தார்) அன்பர்களே அன்பர்களே என்று 51 தடவைகள் சொன்னீர்கள் என்று குழந்தைகள் பதில் கூறினார்கள்.

வேதாரண்யம் கோயிலை நிர்வகிக்கும் பண்டார சந்நிதி முதலமைச்சர் ஓமந்தூராரைப் பார்க்கக் குருகுலத்திற்கு மாலை மரியாதையுடன் வந்தார். ஓமந்தூரார், அவரிடம் கடுமையாகப்

பேசினர்: “உங்கள் கோயிலில் சாந்நித்தியம் இல்லை. மடாதிபதிகளாகிய நீங்கள் எல்லோரும் கோயிலைச் சரியாக நடத்தாமல் ஈ. வே. ரா. வின் கையாட்களாக அவர் கொள்கைகள் வலுப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்கிறீர்கள்” என்று சொல்லி மாலையை வாங்க மறுத்தார். அரைமணி நேரத்திற்குப் பிறகு சர்தார் வேதரத்தினம் ஓமந்தூராரைச் சமாதானப்படுத்திப் பெரு முயற்சியின் பேரில் மாலையை ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

திருத்துறைப்பூண்டி பயணிகள் மாளிகையில் முதலமைச்சர் ஓமந்தூரார் தங்கியிருந்தபோது, பிச்சைமரக்காயர் என்ற கைக்குத்தலரிசி வியாபாரி தன்னுடைய வியாபார ஸ்தலத்திற்கு ஓமந்தூராரை அழைப்பதற்காக வந்தார். அவர் மிகப் பெரிய மாலையைக் கொண்டுவந்திருந்தார். அவ்வளவு ஆடம்பரம் ஓமந்தூராருக்குப் பிடிக்கவில்லை. ‘இது என்ன? பிளாக் மார்க்கெட் கணக்கில் வாங்கிய மாலையா?’ என்று கேட்டார். அந்த ஆள், ‘அய்யா நான் அப்படிப்பட்டவனில்லை. அண்ணாச்சி சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்களைக் கேட்டுப் பாருங்கள்’ என்று சொன்னர். ஓமந்தூராருக்குக் கோபம் வந்துவிட்டது. ‘அண்ணாச்சியை என்ன கேட்பது, அவர் ஒருவரைப் பற்றியும் கெடுதலாகச் சொல்லமாட்டார். உதட்டினலேயே சிரித்து விடுவார்’ என்று சொன்னர்.

பொய் சொல்ல விரும்பாத சர்தார் “இவர், இதற்குமுன் எப்படியிருந்தாலும், இப்போது ஒழுங்கான முறையில் கைக்குத்தலரிசி வியாபாரம் செய்கிறர். மாலையை வாங்கிக் கொள்ளுங்கள்” என்று ஓமந்தூராரிடம் சொன்னர். உடனே ஓமந்தூரார், “உங்கள் கோடியக்கரையிலிருந்து கள்ளத்தனமாக அரிசியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தார். இப்போது பஞ்ச காலமாக இருப்பதால் அரிசி அனுப்புவதை இப்போது விட்டு விட்டாராக்கும்” என்று சொன்னர்.

1948 இல் கம்யூனிஸ்டுகள் தஞ்சாவூர் ஜில்லாவில் செல்வாக்குப் பெற்றுர்கள். அவர்களுடைய கட்சியின் வளர்ச்சிக்குச் சர்தார் வேதரத்தினம் இடையூருக இருந்ததால் அவரைக் கொலை செய்வதென்று கம்யூனிஸ்டுக் கட்சியின் தஞ்சாவூர் மாவட்டத்துத் தலைவர்கள் முடிவு செய்திருந்தனர். இதுபற்றித் துப்புக் கிடைத்த உடனே சர்தார் வேதரத்தினத்

தின் உயிரைக் காப்பாற்றவும், அவருக்குப் போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கவும் ஓமந்தூரார் விரைந்து நடவடிக்கைகள் எடுத்தார்.

திரு. சுப்பராமன்

இவர் மதுரைக்காந்தி என்று மரியாதையுடன் குறிப்பிடப் படுபவர். தமிழ்நாட்டுக்கு இந்த வயிரத்தை, மதுரை சௌராஷ்டிர சமூகம் வழங்கியுள்ளது. 1906 இல் செல்வக் குடும்பத்தில் பிறந்த இவர், தம் மனைவியுடன் பலமுறை சிறை சென்றவர். 1931 இல் மதுரையில் நடைபெற்ற தமிழ் மாகாண அரசியல் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மதுரையைத் தேசியக் கோட்டையாக்கியவர். தமது வளமான நிலங்களைப் பூமிதான மாகக் கொடுத்த சர்வோதயத் தொண்டர். ஏனைய சொத்துக் களைப் பெண்களின் கல்விக்காக ஈந்தவர். தமது அரிய நூலகத்தை சௌராஷ்டிரா கல்லூரிக்கு நன்கொடை வழங்கிய வள்ளல்.

அப்பழுக்கு இல்லாத இந்த தியாகச் செம்மலின் எழுபதாம் ஆண்டு விழா மலர் இவரைப் பற்றிக் கட்டுரைகளோ படங்களோ இல்லாமல் பக்திப் பாடல்கள் கொண்ட ஆன்மீக மலராக வெளி வரச் செய்தது இவருடைய அடக்கத்துக்கும் எளிமைக்கும் இனிமைக்கும் சான்று.

காந்திகிராமம் பல்கலைக்கழகம், கோவை பெரியநாயக்கன் பாளையம் இராமகிருஷ்ண வித்தியாலயம் என்ற பெயரில் திரு தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் தொடங்கி நடத்திவரும் ஏராளமான உயர்கல்வி நிறுவனங்கள், கல்லுப்பட்டி காந்தி நிகேதன், வேதாரண்யத்தில் சர்தார் வேதரத்தினம் நிறுவிய கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் தொடங்கிய வள்ளலார் குருகுலம் போன்ற ஏராளமான கல்வி நிலையங்களின் ஆட்சிக் குழுவில் தலைவராகவோ பொறுப்பு மிக்க உறுப்பினராகவோ இருந்து அந்த நிறுவனங்கள் நன்றாக இயங்க, தம்மாலான அனைத்தும் செய்த கல்வியாளர்.

தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கம், மாநில ஆதாரக் கல்வி நிறுவனங்களின் அமைப்பு ஆகியவற்றிலும், இவர் தலைவராக இருந்துவருகிறார்.

மதுரையில் காந்தி மியூசியம் ஏற்படக் காரணமாக இருந்தவர் இவரே ஆவார்.

பதவியும் விளம்பரமும் விரும்பாத இவர் காங்கிரஸ் கட்சியின் நலனுக்காக மதுரை மாநகராட்சித் தலைவராக இருமுறையும், சட்டமன்ற உறுப்பினராய்ப் பலமுறையும் நாடாளுமன்ற உறுப்பினராக ஒரு முறையும் இருந்துள்ளார்.

ஓமந்தூராரைப்பற்றி, திரு சுப்பராமன் கூறுவதாவது (பேட்டி 1–11–1977) :

"தென்ஆர்க்காடு மாவட்டத்தில் காங்கிரஸ் இயக்கம் நிலைபெறச் செய்தவர் ஓ. பி. ஆர். தான். தமிழ்நாடு முழுவதும் இவருடைய நடவடிக்கைகள் பரவியிருந்தன.

"1942 ஆம்ஆண்டு இயக்கத்தில் சிறை சென்றபோது நாங்கள் இருவரும் வேலூரில் இருந்தோம். இவர் சத்தியம், தவறமாட்டார். நேர்மையாக நடப்பார். கட்டுப்பாடான வாழ்க்கையைக் கடைப்பிடிப்பார். கோபக்காரராக இருந்தாலும் அனைவரிடமும் அன்பாகப்பழகுவார். ஏமாற்றுவது, பொய்சொல்லுவது என்பதெல்லாம் கட்டோடு பிடிக்காது. எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் கண்டிப்பாக நடந்துகொள்வார். மகாத்மா காந்தியையே மறுத்து அறிக்கை விட்டவராச்சே.

கிராமங்களை அரசாங்கம் புறக்கணிக்கிறது என்ற எண்ணம் அவருக்கு எப்போதும் உண்டு. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்ற பழமொழியை அடிக்கடி சொல்லுவார்.

அரசாங்கச் செலவைக் குறைக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

அவர் தப்பிதமான எதையும் செய்யமாட்டார். மற்றவர்களும் ஏதாவது தவருகச் செய்யவிடமாட்டார். அவரிடம் வேலைபார்ப்பது கஷ்டம். விவசாயவேலைக்கு ஆள் அனுப்பச் சொல்லி எனக்கு எழுதுவார். நல்ல ஆளாகப் பார்த்து, என்னிடத்திலேயே பல ஆண்டுகள் வேலைப் பார்த்தவர்களை நம்பிக்கைக்கு உரியவர்களை அனுப்புவேன். 3, 4 மாதத்துக்குமேல் அவரிடம் தாக்குப் பிடிக்க முடியாமல் வந்துவிடுவார்கள்."

## திரு அவிஞசிலிங்கம் செட்டியார்

இவர் 5-5-1903 இல் கோவை மாவட்டம் திருப்பூரில் பிறந்தார். 1923 இல் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். அது முதல் ஆன்மிக, தேசிய, கல்வித்துறைகளில் ஈடுபட்டுத் தம் சொத்து முழுவதையும் அறச் செயல்களுக்கு வழங்கியுள்ளார். கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் தொழிலாளர் தலைவராகவும் இருந்து பலமுறை சிறை சென்றவர். காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகியவர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை இயற்றியுள்ளார். மத்திய சட்டசபையிலும் மாநிலச் சட்டமன்றத்திலும் இந்தியப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் கல்வித் தொடர்பான இந்திய அரசின் உயர்குழுக்கள் பலவற்றிலும் உறுப்பினராக இருந்திருக்கிறார். ஒரு குட்டிப் பல்கலைக்கழகம் என்று சொல்லத் தக்க அளவு, இராமகிருஷ்ண வித்தியாலயம் என்ற பெயரில் ஏராளமான கல்விநிலையங்களைப் பெரியநாயக்கன்பாளையத்திலும், கோவையில் அவிஞசிலிங்கம் மனையியல் கல்லூரியையும், மகளிர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியையும் நடத்தி வருகிறார்.

ஓமந்தூரார் அமைச்சரவையில் இவர் கல்வி அமைச்சராக இருந்தார். முதலமைச்சரின் முழு ஒத்துழைப்புடன், தமிழில் கலைக்களஞ்சியம் வெளியிட ஒரு திட்டம் வகுத்துச் செயல் படுத்தினர். ஆதாரக் கல்வி நிலையங்களைத் தொடங்கினர். ஓமந்தூரார் தலைமையில் மதுரையில் முதல் தமிழ்த் திருவிழாவையும், திருவாரூரில் இரண்டாவது தமிழ்த் திருவிழாவையும் முறையே 1947, 1948 ஆம் ஆண்டுகளில் நடத்தினர்.

இவருடைய முயற்சியால் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பும், காந்தி நூல் வரிசையும், குழந்தைகள் கலைக்களஞ்சியமும் வெளி வந்துள்ளன. இவருடைய கல்விப் பணியைப் போற்றி, இவருக்கு 'நேரு லிட்டரசி அவார்டு' என்ற விருதை இந்தியக் குடியரசுத் தலைவர் வழங்கியுள்ளார்.

ஓமந்தூராரைப்பற்றி அவிஞசிலிங்கம் செட்டியார் கூறுவதாவது (பேட்டி: 12-11-1977):

> "1930 இல் வேலூர் சிறையில் முதல் தடவையாக ஓ. பி.ஆரைச் சந்தித்தேன். அப்போது அவர் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்தார்.

சுத்தமான மனிதர் என்பதால் அனைவராலும் மதிக்கப் பட்டார்.

"ஸ்ரீ இராமகிருஷ்ணரிடத்திலும், சுவாமி விவேகானந்தரிடத்திலும் ஓமந்தூராருக்கு பக்தி இருந்தது. அதற்காக அவர் இராமகிருஷ்ண மடத்துடன் தொடர்பு கொள்ளவில்லை. ஆனால் இராமகிருஷ்ண மடத்துச் சுவாமியார்கள் ஒருசிலரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதை யும் வைத்திருந்தார். கல்விப் பிரச்சனைகளில் ஓமந்தூரா ருக்கு இருந்த ஆர்வம் குறிப்பிடத் தக்கது. சுவாமி சித்பவானந்தா எழுதிய **கல்வி** என்ற நூலில் கல்வி என்பது என்னவென்று விளக்கிக் கூறி, ஆதாரக் கல்வி, கற்கவேண்டிய மொழிகள் ஆகியவைபற்றித் தெளிவாக எழுதியிருந்தார். அந்நூலின் பல படிகளை வாங்கி அன்பர் களுக்கு அனுப்பினார்.

"முதலமைச்சராக இருந்தபோது அரசாங்கத்தை தயவு தாட்சண்யம் இல்லாமல் நடத்தினார். ஆனால் எல்லோரையும் 'கன்னு பின்னு' என்று பேசினார்.

"சிறந்த சாதனைகள் புரிவதற்கு ஒருவர் ஐந்து ஆண்டுகளாவது தொடர்ந்து முதல் அமைச்சராக இருந் திருக்கவேண்டும். ஆனால் அன்றைய காங்கிரஸ் தலைமையும் சட்டமன்ற உறுப்பினர்களும் அவரை நிம்மதியாக அரசாங்கத்தை நடத்தவிடவில்லை.

"அவர் வடலூருக்குப் போய்த் தங்கிவிட்ட பிறகு, மிகவும் அன்புடன் என்னை அழைத்து அங்கு நடைபெறும் குருகுலத்தைப்பற்றிய என்னுடைய அபிப்பிராயங்களைக் கேட்டுக்கொண்டார்."

## நால்வரின் பண்புகள்

இந்த நான்கு பெருமக்களும் தெய்வ பக்தியும் தேசபக்தி யும் நிறைந்தவர்கள். காந்தியத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள். ஆக்க வேலைகளைச் செய்யவேண்டும், நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணம் உடையவர் கள். கடமைக்கும் பொறுப்புணர்ச்சிக்கும் இவர்களை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம்.



வேதாரண்யம் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்தில் சர்தார் வேதரத்தினம் அவர்களுடனும் குருகுல

நான்கு பேருக்கும் கல்வியில் ஆர்வமும் தமிழில் ஆழ்ந்த பற்றும் உண்டு. நால்வரும் அவரவர் மாவட்டத்தில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தவர்கள்; பலமுறை சிறை சென்றவர்கள். இவர்கள் எந்தத்தேர்தலிலும் தோல்வியடைந்தது கிடையாது.

அவிநாசிலிங்கம் செட்டியார் திருமணமாகாதவர். சர்தார் வேதரத்தினம் இல்லறவாழ்க்கையை இரண்டாண்டுகாலம் மட்டுமே அனுபவித்து 25-ஆவது வயது முதல் வானப்பிரஸ்த நிலையில் (இல்லறத் துறவியாக) வாழ்ந்தார். ஓமந்தூராரும் சுப்பராமனும் அவரவர் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப, காந்தி வழியில் இல்லற பிரம்மச்சாரிகளாக வாழ்ந்திருப்பவர்கள். எனவே இந்த நால்வரையும் காவிகட்டாத துறவிகள் என்பது சாலப் பொருந்தும்.

இந்த நான்குபேரும் செல்வக்குடும்பங்களில் பிறந்து, தங்கள் சொந்தப் பணத்தைப் பொதுப்பணிகளுக்குச் செலவிட்டவர்கள். வாழ்நாள் முழுவதும் ஒரேகட்சியில் இருந்தனர். கட்சிக்குப் புகழ் சேர்த்தவர்கள். கட்சியால் பயனடைந்தவர்கள் அல்லர். வடலூர் நிறுவனங்களும், வேதாரண்ய கன்னியா குருகுலமும், மதுரை காந்தி மியூசியமும் பெரியநாயக்கன்பாளையம் கல்வி நிலையங்களும் இந்த நால்வரின் நினைவை நாநிலமெங்கும் நல்லோர் வாழும் காலம்வரை பறைசாற்றும்.

*மெய்வருந்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி*
*அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்*
*கருமமே கண்ணா யினர்.*

*— நீதிநெறிவிளக்கம்.*

# 6

# இயல்புகள்

## அரசியல்வாதியின் தகுதி

ஆத்மீகத் துறையில் முன்னேறுவதற்கும் அரசியல் துறையில் முன்னணிக்கு வருவதற்கும் பலவகையில் ஒற்றுமையுண்டு. துறவு வாழ்க்கையை மேற்கொள்ளுபவர்கள் அதற்குரிய வெளிவேடங்களைமட்டும் அணிந்துகொண்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட முடியாது. துறவு வாழ்க்கைக்கு இன்றியமையாத மனத் தூய்மையும் புறத்தூய்மையும் அவர்களுக்கு மிகவும் தேவை. இதைப்போன்றுதான் அரசியல் வாழ்வில் ஈடுபட்டவர்களும் அந்த அரசியல் கட்சிக்குரிய சின்னங்களை அணிந்துகொள்வதால் முன்னுக்கு வந்துவிட முடியாது. தன்னலமற்ற பிறர் நலத்தைப் பேணுகின்ற பெரிய பண்பு அவர்களுக்கு இருக்கவேண்டும். எப்பொழுதும் மக்களின் துன்பத்தை துடைத்து, அவர்கள் இனிய வாழ்க்கை நடத்துவதற்காகப் பாடுபடவேண்டும். அவ்வாறு செய்வதில்தான் ஓர் அரசியல்வாதியின் முன்னேற்றம் அடங்கியுள்ளது. இந்த இயல்பு உள்ளவர்கள் தங்களுடைய அரசியல்

வாழ்க்கையை, முதன்முதலிலே தொண்டராகத் தொடங்கினாலும் நாளடைவிலே அவர்கள் கட்சியின் தலைவர்களாக - நாட்டின் தலைவர்களாக விளங்குவர்.

## ஓ. பி. ஆருக்கு முந்திய முதலமைச்சர்கள்

முதலமைச்சர் பதவியை ஓ. பி. ஆருக்கு முன், மிகப் பெரிய ஜமீன்தார்கள், நாடெங்கும் புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் ஆகியோரே வகித்தனர். சாதாரண மக்களுடைய துன்பங்களையும் துயரங்களையும் அறிந்த ஒரு விவசாயி கல்லூரிப் படிப்பை எட்டிப் பார்க்காத கிராமவாசி எவரும் முதலமைச்சர் பதவியை அதற்கு முன் வகித்ததில்லை. அதனால்தான் இவருடைய உருவப்படத்தை திறந்துவைத்தபோது, ஆந்திரப் பல்கலைக்கழகத்துத் துணைவேந்தர் டாக்டர் சி. ஆர். ரெட்டி,

> "நான் இப்போது ஓமந்தூரார் படத்தைமட்டும் திறக்கவில்லை. இவர்படத்தைத் திறந்துவைப்பதன்மூலமாக நமது மாகாணத்தில் மக்கள் ஆட்சி என்ற கொள்கைக்கு இதுவரை மூடப்பெற்றிருந்த கதவுகளைத் திறந்துவைக்கிறேன்."[1]

## செல்வத்துப் பயன் ஈதல்

ஓமந்தூராருடைய அரசியல் வாழ்வு நிர்வாகத்துறையிலும் நல்ல அனுபவம் கிட்டும் வகையில் விளங்கியது. இவருடைய தனிப்பட்ட வாழ்க்கை இவருடைய ஏற்றத்திற்குப் பெரிதும் உதவியாக இருந்தது. அந்நியர்களை எதிர்த்துச் சுதந்திரம் வாங்குவதற்காகப் போராட்டம் நடத்திய அக்காலத்தில் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டுஇருப்பது என்பது எளிதானசெயல் அன்று. ஓரளவு செல்வமுடைய காங்கிரஸ்காரராக இருந்ததால் இவருடைய ஆசிரமத்தைத்தேடி நாள்தோறும் தமிழ்நாட்டின் பல தொண்டர்கள்பலவகையான உதவிகளை வேண்டிவருவர். அவ்வாறு இவரைத் தேடிவந்த தொண்டர்கள் யாராக இருந்தாலும் எப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இவரிடம் ஓரளவேனும்

---

1. இந்நூலாசிரியர் நேரே கேட்டது:
By opening the portrait of Omandur Ramasamy Reddiar, I am opening the Gateways of Democracy in our Province.

உதவி பெற்றே செல்வார்கள். இவரிடம் உதவிவேண்டி ஒன்றும் பெருது திரும்பியவர்கள் ஒருவர்கூட இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

"செல்வர்கள் வைத்திருக்கும் செல்வம் அவர்களுக்குச் சொந்தமானது அன்று; அது ஏழைகளின் செல்வம்; அதன் பாதுகாவலரே செல்வர்கள்" என்று காந்தியடிகள் கூறிவந்த கொள்கைக்கு இவர் இலக்கியமாகத் திகழ்ந்தார்.

1930 முதல் 1947 வரை ஓமந்தூராரின் பண்ணையில் நிகர வருமானம் மாதம் ரூ. 2,000/– வந்தது. இவ்வளவு பணமும் இவருடைய செலவுகள், சுற்றுப்பயணங்கள், துறவிகள், சோதிடர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்குக் கொடுத்து, புத்தகங்கள் வாங்கியது முதலியவற்றுக்கு சரியாகப் போய்விடும் என்கிருர், ஓ. பி. ஆரிடம் 1933முதல் 1950வரை பணிபுரிந்தவரும், அவருடைய அக்காள் மங்கம்மாள், மகனுமான திரு ஏ. சி. ஜனார்த்தன ரெட்டியார்.

## அஞ்சாமை

அரசியல்வாழ்விற்கு வேண்டிய இன்றியமையாத மற்ருெரு பண்பும் இவரிடம் இயற்கையாகவே குடிகொண்டிருந்தது. எதைக் கண்டும், யாரைக் கண்டும் இவர் அஞ்சியது கிடையாது. தன்னுடைய உள்ளம் எதை உண்மை என்று எண்ணியதோ அதற்காகப் போராடும் திண்ணிய மனம் இவருக்கு இருந்தது.

ஓமந்தூரார் காந்திஜிக்கு அஞ்சியதில்லை; நேருவுக்கும் அஞ்சியதில்லை. உலகத்தில் ஒருவருக்குமே அஞ்சியதில்லை. அரசியல் பிரச்சினைகளிலும் தனிப்பட்டவர்களைப்பற்றி மதிப்பிட்டு எடை போடுவதிலும் சர்தார் வல்லபாய்ப் பட்டேலுக்கும் ஓ.பி.ஆருக்கும் இடையே ஒற்றுமை நிலவியது.

'பவநகர் மஹாராஜாவை சென்னை மாகாணத்தில் கவர்னராக நியமிக்கலாம் என்று நினைக்கிறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?' என்று பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு முதலமைச்சர் ஓ. பி. ஆரைக் கேட்டார்.

'சர்தார் வல்லபாய்ப் பட்டேலைக் கேட்டீர்களா? அவர் ஒத்துக் கொண்டாரா?' என்று திருப்பிக் கேட்டார் ஓ. பி. ஆர்.

'ஆம், அவரைக் கலந்து யோசித்துச் செய்த முடிவுதான் இது' என்ருர் நேரு.

'அப்படியானல் எனக்குச் சம்மதந்தான்' என்ருர் ஓ. பி. ஆர்.

## பட்டமும் பதவியும்

பட்டத்தையும் பதவியையும் இவர் தேடிச் சென்றதில்லை. அவற்றை அடைவதற்காக இவர் மறைமுகமாகவும் முயன்ற தில்லை. ஆனல் அவை இவரை நாடிவந்தன. தம்மைத் தேடிவந்த பதவியை இவர் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டதும் இல்லை.

## மேலவைத் தலைவர் பதவி

ஓமந்தூரார் வடலூர்ப் பணிகளைச் செய்து கொண்டு அரசியல் வாழ்க்கையிலிருந்து சற்று விலகியிருந்தார். அப்போது முதலமைச்சராக இருந்த இராஜாஜி இவரை (சென்னைமாகாணத் தின்) சட்டமன்ற மேலவைத் தலைவராக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மேலவைத் தலைவர், சட்டப் பேரவையின் சபாநாயகர் போன்ற பதவிகள் மிகவும் பொறுப்பும் அதிகாரமும் உள்ளவை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இருசாராரின் பொல்லாப்பும் ஏற்படாவண்ணம் நாள் தோறும் நாழிகைதோறும் இவர்கள் நடந்து கொள்ளவேண்டும். சிக்கல் நிறைந்த இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கூட, பதவி ஏற்காமல் சிலர் ஓடி விட்டனராம், 17-ஆம் நூற்ருண்டில் இங்கிலாந்தில்.

அதனல் ஒரு சம்பிரதாயம் அந்த நாட்டில் ஏற்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவரின் கைகளை, ஆளும்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும், ஆளுக்கு ஒரு கையாகப் பிடித்து, ஓடி விடாமல் தடுத்து அவரை நாற்காலியில் அமர்த்துவார்கள். 'ஐயா, நீங்கள் வழங்கும் ஆணைகளுக்கு நாங்கள் கட்டுப்படுகிருேம்' என்று உறுதிகூறிச் சொற்பொழிவும் ஆற்றுவார்கள்.

இக்காலத்தில், இப்பதவிகளை ஒருவரும் வெறுப்பதும் இல்லை; ஓடிவிடுவதும் இல்லை. நமது தலைமுறையில் இப்பதவியை வேண்டாம் என்று உதறித் தள்ளியவர் ஓமந்தூரார் ஒருவரே![1]

## ஆளுநர் பதவி

1965-இல் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, ஓமந்தூராருக்கு, ஒரு மாகாண ஆளுநர் (கவர்னர்) பதவி வழங்க முன்வந்து கடிதம் எழுதினார். கடிதத்தைத் தொடர்ந்து அன்றைய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தில்லியிலிருந்து நேரில் வந்து லால் பகதூரின் விருப்பத்தைத் தெரிவித்தார். 'அந்தப் பேச்சுப் பேசாதே' என்று நொடிப்பொழுதில் ஓ. பி. ஆர். முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

## டாக்டர் பட்டம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்த ஓமந்தூரார் ஒப்புக் கொண்டிருந்தார். அந்த விழாவில் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்க விரும்புவதாகப் பல்கலைக் கழகத்தார் இவரிடம் தெரிவித்தனர். 'உரை நிகழ்த்தப்போய் இவனே பட்டம் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான் என்று ஊரிலே சிரிப்பார்கள்' என்று சொல்லி, ஓமந்தூரார் பட்டம் வாங்க மறுத்தார்.[2]

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை

1938-இல் நடந்த காங்கிரஸ் தலைவர் தேர்தலில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் 215 பேர்களில் 203 பேர் சுபாஷ்சந்திரபோஸுக்கு வாக்களித்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் ஓ. பி. இராமசாமி ரெட்டியாரும், சத்தியமூர்த்தியும் போட்டியிட்டனர். ஓமந்தூரார், சத்தியமூர்த்தியைவிட 35 வாக்குகள் கூடுதலாகப் பெற்று அந்த ஆண்டின் தலைவர் ஆனார்.[3]

---

1. 'நீங்கள் இருக்க விரும்பாவிடில் வேறு யாரைப் போடலாம்? தகுதியான ஆளை நீங்களே சொல்லுங்கள்' என்று இராஜாஜி கூறிவிட்டார். காஸ்மோபாலிட்டன் கிளப்பில் உட்கார்ந்து கொண்டு உறுப்பினர் பட்டியலில் வரிசையாகப் பெயர்களைப் படித்துப் பார்த்து, டாக்டர் பி. வி. செரியனுக்கு இப்பதவியைக் கொடுப்பதே சாலப் பொருந்தும் என்றார் ஓ பி. ஆர். அவ்வாறே இப்பதவி கனவிலும் எதிர்பாராத டாக்டர். செரியனுக்கு வழங்கப்பட்டது.

2. தகவல்: டாக்டர் பா. நடராசன்
3. எனது நினைவுகள் — கோவை சி. அய்யாமுத்து.

அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து ஓமந்தூராரே தலைவராக இருக்கவேண்டும் என்று காமராஜ், இராஜாஜி, முத்துரங்க முதலியார், உபயதுல்லா முதலிய அனைவரும் வற்புறுத்தினார்கள். ஆனால், இவர் மீண்டும் மீண்டும் ஒருவரே பதவியில் இருக்கக் கூடாது என்று சொல்லிமறுத்துவிட்டார்.

## காங்கிரஸ் பிளவு (1967)

1967-இல் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டு, இந்தியா வின் பிரதம மந்திரியாக இருந்த இந்திரா காந்தி அம்மையார், கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இந்நிகழ்ச்சிக்குச் சில நாட்கள் முன்னரே புதிய கட்சி தொடங்க அவர் முடிவு செய்திருந்தார். அது தொடர்பாக ஓமந்தூராரின் ஆதரவை விரும்பினார்போலும். உடனே தில்லிக்கு வந்துபோகும்படி ஓமந்தூராருக்கு இந்திரா காந்தி அம்மையார் கடிதம் எழுதினார். இவர்போகவும் இல்லை, பதில் எழுதவும் இல்லை.

## இடைத் தேர்தல் நடத்த மறுப்பு

சட்டசபை உறுப்பினர்களுக்கு ஓமந்தூரார் சலுகை வழங்க வில்லை. அவர்கள் அன்றாட நிர்வாகத்தில் தலையிடவும் இவர் இடம் கொடுக்கவில்லை. சட்டசபை உறுப்பினர் சிபார்சு செய்கிறார் என்பதற்காக, நீதிக்கும், சட்டத்துக்கும், நேர்மைக்கும் புறம்பாக எந்த ஆணையும் பிறப்பிக்கக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும்,மாவட்டப் போலீசு அதிகாரிகளுக்கும்,அரசாங்கத் தின் பல்வேறு துறைகளின் தலைவர்களுக்கும் முதலமைச்சர் (ஓமந்தூரார்) கண்டிப்பான சுற்றறிக்கையை அனுப்பினார்.

சட்டசபை உறுப்பினர்கள் இச்செயல்களை வெறுத்தனர். இவர் தொடர்ந்து முதலமைச்சராக இருப்பதை அவர்கள் விரும்ப வில்லை. இதை அறிந்த ஓ. பி. ஆர். உடனே பதவி விலகிக் கொள்ளுவதாக அறிவித்தார்.

அப்போது, இவருடைய நம்பிக்கைக்கு உரிய சிலர், இவரிடம் தூது சென்றனர். "நீங்கள் நேர்மையாகவும் நாணயமாகவும் ஆட்சி செலுத்துகிறீர்கள். சட்டசபை உறுப்பினர்கள் தங்களை விரும்பாவிட்டாலும், பொதுமக்கள் தங்கள் ஆட்சியையே விரும்பு கிறார்கள். ஆகையால்,தாங்கள் சட்டசபையைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்துங்கள்" என்று கூறினர்.

அதற்கு ஓமந்தூரார் கூறிய பதில், பொன் எழுத்துக்களில் பொறிக்கத் தக்கது.

"சட்டசபையை அதன் பதவிக்காலத்துக்குமுன் கலைப்பது என்பது பதவி ஆசை பிடித்தவர்கள் செய்யும் வேலை. நான் விரும்பி இப்பதவிக்கு வரவில்லை. வரச் சொன்னார்கள், வந்தேன். போகச் சொன்னார்கள், போகிறேன்."

"இடைத்தேர்தல் நடத்துவதன் விளைவுகளையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிச் செய்தால் கட்சி பிளவுபடும். அதற்கு நான் இடம் கொடுக்கமாட்டேன்.[1]

## முன் கோபமும் பின் சாந்தமும்

ஓ. பி. ஆருடைய இயல்பை "முன் கோபம் பின் சாந்தம்" என்று கூறலாம். இவர் ஓமந்தூரில் தம் ஆசிரமத்தில் இருந்த நாட்களைக் காண்போம். நாள் தவறினாலும் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் இவரிடம் பஞ்சாயத்துக்குவழக்குகள் வருவது தவறாது. இரு கட்சிக்காரர்களுடைய கருத்துக்களையும் மிகவும் வியக்கத்தக்க பொறுமையுடன் காதுகொடுத்து இவர் கேட்பார். சிலசமயம் கட்சிக்காரர்கள், கடுமையாக எதிரியைத் தாக்கி, தங்கள் நிலையை எடுத்துச் சொல்லுவார்கள். அப்போது ஓ. பி. ஆர் "அபய முத்திரை" போல, தம் இடது கையை உயர்த்தி "சற்றே அமைதி கொள்" என்பதுபோல, அசைப்பார்!

வயலில் தண்ணீர் தாவா, நில ஆக்கிரமிப்பு, சாதித் தகராறுகள், பாகப்பிரிவினை, சீதனத் தகராறு முதலிய வழக்குகள் தான் இவரிடம் பெரும்பாலும் வரும்.

செல்வாக்குள்ள பெரியவர்களுக்குள் சண்டை குடுமிப்பிடிப் போராகிவிடும். குரவை மீனை பிடித்துத் தின்ன, நாரை ஒற்றைக் காலில் இருக்கும். அதே நேரத்தில் நாரையைப் பிடித்துத் தின்ன நரி பதிபோட்டுக் காத்து நிற்கும். இக்காட்சியை நினைவூட்டும் விவகாரங்களும் ஸ்கந்த ஆசிரமத்துக்கு வரும்.

---

1. **தகவல்: ஓமந்தூராரின் அமைச்சரவையில் மதுவிலக்கு அமைச்சராக இருந்த டாக்டர் குருபாதம் இந்நூலாசிரியருக்கு 11—11—77-இல் சேலத்தில் அளித்த பேட்டி.**

வ்டலூரில் அனாதை விடுதி நடத்தும் சேலம் திரு. பெருமாள் செட்டியார் தம் குடும்பப் பிரச்சினை ஒன்றை ஓ. பி. ஆரிடம் 1958 இல் சொல்லி பஞ்சாயத்துச் செய்து வைக்கும்படி வேண்டிக் கொண்டார். "இதை மூன்றும் பேரிடம் சொல்லாமல் உங்களுக்குள் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்றார் ஓ. பி. ஆர். தங்களிடம் பஞ்சாயத்துக்கு ஒரு வழக்கு வந்து விட்டால், அதன் பிறகு கட்சிக்காரர்கள் அவர்களாகவே சமாதானமாகப் போய் விடாதவாறு முடிச்சுப் போடுபவர்களும் நம் நாட்டில் இருக்கின்றனர். ஓ. பி. ஆர். இத்தகைய நடுவர்களினின்றும் மாறுபட்டு மக்களின் நல்வாழ்விலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

"பட்சிகளுக்குக் கூடு உண்டு. நரிகளுக்கு வளை உண்டு. இந்த மனித குமாரனுக்குத் தலைசாய்க்கக்கூட இடம் இல்லையே!" என்று இயேசுநாதர் ஒரு தடவை வருந்தி, தன்னையே நொந்துகொண்டு புலம்பினார். இத்தகைய அனுபவம் ஓமந்தூராருக்கும் இருந்தது.

ஓமந்தூரார் வழக்குகளை நீதிமன்றத்துக்குச் செல்லுமாறு ஒருநாளும் அனுமதித்ததில்லை. இரண்டு கட்சிக்காரர்களிடமும் நியாயத்தை எடுத்துச் சொல்லி அவர்களுக்குள் ஓர் உடன்பாடு ஏற்படும்படியாகவே இவர் செய்து வந்தார். அதனால் இவரை இரு பகுதியைச் சார்ந்தவர்களும் பாராட்டி வந்தார்கள். "வெறுப்பு விருப்பு இல்லாமல் நீதி ஒன்றையே நினைவில் கொண்டு, நியாயம் வழங்குபவர்" என்று எல்லோராலும் போற்றப்பட்டார்.

பஞ்சாயத்துக்கள் சிலவற்றை முடித்துவிட்டு, சில புத்தகங்களைப் படிக்கவேண்டும், கடிதங்களுக்குப் பதில் எழுதவேண்டும், சட்டமன்ற வேலைகளைக் கவனிக்கவேண்டும் என்று மறுநாள் வேலைகளைத் திட்டமிட்டுக்கொண்டு இரவு படுக்கப் போவார். காலையில் எழுந்ததும் நான்கு திக்குகளிலிருந்தும் பஞ்சாயத்துக்குக் கட்சிக்காரர்கள் வந்துவிடுவார்கள். இவருக்கு அளவு கடந்த கோபம் வந்துவிடும்.

"போங்க ஐயா எல்லோரும், உங்கள் ஊர்களில் எல்லாம் விவகாரத்தைத் தீர்த்துவைக்கிறதுக்கு மனுஷாள் இல்லாமல் அற்றுப்போய் விட்டார்களா? இங்கே ஓடிவந்துவிட்டீர்கள். எனக்கு வேறு வேலை கிடையாதா?" என்று இங்கிதம் தெரியாமலும் மூச்சுவிடாமலும் பேசுவார். வந்தவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிடுவார்கள்.

10 நிமிடங்கள் கழித்து, உடன் இருக்கும் முலசூர் மாதவ ரெட்டியார் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோலப் பேச்சைத் தொடங்குவார். "உங்களிடத்தில் வந்தால் நியாயம் கிடைக்கும்... ஒருவருக்கும் பாதகம் ஏற்படாது என்றுதானே செஞ்சியிலிருந்து... அவர்களும் திருவக்கரையிலிருந்து...அவர்களும் ஒலக்கூரிலிருந்து சிலபேரும் வந்தார்கள். நீங்கள் அவர்களை ஒரேயடியாக ஏசினால் நன்றாக இருக்கிறதா?" என்பார்.

"சரி ஐயா, சரி ஐயா பண்ணையில் வேலைபார்க்கிறவன் களிடம் சொல்லி, ஓட்டமாக ஓடச்சொல்லுங்கள், அவர்களை எல்லாம் கூட்டிக்கொண்டு வரச் சொல்லுங்கள்" என்பார் ஓ. பி. ஆர்.

## பொறுக்கமாட்டார்

வடலூரிலிருந்தபோது, ஓ. பி. ஆர். கூடுமானவரை குருகுலத்துக்குப் போகமாட்டார். ஏன் போவதில்லை என்ற கேள்விக்கு இவரே ஒருமுறை விடை கூறினார்:

> "நான் போனால், அங்கே நிலவும் குறைபாடுகளைப் பார்க்க நேரிடும். பிறகு என்னால் அவற்றைப் பொறுக்க முடியாது. உடனே கடிந்து கொள்வேன். யாரையாவது தண்டிப்பேன். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் நான் போவதில்லை"

## கலெக்டர் பட்டபாடு

குருகுலத்தில் பணிபுரிபவர்கள் மட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும் அவருடைய தவறுகளை, ஓமந்தூரார் தாங்கிக்கொள்ள மாட்டார். இவருக்கு எந்த வேலையையும் குறிப்பிட்ட நேரத்தில், காலந் தவறாமல், செய்யும் இயல்பு உண்டு.

வடலூரில் ஆர்ட்டீசியன் கிணறு[1] ஒன்றைத் திறந்து வைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் ஓ. பி. ஆரைக் கேட்டுக் கொண்டார். ஓ. பி. ஆரும் அதற்கு உடன்பட்டார்.

---

1- பாசனத்துக்கு வேண்டிய தண்ணீர் பீறிட்டுக் கொண்டுவரும் ஊற்றுக் கிணறுகள். இவை நெய்வேலி பழுப்பு நிலக்கரிப் பகுதிகளில் உள்ளன.

விழாவன்று மாவட்ட ஆட்சித்தலைவர் 45 மணித்துளிகள் சுணங்கி வந்தார். சுத்த சன்மார்க்க நிலையத்தின் தலைவர் என்ற பதவி தவிர அப்போது ஓ. பி. ஆர். எந்தப் பதவியிலும் இல்லை. எனினும் அவரை ஓ. பி. ஆர். வன்மையாகக் கண்டித்தார். குறித்த நேரத்தில் அனைவரும் தங்கள் அலுவல்களைச் செய்ய வேண்டும் என்பதில் ஓ. பி. ஆர். அவ்வளவு உறுதியாக இருந் தார்.

## எதார்த்தவாதி வெகுஜன விரோதி

பதவியில் இருந்தபோதும் இவர் மாவட்ட ஆட்சித்தலைவர் களைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டது உண்டு. கோபத்தை அடக்கிக்கொண்டு இரட்டை வேடம் போட்டுத் தந்திரமாக, நாசுக்காக, உதட்டளவில் பேச ஓ. பி. ஆருக்குத் தெரியாது. தனித்துக் கூப்பிட்டுத் திட்டவும் தெரியாது. யார் மீதாவது கோபமாக இருந்தால்,

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

என்று ஆகிவிடுவார் ஓ. பி. ஆர்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு தடவை மிகத் தவறான ஓர் ஆணையைப் பிறப்பித்துவிட்டார். இதைக் கேள்விப் பட்டதும் ஓ. பி. ஆர். பலர் முன்னிலையில் அவரைக் கண்டித் தார். ‘துட்டுக்காகச் செய்தாயா? குட்டிக்காகச் செய்தாயா?’ என்று கேட்டார். அருகே இருந்த துறவிகள் இச்சொற்களைக் கேட்டுக் கூச்சப்பட்டு அவரவர் அறைகளுக்கு ஏகினர்.

அதிகாரிகள் பலரிடம் இவ்வாறு நடந்துகொண்டதால் அவர்களுடைய ஒத்துழைப்பை ஓ. பி. ஆர். பெற இயலாமல் போயிற்று.

## அன்பளிப்புகளை தவிர்க்கவும்

யாரிடமும் எந்தப் பொருளையும் அன்பளிப்பாக ஓ. பி. ஆர். பெற்றுக் கொள்ளமாட்டார். அவருக்கு ஒன்றும் தேவையில்லை. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக இருந்தார். நான்கு முழ வேட்டியும் ஒரு பனியனும் துண்டும் உடுத்திவந்தார். உண்பன ஒரு நாழிக்கும் குறைவு. படுப்பதோ கிழிந்த பாயில்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் நாவரஇயல்பேராசிரிய ராக இருந்த டாக்டர் சீனிவாசன், வள்ளலார் கொள்கைகளில் ஈடுபாடு உடையவர்; ஓ. பி. ஆர். வடலூருக்கு வந்த பிறகு இருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. கிழிந்த பாயில் ஓ. பி. ஆர். படுத்ததைப் பார்க்க அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவருடைய சொந்த ஊர் சீர்காழி. அப்பகுதியில் கோரம்பாய் நெசவு புகழ்பெற்றது. கொள்ளிடத்துக் கரையில் வளரும் கோரம்புல்லால் ஆன பாய் ஒன்றை அவர் ஓ. பி. ஆருக்கு வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தார். "என்ன விலை?" என்று கேட்டு, பணப்பையை எடுத்தார், ஓமந்தூரார். 'தங்களுக்கு இச்சிறு உதவிகூட நாங்கள் செய்யக்கூடாதா?' என்று டாக்டர் சீனிவாசன் கடுமையாகக் கோபித்துக் கொண்டதால், பாயைத் தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டார், ஓ. பி. ஆர்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் மலேசியா வுக்குச் சென்றிருந்தபோது, விலைமிக்க ஊன்றுகோல் (கைப் பிரம்பு) ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து ஓமந்தூராருக்கு வழங்கினர். மறுக்க இயலாமல் அதைப் பெற்றுக் கொண்டு வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தினர்.[1]

வயலிலும் காட்டுப்பகுதிகளிலும் கிடந்த கற்களை அப்புறப் படுத்துவதற்காகச் சிறுவயதிலிருந்தே ஒரு குச்சி அல்லது தடிக் கம்புடன் நடந்து செல்லும் பழக்கத்தை ஓ. பி ஆர். கொண் டிருந்தார்.

## ஏமாற்றமாட்டார்

ஓமந்தூரார் யாரையும் ஏமாற்றமாட்டார். 'ஏதாவது செய்வார்' என்ற நம்பிக்கையை ஒருவர் மனத்தில் உண்டாக்கி நாள் கடத்தி பிறகு அவர் வருந்துதற்கு இடம் கொடுக்க மாட்டார்.

## ஏமாறவும் மாட்டார்

ஓமந்தூரார் சாதாரணமாக யாரையும் நம்பமாட்டார்; எனவே அவரை ஏமாற்ற முடியாது.

---

1. "மலாக்காவில் அந்தத் தடியை 50 வெள்ளிக்கு வாங்கினேன். பேய் பிசாசு அதன் அருகே வராது என்றனர். ஓமந்தூராருக்கு அன்பளிப்பாகக் கொடுக்க அதுவே ஏற்ற பொருள் என்று எண்ணினேன்." (நூலாசிரியரிடம் ஒரு பேட்டி யில் வாரியார் சுவாமிகள்)

பெரிய திட்டங்களாக யாராவது சொன்னால் அந்த வலை களில் சிக்கிவிடமாட்டார்.

கவியோகி சுத்தானந்த பாரதியார், 'வடலூரில் (புதுச்சேரி யில் உருவாகும் ஆரோவில் பல்கலைக்கழகத்தைப்போல) இராமலிங்கர் பல்கலைக்கழகம் தொடங்க ஒரு கோடி ரூபாய் திரட்டி ஆன்ம ஞானமும் விஞ்ஞானமும் வளரும் அருட்கலைக் கழகம் தொடங்குவோம். என்னுடைய 1,500 நூல்களை வெளி யிட்டாலே, நமக்கு வேண்டிய பொருள் கிட்டிவிடும்' என்றார். ஓமந்தூரார் இந்தக் கருத்தை ஒரு காதில் வாங்கி மறுகாதில் விட்டார். அதற்காகத்தான் இரண்டு காதுகள் உள்ளன என்று எண்ணினார் போலும்:

'சரி, முதலில் சர்க்கா (கைராட்டை) வகுப்பு நடத்துவோம்' என்றார்!

## விருந்தினராக இருக்க மறுப்பு

மைசூரில் வந்து சில மாதங்கள் இருக்கலாம் என்று மஹாராஜா ஜெயசாமராஜ உடையார் ஓ. பி. ஆரை அழைத் தார். "தங்களை ஏமாற்றி அங்கு பலர் சாப்பிடுகிறார்கள். தங் களுக்கு மேலும் சுமையாகவும் அவர்களுக்கு இடையூறாகவும் இருக்க நான் விரும்பவில்லை" என்று ஓ. பி. ஆர். பதில் எழுதிவிட்டார்.[1]

## பேச்சாளர் ஓ. பி. ஆர்.

ஓ. பி. ஆர். பேச்சில் சொல்நயம் சொட்டாது. அடுக்கு மொழி உடுக்கை அடிக்காது. ஆவேசம் இராது. நகைச்சுவை இராது. கிண்டலும் கேலியும் இராது. நையாண்டியும் சிலேடை யும் அறவே இரா. ஆனால், உண்மை இருக்கும். உபமான உபமேயங்கள் இருக்கும். ஆணித்தரமான கருத்துக்கள் இருக்கும். புள்ளி விவரங்களுக்குக் குறைவே இராது. எதை நினைத்து எதைச் சொன்னார் என்று இவர் பேச்சைப்பற்றி மக்கள் குழம்பிக் கொள்ள நேராது.

மனத்தில் சரி என்று பட்டதையே சொன்னார். இதனால் இவர்பேச்சு அனைவரையும் ஈர்த்தது. பாமரமக்களை விழிப்படையச் செய்தது. மேடைப்பேச்சிலும் சரி, தனிப்பட்டவர்களுடன்

1. வி. எஸ். சண்முகசுந்தரம், ஆசிரியர். நெய்வேலி.

உரையாடும்போதும் சரி "வெட்டு ஒன்று, துண்டு இரண்டு" என்று பேசுவார். பாலுக்கும் காவலாக பூனைக்கும் தோழனாக இருக்க மாட்டார்.

கூட்டத்தினரைப் பெருமிதம் தொனிக்கக் கண்ணோட்டம் விடவோ, அவர்களைப் பார்த்துப் புன்னகை புரியவோ, மேடையிலும் முன்வரிசைகளிலும் அமர்ந்திருக்கும் முக்கியமானவர்களைப் பெயர் சொல்லிக் குறிப்பிடவோ ஓ. பி. ஆருக்குத் தெரியாது. சண்டமாருதமாக வீசும் புயல்போன்று 'கிடுகிடு' வேகத்தில் பேசவும் தெரியாது. சமவெளியில் நிதானமாக நடக்கும் ராஜ யானை போன்ற கம்பீரமான நடை என்று இவருடைய பேச்சைக் குறிப்பிடலாம்.

## பட்டை தீட்டாத வயிரம்

ஓ. பி. ஆர். திறமையானவர்; நேர்மையானவர்; ஒழுக்க சீலர்; நாட்டுப் பற்றுமிக்கவர்.

ஆனால் இவருடைய நேர்மை சற்று அப்பட்டமானதாக இருந்தது. பத்தரை மாற்றுத் தங்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு நகை செய்ய முடியாது. சிறிதளவாவது செம்பு சேர்க்க வேண்டும்.

வயிரத்தை அப்படியே பயன்படுத்த முடியாது. அதற்குப் பட்டை தீட்டவேண்டும். ஆனால், ஓமந்தூரார், ஜவஹர்லால் நேரு சொன்னதுபோல "பட்டை தீட்டாத வயிரக்கல்"லாக இருந்தார்.

நேர்மையைப்பற்றிச் சில கதைகள் வழங்குகின்றன.

ஒருவன் இரயில் பயணம் செய்தான். இரவு 12 மணிக்கு அபாயச் சங்கிலியை இழுத்தான். ஏன்? என்று கேட்டார்கள், உடன் பயணம் செய்தவர்கள். "என்னோடு பயணம் செய்கிறானே என்மகன், இவனுக்கு அரைடிக்கட் வாங்கியிருந்தேன். இன்றுடன் 12 வயது முடிவடைந்துவிடுகிறது. இரவு 12 மணிக்கு, 13 ஆவது வயதில் அடியெடுத்து வைத்துவிட்டான். எனவே பயணத்தின் எஞ்சிய பகுதிக்கு என்னிடம் முழுக்கட்டணம் வசூலித்துக் கொள்ளட்டும்" என்று கூறினாராம்.

சர். எம். விசுவேசுவரையா என்ற பொறியியல் அறிஞர் 1925-இல் மைசூர் சமஸ்தானத்தின் திவானாக (முதலமைச்சராக) இருந்தார். அப்போது அரசாங்கத்தின் ஆய்வு மாளிகையில் மின்சார விளக்குகள் இல்லை. மெழுகுவர்த்தி விளக்குகள்தான் பயன்படுத்தப்பட்டன. அந்த விடுதியின் காவல்காரன் ஏற்றி வைத்த மெழுகுதிரி விளக்கில் இரவு 9 மணி வரை அரசாங்க வேலைகளைச் செய்வார், விசுவேசுவரையா. பிறகு அந்த மெழுகுதிரி களை அணைத்து விட்டு, தம் கைப்பணத்திலிருந்து சுற்றுப்பயணத் திற்காக வாங்கி வந்திருந்த மெழுகுதிரிகளை ஏற்றிவைத்துக் கொண்டு, தாம் விரும்பும் சில நூல்களை இரண்டு மணி நேரத்திற்குப் படிப்பாராம்.

இதுபோன்ற நேர்மைக்கு இலக்கியமாக சுதந்திர இந்தியாவில் விளங்கியவர் ஓமந்தூரார்.

இவருடைய அமைச்சரவை நீண்டகாலம் இருந்திருக்கு மாயின் தமிழ்நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கும் என்பது உறுதி. இவர் தொடர்ந்து பதவியில் இருக்க இயலாமற் போனதற்கு,

(1) கட்சியில் ஒத்துழைப்பு இல்லை.
(2) இவருக்குப் பதவி ஆசையில்லை.
(3) இவருக்கு ராஜதந்திரம் இல்லை.

என்று மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன.

## இராஜ தந்திரம்

இராஜதந்திரம் என்ன என்பதை ஒரு குட்டிக் கதையால் விளக்கலாம்:

ஒரு தூதர், தாம் பதவிவகித்த நாட்டில் நடைபெற்ற அரசாங்க விருந்து ஒன்றில் கலந்துகொண்டார். அவர் அருகே ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தார். "தாங்கள் யார்?" என்று அம்மையார் வினவ, 'நான்... நாட்டின் பிரதிநிதி' என்றார் தூதர்.

'தங்கள் நாட்டின் உற்பத்திகள் எவை என்று நான் தெரிந்துகொள்ளலாமா?' என்று ஆரணங்கு உசாவினாள்.

"அதுவா? இதோ?" என்று தூதுவர் இராஜதந்திரமாகப் பதில் கூறினார்:

‘‘பெட்ரோல், நிலக்கரி, ஆப்பிள், மற்றும் தங்களைப்போல இயற்கையாக அழகாக இருப்பவர்களுக்கு மேலும் அழகு ஊட்டுவதற்கு உதவும் வயிரக்கற்களையும், என்னுடைய நாடு உற்பத்தி செய்கிறது’’ என்றார்.

ஓமந்தூராருக்கு இத்தகைய இராஜதந்திரம் தெரியாது. பெண்களுக்கு அருகே உட்காரவும் மாட்டார்; நிற்கவும் மாட்டார்.

ஒருமுறை கவர்னர் நை துரையும் அவர் மனைவியும் இவருடன் சேர்ந்து படம் எடுத்துக்கொள்ள விரும்பினர். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே முதலமைச்சரை நிறுத்திப் படம் எடுப்பது அவர்களுடைய மரபு. ஓமந்தூரார் லேடி நை நின்ற இடத்திலிருந்து 4 அடி தூரம் தள்ளி நின்றுவிட்டார். ‘க்ளோசப், க்ளோசப்’ என்று சொல்லி போட்டோவை எடுப்பதற்குள் அந்த போட்டோகிராபர் பட்டபாடு சொல்லிமுடியாது.

## ஏனைய தந்திரங்கள்

இக்காலத்தில் அரசியல்வாதிகள் ஊரிலுள்ள குழந்தைகளை எல்லாம் முத்தமிடுகிறார்கள். ஊர்வலம் செல்லும்போது சாக்லேட்களையும் மலர் மாலைகளையும் வாரி இறைக்கிறார்கள். மனுக் கொடுப்பவர்களிடம் எல்லாம் ‘ஆகட்டும் பார்க்கலாம்’ என்று சொல்லுகிறார்கள். இந்த அரசியல் தந்திரங்கள் ஓமந்தூராருக்கு அணுவளவும் தெரியாது.

நேரத்தை வீணாக்கமாட்டார்; தவறான சிபாரிசுக்கு ஒருவர் வருகிறார் என்ற எண்ணம் ஓ. பி. ஆர். மனத்தில் ஏற்பட்டு விட்டால், அந்த ஆள் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் பேட்டி கொடுக்க மாட்டார்.

## பேட்டி கொடுக்கும் முறை

பேட்டி காண வருபவரிடம் மாலை வாங்கிக் கொள்ள மாட்டார். பழங்கள் முதலியவற்றை அவர்கள் கொண்டுவந்தால், வெளியே வைத்துவிட்டு வாருங்கள் என்பார். தனியே பேச மாட்டார். தன்னுடைய நேர்முக உதவியாளர் முன்னிலையில்தான் பேசுவார். இருவரும் பேசுவதை உதவியாளர் குறித்துக்கொள்வார். இத்தகைய பேட்டிகளை ஒருவரும் விரும்பவில்லை.

## சிக்கனம்

ஓமந்தூரார் மிகவும் சிக்கனமானவர். சிந்தித்து அளந்து தான் செலவுசெய்வார். இரயில் நிலையத்திலிருந்து இவருடைய பெட்டி படுக்கைகளை ஒருவன் சுமந்து வந்து, ஒரு ரூபாய் கூலி கேட்டால் கொடுக்கமாட்டார். "நீ கேட்பது நியாயமான கூலி இல்லை. இப்படிக் கூலி கொடுத்தால் நாணயச் செலவணி பெருகி, பணத்தின் மதிப்பு (வாங்கும் சக்தி) குறையும். அதனால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து நீயும் பாதிக்கப் படுவாய். தேவைக்குமேல் உன்னிடம் பணம் இருந்தால் கெட்ட செலவுகள் செய்யத்தூண்டும்" என்று ஒரு குட்டிப்பிரசங்கம் செய்த பிறகு அவனிடம் 50 காசு கொடுப்பார்.

## மைசூர் அரண்மனை, சென்னை

மைசூர் மன்னருக்குச் சென்னை சாந்தோம் கடற்கரையில் ஓர் அரண்மனை இருந்தது. இக்காரணத்தால் அந்த மாளிகைக்கு எதிரில் உள்ள தெரு 'பேலஸ் ரோடு' என்ற பெயரில் இன்றும் வழங்கிவருகிறது.

மைசூர் அரண்மனையை இப்போது ரஷ்ய அரசு விலைக்கு வாங்கியிருக்கிறது. அவர்களுடைய கான்சல் ஜெனரல் அலுவலகம் அங்கிருந்து இயங்கிவருகிறது.

மைசூர் மன்னர் ஓமந்தூராரையும் சென்னை கவர்னர் தம்பதிகளையும் தம் விமானத்தில் மைசூர் தசராவுக்கு அழைத்து வர ஏற்பாடு செய்திருந்தார். மன்னரின் விருந்தினராக ஓமந்தூராரும் சென்றார். மன்னர் ஜெயசாமராஜ உடையார், பிறகு சென்னைக்கு வந்து ஓமந்தூராரைச் சந்தித்தார். சென்னையில் தமக்கு அரண்மனை தேவையில்லை என்றும் முதலமைச்சர், அவருடைய விருந்தினர்கள் ஆகியோர் இல்லமாக அரசாங்கத்தின் கட்டிடமாகப் பயன்படுத்த, அதை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம் என்றும், சென்னை அரசின் பொதுப்பணித்துறை அதிகாரிகள் மதிப்பிடும் தொகைக்கு விற்கத் தயாராக இருப்பதாகவும் சொன்னார். உரிய அதிகாரிகள் போய்ப் பார்த்து ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பிட்டனர். அந்த விலைக்கு வாங்கியிருந்தால் அது இன்றைய தமிழக அரசுக்குச் சிறந்த முதலீடாக இருந்திருக்கும்.

ஓமந்தூரார் தாமே போய்க் கட்டிடங்களைப் பார்த்துவிட்டு "எனக்கு எதற்கு இவ்வளவு பெரிய மாளிகை? மக்களின் வரிப்

பணத்தை என் சொந்தப் பணம்போல் பாதுகாக்க வேண்டும். இவ்வளவு பெரிய கட்டிடங்களைப் பாதுகாக்கவும் பழுதுபார்க்கவும் வேறு செலவு ஏற்படும். இந்த அரண்மனையை வாங்கவேண்டாம்" என்று சொல்லிவிட்டார்.

## வேண்டியவர் - வேண்டாதவர்

வேண்டியவர்என்று ஓ. பி. ஆரிடம் யாரும் எந்தக்காரியத்தையும் சாதித்துக்கொள்ள முடியாது. தெரியாதவர், புதியவர் என்பதற்காக ஒருவரும் அவரை அணுகத் தடை இருக்காது.

பார்வதி-பரமசிவனைச் சுற்றி வலம் வந்து, பிள்ளையார் பழம் பெற்றிருக்கலாம். ஆனால், இவரைப் புகழ்ந்து பேசி இவர் வீட்டில் காத்திருந்து யாரும் காரியத்தைச் சாதித்துவிட முடியாது.

## பயணப்படி

ஒரே பயணத்துக்கு இருவேறு நிறுவனங்களிலிருந்து பயணப்படி பெறுவது இன்றைய நாகரிகமாக வளர்ந்துள்ளது. ஓ. பி. ஆர். அரசியல் விடுதலைப் போராட்டத்தின்போது, தம் பணத்திலேயே கூட்டங்களுக்குச் சென்றுவந்தார்.

சட்ட மன்ற மேலவைக் கூட்டங்களுக்குப் போய்வருவதற்கு மட்டும் பயணப்படி வாங்கிக் கொள்வார். 1964-க்குப் பிறகு இந்தத் தொகையை வாங்குவதையும் நிறுத்திக்கொண்டார்.

பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஓ. பி. ஆர். வாழ்ந்தார். தன்னைத் தானே உருக்கிக்கொண்டு ஊருக்கு ஒளிதரும் மெழுகுவர்த்தி போலவும், தன்னைத்தானே தேய்த்துக்கொண்டு மணம்பரப்பும் சந்தனக்கட்டை போலவும், தம் நலங்களைத் தியாகம் செய்து நாட்டு மக்களுக்குப் பாடுபட்டார்.

## வாருங்கள் நடக்கலாம்:

ஓமந்தூரார் கண் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள 1958-அளவில் மதுரைக்குச் சென்றார். 'காந்தி ஸ்மாரக் நிதி'த் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் (அண்ணாச்சி) ஓமந்தூராரை இரயில் நிலையில் வரவேற்றார். பிறகு ஒரு வாடகைக் கார்

ஏற்பாடு செய்ய அண்ணுச்சி சென்ருர். 'எதற்கு டாக்சி? நாயக்கர் புதுத் தெருவில்தானே டாக்டர் வெங்கடசாமி ஆஸ்பத்திரி இருக்கிறது. வாருங்கள் நடந்து போகலாம்!' என்ருர். சென்னை இராசதானியின் முன்ளுள் பிரதம மந்திரி. நாளும் நடந்ததோடு பாத யாத்திரையும் செய்த கால்கள் அல்லவா?

## ஆடம்பரம் கூடாது

ஓமந்தூராருக்கு ஆடம்பரம் அறவே பிடிக்காது. முதலமைச்சராக இருந்தபோது கூடுமானவரை போலீஸ் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளாமல் தவிர்த்துவிடுவார். "அவர்களுக்கு வேறு வேலை இல்லையா?" என்று கேட்பார்.

1947 இல் ஓமந்தூரார், முதலமைச்சராக, திருப்பராய்த் துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்துக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து திரு ஈங்கோய் மலையில் ஓர் ஆசிரமத்தைக் காண வருமாறு அழைத்திருந்தார்கள். குளித்தலையிலிருந்து காவிரியின் எதிர்க்கரைக்கு 1978-இல் பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனல்| அப்போது பரிசலில் தான் செல்ல வேண்டியதிருந்தது. இவருக்காக அலங்காரப் பரிசல் ஏற்பாடு செய்திருந்தார்கள். இவர் அதில் ஏற மறுத்தார். சாதாரணப் பரிசலிலேயே சென்ருர்.

சட்டமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியதும், உறுப்பினர்களுக்கு ஆடம்பரமான விருந்து கொடுக்கும் இப்போதைய பழக்கம் ஓமந்தூரார் காலத்தில் கிடையாது.

ஓமந்தூரார், முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னர் செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மாம்பாக்கத்தில் குருகுலத் திறப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு இவரே தலைமை ஏற்ருர். மலர்களால் அழகுசெய்த மலர்வண்டியில், அறுபது ஜோடி காளைகள் இழுக்க, அரை கிலோமீட்டர் தொலைவிலிருந்து, அன்பர் குழுக்களோடும், பக்க வாத்தியங்களோடும், மிகப் பெரிதாக இடப்பட்டிருந்த விழாப் பந்தலுக்கு இவர் அழைத்துவரப்பட்டார். இக்குருகுலம் திருவள்ளுவர் வழியில் நடைபெறுவதாதலால், ஓமந்தூராரைத் திருவள்ளுவராகவே கருதி அழைத்து வந்தனர். மலர்வண்டியில் இவர் அமர மறுத்து திருவள்ளுவர் படத்தை வண்டியில் ஏற்றி "நாம் ஓர் வண்டி ஓட்டியாய் இருக்கிறோம்" என்று சொல்லி அவ்வாறே ஏறுகாலில் அமர்ந்து கொண்டார்.

உணவு

(1) சாப்பிடுவதற்காகவே உலகில் வாழ்பவர்கள், (2) வாழ்ந்தாக வேண்டுமே என்பதற்காக எதையாவது சாப்பிடுபவர்கள் என்று மக்களை இரு கூருகச் சொல்லலாம். பிந்திய வகையைச் சேர்ந்தவர் ஓ. பி. ஆர்.

மர இயந்திரத்தில் நெல்லை உடைத்து, கைக்குத்து அரிசியாக ஆக்கி, கழுவாமல் பொங்கி (வடித்துச்) சாப்பிடுவார். காய்கறிகளை வேகவைத்து, அந்தத் தண்ணீரை வீணுக்காது குழம்பு அல்லது ரசத்தில் சேர்த்துக் கொள்ளச் சொல்லுவார்.

இவர் காப்பி, டீ குடிக்கமாட்டார். வைஸ்ராய் மவுண்ட் பாட்டன் பிரபு இவருக்காக எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து தயாராக வைத்திருக்க ஏற்பாடு செய்திருந்தார். தம் பண்ணைக்கு வருபவர்களுக்கு ஓ. பி. ஆர். எலுமிச்சம் பழச்சாறு அல்லது துளசி இலையைத் தேனில்விட்ட சாறுதான் கொடுப்பார்.

அபக்குவ ஆகாரம் உட்கொள்வதில் ஓமந்தூராருக்கு ஆர்வம் இருந்தது. அதாவது வேகவைக்காமல், பச்சையாகவே காய்கறிகளைச் சாப்பிடுவது. இவர் 1943 இல் ஆறு மாதக்காலம் இவ்வாறே செய்தார்.

பெரும்பாலும் கஞ்சி, கீரை, சப்பாத்திதான் சாப்பிடுவார். எல்லாம் ஒரு அளவோடு இருக்கும்.

நெல்லிக்காய் என்றுல் இவருக்கு உயிர். நெல்லிக்காயின் அருமையைப்பற்றி அடிக்கடி கூறுவார். நாள் தவறிலும் சாப்பாட்டில் நெல்லிக்காய் தவருது. முதலமைச்சராக இருந்த போதும் இவருடைய தோட்டத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை நெல்லிக்காய் ஒரு குட்டிச்சாக்கில் வந்துவிடும்.

இவருடைய தோட்டத்து நெல்லிக்காயும் சரி, இவர், வடலூரில் வைத்து வளர்த்த மரத்தில் காய்க்கும் நெல்லிக்காயும் சரி தனிச்சுவை உடையன.

'கல்லெல்லாம் மாணிக்கக் கல் ஆகாது, நெல்லிக்காயெல்லாம் ஓமந்தூரார் பயிர் செய்த நெல்லிமரத்துக்காய் ஆகாது' என்பதை, அதைச் சாப்பிட்டவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள்.

## விருந்து

இவரைக் காண வருபவர்களை இவர் சாப்பிடச் சொல்லுவது அருமை, இதுகுறித்து வடலூரில் இருக்கும் (குங்கிலிய சுவாமிகள் என்ற புகழ்ப் பெயருடைய) திரு பழ. சண்முகனார் கூறுவது வருமாறு :

> "ஒரு நாள் என்னை, சாப்பிட்டுப் போ என்றார் ஓ. பி. ஆர். அவர், ஒரு நபரைச் சாப்பிடச் சொல்லுவது என்றால் அது இலேசான காரியம் அல்ல. ஒரு வரட்டுத் துவையலும் சத்தில்லாத ரசமும்தான் இருக்கும். அதற்கு அவ்வளவு கிராக்கி! பொருளின் அருமை புரிந்தவர். அந்தச் சாப்பாடு சிவபெருமானுக்கு வந்திக்கிழவி கொடுத்த உதிர் பிட்டுக்கு நிகர். சத்தியவானிடமிருந்து ஒரு பருக்கை கிடைத்தாலும் உத்தமம் அல்லவா?"

## கட்சி கடந்த கனிவு

காங்கிரசின் கொள்கைகளிலும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியிலும் ஓமந்தூராருக்கு இருந்த அக்கறைக்கு ஈடு இணை யில்லை. அதே சமயத்தில், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்பதை உணர்ந்திருந்தார்.

"என் தகப்பனார் நாராயணசுவாமி முதலியார், ஜஸ்டிஸ் கட்சிக்காரர். இருந்தபோதிலும், கட்சி வேறுபாடு பார்க்காமல் ஓ. பி. ஆர். இனிய நண்பராக அவருடன் பழகிவந்தார்" என் கிறார் குறிஞ்சிப்பாடி திரு பி. என். ஞானசம்பந்த முதலியார்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கூறுவதாவது :

> "ஓ. பி. ஆரும் நானும் வேறுபட்ட அரசியல் கட்சிகளில் இருந்தபோதும், தனிப்பட்ட வாழ்க்கையில் நாங்கள் அதிகமாக ஒருவர் மற்றொருவரிடம் பழகி, பல விழாக் களில் ஒன்றுபட்டும் ஒருவர்பால் ஒருவர் மதிப்புக் காட்டி யும் வந்தோம். இவர் முதலமைச்சராவதற்கு முன்னரே எனக்கும் இவருக்கும் அறிமுகம் உண்டு. முதலமைச்சரான பிறகு காங்கிரஸ் பிரசாரத்திற்காகத் திருச்சிக்கு வந்த போது என் வீடு தேடி வந்து என்னைப் பார்த்தார். 'எதிர்க்கட்சிக்காரர் வீட்டுக்கு ஏன் போனீர்?' என்று

காங்கிரஸ்காரர்கள் அவரைக் கேட்டனர். 'கட்சிக்காரனுகப் போகவில்லை, மனிதத் தன்மைக்கு மதிப்புக் கொடுத்துப் போனேன்' என்ருர் ஓ. பி. ஆர்.

முதலமைச்சராக இருந்தபோது, ஓ. பி. ஆர். சீர்காழிப் பகுதியில் சுற்றுப்பயணம்செய்தார். அங்கு ஒருவருடைய அறுபதாம் ஆண்டு விழா நிகழ்ச்சிக்குச் செல்லுவதும் இவருடைய திட்டத்தில் இருந்தது. 'விழா நாயகர் காங்கிரஸ்காரர்கள் திரட்டிய தேசிய நிதி ஒன்றுக்கு நாங்கள் அவரிடம் எதிர்பார்த்த தொகை தர வில்லை. எனவே, முதலமைச்சர் அவர் வீட்டுக்குப் போகக் கூடாது' என்று உள்ளூர்க் காங்கிரசார் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஓ. பி. ஆர். அவர்களுடைய எதிர்ப்பைப் புறக்கணித்தார்.

## என் கண்கள் போனுலும் பரவாயில்லை![1]

உலகில் இருவகையான மக்கள் உள்ளனர். 'எனக்கு இரண்டு கண்கள் போனுலும் சரி, என் எதிரியின் கண் ஒன்ருவது கெடட்டும்' என்ற கொடுமையான நெஞ்சினரும் வாழ்கின்றனர். இக்கருத்து வடதுருவம் என்ருல், தென் துருவத்தினராக வாழ்ந்தார் ஓ. பி. ஆர்.

மூலம், தலைவலி முதலிய நோய்களால் வாழ்நாள் முழுவதும் அல்லற்பட்ட போதிலும், ஓ. பி. ஆர். தன் துயரங்களைத்/தாமே தாங்கிக்கொண்டார். பிறருக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை.

வடலூரில் போய் நிலையாகத் தங்கிய பின்னர் ஓ. பி. ஆர். தம் முதுமையில் கண் நோய் வாய்ப்பட்டார். இருமுறை அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இவருடைய மைத்துனர் (மனைவி யின் சகோதரர்) துரைசாமி ரெட்டியார், தம் கண்களில் ஒன்றை ஓமந்தூராருக்கு வழங்க முன்வந்தார். ஓமந்தூரார் உடனே துரைசாமி ரெட்டியாரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார். "வேண்டாம் அப்பா வேண்டாம். என் கண்கள் இரண்டும் போனுலும் பரவாயில்லை" என்று சொல்லி, கண் மருத்துவம் செய்துகொண்டு ஒரு கண்ணுடிக்குமேல் மற்ருெரு கண்ணுடி போட்டுக் கொண்டார்.[2]

---

**1, 2. தகவல் : பேராசிரியர் டாக்டர். சீனிவாசன், அண்ணுமலைநகர்.**

கருணை

தென் ஆர்க்காடு மாவட்டத்துக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராக இருந்த ஒருவர், மாகாண காங்கிரசுக்கு அனுப்ப வேண்டிய ரூ.2,000/-த்தை அனுப்பாமல் செலவு செய்துவிட்டார். ஓமந்தூராருக்கு இது தெரிந்து. அவர் மீது போலீசில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்தார். பிறகு அவர்பால் இரக்கப் பட்டு, கருணைகாட்டி வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு இளமையிலேயே இவரிடம் ஊறிவந்த கருணையால் கருணை வள்ளலான இராமலிங்க அடிகளின் புகழ் பரப்பும் பணியை இவர், அரசியலிலிருந்து விலகிக் கொண்டபின் முழு நேரக் கடமையாக்கிக் கொண்டார். தாம் தொடங்கிய நிலையில் பின் நடத்துவதற்கு இவர் தேர்ந்தெடுத்த திரு நா. மகாலிங்கமும் இவ்வாறே இப்பணிக்கு முதன்மை கொடுத்து வருகிறார். இவ்விருவரின் முயற்சிகளின் விளைவாக உருவான பொதுமக்கள் கருத்தின் பயனை இப்போது சென்னையில் 'வள்ளலார் நகர்' என்ற பெயரில் காண்கிறோம். தமிழக அரசு ஏற்படுத்தி யிருக்கும் தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் வள்ளலார் நூல்களும், அவரைப்பற்றிய நினைவுப் பொருள்களும் இடம் பெறும் என்று அரசு அறிவித்திருக்கிறது. திருவருட்பாவில் கூறப்பட்டிருக்கும் பழக்கவழக்கங்களைப் பற்றி, இந்த மையத்தில் ஆராய்ச்சியாளர் களைக்கொண்டு ஆராயக் கூடும் என்றும் தெரிகிறது.

அடியார்க்கும் அடியார்

ஓமந்தூரார் செல்வாக்கு உள்ளவர்களிடம் கண்டிப்பாக நடந்துகொண்டபோதிலும், வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பவர்களுடன் அன்பு ஒழுகப் பழகுவார். பதவியிலிருந்து விலகியபோது தமக்கு முடிவெட்டிய திரு வரதனுக்கு, தாமாகவே ஒரு சான்றிதழ் வழங்கிய பண்பு பாராட்டத்தக்கது.[1] இச் சான்றிதழைப் பார்த்த அடுத்த முதலமைச்சர் திரு குமாரசாமி ராஜா உடனே திரு வரதனின் வாடிக்கையாளர் ஆனார்.

---

1. **PREMIER OF MADRAS** Fort St. GEORGE
25—3—1949

This is to certify that Sri M. Varadan is an Expert Hair Dresser who is Served me nearly for the past two years with his dexterous hand. He does his work quickly and satisfactorily. He really deserves every encouragement.

**O. P. RAMASAMY REDDY**

## கண்டிப்பும் நிபந்தனையும்

இராஜாஜி 1937 இல் முதலமைச்சராக இருந்தபோது கடன் நிவாரணச் சட்டம் ஒன்று கொண்டு வந்தார். அதன்படி, செலுத்தப்பட்ட வட்டிகளில் ஒரு பகுதி அசல் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காகச் செலுத்தப்பட்டதாகக் கணக்கிடப் பட்டது. வாங்கிய தொகையைப்போல இருமடங்கு பணம் வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தால், அசலும் தீர்ந்தது வட்டியும் தீர்ந்தது என்று சட்டம் செய்யப்பட்டது.

இச்சட்டத்தால் கடலூர் வட்டம் காடாம்புலியூரில் ஒரு செல்வர் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் காங்கிரசை எதிர்ப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டார். காங்கிரஸ் கூட்டங்கள் நடக்கவிடாதபடி ஆட்களை ஏவிவிட்டுக் குழப்பம் செய்தார். அவர் மீது குற்ற இயல் நீதிமன்றத்தில் ஓ. பி. ஆர். வழக்குத் தொடர்ந் தார்.

(1) கூட்டங்களில் பேசியவர்களை அவமதித்தது

(2) பொதுக்கூட்டங்கள் நடக்கவிடாமல் தடுத்தது

ஆகிய குற்றங்களை ஓ. பி. ஆர். அவர்மீது சுமத்தினர்.

வழக்கு நடந்துகொண்டிருந்தபோது அவர் ஓ. பி. ஆரிடம் கெஞ்சி, கருணை காட்டவேண்டும் என்றார்.

> காங்கிரஸ் சார்பில் நடக்கும் கூட்டத்துக்கு
> வந்து, "நான் காங்கிரஸின் திட்டங்களைப்
> புரிந்துகொள்ளாமல் கண்டித்தேன்"

என்று ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனை விதித்து ஓ. பி. ஆர். தாம் போட்ட வழக்கினைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

## நிபந்தனைகள்

> ஏதாவது நிபந்தனைகள் விதிப்பது ஓமந்தூராருடைய இயல்பு.

முதலமைச்சராக இருந்தபோது, இவர், சென்னை பொது மருத்துவமனையில் உடற்கூறு வைத்தியராக இருந்த புகழ்பெற்ற மருத்துவர் டாக்டர் ரத்னவேலு சுப்பிரமணியத்துக்குச் சொல்லி

அனுப்பினுர். அவர் கூவம் மாளிகைக்கு வந்து ஓமந்தூராரைச் சந்தித்தார். அப்போது ஓமந்தூரார் அவரிடம் பின்வருமாறு கூறினுர் :

"எனக்கு வைத்தியம் செய்துகொள்ளவும் இடையிடையே வந்து என் உடல்நிலையைச் சோதிக்கவும் உங்களை டாக்டராக நியமித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்".

ஆனுல் அதற்கு மூன்று நிபந்தனைகள் :

(1) நீங்கள் யாருக்காகவும் என்னிடம் எந்தவிதமான சிபார்சும் செய்யக்கூடாது;

(2) உங்களுக்காக என்னிடமிருந்து எந்தவிதமான பதவி உயர்வையோ சலுகையையோ எதிர்பார்க்கக்கூடாது;

(3) என்னுடன் அரசியல் விவகாரங்களைப்பற்றிப் பேசக்கூடாது.

இந்த மூன்று நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்ட பிறகுதான் வைத்தியம் தொடங்கிற்று.

## தொண்டருக்கு உதவி

விடுதலைப் போராட்டத்தின்போது அரசு ஊழியர் ஒருவர் தேசியக் கொடியை ஒரு காங்கிரஸ்காரரிடமிருந்து பறித்து, கொடியைக் கசக்கினுர். உடனே கடலூர் முத்துசாமி என்ற தொண்டர் அரசு ஊழியரை அடித்தார். அரசு ஊழியர் அவர் மீது வழக்குத் தொடர்ந்தார். 'உணர்ச்சி வசப்பட்டுத் தொண்டர் அவ்வாறு செய்ய நேர்ந்தது' என்று நீதிமன்றத்தில் ஓமந்தூரார் சாட்சியம் கூறினுர். அதன் பயனுக நீதிபதி வழக்கை அந்த அளவில் முடித்து வைத்தார்.

## உழைப்புக்குப் பாராட்டு

பாட்டன் அல்லது பரம்பரைச் சொத்தால் இல்லாமல் தாமே முயன்று முன்னேறியவர்களை ஓமந்தூரார் பாராட்டுவார். இவர் முதலமைச்சராக இருந்தபோது போலீசு நிர்வாகத் துறைக்கு அரசின் செயலராக இருந்தவர் திரு ஓ. புல்லா ரெட்டி ஐ. சி. எஸ். அவரைப்பற்றி ஏதாவது பேச்சுவந்தால், 'இளமையில்

பிட்டைக் கூழாக்கிக் குடித்துப் படித்து முன்னுக்கு வந்தவன்' என்பார். 'தன் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர்' என்று கோவை விஞ்ஞானி திரு ஜி. டி. நாயுடுவை ஓமந்தூரார் பலமுறை பாராட்டியிருக்கிறார்.

## சாதி இரண்டொழிய வேறில்லை

ஓமந்தூரார் சாதி மதங்களைப் பாரார். திண்டிவனத்துக்குச் சென்றால் சத்திரத்தில் தங்குவார் அல்லது ராஜம் செட்டியார் வீட்டில் தங்குவார். கடலூரில் சுதர்சனம் நாயுடு வீட்டில் தங்குவார். சிதம்பரத்தில் மார்க்கண்டன் பிள்ளை வீட்டில் தங்குவார். விழுப்புரத்தில் சத்திரத்தில் தங்குவார்.

இவர் இனத்தார் ஓரிருவர், கலப்பு மணம் செய்து கொண்டிருந்தனர். டாக்டர் முத்துலெட்சுமி அம்மையாரை வெள்ளப்பாக்கம் வி. சுந்தர ரெட்டியார் திருமணம் செய்து கொண்டிருந்தார். இவர்களிடமும் விழுப்புரம் ஆதிநாராயண தம்பதிகளிடமும் ஓமந்தூரார் பெருமதிப்பு வைத்திருந்தார்.

## சிகரெட்

ஓ. பி. ஆர். வெற்றிலை பாக்கு, சிகரெட்டு முதலிய எதையும் பயன்படுத்தியதில்லை. இவரிடத்தில் வைத்திருந்த மரியாதையின் காரணமாகச் சங்கிலித் தொடராக அடுத்தடுத்து சிகரெட்டு பிடிப்பவர்கள்கூட இவர் முன்னால் சிகரெட் புகைக்க அஞ்சுவர்.

ஒரு தடவை தலைமைச் செயலாளர் ராமுண்ணி மேனன் ஐ. சி. எஸ். தலைமைச் செயலகத்து வராண்டாவில் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார். முதலமைச்சர் அவ்வழியாக அவருடைய அலுவலத்துக்குச் செல்லப்போவதாகச் சேவகன் சொல்ல, உடனே அந்த சிகரெட்டை என்ன செய்வதென்று தெரியாமல் தம்முடைய கோட்பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டாராம். அவசரத்தில் தீயைஅணைக்க மறந்துவிட்டாராம். முதலமைச்சரைப் பார்த்து அவர் கையை உயர்த்தி வணக்கம் கூறிக்கொண்டிருந்தபோது பாக்கெட்டில் தீப்பிடித்து விட்டது. சேவகர்கள் ஓடிவந்து நெருப்பை அணைத்தனர்!

இந்தியப் படைத்தளபதியாக இருந்து ஓய்வுபெற்ற ஜெனரல் கரியப்பா ஓ. பி. ஆரைப் பார்க்க வந்தார். "உங்கள்

அனுமதியுடன் நான் சிகரெட் குடிக்கலாமா?'' என்று கேட்டாராம்.

"தாராளமாகப் பிடிக்கலாம். சிகரெட் புகைந்து விழும் சாம்பல் துண்டுகளைப் போடுவதற்குக்கூட என்னிடம் கிண்ணம் இல்லை. ஆனல் ஒரு கிளாஸ் டம்ளரில் பாதி அளவு தண்ணீர் நிரப்பிக் கொண்டுவரச் சொல்கிறேன். அதையே நீங்கள் 'ஆஷ்ட்ரே'யாக உபயோகித்துக் கொள்வதானல் இவ்விடம் சிகரெட் பிடிக்க ஒரு தடையும் இல்லை'' என்று ஓ. பி. ஆர். கூறினராம்.

## வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
## வாழிய பாரத மணித் திருநாடு!

1960-இல் வடலூரில் குருகுலத்தில் தமிழாசிரியர் நியமனத்திற்கு இருபதுபேர் மனுச் செய்திருந்தனர். அவர்களில் ஒருவர் புலவர் நடராசன். அவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்திருந்தார். அதையே ஒரு பெரிய தகுதியாகக் கருதி, பழுத்த அனுபவம்நிறைந்த பலரையும் புறக்கணித்து, புலவர் நடராசனுக்கு ஓமந்தூரார் நியமன ஆணை வழங்கினர்.

## கனவிலும் நாட்டு நினைப்பு

பகலில் நாம் எதைப்பற்றிச் சிந்திக்கிறேமோ அந்தச் சிந்தனையின் நினைவுகளே கனவிலும் தோன்றும். ஒரு தடவை, சிலநாட்கள் ஓமந்தூரார் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். அதற்குரிய காரணத்தைக் கேட்டபோது, நாட்டுக்குஏதோ பெரிய கேடு வரப்போவதாகத் தாம் கனவு கண்டு கவலைப்படுவதாகக் கூறினர்.

அடுத்த வாரத்தில் ஆந்திராவில் முல்கி விதிகளை அமுல் செய்வதால், பழைய நிஜாம் ஆட்சிப் பகுதியான தெலுங்கானவில் வாழும் மக்களுக்கும், சென்னை இராசதானியில் இருந்த ஆந்திர மாவட்டங்களில் வாழும்மக்களுக்கும் இடையே மோதல்ஏற்பட்டுக் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அரசாங்கச் சொத்துக்கள் சேதப்பட்டன.

ஆந்திரம் இரண்டு தனி மாநிலங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று கிளர்ச்சிஏற்பட்டு இரயில்களைநிறுத்திக் கொள்ளை

யடித்தனர். "நம் நாட்டில் இப்படி அராஜகம் நடைபெறுகிறதே" என்று வருந்தி ஓமந்தூரார் மூன்று நாட்கள் உறங்கவில்லை. உணவு உண்ணவும் இல்லை.

## இதோடு நிற்குமா?

சின்ன விஷயம் என்று ஓமந்தூரார் எதையும் நினைக்க மாட்டார்.

திருப்பதி தேவஸ்தான பங்களாவில் மலைமேல் தங்கியிருந்தார். முதலமைச்சர் ஓ. பி. ஆருடைய டிரைவர் அங்குள்ளவர்களிடம் கேட்டு, பங்களா பலாமரத்திலிருந்து ஒரு பெரிய பலாப்பழம் பெற்று, காரில் 'டிக்குக்குள்' வைத்துக்கொண்டார். கூவம் மாளிகைக்கு வந்து சேர்ந்து முதலமைச்சர் உள்ளே சென்ற பிறகு 'டிக்கை'த் திறந்தார் டிரைவர். பலாப்பழ வாசனை ஓமந்தூராரை எட்டிவிட்டது. என்ன? ஏது? என்று விசாரித்தார். 'கோயிலில் பலாப்பழம் திருடலாமா?' என்று திட்டு திட்டு என்று திட்டினார். பக்கத்திலுள்ளவர்கள் எவ்வளவோ சமாதானம் சொன்னார்கள். அதற்கு ஓமந்தூரார் சொன்ன பதில்:

"இப்ப பலாப்பழம்:
இதோடு நிக்குமா?
நாளைக்கு கோயில் நகையில் போய்த்தான் நிக்கும்:
உங்களுக்குப் புத்தி இல்லையா?"

## உடையும் தோற்றமும்

உயர்ந்த தோற்றம், ஒல்லியான வடிவம், சிறிது வழுக்கையான தலை, பரந்த நெற்றி, கருணைக் கண்கள், அடக்கமான வெண் மீசை, நீண்ட கைகள் — இத்தகைய நல்ல அடையாளங்களையெல்லாம் ஒருங்கே கூடியவராக ஓமந்தூரார் காட்சியளித்தார்.

வியன் நுதலில் வெண்ணீறும் மேனியிலே வெண் கதராடையும் இவருக்கு அணிசெய்தன. நீண்ட கதர் மேல்வேட்டி ஒன்றைத் தமக்கே உரிய தனி முறையில் இரண்டு நுனிகளும் நேர் சமமாக முன்புறத்தில் தொங்கும்படி இவர் அணிந்து வந்தார்.

ஓ. பி. ஆர். அறிந்தது – ஒரே மனைவி.

இவர் சேர்ந்திருந்தது – ஒரே கட்சி.

இவருடைய பொழுதுபோக்கு – படிப்பும் ஆராய்ச்சியும்.

இவருக்கு இருந்தது – தெய்வபக்தியும் தேசபக்தியும்.

இவரிடம் இல்லாதது – மண் ஆசை, பெண் ஆசை, பொன்னாசை.

இவர் விரும்பியது – உண்மை, நேர்மை, ஒழுக்கம், புள்ளி விவரங்கள்.

இவர் மிகவும் பயன்படுத்திய சொல் – ஆகையினாலே[1]

இவர் விரும்பாதது – ஆடம்பரம், பொய், புனைசுருட்டு

இவருக்குத் தெரியாதது – உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், மேடைகளில் அறிவிப்புக்களை அள்ளி வீசுவது, விளம்பரக்கலை.

இவர் பார்க்காதது – சினிமா

இவரோடு உடன்பிறந்தது – முன்கோபம்

இவருடைய ராசி எண் – 9[2]

இவரது தன்னலமின்மைக்குச் சான்று – தாம் முதலமைச்சராக இருந்தபோதுகூட தமது பண்ணைக்கோ, ஊருக்கோ, மின்சார வசதிக்காக எவ்வித ஏற்பாட்டையும் செய்யவில்லை.

இவர் தம் நீண்ட வாழ்க்கையில் வடலூர் வள்ளலார். மகாத்மா காந்தி, திரு நா. மகாலிங்கம் ஆகிய மூன்று பேரிடம் மட்டுமே குறைகாணவில்லை என்பர். காரணம், ஓமந்தூரார் சந்தேகப்பிறவி. யாரையும் நம்பமாட்டார்.

---

1. 'ஆகையினாலே' என்றவார்த்தையைப் பிரதமர்ஓமந்தூரார் அடிக்கடி பிரயோகித்தார். 'ஆகையினாலே' சட்டசபை உறுப்பினர்கள் தொடர்ந்து இவர் பதவியில் இருப்பதை விரும்பவில்லை. — கல்கி கிருஷ்ணமூர்த்தி.

2. சிறையில் இவர் "9-ஆம் நம்பர் கைதி"யாக இருந்தார். சென்னை காஸ்மோபாலிட்டன் கிளப்பில் ஒன்பதாம் எண் உள்ள அறையில் மட்டுமே தங்கி வந்தார்.

தம் நிறுவனங்களை நடத்தத் தகுதியானவர்கள் என்று சுவாமி சுத்தானந்த பாரதியார், திரு சென்னியப்ப முதலியார், சுவாமி சித்பவானந்தர், சுப்பிரமணியபுரம் மிராசுதார் திரு திருவடியா பிள்ளை,ஆத்தூர் திரு சாம்பசிவரெட்டியார், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், மதுரை கலைத்தந்தை திரு. கருமுத்து தியாகராசச்செட்டியார், கயப்பாக்கம் பெருநிலக்கிழார் முத்துலிங்க ரெட்டியார் ஆகியோரையும் இன்னும் பலரையும் ஓ. பி. ஆர். நினைத்தார். இறுதியாகத்தான் பல விளைவுகளையும் சீர்தூக்கிப்பார்த்து அவைகளை திரு. நா. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். அவருடைய முடிவு எத்துணைச் சிறந்தது என்பது பிற்காலத்து நிகழ்ச்சிகளால் தெளிவாகத் தெரிகிறது.

''பிரார்த்தனை செய்தால், ஓ. பி. ஆர்.
கண்களிலிருந்து கண்ணீர் வரும்''
— திரு ந. ம. ரா. சுப்பிரமணியன்.

# 7

# தியானமும் பிரார்த்தனையும்

## பக்தர்

இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் எத்தனையோ பேர் சிறந்த பக்தர்களாக இருந்திருக்கிறார்கள். இத்தகைய பக்தர்களில் எல்லாம் தலைசிறந்த பக்தராக ஓமந்தூரார் விளங்கினார்.

## தூய வாழ்க்கை

பெரும்பாலோர், இளமையில் எப்படி இருந்தபோதிலும், வயது முதிர முதிரச் சிவப்பழமாக மாறுகின்றனர். ஓமந்தூரார் சிறு வயதிலிருந்தே தியானமும் பிரார்த்தனையும் செய்து வந்தார். 1920-ஆம் ஆண்டிலேயே ஏராளமான ஊர்களில் தூயவாழ்க்கைப் பயிற்சிக்கழகம் என்று அமைத்து நல்லொழுக்கத்தை அனைவரிடமும் புகட்டினார்.

## பக்தி நூல்கள்

தென்ஆர்க்காடு மாவட்டக் கழகத்தின் கல்விக்குழுக் கூட்டங்களில் ஓமந்தூரார் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டார். தேசபக்தியையும் தெய்வபக்தியையும் பரப்பும் நூல்களைப் பாடமாக வைக்க ஏற்பாடு செய்தார். "நம்முடைய பிள்ளைகள் நல்ல நீதிகளை உணர்த்தும் பாடநூல்களைப் படிக்கவேண்டும். பிஞ்சிளம் பருவத்திலேயே பக்தி, சத்தியம், தர்மம் முதலியவற்றை உணர்த்தும் கதைகளையும் வீர வரலாறுகளையும் அவர்கள் படிக்கச் செய்யவேண்டும்" என்று அவர் அந்தக் காலத்திலேயே கூறினார்.

குழந்தைப் பருவத்திலிருந்து எல்லாக்கட்டங்களிலும் சமய உணர்ச்சியும் தேசிய உணர்ச்சியும் ஊட்டப்பட வேண்டும் என்று 'இண்டியன் நேஷனல் எஜுகேஷன்' என்ற கட்டுரையில் சுவாமி சித்பவானந்தா அவர்கள் எழுதியிருந்தார்கள். அக்கருத்தை ஓமந்தூரார் மிகவும் பாராட்டினார்.

## நெஞ்சுருகப் பாடுவார்

ஓமந்தூரார் நாள்தோறும் பிரார்த்தனை செய்வார். நெடு நேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். முதலமைச்சராக இருந்த காலத்திலும் இந்தப் பழக்கத்தைக் கைவிடவில்லை.


பிரார்த்தனையின்போது நெஞ்சுருகப் பாடுவார். ஏராளமான பக்திப் பாடல்களை மனப்பாடம் செய்திருந்தார். தமது மன அமைதிக்காகப் பாடுவதற்காகவும் பேச்சிலும் எழுத்திலும் மேற்கோள் காட்டுவதற்காகவும் நூற்றுக்கணக்கான பாடல்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிவைத்திருந்தார்.

தேவாரம், திருமந்திரம், அருட்பாப் பாடல்களை மனம் உருக இவர் பாடுவார். இவ்வாறு பாடும்போது, இவர் கண்களில் நீர் ஊறும். ஒருநாள் இவர் வாடிய நெஞ்சினராக இருந்ததைப் பார்த்து, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கவலைப் பட்டு, 'என்ன காரணமோ?' என்று வினவினார். "இன்று பிரார்த்தனையில் கண்ணீர்வரவில்லை. அதுவே காரணம்" என்று ஓமந்தூரார் கூறினார்.

## காந்தி கிராமத்தில்

பக்தியோடு யாராவது பாடினால் ஓமந்தூரார் மெய்மறந்து விடுவார்.



மேலே:

வடலூரில் ஓ. பி. ஆர். நிறுவிய சுத்த சன்மார்க்க நிலையத்தின் வாயில்.

கீழே:

சுத்த சன்மார்க்க நிலையத்தில் இருக்கும் ஞானசபையுடன் கூடிய தியான மண்டபம்.

காந்தி கிராமத்தில் திருமதி சௌந்திரம் இராமச்சந்திரன் அவர்கள் சீரிய முறையில் நடத்திவரும் கஸ்தூரிபா சேவிகா ஆசிரமத்திற்கு ஓமந்தூரார் 1948-இல் சென்றிருந்தார். பிரார்த்தனைக் கூட்டத்தில் "கல்லாற்கும் கற்றவர்க்கும்" என்ற பாட்டையும், "அருட்ஜோதி தெய்வமென்னை ஆண்டுகொண்ட தெய்வம்" என்ற பாட்டையும் அங்குள்ள பெண்கள் பாடினார்கள். அவற்றைக்கேட்டபோது, ஓமந்தூரார் மெய்மறந்து, மிகவும் கவனத்துடன் ரசித்துவிட்டு, திருமதி சௌந்திரம் இராமச்சந்திரனிடம் மெதுவான குரலில், "ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும்" என்ற பாட்டுத் தெரியுமா? என்றுகேட்டார். திருமதி சௌந்திரம்இராமச்சந்திரன் பாடிக்கொண்டிருந்த காலம் அது. பின்னர் அம்மையாரே அந்தப் பாடலைப் பாடினார்.

## திருக்குற்றாலத்தில்

ஒருசமயம் திருக்குற்றாலத்தில் கருமுத்து தியாகராசச் செட்டியாரின் விருந்தினராக திரு. சென்னியப்ப முதலியாரும் ஓ. பி. ஆரும் சென்றிருந்தனர். அப்போது அங்கு சி. ராம. இராமசாமிச் செட்டியார் என்பவரும் வந்திருந்தார்.

ஓமந்தூரார் தேவார திருவாசகப் பாக்களை இன்னிசையோடு ஓதக் கேட்பதில் மிக்க விருப்பமுடையவர்கள். திரு இராமசாமி செட்டியார் மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியாரின் மாணுக்கராக இருந்து பயிற்சிபெற்றவர் என்பதைத் தெரிந்து, அவர்களைத் திருவாசகம் ஓதும்படி

---

**திரு கருமுத்து தியாகராசச் செட்டியார்**(1898-1974) தமிழ் நாட்டின் மிகப் பெரிய தொழிலதிபர்களில் ஒருவர். மகாத்மா காந்தி இவருடைய விருந்தினராக மதுரைக்கு வந்திருந்தபோது, தம்முடைய விரிவான உடைகளைக் குறைத்துக் கொண்டார். தியாகராசச் செட்டியார், இந்தி எதிர்ப்பு இயக்கம் தொடங்கி காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார். மதுரையில் பல கல்லூரிகளை நிறுவினர். இவற்றை நிர்வகிக்கும் குழுவில் ஓமந்தூராரையும் அறங்காவலராக நியமித்திருந்தார்.

**திரு சி. ராம. இராமசாமிச் செட்டியார்** மகிபாலன்பட்டி ஊரினர். சைவ சித்தாந்தத்தில் நிரம்பிய புலமையுடையவர். திருவாசகத்திற்கு இவர் உரை எழுதவேண்டுமென்று பேராசிரியர் ஒளவை துரைசாமிபிள்ளை ஒருமுறை கூறினர். இவர் திரு சென்னியப்ப முதலியார்மூலம் ஓமந்தூராருக்கு அறிமுகமானர். 1963 இல் இராமசாமி செட்டியார் மணிவிழா ஓமந்தூரார் தலைமையில் நடைபெற்றது.

ஓமந்தூரார்கேட்டார். அதற்கிணங்க திரு இராமசாமி செட்டியார் தமக்கே உரிய பாணியில் இன்னிசையோடு "மெய்தான் அரும்பி விதிர்விதிர்க்க" உள்ளம் நெக்குநெக்கு உருகியுருகி, அன்புவசத்த ராய், உள்ளம் குளிரவும், உணர்ச்சி ஓங்கவும், அன்புநிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடல் நனையத் தேவகானமாரி பொழிந்து ஆனந்தப் பரவசத்தில் அங்கு குழுமியிருந்தவர்களை மூழ்கச் செய்தார். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத் திற்கும் உருகார்", "கருங்கல் மனமும் கரையும்", "ஊனினை உருகி உள்ளொளி பெருகித் தேனினைச் சொரியும்" எனத் திருவாசகத்தின் தன்மைகளாக எடுத்துக் கூறப்பெறும் வழக்குகளை மெய்ப்பித்தார்" என்று ஓ. பி. ஆர். கூறினார்.[1]

## திருவொற்றியூரில்

அருட்கவி சேதுராமன் சிறந்த முறையில் பாடுவார் என்பதைக் கேள்விப்பட்ட ஓமந்தூரார், திருநெல்வேலி தென் இந்தியசைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் தலைவர் தாமரைச் செல்வர் திரு வ. சுப்பையா பிள்ளையைப் போய்ப் பார்த்தார்கள். அருட்கவி சேதுராமனின் பாடல்களைக் கேட்க விரும்புவதாக ஓமந்தூரார் கூறினார்கள். திருவொற்றியூர்க் கோயிலில் அவர்கள் பாட ஏற்பாடு செய்யலாமா? என்று கனிவுடன் கேட்டார்கள்.

திரு சுப்பையாபிள்ளை, ஓமந்தூராரின் விருப்பத்தை மகிழ்ச்சி யுடன் நிறைவேற்றினார்கள்.

அதன் பின்னர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சில கோயில்களுக்கு அருட்கவி சேதுராமனை அழைத்துச் சென்று, ஓமந்தூரார் தம் மனத்தைப் பறிகொடுத்தார்கள்.

வள்ளலார் சென்னையில் இருந்த காலத்தை, சுவாமிகளின் 'ஒற்றியூர் வழிபாட்டுக்காலம்' எனலாம். ஒற்றியூர்ப் பதிகங் களாக 19 அகப்பொருட் பதிகங்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. வேலாயுத முதலியார், மூன்றும் திருமுறையாக – தனித்திருமுறை

---

1. *தகவல்: திரு சென்னியப்ப முதலியார்.*

யாக – ஒற்றியூர்ப் பதிகங்களைக் குறித்துள்ளார். 23 ஆண்டுக்காலம் ஒற்றியூரில் வள்ளலார் வழிபட்ட வண்ணமாக இருந்தார். இக் காரணங்களாலேயே ஓ. பி. ஆர். அருட்கவிசேதுராமனை ஒற்றியூரில் பாடச் செய்தார்போலும்.

## கல்லுப்பட்டியில்

1945-இல் கல்லுப்பட்டியில் நிர்மாண ஊழியர்களுக்காக ஒரு வாரம் முகாம் நடந்தது. ஊழியர்களுக்குச் சமயப் பின்னணி இருக்கவேண்டும். அவர்கள் வெறும் அரசியல்வாதிகளாக இருந்து விடக்கூடாது. சமய உணர்ச்சி இன்றியமையாதது என்று ஓ. பி. ஆர். அறிவுரை கூறினார். சித்பவானந்த சுவாமிகள் போன்றவர்களையும் முகாமுக்கு அழைக்க ஓமந்தூரார் ஏற்பாடு செய்தார்.

## பாடுபவர்களுக்குப் பாராட்டு

திருவருட்பாப் பாடல்களை யாராவது இசையோடு பாடினால், ஓமந்தூரார் அவர்களைப் பாராட்டுவதோடு பணமும் கொடுப்பார்.

## பொதுமக்களுக்கு வேண்டுகோள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய உரையில் ஓமந்தூரார் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக பக்திமான்களான நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் பாடிய பாடல்கள் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் நனைந்து உருகிப் பாடியவை அல்லவா? அவர்கள் எந்த மொழியில் எந்தக் கருத்தில் எந்தக் காலத்தில் எந்த லட்சியத்தில் பாடினார்கள்? அந்த லட்சியங்கள் இன்று தமிழ்நாட்டிலே பரப்பப்படுகின்றனவா? அவை சரிவர நடைபெறுததற்கு ஒரு பக்கம் பொதுஜனங்களின் அலட்சிய புத்தியும் இன்னொரு பக்கம் அரசாங்கத்தின் சிரத்தைக் குறைவும் காரணமல்லவா என்பதை யோசிக்கவேண்டும். இவைகளெல்லாம் சரிவர நடைபெறவேண்டுமென்றால் பொதுஜனங்கள் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு அதைச் சரிவர நடத்துவதற்குத் தகுந்த முறையிலே சீர்திருத்த ஏற்பாடு செய்ய வேண்டும்"

## 'ஏரி நிறைந்தனைய'

ஏரிகுளங்களைச் செப்பனிடுவோம் என்ற தலைப்பில் ஓமந்தூரார் "தினசரி" என்ற நாளிதழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையை அரசாங்க வெளியீடாக ஒரு சிறு நூலாக, பொருளாதார ஆலோசகர் டாக்டர் நடராசன் வெளியிட்டார். அட்டையில் ஒரு பக்கம் காலியாக இருப்பதைப் பார்த்த ரெட்டியார் பின்வரும் திருநாவுக்கரசர் தேவாரத்தை அதில் அச்சிடச் சொன்னார்.

"மூரி முழங் கொலி நீர் ஆனான் கண்டாய்
முழுத் தழல் போல் மேனி முதல்வன் கண்டாய்
**ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்**
இன்னடி யார்க்கு இன்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறை எம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக் காட்டுறையும் மணாளன் தானே."

## கடவுளுக்குமட்டுமே

சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. பி. வி. இராஜமன்னார், நூலாசிரியரிடம் கூறியது குறிப்பிடத் தக்கது.

"ஓமந்தூரார் கடவுளுக்கு அஞ்சுவார். கடவுளுக்கு மட்டுமே அஞ்சுவார்."

மற்றவர்களும் அவ்வாறு இருக்கவேண்டுமென்று ஓமந்தூரார் விரும்பினார்.

## மாணவர்களுக்கு அறிவுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா உரையில் ஓமந்தூரார் மாணவர்களுக்குப் பின்வருமாறு அறிவுரை கூறினார்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்"

என்ற தத்துவத்தை நீங்கள் சரிவர அடையவேண்டும். மனிதன் என்றால் மனத்தை உடையவன் என்று பொருள்;

இந்த மனம் ஒரு வரையறைக்கு உட்பட்டிருப்பதில்லை. அது எப்பொழுதும் கட்டுப்படாமல் ஓடிக்கொண்டே இருக்கும். அதை, தன்வயப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு டைனமோ போன்றவர்கள். உங்கள் சக்தியை விரயம் செய்யக்கூடாது.

ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்மையுள்ள வருங்கால சமுதாயத்தை உருவாக்க மகாத்மா காந்தி அவர்களின் கனவு நனவாக்க நீங்கள் பிரயத்தனம் செய்யவேண்டும்.''

## முருக பக்தர்

ஓமந்தூரார் முருக பக்தராக இருந்தார். அவருடைய ஊருக்கு அருகே மயிலம் முருகன் கோயில் அமைந்திருப்பது இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

தம் மனைவி இறந்தபின்னர் ஓமந்தூரில் இவர் அமைத்துக் கொண்ட ஆசிரமத்திற்கு, ''ஸ்கந்த ஆஸ்ரமம்'' என்று பெயரிட்டுக் கொண்டார்.

தாம் உயிர் நீப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர், கண் பார்வை இல்லாத நிலையிலும் ஆறுபடை வீடுகளுக்கும் செல்ல ஓமந்தூரார் விரும்பினர். உடனே திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தன்னுடைய காரை வழங்கி, தக்க துணைகளுடன் தல யாத்திரை ஏற்பாடுகளைச் செய்தார்கள். இதனால் ஓ. பி. ஆருக்கு மனஅமைதி ஏற்பட்டது.

ஓ. பி. ஆர். எப்பொழுதும் காலைமாலை இருவேளையும் கந்தசஷ்டிக் கவசத்தை ஆறுமுறை பாராயணம் செய்துவந்தார்.[1]

## அருட்பா பயிற்சி

வடலூர் வள்ளலார் குருகுலத்தில் பயிலும் சிறுவர்களுக்கும், அருட்பாவை நன்முறையில் கற்றுக் கொடுக்க ஓமந்தூரார் தனி ஏற்பாடு செய்திருந்தார். அதுபோலவே திரு. மகாலிங்கமும்

1. தகவல்: விழுப்புரம் திரு ஜி. ஆதிநாராயணை.

செய்துவருகிறார். அதற்காக வயலூர் சுவாமி என்ற திரு மீனாட்சிசுந்தரத்தை ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

## உண்ணு நோன்பு

கார்த்திகை, முழுநிலா நாட்களில் ஓமந்தூரார் உண்ணு நோன்பு மேற்கொண்டிருந்தார்.

## பேசா நோன்பு

திங்கட்கிழமை ஓமந்தூராரின் மௌன நாள். முதல் அமைச்சராக இருந்தபோது இவர் திங்கட்கிழமைகளில் தலைமைச் செயலகத்திற்குச் செல்லவில்லை.

மூத்த ஐ. சி. எஸ். அதிகாரிகளின் வற்புறுத்தலுக்கு இணங்க, மிக அவசரமான பிரச்சினைகளைத் திங்கட்கிழமைகளில் தாம் தங்கியிருந்த கூவம் மாளிகையில் விவாதிக்க ஓ. பி. ஆர். ஒப்புக்கொண்டார்.

## வைணவம்

ஓ. பி. ஆரின் குடும்பம் தென்கலை வைணவக்குடும்பம். ஆயினும் இவர் சைவ சமயத்திலேயே அதிகமான ஈடுபாடு கொண்டு நெற்றியில் திருநீறு அணிந்து வந்தார்.

வைணவத்தில் இவருக்கு வெறுப்புக் கிடையாது. பண்ணுருட்டியில் நடந்த வைணவ மாநாட்டில் கலந்துகொண்டு இவர் ரூ. 250/– நன்கொடை கொடுத்தார். அந்த மாநாட்டில் இவர் பின்வருமாறு கூறினார்:

> "மாநாடு நடத்திச் சாப்பாடு போட்டு, பெருமைப்பட்டால் போதுமா? இதுதானு சமயம்? உருப்படியாக என்ன செய்கிறீர்கள்? சைவம், வைணவம் என்ற சமயபேதம் கூடாது. உருவ வழிபாடு முக்கியமானது. அதைக் கை விடக்கூடாது. ஒழுக்கம், நாணயம், நேர்மை, உழைப்பு ஆகியவை இருந்தால்தான் சமயம் வளரும். அவை இல்லாமல் திருநீறும் திருமண்ணும் பூசினுல் பயனில்லை."

ஓமந்தூரார் இடையிடையே திருப்பதிக்குப் போய் ஏழுமலையானைக் கும்பிடுவார். 1960 இல் ஓமந்தூரார் தம் நண்பர்

திரு. சென்னியப்ப முதலியாரை உடன் அழைத்துக்கொண்டு அங்கே சென்றார்.

ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்தபோது, திருமலையில் ஒரு விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு ஒப்புதல் அளித்திருந்தார். அதிலேயே இவர்கள் இருவரும் தங்குவதற்கு, திருமலை–திருப்பதி தேவஸ்தானத்தின் தலைவர் திரு. அண்ணாராவ் ஏற்பாடு செய்திருந் தார். நான்கு நாட்கள் மலைமீதே இருந்து ஓமந்தூரார் வேங்கடவனை வழிபட்டார். புறப்படும்போது இவர்களிடம் கோயில் அலுவலர்கள் பணம் கேட்கவில்லை.

ஓமந்தூராருக்குக் கோபம் வந்துவிட்டது.

> "யார் யாரோ திருப்பதி வேங்கடாசலபதிக்குப் பிரார்த்தனை செய்து நேர்த்திக் கடனைப் பணம் கொடுக்கிறார்கள். அந்தத் தர்மத்தில் நான் வந்து சாப்பிட்டுப் போவதா? சரி, நாலு நாட்கள் நாங்கள் இருந்திருக்கிறோம். வாடகை ரூ. ...... நாட்கள் மொத்தம் ...... வேளை ...... சாப்பாடு பலகாரத்திற்கு ரூ. ...... இதோ பிடி ரூ. ...... ரசீது கொண்டுவந்து கொடுத்த பிறகு நான் அறையைக் காலி செய்கிறேன்"

என்று சொல்லி அவ்வாறே பணத்தைச் செலுத்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

## வடலூரில் தியான மண்டபம்

முதலமைச்சராக இருந்த நாட்களிலும் கூட, நாள் தவறாமல் நெடுநேரம் ஓமந்தூரார் தியானத்தில் ஈடுபட்டார். எனவே, இளஞ்சிறுவர்கள் பயிலும் இடமாகவும் அருட்பா அன்பர்கள் திரளாக வரும் தலமாகவும் உள்ள வடலூரில் ஒரு தியான மண்டபம் தேவை என்பதை ஓமந்தூரார் உணர்ந்தார். தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் அன்பர்கள் வழங்கிய தொகையைக் கொண்டும் தம் சொந்தப் பணத்தைக் கொண்டும்

சுத்த சன்மார்க்க நிலேயத்தில் ஓமந்தூரார் ஒரு தியான மண்டபத்தை 1958 அளவில் கட்டி முடித்தார்கள். வள்ளலார் சித்தி நூற்றுண்டில், திரு மகாலிங்கம் ரூ. 50,000/- செலவில் இந்த மண்டபத்தைப் புதுப்பித்து 30—1—1974 இல் திறப்பு விழாவை நடத்திஞர்கள். திரு ஓ. பி. ஆரால் கட்டப்பெற்று, திரு. மகாலிங்கத்தால் புதுப்பிக்கப்பெற்றுள்ள தியான மண்டபம் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காட்சியாக உள்ளது. இந்த மண்டபத்தின் அமைப்பைப் போல வேறு எங்கும் காண இயலாது. வடலூருக்குச் செல்லும் ஒவ்வொருவரும் காணவேண்டிய இடங்களில் இதுவும் ஒன்று. இங்கு 1979 முதல் ஜோதி வழிபாடு ஒவ்வொரு நாளும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

"நான் தமிழில்தான் பேசுகிறேன்
என்ருல் தமிழில் மட்டுமே பேச முடியும்
நான் பள்ளிக்கூடத்தில் படித்தது தமிழ்"

# 8

# தமிழ்ப் பற்று

"சர் கே. வி. ரெட்டி, சென்னை இராசதானியின் ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்டு, கோயம்புத்தூருக்கு வந்தபோது அவருக்கு அங்கு நாயக்கமார் (கம்மவர் நாயுடு இனத்தார்) விருந்துவைத்தார்கள். அவர் தூய தெலுங்கில் இலக்கண இலக்கியப் புலமையுடன் பதில் சொன்னர். எங்கள் நாயக்கமார் எல்லோரும் "ஏமண்டி ரெட்டிகாரு எந்த பாஷையில் செப்புருரு" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள்."

– சென்னை நகரம் தமிழருக்கே என்ற கிளர்ச்சியின்
போது ஆர். கே. சண்முகம் செட்டியார்.

## வேங்கடத்தில் ஓமந்தூரார்

ஓமந்தூரார் ஒரு தமிழர். நன்ருகத் தமிழ் படித்த தமிழர் பிற மொழிகளின்மீது வெறுப்பு இல்லாத தமிழர். ஆனல்

சந்தர்ப்பம் நேரும்போது அதாவது தேவையான நேரத்தில் தாம் யார் என்பதைக் காட்டிக் கொள்ளத் தயங்காதவர்.

இவர் முதலமைச்சராக இருந்தபோது திருப்பதிக்குச் சென்று 'அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்ப'னை வழிபட்ட பின்னர் அந்தத் திருமலையிலிருந்து அடிவாரத்திலுள்ள திருப்பதி நகருக்கு வந்து ஓலைச்சுவடி நிலையத்தைப் பார்வையிட்டார். அப்போது அங்கு கூடியிருந்தவர்கள் ஓமந்தூரார் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தவேண்டும் என்று விரும்பினர். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இவர் இசைந்தார். ''தெலுங்கிலேயே பேசுங்கள்'' என்று கூட்டத்தார் கூச்சல் போட்டனர். திருப்பதி தெலுங்கர்களுக்கு உரியதா? தமிழர்களுக்கு உரியதா? என்று அப்போது கிளர்ச்சி நடந்து கொண்டிருந்தது.

ஓமந்தூரார் அந்தக் கூட்டத்தில் பின்வருமாறு பேசினர்:

நான் தமிழில்தான் பேசுகிறேன். என்னுல் தமிழில் மட்டுமே பேசமுடியும். நான் பள்ளிக்கூடத்தில் படித்தது தமிழ்.

ஏதோ ஒருசில தெலுங்குச் சொற்கள் எனக்குத் தெரியும் என்பதற்காக நான் தெலுங்கன் என்று சொல்லக் கூடாது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் எல்லாம் ஆங்கிலேயர்களா ?

என் தாய்மொழி தெலுங்கு என்று சொல்லுவதும் தவறு. என் தாயாருக்கு 300 அல்லது 400 கொச்சையான தெலுங்குச் சொற்கள் பேசத் தெரியும். அவளுக்குத் தெலுங்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது. அவளுடைய மொழியும் தமிழ்தான். ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை அவள் பேசினுலும் அதிலே சில தெலுங்கு வார்த்தைகள் நிரவி இருக்கும் என்பது உண்மைதான். இந்தக் காலத்தில் பேசும்போது, எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கூட நூற்றுக்கணக்கில் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கவில்லையா ?

நான் தமிழன்; என் தாய்மொழி தமிழ். ஆகையினுலே நான் தமிழன் என்பதையும் என் தாய்மொழி தமிழ்தான் என்பதையும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.''

## தமிழ் உணர்ச்சி

ஓமந்தூராருக்கு, தேவையான அளவு ஆங்கிலம் தெரியும். இவர் சட்டசபை உறுப்பினர்களுக்கும் ஏனையோருக்கும் நினைத்த நேரமெல்லாம் பேட்டி கொடுக்கவில்லை. இதற்குக் காரணம், இவருக்கு ஆங்கிலம் தெரியாததே என்ற ஒரு பேச்சு சட்டசபை வட்டாரங்களில் பரவிற்று.

உறுப்பினர்கள் நாணும்படி சட்டசபையில் ஒரு நாள் மிக்க உணர்ச்சி ததும்ப ஒரு சொற்பொழிவாற்றித் தம் குறிக்கோளை விளக்கினார்.

> "நான் தமிழில்தான் பேசுவேன். நான் ஆங்கிலத்தில் வல்லவன் அல்லன் எனத் தெரிந்திருந்தும், என்னை ஏன் தலைவராகத் தேர்ந்தெடுத்தீர்கள்? அல்லும் பகலும் நாட்டிற்கேற்ற திட்டங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றபடியால் உறுப்பினர்களுக்கு நினைத்த நேரமெல்லாம் 'பேட்டி' அளிக்க இயலாதவனாக இருக்கிறேன்......"

என்னும் கருத்துப்பட இவர் திட்டவட்டமாகப் பேசினார்.

## தமிழ் ஆய்ந்த தமிழன்

"நேர்மை என்னும் சாட்டையைக் கொண்டு நாட்டை ஓட்டும் ஆற்றல் திரு. ரெட்டியார் அவர்களுக்கு உண்டு என்றே கருதுகிறோம். ஏனெனில் நேர்மை அவரது உடன்பிறப்பு. இத் தகுதி ஒன்றே அவரைக் கட்சித் தலைவராக்கி முதலமைச்சராக வும் ஆக்கியிருக்கிறது என்றும் நம்பிக்கையுள்ளவர்கள் வாயிலாகக் கேள்விப்படுகிறோம்.

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில் முதலமைச்ச ராய் வருதல் வேண்டும் என்ற பாரதிதாசன் எண்ணம் நிறைவேறி வருகிறது. இது தமிழ் நாட்டில் தமிழ்மக்கள் தமிழ்மொழியில் தமிழரசு செய்யத் தொடங்குவதன் அறிகுறியாகும்."

இவ்வாறு முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 'தமிழர் நாடு' என்ற தம் இதழில் 1947 ஏப்ரலில் தலையங்கம் எழுதினார்கள்.

## ஆட்சிமொழி

தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவதற்கான முதல் நடவடிக்கையை எடுத்தவர் ஓமந்தூராரே. 1948 இல் திருச்சி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சி அலுவலகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்க இவர் ஆணையிட்டார்.

## சொற்பொழிவுகள்

எந்தக் கூட்டத்தில் இவர் பேசினாலும் "தலைவர் அவர்களே, பெரியோர்களே தாய்மார்களே" என்று அழகிய செந்தமிழிலே தான் இவரது சொற்பொழிவு தொடங்கும். இவர் எடுத்துக் கொண்ட பொருள்மீது தமது கருத்தை வெளிப்படையாகவே பேசிவிடுவது இவரது வழக்கம்.

## தமிழ்வளர்ச்சி: ஓமந்தூரார் கருத்து

ஓமந்தூரார் ஆட்சியில் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஏற்பட்டிருந்தது. அதன் சார்பாக, அரசின் உதவியுடன் 1947 இல் மதுரையிலும், 1948 இல் திருவாரூரிலும் தமிழ் விழாக்கள் நடைபெற்றன. இந்த இரண்டு விழாக்களையும் ஓமந்தூராரே முன்னின்று நடத்தினார்.

திருவாரூர் தமிழ்விழாவில் ஓமந்தூரார் ஆற்றிய தலைமையுரை கிடைக்கவில்லை. அதில் ஒருசில பகுதிகள் மட்டும் "செந்தமிழ்ச் செல்வி" யில் வெளிவந்தன. அப்பகுதிகள் வருமாறு:

> "கன்னித் தமிழ்—என்றும் இளமை மாறாதத் தமிழ் எல்லாச் சொற்களும் வழக்கத்திலிருந்து மக்களுடைய உணர்ச்சியில் பொருள் தெரிவிக்க தமிழ் தற்போது தள்ளாடித் தத்தித் தத்தி நடக்கின்ற—பொருள் விளங்காத—உறுப்புக்களெல்லாம் தளர்ந்துபோன முது தமிழாகக் காட்சியளிக்கக் காட்சி தரப் பார்க்கிறோம். கருத்தென்ன? சங்கத் தமிழ்—சற்றேறக்குறையத் தனித் தமிழ் சங்கைக்கிடமாகவே உள்ளது.
>
> நாமே அதைப் படிக்கிறபோது இது தமிழா? இது தமிழ்ப் பாட்டா? இவ்வளவு கரடுமுரடாயிருக்கிறதே! என நினைக்கிறோம், சொல்லுகிறோம், ஏன்? பழைய நல்ல தமிழ்ச் சொற்களையெல்லாம் மறந்து வேறுவேறு சொற்

களைக் குறிக்கும் வேறு மொழிச் சொற்களை மட்டும் தம் மொழியில் சேர்த்துக் கொள்வர். அம்முறையில் விரிந்தவைதாம் ஆங்கிலம் போன்ற பாஷைகள், நாமோ கண்டது கற்கப் பண்டிதனாவான் என்ற சாமானிய வாசகத்தை நம்பி நம்மை நாமே மறந்து மாறினேம். நம் மொழியையும் மாற்றினேம்.

தமிழ் இனியமொழி. அதன் பெயருக்கே அது தானே பொருள். நம் மொழி, தனக்கெனச் சிறப்புகளை யுடையது. ஒரு மொழிக்குப் பழமை இலக்கண இலக்கிய அமைப்பு உண்மை நூற்பெருக்கம், மனித வாழ்க்கைச்குத் தேவைகளைத் தருதல், நுண்ணிய கருத்துக்களை கொண்டிருத்தல், எப்பருவத்தினருக்கும் ஏற்ற நூலுடைமை, கருத்துக்களையெல்லாம் வெளிப்படுத்தும் சொற்களையுடைமை, மனிதப் பண்பை வளர்த்துத் தெய்வப் பண்பைப் புகுத்தி உயர்த்தும் வளமுடைமை முதலியவைகள் சிறப்புத் தருவன. இம்முறையில் நம் மொழியினை சிறந்ததென்றால் அது மிகையாகாது.

பழங்காலத்துப் பெருநாரை, முதுகுருகு, வியாழமாலை, களரியாவிரை என்ற நூல்கள் கிடைக்கவில்லை. கிடைத்திருக்கும் சங்க நூல்களும் மக்களுக்குப் புரியவில்லை. ஏன்? நல்ல கருத்தமைந்த சிறு தமிழ்ச் சொற்களையெல்லாம் மறந்துவிட்டோம்.

ஔவையும் இளவெயினியும், நச்செள்ளையாரும், காரைக்காலம்மையாரும், மங்கையர்க்கரசியும், ஆண்டாளும், திலகவதியுமாக நம் நாட்டுப் பெண்களை ஏன் விளங்க வைக்ககூடாது?

தமிழ் வளர வேண்டுமானால் கடமையுணர்ச்சி, கடவுள் பக்தி, ஒழுக்கம், நடை இவையெல்லாம் வளர வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான தமிழ் வளர்ச்சி ஏற்படும்."

## கலைக்களஞ்சியம்

ஓமந்தூரார் ஆட்சியில், தமிழில் கலைக்களஞ்சியம் வெளியிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமும் அப்போது தான் முதல் முறையாக உருவாயிற்று.

## ஆஸ்தானக் கவிஞர்

சிறந்த தேசபக்தரும் தமிழ் வார இதழ்களின் ஆசிரியருமான கல்கி கிருஷ்ணமூர்த்தி, ஓமந்தூராரின் சிறைத் தோழர் ஆவார். 1930 முதல் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு நிலவியது.

ஓமந்தூரார் அமைச்சரவை அமைக்கும்போது திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தியை தம் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள விரும்பினார். இந்த விருப்பத்தை கல்கிக்கும் தெரிவித்து 24 மணி நேரத்திற்குள் அவருடைய முடிவை வேண்டினார்.

ரசிகமணி திரு. டி. கே. சி.–யைக் கல்கி சந்தித்து அவர்களுடைய அறிவுரையை நாடினார். "அமைச்சர் பதவி இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும். நீங்கள் இப்போது வகிக்கும் வார இதழ் ஆசிரியர் பதவி உங்கள் வாழ்நாள் முழுவதற்கும் இருக்கும்" என்று டி. கே. சி. சொன்னார்.

அமைச்சர் பதவியைத் தாம் விரும்பவில்லை என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி, ஓமந்தூராரிடம் தெரிவித்துவிட்டார்.

இதைக் கேட்ட ஓமந்தூரார், பின்வருமாறு திரு. கல்கியிடம் கூறினாராம்:

> "எனக்குப் பல ஆண்டுகளாகத் தங்களிடம் பெருமதிப்பு உண்டு. மந்திரி வேலை கொடு என்று பலர் என்னைத் தொந்தரவு செய்கிறார்கள். சிலபேர் மந்திரி உத்தியோகம் கிடைக்காவிட்டால் கடலிலே விழுந்துவிடுவார்கள்போல் தெரிகிறது. நீங்கள் என்ன என்றால் நானாகக் கூப்பிட்டுக் கொடுக்கிற மந்திரிப் பதவியை வேண்டாம் என்று மறுத்துவிட்டீர்கள். ஆகையினாலே, உங்கள் மீது எனக்கு இருக்கிற மதிப்பு இன்னும் அதிகமாகிறது.
>
> தமிழ் வளர்ச்சிக்காக, சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று உங்கள் யோசனைகளைத் எதிர்பார்க்கிறேன். மந்திரியாக இல்லாவிட்டாலும் யோசனைகளைத் தாராளமாக நீங்கள் என்னிடம் வந்து சொல்லலாம்"

இதைத் தொடர்ந்து தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாள ராகத் திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டார்

ஒருநாள் திரு. கல்கியும், திரு. சின்ன அண்ணுமலையும் ஓமந்தூராரைச் சந்தித்து அரசாங்கத்தில் "ஆஸ்தானக் கவிஞர்" என்ற ஒரு பதவியை ஏற்படுத்தவேண்டும் என்று சொன்ஞர்கள். அந்தக் கருத்தினை ஓமந்தூரார் உடனே ஒப்புக்கொண்டு, யாரை நியமிக்கலாம் என்று அவர்களைக் கேட்டார். தேசியக் கவிஞரான நாமக்கல் இராமலிங்கம் அவர்களை, இப்பதவிக்கு நியமிப்பது என்று அந்த மூவரும் சந்தித்தபோது முடிவு செய்யப்பட்டது.

அன்றைய சென்னை அரசாங்கம் பல மொழிகள் பேசும் மக்கள் வாழும் பகுதிகளைக் கொண்டிருந்தது. ஆகையால், சட்ட ஆலோசகர்களின் கருத்துக்கு இணங்க, அந்த மொழிகளுக்கும் ஆஸ்தான கவிஞர்களை ஓமந்தூரார் நியமித்தார்.

மலரோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவதுபோல, அன்று தமிழோடு சேர்ந்திருந்த காரணத்தால், ஏனைய மொழிகளும் ஏற்றம்பெற்றன.

இன்று தமிழ்நாட்டில் மீண்டும் ஆஸ்தானக் கவிஞர் பதவி ஏற்படுத்தப்பட்டு, கவியரசு கண்ணதாசன் இதை வகிக்கிருர். இந்த நிலைமைக்கு வழிகாட்டியவர் ஓமந்தூராரே ஆவார்.

முதலமைச்சரும் கல்வியமைச்சரும்

ஓமந்தூராரின் அமைச்சரவையில் திரு தி.சு. அவிஞசிலிங்கம் கல்வி அமைச்சராக இருந்தார். தமிழ்மொழியின் முன்னேற்றத் திற்காகவும், ஏற்றத்திற்காகவும் திரு. அவிஞசிலிங்கம் அந்தக் காலத்தில் தொடங்கிவைத்த திட்டங்கள் ஏராளமானவை. ஓமந்தூரார் முழு அளவில் அந்தத் திட்டங்களுக்கு ஆதரவு கொடுத்ததால்தான் அவை நிறைவேற்றப்பட்டன.

ஓமந்தூரார் தமக்கு விருப்பமில்லாத எதையும் எந்த அமைச்சரையும் செய்யவிட மாட்டார். உடனே தலையிடவும் தயங்கமாட்டார்.

ஓர் அமைச்சர் திட்டத்தைத் தீட்டலாம். ஆனுல் அரசு நிதி வழங்கினுல்தான் அத்திட்டத்தை நிறைவேற்ற முடியும். அந்தக் காலத்தில் நிதிஅமைச்சர் என்ற ஒருவர் இருந்தபோதிலும்,

நிதியை ஒதுக்கீடு செய்வதில் முதலமைச்சருக்கு அளவுகடந்த, சொல்லப்போனால் யதேச்சாதிகாரமான உரிமைகள் இருந்தன என்கிறார், அன்றைய நிதி அமைச்சர் திரு. கோபால் ரெட்டி.[1]

## தமிழ்க் கல்லூரிக்கு நன்கொடை

தனிப்பட்ட முறையிலும் ஓமந்தூரார் தமிழ் வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தார்.

முதலமைச்சராக ஆவதற்கு முன்னரே, ஓ. பி. ஆர். மயிலத்தில் 1938 முதல் நடைபெற்றுவரும் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரிக்கு ரூ. 2,000/– நன்கொடை வழங்கினார் என்கிறார் இவருடைய உறவினர் மணம்தவிர்த்தபுத்தூர் திரு. அசுவத்தராம ரெட்டியார்.

வடலூரில் தங்கிய பின்னர், தமிழ் இலக்கியப் புலமைமிக்க புலவர் உலகஊழியனாரை, ஓமந்தூரார் தம்முடன் தங்கவைத்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## திருக்கோயில்களில் தமிழ் மணம்

திருக்கோயில்களில் தமிழ் மணம் பரப்ப 1948 நவம்பர் 23-இல் ஓமந்தூரார் ஆட்சியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினர் ஆணையிட்டனர்.

திருக்கோயில்களில் இறைவன், இறைவியர், கோயில் பெயர்கள் ஆகியவை மீண்டும் தமிழ்ப் பெயராக வழங்கவேண்டும். மறந்துபோன அத் தமிழ்ப் பெயர்களை வழக்காற்றில் கொண்டுவர உதவியாக, கோயில்களின் முன் வாயிலில் அத்தமிழ்ப் பெயர்கள் பெரிதாக எழுதப்பெறவேண்டும். அறிக்கைப் பலகைகளிலும் அந்தப் பெயர்களே குறிப்பிடப் பெறவேண்டும்.

கடிதத் தலைப்புக்கள், கணக்குப் புத்தகங்கள், திருவிழா அறிக்கைகள் ஆகியவற்றில் இடம்பெறச் செய்தும் தமிழ்ப் பெயர்களைப் பரப்ப வேண்டுமென்று அந்த அறிக்கையில் கண்டிருந்தது.

---

1. The Prime Minister of the Composite Madras Province had vast financial powers. — Dr. B. Gopala Reddy [Finance Minister, Madras 1947 to 1952] in an interview to the author.

## இசை மரபு:

ஓமந்தூரார்க்கு நம் நாட்டின் தெய்வீக மயமான இசையில் மிக்க ஆர்வம் இருந்தது. இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும் என்று அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா உரையிலும், சென்னை தமிழிசைச் சங்கத்தில் நிகழ்த்திய உரையிலும் வற்புறுத்தியிருக்கிறார் அருளாளர்களின் பாடல்களை, அவர்கள் பாடிய அதே இசை மரபுடன் பாடுவதன் மூலமாகத்தான், இசைக்கலையை வரலாற்று முறையுடன் வளர்க்க இயலும். இதற்காக திரு. மகாலிங்கம் தலைமையில் இயங்கி வரும் இராமலிங்கர் பணிமன்றம், புராதன இசைமரபு வழிவந்த இசைக்கலைஞர்களை அழைத்து வந்து 1978 டிசம்பரில் முதல் முயற்சியாக சென்னையில் இசைக்கலை விழா ஒன்றை நடத்தியிருக்கிறது.

## பாரதி விழா

ஓமந்தூரார் ஆட்சியில்தான் முதல் தடவையாக, அரசின் ஆதரவுடன் பாரதிவிழா சென்னையிலும் எட்டையபுரத்திலும் கொண்டாடப்பட்டது.

## கம்பன் திருநாள்

கம்பன் திருநாளில் கலந்துகொண்ட முதலாவது முதலமைச்சர் ஓமந்தூராரே ஆவார். இராஜாஜி மண்டபத்தில் கம்பர் மாநாடு நடத்த ஓமந்தூரார் இசைவு வழங்கினார். திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தி தலைவராகவும் முதுபெரும் எழுத்தாளர் நாரணதுரைக்கண்ணன் செயலாளராகவும் இருந்து இந்த மாநாட்டை நடத்தினார்கள்.

## தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்தில், அச்சு இயந்திரங்கள் மற்றும் தட்டச்சுக் கருவிகளை விரைவாக இயக்க உதவியாகச் சில மாறுதல்களை, பெரியார் ஈ. வே. ரா. கையாண்டு வந்தார். 'சுதேசமித்திரன்' ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் சில மாறுதல்களை விரும்பி, தம்விருப்பப்படி நாள்தோறும் 'சுதேசமித்திரன்' இதழில் இரண்டு பத்திகளைப் புதிய எழுத்துக்களில் அச்சிட்டு வந்தார்.

இவை குறித்து, தமிழறிஞர்களின் கருத்தைக் கோர ஒரு குழுவை ஓமந்தூரார் 1948 ஜூலை 16-இல் நியமித்தார் (அரசு ஆணை 1761). இக்குழு, தெளிவில்லாத ஓர் அறிக்கையை 1952 இறுதியில் அரசுக்குக் கொடுத்தது. எவ்வித மாறுதலும் தேவையில்லை என்று முதலமைச்சர் இராஜாஜி ஆணையிட்டார்.

## பாரதியாருக்கு விடுதலை[1]

கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்ற கருத்து 1944-இல் கோயம்புத்தூரில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலும் 1946-இல் சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டது.

இந்த மாநாடுகளைத் தொடர்ந்து பாரதி விடுதலைக் கழகம், என்ற ஓர் அமைப்பு ஏற்பட்டது. பாரதியாரின் பாடல்களை' தமிழ் மக்களின் பொது உடைமை ஆக்க வேண்டும் என்பது இந்தக் கழகத்தின் குறிக்கோளாக இருந்தது. இக்கழகத்தின் முதல் கூட்டம் 1948 மார்ச் 11-இல் கவிஞர் ச. து. சு. யோகியார் தலைமையில் நடைபெற்றது. இக்கழகத்திற்கு வ. ரா. என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் தலைவராகவும், திரு. நாரண துரைக்கண்ணன், பேராசிரியர் அ. சீனிவாசராகவன் ஆகியோர் துணைத்தலைவர்களாகவும் கவிஞர். திருலோக சீத்தாராம், நடிகர் டி. கே. ஷண்முகம், திரு. வல்லிக்கண்ணன் ஆகியோர் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனினும் எல்லாப் பொறுப்புக்களையும் பணிகளையும் திரு. நாரணதுரைக்கண்ணன் ஒருவரே கவனித்து வந்தார்.

பாரதியாரின் பாடல்களைப் பிழையின்றி அச்சிட்டும், திரைப் படங்களில் இடம்பெறச் செய்தும் பரப்பவேண்டுமென்று, இளமை முதலே திரைப்பட அதிபர் திரு. ஏவி. மெய்யப்பன் செட்டியார் அவர்களுக்கு தேசிய உணர்ச்சி இருந்தது. அதனால் அவர் பாரதியாரின் நூல்களை அப்போது வெளியிட்டு வந்த அவர் தம்பி

---

1. ஆதாரம்: (அ) திரு. நாரணதுரைக்கண்ணன் பேட்டி
(ஆ) டாக்டர் ம. பொ. சி. பேட்டி
(இ) கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் பேட்டி
(ஈ) அரசாங்க ஆணைகள்
(உ) 'பாரதிக்கு விடுதலை' — எதிரொலி விசுவநாதன் எழுதிய நூல்
(ஊ) 'எனது நாடக வாழ்க்கை —டி.கே.ஷண்முகம்
(எ) 'செட்டிநாடும் தமிழும்' —சோமலெ
(ஏ) கல்கி இதழ்கள்
(ஐ) 'பொன்னியின் புதல்வர்' —சுந்தா

சி. விசுவநாத அய்யருக்கும், திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலயத்தாருக்கும், சுராஜ்மல்ஸ் கம்பெனியாருக்கும் அந்நாளில் ரூபாய் இருபத்தையாயிரம் கொடுத்துப் பாரதியாரின் பாடல்களை அச்சிடவும் ஒலிபரப்பவும் அனைத்து உரிமைகளையும் விலைக்கு வாங்கினர். "நாமிருவர்" என்ற படத்தில், பாரதியாரின் முரசுப் பாடல்களில் ஒன்றை ஏ. வி. எம். பயன்படுத்தினர். அந்தப் பாடலை, தக்கவர் பாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். பாடலின் முழு ஆற்றலும் வெளிப்பட்டு, மக்கள் உள்ளத்தை ஈர்த்தது பாரதியார் பாடல் இடம் பெற்ற முதல் திரைப்படம் இதுவே.

ஏவி. எம். அடைந்த வெற்றியைத் தொடர்ந்து பாரதியார் பாடல்களைத் திரைப்படங்களில் பயன்படுத்த அனைவரும் முயன்றனர். 'கண்ணன் என் காதலன்' என்ற தொகுதியில் பாரதியார் பாடிய 'தூண்டில் புழுவினைப் போல' என்ற பாடலை நடிகர் டி. கே. ஷண்முகம் 'பில்கணன்' என்ற திரைப்படத்தில் பயன்படுத்தினர். தொழில் முறையில் தாம் பணம் கொடுத்து, உரிமைகளை வாங்கியிருப்பதால், தம்முடைய இசைவுபெற்ற பிறகு தான் திரைப்படத்தில் பயன்படுத்த வேண்டுமென்று திரு. ஏவி. எம்., நடிகர் டி. கே. ஷண்முகத்திற்கு "நோட்டீஸ்" அனுப்பினர்.

திரு. ஏவி. எம். வழக்குத் தொடரக்கூடும் என்றும் கருதப் பட்டது. இதனால் பாரதி விடுதலைக் கழகத்தின் இயக்கம் தீவிர மாயிற்று. திரு. டி. கே. ஷண்முகம் இதில் முழு மூச்சுடன் ஈடு பட்டார்.

"தினசரி" ஆசிரியர் திரு. டி. எஸ். சொக்கலிங்கம்[1] மூலமாக இதைப் பற்றி அறிந்த ஓமந்தூரார், பாரதியார் பாடல் களை அரசின் உடைமையாக்க முன்வந்தார்.

---

1. திரு. டி. எஸ். சொக்கலிங்கம் சுதந்திர இயக்கத்தின்போது வாழ்ந்த தலைசிறந்த தமிழ் இதழ் ஆசிரியர் ஆவார். தமிழ்ப் பத்திரிகை உலகில் இவருக்குச் சிறந்த இடம் உண்டு. "காந்தி" என்ற நாள் இதழை இவர் வெளியிட்டார். ஏறத்தாழ 20 ஆண்டுகள் தினமணி நாளிதழில் ஆசிரியராக இருந்தார். எனவே இவரை "ஆசிரியர் சொக்கலிங்கம்" என்று சொல்லுவது மரபு.

இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு அரசியல் வழியாக எழுத்துலகுக்கு வந்து பத்திரிகைகளின் மூலம் தேசிய உணர்ச்சியைப் பரப்பினர். இவர் 1940-இல் தினமணி நாளேட்டிலிருந்து விலகிக்கொண்டார். 1943 அளவில் 'தினசரி' என்ற நாளிதழைச் சொந்தமாக நடத்திவந்தார். ஓமந்தூரார் ஆட்சிக்கு முழு அளவில் ஆதரவு கொடுத்துவந்த பத்திரிகை ஆசிரியர் திரு. டி எஸ். சொக்கலிங்கமே ஆவார். நாள்தோறும் முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு, தம் கூரிய பேனாவை இவருடைய ஆட்சி நிலைக்க உதவினர். ஓமந்தூராரைப் பற்றி ஏராளமான கட்டுரைகளை, ஆசிரியர் சொக்கலிங்கம் எழுதியுள்ளார்,

இதற்கிடையே, தலைவர் காமராசருடன் திரு. ஏவி. எம். தொடர்பு கொண்டார். பாரதியார் பாடல்களை அரசின் உடைமையாக்குவதற்கு, தாம் எவ்வகையிலும் தடையாக இருக்கப் போவதில்லை என்று அவர் தலைவர் காமராஜிடம் தெளிவு படுத்தினார். 'எவ்வளவு ரூபாய் கொடுத்து உரிமையை விலைக்கு வாங்கியிருக்கிறீர்கள்?' என்று தலைவர் காமராஜ், திரு ஏவி. எம். அவர்களைக் கேட்டார். அந்தத் தொகையை அரசினரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் எண்ணம் இல்லை என்றும், எவ்வித நிபந்தனையும் இல்லாமல் தம் உரிமைகளை விட்டுக் கொடுப்பதாகவும், அன்றைய அரசினருக்கு திரு ஏவி. எம். கடிதம் எழுதி, ஏற்கெனவே உரிமைபெற்றிருந்ததற்கான 'தஸ்தாவேஜுகளை' யும், திரு. நாரணதுரைக்கண்ணன் மூலம் அரசினருக்கு அனுப்பி விட்டார். எவ்வித நஷ்ட ஈடும் கோரவில்லை என்றும் தெரிவித்தார்.

ஓமந்தூரார் சட்ட ஆலோசகர்களைக் கலந்துபேசி, பாரதி விடுதலைக் கழகத்தின் தலைவராக இருந்த திரு. நாரணதுரைக் கண்ணனை வரவழைத்தார். "பாரதியாரின் மனைவி, அவர் மக்கள் ஆகியோரிடம் பாரதி பாடல்களைப் பொது உடமை ஆக்குவதற்குச் சம்மதம் என்று நீ போய் கையெழுத்து வாங்கி வந்தால், உடனே உத்தரவு போடுகிறேன்" என்று ஓமந்தூரார் கூறினார்.

திரு. நாரணதுரைக்கண்ணன், திரு. சீனிவாசராகவன், திரு. டி. கே. ஷண்முகம், திரு. வல்லிக்கண்ணன், திரு. கணபதி (மாறன் என்ற புனைப்பெயருடையவர் திருச்சி வானொலி அலுவலர்.) ஆகியோர் திருநெல்வேலிக்குச் சென்றனர்.

பாரதியார் மனைவி திருமதி. செல்லம்மாள் பாரதியும், மகள் திருமதி. தங்கம்மாள் பாரதியும் பாரதியார் பாடல்களைப் பொது உடமையாக்குவதற்கு ஒப்புதல் அளித்து முதலமைச்சர் ஓமந்தூராருக்குக் கடிதம் எழுதினர்.

கடிதம் கிடைத்து ஒரு வாரத்திற்குள் 12—3—1949-இல் பாரதியார் பாடல்களைப் பொது உடமையாக்கி ஓமந்தூரார் ஆணை பிறப்பித்தார்.

20—3—1949-இல் பாரதி விடுதலைக் கழகம், தங்கள் முயற்சியில் வெற்றியடைந்ததற்காக ஒரு விழா எடுத்தது.

உட்லண்ட்சில் நடைபெற்ற இவ்விழாவிற்கு திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். "ஜயபேரிகை கொட்டடா" என்ற பாரதியாரின் பாடலை திரு டி. கே. ஷண்முகம் பாட,

விழா, தொடங்கிற்று. வ. ரா. அ. சீனிவாசராகவன் 'சுதேச மித்திரன்' ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன், பாரதியாரின் நண்பர் பரலி சு. நெல்லையப்பர், திரு. டி. எஸ். சொக்கலிங்கம், திரு. சிதம்பர ரகுநாதன், திருலோகசீத்தாராம், கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியன் ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டு ஓமந்தூராருக்கும் திரு. ஏவி. எம்.க்கும் தமிழ்மக்களின் நன்றியைத் தெரிவித்தனர்.

ஓமந்தூரார் பேசியபோது பாரதி விடுதலைக் கழகத்தை யும் திரு. ஏவி. எம். ஐயும் பலப்பட பாராட்டினார். பாரதியாரின் மனைவி மகள் தங்கம்மாள் ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ 5,000/-ஐ அரசு கொடுத்திருப்பதாயும் மகள் திருமதி சகுந்தலா பாரதி இந்தோனேஷியாவிலிருந்து திரும்பி வந்ததும் அவருக்கும் ரூ 5,000/- வழங்கும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பித்திருப்பதாயும் அறிவித்தார்.

பாரதி பதிப்பு

பாரதியாரின் பாடல்களையும் வசனங்களையும் செம்மை யாகப் பதிப்பிக்க ஒரு குழுவை அமைக்கவேண்டும் என்றும், அந்தப் பதிப்பை முதலில் அரசு வெளியிடும் என்றும் பின்னர் யார் வேண்டுமானாலும் மலிவுப் பதிப்பாக வெளியிட்டுக் கொள்ள லாம் என்றும் ஓமந்தூரார் திட்டமிட்டிருந்தார். இந்தத் திட்டங் கள், திரு. குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப்பட்டன. கல்கி, பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் கி. சுவாமிநாதன், பாரதியார் தம்பி சி. விசுவநாத அய்யர் ஆகியோர் கொண்ட குழு பதிப்பித்த பாரதியார் கவிதை நூலை அரசு வெளியிட்டது.

கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் தமிழ் இலக்கிய வானில் சுடர் விட்டு ஒளிரும் ஒரு விண்மீன்; சாகா வரம்பெற்ற அவருடைய கவிதைகள் தமிழ் உள்ளவரை தமிழர்கள் வாழும் வரை மின்னிச் சுடர்விடும் தன்மையன.

பாரதியார் கவிதைகள் இப்போது கையடக்கப் பதிப்புக் களாக அழகாக அச்சிடப்பெற்று வீடுதோறும் பரவியிருக்கின்றன. அவர் கண்ட கனவுகளும் நம் கண்முன்னே நினைவாகி வரு கின்றன.

1982 டிசம்பர் 11 இல் பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவும் அதற்குள் சென்னையில் பாரதி மண்டபத்தைக் கட்டி முடிக்கவும் திரு. நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்டு நன்முறையில் இயங்கி வரும் பாரதியார் சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. பாரதியார் கவிதைகள் எங்கும் பரவுவதற்கு அடிகோலிய ஓமந்தூராருக்கும் அப்போது கோடிக்கணக்கான தமிழ்மக்கள் அஞ்சலி செலுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

*அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரு மறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே*
— *திருமூலர்.*

# 9

# சைவ சமயத்தில் ஆர்வம்

ஓமந்தூராருக்கு இளமையிலேயே கடவுட் கொள்கையில் ஈடுபாடு இருந்தது. கொல்லாமை, உயிர்களிடத்து அன்பு ஆகியவற்றில் ஏற்பட்ட நம்பிக்கை அழுத்தமாகப் படிந்து, இவர் சைவசமயம்பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டார்.

## ஞானியார் அடிகள்

ஓமந்தூரரார் உள்ளத்தில் சைவசமய அறிவு வேரூன்றுவதற்கு வித்திட்டவர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள்[1]

---

1. *திருக்கோவிலூர் ஆதீனம் ஞானியார் மடாலயம் 1672 இல் தோன்றி, சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்க அடக்கமாக பணி செய்து வருகிறது. இதன் தலைமை நிலையம் திருப்பாதிரிப்புலியூரில் சந்நிதி வீதியில் உள்ளது. இந்த ஆதீனத்தில் ஐந்தாம் பட்டத்தில் இருந்த ஞானியார் அடிகள், பெரும்புலவராகவும் சைவசித்தாந்த அறிஞராகவும் சிறந்த சொற்பொழிவாளராகவும் தமிழ் நாடெங்கும் தன் புகழ் ஒளியைப் பரப்பினர். சைவ சித்தாந்த சமாஜத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இவர் பெரிதும் உதவினர். 1933 அளவில் அடிகளாரின் மணிவிழா நடைபெற்றது.*

ஆவார். சைவ சித்தாந்த சமாஜ மாநாடு திருப்பாதிரிப்புலியூரில் நடைபெற்ற 1928 ஆம் ஆண்டிலேயே, இவருக்கு ஞானியார் அடிகளுடன் தொடர்பு இருந்தது.

ஓமந்தூரார் ஆதீனங்களுக்கு எதிரி என்று ஒரு கருத்து, அவர் ஆட்சிக்காலத்தில் பரவியது. தொண்டு செய்யும் துறவிகளை அவர் போற்றவும் பாராட்டவும் தவறியதில்லை. ஆதீனங்கள் மேற்கொண்ட அரிய பணிகளில் ஒத்துழைக்கவும் அவர் தயங்கியது இல்லை.

ஓ. பி. ஆர். தமிழ்நாட்டுத் திருமடங்களுக்குள்ள நிலங்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று ஜே. சி. குமரப்பா குழுவின் அறிக்கையில் தெளிவுபடுத்தினர். தருமபுரம் ஆதீனத்தார் திருவாமூரில் திருப்பணி செய்ய முன்வந்தபோது, அவர்களுக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்தார். மடாதிபதிகள் ஆடம்பரங்களையும், அன்றாட நிர்வாக அலுவல்களையும் கைவிட்டு சமுதாயத்தில் வாழும் மக்களுக்கு வழிகாட்டும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று ஓ. பி. ஆர். கூறினர்.

சொத்துக்களைப் பேணுவது, கோயில் நிர்வாகத்தை நடத்துவது ஆகிய வேலைகளை ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்புவித்துவிட்டு, மடாதிபதிகள் ஆன்மீகத் தலைவர்களாய் விளங்கவேண்டும் என்று ஓமந்தூரார் கூறிய கருத்துக்கள் செயல்படும் நாள் தமிழ்நாட்டு மடாலயங்களின் பொற்காலமாக இருக்கும்.

## சிதம்பரம்

அடைமொழியின்றிக் கோயில் என்னும் சொல், சைவர்களுக்குத் தில்லைத் திருக்கோயிலைக் குறிக்கும். ஓமந்தூரார் இளமை முதல் இக்கோயிலில் தனி ஈடுபாடு காட்டிவந்தார். நடு வயதில் இவர் நிகழ்த்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா உரையிலும் இத்தலத்துச் சிறப்புக்களை இயம்பியுள்ளார். வாழ் நாளின் இறுதிப் பகுதியிலும், பலமுறை வடலூரிலிருந்து சிதம்பரத்துக்குச் சென்று ஆரவாரமின்றிக் கோயிலுக்குள் நுழைந்து வழிபாடுகளை முறைப்படியும் பிறர் அறியாவண்ணமும் செய்து நேரே வடலூருக்குத் திரும்பியுள்ளார்.





மேலே :

1922ஆம் ஆண்டு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த பெரியார் ஈ. வே. ரா. உச்சிக்குடுமியுடன் மத்தியில் இருக்கிறார். உட்கார்ந்திருப்பவர்களில் இடதுபுறம் கடைசியில் இருப்பவர் ஓ. பி. ஆர்.

கீழே :

ஓமந்தூரில் ஓ. பி. ஆர். 12—7—1954ல் நடத்திய அருள்மிகு க்ஷீராம்பிகை சமேத பீமேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகத்தில் ஓ. பி. ஆர். பேசுகிறார்.

படைப்புக் காலம் தொட்டு மேம்பட்ட – வேதம் சுட்டிய – நால்வர் போற்றிய ஈடும் எடுப்புமில்லாத பதி – தில்லை.

வள்ளலார் தம்மை'சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை'என்றே குறிப்பிட்டு வந்தார்.

வள்ளலார் தாம் அமைத்த தலம் (உத்தர ஞான சிதம்பரம்), பூர்வஞான சிதம்பரத்துக்கு நிகராக இருக்கவேண்டும் என்றே விரும்பினார்.

இக்காரணங்களாலேயே ஓமந்தூராருக்குச் சிதம்பரத் தலத்தில் தனித்த ஆர்வம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

## திருவாமூர்

தம் இனத்தாராகிய (ரெட்டியார்) செல்வர் பலர் வாழும் திருவாமூர், அப்பர் பெருமான் தோன்றிய பதியாக இருந்தும், அவர்கள் அதன் சிறப்பை உணரவில்லையே என்று ஓமந்தூரார் எண்ணினார். ஆகையால் அப்பர் பிறந்த மனையில் கோயிலைக் கட்ட இவர் உறுதுணையாக இருந்ததுடன், தருமபுர ஆதீனத்துடன் ஒத்துழைத்து அத்திருப்பணியில் அவ்வூர் ரெட்டியார்களை ஈடுபடச் செய்தார். குடநீராட்டு விழாவிற்கும் சென்றார்.

## ஓமந்தூர்க் கோயில்கள்

ஓமந்தூரில் பீமேசுவரர் கோயிலுக்கும், வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கும் 56 ஏக்கர் நிலங்கள் இருந்தன. ஆனால் இந்த நிலங்களை யார் யாரோ அனுபவித்துக் கொண்டிருந்தனர். கோயில்களுக்கு நிலங்களிலிருந்து வருமானம் கிடைக்கவில்லை. ஓமந்தூரார் இந்த நிலங்கள் மேற்படி கோயில்களுக்குச் சொந்தமானவை என்பதை உறுதிப்படுத்தி, வருமானம் கோயில் களுக்குக் கிடைக்க வழி செய்தார்.[1]

மயிலம் பாலையசுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், சிதம்பரம் திரு. வாகீசம்பிள்ளை, கொந்தமூர் கோவிந்த ரெட்டியார், சிறுவந்தாடு லெட்சுமிநாராயண ரெட்டியார் முதலிய பலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில், பீமேசுவரர்கோயில் கும்பாபிஷேகத்தை ஓமந்தூரார் 1951 இல் சிறப்பாக நடத்திவைத்தார்.[2]

---

1. தகவல்: உய்யக்கொண்டராவி திரு. ரெங்கசாமி நாயுடு
2. தகவல்: மணம் தவிர்த்தபுத்தூர் திரு. அஸ்வத்தராமா ரெட்டியார்

## மேலருங்குணம் குடமுழுக்கு

பண்ணுருட்டிக்கும் திருவாமூர்க்கும் இடையேயுள்ள மேலருங்குணத்தில் வள்ளலார் ஞானசபை எடுத்து அதில் ஜோதி தரிசனம் காட்டிக் குடமுழுக்கு நடைபெற்றது. அன்று ஓ. பி. ஆர்., அருட்கவி சேதுராமன் சகோதரர்களை அழைத்து வந்து, திருவருட்பா முதலியன பாடச் செய்தார்.[1]

## கோயில் கோபுரம் – அரசின் சின்னம்

சென்னை அரசாங்கத்திற்கு ஓர் இலச்சினை வேண்டும் என்றும் அது கோயில் கோபுரமாக இருப்பது என்றும் முடிவு செய்தவர் ஓ. பி. ஆர்.

இது குறிப்பிட்ட ஒரு சமயத்தாரின் சின்னம் என்றும் இதை மதச்சார்பற்ற இந்திய அரசு அனுமதிக்கலாகாது என்றும் சிலர் ஜவஹர்லால் நேருவுக்கு எழுதினர். உடனே நேரு பெருமகன் தமக்கு முறையீடுகள் வந்திருப்பதைச் சுட்டிக் காட்டி ஓமந்தூராருக்கு எழுதினர்.

ஓமந்தூரார், இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுடச்சுடப் பதில் அளித்தார். 'கோபுரம் என்பது சமயச் சின்னம் அன்று. இந்த மாநிலத்தின் தனிச் சிறப்பாக விளங்கும் திராவிடக் கட்டிடக் கலையின் அடையாளம். காந்தியடிகளின் இனிய நண்பரும் கிறிஸ்தவப் பெருமகனுமான மேனாட்டார் சி. எப். ஆண்டிரூஸ்[2] என்ற வணக்கத்துக்கு உரிய மத குருவின் ஆதரவுடன் வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கோபுரத்துடன் கூடிய தேவாலயம் கட்டப்பட்டிருப்பதையும் இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.'

நேரு, அந்த அளவில் வாயடைத்துப் போனர்.

சென்னை அரசாங்கத்தின் இலச்சினையில், 'சத்தியமேவதே ஜெயதே' என்ற சொற்றொடரையும் ஓமந்தூரார் அன்றைய

---

1. தகவல்: திரு. கே. சுப்பராயலு, செயலாளர், தென் ஆர்க்காடு மாவட்ட சுதந்தரப் போராட்ட வீரர்கள் சங்கம், பண்ணுருட்டி.

2. சி. எப். ஆண்டிரூஸ்—இவர் பிரிட்டிஷ் பாதிரியார். 1904 இல் இந்தியாவுக்கு வந்தார். 1925 முதல் காந்தியடிகளின் நெருங்கிய நண்பராகி, சுதந்தர இயக்கத்தில் ஈடுபட்டார். தீன பந்து என்று இவர் குறிப்பிடப்பட்டார். 1940இல் கல்கத்தாவில் காலமானர்.

சென்னை மாநிலத்தில் ஆட்சிமொழியான ஆங்கிலத்தில் பொறித்தார். இதை, பிற் காலத்தில், தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. சி, என். அண்ணதுரை 'வாய்மையே வெல்லும்' என்று தமிழாக்கினர்.

## கண் மருத்துவத்தின் போதும் ...

ஓ. பி. ஆர். பக்தி நூல்களை நாள்தோறும் படித்துவந்தார் என்பதை முன்னொரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். 1953 இல் இவர் சேலத்துக்குச் சென்று, தம் அமைச்சரவையில் பணியாற்றியவரும் சிறந்த கண்மருத்துவருமான டாக்டர் குருபாதம்[1] என்பவரிடம் அறுவை சிகிச்சை செய்துகொண்டார். அதற்காக அங்கு 19 நாட்கள் இருந்தார். அப்போது நாள் தவருமல், இவருடைய உறவினர் ராம்பாக்கம் திரு. ஆர். எம். சின்னசாமி ரெட்டியார் இவருக்குப் பக்த ராமதாஸ், கதை, பகவத் கீதை, திருவருட்பா முதலியன குறித்த தமிழ் ஆங்கில நூல்களைப் படித்துக்கொண்டே இருந்தார்.

---

1. டாக்டர் குருபாதம், எல். எம். பி. இவர் 1893 இல் பிறந்தார். முதல் உலகப் போரில் 1914—1918இல் இராணுவத்தில் டாக்டராகப் பணிபுரிந்தார். அப்போது கராச்சியில் கவியரசி திருமதி. சரோஜினி தேவியைச் சந்தித்ததற்காக, பிரிட்டிஷ் அரசினர் இவரைச் சந்தேகப்பட்டனர். அதுமுதல் இவர் தேசிய வாதியானர். 1919 முதல் 1928 வரை இராமநாதபுர மாவட்டம் திருப்பத்தூர் சுவீடிஷ் மிஷன் மருத்துவமனையில் பணி புரிந்தார். அப்போது இவர் டாக்டர் கூகல்பர்க் என்ற புகழ்பெற்ற சுவீடிஷ் டாக்டரிடம் பயின்று, கண் சிகிச்சை நிபுணர் ஆனர். 1927 இல் மகாத்மா காந்தி, தலைப்பாகை முதலிய தன்னுடைய விரிவான ஆடைகளைக் களைந்து மதுரையில் அரை நிர்வாண பக்கிரியான நாளில் டாக்டர். குருபாதம் மகாத்மாவை வணங்கி, திருப்பத்தூர் மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்ருர். 1922 முதல் இவர் இராமநாதபுர மாவட்டத்தில் கதர்க் கழகத்தின் தலைவராக இருந்தார். 1929 முதல் 1940 வரை இவர் கோயமுத்தூரில் மோசஸ் ஞானபரணம் கண் மருத்துவமனையில் டாக்டராகவும் இருந்தார். 1948 ஜுன் மாதம் முதல் 1949 ஏப்ரல் மாதம் வரை இவர் ஓமந்தூரார் அமைச்சரவையில் மதுவிலக்கு, கிராமப்புற வளர்ச்சி, வீட்டுவசதி அமைச்சராக இருந்தார். பின்னர் சேலத்தில் குடியேறி, அங்கே கண் மருத்துவமனை அமைத்து அதைத் தன் மக்களிடம் ஒப்புவித்துள்ளார். இப்போது (1979) இவருக்கு வயது 86. இன்றும் நாள் தவருமல் நாழிகை தவருமல் நூல் நூற்றுவருகிருர். 11—11—1977 இல் நான் (நூலாசிரியர்) இவரைப் பேட்டி கண்டேன். 'ஆடின காலும் பாடின வாயும் சும்மா இரா' என்று ஒரு பழமொழி உண்டு. நூல்நூற்ற கைகளும் சும்மா இரா என்பதை இவர் வாழ்வில் பார்க்கிருேம். பேட்டியின்போது மூன்று மணிநேரமும் சர்க்காவில் நூல் நூற்றுக்கொண்டே இருந்தார்.

## வாரியாரிடம் மதிப்பு

இறைபணி செய்பவர்களிடம் ஓமந்தூரார் பெருமதிப்பு வைத்திருந்தார். சான்ருக, திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளைப்பற்றி இவர் எழுதியதைக் குறிப்பிடலாம்.

"நற்பண்புடைய வாரியார் அவர்கள் வாழ்க்கை மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாக வும் இருப்பதை மற்றவர்களும் பின்பற்றி பயன் பெறுவ துடன், அவர் செய்யும் ஞான தானமாக சொற்பொழிவாலும், 'திருப்புகழ் அமிர்தம்' என்ற பத்திரிகையாலும் பக்திச்சுடர் எல்லாருடைய உள்ளத்தே யும் கொழுந்துவிட்டு எரியச் செய்து தனி மனிதர்களை யும், குடும்பங்களையும், ஸ்தாபனங்களையும் தூண்டி ஜீவ சேவையே சிவ சேவை என்பதன் மூலம் செய்துவருகிருர்.

அவருடைய குடும்பமே பரம்பரையாக பௌராணிக் குடும்பம் ஆகும். அவரின் தந்தையாரும் நமது வாரியாரைப் போன்றே நன்கு பாரதம் இராமாயணம் போன்றவை களை எடுத்துக்கூறும் பேராற்றல் மிக்குடையவர், என்று அன்னரே செப்பக் கேட்டிருக்கின்றேன். அச்சான்ருேர் தம் அன்னை பிதாவிடத்தில் அன்பு காட்டி பக்தி மரியாதை யும் காட்டும் நற்குணசிலராவார். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஆன்ருேர் கூற்றினை உள்ளத்தே கொண்டு வீட்டிலிருக்கும்போது தம் தாய் தந்தையர் களுக்கு நமஸ்காரம் செய்வது இயல்பு என கூறச் செவிமடுத்திருக்கின்றேன். அவரின் தந்தை இறைவன் திருவடியை எய்தியபின் தாம் வெளியே செல்லுங்கால் தமது தாய்க்கு நமஸ்காரம் செலுத்திச் செல்வது வழக்கம் என்று தெரியலானேன்.

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்ற மூதுரைக்கு ஒப்ப அவர் அனுதினமும் எங்கு சென்ற போழ்திலும் இரண்டு மணிநேரத்திற்குக் குறையாமல் தமிழ்க் கடவுளாம் முருகனை விதிப்படி பூசித்து துதிப்பதையே தம் கடமையாகக் கொண்டு வழுவாது செய்து வருகிருர்"

## தேவதாசி முறை ஒழிப்பு

கோயில்களின் குறைபாடுகளை, அங்கு நிலவிய ஒழுங்கீனங்களை, ஓ. பி. ஆர். மிகவும் நன்ருக அறிந்திருந்தார். அந்தக் குறைகளைக் களைய, முதலமைச்சராக இருந்தபோது அவர் சில நடவடிக்கைகள் எடுத்தார்.

இம்முயற்சிகளில் முதன்மையானது தேவதாசி முறை ஒழிப்பு. அக்காலத்தில், அதாவது 1947 வரை, தமிழ் நாட்டின் முக்கியமான கோயில்களிலெல்லாம் தேவதாசிகள் இருந்தனர். இவர்கள் கோயிலில் சில பணிகள் புரிந்ததோடு, இறைவன் சந்நிதியில் நடனமும் ஆடினர். ஓமந்தூரார் பதவியேற்ற சில மாதங்களிலேயே, எந்தப் பெண்ணும் கோயில்களில் நடனம் ஆடுவதைத் தடை செய்தார். அது சட்டவிரோதமான செயல் என்றும் அறிவித்தார்.

## கோயில்களைக் காப்பாற்றியவர்கள்

சில கோயில்கள் பாழடைந்திருப்பதைப் பார்த்து மனம் வருந்தி ஓ. பி. ஆர். அங்குள்ளவர்களை அதைப்பற்றிக் கேட்டார். 'இது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கட்டிய கோயில். அவர்களுக்கு பர்மாவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்போது வருமானம் இல்லை. ஆகையால் கோயில்களை அவர்கள் பழுது பார்க்க இயலாதவர்களாக உள்ளனர்'' என்றனர். உடனே, சர்தார் வல்லபாய் பட்டேலுடன் தொடர்புகொண்டு, பர்மாவில் இந்தியர்கள் இழந்த சொத்துக்களுக்கு நஷ்டஈடு பெறுவதற்காகப் பர்மா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒரு தூதுக்குழு அனுப்பி ஏற்பாடு செய்தார். அமைச்சர்களான கோபால ரெட்டியையும் பக்தவத்சலத்தையும் இரங்கூனுக்கு அனுப்பி வைத்தார்.

## கடவுள் வழிபாடுபற்றி ஓ. பி. ஆரின் கருத்துக்கள்

குன்றக்குடியில் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்ற போது, சைவர் மாநாட்டுக்கு ஓ. பி ஆர். தலைமைதாங்கினர். அப்போது இவர் அரியதொரு உரையை நிகழ்த்தினர். பல பயனுள்ள கருத்துக்கள் இதில் அடங்கியுள்ளன. சில பகுதிகள் வருமாறு :

"எல்லாவுயிர்களிலும் அவனைக் கண்டு வழிபடுவார் சிற்சிலர். ஐம்பெரும் பூதங்களிலும் வழிபடுவாருமுளர். அன்பர்கள் கருதும் வடிவங்களை எல்லாம் தாங்கிக்கொண்டு முன்னிற்பவன் அவன். இறைவனை ('சத், சித்து, ஆனந்த') வடிவாக — அதாவது, உண்மை அறிவு இன்பவடிவாக வழிபடுவோரும், 'உவரா இன்பச் சுடர்' வடிவாக வழி படுவோரும் உளர். அருவமாம் கடவுள் அன்பிற்கு வசப்பட்டு உறைந்து வடிவங்கொள்ளலும் உண்டு. உருவுற்ற கடவுள் ஞான வெம்மையால் உருகி அருவமாகி நிற்றலும் உண்டு.

"ஒன்றென் றிருதெய்வம் உண்டென் றிருதுயர
செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமும்
நட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமனமே உனக் கேஉப தேசமிதே"

என்றார் பட்டினத்தடிகள்.

ஆகையால் தெய்வம் ஒன்றேயாகும். யோகியார் இறைவனைத் தம் இதயத்தில் வழிபடுவார். சமதர்சிகள் அவனை எங்கும் வழிபடுவர். இறைவனைக் கணவனாக வழி படுவதுபோல, கணவனை இறைவனாக வழிபடும் நங்கையரும் உளர். அதிதியை இறைவனாக வழிபடுபவரும் உளர். குருவையும், மாதரையும், அடியார்களையும், பொதுவாக மக்களையும், எல்லாச் சீவராசிகளையும், இறைவனது வடிவ மாக வழிபடுவோரும் உளர்.

"மக்களைப் பக்திப் பரவசராக்குவதற்காக நம் முன்னோர்கள் கோயில்களையும் மடங்களையும் ஏற்படுத்திக் குருகுலங்களை ஸ்தாபித்தனர். இவைகளில் தங்கியிருந்து, இறைபணி தலை மேற்கொண்ட தொண்டர்கள் சைவ, வைணவ, சித்தாந்த வேதாந்தங்களை மக்கட்குப் போதித்து எளிய வாழ்க்கையை நடத்தித் தங்கள் வாழ்க்கையே உலகத்துக்கு வழிகாட்டியாக இருக்கும்படியான நிலையிலே தமக்கெனவாழாப்பிறர்க்குரியாளராக விளங்கினர். இதனால் சேவாஸ்ரமங்களும், குருகுலங்களும், மடங்களும், கோயில் களும் செவ்வனே நடைபெறுவதற்காக மானியங்கள் விடப் பெற்றன. அவைகளைக் கொண்டு இலக்கியம், புராணம்,

நீதிநூல், ஞானநூல் முதலிய நூல்களும் சிற்பம், ஓவியம், சங்கீதம், நாடகம், மருத்துவம் முதலிய கலைகளைக் கற்பிக்கவும், மருத்துவச்சாலைகள், பசுமடம், நந்தவனம், சத்திரம், சாவடி, சாலைகள், ஆதுலர்சாலை, சோலை, அறு சமயத்தோர்க்கு உணவு, ஓதுவார்க்கு உண்டி முதலிய 32 தர்மங்களை நடத்துவதற்குச் சேர, சோழ, பாண்டிய அரசர்களும், பொதுஜனங்களும், அறிவாளிகளும் தகுந்த மானியங்களும் பொருளுதவியும் செய்தனர். அதனால் இவ்வறங்களைக் கிரஹஸ்தர்கள் நடத்துவதென்றால் காரியம் செவ்வனே நடைபெறாதென்றும், அவற்றைப் பற்றற்ற உள்ளம்கொண்ட கரும யோகிகளாகவும், பக்தி யோகிகளாகவும் உள்ள பற்றற்ற துறவிகளிடத்தில் ஒப்பித்தால் பக்தி சிரத்தையுடன் நடத்துவார்கள் என்ற எண்ணத்தினால் அல்லவோ, அவைகளை நிருவகிக்கத் தகுதிவாய்ந்த சீலத் தொண்டர்களிடத்தில் அவைகளை ஒப்புவித்தார்கள்."

"குறிப்பாக, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வருடாந்திரக் கூட்டங்களில், கடந்த வருடத்தில் என்ன திட்டத்தை வகுத்தோம்? அதில் எத்தனைபேர் சிரத்தை எடுத்துக் கொண்டனர்? எவ்வளவு தொண்டு நடைபெற்றது? அதற்கிருக்கும் தடைகள் எவை? அவற்றை எப்படி நீக்குவது? என்னும் விஷயங்களெல்லாம் நடைமுறையில் வைத்துச் சர்ச்சை செய்து எல்லோரும் அதில் ஈடுபடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இம் மகா சமாஜம் செய்வது உசிதமென்று எண்ணுகிறேன். நமது நாட்டிலே புதிதாகத் தருமங்கள் செய்யவேண்டியதில்லை. இருக்கிற தருமங்கள் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்தலும், எங்கெங்கு பலவீனம் தென்படுகிறதோ அங்கெல்லாம் சென்று, அங்குள்ள மக்களை அணுகி, எல்லாக் கடமைகளும் செவ்வனே நடைபெற அவர்களைத் தூண்டிச் சேவை செய்வோமாக. தவிரவும் இப்பொழுதிருக்கும் மடங்களைச் சார்ந்த கல்விச்சாலைகளில் தேவாரம், திருவாசகாதி, திருமுறைகள், திருப்புகழ், திருக்குறள் முதலிய தமிழ் மறைகளைப் போதிப்பதோடு நின்றுவிடாமல், தொழிற்படிப்பும் ஆங்கில அறிவும்கூட மாணவர்க்குக் கிடைக்கும்படி செய்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் நடத்திச் சன்மார்க்க சீலர்களாக வாழ ஏற்பாடு செய்வது மிக உசிதமென்று எண்ணுகிறேன்.

“நம்நாட்டில் தருமம் நடக்காமலில்லை. அது பல வழிகளிலே சிதறுண்டு சுமார் 60 கோடி ரூபாய்க்கு நடக்கிறதென்று தெரிகிறது. மேல்நாட்டில் குறிப்பாக, அமெரிக்காவில் (Community Chest) என்ற ஒரு சங்கம் ஏற்படுத்தி அதைச் செவ்வனே நடத்திவருகின்றனர். ஒவ்வொரு அமெரிக்கனும் தன்னுடைய வருவாயில் ஒரு பகுதியைக் குறிப்பிட்ட ஒரு அறத்திற்கோ பொதுவாகவோ அந்தச் சங்கத்திற்கு அனுப்பி, அதன் மூலமாகப் பங்கிட்டு, தங்கள் நாட்டிலும், உலகத்தில் பல நாடுகளிலும், பல துறைகளிலும் மக்கள் நலத்திற்காகச் செய்யவேண்டிய தொண்டுகளைச் செவ்வனே செய்துவருவதாக நான் சில பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தேன். நம் நாட்டில் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கும் தருமங்கள் செவ்வனே நடப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி, மேற் சொன்ன அம்முறையை நாமும் பின்பற்றலாம்.”

“நாம் ஞானிகளாக இருந்தால் கோவில்களுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. அந்த ஞானிகள்கூட, முதலிலே இந்தக் கோயில்களில் வழிபாடு செய்துதான், ஞானத்தை அடைந்தார்கள் என்பது அவர்களுடைய பக்தி ரசமான பாடல்களினாலும், சரித்திரத்தினாலும் தெரிய வருகின்றது. அவர்கள் “பார்க்கு மிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர”ணனை எங்கு கண்டாலும், இந்தக் கோயில்களில், பக்தகோடிகள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு, தாங்களும் தொழுது, மற்றவர்களும் தொழும் படி போதிக்கின்றார்கள். தவிரவும் சில பெரிய கோயில் களில் அவர்களுடைய சமாதிகளும் இருப்பதாகச் சில பெரியோர்கள் வாயிலாகக் கேட்டுள்ளோம்.”

“சமாஜ அங்கத்தினர்கள் ஒரு நல்லுபாயத்தைக் கையாளலாம்; ஒவ்வொரு குடும்பத்திலும், தலைவனும் தலைவியும் குழந்தைகளுடன் நாள்தோறும் காலையும் மாலை யும் ஒரு அரைமணி நேரமாவது கடவுளைத் தொழுவதை அங்கத்தினர்கள் நடைமுறையில் காட்டி, அவர்களுடைய நண்பர்களையும் உறவினர்களையும் தூண்டலாம். இங்ஙனம் செய்வார்களென்று எதிர்பார்க்கின்றேன்.”

1947-இல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, நிலச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக மாகாண காங்கிரஸ் அரசாங்கங்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்ந்து யோசனைகள் சொல்ல ஒரு குழுவை நியமித்தது. ஒன்பதுபேர் கொண்ட இக்குழுவுக்கு, காந்தியப் பொருளாதார நிபுணர் டாக்டர் ஜே. சி. குமரப்பா தலைவராக இருந்தார். குழுவின் உறுப்பினர்களில் ஓமந்தூராரும் ஒருவர். அந்தக் குழுவின் அறிக்கையில், "சமய நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்கள்" பற்றி ஓமந்தூரார் எழுதிய பின்வரும் குறிப்பும் இடம் பெற்றுள்ளது.[1]

> "இந்திய நாடுமுழுவதும் சமய நிறுவனங்களும் அற நிறுவனங்களும் கல்விக்கூடங்களும் ஏராளமாக இருக்கின்றன. இவை சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் பணிபுரிந்து வருகின்றன. சான்றாக, தென் இந்தியாவில் மட்டும் பெரியதும் சிறியதுமாக 27,000 இந்துக் கோயில்கள் இருக்கின்றன. இவை வெறுமனே வழிபாட்டு இடங்களாக மட்டுமன்றி மக்களின் கலை, பண்பாடு, கல்வி, சமுதாயத் தேவைகளை நிரப்பும் நிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கோயில்கள். வேத பாடசாலைகள், பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்களைக் கூட நடத்தி வருகின்றன. எனவே, கல்வி கலைத்துறைகளில் சமுதாயம் முன்னேற திருக்கோயில்கள் துணைபுரிந்திருக்கின்றன. ஏழை எளியவர்கட்கு இலவச மருத்துவ உதவி வழங்க இக்கோயில்களிலேயே மருந்தகங்களும் மருத்துவமனைகளும் நடத்தப்பட்டிருக்கின்றன. அனாதை விடுதிகளும் இக்கோயில்களுடன் இணைந்து இயங்கி வந்திருக்கின்றன. சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளைப் பேணவும் புரக்கவும் கோயில்கள் ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்கரியது. தேர், திருவிழா, சந்தை முதலியவற்றை நடத்துவதன் மூலம் உள்நாட்டுப் பொருள்களை விற்பனை செய்யவும், கிராமத் தொழில்களை ஊக்குவிக்கவும் கோயில்கள் உறுதுணையாக இருந்துள்ளன.

---

1. ஆதாரம்: Report of the Congress Agrarian Reforms Committee, A. I. C. C., New Delhi 1949.

இந்நூலாசிரியரால் மேற்கண்ட பகுதி தமிழாக்கம் செய்யப்பெற்றுள்ளது.

சமுதாய வாழ்வின் அச்சாணியாகக் கோயில்கள் விளங்கின என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிலைநாட்டியுள்ளனர். ஆகையினால்தான் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழி ஏற்பட்டது.

"திருக்கோயில்கள் தவிர, மடங்களும் சமயத்துறையில் நல்ல பணிகளைச் செய்துவருகின்றன. இந்துமதத்தின் பல்வேறு மெய்ப்பொருள் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே இந்த மடங்கள் தொடங்கப்பட்டன. கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஆன்மீகக் கல்விப் பெருக்கத்துக்கும் திருமடங்கள் பெரிய அளவில் உதவியுள்ளன.

திருக்கோயில்களும் திருமடங்களும் மக்களுக்குச் செய்து வரும் சீரியபணிகளைப் பாராட்டியும் தொடர்ந்து அவை நன்றாக இயங்கும் பொருட்டும் பழங்காலத்திய அரசர்களும் வள்ளல்களும் அவற்றுக்கு ஏராளமான நிலபுலன்களைத் தானமாக வழங்கினார்கள். முஸ்லிம் அரசர்களும் இந்துக்களின் கோயில்களுக்கும் மடங்களுக்கும் மானியங்களை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல நூற்றாண்டுகளாக இந்தக் கோயில்களுக்கும் மடங்களுக்கும் இருந்துவரும் சொத்துக்களின் வருமானத்தைக் கொண்டே இவை செயல்படுகின்றன.

இதுபோல மக்களுக்குத் தொண்டுபுரிய ஏற்பட்ட கிறிஸ்துவ தேவாலயங்களும் மிஷன்களும் மற்ற கிறிஸ்துவ அமைப்புக்களும் உள்ளன. அவற்றின் சமயப் பணிகள் ஒருபுறம் இருக்க, கல்வித்துறையில் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கும், தொண்டுகளைச் செய்வதில் அவற்றுக்கு நிகராக வேறு நிறுவனங்களைச் சொல்ல இயலாது. கிறிஸ்தவர்கள் பல கல்லூரிகளைத் திறமையாக நடத்துகிறார்கள் என்பதை எல்லாருமே ஒப்புக் கொள்ளுகின்றனர். ஏழைகளுக்கு இலவச மருத்துவ வசதி செய்வதிலும் கிறிஸ்துவ அமைப்புக்கள் சாலச்சிறந்து திகழ்கின்றன. அவர்களுடைய நிர்வாகத்திலும் மேற்பார்வையிலும் திக்கற்ற சிறுவர்களின் மேம்பாட்டுக்குப் பாடு படும் நிலையங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களும் அவற்றுக்குச் சொந்தமான நிலங்களின் வருவாயை நம்பியே நடத்தப்படுகின்றன.

இஸ்லாமிய சமூக நிறுவனங்களுக்கும் மேற் கூறிய கருத்துக்கள் பொருந்தும்.

தனிப் பட்டவர்கள் வைத்துக் கொள்ளக் கூடிய நிலத்துக்கு உச்சவரம்பு விதிக்கலாமென்று நாம் அறிக்கை கொடுக்கும் போது, மேலே சொல்லப்பட்ட காரணங்களால் சமய நிறுவனங்கள், அறநிறுவனங்கள் ஆகியவற்றுக்கு உரியதாக இருக்கும் நிலங்களை உச்ச வரம்பு விதிப்பதி லிருந்து விலக்க வேண்டுமா? அல்லது அவற்றுக்குத் தனி யாகச் சில கொள்கைகளை வகுக்கவேண்டுமா? என்று யோசிக்க வேண்டும். இவற்றில் பல நிறுவனங்களில் இப் போது செம்மையாக நடைபெறவில்லை என்பதும் இவை சீர்திருத்தப்பட வேண்டும் என்பதும் உண்மையாக இருந்த போதிலும், அழிந்து விடாமல் இவற்றைப் பாதுகாக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். நில வருமானம் போய் விட்டால், இந்த நிறுவனங்கள் பயனுள்ள வகையிலோ திறமையாகவோ இயங்க முடியாது. பண்ணை ஆட்களை வைத்துத்தான் இந்த நிலங்களைச் சாகுபடி செய்ய இயலும்.

இந்த நிறுவனங்களின் தனித்தன்மைகளைக் கருத்தில் கொண்டு, (1) இவற்றின் நிலங்களுக்கு உச்சவரம்பு கூடாது (2) உழுபவர்கள் தவிர ஏனையோர் நிலத்தின் சொந்தக் காரராக இருக்கக் கூடாது என்ற கொள்கையிலிருந்தும் இந்த நிறுவனங்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

தென் இந்தியாவில், இவ்வகையான நிறுவனங் களுக்குச் சொந்தமான நிலங்களின் தன்மை மூவகைப்படும்''

(1) மேல்வார பாத்தியதை: ஜமீன்தார்களைப்போல, நிலத்தை உழுது சாகுபடி செய்வார்களிடமிருந்து, ஒரு தொகையை வசூலித்துக் கொள்ளும் உரிமை.

(2) மேல்வாரம், மற்றும் குடிவார பாத்தியதை: நிலமும் அதை உழுது சாகுபடி செய்யும் உரிமையும் அந்த நிறுவனத்துக்கே உண்டு.

(3) மைனர் இனும்கள்: நிலமும் அதை உழுது சாகுபடி செய்யும் உரிமையும் அந்த நிறுவனத்துக்கே உண்டு. ஆனால், சம்பந்தப்பட்ட நிறுவனம், அரசினருக்கு 'குவிட் ரெண்டு' செலுத்தவேண்டும்.

முதல் வகை நிலங்களில், இந்த உரிமையை அரசு ஏற்றுக் கொண்டு, ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதுபோல, சம்பந்தப்பட்ட நிறுவனம் இழந்த வருவாயை அரசாங்கமே ஈடுசெய்யவேண்டும். இது மாநில அரசாங்கங்கள் தங்கள் வருமானத்திலிருந்து கட்டாயமாகக் கொடுக்கவேண்டிய தொகை யாகக் கருதப்படவேண்டும்.

2, 3ஆவது வகை நிலங்களில், இப்போதைய நிலைமை தொடர்ந்து நீடிக்க வகை செய்யப்படவேண்டும். இந்த (ஜே. சி. குமரப்பா குழு) அறிக்கையின் முதல் அத்தியாயத்தில் வகுத்துள்ள முறைப்படி, நிலங்களை உழுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

கோயில்கள் மற்றும் அறநிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்களையோ அவற்றுக்கான உரிமைகளையோ மாநில அரசாங்கமோ அதிகாரம் பெற்ற வேறுஅமைப்புக்களோ எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மேற்படி நிறுவனங்கள் இப்போது செய்து வரும் பணிகள் இடையூறின்றி நடைபெறுவதற்குத் தேவையான தொகையை — பணமாகவோ தானியமாகவோ — வழங்குவதாக மாநில அரசாங்கம் உறுதியளிக்க வேண்டும்.

'பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள்.
பாரத நாடு'

– பாரதியார்

# 10

# பாரதநாடு பழம்பெரும்நாடு

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே.'

– பாரதியார்.

* * *

'பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள்
பாரத நாடு.'

– பாரதியார்.

* * *

'மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே!'

— பாரதியார்.

## நாட்டுப்பற்று

ஓ. பி. ஆர். நாட்டுப்பற்று மிக்கவர். இவ்வாறு யான் கூறும்போது, 'நாங்களும்தான் நாட்டுப்பற்றும் தேசிய உணர்ச்சியும் உடையவர்களாக இருக்கிறோம். நாங்கள் என்ன அயல் நாட்டானுக்கு அடிமைகளாக இருக்க விரும்புபவர்களா? அல்லது ஐந்தாம் படையினரா?' என்று வாசகர் சிலர் கேட்பது, என் காதில் ஒலிக்கிறது!

14 காரட், 18 காரட், 22 காரட், 24 காரட் என்று தங்கம் பலவகை உண்டு. நாம் 14 காரட் முதல் 20 காரட் வரை உள்ள தங்கத்தைப் போன்றவர்கள். ஓமந்தூரார் 24 காரட் தங்கம், இன்னும் சொல்லப் போனால் 24 காரட் தங்கத்தில் பதிக்கப்பட்ட விலைமிக்க வயிரக்கல்.

நம் நாட்டுப் பொருள்களைவிட வெளிநாட்டுப் பொருள்களை வைத்திருப்பதைப்பற்றி நாம் பெருமைப்படுவோம். செருப்பு அணிந்து இருப்பவனைவிட, பூட்ஸ் போட்டுக் கொண்டிருப்பவனை உயர்ந்தவன் என்று நினைப்போம். தமிழ் அல்லது இந்திய மொழிகள் மட்டும் படித்திருப்பவனைக்காட்டிலும் ஆங்கிலம் படித்தவன் பெரிய அறிஞன் என்று அவனைப் பாராட்டுவோம். உள்நாட்டில் படித்தவர்களோடு ஒப்ப வெளிநாடுகளில் பயிற்சிபெற்றவர்களை அண்ணாந்து பார்ப்போம். மேலைநாட்டு நூல்களிலிருந்து ஒருவர் மேற்கோளை மேடையில் முழங்கிவிட்டால் ஏமாந்துபோவோம். போட்டோ எடுக்கிற இடத்துக்கு அழையா விருந்தாய்ச் செல்லுவோம். ஒருவன் சில ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறான் என்றால் உடனே அவன் புகழ்பாடத் தொடங்கிவிடுவோம். யாருக்காவது பெரிய பதவி கிடைத்துவிட்டால், பூக்கடைக்கு ஓடுவோம். நம்முடைய முன்னோர்கள் நம்மை நோக்க அறிவிலும்

ஆற்றலிலும் குறைந்தவர்கள் என்று மதிப்பிடுவோம். பல்குச்சி வைத்துப் பல் தேய்ப்பவனைவிட, பல் பசையையும் துலக்கும் மட்டையையும் பயன்படுத்துபவனை மனமாரப் புகழ்வோம். நாட்டு வெல்லம் உபயோகிப்பவனை இழிவுபடுத்தி ஆலைச் சர்க்கரை வாங்குபவனை நாகரிகமானவன் என்று போற்றுவோம்!

இத்தகைய போலி தேசியம், ஓமந்தூராரிடம் இம்மிகூட இருந்ததில்லை.

நம்நாடு எந்த நாட்டையும்விட வளம் குறைந்தது என்றோ நம்நாட்டு மக்கள் மற்றவர்களைவிடக் குறைந்த அறிவுபடைத்தவர்கள் என்றோ ஓமந்தூரார் ஒருபோதும் ஒப்புக்கொண்டதில்லை. கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டபோது, வெளிநாடுகளிலிருந்து உணவு இறக்குமதி செய்வதை நிறுத்தினால்தான், இந்திய நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற முடியும் என்ற கருத்தை இவர் தெரிவித்தார்.

ஓமந்தூரார் எதைப்பற்றியும் தாமே சிந்திப்பார். யாராவது சிந்திக்கட்டும், நாம் அவர் கருத்தை ஓசி வாங்கிக்கொள்ளுவோம் என்ற எண்ணமே இவருக்கு எழாது.

## அஞ்சாநெஞ்சன்

ஓ. பி. ஆர். அஞ்சா நெஞ்சர். காந்திஜியின் அறிக்கைகளை மறுத்தார். நேருவுக்கு அடிபணியவில்லை. மாநில சுயஆட்சிக் கொள்கையை அணு அளவும் விட்டுக் கொடுக்கவில்லை. தம் ஆட்சியில் எந்த விதத்திலும் இந்திய அரசு குறுக்கிட இவர் இடம் கொடுக்கவில்லை. நேருவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த முதலமைச்சர்கள் டாக்டர் பி. சி. ராய், ஓ. பி. ஆர். ஆகிய இருவருமே ஆவார்.

## இந்தியப் பண்பாட்டில் பெருமிதம்

பழமையான இந்திய நாகரிகத்தில் ஓமந்தூராருக்கு அழுத்தமான நம்பிக்கை இருந்தது. அதைப் பேணவேண்டும் என்று விரும்பினார். வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் தமிழ் நாட்டின் பழம் பெருமையையும், பழங்கால இந்தியாவின் சிறப்புக்களையும் பறைசாற்றி வந்தார்.

சென்னை மாநகரில் சமூகப் பணி பல புரிந்து புகழ்பெற்ற திருமதி. கிளப்புவாலா ஜாதவ், ஒரு தடவை வடலூருக்குச் சென்றார். யாருடைய அனுமதியும் பெறாமல் மாடி ஏறி ஓமந்தூராரின் அறைக்குள் தன் கணவருடன் நுழைந்துவிட்டார். ஓமந்தூரார், அவர்களைக் கடுமையாகக் கோபித்துக்கொண்டார். "இவர்தான் என் கணவர்" என்று தன் கணவரை அம்மையார் அறிமுகப்படுத்தியதையும் ஓமந்தூரார் சற்றும் விரும்பவில்லை 'இதுவும் ஒரு நாகரிகமா?' என்று தம்மைக்காண வந்தவர்களிடம் பல நாட்கள்வரை சொல்லி மனம் புண்பட்டார்.

## ஓலைச்சுவடிகள்

"ஏட்டுச் சுவடிகள் பல இன்னும் பிரசுரிக்கப்படாமல் கரையான்களுக்கு இரையாகிப் பாழாகி விடுகின்றன. அவை நம் முன்னோர்கள் நமக்கு வைத்த புதை பொருள்கள் போன்றவை. கூடிய சீக்கிரத்தில் இவை அழியுமுன்னரே இவைகளை வெளியிட வேண்டும்" என்பது ஓமந்தூராரின் உறுதியான கருத்து.

நம் முன்னோர்கள் தங்கள் அறிவுச் செல்வத்தை ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்துள்ளனர்.

தமிழ்ச்சுவடிகளுக்கு எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. கால வெள்ளத்தில் அழிந்தவை பல. கடல் வெள்ளத்தில் அழிந்தவை பல. பூச்சிக்கும் கரையானுக்கும் இரையானவை பல. நெருப்பில் அழிந்தவை பல.

இவ்வாறு பலியானவை போக, எஞ்சியன நம்மிடம் உள்ளனவா எனின், அதுதானும் இல்லை.

வெளிநாட்டார் நம்முடைய அரிய கலைப்படைப்புக்களான வெண்கல விக்கிரகங்களைக் கொண்டுபோயிருப்பதுபோல, அறிவுச் செல்வங்களான ஏட்டுச்சுவடிகளையும் கடத்திவிட்டனர். லண்டன், பாரிஸ், ரோம், லிஸ்பன், கோபன்ஹேகன் போன்ற ஐரோப்பிய நகரங்களிலும் மற்றும் அமெரிக்கப் பெருநகரங்களிலும் நமது சுவடிகள் உள்ளன. தமிழ்மொழி, தமிழர் சமயம், தமிழ் மருத்துவம் ஆகிய துறைகளில் ஈடுபட்ட அயல்நாட்டினர், அரிய சுவடிகளை ஆயிரக்கணக்கில் தங்கள் நாடுகளுக்கு வெளியேற்றி விட்டனர்.

## தஞ்சை சரஸ்வதி மஹால்

முதலமைச்சர் ஓமந்தூரார், தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலுக்குப் போயிருந்தார். 'எத்தனை ஏட்டுச் சுவடிகள் இருக்கின்றன? அவை எந்தெந்தப் பொருள்களைப் பற்றியன?' என்றெல்லாம் துருவி விசாரித்தார். "இந்த ஏடுகளை எல்லாம் மிக்க கவனமாகப் பேணவேண்டும்" என்றார் முதலமைச்சர். காப்பாளர் "நான் நல்ல முறையில் பேணத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்கு ரூபாய் 10,000 வரை செலவு ஆகுமே?" என்று தயங்கிக்கொண்டே சொன்னாராம்.

அந்த இடத்திலேயே காப்பாளரிடம் ஒரு மனு எழுதி வாங்கிக் கொண்டு, ரூ. 10,000-ஐ அனுமதித்து முதலமைச்சர் கையெழுத்திட்டார்.

பின்னர் ஓமந்தூரார் நூல் நிலையத்தின் எஞ்சிய பகுதிகளை ஒருமணி நேரத்திற்குமேல் பார்வையிட்டார். சரஸ்வதி மஹாலிலிருந்து அடுத்த நிகழ்ச்சிக்குப் புறப்பட முதலமைச்சர் தயாராகிவிட்டார். அப்போது காப்பாளர் அவரை அணுகி, "அமெரிக்காவில் செய்கிற முறைப்படி, ஓலைச்சுவடிகளைப் பேண ரூபாய் பத்தாயிரம் ஆகும் என்று கணக்கிட்டேன். வசம்பு (என்ற வேர்) போட்டு நம்நாட்டு முறைப்படி பாதுகாக்க ரூபாய் 2,000 மட்டுமே போதும்" என்றாராம்.

ஓமந்தூரார், 'நம்நாட்டு முறையை விடாதீர்கள், அதையே பின்பற்றுங்கள், நான் கையெழுத்துப் போட்ட ஆணையை எடுத்து வருக' என்றாராம்.

ரூபாய் பத்தாயிரம் அனுமதித்ததை, ரூபாய் இரண்டாயிரமாகக் குறைக்கப்போகிறார் என்று காப்பாளர் உட்பட அங்கிருந்த எல்லோரும் எதிர்பார்த்தனர். அவர்கள் ஏமாந்து போனார்கள்.

ஓமந்தூரார் தமது ஆணையில் பின்வருமாறு ஒரு குறிப்பைச் சேர்த்தார்:

"சுவடிகளைப் பேணும் செலவுபோக, மிஞ்சும் பணத்தை இந்த நூல் நிலையத்தின் வளர்ச்சிக்காகச் செலவிடலாம்."[1]

ஓலைச்சுவடிகளைச் சேகரிக்கவும் அவற்றில் அடங்கிய தகவல்களை அச்சிடவும் இருபது லட்சம் ரூபாய் வரை செலவு செய்ய ஓமந்தூரார் திட்டமிட்டிருந்ததாக 1948 இல் 'செந்தமிழ் செல்வி'யில் ஒரு குறிப்பு வெளிவந்திருக்கிறது.

1956 இல் அன்றைய கல்வித்துறை இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார். அவரைக் காண விரும்புவதாக ஓமந்தூரார் சொல்லியனுப்பினர்.

"சென்னையிலுள்ள கீழ்த்திசை ஓலைச்சுவடி நூல் நிலையத்திற்கு மைக்ரோ பிலிம் வசதி செய்து கொடுக்கவேண்டும்" என்று, ஓமந்தூரார் அப்போது கேட்டுக் கொண்டாராம்.

## சித்த மருத்துவம்

ஓமந்தூராருக்குச் சித்த மருத்துவத்தில் அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. இவர் இருக்கும் இடத்தில் யாராவது ஒரு சித்த வைத்தியர் உடன் இருப்பார். இராமர் இருக்கும் இடம் அயோத்தி எனின், சித்த மருத்துவர் இருக்கும் இடத்தில் ஓமந்தூரார் இருப்பார் எனலாம்.

---

1. தகவல்: பொருளாதார மேதை டாக்டர் பா. நடராஜன்: இவர் 1910-இல் பிறந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற்று திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். பிறகு இந்திய அரசாங்கத்தில் தொழில்துறையில் துணை இயக்குநரானர். ஓமந்தூராரின் அழைப்பை ஏற்று, அப்பதவியைக் கைவிட்டு சென்னை அரசாங்கத்தில் பொருளாதார ஆலோசகர் என்ற பெயரில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வேலையை ஒப்புக்கொண்டார். 1952-இல் நாகர் கோவில் இந்துக் கல்லூரியில் முதல்வரானர். பின்னர், பொருளாதார ஆராய்ச்சி அறிவை நடை முறையில் பயன் படுத்துவதற்கான தேசியக் குழுவின் இயக்குநராக இருந்தார். எகிப்து (ஐக்கிய அரபுக் குடியரசு) அரசாங்கத்துக்குச் சிலகாலம் ஆலோசகராக பணிபுரிந்தார். தமிழ்நாடு அரசின் திட்டக் குழு உறுப்பினராகவும் இருந்தார். இவருக்குத் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமையும் சைவ சித்தாந்தத்தில் நிரம்பிய அறிவும் உண்டு ஓமந்தூராரின் நம்பிக்கைக்கு உரியவராக இவர் திகழ்ந்தார். ஓமந்தூராரின் கருத்துக்களுக்கு இணங்க, சில நூல்களையும் பல அறிக்கைகளையும் டாக்டர் நடராஜன் எழுதினர். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராக ஓமந்தூரார் இவரை நியமித்தார்.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயில் வட்டம் பனையூர் தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் குருவான இராமகிரிச் சித்தர், ரசாயன சாஸ்திரம் என்ற ஒரு நூலை இயற்றியிருந்தார். அந்த நூல் ஓலைச்சுவடியாகவே இருந்தது. அதில் பழமையான மருந்துகளின் விவரம் இருப்பதாக ஓமந்தூரார் கேள்விப்பட்டதும் அந்தச் சுவடியை வைத்திருந்த மதுரை வரகவி மு. கணபதியா பிள்ளையை அணுகி, சோதிட, மருத்துவ நூல்களில் புலமை பெற்ற அவரைக் கொண்டே விளக்கம் எழுதச் செய்தார். இந்நூல், ஓ. பி. ஆரின் பொருளுதவியுடன் 1961 இல் வடலூர் சுத்த சன்மார்க்க நிலையத்தின் மூலம் வெளியிடப்பெற்றது.

நாடு புகழும் சித்த மருத்துவரும் முன்னாள் நீதிபதியுமான திரு. பலராமையா சித்த மருத்துவ நூல்களை அச்சிட, சில சமயம் ஓமந்தூரார் உதவியுள்ளார்.

சித்த மருத்துவத்தில் வல்லவர் என்று கேள்விப்பட்டு ஒருவரை அழைத்து வந்து, ஏதாவது ஒரு மருந்தைப் பழம் நூல்களில் கூறியிருப்பது போலச் செய்யச் சொல்லுவது ஓமந்தூராரின் பொழுதுபோக்கு. அவர் மருந்து செய்முறைகளைத் தவறாகக் கடைப் பிடித்து விட்டால், அந்தக் கணமே அந்த இடத்திலேயே அவரைக் கண்டித்துவிடுவார். பிறகு அவர் முன்னிலையில் தாமே மருந்து செய்யத் தொடங்குவார்.

நீரிழிவு நோய்க்கு முருங்கைக் கீரையும் எள்ளுப் பிண்ணாக்கும் சேர்த்து ஒரு வாரத்திற்குச் சாப்பிட்டால் குணமாகும் என்று தன் அனுபவத்தை ஓ. பி. ஆர். கூறுவார்.

சித்த வைத்தியக் குறிப்புக்கள் இவருடைய நாட்குறிப்பில் பல இடங்களில் காணப்படுகின்றன.

## இந்திய மருத்துவக் கல்லூரி

ஓ. பி. ஆர். ஆட்சியில், 1948 இல் முதல் முறையாக, தென் இந்தியாவில் இந்திய மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்றது. இக்கல்லூரி சித்த மருத்துவத்துக்கே சிறப்பிடம் தர ஏற்பட்டது. ஒருசில கோயில்களில் சித்த மருத்துவ நிலையங்கள் திறக்கவும் ஓமந்தூரார் ஆணையிட்டார்.

## சித்த மருத்துவத்தின் சிறப்பு

மேலை நாட்டு மருத்துவம் அலோபதி எனப் பெயர் பெறும். இந்திய மருத்துவத்தில் மூன்று வகைகள் இப்போது இந்திய அரசின் ஆதரவுபெற்றுள்ளன. இவை ஆயுர்வேதம், யூனானி, சித்தம் என்பன.

சித்த மருத்துவம் என்பது, நம் முன்னோர் நமக்கு வழங்கிய செல்வம். சித்தர்கள் 18 வகையினர். மூலிகைகளைக் கொண்டு அவர்கள் எவ்வகை நோயையும் போக்க வல்லவராக விளங்கினர். வாழையடி வாழையாகத் தமிழ் நாட்டில் வளர்ந்து வரும் இந்த அரிய மருத்துவ முறையைப் பேணவும் பரப்பவும் ஓமந்தூரார் உறுதி கொண்டார்.

அந்த உறுதியின் விளைவாக இந்திய மருத்துவக் கல்லூரியை ஓ. பி. ஆர். தொடங்கினார். அதன் பயன்கள் குறிப்பிடத் தக்கன.

சித்த மருத்துவ நுணுக்கங்களும் உண்மைகளும் மறைந்தவை போக மறையாது வழங்கும் பல நூறு ஏடுகளில் இன்றும் மிளிர்ந்து கொண்டுள்ளன. இவற்றை இன்று அறிவார் சிலர். அறிந்த சிலரில் உலகிற்கு உரைப்பார் மிகச் சிலரே. அச்சிலரின் துணைகொண்டு, அவற்றை அச்சேற்றுவது அரசின் கடமை என்று கருதினார் ஓ. பி. ஆர்.

திரு. மு. கருணாநிதியின் அமைச்சரவையில் நல்வாழ்வுத் துறை அமைச்சராக (1971–1976) இருந்த பேராசிரியர் அன்பழகன், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர் குழுவின் தலைவர் திரு. பு. மனோகரனின் கருத்தை ஏற்று சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவை நியமித்தார். ஓ. பி. ஆர். பாராட்டிய முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், திரு. ஜி. டி. நாயுடு போன்ற சிலரும், ஓ. பி. ஆர். தொடங்கிய இந்திய மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களும் இக்குழுவில் இடம்பெற்றனர். குழு, 1978 வரை 35 சிறந்த நூல்களை அச்சிட்டுள்ளது.

சித்த மருத்துவத்துக்குரிய அனைத்து இந்திய உயர் ஆராய்ச்சி நிலையத்தை இந்திய அரசு, சென்னையில் அமைத்துள்ளது.

"ஓமந்தூரார் இந்திய மருத்துவக் கல்லூரி தொடங்கியிலரேல்
சொல்லு சித்தமெங்கே இந்திய மருந்தியல் எங்கே?"

என்று பாடத் தோன்றுகிறது.

## அறிஞர் அண்ணு சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்

ஓ. பி. ஆர். முதலமைச்சராக இருந்தபோது சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக, சென்னை அமைந்தகரையின் மேற்குக் கோடியில் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கினுர். அங்கு பிற்காலத்தில் ஏற்பட்ட சித்த மருத்துவமனையும் ஆராய்ச்சி நிலையமும் இப்போது அறிஞர் அண்ணு பெயரால் திகழ்கின்றன.

## தஞ்சை சரஸ்வதி மஹால்

ஓமந்தூரார் முதல் அமைச்சராக இருந்தபோது மேற்படி நூலகத்தில் பணியாற்ற, கூடுதலாக தமிழ்ப் பண்டிதர் ஒருவரை நியமித்தார். சித்த மருத்துவர் பதவி ஒன்றை அந்த நூலகத்தில் புதிதாக ஏற்படுத்தியவரும் இவரே!

## சரபேந்திர வைத்திய முறைகள்

கர்ப்பிணி, பாலரோக சிகிச்சை, மாட்டு வைத்தியம், அசுவன வைத்தியம், கண் சிகிச்சை முதலியவை உள்பட ராஜா சரபோஜி சேகரித்து வைத்திருந்த சித்த மருத்துவச் சுவடிகளை 14 தொகுதிகளாக அச்சிட ஓமந்தூரார் ஆணையிட்டு, அதற்காக ஆண்டுக்கு ரூ. 20,000 வீதம் மூன்று ஆண்டுகளுக்குப் பணம் ஒதுக்கினுர்.

## தமிழ்நாட்டுப் பற்று

ஓமந்தூராரின் பொருளாதார ஆலோசகர் டாக்டர். பா. நடராஜனை இந்திய அரசின் வெளிநாட்டு அமைச்சரவை ஒரு பொறுப்பான பதவிக்கு வெளி நாடுகளுக்கு அனுப்ப விரும்பிற்று. ஓமந்தூராருக்கு இதைப்பற்றி தில்லியிலிருந்து கடிதம் வந்தது. நாள்தோறும் டாக்டர். நடராஜனைச் சந்தித்த போதிலும், ஓமந்தூரார் அவரிடம் இதைத் தெரிவிக்கவில்லை. டாக்டர். நடராஜனை விடுவிக்க இயலாது என்று மிகக் கடுமையாக ஓமந்தூரார் எழுதிவிட்டார்.

இவ்விவரம் சில மாதங்களுக்குப் பிறகு, வெளி நாட்டு அமைச்சரவையின் கூட்டுச் செயலாளர் திரு. ஆர். எஸ். மணி, ஐ. சி. எஸ். மூலம் டாக்டர். நடராஜனுக்குத் தெரியவந்தது.

"........ என்று தில்லியில் கேள்விப்பட்டேன். என்னிடம் நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே?" என்று ஓமந்தூராரிடம் டாக்டர். நடராஜன் கேட்டார்.

இக்கேள்விக்குப் பதில் கூறும் முகத்தான், ஓ. பி. ஆர். எதிர்க்கேள்வி கேட்டார்.

"உன்னுடைய அறிவையும் ஆற்றலையும் தமிழ் நாட்டின் மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்ச்சி உனக்குக் கிடையாதா?"

## யார் பணம் கொடுத்தால் என்ன?

ஓமந்தூராரின் நம்பிக்கைக்கு உரிய மற்றொருவர் திரு. க. அருணாசலம். இவர் 1914 இல் பிறந்தவர். 1936 முதல் பல்லாண்டுகள் பெரியநாயக்கன் பாளையம் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராகவும், பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் இருந்தவர். இப்போது காந்தி சமாதான நிறுவனத்தின் உறுப்பினராகவும், காதி கிராம உத்தியோக சங்கத்தின் ஆட்சிக் குழுத் தலைவராகவும், அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் குழுவின் தலைவராகவும், அகில இந்திய காந்தி ஸ்மாரக் நிதியின் தலைவராகவும் இருப்பவர்.

திரு. அருணாசலம் 1951 இல் அமெரிக்காவுக்குச் சென்று அயோவா ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் கல்வி முறைபற்றிய உயர்படிப்புப் படித்தார். இதற்கான முன் ஏற்பாடுகள் 1948 முதலே தொடங்கின. இதைப்பற்றிக் கேள்விப்பட்ட ஓ. பி. ஆர். "அமெரிக்காவுக்குப் போக விரும்புகிறாயாமே? ஏன்? எதற்கு இதெல்லாம்?" என்றார்.

"நான் நமது அரசாங்கப் பணத்தில் ஒன்றும் போகவில்லை. அமெரிக்காவிலிருந்து எல்லாச் சலுகைகளும் செலவுகளையும் ஏற்று உதவிச் சம்பளமும் கிடைத்தால் போவேன்" என்று அண்ணாச்சி அருணாசலம் சொன்னார்.

"யார் பணம் கொடுத்தால், என்ன? நம் நாட்டினருக்குத் தெரியாதது அமெரிக்கர்களுக்குக் கல்விபற்றி என்ன தெரியும்?" என்றார் ஓமந்தூரார்.

## உறவினருக்கு அறிவுரை

ஓமந்தூராரின் உறவினர், கீழ் அழிஞ்சிப்பட்டு திரு. இராமசாமி ரெட்டியார், பொதுப்பணித் துறையில் பொறுப்பான பதவி வகித்த பொறியியலாளர்.

ஓமந்தூரார் முதலமைச்சராவதற்குமுன் திரு. இராமசாமி ரெட்டியார், "அரசாங்கம் என்னை ஒரு தூதுக்குழுவில் அனுப்புகிறது. அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்று சில வாரம் அந்த நாடுகளில் தங்கி, சாலைபோடும் முறையை அறிந்துவரப் போகிறேன்" என்றார்.

"கல்லும் மண்ணும் தாரும் கலந்த சாலை அமைப்பதற்கு வெளிநாட்டானிடம் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது, ஏழை மக்களின் வரிப்பணத்தை அரசு இப்படி வீணாக்குகிறதே?" என்றார் ஓ. பி. ஆர்.

"எவன் எவனோ போகிறான். நம் இனத்தவனான நீ போவதில் எனக்கு மகிழ்ச்சி. நன்றாய்ப் போய்வா", என்று எல்லோரும் சொல்லுவதுபோலச் சொல்லத் தெரியாதவர் ஓமந்தூரார்!

*"ஆன்மீகத் துறையில் ஈடுபட்டு, தன்னலம் இல்லாதவர்களாய், அறிவும் ஆற்றலும் நிறைந்த சித்தர்களாய், பற்றற்றவர் களாய், ஆச்சாரிய சீலர்களாக விளங்கும் சாதுக்கள் அனை வருக்கும் அடியாராய், அடியார்க்கும் அடியாராய் நாயினும் கடையேனுய் நான் என்றென்றும் இருந்துவருவேன்"*

*—ஸ்ரீ ஜெயின் மகாமந்திரம்*

# 11

# துறவிகளிடம் ஈடுபாடு

## துறவிகளுடன் பழகுவதில் இன்பம்

ஞானதாகம் பிடித்து அலைந்த அப்பர், சுந்தரர் போன்ற ஞானிகளைப்போல ஓமந்தூராரும் ஞானப்பெருஞ் செல்வத்தைத் தம் வாழ்நாளெல்லாம் தேடி அலைந்தார்.

குடிசைகளிலும் குகைகளிலும் மறைந்து உறையும் துறவி களை ஓ. பி. ஆர். தேடிச் சென்ருர். அந்தப் பெருமக்களின் கூட்டுற வில் இன்பம் கண்டார். அவர்களுடன் யாத்திரை சென்ருர். திருப்பணிகளை மேற்கொண்டார். அவர்களுடன் இறையடியார் களுக்கு அடியவராக மெய் ஒடுங்கி நின்ருர். அந்தச் சந்தர்ப்பங்கள் அவருக்கு மன நிறைவை நல்கின.

## காவி உடைக்கு மதிப்பு

முதலமைச்சர் ஓ. பி. ஆர். பெரியநாயக்கன்பாளையம் இராமகிருஷ்ண வித்தியாலயத்திற்குச் சென்று ஒரு கூட்டத்தில் பேசினார். அவ்விழாவிற்கு வந்திருந்த இருவர் காவியுடை உடுத்தியிருந்தனர். அவர்கள் துறவிகள் அல்லர். எனினும் ஓ. பி. ஆர் அவர்களை அழைத்து மேடை மீது அமரச் செய்தார் என்கிறார் மதுரை காந்தி ஸ்மாரக் நிதிச் செயலாளர் திரு. அழகிரிசாமி.

## எத்தனை துறவிகளிடம் ஈடுபாடு?

ஓ. பி. ஆர். ஈடுபாடு கொண்டிருந்த துறவிகளை எண்ணுவது எளிதன்று.

இந்நூலாசிரியர் விசாரித்து அறிந்து, அரிதின் முயன்று தொகுத்த பட்டியல் இது :

1. காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்கள்
2. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள்
3. குச்சிபாளையம் சாந்தானந்த சுவாமிகள்
4. சித்தலிங்க மடம் சுவாமிகள் (திருக்கோவிலூர் ஞானனந்தகிரி)

---

**SRI JAIN MAHAMANTRA**

To

Arhats, the perfect souls embodied,
Possessed infinite cognition, knowledge,
happiness and power,
To siddhas, the perfect souls in nirvana
formless and bodiless,
Free from all karmic attachment;
To acharyas, the masters of adepts
in spirituality,
To upadhyayas, the adepts
guiding the scholar-ascetics
And to all sadhus, the ascetics devoted
To the contemplation of self
I make obeisance humble.

5. பகவான் ரமண மஹரிஷிகள்
6. சுவாமி ஸஹஜானந்தர், சிதம்பரம்
7. கடலூர் கோவிந்த ராமானுஜ ஏகாங்கி சுவாமிகள்
8. அரவிந்த கோஷ், புதுச்சேரி
9. சுவாமி சுத்தானந்த பாரதி
10. மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள்
11. திருப்பராய்த்துறை சித்பவானந்த சுவாமிகள்
12. திருவலம் மௌன சுவாமிகள்
13. அருட்கவி சேதுராமன்
14. மாத்தூர் சுவாமிகள்
15. நாட்ரம்பள்ளி ராமகிருஷ்ண மடம் ரெங்கநாதானந்தஜி மஹராஜ்
16. சுவாமி விரஸ்தானந்தா (இவர் சமாதி குடியேற்றம் அருகே மேல்மலையில் உளது என்பர்)
17. ரெட்டியாபட்டி சுவாமிகள்
18. சேலம் மாவட்டம் வடகரை அப்பண்ண சுவாமிகள்
19. திருவெண்ணெய் நல்லூர் ஏனுதிமங்கலம் மாணிக்க சுவாமிகள்
20. திருக்குற்றாலம் ஐந்தருவி சங்கர ஆசிரமம் சுவாமி சங்கரானந்தர்
21. திருத்தணி மௌன சுவாமிகள்
22. தபோவனம் முகுந்தானந்த சுவாமிகள்
23. கண்டமங்கலம் சச்சிதானந்த சுவாமிகள்
24. கலசப்பாக்கம் விட்டோப சுவாமிகள்
25. திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகள்
26. பசுமலை லலிதானந்த சுவாமிகள்
27. சீத்தாராம சாஸ்திரி(ஆந்திரா)
28. குடியேற்றம் வட்டம் மகாதேவ மலையில் திருவலம் சிவானந்த சுவாமிகளின் குரு.
29. உப்புவேலூர் கொண்டா ரெட்டியார் சுவாமிகள்
30. திண்டிவனத்தில் இருந்த ராயவேலூர் நாராயண ரெட்டியார் சுவாமிகள்
31. திரு ஈங்கோய்மலை சுவாமி அத்வையானந்தர்

32. பூண்டி ஆற்றுமகான் சுவாமிகள் (இவர் மழைக்கும் வெய்யிலுக்கும் ஆற்றிலேயே இருப்பாராம்)

33. ராஜமன்னார்குடி அருட்பிரகாச சுவாமிகள்

34. திண்டுக்கல் கசவனம்பட்டி மௌன சுவாமிகள்

35. வல்லநாட்டு சுவாமிகள்

36. கும்பகோணம் காரைச்சித்தர் என்ற ஆஞ்சநேய சுவாமிகள்.

## தபோவனம் ஞானானந்த கிரி

தபோவனம் சுவாமிகள் கன்னட நாட்டில் பிறந்து பண்டரிபுரத்தில் தம் குருவை அடைந்து இமயமலை, பர்மா, இலங்கைப் பகுதிகளில் 30 ஆண்டுகள் தவம் இருந்தார்கள் சேலம் மாவட்டம் ஆதியாமபட்டியில் தங்கியிருந்தபோது புளியமரத்துச் சாமியார் என்று பெயர்பெற்றார்கள். பின்னர் சித்தலிங்க மடத்திற்கு வந்தார்கள். அப்போது முதலே ஓமந்தூராருக்கு சுவாமிகளிடம் ஈடுபாடு இருந்தது. தம் வாழ்நாள் வரை ஓமந்தூரார் இந்த சுவாமிகளிடம் பக்தி வைத்திருந்தார்கள்.

ஞானானந்தகிரி சுவாமிகள் தபோவனத்தில் 18 ஆண்டுகளுக்குமேல் இருந்து நடமாடும் தெய்வமாய் அஞ்ஞான இருள் அகற்றும் பேரொளியாக விளங்கி, பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு நல்வழி காட்டி 1974-ஆம் ஆண்டில் சமாதிநிலை அடைந்தார்கள்.

ஞானானந்தகிரி சுவாமிகள் அருளாலயத்தின் அறங்காவலராக இப்போது இருந்துவரும் திரு. ஆர். எம். சின்னசாமி ரெட்டியார், தாம் 1959-இல் "ஓ. பி. ஆர். உதவியால்தான் முதன்முறையாக ஸ்வாமிகளை தரிசிக்கும் பேறு" பெற்றதாகக் கூறுகிறார்.

## பகவான் ரமண மஹரிஷிகள்

திருவண்ணாமலை, திண்டிவனத்திற்கு அருகே உள்ள நகரம். இந்த நகரம் இங்குள்ள மலையின் பெயரைப் பெற்று விளங்குகிறது.

அருணகிரிநாதர், ஈசானிய ஞானதேசிகர், விருப்பாட்சி தேவர், குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர், வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள், சைவஎல்லப்ப நாவலர், காவிய கண்ட

கணபதி சாஸ்திரி, சேஷாத்திரி சுவாமிகள், ஜடினி சண்முக யோகினி, பாணிபத்திரர், பத்திராசல சுவாமிகள் இப்போது வாழும் யோகி ராம் சூரத்குமார் போன்ற ஞானிகள் தொடர்புடையது அண்ணாமலை, ஞானத் தபோவனரை 'வா' என்று அழைக்கும் இந்த அண்ணாமலை, எங்கேயோ இருந்த ஓர் இளைஞனைத்து ரமண மஹரிஷிகள் ஆக்கிற்று.

ரமண மஹரிஷிகள் கொண்ட வாழ்க்கை எளிமையானது; நம்பிக்கை நிறைந்தது. யாரும் அவரைச் சுலபமாகத் தரிசிக்க முடிந்தது. யார்க்கும் இன்முகத்துடன் ஆறுதலளித்தார் அம் மகான்.

பாலயோகியாக இளைஞன் வேங்கடராமன் அருணாசல மலை மீது பல குகைகளில் தவமிருந்தார். உணவு, தண்ணீர் இன்றிப் பல நாட்கள் சமாதியில் இருப்பார். கண்ணைத் திறந்து பார்த்த போது கிடைக்கும் உணவை உட்கொண்டு, மீண்டும் தவத்தில் ஆழ்வார்.

1907-இல் காவியகண்ட கணபதி சாஸ்திரிகள் என்ற மகா பண்டிதர் மூலம் உலகம் பாலயோகியை, ரமண மஹரிஷி என அறிந்தது.

ஐரோப்பியர் பலர் ரமணரின் பெருமையை உணர்ந்து அவருடைய பக்தர்கள் ஆனார்கள். புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் சாமர்செட் மாம் ரமணரை தரிசித்துச் சென்று 'தி ரேஸர்ஸ் எட்ஜ்' (கத்தியின் கூர்முனை) என்ற நாவலில் அவர் புகழை எடுத்தோதினார்.

ரமணரது அன்னை 1922-இல் காலமானதும் அவரது உடலை இப்போது ஆசிரமம் இருக்குமிடத்தில் அடக்கம் செய்து சமாதி கட்டி, சிவலிங்கம் வைத்து மாத்ரு பூதேசுவரராக அவரை வழிபடலானார்கள். அன்னையின் சமாதி ஏற்பட்ட இடமே பின்னர் ரமண ஆசிரமமாக மலர்ந்தது.

ரமண ஆசிரமம் ஏனைய ஆசிரமங்களைப்போல் கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்ததன்று. எளிமை கலந்த சூழ்நிலை அங்கு நிலவியது; நிலவுகிறது. அனைவரும் ரமணரை நெருங்கி, ஐய விளக்கம் பெற்று, அமைதி உற்றனர். மாந்தர் மட்டுமன்றி, அணில்கள், குரங்குகள், நாய்கள், பசுக்கள் யாவுமே அவருடைய அன்புக்குப் பாத்திரமாகி ஆசிரமத்தில் கட்டுப்பாடின்றி வாழ்ந்தன.

1950-ஆம் ஆண்டில் ரமண ஹரிமஷிகளின் இடது கையில் புற்றுநோய் கண்டது. தாங்கமுடியாத வலியை இன்முகத்துடன் தாங்கியிருந்து, பலவித வைத்திய முயற்சிகளுக்கும் உட்பட்டு, முடிவில் ஏப்ரல் 14ஆம் நாள் இரவு 8–47க்கு ரமணர் முத்தியடைந்தார். பக்தர்கள் புடை சூழ்ந்து மஹரிஷிகளது "அருணசலமாலை" தோத்திரப் பாக்களைப் பாடிகொண்டிருக்க, ரமணர் ஸ்தூல சரீரத்தினின்று விடுதலை பெற்ருர். அவர் முக்தி அடைந்த நேரத்தில் பெரியதொரு எரிநட்சத்திரம் வானில் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

## ரமணரும் ஓமந்தூராரும்

ரமண மஹரிஷியைப்பற்றி ஓ. பி. ஆர். 1926-இல் முதல் தடவையாகக் கேள்விப்பட்டார். 1930- அளவில் அவருடைய பக்தரானர். ரமணர் முக்தியடைந்ததுவரை இடைவிடாது அவருடைய பக்தராகவே இருந்துவந்தார்.

சொந்த வாழ்விலும் அரசியல் வாழ்விலும் முக்கியமான முடிவுகளை தாம் எப்போதும் வைத்திருந்த ரமணர் படத்தை வழிபட்ட பிறகு அல்லது ரமண மஹரிஷியின் அறிவுரையைக் கேட்ட பிறகே ஓமந்தூரார் மேற்கொண்டார்.

ரமண ஆசிரமத்தில் வாயில்லாப்பூச்சிகளாகிய உயிரினங்கள் அன்புடன் கவனிக்கப்பட்டது, இவருடைய ஜீவகாருண்யக் கொள்கைக்கு ஏற்றதாக இருந்தது. ரமணர் முன்னிலையில் தியானம் செய்வதும் இவருக்கு மன அமைதியைக் கொடுத்தது. ஆண்டுதோறும் அங்கு நடைபெற்ற பூசைகளில் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உணவு படைக்கப்பட்டது, இவருக்குக் களிப்பு ஊட்டிற்று.

ஓமந்தூரார்க்கு சடங்கு சாத்திரங்களில் நம்பிக்கை கிடையாது. தம் தாயார் இறந்த பிறகு, அந்நாளில் திதி கொடுக்காமல் அதற்குப் பதிலாக ஆண்டுதோறும் ரமண ஆசிரமத்திற்கு இரண்டு மூட்டை அரிசியையும், காய்கறிகளையும் அனுப்பி வந்தார். சிறைச்சாலையில் இருந்த காலத்திலும் இவ்வாறு அனுப்ப முன் ஏற்பாடுகள் செய்தார்.

ஆண்டுதோறும் மூன்று, நான்கு முறை ரமண ஆசிரமத்திற்குச் சென்று அங்கு ஒவ்வொரு தடவையும் பல நாள் தங்கினர். நண்பர் பலரையும் அழைத்துச் சென்ருர். பிற்

காலத்தில் இந்தியக் குடியரசின் முதல் தலைவராக விளங்கிய பாபு ராஜேந்திர பிரசாத்தை, ஓமந்தூரார் 1934 இல் ரமணருக்கு அறிமுகப்படுத்தினர். மகாத்மா காந்தி திருவண்ணாமலைக்கு வந்த போது, அவர் ரமண மஹரிஷியைச் சந்திக்கவேண்டுமென்று ஓமந்தூரார் விரும்பினர். ராஜாஜி அதைத் தடுத்துவிட்டார்.

இப்போது ரமண ஆசிரமத்தின் தலைவராக இருக்கும் திரு. டி. எம். வெங்கடராமனுடன் இனிய முறையில் பழகி பல பிரச்சினைகளை அவருடன் ஓ. பி. ஆர். விவாதித்து வந்தார்.

முதலமைச்சராக இருக்கவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் உறுப்பினர்களும் 1946 டிசம்பர் முதல் ஓ. பி ஆரை வற்புறுத்தினர்கள். ஆனல் இவர் அப்பதவியை ஏற்கத் தயங்கினர். ரமண மஹரிஷிகளிடம் அறிவுரை வேண்டினர். இவர் முன்னிலையில் வேறு சிலரிடம் இவரை நமது மாநிலத்தின் வருங்கால "பிரதம மந்திரி" என்று ரமண மஹரிஷிகள் அறிமுகப்படுத்தினராம்.

28—2—1947 இல் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி, ஓ பி. ஆரைப் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுத்தது. அன்று, ஓ. பி. ஆர். பின்வரும் கடிதத்தை ரமண மஹரிஷிகளுக்கு எழுதினர்:

> "பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் சன்னிதானத்திற்கு ஓமந்தூர் ராமசாமி ரெட்டி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுதிக்கொண்டது. கருணை வள்ளலே!
>
> என்னை இன்று சென்னை சட்டசபைக் கட்சிக் கூட்டம் நம் மாகாணத்தின் அரசியல் கொந்தளிப்புக் கிடையில் என்னைத் தலைவனகத் தேர்ந்தெடுத்து, மாகாணத்தின் அரசியல் பொறுப்பை என்னுடைய தலையில் சுமத்தியிருக்கிறது. நான் எவ்வளவு தூரம் அதற்குத் தகுதி என்பது எனக்குத் தெரியாது. என்னுடைய குறைபாடுகள் எனக்குத் தெரியும். இருந்தாலும் திருவருள் என்னையும் ஒரு கருவியாக்கி வேலைவாங்க எத்தனிக்கிறது போல் தோன்றுகிறது. இந்தத் தொண்டில் அருளாளர்களாகிய மகரிஷிகளுடைய அன்பும் ஆசியும் என்றென்றைக்கும் எதிர்பார்க்கும் தொண்டன்.
>
> ஓ. பி. ராமசாமி ரெட்டி.

இக்கடிதத்திற்கு ரமண ஆசிரமத்திலிருந்து பின்வரும், பதில் அனுப்பப்பட்டது.

2—3—1947

அன்புள்ள ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு,

தங்களுடைய 28உ கடிதம் ஸ்ரீ பகவான் பார்வைக்கு வைக்கப்பட்டது.

எந்த மஹாசக்திக்குத் தங்களை ஒப்படைத்து, பொது சேவைக்கு ஈடுபட்டீர்களோ, எந்த மஹா சக்தி இதுவரையில் தங்களை நடத்தி ஓர் உருவாக்கித் தங்களை வெகு ஜனங்களின் நன்மைக்கு உபயோகமாயிருக்கும்படி செய்து வந்திருக்கிறதோ, எந்த மஹாசக்தி இப்போது தங்களுக்கு இத்தலைமைப் பதவியை தந்தருளியிருக்கிறதோ, அதே மஹாசக்தி, இனியும் தங்களுக்கு ஏற்படவிருக்கும் எல்லா பாரங்களையும் ஏற்றுத் திறமையுடன் நடத்த அருள்புரிவாளென்பதில் ஐயமேயில்லை.

ஸ்ரீ பகவான் உங்களுக்குத் தோன்ருத் துணையாயிருந்து என்றும் அருள் புரிவாராக.

இத்துடன் பகவத் ப்ரஸாதம் அனுப்பியிருக்கிறது.

பகவான் பக்தர் ஸௌக்யம்.

(கையொப்பம்) டி. என். வேங்கடராமன்

சர்வாதிகாரிக்காக

முதலமைச்சராக இருந்தபோது, ஓ. பி. ஆர். ரமண ஆசிரமத்திற்கு எவ்விதச் சலுகையும் காட்டவில்லை.

இவர் பதவியை விட்டு விலகிய சில நாட்களில், திருவண்ணாமலைக் கோயிலுக்குள் ஆயிரக்கால் மண்டபத்தின் ஒரு பகுதியான பாதாளலிங்கக் கோயில் புதுப்பிக்கப்பட்டது. இங்குதான் ரமணர் திருவண்ணாமலைக்கு வந்த புதிதில் கடும் தவம் இருந்தார். அவருடைய சீடரான திருவாட்டி. பெரோஸா தலையார்கான்

என்னும் பார்சி அம்மையார் இந்தத் திருப்பணியை மேற்கொண்டார். இப்பணியை சில அன்பர்களிடம் நிதிபெற்று நிறைவேற்றுவதில் அம்மையாருக்கு ஏற்பட்ட இடையூறுகள் ஏராளம். அவற்றையெல்லாம் கடக்க ஓமந்தூரார் உதவினர்.[1]

பாதாள லிங்கக் குகையைத் திறந்துவைக்க ராஜாஜி ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் அப்போது அறநிலைய அமைச்சராக இருந்த டாக்டர் ராஜன் அதைத் தடுத்துவிட்டார். ராஜாஜியுடனும் முதல் அமைச்சர் குமாரசாமி ராஜாவுடனும் ஓ. பி. ஆர். தொடர்புகொண்டு, ராஜாஜி, திருவண்ணாமலைக்கு வருவதை உறுதிப்படுத்தினர். 14—5—1949 இல் பாதாளலிங்கக் கோயிலை ராஜாஜி திறந்துவைத்தார்.

ஓ. பி. ஆர். முதல் அமைச்சர் பதவியை விட்டு விலகிய பின் மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. பகவான் தாயார் சமாதிமீது கோயில் கட்டுவதற்கு, ஓ. பி. ஆர். மிகவும் உறுதுணையாக இருந்தார்.[2]

ரமண மஹரிஷிகள் உடல்நலம் குன்றியிருந்த நாட்களில் ஓ. பி. ஆர். ஆசிரமத்திலேயே இருந்தார். ரமணர் முக்தி அடைந்தபோது அவருக்குச் சமாதி எழுப்பும் நிகழ்ச்சிகளில் குழப்பம் விளைவிக்க, திராவிடக் கழகத்தினர் திட்டமிட்டிருந்தனர். தாம் அப்போது முதலமைச்சராக இல்லாத போதிலும் மாவட்ட ஆட்சித் தலைவருடனும் மாவட்டப் போலீசுத் தலைவருடனும் ஓ. பி. ஆர். தொடர்பு கொண்டு அமைதி நிலவ அனைத்து ஏற்பாடுகளையும் செம்மையாகச் செய்தார்.

---

1. பேட்டி: திருவாட்டி. பெரோஸா தலையார்கான், திருவண்ணாமலை: மற்றும் 'சோமலே' பதிப்பித்த அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலரைப் பார்க்க

Just as I was trying to renovate the temple of Patala Linga I had to overcome a lot of obstacles and my grateful thanks are to due Sri Omandur Ramaswamy Reddiar who helped me a good deal.

2. ஆதாரம்: மௌண்டன் பாத் என்னும் ஆசிரம வெளியீட்டின் நிர்வாக ஆசிரியர் திரு. வி. கணேசன், எம். ஏ., இந்நூலாசிரியருக்கு 8—12—1977, 15—12—1977, 22—12—1977, ஆகிய நாட்களில் எழுதிய கடிதங்கள் மற்றும் 1969 அக்டோபர் மாத 'மௌண்டன் பாத்' இதழில் வெளிவந்த கட்டுரை.

ரமணருக்குப் பின்னர் ஓ. பி. ஆர். ரமண ஆசிரமத்திற்குச் செல்லுவதை நிறுத்திக்கொண்டு, வடலூரைத் தம் பணிகளுக்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

ரமணருடைய தம்பி நிரஞ்சனுநந்தா என்ற பெயரில் சன்னியாசம் வாங்கிக் கொண்டு ஆசிரமத்தின் சர்வாதிகாரி ஆனுர். ஆசிரமங்களுக்கு ஒருவரும் சர்வாதிகாரியாக இருக்கக் கூடாது என்றும், பகவானின் சீடர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கும் ஒரு குழுவே நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்றும் ஓ. பி. ஆர். கருதினுர். ஆனுல் வேறு சிலரைப்போல இவர் தம் கருத்தை வலியுறுத்த வழக்குப் போடவில்லை; பிற நடவடிக்கைகளில் ஈடுபடவும் இல்லை.

## சேஷாத்திரி சுவாமிகள்

இவர் காஞ்சிபுரத்திலிருந்து திருவண்ணுமலைக்கு வந்து பெரிய மகானுக 40 ஆண்டுகள் திகழ்ந்தார். "நமக்கு ஒன்றும் சொந்தமில்லை" என்ற கொள்கையை இவர் பரப்பினுர். முக்காலத்தையும் உணர்ந்தும் மக்களுக்கு உணர்த்தியும் வந்தார். 4—1—1929 இல் இவர் முக்தி அடைந்தார்.

1926 முதல் ஓ. பி. ஆர்., சேஷாத்திரி சுவாமிகளின் சீடராக இருந்தார்.

## திருவலம் மௌன சுவாமிகள்

இன்றைய தமிழ்நாட்டில் காணப்படும் ஆஸ்திக மறுமலர்ச்சியில் திருவலம் சுவாமிகளுக்குச் சிறப்பான பங்கு உண்டு.

சுவாமிகள் குடும்பச் சாவியை வீசிவிட்டு, உலகச் சாவியை தம் தலைமேல் ஏற்றுக்கொண்டிருக்கிறுர்கள். சுவாமிகளுடைய முயற்சியால் எத்தனையோ தலங்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. பல கோயில்களுக்கு சுவாமிகள் தேர் செய்து கொடுத்திருக்கிறுர்கள். பச்சிலை மூலிகைகளைக் கொண்டு சுவாமிகள் அரிய வைத்தியங்களையெல்லாம் நொடிப் பொழுதில் செய்துகாட்டியிருக்கிறுர்கள். ஏராளமான கோயில் சந்நிதிகளில் முழங்கால் அளவுக்கு ஆறுபோல ரத்தம் ஓடுமாறு ஆடும் கோழியும் பலி கொடுக்கப்பட்டதை நிறுத்தியிருக்கிறுர்கள். கோயில்களுக்குள் மிருகங்களின் பிணங்களை உரித்த தோலைக்கொண்டு

செய்யப்பட்ட இசைக்கருவிகளை நுழைய விடாமல் தடுத்திருக்கிறார்கள். கோயில் மதில்களில் முட்செடிகள் வளர்ந்து படர்ந்து இருந்தாலும் கோபுரங்கள் வெடித்தும் இடிந்தும் இருந்தாலும் சுவாமிகள் கண் கலங்குவார்; வேதனைப்படுவார். முக்கியமான சந்தர்ப்பங்களில் சுவாமிகள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்ன தானம் வழங்க ஏற்பாடு செய்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சைவ உணவுக் கட்டுப்பாட்டைத் திருவலம் மௌன சுவாமிகள், தாம் இருக்கும் இடத்திலும் தாம் செல்லும் இடங்களிலும் பரப்பி வெற்றி கண்டிருக்கிறார்கள்.

திருவலம் என்று இப்போது வழங்கப்பெறும் ஊர் திருவல்லம் என்ற பெயரால் சம்பந்தராலும் அருணகிரி நாதராலும் பாடப்பெற்ற தலம். இங்கு பல்லவச் சிற்பங்களும் கல்வெட்டுக்களும் உள்ளன. பாலாறும் தென் பெண்ணையாறும் கூடும் இடத்திற்கு அருகே, தென் பெண்ணையாற்றின் கரையிலேயே கோயில் உள்ளது. பாலாற்றின் மறுகரையில் இப்போது புகழ் பெற்றுள்ள இரத்தினகிரி பாலமுருகன் கோயில் இருக்கிறது.

திருவலம் சுவாமிகளிடம் ஓமந்தூராருக்குப் பக்தி இருந்தது. சுவாமிகளும் இவரிடத்தில் அளவுகடந்த அன்பு காட்டினார்கள். ஏகவல்லி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்தைச் சுவாமிகள் ஓமந்தூரார் தலைமையில் நடத்தினார்கள்.

சென்னையில் கந்தகோட்டம் எனப்பெறும் கந்தசாமி கோயிலுக்கு சுவாமிகள் வெள்ளித்தேர் செய்து வெள்ளோட்டம் விட்டபோது, தலைமை தாங்குவதற்கு ஓமந்தூராரையே அழைத்திருந்தார்கள். "திருவலம் சுவாமிகளை நம்பி எத்தனை லட்சம் கொடுத்தாலும் வீண் போகாது. தாராளமாகக் கொடுக்கலாம்" என்று அப்போது ஓமந்தூரார் திருமதி. சௌந்திரம் கயிலாசம், திரு. எம். பக்தவத்சலம் ஆகியோர் முன்னிலையில் சொல்லி, மக்களுக்கெல்லாம் நம்பிக்கை ஊட்டினார்.

திருவலத்திற்கு ஓமந்தூரார் பல முறை சென்றிருக்கிறார். சுவாமிகளும் தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குச் செல்லும் போதெல்லாம் வடலூரில் தங்குவது வழக்கம்.

திருவலம் சுவாமிகள் பின்வரும் தகவல்களை ஒரு பேட்டியில் தெரிவித்தார்கள்.

"ஒருநாள் அவர் தம்பி ஓ. எம். லெட்சுமிநாராயண ரெட்டியார் வந்து எங்களை வடலூருக்கு அழைத்துச் சென்றார். ஓமந்தூராரும் வடலூரில் அவருடைய ஆசிரமத்தில் நிஷ்டையில் இருந்தார். நிஷ்டை முடிந்ததும் வந்து சுவாமிகளை நமஸ்காரம் செய்து ஒரு சாய்வு நாற்காலியில் இருக்கச் சொன்னார். 'எனக்கு ஒரு சந்தேகம். என்னைச் சார்ந்தவர்கள் எல்லாம் நான் பதவியில் இருந்த போது அவர்களுக்கு ஓர் உபகாரமும் செய்யவில்லை' என்று குறை சொல்லுகிறார்கள். நமது கிராமத்துக்கு ரோடுபோடவில்லை. பள்ளிக்கூடம் கட்டவில்லை; கோயிலுக்குத் திருப்பணி செய்யவில்லை. இவர் வீடும் புல் குடிசையாகத்தானே இருக்கிறது. தனக்கென்று மெத்தை வீடும் கட்டிக் கொள்ளவில்லை. என்றெல்லாம் என் பெயரில் பாகுபாடு சொல்லுகிறார்கள்.

"இப்படிச் சொல்லுகிறபோது என் சொத்துக்களை அவர்கள் பெயரில் வைத்தால் என்ன செய்வார்களோ என்று எனக்கு அவ நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச் சொத்துக்களை எல்லாம் பாதுகாக்க சுவாமிகள் ஏற்பாடு செய்யவேண்டும்" என்று சொல்லி, கொத்து சாவியை சுவாமிகளிடம் கொடுக்க வந்தார்.

அப்போது சுவாமிகள் சாவிகளை ஏற்க மறுத்து, "பொள்ளாச்சி தொழிலதிபர் நா. மாகலிங்கம் கையில் கொடுத்தால் நிர்வாகம் நன்றாக நடக்கும்" என்றார்கள். அப்படியே ஓமந்தூர் ரெட்டியார் பொள்ளாட்சி மகாலிங்கத்தைக் கூப்பிட்டு அவரிடம் ஒப்படைத்தார். அவர் அந்தச் சொத்துக்களுக்கு மகாலிங்கத்தை மூலதனமாக வைத்து அவரிடம் சாவியைக் கொடுத்துவிட்டார்."

## ஸ்ரீ கோவிந்த இராமானுஜ ஏகாங்கி சுவாமிகள் (1865-1966)

மஞ்சக்குப்பம் திரு. சுதர்சனம் நாயுடு, தேசிய இயக்கத்தில் பங்குகொண்டு தியாகம் செய்தவர். அவரை ஓமந்தூரார் அடிக்கடி சந்தித்ததால், அவருடைய சித்தப்பா கோவிந்த இராமானுஜ ஏகாங்கி சுவாமியுடனும் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. சுவாமிகள் இல்லறத் துறவியாக இருந்தார். அவருடைய குரு,

அவருக்குக் காவி ஆடைகளை வழங்கி, "உனக்கு உடல்நலம் குன்றும் போது இந்தக் காவி ஆடையை அணிந்து கொள். அதன் பிறகு வாழ்நாள் வரை இதுவே உன்னுடைய ஆடை. நீ காவி ஆடை அணிந்த பிறகு விட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது" என்று ஆணையிட்டார்.

சுவாமிகள் வைணவ சம்பிரதாயங்களை நன்கு அறிந்திருந்தார்கள். மாகாண வைணவ மாநாட்டில் தலைமை வகித்தார்கள். ஓமந்தூரார் அவரை அடிக்கடி போய்ப் பார்த்து அவரிடம் வைணவ சமயப் பாடம் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சராக ஓமந்தூரார் கடலூருக்கு வர இருப்பதை அறிந்து, சுவாமிகள் இவரைச் சாப்பாட்டிற்கு அழைத்தார். பதினைந்து பேருக்கு மேல் சாப்பாட்டிற்கு அழைப்பதில்லை. என்று சுவாமிகள் ஒப்புக்கொண்டால், சாப்பிட வருவதாக ஓமந்தூரார் பதில் எழுதினார்.[1]

"பாம்பணைத் துயிலும் பரமனடி போற்றும் பாகவதர் குலமணியாம் கோவிந்த ராமானுஜ சுவாமிகள், திருமாலுக்கு அடிமை செய்வதே பிறவிப் பயன் எனக்கொண்டு பக்திநெறியில் வாழ்ந்து வருபவர்" என்று அவரை ஓமந்தூரார் வருணித்துள்ளார். சுவாமிகள் பரமபதம் அடைந்ததும், ஓமந்தூரார் அங்கு சென்று சமாதி வைக்கத் துணை செய்தார்.

## மாத்தூர் அடிகளார் (1882-1947)

விழுப்புரம் வட்டத்தில் மாத்தூர் என்னும் சிற்றூர் இருக்கிறது. இங்கு மாத்தூர் சுவாமிகள் என்பவர் இருந்தார்கள். அவர்களைக் கண்டதும் பேய்பிசாசுகள் அலறி ஓடும் என்பர். பேய் பிடித்த பெண்டிர், பித்துற்ற பலர், அவர்களால் நன்னிலை எய்தியிருக்கின்றனர். அருளாற்றல் மிக்க அவர்கள், பல ஆண்டுகள் பண்ணுருட்டிக்கும் அரசூருக்கும் இடையேயுள்ள ஆனத்தூரில் தங்கியிருந்தார்கள்.

ஓமந்தூரார் சுவாமிகளை போய்ப் பார்ப்பதும், இவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கச் சுவாமிகள் ஓமந்தூருக்கு வருவதும் உண்டு.

---

1. ஓமந்தூரார் கடிதம். 5-5-1948

## ரெட்டியாபட்டி சுவாமிகள் (1856-1933)

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் நாகலாபுரம் ரெட்டியாபட்டியில் இந்த சுவாமிகள் அவதரித்தார்கள். மதுரை, திருச்செந்தூர், பம்பாய் முதலிய நகர்களுக்குச் சென்று தம் சித்தாற்றலால் சுவாமிகள் புகழ் பெற்ருர்கள். பின்னர் திருக்குற்ருலம் செண்பக அருவி அருகே மறைவான குகையில் அமர்ந்திருந்தார்கள். சுவாமிகளின் கருத்துக்கள் வருமாறு:

1. அரசாங்கச் சட்டங்களை மதிப்பதுபோல் இயற்கையின் சட்டங்களையும் மக்கள் மதிக்கவேண்டும்.
2. கடவுள் ஒருவரே. அவருடைய பெயர்கள்தான் பல
3. அனைவரும் காலை 3 மணிக்கு எழுந்து தோத்திரப்பாடல்களைப் பாடவேண்டும்.
4. சைவ உணவையே உண்ணவேண்டும்.
5. வெள்ளிக்கிழமைகளில் விரதம் இருக்கவேண்டும்.
6. கள், பெண்ணுசை, கொலை, திருட்டு, பொய் ஆகிய ஐம்பெருங்குற்றங்களைத் தவிர்க்கவேண்டும்.
7. மருந்து அருந்தக்கூடாது.

சுவாமிகளிடம் ஓமந்தூரார் பெருமதிப்பு வைத்திருந்தார்.

## மன்ஞர்குடி அருட்பிரகாச சுவாமிகள் (1870-1971)

இந்தச் சுவாமிகள் தமிழ், வடமொழி மற்றும் எட்டு மொழிகள் தெரிந்தவர். சோதிடம், மருத்துவம், தங்கம் செய்யும் கலை முதலியவற்றை அறிந்திருந்தார்.[1]

ஓரிரு ஆண்டுகள் ஓமந்தூரார் விரும்பிய நாட்களில் ஓமந்தூராருடன் வடலூரில் இந்த சுவாமிகள் இருந்தார்கள். இவர்களை உடன் அழைத்துக் கொண்டு, சில ஊர்களுக்கு ஓமந்தூரார் சென்ருர். இவருடைய படத்தையும் வழிபட்டு வந்தார்.

---

1. தகவல்: ஓ. பி. ஆரின் நண்பர்களான திரு சென்னியப்ப முதலியார், இந்தியன் பேங்கு அலுவலர் திரு சுந்தரேசன் (சீர்காழி)

## சுவாமி விரஸ்தானந்தர்

இந்த சுவாமிகள் தேசபக்தி மிக்கவர்கள். பல நூல்களை எழுதியிருப்பவர்கள். சுவாமிகள் பண்ருட்டியில் இருந்த போது, ஓமந்தூரார் அவர்களைக் காணச் செல்லுவார்.

## கும்பகோணம் காரைச்சித்தர் என்ற ஆஞ்சநேய சுவாமிகள் (1920-1960)

இந்த சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஓ. பி. ஆர்., சுவாமிகள் தங்கியிருந்த வட திருமுல்லைவாயிலுக்குப் போனார்கள். பல இடங்களுக்கு அவரை உடன் அழைத்துச் சென்றார்கள்.

## அரவிந்த ஆசிரமம்

திண்டிவனம் நண்பர் ராஜம் செட்டியாரும் ஓ. பி. ஆரும் ஒரு தடவை புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்திற்குச் சென்றனர். ஆலம்பாடி ஏ. வி. பாஷ்யம் ரெட்டியாரை அழைத்துக்கொண்டு மற்றொரு தடவை ஓ. பி. ஆர். அங்குச் சென்றார்கள். மூன்றாவது தடவையாக அரவிந்த ஆசிரமத்துக்குச் சென்றபோது, ஓ. பி. ஆர். திரு. சென்னியப்ப முதலியாருடன் சென்றார்கள். அரவிந்தரின் கொள்கைகளிலும் தத்துவங்களிலும் ஓரளவு நம்பிக்கையிருந்த போதிலும், ஓ. பி. ஆருக்கு, பெண்கள் பலர் இருந்த அரவிந்த ஆசிரமச் சூழ்நிலை பிடிக்கவில்லை.

## சுத்தானந்த பாரதியார்

அரவிந்த ஆசிரமத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்த சுவாமி சுத்தானந்த பாரதியார், தம் மௌனத்தைக் கலைத்து முதலில் பேசியது ஓ. பி. ஆர். தலைமையில்தான். அவருடைய ஆற்றல்களையும் பயன்படுத்தி, வடலூருக்குப் புதுவாழ்வு அளிக்க விரும்பிய ஓ. பி. ஆர்., சுவாமிகளை வடலூருக்கு அழைத்துக் கொண்டார். சுவாமிகளின்பால் கொண்டிருந்த பெருமதிப்பால், சுவாமிகளையே அங்குள்ள நிலையங்களுக்குத் தலைவராக நியமித்து, தாம் துணைத் தலைவராகப் பணியாற்றினர்.

ஜோதி தரிசனம் பற்றி சுவாமிகளை ஒரு சிறு நூல் எழுதச் சொன்னார் ஓ. பி. ஆர். சுவாமிகள் அதில் ஓ. பி. ஆர். பெயரையும் போட்டு அச்சிட்டுக் காட்டினர். தன்னைப்பற்றி எவ்வித

விளம்பரமும் விரும்பாத ஓமந்தூரார் அந்தப் பக்கத்தைக் கிழித்த பிறகே, நூலை வெளியிட இசைந்தார்.

அடக்கமாகவும் அமைதியாகவும் பணிபுரிய விரும்பிய ரெட்டியாரால் விளம்பரப் பிரியரான சுவாமிகளுடன் ஒத்துப் போக இயலவில்லை.

## துறவிகளும் ஓ. பி. ஆரும்

எல்லாத் துறவிகளையும் ஓ. பி. ஆர். நம்பிவிடமாட்டார், தம்முடைய ஆற்றலைத் தீயவழியில் பயன்படுத்தும் துறவிகளின் தொடர்பை வெட்டிக் கொள்வார். ஒழுக்கக் கேடான துறவிகள் பேசும் கூட்டங்களில் கலந்துகொள்ள மாட்டார்.

மேலும் எந்தத் துறவியின் பெயரைச் சொல்லியும், யாரும் ஓ. பி. ஆரிடம் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியாது. ஓ. பி. ஆர். தனிப்பட்ட முறையில், துறவிகளின் சீடராக இருந்தார்; ஆனால் சென்னை மாகாணப் பிரதமர் பதவியைத் துறவிகளிடம் ஒப்புவித்துவிடவில்லை.

ரமண ஆசிரமத்துக்கு மேலும் நிலங்கள், காலி மனைகளைப் பெற அரசு ஆணையிட வேண்டுமென்று சிலர் ஓ. பி. ஆரிடம் கூறினர். இவர் செவி சாய்க்கவில்லை.

ஓ. பி. ஆர். பெரிதும் மதித்த சில துறவிகள் பெயரைச் சொல்லி, முதலமைச்சரிடம் சிலர் வருவார்கள். 'தங்களிடம் சொல்லுமாறு......சந்நிதானத்தில் உத்தரவாயிற்று' என்பார்கள். அதற்கு, ஓ. பி. ஆர். கூறிய பதில் வருமாறு: "......அவர்கள் சொன்னது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அந்தப் பெரியவர்களிடம் நான் கொண்டிருக்கும் மதிப்பை மாற்றிக் கொள்ளுகிறேன். நீங்கள் சொல்லுகிற காரியத்தை நிறைவேற்று வதற்கில்லை. அறநிலையச் சட்டத்தின் திருத்தம் எவ்வித மாறுதலும் இன்றிச் சட்டமாக்கப்படும்."

பெரியவர் சமாதி ஒன்று பற்றி இவரிடம் தக்கவர்கள் தெரிவித்ததனல் அதை அப்புறப்படுத்த ஓ. பி. ஆர். ஆணை பிறப்பித்து விட்டார். பிறகு, இருபதுபேர் வந்து, "அவர் பெரிய மகான். தங்கள்ஆணையை மாற்றிக்கொள்ளுங்கள். புதுஆணை பிறப்பிப்பீர்" என்றனர். "முடியாது" என்றார், பிடிவாதத்தின் மறுபிறவியான ஓ. பி. ஆர்.

‘‘தங்கள் கனவில் அந்த மகான் வந்து சொல்லுவார். அதன் பிறகு ஆணையை மாற்றிக்கொள்ளுவீர்கள்’’ – வந்தவர்கள்.

‘‘கனவில் வந்து சொன்னாலும் நடக்காது. உயிர்பெற்று எழுந்து அந்த மகான் நேரிலேயே வந்து என்னிடம் சொன்னாலும், போட்ட உத்தரவை மாற்றமாட்டேன்’’ என்றார், ஓமந்தூர்ப் பாறையிலிருந்து கோட்டையில் அமர்ந்து ஆட்சிசெலுத்திய கோமான்.

துறவிகளிடம் அல்லது அவர்களைச் சார்ந்தவர்களிடம் ஓமந்தூரார் நடந்துகொண்ட முறையைநினைக்க நெப்போலியனைப் பற்றிய பின்வரும் சொற்கள் நினைவுக்கு வருகின்றன:

> ‘‘நெப்போலியன் பல பெண்களுடன் பழகி மகிழ்ந்தான். எனினும் எந்தப் பெண்ணும் அவனுடைய நிர்வாகத்தில் தலையிட அவன் இடம் கொடுக்கவில்லை. இராணுவ தந்திரங்களை அறிந்துகொள்ள எந்தப் பெண்ணாவது ஐந்தாம் படையாகப் பயன்படுத்தப் படுகிறாள் என்ற சந்தேகம் துரும்பு அளவாவது ஏற்பட்டால் அந்தக் கணமே அவள் தொடர்பை அந்த மாவீரன் அறுத்துக் கொள்ளுவான்’’

"உலகென்னும் மரத்திற்கு உழுவோனே வேரென்று
வலம்வந்து மக்கட்கு வாய்மை சொலும் உழவனே"

# 12

# பண்ணைப் புலவர்

ஓமந்தூராருக்குப் படித்துக் கொடுத்த ஒரு வரவேற்புரையில் மேற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் உண்மை. இந்த நூற்றாண்டில் ஓமந்தூராரைப் போல வேறு யாருமே விவசாயப் பிரச்சினைகளை, அனுபவம் மூலமாக "அ" முதல் "ஃ" வரை அறிந்ததோடு அலசி ஆராய்ந்ததும், இது தொடர்பான நூல்களைப் படித்ததும் இல்லை. இவர் விவசாயத்தில் நிபுணராக விளங்கினார். விவசாயிகளின் உரிமைகளுக்குக் காவலனாக இருந்தார். உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிகாட்டும் ஆசிரியனாகத் திகழ்ந்தார்.

'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்', 'உலகத்தார்க்கு ஆணி, உழுவார்' என்ற சொற்றொடர்களை ஓ. பி. ஆர். ஓயாமல் மற்றவர்களுக்குச் சொல்லிக் காட்டுவார்.

## புள்ளிவிவரம்

வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் இவருக்கு மனப்பாடமாக இருந்தன. பயிர்நிலை, விவசாயத்தின் அடக்கவிலை முதலியவற்றில்

இவர் நிபுணர். இவரை ஏமாற்ற முடியாது. புள்ளிவிவரத் துறையிலிருந்து வரும் வேளாண்மைப் புள்ளி விவரங்களைப் படித்துப் பார்த்து, 'இது சரியில்லை! மீண்டும் பரிசிலனை செய்; நன்ருக விசாரி; சரியான கணக்கு எடு' என்று எழுதுவார். இவ்வளவு இருக்கவேண்டும் என்பார். இவருடைய நகவல் சரியாக இருக்கும்[1]

## இந்திய அரசினர்க்கு வேண்டுகோள்

1948-இல் தில்லியில் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. வேளாண்மைக்குக் கூடுதலான பணம் ஒதுக்கவேண்டும் என்று ஓமந்தூரார் ஒருவர்தான் துணிந்து ஜவஹர்லால் நேரு முன்னிலையில் சொன்ஞர்.

மாநாடு முடிந்ததும், சென்னேக்கு வந்து தம் கருத்தை வலியுறுத்தி விவரமாகப் பிரதம மந்திரிக்கு இவர் எழுதினர். ஏனைய முதலமைச்சர்களுக்கும் அதன் நகல்களை அனுப்பினர்.

நெல் முதலிய வேளாண்மைப் பொருள்களுக்கு இந்திய அரசு கூடுதலான விலை கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் டாக்டர் பா. நடராசனை ஆதாரங்களுடன் விரிவான அறிக்கை எழுதச் செய்து அதையும் இந்திய அரசுக்கு அனுப்பினர்.

இவ்வாறு முரட்டுப் பிடிவாதமாக இவர் எழுதிக்கொண்டே இருந்ததை, நேரு வரவேற்கவில்லை.

## விவசாயிகள்தான் எஜமானர்கள்

1946 ஆகஸ்டு 7-இல் சட்டமன்ற மேலவையில் சாதாரண உறுப்பினராக இருந்தபோது ஓ. பி. ஆர். பேசிய பின்வரும் பேச்சு, இங்கு குறிப்பிடத்தக்கது:

> "எனக்கு முன் பேசிய நண்பர் பி. ஆர். கே. சர்மா, பலவிதமான அரசாங்க ஊழியர்கள் என்ன, இன்னும் மற்ற தொழிலாளர்கள் என்ன இவர்களுடைய வறுமையைப் பற்றி நன்ருய் பேசினர். ஆனல் இதற்கெல்லாம் ஆதியாயிருக்கிற கிராமவாசி எந்த நிலையில் இருக்கிருன். அவனுடைய நிலைமை என்ன? அவனுடைய ஆதாயத்தை

1. தகவல் : டாக்டர். பா. நடராசன்.

அவன் எந்த வகையிலே அடைகிருன்? அவனுக்கு என்ன மிச்சமிருக்கிறது? என்ற விஷயத்தில் இந்தச் சபையிலே இரண்டு நாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்தும் ஒருவரும் அதைப் பற்றிக் கவனித்ததாகத் தெரியவில்லை.

68 லட்சம் பட்டாதார்களைக் கவனிக்க இங்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

எங்கே பார்த்தாலும் ஸ்டிரைக் நடக்கிறது. விவசாயிகள் தான் எஜமானர்கள் என்பதை ஜனங்கள் மறந்து விட்டார்கள். ஒரு விவசாயிக்கு சராசரியில் கிடைப்பது $11\frac{3}{4}$ ரூபாய்.

68 லட்சம் பட்டாதார்களில் ஒரு ரூபாய்க்கும் குறைந்த வரி செலுத்துபவர்கள் சுமார் 14 லட்சம் பேர் இருக்கிருர்கள். இது 1940-ஆம் வருஷத்திய ரெவினியூ டிப்பார்டுமெண்டுக் கணக்கு. இப்போது இன்னும் அதிகமாக இருக்கும். ஒரு ரூபாய்க்குமேல் 10 ரூபாய்க்குள் வரி செலுத்தும் பட்டாதார்கள் இன்னும் 35 லட்சம்பேர் இருக்கிருர்கள். இந்த 50 லட்சம் பட்டாதார்களும் இப்போது உள்ள வருவாயை வைத்துக்கொண்டு தங்களுடைய குடும்பத்தையும், ஆடுமாடு இவைகளை வைத்துக்கொண்டு சரியான வாழ்க்கை நடத்த முடியுமா? அரசாங்கத்தில்உள்ள ஒருகீழ்த்தர பியூனுக்குக் கிடைக்கும் வருமானம்கூட இல்லையே?

விவசாயியும் ஸ்டிரைக்செய்ய ஆரம்பித்துவிட்டால், நாம் சாப்பிட முடியுமா?

எவன் நமக்காக உணவை உற்பத்தி செய்கிருனே, அவனுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.''

## விவசாயிகளிடம் கேள்விக்கணை

சட்டமன்றத்தில் ஓ. பி. ஆர். நிறைய கேள்வி கேட்பார். சாலையில் சந்திக்கும் விவசாயிகள், திருமண வீட்டில் இவருடன் பேச்சுக் கொடுக்கும் உறவினர் ஆகியோரிடமும் கேள்வி கேட்கச் சலிக்கமாட்டார்.

'மாட்டுக்கு என்ன புல் போடுகிறீர்கள்?' என்பார். பாதிப் பேர் ஒன்றும் சொல்ல முடியாமல் விழிப்பார்கள். 'இன்ன புல் போட்டால், பால்கூடக் கறக்கும். இன்ன புல் போட்டால், சதை பிடிக்கும்' என்பார் ஓ. பி. ஆர்.[1]

உங்கள் ஊர் ஏரி எத்தனை ஏக்கரா? ஆயக்கட்டு எத்தனை ஏக்கரா? என்று சில பேரைக் கேட்பார். ஏன் இவரோடு பேச்சுக் கொடுத்தோம் என்ற எண்ணம் கேள்வி கேட்கப் பட்டவருக்கு உண்டாகிவிடும். "இதுகூடத் தெரியாமல் என்ன விவசாயம் செய்கிறீர்கள்? அதனால்தான் நகரங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு அரசாங்கம் தேவையில்லாத சலுகைகளைக் கொடுத்து அவர்களைத் தனிச் சாதியாக வளர்க்கிறது. விவசாயியை மாற்றாந்தாய்க் குழந்தைபோல நடத்துகிறது" என்பார்.

ரமண ஆசிரமத்திற்குப் போகும்போது அங்கு மாட்டுப் பண்ணை நடத்த யோசனை சொல்லுவார். ஒரு குழாய்க் கிணறு போட்டுக் கொண்டிருந்தார்கள். 'இந்த இடத்தில் சரியாய் தண்ணீர் வராது. செலவு கட்டுபிடியாகாது. நிறுத்துங்கள்' என்றார். ஓ. பி. ஆர். சொன்னால் சொன்னதுதான்.

## மாடு

மாடு வளர்ப்பதில் ஓ. பி. ஆருக்கு ஆர்வம் இருந்தது. முதலமைச்சராக இருந்தபோது, இவருடைய பசுமாடு காணாமல் போய்விட்டது காவல்நிலையத்தில் பதிந்துவைத்துவிட்டு வரும்படி கூவம் மாளிகையிலிருந்த தம் ஊழியரிடம் கூறினார். காவல் நிலையத்தினர், மாட்டின் அடையாளங்களைக் கேட்டனர். ஒருவருக்கும் தெரியவில்லை. ஓமந்தூரார்தான் இத்தனை பல், இன்ன அடையாளம் என்று விவரமாகச் சொன்னார். மறுநாள் மாடு அகப்பட்டது.[2]

## கிராம மட்டத்தில் இணைப்பு

கால்நடை மருத்துவத்துறை, வேளாண்மைத் துறை, ஊராட்சித்துறை ஆகியமூன்றையும் கிராமமட்டத்தில் இணைத்தது ஓமந்தூராரின் சாதனையாகும். இதற்காக, சத்திய விஜயநகரம்,

---

1. தகவல்: கிளியனூர் முத்துராம ரெட்டியார்.

2. தகவல்: ஓமந்தூராரிடம் பணிபுரிந்த திரு. சடகோபன் இப்போது, இவர் சம்பளம் கணக்கு அலுவலராக இருக்கிறார்.

பவானிசாகர், கிருஷ்ணகிரி ஆகிய மூன்று பயிற்சி நிலையங்களிலும் (கல்லுப்பட்டி காந்திநிகேதன் நிறுவனங்களின் தலைவர்) திரு. குருசாமியை கௌரவ ஆசிரியராக நியமித்தார்.

## சாலை நெடுக மரம்

சாலைகளில் மரம் வைப்பதில் ஓ. பி. ஆருக்கு அக்கறை இருந்தது. தென்ஆர்க்காடு மாவட்டக் கழகத்தினரிடம் வற்புறுத்தி மேல்கட்டாம்பாக்கத்திலிருந்து நெல்லிக்குப்பம்வரை எத்தனையோ மரங்களை வைக்கச் செய்தார். ஒவ்வொரு மரமும் 500 ரூபாய் பெறக்கூடிய புளியமரங்களும் ஆலமரங்களும் இருந்தன. சில ஆண்டுகளுக்குமுன் அவற்றையெல்லாம் வெட்டிவிட்டார்கள் என்கிறார், சொர்ணூர் பெரியவர் திரு. லெட்சுமிநாராயண ரெட்டியார்.

முந்திரி பயிரிடுவதிலும் ஓ. பி. ஆர். நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். மாமரம் வைப்பது இவருடைய பொழுதுபோக்கு. பொதுவாக, தோட்டக் கலையிலும் காய்கறி பயிரிடுவதிலும் இவருக்குக் கைராசி இருந்தது. இலுப்பை மரங்கள் வைத்தார். சவுக்குப் போட்டார். சுருக்கமாகச் சொன்னால் இவர் தோட்டக் கலை வல்லுநர். செய்முறை தெரிந்த விவசாயி. செடிகொடிகளைப் பேணி வளர்க்கத் தெரிந்தவர் என்கிறார் பின்னலூர் திரு. ஜி. வாகீசம்பிள்ளை.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

உற்பத்தியாளருக்கு சரியான எடை கிடைக்கவும், அன்றாட அங்காடி விலைப் பருவப்படி பொருள்களை விற்கும் வசதியைப் பெற்றுக் கொள்ளவும், கழிவு எதுவுமில்லாமல் விற்பனை செய்யவும் வசதியாக தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை அரசினர் அமைக்க, ஓ. பி. ஆர் 1940 அளவிலேயே ஏற்பாடு செய்தார். திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் துணைத் தலைவராகவும் இவர் இருந்து வந்தார்.

## பழத்தோட்டம்

வடலூருக்குத் தென்மேற்குத் திக்கில் 5 கி. மீ. தொலைவில் மேட்டுக்குப்பம் செல்லும் வழியில் சேப்பாநத்தம் கிராமத்தில் சுமார் 100 ஏக்கர் பரப்புள்ள பயனற்ற நிலத்தை ஓ. பி. ஆர்.

வாங்கி அதில் பழத்தோட்டம் அமைத்தார். தன்னுடைய வயது, தான் வகித்த பதவி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் நாள் தோறும் அங்கே செல்லுவார். இவரைத் தொட்டு நடக்க முடியாமல் இளைஞர்கள் திணறுவது வழக்கம். இப்போது வடலூர் சுத்த சன்மார்க்க நிலையத்தின் தோப்புக்களின் கௌரவ மேற் பார்வையாளராக இருக்கும் நிலக்கிழார் திரு. இராமமூர்த்தி ரெட்டியார் கூறுவதாவது:

> "மிக வேகமாக நடப்பார். என்னையும் அழைத்துக் கொண்டு செல்லுவார். முந்திரிக் கன்றையும், மா, பலா, கொய்யா, சப்போட்டா போன்ற கன்றுகளையும் ஆட்களை வைத்துக்கொண்டு தாம் சொல்லுகிற இடத்தில் நடச் செய்வார். அந்தத் தோட்டத்தில் இப்போது ஆண்டு வருமானம் ரூ. 25,000 கிடைக்கிறது."

## அரசாங்கப் பழத்தோட்டம்

ஓ. பி. ஆர். முதலமைச்சராக இருந்தபோது பெரியகுளத் தில் (மதுரை மாவட்டம்) ஒரு பழத்தோட்டம் அமைக்க உத்தரவு போட்டார்.

1953 இல் ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிந்தது. கோடூர் பழ ஆராய்ச்சி நிலையம் ஆந்திராவுக்குச் சென்றது. அதன் பிறகு தான் பெரிய குளம் பழ ஆராய்ச்சி நிலையம் வேகமாக வளர்ச்சி பெற்றது.

இதற்கிடையில் ஓ. பி. ஆர். 1951 இல் பெரியகுளத்திற்குப் போனார். தாம் பதவியிலிருந்த போது தொடங்கிய நிலையத்தின் வளர்ச்சி இவருக்குத் திருப்தி தரவில்லை. பூச்சிகள் பரவினால் அதைத் தடுப்பதற்கு மருந்து அடிக்கக்கூட அங்கு ஒரு கருவியும் இல்லை. நீங்கள் பழ ஆராய்ச்சி நிலையம் நடத்துகிற 'லெட்சணம்' இப்படியிருக்கிறது என்று வேளாண்மைத்துறை இயக்குநருக்கு உடனே ஒரு கடிதம் எழுதினார்.[1]

---

1. தகவல்: ஓ. பி. ஆருடன் சென்ற திரு. முத்துலிங்க ரெட்டியார். இவர் ஓ. பி. ஆர். தமபியின் சம்பந்தி. தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தின் துணைத் தலைவர். சிறந்த விவசாயி. ஓ. பி. ஆர். பதவியை விட்டு விலகிய பிறகு சென்னைக்கு வரும்போது இவர் வீட்டில் தங்கினார்.

   Letter to the Director of Agriculture:
   You have a wonderful fruit Research Station without even a Sprayer.

## வெள்ளாடு

'வெள்ளாட்டுக்கும் வேளாண்மைக்கும் ஜென்மப் பகை' என்பது முன்னோர் மொழி. ஓமந்தூர் முதலிய பல ஊர்களில் ஒருவரும் வெள்ளாடு வளர்க்கக் கூடாது என்று ஊர்க்கட்டுப்பாடு இருந்துவருகிறது. இத்தகைய நடையை, சட்டத்தின்மூலம் மாநிலம் முழுவதும் பிறப்பிக்கவேண்டும் என்று ஓ. பி. ஆர். கருதினார்.[1]

## சிந்திக் கன்றுகள்

ரமண ஆசிரமத்தில் சிந்திக் கன்றுகள் ஏராளமாக இருந்தன. ஓமந்தூரார் அவற்றில் ஐந்தை விலைக்குவாங்கி, தம் பண்ணையில் வைத்து வளர்க்க ஏற்பாடு செய்தார்

## மரவள்ளிக்கிழங்கு

சேலம் முதலிய ஓரிரு மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கைச் சில ஆயிரம் விவசாயிகள் பயிரிடுகின்றனர். இது உணவாகப் பயன்படுவதோடு, நெசவு ஆலைகளில் (கோடித்) துணியைச் சலவை செய்ய மாவாக அறைத்துப் பயன்படுத்தப் படுகிறது. திரு. டி. பிரகாசம் ஆட்சியிலிருந்த போது இவ்வாறு பயன்படுத்துவதைத் தடை செய்திருந்தார். ஓமந்தூரார் அத் தடையை நீக்கினார்.[2]

## நுண்ணறிவு

ஓ. பி. ஆர். விவசாயத்தில் நுண்ணறிவு படைத்தவர். யாருடைய பண்ணையையும் போய்ப் பார்ப்பார் நாள்தோறும் அஞ்சலில் விவசாயம் குறித்த வெளியீடுகள் வரும். அவற்றை விடாமல் படிப்பார்.

பிறநாடுகளில் நடைபெறும் விவசாய உற்பத்தி பற்றி விவரம் தெரிந்து கொள்ள அந்தநாடுகளின் விவசாயப் பத்திரிகை களை இவர் தாராளமாக வாங்கி வாசிப்பார். சர்வதேச விவசாய நிறுவனம் (ஃபுட் அண்டு அக்ரிகல்சரல் ஆர்கனைசேஷன்)

---

1. தகவல் : திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்.

2. ஓ. பி. ஆரின் உத்தரவைக் கண்டித்து 'ஹரிஜன்' வார இதழில் திரு. ஜே. சி குமரப்பா எழுதினார். ஓ பி. ஆர். அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

ரோமாபுரியைக் கேந்திரமாகக் கொண்டு இயங்குகிறது. அந்த அமைப்பிலிருந்து வெளிவரும் நூல்கள், பத்திரிக்கைகள், அறிக்கைகள் ஆகிய அனைத்தையும் இவருடைய ஆசிரமத்தில் காணலாம். தம்மைக் காணவரும் நிர்மாண ஊழியர்களையும் அவற்றைப் படிக்கும்படி தூண்டுவார்.[1]

## சுயதேவையை நிறைவேற்றுதல்

ஓமந்தூரார் குடும்பத்துக்கு ஓமந்தூரிலும் அன்னம்புத்தூரிலும் நன்செய் நிலங்கள் இருக்கின்றன. இவற்றில் இவருடைய தம்பிமார்கள் நெல், கரும்பு முதலியவற்றைப் பயிரிட்டனர்.

பொதுக் குடும்பத்தின் மற்றொரு சொத்து, புன்செய் நிலம், பெரும் பகுதி தரிசாக இருந்தது.

1937 இல் மஹாராஷ்டிரத்தில் உள்ள பெரோஸ்பூர் என்னும் ஊரில், இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டுக்குச் சென்றிருந்த ஓமந்தூரார் மாநாடு முடிந்ததும் பூனாவுக்குப் போய் அங்குள்ள அனைத்திந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கிடைத்த (பழம், செடி) விதைகளை எல்லாம் மூட்டை கட்டிக்கொண்டார் என்கிறார் அம்மாநாட்டுக்குச் சென்றிருந்த திரு. சா. கணேசன்.[2]

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இன்ன இன்ன பாடங்களை எந்த ஆசிரியர் நடத்துவது என்பதற்கு ஒரு ஏற்பாடு செய்து நேரம் ஒதுக்குவார்கள். அப்போது ஓரிரு ஆசிரியர்கள் மட்டும், 'ஒருவரும் நடத்தவிரும்பாத பாடங்களை நான் சொல்லிக்

---

1. தகவல்: திரு. ஆர். வி. ருத்ரப்பசாமி, முன்னாள் ஆதாரக் கல்வி அதிகாரி.

2 **கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன்** விடுதலைப் போரில் ஈடுபட்ட தியாகச் செம்மல். தமிழின்பாலும் கம்பன்பாலும் இவரது சிந்தையும் செயலும் ஒருமுகப்பட ஆண்டுதோறும் காரைக்குடியிலும் நாட்டரசன் கோட்டையிலும் கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழைப் பரப்பி வருகிறார். தன்னைக் கம்பன் பாத தூளியாக, கம்பன் அடிப்பொடியாக ஆக்கிக்கொண்டு விட்டார். காந்தியடிகளின் கோலம் கண்டு இவரும் சட்டை போடுவதில்லை. மொழி ஆராய்ச்சி, கல்வெட்டு ஆராய்ச்சிகளில் நிபுணர் ஆலயத் திருப்பணி, கோயில் குடமுழுக்கு, மணிவிழா சாத்திரங்களைக் கற்றறிந்தவர். கம்பன் மணிமண்டபமும் தமிழ்த்தாய்க் கோயிலும் கட்டியிருக்கிறார். இவருடைய புலமையின் பயனாக, 'சிற்பச் செந்நூல்' வெளிவந்துள்ளது.

கொடுக்கிறேன்' என்று கூற முன்வருவர். அதுபோல, புன்செய் யாகவும் தரிசாகவும் இருந்த 25 ஏக்கர் பரப்புள்ள ஆசிரமப் பகுதியில் ஓ. பி. ஆர். விவசாயம் செய்தார். இங்கு தென்னை மரங்கள் வைத்தார். எலுமிச்சை, சாத்துக்குடி, சப்போட்டா, மா முதலிய பலவகை பழச்செடிகளை நட்டார். மணிலா, ராகி, கத்தரி. புடலை, கீரை ஆகியவற்றையும் பயிரிட்டார். எலுமிச்சையைப் பிழிந்து, சர்பத்துச் சாறாகப் புட்டிகளில் அடைத்து விற்றார். செடிகளுக்கு இவரே பூச்சி மருந்து அடித் தார். செடிகளின் வேரில் இரும்பு வலை கட்டி, 'மாக்னட் டார்ச்' கொடுப்பார் என்கிறார் ஓ. பி. ஆரின் அக்காள் மங்கம்மாளின் மகன் திரு. ஏ. சி. ஜனார்த்தன ரெட்டியார்.

ஜனார்த்தன ரெட்டியார் 1933 முதல் 1950 வரை மாமா வுடன் இருந்தார். மாமா ஓ. பி. ஆர். "எந்த ஊருக்குப் போனாலும் அங்கிருந்து வரும்போது செடிகளும் காய்கறி விதைகளும் கொண்டு வருவார். வீட்டுக்குத் தேவையான எல்லாவற்றையும் விளைவித்துக் கொள்ளவேண்டும், விலைக்கு வாங்கக்கூடாது என்பது அவருடைய கொள்கை" என்கிறார் மருமகன்.

## விளையவைக்கும் ஆற்றல்

நிலங்களைச் சுற்றிப் பார்க்கும்போதும், ஓ. பி. ஆருடன் உரையாடும்போதும் விவசாயக் கல்லூரியில் பயிலும் அனுபவம் ஏற்படும் என்கிறார், இவருடன் பல துறைகளில் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்ற திரு. குத்ரப்பசுவாமி.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் ஆர்ட்டிசன் கிணறுகள் வெட்டிப் பயன்படுத்தும் நிலக்கிழார்களில் ஓ. பி. ஆர். முன்னோடி யாக விளங்கினார். பத்தாயிரக் கணக்கில் ஒவ்வொரு கிணற்றுக்கும் முதலீடு செய்யக் கூசமாட்டார். 250 அடி ஆழம்வரை கிணறு களை இறக்கவேண்டுமானாலும், மனம் தளரமாட்டார். நீர்வளம் கிட்டும்வரை குழாய்களை இறக்கிக்கொண்டே போவார். இவருடைய துணிவாலும் நம்பிக்கையாலும், ஒன்றுக்கும் உதவாத நிலங்கள் நெல் விளையும் நன்செய்களாக மாறின.

## மரம் நடும் முறை

மிகச் சிறிய செயல்களிலும் ஓ. பி. ஆர். கவனம் செலுத்தினார். மரங்களை நேராக வளரச் செய்ய, பக்கத்தில் சில்லுவிடும் கோப்பு களை வெட்டிவிடச் சொல்லுவார். ஏதேனும் ஒரு மரம் கோணலாகவும் சாய்ந்தும் வளர்ந்திருந்தால், அது செடியாக

இருக்கும்போது இங்ஙனம் வளரும் பக்கச் சில்லுகளை வெட்டி விடாததுதான் காரணம் என்று விளக்குவார். தோட்டவேலை செய்பவர்களுக்கு இவர் மிகவும் சிறந்த முறையில் பயிற்சி கொடுப்பார்.

## ஆற்றுக்காலும் பிறவும்

அரசாங்க அதிகாரிகள் நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்பட்ட போதெல்லாம் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் காவிரி ஆறு பாயும் பகுதிகள், மதுரை மாவட்டத்தில், வைகை, பெரியாறு பாயும் பகுதிகள், திருநெல்வேலி மாவட்டத்தில் பொருனை ஆறு பாயும் பகுதிகள் ஆகியவற்றில் மட்டுமே உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடுவார். ஆற்றுக்கால் இல்லாத பிற பகுதிகளிலும் உற்பத்திப் பெருக்கத்துக்கு ஓ. பி. ஆர். ஆட்சியில்தான் அரசு முயன்றது. புன்செய்ப் பயிர்களை உற்பத்தி செய்வதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்ற கொள்கையை வகுத்தவரும் இந்த ஓமந்தூர் விவசாயிதான்.

## அரசினர் தோட்டத்தில் அரசினர் பண்ணை

சட்டசபை உறுப்பினர்களுக்குப் புதிதாக சில ஆண்டுகளுக்கு முன் கட்டப்பெற்ற விடுதி அருகே 10 ஏக்கரில் பயிர்செய்யும்படி, முதலமைச்சர் ஓமந்தூரரார் வேளாண்மைத் துறை இயக்குநருக்கு ஆணையிட்டார். அந்தப் பண்ணையில் நஷ்டம் ஏற்பட்டது. 'உங்கள் ஆட்களின் சம்பளம் முழுவதையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. அந்தத் தொகை இந்தக் கணக்கில் சேரவில்லை. அப்படியிருந்தும் நஷ்டக் கணக்குக் காட்டுகிற நீங்கள் கிராமவாசி களுக்கு என்ன விவசாயம் சொல்லிக் கொடுக்கப்போகிறீர்கள், போதும் பண்ணையை மூடுங்கள் என்று ஓமந்தூரரார் கடிந்து கொண்டார்.[1]

## கிணறு வெட்ட மானியம்

புதிய கிணறுகள் வெட்டும்படி விவசாயிகளை ஊக்குவித்தார் ஓமந்தூரரார். இவ்வாறு கிணறு வெட்டுவதற்கு ஏற்படும் செலவுக்கு ரூ. 2000 கடன் கொடுக்கவும் அதில் 500 ரூபாயை மானியமாகக்

---

1. தகவல்: கல்லுப்பட்டி திரு. குருசாமி.

கழித்துக்கொண்டு எஞ்சிய ரூ. 1500-ஐ பத்து ஆண்டுகளில் வசூலிக்கவும் இவர் ஒரு திட்டம் வகுத்து, தம் ஆட்சிக்காலத்தில் மாகாணம் எங்கும் நிறைவேற்றினார். இத்திட்டம் இன்றளவும் செயல்பட்டு வருகிறது. இதனால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கிணறுகள் வெட்டப்பட்டு, நான்கு லட்சம் ஏக்கர் நிலங்கள் நீர் வளம் பெற்றுள.

## ஊற்றுநீர்

மரக்காணம், திருக்கோவலூர், பகுதிகளில் ஊற்றுநீரைக் கொண்டு விவசாயம் நடைபெற, அரசாங்கம் வழி செய்ய வேண்டும் என்று 1930-இல் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஓ. பி. ஆர். வற்புறுத்தினார்.[1]

## பஞ்சமும் நிவாரணமும்

ஓ. பி. ஆர். பதவியேற்றபோது, கடும் பஞ்சம் நிலவியது. இதைச் சமாளிக்க இவர் ஏராளமான நடவடிக்கைகள் எடுத்தார். நல்ல முறையில் விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்கிவரும் விவசாயிகள் சிலரை மாநில உணவு ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக நியமித்தார்.

பற்றாக்குறை மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்வதை நிறுத்தினார். அரசினிடம் நெல் கையிருப்பு குறைவாக இருக்கும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அரசுக்கு விற்கப் படும் புன்செய் தானியங்களுக்கு ஒரு மணங்குக்கு 50 காசு 'போனஸ்' கொடுத்தார்.

11,701 நியாய விலைக் கடைகளைத் திறந்தார். மாநிலத்தில் அப்போது இருந்த 10,000 பள்ளிகளிலும் காய்கறித் தோட்டங் கள் போடச் சொல்லி, அவற்றுக்கு வேண்டும் விதைகளை விலை யின்றி வழங்க ஆணையிட்டார்.

நெல்லை முதல் தரம், இரண்டாம் தரம் என்று தரம் பிரித்து தரவாரியாக விலை நிர்ணயம் செய்தார்.

---

1. தகவல்: திண்டிவனம் திரு. ஆர். வெங்கடசுப்பா ரெட்டியார் (பி. 21—7—1897 1917 முதல் ஓ. பி. ஆரின் நண்பர். 1937-இல் சென்னைச் சட்டசபைக்கும் 1946-இல் தில்லி மத்திய சட்டசபைக்கும் 1962-இல் நாடாளுமன்றத்திற்கும் காங்கிரஸ் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்.

உப்பங்கழிகளை (Back waters)சீர்திருத்த ஏற்பாடு செய்தார்.

ஆடுதுறை திண்டிவனம் முதலிய சில ஊர்களில் இயங்கிய வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களை விரிவுபடுத்தினார்.

ஒசூர் கால்நடைப் பண்ணையில் செம்மறி ஆடுகளை வளர்க்க ஒரு திட்டம் வகுத்து, அதற்காகத் தனி அலுவலரை நியமித்தார்.

தென் மாவட்டங்களில் உள்ள பஞ்சப் பிரதேசங்களுக்கு உணவு வழங்க ஒரு தனி அலுவலரை நியமித்தார். உணவுக் கொள்முதல் பங்கீடு பொறுப்புக்களை அவருக்கு ஒப்புவித்தார்.[1] "ஒரிசா மாநிலத்தில் அரிசி கிடைக்கும். நீங்கள் அங்கு போய் கிடைக்கும் அரிசியையும் நெல்லையும் உடனே வாங்கி வாருங்கள் ஏற்கெனவே, நீங்கள் அந்த எல்லையிலுள்ள விசாகப்பட்டினத்தில் மாவட்ட கலெக்டராக இருந்திருப்பதால் இதைத் திறமையாகச் செய்வீர் என்று எதிர் பார்க்கிறேன்" என்றாராம்.

மத்திய அரசினரிடம் மாநிலத்தின் உணவுத் தேவையை ஓ. பி. ஆர். தெரிவித்திருந்தார். இருந்தாலும், எதிர்பார்க்கும் அளவு முழுவதையும் மத்திய அரசு தரும் என்று நம்பி ஏமாந்து போய் நம் மக்களுக்கு மோசம் செய்துவிடக் கூடாது. முன் ஏற்பாடாக ஒரிசாவில் கிடைப்பதையும் வாங்கிவைத்துக் கொள்வோம் என்றாராம்.

## நன்செய் நிலத்தைக் குறைக்காதே

தொழிற்சாலைகள் அமைக்க நிலம் தேவைப்பட்டால் நன்செய் நிலங்களை பயன்படுத்தக்கூடாது என்றும் ஓர் ஆணையை ஓ. பி. ஆர். பிறப்பித்தார்.

## நெல் விலை, கரும்பு விலை

நெல் விலையை உயர்த்தினால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க இயலும் என்று ஓ. பி. ஆர். அடிக்கடி மத்திய அரசுக்கு வற்புறுத்தினார்.

---

1. தகவல்: அப்பதவி வகித்த திரு. ஏ. உத்தண்டராம பிள்ளை, ஐ. ஏ. எஸ்.

நம் மாகாணத்தில் வரண்ட பிரதேசங்களே பெரும் பகுதியாக இருப்பதனால், விவசாயிகள் நிலையில் வரிப் பளுவை மேலும் ஏற்றக்கூடாது. 'அல்லற் பட்டார்க்கு அழுத கண்ணீர் அன்றோ, செல்வத்தைத் தேய்க்கும் படை' என்று வள்ளுவரே கூறியிருக்கிறார் என்பதையும் சுட்டிக் காட்டினார்.[1]

நெல்லிக்குப்பம் ஆலைக்குக் கொடுக்கப்பட்ட கரும்பின் விலை ரூ. 27 ஆக இருந்ததை ரூ. 52 ஆக உயர்த்தும்படி இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இவர் வெற்றி கண்டார்.

## ஏரி குளங்கள்

ஏரிகுளங்கள் தூர்ந்துவிட்டவற்றைச் செப்பனிட முதற்படியாக இராமநாதபுரம், தென்ஆர்க்காடு, அனந்தப்பூர், சித்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் ஒரு திட்டத்தை ஓ. பி. ஆர். நிறைவேற்றினார்.

'ஏரி குளங்களைச் செப்பனிடுவோம்' என்று இவர் ஒரு விரிவான கட்டுரையை முதலமைச்சராக இருக்கும்போது 1947-இல் எழுதினார். 1949 இறுதியில் சக்தி காரியாலயத்தின் மூலம் இதை மேலும் திருத்தி ஒரு நூலாக வெளியிட்டார். சிறு மராமத்து வேலைகளின் பயனை இதில் எடுத்துரைத்துள்ளார். இந்நூலிலிருந்து பின்வரும் பகுதிகளை இங்கே தருகிறோம்:

## காட்டன் இடித்துரைத்தார்

> இந்த ஏரிகளின் முக்கியத்துவத்தையும் தென்னாட்டுக்கு அவற்றால் உண்டாகும் தனிச்சிறப்பையும் இன்றியமையாத் தன்மையையும் முதல்முதல் எடுத்துச் சொன்னவர், கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலைபார்த்த சர். ஆர்தர் காட்டன் என்னும் சிறந்த எஞ்சினீயராகும். அவர், கம்பெனியார் இவற்றின்மேல் கவலை கொள்ளாது இருப்பதை அச்சமின்றி, மேற்சென்று இடித்துக் காட்டினார். விவசாய முறையில் தென்னாடு வடநாடு போலில்லை என்று விளக்கினார். வடநாட்டிலே மழையாலும், பனியாலும் வருஷத்தில் ஒன்பது மாதங்களில் நிலங்கள் சாகுபடியாகின்றன. தென்னாட்டிலோ எப்பொழுதும் வானையே

---

1. சென்னை மாகாண விவசாயிகள் மாநாடு, மீஞ்சூர் (2—11—1952)

நோக்கி உழவர்கள் வாழவேண்டியிருக்கிறது. வான்சிறக்கும் கால், நீரை வகுத்துத் தேக்கிவைத்துக் கொள்ளாவிட்டால் பருவமழையில்லாத காலங்களில் பயிர் செய்வது அரிதாய் விடும். இந்த நுட்பத்தை அறிந்தல்லவோ நம் மூதாதையர் ஏரி, குளங்களைத் தோண்டியமைத்தனர்.

சர். ஆர்தர் காட்டன் எடுத்துரைத்த அறிவுரைகளை பின்னே 1852-ல் வந்த மராமத்துக்கமிஷனும் ஆமோதித்தது. ஆயினும் பல வருஷங்கள் உருப்படியான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. 1880-ல் பஞ்சக் கமிஷன் அதிகாரிகள் விடுத்த அறிக்கையில் ஏரி குளங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியதைப் பற்றி மீண்டும் வற்புறுத்தினார்கள். ஏரி, குளங்களால் விவசாயம் வளர்ச்சியடைவதோடு நாட்டு மக்களுக்கு அவை ஒரு சமூகக் கோட்டைபோல் அமைந் திருப்பதையும் எடுத்துக் காட்டினார்கள். பஞ்சம் ஏற்படும் காலங்களில் மக்களைத் தாங்கவல்லன வென்றும் எடுத்துக் காட்டினார்கள். மக்களினத்திற்கு மட்டுமல்ல, மாக்களாகிய ஆடுமாடுகளுக்கும்கூட அவைகள் தாயமாய் விளங்கின என்பதையும் வற்புறுத்தியுள்ளனர்.''

''விடுதலையின் கடமையாகச் செய்யத் தவறிய நாம் பஞ்சத்தின் கொடுமையால் இன்று செய்து முடிக்க வேண்டியவர்களாகிறோம். இதையும் இதையொட்டிய மராமத்துப் பணிகளையும் மாகாணம் பூராவிலும் நல்ல முறையில் செய்ய 19 கோடி ரூபாய் பிடிக்குமென்றும், எட்டு வருஷங்களாகுமென்றும், அதற்கான செலவில் பாதியை மத்திய அரசாங்கம் தரவேண்டுமென்றும், கணக்கிட்டு நான் ஒரு திட்டம் போட்டிருந்தேன். 1949–50 வருஷ பட்ஜெட்டில் ஒரு கோடி ரூபாய் இந்த விஷயத்துக்காக ஒதுக்கியும் வைக்கப் பட்டிருக்கிறது.''

''ஆற்றுப் பாசனங்களும், ஆற்றுப்பாசனம் பெறும் குளப்பாசனங்களும், அணைக்கட்டுகளையே நம்பியிருக் கின்றன. இந்த அணைக்கட்டுகளில் பலவற்றிற்குப் பழைய அரசர்கள் கட்டி வைத்துவிட்ட பிறகு எந்தச் சீர்திருத்தமும் செய்ததாகத் தெரியவில்லை. மணலும் சேறும் அணைத் தலையில் சேர்ந்து சப்ளை கால்வாய்களுக்குப் போதிய பாய்ச்சல் இல்லாமல் போய்விட்டது. இவற்றையெல்லாம்

பழுதுபார்த்து வேண்டிய இடங்களில் மணற்போக்கிகளையும் மதகுகளையும் (ரெகுலெட்டர்களை) சரிசெய்வதற்குச் சுமார் 2 கோடி ரூபாய் வேண்டுமென்பது என் மதிப்பு.''

''கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக்காலத்தில் சிப்பாய்களை (Sappers & Miners) நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கும் ரஸ்தா அமைப்பதற்கும் உபயோகித்ததாக ஸர். ஆர்தர் காட்டன் கூறுகிறார். அன்றிருந்த சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் இன்றும் நமது ராணுவத்தில் உள்ளனர். தற்போது அவர்களிடம் புல்டோஸர்போன்ற கருவிகளெல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பயன்படுத்திநீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களுக்கு நமது ராணுவத்தை உபயோகிக்கலாம்.''

## அணைக்கட்டுகள்–கீழ்பவானி

கீழ்பவானித் திட்டத்தை நிறைவேற்றவும் அதற்காக, பவானி ஆற்றில் குறுக்கே பவானி சாகரில் ஓர் அணை கட்டவும் திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க, முதலமைச்சர் திரு. டி. பிரகாசமும், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கே. ஆர். கரந்தும் மறுத்தனர். ஓ. பி. ஆர். பதவியேற்றதும், இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி, உடனடியாக வேலை தொடங்க ஏற்பாடு செய்தார்.

சுதந்தர இந்தியாவில் விரைவாகவும் திறமையாகவும் சிக்கனமாகவும் நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம் இதுவே என்று (அடுத்த முதலமைச்சராக இருந்த) திரு. பூ. ச. குமாரசாமிராஜா, ஒரிசாவில் கவர்னராக இருந்தபோது என்னிடம் (இந்நூலாசிரியரிடம்) கூறினார்.[1]

## வீடூர்

வீடூர் அணைக்கட்டுக்கு ஓமந்தூரார் ஒப்புதல் அளித்தார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இது கட்டி முடிக்கப்பெற்றது.

---

1. நான் 1954-இல் அவருடைய விருந்தினனாய்ப் புரி ராஜ்பவனத்தில் தங்கியிருந்தேன். அப்போது ஹீராகூட் அணை கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றிப் பேசியபோது, கீழ் பவானித் திட்டத்தை ஒப்பிட்டுக் காட்டினார்.

## சாத்தனூர் அணை

சாத்தனூர் அணை, திரு. காமராஜ் ஆட்சியில் கட்டப் பெற்றது. அந்த அணைத் திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்றும் கிருஷ்ணகிரியிலிருந்து வெள்ளத் தடுப்புக் கரைகளை அமைக்கவேண்டுமென்றும் ஓ. பி. ஆர். பூனாவிலுள்ள மத்திய நீர்ப்பாசன மற்றும் மின்சார ஆராய்ச்சி நிறுவனத்திற்கு எழுதினார். பொறியியல் அறிஞர்கள் இவர் பேச்சைக் கேட்கவில்லை. ஒரே காலத்தில் திடீரென்று தண்ணீரைத் திறந்துவிடுவார்கள். பயிர்கள் பாதிக்கப் படும். கிராமங்கள் நீரில் மூழ்கும் என்றார்.[1] 1953-இல் ஓ. பி. ஆர். சொன்னது 1977-இல் பலித்தது.

## கர்நூல்–கடப்பா கால்வாய்

தூர்ந்துபோன கர்நூல் கடப்பா வாய்க்காலைப் புதுப்பிக்க ஓ. பி. ஆர். ஏற்பாடு செய்தார்.

## ஆந்திராவில் சில திட்டங்கள்

கோதாவரி ஆற்றின் தண்ணீரை ஒரு பக்கம் கிருஷ்ணை ஆற்றுக்கும் மற்றொரு பக்கம் விசாகப்பட்டினத்திற்கும் செலுத்த ராம்பாதசாகர் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றும் சித்தீஸ்வரா – சோமசைலம் திட்டத்தின் மூலம் கிருஷ்ணை, பெண்ணாறு என்னும் இரண்டு ஆறுகளையும் இணைத்துச் சென்னை நகருக்குத் தண்ணீர் வழங்கவும் இந்திய அரசுக்கு ஓமந்தூரார் சிபாரிசு செய்தார். பெண்ணாற்றை இணைக்கும் திட்டத்தை இன்று வரை நிறைவேற்றவில்லை. எஞ்சிய திட்டங்கள் நாகர்ஜுன சாகர் திட்டம் என்ற பெயரில் நிறைவேறியுள்ளன.[2]

இது குறித்து, ஓய்வுபெற்ற பொறியியல் அறிஞர் திரு. இராமசாமி ரெட்டியார், பின்வருமாறு கூறுகிறார்:

"கோதாவரி கிருஷ்ணை திட்டத்தை நிறைவேற்றவும் அதற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யவும் ஓமந்தூரார் துடித்தார். திரு. எம். எஸ். திருமலை அய்யங்காரை ஆய்வு வேலைக்கு நியமித்தார். ஒரு நாள் அவரை அழைத்து, ஆறு வாரங்களுக்குள் அறிக்கை

1. தகவல்: சொர்ணலூர் லெட்சுமிநாராயண ரெட்டியார்.

2. தகவல்; டாக்டர் பி. கோபால ரெட்டி (நூலாசிரியருக்கு வழங்கிய பேட்டியில்)

சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றுக்கொள் என்று சொன்னார். அவ்வளவு விரைவாகச் செய்யஇயலாது என்றார் திரு. திருமலை அய்யங்கார். அப்படியானால், தலைமை எஞ்சினீயராக இருப்பதற்கு உங்களுக்குத் திறமை போதாது' என்றார் முதலமைச்சர். இத்தகைய கடுஞ்சொற் களால், அதிகாரிகள் இவருடன் ஒத்துழைக்கவில்லை.

"சர். ஆர்தர் காட்டனின் அறிக்கைகளை ஓமந்தூரார் ஓயாமல் படித்து வந்தார்."

"இரயில் போக்குவரத்தைப்போல, நீர்வழிப் போக்குவரத்தும் தேவை என்று வற்புறுத்தினார்."

## மலம்புழா திட்டம்

மலம்புழா என்னும் கேரளத்து ஆறு பாயும் பகுதி, அந் நாளில் சென்னை மாநிலத்தின் எல்லைக்குள் இருந்தது. அந்த ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுக் கட்டுவதற்கு ஓ. பி. ஆர். ஒப்புதல் அளித்தார்.[1]

## பெரியாறு நீர்மின்சாரத் திட்டம்

பெரியாறு நீர் மின்சாரத் திட்டம், ஏட்டளவில் பல ஆண்டு கள் இருந்தது. இரு மாநிலங்கள் இணைந்து நிறைவேற்ற வேண்டியதால் தாமதம் ஏற்பட்டது. ஓ. பி. ஆர். இதற்காகச் சர்தார் பட்டேலைச் சந்தித்து அவர் வாயிலாக, திருவாங்கூர் அரசின் இசைவைப் பெற்று, இரு அரசுகளும் ஒப்புதலளிக்க வகை செய்தார்.[2]

## துங்கபத்திரா திட்டம்[3]

துங்கபத்திரா திட்டத்தை நிறைவேற்ற, திரு டி. பிரகாசம் முதலமைச்சராக இருந்தபோது, அன்றைய சென்னை மாநில அரசும் சுதந்தரமான சமஸ்தானமாக இருந்த ஹைதராபாத் அரசும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டன.

---

1. தகவல்: திரு டி. ஏ. வர்கிஸ், ஐ. சி. எஸ்.
2. ,, ,,
8. ,, ,,

திரு.பிரகாசம் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி சென்னைப் பகுதியில் ஓர் அணையும் ஹைதராபாத் சமஸ்தான எல்லைக்குள் ஓர் அணையுமாக இரண்டு அணைகள் தனித்தனியாகக் கட்டி இரண்டும் பொருத்தப்படும்:

ஓ. பி. ஆர். இந்த உடன்பாட்டைப் படித்துப் பார்த்துச் சிரித்தார். ஒரே அளவாக இரண்டு அணைகளும் அமையாவிட்டால், அணைக்கட்டு முழுவதும் வெள்ளத்தில் அடிபட்டுப் போகுமே? என்றாராம்.[1]

ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைக்கப் பட்டதும், ஓ. பி. ஆர். இந்தப் பிரச்சினையை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவர்களுடன் விவாதித்தார். "ஹைதராபாத் அரசின் ஆட்சிப் பகுதியிலும் சேர்ந்து, அணை முழுவதையும் சென்னை அரசாங்கம் கட்டுவதற்கு, இதன் மூலம் இந்திய அரசு, சென்னை அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குகிறது" என்று இரு அரசுகளையும் கட்டுப்படுத்தும் ஆணையை இந்திய அரசாங்கம் பிறப்பித்தது.

## நில உச்சவரம்பு

நில உச்சவரம்புச் சட்டம் நிறைவேற்றுவதற்காக, சில கொள்கைகளை வகுத்து, மாநில அரசாங்கங்களுக்கு யோசனை சொல்லும் அறிக்கையைத் தயாரிக்கும்படி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி 1947-இல், காந்தியப் பொருளாதார நிபுணர் திரு. ஜே. சி. குமரப்பா தலைமையில் ஒரு குழுவை நியமித்தது, ஓமந்தூராரும் இக்குழுவில் உறுப்பினராக இருந்தார்.

1949-ஆம் ஆண்டின் இறுதியில், இக்குழு தன் அறிக்கையை எழுதி முடித்தது. குழுவின் பெரும்பான்மையோர் தெரிவித்த கருத்து மிகக் கடுமையாக இருப்பதாயும் அவ்வளவு வேகமான சீர்திருத்தம் தேவையில்லை என்றும் ஓமந்தூரார் கருதினர்.

பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்திநின்றும் மாறு படுவதாகக் கூறிய ஓமந்தூரார், மற்றொரு உறுப்பினரான

---

1. மதுரை மாவட்டம் குடகனாற்றில் கட்டப்பட்ட அணை 1977-இல் ஏற்பட்ட வெள்ளத்தால் உடைந்தது.

பேராசிரியர் என். ஜி. ரங்காவை சேர்த்துக் கொண்டு, அந்த அறிக்கையில் மறுப்பு அறிக்கை ஒன்றையும் இடம்பெறச் செய்தார்.

மறுப்பு அறிக்கையில், பின்வரும் குறிப்புக்களைத் தெரிவித்தார்:

(1) தனிப்பட்ட ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய முழு ஆற்றலையும் ஆளுடைமையையும் வெளிப்படுத்த, வேளாண்மைத் தொழிலில் வாய்ப்பு இருக்கவேண்டும்.

(2) வேளாண்மை திறமையாகச் செய்யப்படவேண்டும். உற்பத்திப் பெருக்கமும் ஏராளமானவர்களுக்கு வேலை கிடைக்கச் செய்வதும், இத்தொழிலின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

(3) வேளாண்மைப் பொருள்களின் விலைகள் ஒரே சீராக இருக்கவேண்டும். அடிக்கடி ஏற்ற இறக்கம் ஏற்படக்கூடாது.

(4) பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டால் உழவனுக்கு உண்டாகக்கூடிய நஷ்டத்தைத் தவிர்க்க, பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமுல் செய்யப்படவேண்டும்.

(5) வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களைத் தடுக்கவும் குறைக்கவும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

(6) பயிர்த்தொழில் என்பது, மக்களுக்கு இன்றியமையாதது. ஆகையால் இது இன்றியமையாத தொழில் என்று அரசு அறிவித்து, விவசாய வேலைகள் தடையில்லாமல் நடைபெறுவதற்கு வழி காணவேண்டும்.

(7) பண்ணையாளர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்படவேண்டும்.

(8) எந்த ஒரு கிராமத்திலாவது வாழ்பவர்களில் 75சதம் பேர், திருந்திய வேளாண்மை முறைகளைப் பின்பற்ற ஒப்புக்கொண்டால் அந்த ஊர் மக்கள் எல்லோரையும் கட்டாயப்படுத்தி உறுப்பினர்களாகச் சேர்த்து அதற்கென்று சங்கம் நிறுவலாம் **(Better Farming Society).**

(9) கிராமங்களில் உள்ள காடுகள், நடைபாதைகள், கதிர் அடிக்கும் களம் முதலிய பயிர் செய்யப்படாத பூமிகள் எல்லாம் ஊராட்சியின் வசம் இருக்கவேண்டும்.

## பயிர் இன்சூரன்ஸ்

இயற்கை சக்திகளால் பாதிக்கப்படும் விவசாயிகளைக் காப்பாற்ற தக்கதொரு திட்டம் வகுக்கப்படவேண்டும் என்று ஓ. பி. ஆர். விரும்பினர். பயிர் இன்சூரன்ஸ், கால்நடை இன்சூரன்ஸ் முதலிய சீரிய திட்டங்கள் தெளிவாக அமைக்கப்பட வேண்டும் என்று கருதி தம்முடைய அரசின் பொருளாதார ஆலோசகர் டாக்டர் பா. நடராசன் எம். ஏ., டி. லிட்., அவர் களிடம் கூறி "சென்னை மாகாணத்திற்கொரு பயிர் இன்சூரன்ஸ் திட்டம்" தீட்டச் செய்தார்.

மேற்படி திட்டம், அரசின் வெளியீடாக 1949-இல் 24 பக்கம்கொண்ட நூலாக அச்சிடப்பட்டது. அந்நூலில் பல மாவட்டங்களில் நெற்பயிர் செய்யும் நிலத்தின் பரப்பைக் காட்டும் நிலப்படங்களும் ஏராளமான புள்ளிவிவரங்களும் பிற்சேர்க்கை களும் உள்ளன.

முதலமைச்சர் ஓ. பி. ஆர். இந்நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசகர் இச்சிறு நூலில், சென்னை மாகாணத்துக்கு ஏற்றதொரு பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைத் தெளிவாக நடைமுறைக்கேற்ற வகையில் வகுத் துள்ளார். இதைத் தொடர்ந்து கால்நடை இன்சூரன்சைப்பற்றி யும் ஆராய்ந்து ஒரு திட்டத்தை வகுப்பார் என அறிகிறேன். எதிர்பார்த்ததிற்கு முற்றிலும் மாறுக, பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தால் அரசாங்கத்துக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் இலாபம் கிடைக்குமென்று அவர் கருதுகிறுர். நெற்பயிர் அளவில் வெற்றிபெறுமேயானுல் மற்றப் பயிர்களுக்கும் இந்தத் திட்டத்தை விவரிக்கலாம் என்பதும் அவர் எண்ணம். உண்மையில் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் இந்திய விவசாயப் பொருளாதாரத் துறையில் புத்தம் புதியதொரு கருத்தாகும். எனவே இத் திட்டத்தைப்பற்றிய தங்கள் கருத்தைப் பொதுமக்கள் பொருளாதார ஆலோசகர்க்கு அறிவிப்பார்களானுல், அது, திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கத்துக்குத் துணையாக இருக்கும்."

இன்றுவரை, இத்திட்டம் செயல்படவில்லை. ஆனால் இத்தகைய திட்டம் தேவை என்பதை இப்போது பலரும் ஒப்புக் கொள்கிறார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்னரே இத்திட்டத்தைத் தீட்டியதிலிருந்து ஓமந்தூராரின் கூரிய அறிவும் மதி நுட்பமும் தெரியவரும்.

## விவசாய சீர்திருத்தமும் தொழில் சமநிலையும்

உழவு, தொழில், வாணிபம், அரசாங்கத்திலும் அலுவலகங்களிலும் பார்க்கும் வேலை ஆகிய நான்கு முயற்சிகளும் சமநிலை அடையும் வரை விவசாயத்திற்கு நிலையான மேம்பாடு இல்லை என்பது ஓமந்தூராரின் முடிவான கருத்து. விவசாயத் துறையில் தாம் பெற்றிருந்த அனுபவ, ஆராய்ச்சி அடிப்படைகளில், முதலமைச்சராக இருந்தபோது மேற்கொண்ட தலைப்பில் ஒரு நூலை எழுதினார். தமிழில் எழுதப்பட்ட இந்நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பு "Agrarian reforms and Parity Economy" என்ற பெயரில் சென்னை அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகரால் 1948 இல் வெளியிடப்பட்டது. இதைப்பற்றி, பிறிதோரிடத்தில் கூறுவோம்.

## விவசாயிகளுக்கு அறிவுரை

விவசாயிகள், ஆடம்பரமான செலவுகளைச் செய்யக் கூடாது என்றும் தங்கள் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள தர்மங்களுக்கு ஊறு ஏற்படாதபடி அவற்றிற்கு "டிரஸ்ட்" ஏற்படுத்தி, தேவையான நிலங்களை ஒதுக்கவேண்டும் என்றும் 1949 முதல் தம்மைச் சந்தித்த எல்லா விவசாயிகளுக்கும் இவர் அறிவுரை கூறினார்.

இயந்திரக் கலப்பை முதலியவற்றைப் பயன்படுத்த வேண்டும், பயிர் செய்யும் முறைகளைக் காலத்திற்கு ஏற்றபடி திருத்தியமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஓ. பி. ஆர். அனைவர்க்கும் அறிவுரை கூறினார்.

## முடிவுரை

ஓமந்தூரார் இன்னும் ஐந்து ஆண்டுகள் முதல் அமைச்சராக இருந்திருந்தால், தமிழ்நாட்டை வேளாண்மை வளத்தில் இந்தியாவின் முதல் மாநிலமாக உருவாக்கியிருப்பார் என்பது உறுதி.

''கூட்டுறவு இயக்கத்தில் ஓமந்தூரார் மிகுந்த அக்கறை காட்டினர். கூட்டுறவுச் சங்கங்கள் செம்மையாக இயங்குவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றில் அவர் ஆற்றிய பங்கு முக்கியமான இடம் பெறும். 1946—47 இல் பிரகாசம் அமைச்சரவையில் கூட்டுறவு அமைச்சராக இருந்த அனுபவத்தை வைத்து, நான் இதை உறுதியாகக் கூறுவேன்.''

— திரு. வி. வி. கிரி[1]

# 13

# கூட்டுறவு இயக்கம்

1920 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு இயக்கம் நடைபெறும் முறையை ஓமந்தூரார் கூர்ந்து கவனித்துவந்தார். அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் கூட்டுறவு சங்கங்களைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு, அவற்றையும் அரசியல் செல்வாக்குப் பெறுவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்தனர். ஆகையால் அரசியல்வாதிகள் கூட்டுறவுச் சங்கங்களில் பதவி வகிக்கக் கூடாது என்றும், விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காகவே, இச்சங்கங்கள் பயன்பட வேண்டுமென்றும் ஓ. பி. ஆர். கருதினர். இறுதிவரை, இக்கருத்தையே வலியுறுத்தி வந்தார்.

---

1. *திரு. வி. வி. கிரி, பாரிஸ்டர்-அட்-லா, தொழிலாளர் தலைவர்; மாநில அமைச்சர், இலங்கையில் இந்திய ஹைகமிஷனர், பல மாநிலங்களில் கவர்னர், இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர்.*

## ஒரு பங்கு – ஒரு வாக்கு

கூட்டுறவு இயக்கத்தில், 'ஒரு பங்காளிக்கு ஒரு வாக்கு' என்ற முறை நிலவியது. பணத்தைமட்டும் பயன்படுத்தி, சங்கங்களைச் சிலர் ஆக்கிரமித்துக் கொள்ளுவதைத் தடுக்க இந்த ஏற்பாடு இருந்தது. இதனால் ஒருவருக்கு எத்தனை பங்கு இருந்த போதிலும் ஒரு வாக்குமட்டுமே இருந்தது.

இந்த விதியின் விளைவாக, 10 ரூபாய்க்கு ஒரு பங்குமட்டும் எடுத்துக் கொண்டு, சிலர் கூட்டுறவுச் சங்கங்களின் சீரான பணிகளை இயங்கவிடாமல் தடுத்து வந்தனர். "மல்லுக்கு மாகாணிப் பங்கு போதும்" என்ற பழமொழியை நடைமுறையில் கூட்டுறவு இயக்கத்தார் உணரலாயினர். 'ஒரு ஆளுக்கு ஒரு வாக்கு' என்று ராபர்ட் ஓவல் என்பார் 'ராச்டேல் பயனியர்ஸ்' என்னும் நூலில் வெளியிட்ட கருத்துத் தவறானது; பங்குப்படி வாக்குரிமை இருக்கவேண்டும் என்று ஓ. பி. ஆர். 1947 இல் கூட்டுறவு மாநாட்டில் கூறினார். இப்போது உலகம் முழுவதும் கூட்டுறவு இயக்கத்தில் ஓ. பி. ஆர். அன்று தெரிவித்த கருத்து ஏற்கப்பட்டு வருகிறது.[1]

## பனைவெல்லக் கூட்டுறவு

மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டபோது, பனைமரம் ஏறியவர்களுக்கு மாற்றுவேலை கொடுப்பதற்காக, வெல்லம், கருப்பட்டி காய்ச்சுபவர்களுக்குத் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ஓ. பி. ஆர். ஆணையிட்டார்.

## முன்னாள் போர்வீரர்களின் கூட்டுறவு

ஓமந்தூரார் பதவியேற்ற சமயத்தில், இரண்டாம் உலகப் போரில் கலந்துகொண்டு, பின்னர் படைக் கலைப்பால் வீடுகட்கு அனுப்பப்பெற்ற முன்னாள் வீரர்களுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்கவேண்டிய நிலை இருந்தது. இந்த வீரர்கள் பெரும்பாலும் வட ஆர்க்காடு மாவட்டத்தினராக இருந்தனர். எனவே அந்த மாவட்டத்தில் பஸ் கம்பெனி நடத்த அவர்களுக்கு இசைவு

1. தகவல்: டாக்டர் பா. நடராஜன்.

வழங்கி, மோட்டார் போக்குவரத்து நடத்த முன்னுள் போர்வீரர் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்ய ஓ. பி. ஆர். ஆணை பிறப்பித்தார்.

### நில மீட்புச் சங்கங்கள்

காவேரி மேட்டூர் திட்டத்தின்கீழ், தஞ்சை மாவட்டத்தில் புதிய பகுதிகளுக்கு வழங்கப்பட்ட காவிரி நீரைப் பயன்படுத்திக் கொள்ள வசதியாக, புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்க ஓ. பி. ஆர். நிலமீட்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தார். 15 ஆண்டுகளில் திரும்பப் பெறும் கடன்களை இந்தச் சங்கங்களுக்கு மாநில அரசு வழங்கிற்று. இதனுல் 11, 169 ஏக்கர் பரப்புள்ள நிலம் நன்செய் ஆக மாற்றப்பெற்றது.

### உற்பத்தியாளரும் நுகர்வோரும்

பொருளை உற்பத்தி செய்பவர்க்கு நியாயமான விலை கிடைப்பதில்லை; அதே நேரத்தில் பொருளைப் பயன்படுத்துபவர் கூடுதலான விலை கொடுக்க நேரிடுகிறது. ஆகையால் இடைத் தரகர்களை நீக்கவேண்டும் என்ற எண்ணம் இளமை முதல் ஓ. பி. ஆரை ஆட்கொண்டது. இந்தக் குறிக்கோளை அடைய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஆர். பி. கபூர், ஐ. சி. எஸ். என்பவரைத் தனி அலுவலராக ஓ. பி. ஆர். நியமித்தார்.

### கரும்பு

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் குறிப்பாக நெல்லிக்குப்பம் பகுதியில் கரும்பு பயிரிடுபவர்களின் பிரச்சினைகளை ஓ.பி.ஆர். அலசி ஆராய்ந்திருந்தார். கரும்பு பயிரிடுபவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டால் தான், அவர்கள் நல்ல விலை பெறலாம் என்று வலியுறுத்தி வந்தார். கரும்பு வேளாண்மைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று இவர் 1940 இல் சொல்லியுள்ளார்.

கூட்டுறவு இயக்கத்தில் சர்க்கரை ஆலைகளை நடத்த வேண்டும் என்று ஓ. பி. ஆர். 1940 இலேயே கூறினுர்.[1] அந்தக் கருத்துப் பரவி இப்போது தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 10 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருவது பாராட்டுதற்குரியது.

---

1. **தகவல் : திரு. முத்துலிங்க ரெட்டியார் :** இவர் கயப்பாக்கம் ஜமீன்தார் செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தின் துணைத் தலைவராக இருந்தவர். மதுராந்தகம் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியின் தலைவர், வடலூர் சுத்த சன்மார்க்க நிலையத்தின் அற செயற் குழுவின் உறுப்பினர்.

*நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*
*.................. .................. ..................*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே*
*நீரும் நிலனும் புணரியோ ரீண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே*
*வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்*

— *புறநானூறு.*[1]

# 14

# பொருளாதாரக் கருத்துக்கள்

## அரசாங்கத்தின் கடமை

உள்நாட்டில் சட்டமும் அமைதியும் நிலவச் செய்வதும் வெளிநாட்டார் படையெடுத்து விடாமல் பார்த்துக்கொள்வதும் தான் அரசாங்கத்தின் கடமை என்ற கருத்து 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை உலகெங்கும் இருந்து வந்தது.

இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களும் மேற்கண்ட அரசியல் கொள்கைப்படியே அரசாங்கத்தை நடத்திவந்தனர்.

1947-இல், ஓ. பி. ஆர். பதவியேற்ற ஆண்டில், இந்தியா சுதந்தர நாடாகிவிட்டது. வெறும் அரசியல் சுதந்தரத்துக்காக, நாம் சுதந்தரப் போராட்டத்தை நடத்திவிடவில்லை.

---

1. ஓ. பி ஆர். விரும்பிப் படித்த பாடல். இந்த இருபதுவரிப் பாடல் முழுவதையும் 'ஏரிகுளங்களைச் செப்பனிடுவோம்' என்ற நூலில் வெளியிட்டுள்ளார்.

பொருளாதார சுதந்திரத்தையும் வேண்டினேம். ஏழை மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதும், பொருளாதார வசதிகளில் இருந்த ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதும், வேலை வாய்ப்புகளை மிகுதியாக்குவதும் அரசாங்கத்தின் கடமை என்பதை ஓ. பி. ஆர். உணர்ந்தார்.

இந்திய அரசாங்கத்தில் பிரதமமந்திரியாக இருந்த ஜவஹர்லால் நேருவுக்கும் துணைப்பிரதம மந்திரியாக இருந்த சர்தார்.வல்லபாய் பட்டேலுக்கும் இந்தத் தேவைகள் தெரியாமல் இல்லை. ஆனல் அவர்கள் இதைப் பற்றிச் சிந்திக்கக்கூட இயல வில்லை. பாக்கிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட கலகங்களை அடக்குவதும், அகதிகளாக ஓடிவந்த கோடிக்கணக்கான மக்களுக்குத் தஞ்சம் கொடுப்பதும், 500 சமஸ்தானங்களை இணைப்பதும் அவர்களுடைய அன்ருட வேலையாகிவிட்டது. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்த பிறகு 1950-இல் ஒரு திட்டக்குழு நியமிக்கப்பெற்றது.

இந்திய அரசாங்கம் சொல்லட்டும்; பிறகு செய்வோம். ‘போடு தோப்புக்கரணம் என்ருல் எண்ணிக்கொள் சாமி’ என்று பணிந்துபோகும் பிள்ளை அல்ல ஓ. பி. ஆர்.

இந்திய அரசாங்கத்துக்கு வழிகாட்டும் முறையில், மாநில அளவில் திட்டக்குழு அமைப்பதற்கு விரும்பினர்.

திட்டங்கள் தீட்டுவதற்கு, புள்ளிவிவரங்கள் தேவைப் பட்டன. செம்மையான புள்ளிவிவரத்துறை, மாநில அரசில் இல்லை என்பதை ஓ. பி. ஆர். உணர்ந்தார். எனவே, பொருளாதார ஆலோசகர் ஒருவரை நியமிப்பதென்று முடிவு செய்தார்.

பொருளாதார ஆலோசகர் பதவியே தேவையில்லை என்ருர், ஓ. பி. ஆரின் நிதி அமைச்சர் திரு. கோபால ரெட்டி.[1] ‘போ. ஐயா போ, நான் நியமித்தே தீருவேன் என்ருர் ஓமந்தூரார், யாரை நியமிப்பது என்ற முடிவோ, இன்னருக்குச் சலுகை செய்வதற்காகப் பதவியை ஏற்படுத்துகிற பழக்கமோ ஓ. பி. ஆருக்கு இல்லை.

---

1. அவரே, நூலாசிரியரிடம் சொன்ன தகவல்.

## பொருளாதார ஆலோசகர் நியமனம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக இருந்த டாக்டர் பி. வி. நாராயணசுவாமி நாயுடு, எம். ஏ., பி. காம்., பாரிஸ்டர் – அட் – லா என்ற அறிஞரை, பொருளாதார ஆலோசகராக ஓ. பி. ஆர். நியமித்தார். அவர் பதவியேற்றுக் கொள்ளுவதற்கு முன்னரே, இந்திய அரசாங்கம் அவரை, காப்புவரிக் கழகம் (டாரிஃப் போர்டு) என்ற அமைப்பின் உறுப்பினராக நியமித்துவிட்டது. அவர் பம்பாய்க்குச் சென்று அப்பதவியை ஏற்றுக்கொண்டார். சென்னை அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகர் பதவியை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. தக்கவராக வேறு யாரையாவது நியமிக்கவேண்டும் என்று முதலமைச்சர் ஓ. பி. ஆர். தன்னுடைய தொழில் அமைச்சர் திரு. எச். சீத்தாராம ரெட்டியிடம் கூறினார்.[1]

மாநிலத் தொழில் அமைச்சர்கள் மாநாடு தில்லியில் 1947 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்தது. அந்த மாநாட்டை நடத்தும் அதிகாரியாக இந்திய அரசு, டாக்டர் பா. நடராஜனை நியமித்திருந்தது. அப்போது இவரைப்பற்றி அறிவதற்கு திரு. சீத்தாராம ரெட்டிக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

டாக்டர் நடராஜனை, பொருளாதார ஆலோசகராக நியமிக்கலாம் என்று திரு. சீத்தாராம ரெட்டி கூறியதை ஒப்புக் கொண்டு, ''முறைப்படி மனு ஒன்றை உரிய மேலதிகாரி மூலம் அனுப்புங்கள்'' என்று ஓ. பி. ஆர்., டாக்டர். நடராஜனுக்குக் கடிதம் எழுதினார்.

தம்முடைய மேலதிகாரி, திரு. எஸ். ஏ. வெங்கட்டராமன், ஐ. சி. எஸ். என்பவரின் சிறந்த பாராட்டுடன் டாக்டர் நடராஜன் தம் மனுவை அனுப்பினார். இவரை நியமித்து ஓ. பி. ஆர். ஆணை பிறப்பித்தார். 1948 பிப்ரவரியில் டாக்டர். நடராஜன் சென்னையில் தம் புதிய பதவியை ஒப்புக்கொண்டார்.[2]

---

1. 1975-இல் திரு. சீத்தாராம ரெட்டி காலமாகிவிட்டார். எனவே இவரைப் பேட்டி காண இயலவில்லை.

2. தகவல்கள் — டாக்டர் நடராஜன்

## ஆலோசகரின் பதவி

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் பொருளாதார ஆலோசகர் நியமிக்கப்படவில்லை. டாக்டர். நடராஜன், பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரங்களுக்கான அரசாங்கத் துறை ஒன்றை அமைத்தார். இவருடைய அறிவுரைகளை ஏற்று; அரசு ஆணை பிறப்பிப்பதற்கு வசதியாக, "அரசாங்கத்தில் கூட்டுச் செயலாளர் மற்றும் புள்ளிவிவர ஆணையாளர்" என்ற பதவி அந்தஸ்துகளை இவருக்கு ஓ. பி. ஆர். வழங்கினார்.[1]

முப்பதுக்கும் மேற்பட்ட பிரச்சினைகள் குறித்து இவர் ஆராய்ச்சி நடத்தி மாநிலத்தின் பொருளாதாரத்தை அலசி ஆராய்ந்தார். ஒவ்வோராண்டிலும் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புள்ளிவிவரங்களை வெளியிட்டார். மற்றும் இவர் பணிகளைக் குறித்து, ஏற்கெனவேயும் கூறியுள்ளோம்.

## உற்பத்தி வகைகள்

நிலம், தொழில், முதலீடு செய்தல் ஆகிய மூன்றையும் உற்பத்தி வகைகளாகப் பொருளாதார அறிஞர் வகுத்துள்ளனர். இவற்றுள் நிலமே முதலாவது இடத்தைப் பெறுகிறது. உணவைத் தரும் உழவே தலைசிறந்த தொழில். உழவர் கை மடங்கின் பற்றற்ற முனிவரும் உயிர்வாழ இயலாது. இக்காரணங்களால் உணவு உற்பத்திக்கு இன்றியமையாத நிலம், சிறப்பிடம் வகிக்கிறது. ஓமந்தூரார், விவசாயியாக இருந்ததால் இதைத் தம் அனுபவத்தால் உணர்ந்தார்.

உழுதல், எருவிடுதல், களை கட்டல், நீர் பாய்ச்சல், பயிரைக் காத்தல் ஆகிய நான்குக்கும், உழவனுக்கு வேண்டும் வசதிகளை அரசாங்கம் விழிப்புடன் செய்து கொடுக்க வேண்டும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் உழவனுக்குக் கிடைக்கும்படியும் செய்யவேண்டும் என்பன ஓ. பி. ஆரின் அடிப்படையான கருத்துக்கள்.

உழவு என்பது முழுநேரத் தொழில், நாள் தவறாமல் நிலத்துக்குச் சென்று வயல் வேலைகளைக் கவனிப்பவனே உழவன். உழவுத் தொழிலில் வேலை நிறுத்தத்திற்கு இடம் இல்லை; களை

1. டாக்டர் நடராஜன் பிறந்த நாள் மலரில் அவர் கொடுத்த பேட்டி. இந்த மலர் 1978-இல் வெளிவந்தது.

எடுப்பதையோ, உபரித் தண்ணீரை வெட்டி விடுவதையோ, தேவையான தண்ணீர் பாய்ச்சுவதையோ உரம் இடுவதையோ, அறுவடை செய்வதையோ உரிய நாட்களில் செய்யவேண்டும். 4 நாட்களுக்கோ 10 நாட்களுக்கோ 'ஸ்டிரைக்' செய்துவிட்டு, நம் விருப்பப்படி இந்த வேலைகளைச் செய்ய முடியாது. எனவே விவசாயம் இலாபகரமான தொழிலாக அமையவேண்டும்.

செங்கற்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்களில் நிலம் வைத்திருப்பவர்களில் 30 சதத்துக்கு மேற்பட்டவர்கள், தங்கள் நிலம் எது என்றுகூடத் தெரியாமல் சென்னையில் வாழ்கின்றனர். இவர்களில் சிலர் நெல் என்பது ஏதோ ஒரு மரத்தில் காய்ப்ப தாகவும் நினைக்கிறார்கள். விவசாயத்தில் அக்கறை இல்லாத ஒரு கூட்டத்தாரிடம் நிலம் இருப்பதால் உணவு உற்பத்தி பாதிக்கப் படுவதை ஓ. பி. ஆர். சுட்டிக் காட்டினார்.

## போக்குவரத்து வசதிகள்

விவசாய உற்பத்திக்கு உதவும் வகையில் சாலைகள் போடப் பட வேண்டும்; பாலங்கள் கட்டப்படவேண்டும் என்பதும் ஓ. பி. ஆரின் கொள்கை. தென் ஆர்க்காடு மாவட்டக் கழகத்தில் சொல்லி கோளியனூருக்கும் பண்ணுருட்டிக்கும் இடையே தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் போடச் செய்தார்.

பண்ணுருட்டிக்கும் வடலூருக்கும் நடுவே கெடிலத்தின் மீது ஒரு பாலம் அமைக்கவும் ஓ. பி. ஆரே காரணமாக இருந்தார்.[1]

## ஏற்றத் தாழ்வு

மிக உயர்ந்த, மிகக் குறைந்த சம்பளங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு ஆயிரம் ரூபாய்தான் இருக்கவேண்டும் என்று ஓ. பி. ஆர். எண்ணினார். அதை நிறைவேற்றுவது குறித்து விவாதித்தார். தலைமைச் செயலகத்திலுள்ள அலுவலர்கள், இந்த இலட்சியத்தைச் செயல்படுத்துவது அத்துணை எளிது அன்று என்றனர். இதனால் ஏற்படக்கூடிய வேறு பல விளைவுகளைச் சமாளிக்க வேண்டியது வரும் என்றும் சுட்டிக் காட்டினர். வேறு வழியின்றி ஓ. பி. ஆர். தம் எண்ணத்தைக் கைவிட்டார்.[2]

---

1. தகவல்: சொர்ணவூர் திரு லெட்சுமிநாராயண ரெட்டியார்.

2. தகவல்: திரு. சடகோபன்

## விஞ்ஞான வளர்ச்சி

பண்டமாற்று போன்ற எளிய பொருளாதார நிலைக்கு மனிதன் திரும்பிச் செல்லவேண்டும் என்றோ, இயந்திரத் தொழில்கள் கூடாது என்றோ ஓ. பி. ஆர். கூறவில்லை. "அவ்வாறு சொல்லுவது விஞ்ஞான அபிவிருத்திக்கும் மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்துக்கும் எதிரிடையான காரியம்" என்று அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.[1]

மெட்ராஸ் இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னலஜி (எம். ஐ. டி.) என்ற தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்புக் கல்விநிலையத்துக்கு ஒப்புதல் அளித்தவர் ஓ. பி. ஆரே.

தில்லியிலும் கரக்பூரிலும் இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னலஜி (ஐ. ஐ. டி.) என்ற புதுமுறைப் பொறியியல் கல்லூரிகள் வெளிநாட்டாரின் தொழில்நுட்பத் துணையுடன் நிறுவப்பட்டபோது, சென்னையிலும் இத்தகைய நிறுவனத்தை அமைக்க வாய்ப்பு இருப்பதாக இந்திய அரசுக்கு ஓ. பி. ஆர். எழுதினார்.

புதிய தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும். ஆனால் அவை ஒருசில குறிப்பிட்ட நகர்களில் மட்டும் அமைந்துவிடக்கூடாது. ராட்சத நகரங்களை மேலும் உருவாக்க வேண்டாம். தொழிற்சாலைகள் பரவலாக இருக்கட்டும் என்பது ஓ. பி. ஆர். கருத்து. சேஷசாயி இன்சுலேட்டர்ஸ் லிமிடெட், நெய்வேலி செராமிக்ஸ் அண்டு ரிப்ராக்டரிஸ் லிமிடெட் என்ற இருதொழிற்சாலைகளும் நெய்வேலியில் அமைவதாக இருந்தன. ஓ. பி. ஆர். முயற்சியால் அவை வடலூரில் ஏற்பட்டன.

## சொந்தக் கொள்கையும் அரசாங்கக் கொள்கையும்

ஓ. பி. ஆர். பதவியேற்றபோது கடுமையான பஞ்சம் நிலவிற்று. இவரோ சைவ உணவுக்காரர். அதற்காக, நாட்டு மக்கள் எல்லோரும் வேற்று உணவுகளை உண்பதை நிறுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கவில்லை. மீன் உண்பவர்கள் பல லட்சம் பேர் இருப்பதால், மீன் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கச் செய்தார்.

---

1. ஓமந்தூரார் எழுத்தும் கருத்தும், பக்கம் 161.

## வேலை வாய்ப்பு

எந்தத் தொழிற்சாலை ஏற்பட்டாலும், அதனால் மக்களுக்கு வேலை வாய்ப்பு பெரிய அளவில் உண்டாக வேண்டும் என்று ஓ. பி. ஆர். விரும்பினார்.

இரண்டாவது உலகப் போரில் பங்கு கொண்ட வீரர்களை, படையிலிருந்து விடுவித்து, 1946-இல் பிரிட்டிஷ் அரசாங்கம் படைக் கலைப்புச் செய்தது. திடீரென்று இவ்வாறு வேலையை இழந்தவருக்கு மறுவாழ்வு ஏற்பாடு செய்வதற்காக, ஆங்காங்கு சில அலுவலகங்களைத் திறந்தனர்.

அந்த அலுவலகங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களாக ஓ. பி. ஆர். மாற்றினார். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலகம் திறந்தார். போர்ப்படையில் சேர்ந்து பணி புரிந்தவர்கள் மட்டுமன்றி, யார் வேண்டுமானாலும் இந்த அலுவலகங்களில் பதிந்து கொள்ளலாம் என்றும் ஓ. பி. ஆர். ஆணை பிறப்பித்தார். இந்த வகையிலும் இந்தியா முழுவதற்கும் வழிகாட்டியது சென்னை மாநிலமே. நாடெங்கும் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்கள், ஓ. பி. ஆரின் நினைவுச் சின்னங்களாக உள்ளன என்று கூறுவது பொருந்தும்.

## புதிய ஆலைகள்

ஓ. பி. ஆர். பதவியேற்ற காலத்தில் தமிழ்நாட்டில் இரசாயனத் தொழிற்சாலைகளோ, தொழில் பேட்டைகளோ, மாபெரும் சிமிண்டு ஆலைகளோ, இரயில் பெட்டித் தொழிற்சாலையோ, டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையோ, சர்க்கரை ஆலைகளோ, மோட்டார் வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளோ கிடையாது.

இந்த மாநிலத்தில் இருந்ததெல்லாம் நூல் ஆலைகளே. அவையும் தமிழ்நாட்டில் மட்டுமே இருந்தன. காந்தியப் பொருளாதாரம் என்ற பெயரில் இந்த ஆலைகளுக்கு மூடுவிழா நடத்தினார், முதலமைச்சர் டி. பிரகாசம். இதுகுறித்து, கோவை அய்யாமுத்து, அவரே எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்று நினைவுகளில் பின்வருமாறு கூறுகிறார்:

1946 ஏப்ரல் முதல் 1947 மார்ச்சு வரை டி. பிரகாசம் சென்னை மாகாணத்தின் பிரதமராக இருந்தார். வரவு செலவுத் திட்டத்தில் மூன்று கோடி ரூபாயை ஒதுக்கி அவர் கதர்த் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி, மாகாணத்தை குறிப்பாகத் தமிழ்நாட்டை ஒரு கலக்குக் கலக்கினார்.

ஒரு லட்சம் ராட்டைகள் செய்வாராம். ஏழு பிர்க்காக்களில் கதர் உற்பத்தியைப் பெருக்குவாராம். அரசினர் தவிர தனிப்பட்ட யாரும் கதர் தொழிலை நடத்தக் கூடாது. புதிய நூல் ஆலைகள் கட்ட அனுமதி கொடுக்கப் பட மாட்டாது. ஏற்கெனவே உள்ள ஆலைகளும் கதிர் எண்ணிக்கையை அதிகப்படுத்த இயலாது.

புதிதாக ஆலைகள் தொடங்க விரும்பியவர்களுக்கு, இதனால் ஒன்றும் குடி முழுகிப் போவதில்லை. அவர்கள் சென்னை மாநில அரசின் ஆட்சிக் கரங்களுக்கு அப்பாற்பட்ட புதுக்கோட்டை, புதுச்சேரி, கொச்சி, திருவாங்கூர், மைசூர் பகுதிகளில் புதிய ஆலைகளைக் கட்டினார்கள்.

கதர் உற்பத்தியும் சீராக நடைபெறவில்லை. மூன்று கோடி பாழடிக்கப் பட்டதுதான் முட்டாள் தனமான திட்டத்தில் கண்ட பலன்''

ஓமந்தூரார் பதவிக்கு வந்தவுடன், திரு. பிரகாசம் கையாண்ட மேற்கண்ட கொள்கையை ரத்துச் செய்தார். தனிப் பட்டவர்களும் கதர் உற்பத்தி செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கினார். ஆலைகளைத் தமிழ் நாட்டிலேயே தொடங்க லாம் என்று ஆணையிட்டார். ஏற்கெனவே தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்டு, திரு. டி. பிரகாசம் மத்திய அரசுக்குச் சரண் செய்துவிட்ட கதிர்களை மீண்டும் தரவேண்டுமென்று ஓ. பி. ஆர். கேட்டார். இப்படி முரட்டுத்தனமாக ஒரு மாநில முதலமைச்சர் கேட்பாரென்று ஜவஹர்லால்நேரு எதிர்பார்க்கவில்லை. நேருவுக்கும் ஓ. பி. ஆருக்கும் ஏற்பட்ட மோதல்களுக்கு இது ஒரு முக்கியமான காரணம் என்று திரு பி. கோபால ரெட்டி கருதுகிறார்.

ஓ. பி. ஆர். பதவிக்கு வராமல், தொடர்ந்து திரு. டி. பிரகாசம் பதவியில் இருந்திருந்தால், தமிழ்நாட்டில் ஆலைத் தொழில்களையும் கைத்தறித் தொழில்களையும் இந்த அளவில்

காண இயலாது. இடையே ஏற்பட்ட தேக்கத்தின்போது, குஜராத்தும் மஹாராஷ்டிரமும் தமிழ்நாடு எந்தக் காலத்திலும் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கும். பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும் பண்ணி மலைகளென வீதியில் குவிப்பதில் தமிழ்நாடு தன் பங்கை இழந்திருக்கும்.

1945-இல் கோயம்புத்தூரில் டெக்ஸ்டூல் தொழிற்சாலை ஏற்பட்டு, நூல் ஆலை இயந்திரங்கள் தென் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இன்று அது இந்தியாவில் பெரிய தொழிற்சாலைகளுள் ஒன்றாக இருப்பதுடன் ஏற்றுமதியிலும் ஈடு பட்டுள்ளது. ஓ. பி. ஆர். பதவிக்கு வராவிட்டால் இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கும்.

## இலாபமும் சிக்கனமும்

எந்தத் துறையில் பணியாற்றினாலும் அப்பணியானது இலாபகரமாகவும் சிக்கனமாகவும் செய்யப் பெறவேண்டும் என்பது ஓ. பி. ஆரின் ஆசை. அரசாங்கப் பணம்தானே, கூடுதலாகச் செலவு ஆனால் என்ன? இலாபம் கிடைக்காவிட்டால் பரவாயில்லை என்ற கருத்தை இவர் ஒப்புக்கொள்ளவே மாட்டார்.

இவர் ஒரு பயிற்சிப்பள்ளியைப் போய்ப் பார்த்தார். அங்கு, மாணவர்கள் உணவு அருந்தும் மண்டபம் 18 அடி அகலம் கொண்டதாக அமைந்திருந்தது. அது 20 அடி அகலம் உடைய தாக இருந்தால் பந்தியில் நான்கு வரிசைகள் உட்கார வசதியாக இருக்குமென்று ஆலோசனை கூறினார். வாழ்க்கை அனுபவத்தைக் கணக்கோடு இசைத்து, துல்லியமாக வாழவே ஒவ்வொரு நொடிப் பொழுதும் ஏதேனும் ஒரு கருத்தை வெளியிட்டுவந்தார்.[1]

## இலட்சியம்

"எல்லோரும் நல்வாழ்வு வாழ வேண்டும், அந்த வாழ்வு அறவாழ்வாக அமைய வேண்டும். நாம் ஈட்டும் பொருளின் சரி பாதிக்குமேல் செலவழித்தலாகாது. நான்கில் ஒரு பகுதியை யேனும் சேமித்து வைக்கவேண்டும்; எஞ்சிய நான்கில் ஒரு பகுதியை அறச்செயல்களுக்கு (பொது நன்மைக்கு) செலவிட வேண்டும்" என்பது ஓ. பி. ஆரின் கருத்து.[2]

---

1. தகவல்: திரு. ஆர். வி. ருத்ரப்பசாமி
2. ,, ,,

விவசாயப் பணிபுரியும் தொழிலாளருக்கும் ஏனைய பணி புரியும் தொழிலாளருக்கும் கிடைக்கும் ஊதியத்தின் வேறுபாடு ஓ. பி. ஆர். உள்ளத்தை நோக வைத்தது. அந்த வித்தியாசத்தை நீக்க இவர் பெரிதும் முயன்றார். இப்பிரச்சினையைப் புரிந்து கொண்ட அரசியல் தலைவர் இவர் ஒருவரே. இவருக்கு விவசாயம் தலைகீழ்ப் பாடமாக இருந்தது.[1]

'விவசாயச் சீர்திருத்தமும் தொழில் சமநிலையும்' என்ற நூலில் ஓ. பி. ஆர். கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்துச் சுருங்கக் கூறுவோம்:

1. உணவு பற்றாக்குறையை நீக்க, துணிச்சலான விவசாயத் திட்டம் தேவை.

2. கைத்தொழில் முதலாளிகள், வியாபாரிகள், அரசாங்க அலுவலர் ஆகிய மூவகையினரும் விவசாயியைப் பல ஆண்டுகளாகச் சுரண்டியிருக்கின்றனர்.

3. மேற்கண்ட வர்க்கங்களுக்கிடையே நிலவும் முரண்பாடு வளர்ந்துகொண்டே போனால், சமுதாயத்தின் அமைப்புப் பாதிக்கப்படும்.

4. எல்லா வர்க்கத்தாரும் தங்கள் நலனைமட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் சமுதாயம் முழுவதும் நன்றாக வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் வேலை செய்ய வேண்டும் என்பதே காந்தியடிகள் நமக்குக் கற்றுத் தந்துள்ள பாடம் ஆகும்.

5. எல்லாக் கிராமவாசிகளும் கூட்டுறவுச் சங்கத்தில் சேருமாறு கட்டாயப்படுத்தப்பட வேண்டும். கிராமவாசியின் இன்றியமையாத் தேவைகளை இந்தச் சங்கங்கள் விற்கவேண்டும். எருவகைகள், நல்ல விதைகள், இரசாயன உரங்கள், விவசாயக் கருவிகள் ஆகியவற்றையும் இவை வழங்கவேண்டும். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்துடனும் ஒரு தானிய பாங்க்

1. His only Culture is Agriculture என்று ஓர் ஐ. சி. எஸ். அலுவலர் கூறினாராம்.

இணைக்கப்பட்டிருக்கும். இதன்மூலம் விவசாயி 'டெப்பாசிட்' செய்யும் தானியத்துக்குக் கூடுதலான விலை கிடைக்கும். பருவமழை தவறியபோது மக்களுக்கு வழங்க இந்தத் தானிய கையிருப்பு உதவும்.

6. விவசாயிக்கு 12 மாதம் வேலை கிடைக்க உதவியாக, விவசாயத் துணைத் தொழில்கள் தொடங்கப்பட வேண்டும். அதற்காக ஒரு சுழலும் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

7. வண்டல் மண்ணை எடுப்பது, வாய்க்கால் தோண்டுவது முதலிய நூற்றுக்கணக்கான வேலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட வேண்டும்.

8. விவசாய சீர்திருத்தம் தேவைதான். ஆனால் இந்திய நாடு முழுவதற்கும் ஒரே வகையான சீர்திருத்தம் கூடாது. ஆங்காங்குள்ள நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு, தேவையான மாறுதல்களைச் செய்ய வேண்டும். மாவட்டத்துக்கு மாவட்டம்கூட, விவசாயப் பழக்கவழக்கங்களில் நிலவும் போக்குகளைப் புறக்கணித்துவிடக் கூடாது.

9. நிலம் சம்பந்தமாக சுவான்தாருக்கும் குத்தகைதாருக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளைக் கவனிக்க நியாய சபை இருக்கவேண்டும். இந்தச் சபையில் ரெவின்யூ இலாகா அதிகாரிகளுக்குப் பதில் விவசாய இலாகா அதிகாரிகள் இடம்பெற வேண்டும்.

10. பஞ்சம், வெள்ளம் ஏற்படும்போது விவசாயிக்கு உண்டாகும் நஷ்டத்தை ஈடு செய்ய விவசாய இன்சூரன்ஸ் திட்டம் இன்றியமையாதது.

11. விவசாயக் கூலி நியாயமாக நிர்ணயிக்கப்படவேண்டும். விவசாயக் கூலியாளர் சங்கங்களில் வெளியார் தலையீடு கூடாது.

12. வியாபாரம், தொழில், அரசாங்க வேலை ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்குச் சமமான வகையில் விவசாயத்திலிருந்தும் வருமானம் கிடைக்கும்படி

செய்யாத வரையில், விவசாயத் தொழிலாளரின் கூலியை உயர்த்துவதோ அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்வதோ நடவாத காரியங்கள்.

13. இந்திய ரிசர்வு பேங்க் தன்னுடைய விவசாயக் கடன் இலாகா மூலமாக முன்வந்து, அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கணக்குப் பட்டியல்களை ரீ–டிஸ்கவுண்ட் செய்யும் வசதியை ஏற்படுத்த வேண்டும்.

14. நிலவரிக்குப் பதில் விவசாய வருமானவரி விதிக்கப் படவேண்டும்.

15. தரிசு நிலங்களை சர்வே செய்து, அவற்றிலெல்லாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். சிறு அளவு மூலதனமும் மனித உழைப்பும் போதும். படை கலைக்கப்பட்டு திரும்பிவந்துள்ள சிப்பாய்களையும் பயன்படுத்திக் கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடாக நமது நாட்டை ஆக்குவோம்.

16. கால்நடைகளைத் தரமாக வளர்ப்பதில் கூடுதலான அக்கறை தேவை.

17. விவசாய வளர்ச்சிக்கு மின்சார வசதியும் தண்ணீர் வசதியும் கூடுதலான அளவில் வழங்கப்படவேண்டும்.

18. தூர்ந்துபோன ஏரிகளைப் புதுப்பிக்க வேண்டும்.

19. அணைக்கட்டுகளை உடனே பழுதுபார்க்க வேண்டும்.

20. பழைய கிணறுகளை ஆழப்படுத்தவேண்டும். ஆயிரக் கணக்கான புதுக்கிணறுகளை வெட்டவேண்டும்.

21. விவசாயி நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பவனாக மட்டும் இருந்தால் போதாது. அவனுக்குப் படிப்பும் ஆராய்ச்சி மனப்பாங்கும் தேவை.

22. சரியான புள்ளிவிவரங்களைத் திரட்ட ஓர் அமைப்பு இன்றியமையாதது.

ஓமந்தூராரின் கருத்துக்களைக் குறித்து இந்திய அரசாங்கமோ, அதன் நிபுணர்களோ அக்கறை காட்டவில்லை. மிகவும் பயனுள்ள யோசனைகள் என்று லண்டனிலிருந்து வெளி வரும் 'எகனுமிஸ்டு' இதழ், ஓ. பி. ஆரின் பொருளாதார சமநிலைக் கொள்கை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி எழுதி யிருந்தது.

ஓ. பி. ஆரின் சமநிலைப் பொருளாதாரக் கொள்கை, புரட்சிகரமான கருத்துக்கள் அடங்கியது. ஜவஹர்லால் நேரு வும் தொழிலாளர் தலைவர்களும் அத்திட்டத்தை எதிர்த்தனர். ஓ. பி. ஆரின் திட்டம் நிறைவேறியிருந்தால் கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறி நகரங்களுக்கு ஓடுவதையும், வேளாண்மையி லிருந்து பிற தொழில்களுக்குத் தாவுவதையும் தடுத்திருக்கலாம்.

## விடிந்தால் கல்யாணம், பிடி வெற்றிலைபாக்கு

ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் வழங்கிவிட்டால் அது உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்பது ஓ. பி. ஆரின் கொள்கை.

பொதுப்பணித் துறையில் எந்தத் திட்டத்தை வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளுவோம். முதலில் அவர்கள் சமர்ப்பித்த மதிப்பீட்டுக்கும் உண்மையாக அவர்கள் இறுதியில் செய்த செலவுக்கும் இடையே எவ்வளவோ வேறுபாடு இருக்கும். '......... ஆண்டில் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதற்கு 2 ஆண்டுகள் முன்னரே உத்தேச மதிப்பீடு தயாரிக்கப் பட்டது. ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகு, சில சிக்கல்களால் வேலை ஆரம்பிக்க ஓராண்டு சுணங்கிவிட்டது. வேலை ஆரம்பித்த மறுநாளே புயல் வீசி, வேலைகள் ஸ்தம்பித்து விட்டன. இதற் கிடையில் விலைவாசி உயர்ந்துவிட்டது. ஸ்டிரைக்கும் நடந்தது என்றெல்லாம் காரணம் சொல்லப்படும். ஓ. பி. ஆருக்கு இந்தச் சிவப்பு நாடா முறை அறவே பிடிக்காது.

ஒரு நாள், ஆதாரக் கல்வி அதிகாரி திரு. ஆர். வி. ருத்ரப்பசாமி முதலமைச்சருடன் காலையில் சிற்றுண்டி உண்டபோது, 10 இலட்சம் ரூபாய் செலவாகக்கூடிய ஒரு திட்டத்தை விளக்கிக் கூறினார். முதலமைச்சர் (ஓ. பி. ஆர்) தன்னுடனேயே அவரையும் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றார். அன்று பகலுணவுக்குக் கூவம்

மாளிகைக்குத் திரும்புவதற்குள் அந்தத் தொகையைச் செலவு செய்ய ஒப்புதல் அளித்து ஆணை வழங்கினார். அம்மட்டோ! தலைமை என்ஜினீயருடன் தொலைபேசியில் உரையாடி, திரு. ருத்ரப்பசாமியின் ஆலோசனைப்படி வரைபடங்களைத் தயாரித்து, கட்டிடங்களை ஆறு மாதங்களுக்குள் கட்டி முடிக்கவேண்டும் என்றும் ஆணையிட்டார். அன்று பிற்பகலே, தலைமை என்ஜினீயரை யும் பொதுப்பணித் துறையில் ஏனைய பெரிய அலுவலர்களையும் திரு. ருத்ரப்பசாமி சந்திக்கவும் ஏற்பாடாயிற்று. அரசாங்க அலுவல்கள் ரெட்டியார் ஆட்சியில் வேகமாக நடைபெற்றதற்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

## சட்டமும் விதிகளும் மக்களுக்காகவே

சட்டமும் விதிகளும் மக்களுக்காக ஏற்பட்டவை. மக்கள் சட்டத்துக்காகப் படைக்கப்படவில்லை. ஆகையால் மக்களின் தேவைக்குத் தக்கவாறும் அவ்வப்போது ஏற்படும் புதுப்புது நிலைமைகளை அனுசரித்தும் அரசாங்கத்தை நடத்தவேண்டும் என்பது ஓ. பி. ஆர். முடிவு.

கோவில்பட்டி, சாத்தூர் வட்டங்களில் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் படும் துயரத்தை நேரில் பார்த்த ஓ. பி. ஆர். வருந்தினார். போர்டு ஆஃப் ரெவினியூ எனப்படும் வருவாய்க் கழகத்தின் விதிகளை மீறியும் நில வருவாய்த்துறை அமைச்சர் திரு. காளா வெங்கடராவ் கருத்தைப் புறக்கணித்தும், விதி விலக்காக ஏக்கருக்குப் பத்து ரூபாய் வீதம் ரொக்கமாக நிவாரணம் வழங்குமாறு ஓ பி. ஆர். ஆணை பிறப்பித்தார்.[1]

---

1. தகவல்: திரு. எஸ். ஜெயராம ரெட்டியார், முன்னாள் எம். எல். சி., விருதுநகர்.

*ஜாதி மதங்களைப் பாரோம் — உயர்*
*ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்*
*வேதிய ராயினும் ஒன்றே — அன்றி*
*வேறு குலத்தின ராயினும் ஒன்றே*

*— பாரதியார்.*

# 15

# ஹரிஜன இயக்கம்

## சிதம்பரத்தில் காந்தியடிகள்

மகாத்மா காந்தி 1927 இல் ஹரிஜனப் பிரச்சினையை நாட்டு மக்களுக்கு நினைவூட்டுவதற்காக, ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது ஹரிஜனங்களுக்காக ஒரு நிதியை யும் திரட்டினர்.

சிதம்பரத்திற்கு காந்தி அண்ணல் வந்திருந்தபோது, ஹரிஜனங்கள் கூட்டம் கூட்டமாகத் திடீரென ஆலயத்துக்குள் நுழைந்துவிடக்கூடும் என்று அஞ்சி, தீட்சிதர்கள் ஆலயத்தின் நான்கு கோபுர வாயில் கதவுகளையும் மூடிவிட்டனர். உள்ளே யிருந்தவர்கள் வெளியே வருவதற்குக்கூட அவகாசம் அளிக்க வில்லை. இவ்வாறு கோயிலுக்குள் சிக்கிக்கொண்டவர்கள் அன்று

காந்திஜியைக் காண இயலாமல் போயிற்று. அந்நகரத்துச் சனாதனிகள் 'காந்தியே நீர் போம். ஊர் ஊராகப் புணம் பறிக்கும் காந்தியே நீர் போம்' என்ற சொற்கள் அச்சிடப்பெற்ற தாள்களை மக்களிடையே வழங்கினர்.[1]

தமது மாவட்டத்தில் இப்படி ஒரு கேலிக்கூத்தான நிகழ்ச்சி நடந்தது ஓ. பி. ஆருக்கு மனவருத்தத்தைத் தந்தது. சிவபெருமானே, ஹரிஜனனாகிய நந்தனுக்குக் காட்சி கொடுத்த தலத்தில், நந்தியே விலகி நந்தனுக்கு வழிவிட்ட தில்லையில், அனைத்துலகும் தொழும் தில்லை என்று மாணிக்கவாசகர் சிறப்பித்த கோயிலில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்தது ஓ. பி. ஆரைக் கவலைக்கு உள்ளாக்கிற்று.

## 1946-இடைத் தேர்தல்

சட்டசபைத் தேர்தல்களில் ஓ.பி.ஆர்., பிறரை வெற்றி பெறச் செய்தபோதிலும், இவர் தேர்தலுக்கு நிற்கவில்லை. 1938 இல் சென்னை மாகாணத்தின் சட்டமன்ற மேலவையில் தென் ஆர்க்காடு மாவட்டத்துக்கு உரிய இடம் காலியாகி, இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் ஹரிஜனக் கொள்கையை ஒருபிரச்சினையாக வைத்து, இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுவதென்று ஜஸ்டிஸ் கட்சி முடிவு செய்திருந்தது. கடலூர் திரு.தி.கி. நாராயண சாமி நாயுடுவை[2] வேட்பாளராக, பெரியார் ஈ. வெ. ரா. நிறுத்தியிருந்தார்.

---

1. 'தமிழ்நாட்டில் காந்தி' — அ. இராமசாமி.

2. **திரு தி. கி. நாராயணசாமி நாயுடு—**
இவர் சிறந்த தமிழ் அறிஞர்.பல்வேறு தகுதிகள் உடையவர். சைவசித்தாந்த சமாஜத்தின் செயலாளராகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர். அரிய நூல்கள் நல்ல பதிப்புக்களாக வெளிவரக் காரணமாக இருந்துவரும் நுட்பமான ஆராய்ச்சியாளர். வடலூர் நிலையங்களின் நிர்வாகத்தை இந்து சமய அறநிலையக் குழுவினர் மேற்கொண்ட போது முதன்முதலாக (1938—39, நியமிக்கப்பெற்ற தலைமை அறங்காவலர் இவரே ஆவார். வடலூர் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களை முறையாகத் தொகுத்துவைத்தவர். ஓ. பி. ஆர். வடலூருக்கு வந்த நாள் முதல் இவருக்கும் ஓ. பி. ஆருக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. இன்றளவும் வடலூர்ப் பணிகளில் ஆர்வத்தோடு ஈடுபடும் சன்மார்க்கத் தொண்டராக உள்ளார்.

ஹரிஜனப் பிரச்சினையில் தேர்தல் நடைபெற்றதால், ஓ. பி. ஆர். இந்தத் தேர்தலில் நின்றுவிட முடிவு செய்தார். மேலவை தொகுதிக்கு, நிலச்சுவான்தார்கள் மட்டுமே வாக்கு உரிமை பெற்றிருந்தனர். அவர்களில் ஒரு பகுதியினர் ரெட்டியார் இனத்தவராக இருந்தனர். ஓ. பி. ஆர். போட்டியிடுகிறார் என்பதை அறிந்ததும், எப்படியாவது அவரைத் தோற்கடித்துவிட வேண்டும் என்ற கருத்தில் (திரு. தி. கி. நாராயணசாமி நாயுடுவுக்குப் பதிலாக) ஒரு ரெட்டியாரைப் பெரியார் ஈ. வே. ரா. நிறுத்தினார். எனினும் ஓ. பி. ஆர். தான் வெற்றி பெற்றார். அந்த வெற்றியைப் பாராட்டி, "ஆனந்த விகடன்" தலையங்கம் எழுதிற்று.[1]

## தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு 'அலிஸ்பைடிஸ்'

கிரேக்க நாட்டில் அட்டிகா மாநிலத்தில் அலிஸ்பைடிஸ் என்பவர் வாழ்ந்தார். அந்த மாநிலத்தில் அவருக்கு ஒப்பான செல்வர் எவரும் இல்லை.

தத்துவ மேதை சாக்ரடீஸ் ஒரு நாள் அலிஸ்பைடிஸ் வீட்டுக்குச் சென்றிருந்தார், கிடைத்த வாய்ப்பை நழுவ விரும்பாத அலிஸ்பைடிஸ் தம் செல்வ வளத்தை விவரித்தார். அவருடைய பேச்சில், ஒவ்வொரு சொல்லிலும் செல்வச் செழிப்பால் ஏற்பட்ட களிப்போடு கர்வமும் தொனித்தது. தத்துவ மேதை சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

பின்னர் சாக்ரடீஸ், அலிஸ்பைடிஸிற்கு உலகப்படம் ஒன்றைக் காட்டினார்.

"இதில் கிரேக்க நாடு எங்கே இருக்கிறது?"

"இதோ" என்று அடையாளம் காட்டினார் செல்வர்.

"அட்டிகா மாநிலம் எங்கு இருக்கிறது?" என்று சாக்ரடீஸ் அடுத்த கேள்வி போட்டார். அதையும் சுட்டிக்காட்டினார் செல்வர். "இந்தப் படத்தில் உங்கள் கிராமத்தின் பெயர் உள்ளதா?" என வினவினார் தத்துவமேதை.

---

1. தகவல்: திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு.

"இப்படிப்பட்ட சிற்றூர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றனவே. இவற்றையெல்லாம் குறிப்பிட இயலுமா?" என்று பதில் கேள்வி கேட்டார் செல்வர்.

"தங்களுடைய நிலம் வீடு வாசல் இவற்றைக் காட்ட முடியுமா ?" என்றார் சாக்ரடீஸ்.

"இதென்ன கேள்வி? அசட்டுக் கேள்வி ! கிராமத்தையே காட்ட இயலாத போது, என் நிலம், என் வீடு ஆகியவற்றைக் காட்டும் பிரச்சினையே எழாது. அவை, கடலில் ஒரு நீர்த்துளி போன்றவை" என்றார் அலிஸ்பைடிஸ்.

"நீர்த்துளி போன்றது உங்களுடைய நிலமும் சொத்தும் எனின், அதைப் பற்றி பெருமைப்படுவது சரியா ?," என்று கேட்டார் தத்துவஞானி.

சாக்ரடீஸ் இவ்வாறு கேட்டதும் அலிஸ்பைடிஸ் வெட்கித் தலைகுனிந்தார்.

ஓமந்தூரை அடுத்த முலசூரில் சீனிவாச ரெட்டியார் என்ற செல்வர் இருந்தார். இவர் தாலுகா போர்டின் தலைவராகவும் இருந்தார். செல்வாக்கு மிக்கவர். அந்த ஊர் ஏரித் தண்ணீர் அவருடைய வயலுக்குப் பாய்ந்த பிறகுதான் மற்றவர்களுக்குப் பாயவேண்டும். அப்பகுதியில் ராட்சதனாக இருந்தார்.

தம் ஊர்ப் பகுதியில் உள்ள சாலைகளில் ஹரிஜனங்கள் நடக்கவும் விடமாட்டார். இந்த அலிஸ்பைடிசுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று ஓமந்தூரார் விரும்பினார். பொதுப் பணித்துறையினரிடம் சொல்லி அந்த ஊருக்குப் புதிய சாலை போட ஏற்பாடு செய்தார். இதுபோல ஓ. பி. ஆர். செய்த பல முயற்சிகளுக்குப் பிறகு அவருடைய கர்வம் அடங்கிற்று.

## முதலமைச்சர் பதவியில்

முதலமைச்சராக ஓ. பி. ஆர். ஹரிஜனங்களுக்குச் செய்த நன்மைகள் ஏராளமானவை.

ஓ. பி. ஆர். பதவியேற்பதற்குமுன், தொழில்துறையின் ஒரு பகுதியாக ஹரிஜன நலம் இருந்து வந்தது. தொழில் தகராறு

களைத் தீர்க்கும் ஆணையர் இந்தப் பொறுப்பையும் வகித்துவந்தார். ஓமந்தூரார் இந்த ஏற்பாட்டை மாற்றி, ஹரிஜன நலத் துறையைப் புதிதாகத் தொடங்கினார்.

ஹரிஜன நலக்குழு என்று சட்டசபை நியமித்திருந்த ஒரு குழு, அறிக்கை தாக்கல் செய்திருந்தது. ஆனால் அந்த அறிக்கை மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கிடப்பில் போடப்பட்டிருந்த அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்து அதன் பரிந்துரைகளை ஓமந்தூரார் செயல்படுத்தினார்.

அரசாங்க நிலங்களைப் பொது மக்களுக்கு வழங்கும்போது, ஹரிஜனங்களுக்கு முன்னுரிமையும் முதல் உரிமையும் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஆணையை ஓ. பி. ஆர். பிறப்பித்தார்.

## ஆலயப் பிரவேசம்[1]

1947-இல் ஓமந்தூரார் முதலமைச்சரானார். அதற்கு முன்னர், மதுரைக் கோயில் மட்டுமே ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டது. அது, பிறகு அவசரச் சட்டம் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

மற்றைய கோயில்கள் திறந்துவிடப்படவில்லை. அதற்குச் சட்டம் கொண்டு வரவும் ஓமந்தூரார் விரும்பவில்லை. அவ்வாறு செய்வதற்குமுன், எங்கெங்கு பொதுமக்களின் அபிப்பிராயம் சாதகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கோயில்களில் ஹரிஜனங்கள் நுழைவதற்கு அரசு அனுமதி வழங்கும் என்று ஓமந்தூரார் அறிவித்தார்.

இவ்வாறு சட்டம் போடாமல், நூற்றுக்கணக்கான கோயில்களைத் திறந்துவிட்டு, நடைமுறையில் ஹரிஜனங்கள் கோவில்களுக்குச் சென்ற பிறகு, ஓ. பி. ஆர். அதை முறைப்படுத்த ஒரு சட்டம் இயற்றினார்.

---

1. தகவல்: கல்லுப்பட்டி காந்தி நிகேதனத்தின் தலைவர் திரு. குருசாமி. ஓமந்தூரார் த. நா. கா. தலைவராக இருந்தபோது திரு. குருசாமி, விருதுநகர் நகராண்மைக் கழகத்தின் துணைத் தலைவராக இருந்தார். அந்த நாள் முதல் இருவருக்கும் நல்ல தொடர்பு இருந்துவந்தது.

## திருப்பதி கோயில் திறப்பு[1]

1937-இல் இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது மதுரையில் திரு. ஏ. வைத்தியநாத அய்யர், ஹரிஜனங்களை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். உடனே திருப்பதியிலும் ஆலயப் பிரவேசத்தை நடத்த, சித்தூர் மாவட்டத்தில் திவான் பகதூர். டி. கே. சி. வீரராகவாச்சாரியார் தலைமையில் 50 ஹரிஜனங்களை அழைத்துவரப் போவதாக, காங்கிரஸ்காரர்கள் தேவஸ்தானத்துக்கு முன்கூட்டி அறிவித்தனர். அவ்வாறு ஹரிஜனங்களை அழைத்து வருவது பழக்கவழக்கத்துக்கு மாறானது என்றும் அதை அனுமதிக்க முடியாது என்றும் தேவஸ்தானத்தார் சொல்லிவிட்டார்கள். இராஜாஜிக்கு முறையிட்டும் அவர் தலையிடவில்லை. இதனால் திருப்பதிக்கோயில், தொடர்ந்து ஹரிஜனங்களுக்குத் தடைசெய்யப்பட்டு இருந்துவந்தது.

1947-இல் ஓ. பி. ஆர். முதலமைச்சரானதும் எல்லா கோயில்களுக்கும் ஆலயப் பிரவேசச் சட்டம் இயற்றப்பட்டபோது, ஓ. பி. ஆர். தலைமையிலேயே ஹரிஜனங்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

திண்டிவனம் ஹரிஜனத் தொகுதிக்குச் சட்டசபையில் உறுப்பினராக இருந்த திரு. குலசேகரதாசை, திருமலை–திருப்பதி தேவஸ்தானத்தில் முதல் ஹரிஜன டிரஸ்டியாக, ஓமந்தூரார் நியமித்தார்.

## இராமேசுவரம்

இராமேசுவரம் கோயிலுக்கு ஓ. பி. ஆரே சென்று ஆலயப் பிரவேசத்தை நடத்தி வைத்தார்.

## ஹரிஜன மாணவர் விடுதி

ஓ. பி. ஆர். யோசனையின்பேரில் திரு. ஈ. கே. இராமசாமி நாயக்கர் என்பவர் திருக்கோவலூரில் ஹரிஜன மாணவர்கட்கு ஒரு விடுதியைத் தொடங்கினார்.

---

1. தகவல்: தியாகி விட்டல் சீனிவாச ராவ் (பி. 1905) 1930லும் 1941லும் சிறை சென்றவர். திருப்பதி கோயிலில் யாத்திரிகர்களுக்கு வழிகாட்டியாகப் பணி புரிந்தவர். இவர் ஓ. பி. ஆருடன் பல்லாண்டுகள் பழகியவர். இவரும் ஞானநந்தகிரியின் சீடர். திருப்பதி கோயிலை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டபோது, ஓ. பி. ஆருடன் இவரும் சென்றார். பிர்க்காக வளர்ச்சி அலுவலராகப் பிரகாசம் ஆட்சியில் காட்டாம்புலியூர் வட்டாரத்தில் வேலை பார்த்தவர்.

## ஓமந்தூரில் ஆலயப் பிரவேசம்

ஓமந்தூர் மக்கள் உள்ளூர்க் கோயிலில் ஹரிஜனங்கள் வழிபடக்கூடாது என்று நெடுங்காலமாகச் சொல்லிவந்தனர். அதனல் அக்கோயில் திருப்பணி வேலையில் ஓமந்தூரார் ஈடுபடவில்லை. ஹரிஜனங்களை கோயிலுக்குள்விட ஊரார் ஒப்புக்கொண்ட பிறகுதான் இவர் குப்பாபிஷேகத்தை நடத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹரிஜனுக்கு உயர் பதவி

ஓ. பி. ஆர். ஆட்சியில் தஞ்சை மாவட்டத்தில் திரு. சதானந்தம் என்ற ஹரிஜன், போலீசுத் துறையில் உதவி சூப்பிரிண்டண்டாக இருந்தார். அவர் தன்னுடைய பணியை தயவு தாட்சண்யமின்றி நேர்மையாகச் செய்து வந்தார் என்ற காரணத்திற்காக உடனடியாக மாவட்டப் போலீசு அதிகாரியாக அவருக்குப் பதவி உயர்வு கொடுத்து அதே தஞ்சை மாவட்டத்தில் பணியாற்றச் சொன்னுர்கள். பதவி உயர்வு கொடுத்ததும் தேவையில்லாதது; அந்த மாவட்டத்திலேயே இருக்கச் சொல்லுவதும் முறையில்லை என்று சிலர் ஆட்சேபித்தனர். அந்த ஆட்சேபணைகளை ஓ. பி. ஆர். பொருட்படுத்தவில்லை.[1]

1. தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள் (26—8—1970).

'இந்தியா, கிராமங்களில்தான் வாழ்கிறது'

— மகாத்மா காந்தி.

# 16

# கிராமங்களில் மறுமலர்ச்சி

## கிராமப் புனருத்தாரணம்

கிராமங்களைச் சீர்திருத்துவது என்பது காந்தியடிகளின் அடிப்படையான திட்டங்களுள் ஒன்றாகும். நிர்மாண வேலைகளில்[1] ஈடுபட்ட ஊழியர்கள் 1936-இல் கல்லுப்பட்டியில் நடத்திய முகாமில் ஓ. பி ஆர். முக்கிய பங்கு கொண்டார்.

---

1. **நிர்மாணத் திட்டம்:** (1) இந்து முஸ்லிம் ஒற்றுமை (2) தீண்டாமை ஒழிப்பு (3) மதுவிலக்கு (4) கதர் அபிவிருத்தி (5) கிராம சுகாதாரம் (6) ஆதாரக்கல்வி (7) கிராமக் குடிசைக் கைத்தொழில் (8) முதியோர் கல்வி (9) மாதர் முன்னேற்றம் (10) ஆரோக்கிய வாழ்க்கைக்கான பயிற்சி (11) பிராந்திய மொழிகளின் வளர்ச்சி (12) தேசிய மொழி வளர்ச்சி (13) பொருளாதார சமத்துவம் (14) விவசாயிகள் முன்னேற்றம் (15) தொழிலாளர் முன்னேற்றம் (16) பழங்குடிகள் முன்னேற்றம் (17) தொழு நோய்த் தொண்டு (18) மாணவர் முன்னேற்றம் மேற்கண்டவை காந்தியடிகளின் திட்டம். வினோபாவே சேர்த்தவை: (19) சர்வசமய சமரசம் (20) பஞ்சம், வெள்ள நிவாரணப்பணி (21) பூமிதானம் (22) கிராம தானம் (23) சாந்தி சேனை.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள திரு. க. அருணாசலமும் டாக்டர் ரெவரண்டு ஆர். ஆர். கெய்ததானும்[1] ஓ பி ஆரும் 1937–38-இல் தமிழ்நாட்டுக் கிராமங்களின் நிலைபற்றி அடிக்கடி கருத்துப் பரிமாறிக் கொண்டனர். இதைத் தொடர்ந்து கோயம்புத்தூரிலும் திருச்செங்கோட்டிலும் ஊழியர்களுடன் விவாதித்தனர்.

## காந்தி சேவா சங்கம்

காந்தி சேவா சங்கத்தில் தமிழ்நாட்டு உறுப்பினர்களாக இராஜாஜியும் திரு ஜி. இராமச்சந்திரனும்[3] திரு. குருசாமியும் திரு. க. அருணாசலமும் இருந்தனர். ஓமந்தூரார் உறுப்பினராக இல்லாவிட்டாலும் சிறப்பு அழைப்பினராக அழைக்கப்பட்டுப் பல கூட்டங்களில் கலந்துகொண்டார்.

## சேவா மந்திர்

பறங்கிப்பேட்டையில் சேவா மந்திர் என்ற ஆதாரக் கல்விநிலையம் உள்ளது. மிஸ் அன்னி மேரி பேட்டர்சன் என்ற டேனிஷ் சீமாட்டி இந்தப் பள்ளியை 1921 இல் நிறுவினார். வெள்ளைக்காரியாக இருந்தபோதிலும் இந்த அம்மையார் இந்தியப் பண்பாட்டில் தம் மனத்தைப் பறிகொடுத்தார். இந்தியர்களின் நல்வாழ்வில் அக்கறை காட்டியதோடு மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளில் நம்பிக்கையுள்ள தொண்டராகவும் விளங்கினார். மகாத்மா காந்தியடிகளே இந்தக் கல்வி

---

1. இவர் ஓர் அமெரிக்கப் பாதிரியார் இந்தியப் பண்பாட்டில் மனத்தைப் பறிகொடுத்தவர் காந்தியடிகளின் கொள்கைகளைப் பரப்பி வருபவர். இப்போது இவருக்கு வயது 90. இவர் மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு என்னும் ஊரில் சர்வோதய ஆசிரமம் நடத்திவருகிறார்.

2 தீண்டாமையை ஒழிக்கவும் ஹரிஜனங்களின் மேம்பாட்டுக்கான மற்ற நடவடிக்கைகளை எடுக்கவும் மக்களிடையே பிரசாரம் செய்யவும் அகில இந்திய காந்தி சேவா சங்கமும் தமிழ்நாடு காந்தி சேவாசங்கமும் 1932-இல் காந்தியடிகளால் தொடங்கப்பெற்றன. தலைமை அலுவலகம் புது தில்லியில் உள்ளது.

3. திரு. ஜி இராமச்சந்திரன். காந்தி சமாதான நிறுவனத்தின் தலைவராக இருந்தவர். சேவா இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டவர். இப்போது காந்தி கிராமப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருக்கிறார்.

நிலையத்தைத் தொடங்கிவைத்தார்கள். சோலைகளினூடே இப் பள்ளிக்கூடம் அமைந்திருக்கிறது. இசை, ஓவியம், நூல் நூற்றல், கோரைப்பாய் முடைதல், தையல்வேலை, தோட்ட வேலை ஆகியவை இங்குக் கற்பிக்கப்படுகின்றன

இந்தியா சுதந்தரம் அடையும்வரை இந்த அம்மையார் டென்மார்க் நாட்டில் பொருள் சேர்த்து, பள்ளியை நடத்தி வந்தார்கள். 1948 இறுதியில் அம்மையாரின் உடல்நலம் குன்றியது[1] இதை அறிந்த ஓமந்தூரார், தாமாகவே இப்பள்ளிக்கு அரசாங்க மானியம் வழங்க ஏற்பாடு செய்தார்.

## ஆதாரக் கல்வியில் ஆர்வம்

சிதம்பரத்திற்கு அருகேயுள்ள கீழ மூங்கிலடியில் திரு இரா. விநாயகம் பிள்ளை[2] நடத்திவந்த ஆதாரப்பள்ளியில் நடைபெற்ற முகாம்களிலும் ஓ. பி. ஆர். கலந்துகொண்டார்.

கல்லுப்பட்டி காந்தி நிகேனத்தில் ஆதாரப்பள்ளி 17—1—1945 இல் ஏற்பட்டபோது, அதைத் தொடங்கி வைத்தவர், ஓ. பி. ஆரே ஆவார். இவையெல்லாம் அவர் பதவிக்கு வருவதற்குமுன் நடந்த நிகழ்ச்சிகள்.

முதலமைச்சராக இருந்தபோது, மாநில அளவில் ஆதாரக் கல்வியைப் பரப்ப ஓ. பி. ஆர். ஒரு மாநாடு கூட்டினார். கல்வித் துறை அலுவலர்களுக்கு ஆதாரக்கல்வி என்றால் என்ன என்று தெரியாத காலம் அது. ஆகையால் அவர்களுக்கு, திரு க. அருணாசலம் அவர்களைக் கொண்டு மறுபயிற்சி கொடுக்க ஓ பி. ஆர் ஏற்பாடு செய்தார்.[3]

---

1. அம்மையார் 1951- இல் இறந்தார்கள்.

2. திரு. இரா. விநாயகம் பிள்ளை எம். ஏ., பி. எல். சிதம்பரம் வட்டம் மணக்குடியான் இருப்பு என்னும் சிற்றூரினர். காந்தியத்தில் அழுத்தமான நம்பிக்கை கொண்ட தொண்டர். 1947 வரை ஓ. பி. ஆரும் இவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். இவர் பிரகாசம் அமைச்சரவையில் அசிஸ்டண்டு டெக்ஸ்டைல் கமிசனர் என்ற பெயர்கொண்ட பதவியை வகித்து, கிராமங்களில் குடிசைத் தொழில்களைப் பரப்ப முன்னேற்பாடுகளைச் செய்து வந்தார். ஓ பி. ஆர். வெளியிட்ட அறிக்கை ஒன்றை ஆட்சேபித்து, கொள்கை வேறுபாட்டால் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். ஓ. பி. ஆர். வற்புறுத்தியும் இவர் பதவியில் நீடிக்க விரும்பவில்லை. இவர் இப்போது சொந்தப் பண்ணைகளைக் கவனித்து வருகிறார்.

3. தகவல்: திரு. குருசாமி, கல்லுப்பட்டி.



மாம்பாக்கம் திருக்குறள் பீடத்தில் ஓ. பி. ஆர். பேசுகிறார். அவருக்கு வலது புறத்தில் தவத்திரு. அழகர் அடிகள்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக் கிராமங்களில்தான் திறக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார். பெரியநாயக்கன் பாளையத்தில் அனைத்திந்திய மட்டத்தில் ஆதாரக்கல்வி மாநாடு ஒன்றையும் ஓ. பி. ஆர். கூட்டினார்.[1]

## கைக்குத்தரிசி

மஞ்சக்குப்பம் சுதர்சன நாயுடுவிடம் சொல்லி 50 பேரை வேலைக்கு வைத்து, கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, கைக்குத்து அரிசி தயாரித்து, ஆஸ்பத்திரிகளுக்கு விற்க ஓ. பி. ஆர். 1930 இல் ஏற்பாடு செய்தார்.[2]

ஓ. பி. ஆர். கைக்குத்தரிசியில் மிகவும் நம்பிக்கை உடையவர். கைக்குத்தரிசியை உண்டுவந்தார். சென்னை காஸ்மோபாலிடன் கிளப்பில் தங்கிய நாட்களிலும்கூட, கைக்குத்தரிசி கொண்டுவந்து கொடுத்து அதைத்தான் சமைக்கச் சொல்லுவார்.

நெல்லை, உலக்கை கொண்டு குத்தினால் குத்துபவருக்கு உடல் வலு ஏற்படும். அந்த அரிசியைச் சாப்பிட்டால், சாப்பிடுவருக்கு உடல் வலு உண்டாகும். பெரிபெரி போன்ற நோய்களை உற்பத்தி செய்யும் (இயந்திரங்களால் அறைக்கப் படும்) அரிசியைவிட, கைக்குத்து அரிசி சத்து நிறைந்தது என்பது சத்துணவு நிபுணர்களின் முடிபு.

எனவே ஓ. பி. ஆர். வாழ்நாள் முழுவதும் கைக்குத்தரிசிப் பிரசாரம் செய்து வந்தார். கிராமங்களில் வாழும் மக்களுக்குக் கைக்குத்தரிசிமூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதையும் உணர்த்தி வந்தார்.

இவர் சிறைக்குச் சென்றிருந்தபோது, இவருடைய ஆசிரமத்தில் இவர் தம்பி திரு. ஓ. எம். வெட்சுமிநாராயண ரெட்டியார், நெல் அறவை இயந்திரம் வைத்து நடத்த ஏற்பாடு கள் செய்துவிட்டார். சிறையிலிருந்து வந்ததும் ஓ. பி. ஆர். முதல் வேலையாக அந்த இயந்திரங்களை விற்றுவிட்டார். "ஊருக்கெல்லாம் கைக்குத்தல் அரிசி உபதேசம் செய்கிற நாமே மில் நடத்தக் கூடாது" என்று கூறிவிட்டார்.

---

1. தகவல்: திரு குருசாமி, கல்லுப்பட்டி.
2. தகவல்: விட்டல் சீனிவாசராவ்

## காந்திமகான் கதை

இந்தியா விடுதலை பெற்ற. 15—8—1947 ஆம் நாளில் சென்னை வானொலியில் ஓ. பி. ஆர். தலைமையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்களைப் பாராட்டிய ரெட்டியார், "இராமாயணம், பாரதம்போல் காந்தியடிகளின் வரலாறு கிராம மக்களிடையே பரவச் செய்யவேண்டும். அதுதான் உங்கள் கடமை" என்றார். அந்தக் கவியரங்கத்தில் கலந்து கொண்ட கொத்தமங்கலம் சுப்பு, ஓ. பி. ஆர். விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் 'காந்திமகான் கதை'யை நாட்டுப் பாடலாக எழுதினார். இப்பாடல் வில்லுப் பாட்டாக எங்கும் பரவி, தமிழ் நாட்டுக் கிராமங்களில் வாழும் மக்கள் உள்ளத்தை ஈர்த்துள்ளது. ஓ. பி. ஆரின் தூய உள்ளத்தில் எழுந்த கருத்தின் விளைவு இது என்ற உண்மை பலருக்குத் தெரியாது.[1]

## கிராம மக்களுக்கு நீதி

அரசாங்க அலுவலகங்களில் நகர மாந்தர்களுக்கும் செல்வாக்குள்ள சிலருக்குமே எல்லாச் செயல்களும் நடைபெறும். ஏனையோரின் முறையீடுகள் முடங்கிக் கிடக்கும்.

முதலமைச்சர் ஓ. பி. ஆர். விருதுநகருக்கு வந்திருந்தார். பக்கத்து ஊர்களைச் சேர்ந்த சில விவசாயிகளின் மாடுகள் திருட்டுப் போய்விட்டன. போலீசில் எழுதிவைத்தும், ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஓ. பி. ஆர். விருதுநகருக்கு வந்திருந்ததை அறிந்த விவசாயிகள் உடனே அவரைப் போய்ப் பார்த்துத் தங்கள் குறைகளைக் கூறினார்கள்.

முதலமைச்சர் போலீசாரை வரவழைத்து, ஒரு வாரத்துக்குள் மாடுகளும் திருடர்களும் பிடிக்கப்படாவிட்டால், எல்லோரும் வேறு ஊர்களுக்கு மாற்றப்படுவதுடன், வேறு தண்டனைகளையும் அனுபவிக்க வேண்டியது வரும் என்று கடுமையாகக் கண்டித்தார்.[2]

---

1. தகவல் : திரு. நாரண துரைக்கண்ணன்

2. தகவல் : திரு. அழகிரிசாமி, காரியதரிசி, காந்தி ஸ்மாரக் நிதி, மதுரை.

## கல்லுப்பட்டியில் நிர்மாண ஊழியருக்குப் பயிற்சி

காங்கிரஸ் தொண்டர்களுக்கு நிர்மாண வேலைகளில் பயிற்சி கொடுக்க வேண்டியதன் தேவைபற்றி 1945 இல் வார்தாவில் ஒரு மாநாடு நடைபெற்றது. அதில் திரு. மீ. பக்தவத்சலம். திரு. கோ. வேங்கடாசலபதி, திரு. வி. எம். உபயதுல்லா ஆகியோர் தமிழ்நாட்டின் சார்பாகக் கலந்துகொண்டனர்.

வார்தா மாநாட்டின் தொடர்ச்சியாக, 1945 மே 9 ஆம் தேதி முதல் ஜூன் 30 வரை இரண்டு மாத காலத்துக்கும் மேலாக, மதுரை மாவட்டம் கல்லுப்பட்டியில் நிர்மாண ஊழியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. மாவட்டத்திற்கு ஆறு ஊழியர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தப் பயிற்சியில் ஓ. பி. ஆர். கலந்துகொண்டு, நிர்மாண ஊழியர் களுக்குத் தம் அனுபவங்களையும் அறிவுரைகளையும் கூறினார். டாக்டர் குருபாதம்: சுகாதாரம் மற்றும் சத்துணவு குறித்து வகுப்பு நடத்தினார். திருவாளர்கள் இரா. விநாயகம் பிள்ளை, சர்தார். வேதரத்தினம், ந. ம. ரா. சுப்பராமன், ஜி. இராமச்சந்திரன், எம் பக்தவத்சலம், தி. சு. அவினாசிலிங்கம் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். ஆதாரக் கல்வி நிலையங் களைத் திறப்பது என்ற முடிவு இந்த முகாமின் இறுதி நாளான ஜூன் 30 இல் நடைபெற்ற விழாவில் செய்யப்பட்டது.

கல்லுப்பட்டி காந்தி நிகேதனத்துக்கும் ஓ. பி. ஆருக்கும் எப்போதும் நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது[1]

---

1. தமிழ் நாட்டில் காந்தி பெயரால் ஏற்பட்ட கிராமப் புனருத்தாரண முயற்சி களில், முதலாவது பெருமுயற்சி காந்தி நிகேதன். தாகூர் தொடங்கிய சாந்தி நிகேதனை நினைவுபடுத்தும் வகையில் இப்பெயர் இடப்பட்டுள்ளது

கல்லுப்பட்டி என்னும் ஊர் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் வட்டத்தில் இராசபாளையம் செல்லும் சாலையுடன் வேறு சில சாலைகள் சந்திக்கும் இடத்தில் மலைகள் குன்றுகள் சூழ்ந்த இடத்தில் உள்ளது. இப் பகுதியைச் சேர்ந்த கோபிநாயக்கன்பட்டி என்னும் குக்கிராமத்தினரான திரு. கோ. வெங்கடாசலபதி (1909—1969) துடிப்பான இளம் மாணவராக இருந்தபோது தேசிய இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தொண்டர். இவர் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றவும், ஊழியர்களுக்குப் பயிற்சிக் கொடுக்கவும் ஆதாரக்கல்விநிலையங்கள் நடத்தவும், குடிசைத்தொழில்களை ஆரம்பிக்கவும் கனவு கண்டார். இந்த நிறுவனத்தை 1940 இல் ஓர் ஆசிரமமாகத் தொடங்கினர். உழைப்பாலும் தன்னலமற்ற

ஓமந்தூரார் முதலமைச்சராவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே இங்கு பல தடவை வந்து, பல நாட்கள் தங்கி, ஊழியர்களின் உடல் உழைப்பிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் பங்கு கொண்டார்.[1] இங்கு முகாமிட்ட ஊழியர்களிக்குத் தமிழ் அறிவும் தேவை என்று கருதி, ஓமந்தூரார் திரு. ரா. பி. சேதுப் பிள்ளையை அனுப்பி வைத்துத் தமிழ்ப் பாடங்கள் நடத்த ஏற்பாடு செய்தார்.[2]

காந்தியடிகளின் சாம்பலில் ஒரு பகுதியை, காந்தி நிகேதனுக்கு ஓமந்தூரார் அனுப்பிவைத்தார்.

---

211-ஆம் பக்கம் அடிக்குறிப்பின் தொடர்ச்சி

தொண்டாலும் அவர் ஆரவாரமின்றி விதைத்த விதை ஆல்போல் வளர்ந்து அரசுபோல் வேர் விட்டுப் பெருவளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த நிறுவனங்களுக்கு ஓமந்தூரார் தம் ஆட்சியில் பெரிதும் ஆதரவு கொடுத்தார். சுற்று வட்டாரம் தன்னிறைவு பெறவும் அங்குள்ள மக்கள் முதியோர் கல்வி பெறவும் காந்திநிகேதன் வழிகாட்டியிருக்கிறது.

ஓமந்தூராருக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த போது (1988இல்) அப்போது மதுரை மாவட்டக் கழகத்தில் துணைத் தலைவராக இருந்த திரு.கோ. வெங்கடாசலபதியோடும், விருதுநகர் நகராண்மைக் கழகத் துணைத் தலைவராக இருந்த திரு. குருசாமியுடனும் பழகி அவர்களுடைய திறமையையும் தொண்டினையும் அறியும் வாய்ப்புக் கிட்டியது.

திரு. கோ. வெ., ஓமந்தூரார் விருப்பப்படி, வளர்ச்சித்துறை ஆணையர் பதவியை ஒப்புக்கொண்டதும் காந்திநிகேதனம் பொறுப்பை திரு. குருசாமி ஏற்றுக்கொண்டார்.

---

1. 1940 ஏப்ரல் முதல் 1942 மார்ச் முடிய காந்தி நிகேதனம் அறிக்கை கூறுவதாவது, காந்தி நிகேதன் ஊழியர்களின் கூட்டம் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் மூன்று நாட்களுக்கு நடந்தது. பக்கத்து மாவட்டங்களிலிருந்தும் அன்பர்கள் வந்திருந்தார்கள். காந்தியின் கொள்கைகள் தத்துவங்கள் வேலை முறைகள் இவற்றைப்பற்றி ஊழியர்கள் பேசி எண்ணங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டார்கள்.

2. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். சிறந்த சொற்பொழிவாளர். 'சொல்லின் செல்வர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். பல நூல்களின் ஆசிரியர். தெய்வப்பற்றும் தேசப்பற்றும் கொண்டவர். ஓ. பி. ஆர். இவரை 1930 முதல் அடிக்கடி சந்தித்து வந்தார்.

## திரு. விநாயகம் விலகல்

கதர், கிராமக் கைத்தொழில்கள் குறித்து ஏதாவது செய்ய வேண்டும் என்று பிரகாசம் அமைச்சரவையில் சிந்தனை இருந்தது. ஆனால் உருப்படியான காரியங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. கிராமப்புறத் தொழில் அதிகாரிகள் ஒரு வேலையும் இல்லாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தனர். அதனால் ஓமந்தூரார் அப்பதவிகளை ஒழித்தார். தன்னிடம் இதைப்பற்றி கலந்து ஆலோசிக்காமல், முதலமைச்சர் உத்தரவு போட்டதை திரு. விநாயகம் பிள்ளை விரும்பவில்லை. எனவே அவர், தாம் அசிஸ்டண்ட் டெக்ஸ்டைல் கமிஷ்னர் என்ற பதவிப் பெயரில் வகித்துவந்த கிராம வளர்ச்சி இயக்குநர் பொறுப்புக்களையும், பதவிகளையும் விட்டு விலகிக்கொண்டார்.

## சீரமைப்பு மாநாடு

யார் தன்னைக் காலை வாரி விட்டாலும், காந்தியக் கொள்கைகளைக் கடைப் பிடிப்பது, நிறை வேற்றுவது என்று ஓமந்தூரார் உறுதி கொண்டார். பிர்க்கா வளர்ச்சி சீரமைப்பு மாநாடு நடத்தினார். அம்மாநாட்டுக்குப் பின் கண்டவர்களை அழைத்தார்.[1]

1. காந்தியப் பொருளாதார மேதை திரு ஜே. சி. குமரப்பா
2. இப்போது காந்தி கிராமம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருக்கும் திரு. ஜி. இராமச்சந்திரன்
3. ரெவரண்டு ஆர். ஆர். கெய்த்தான்
4. கள்ளிக்கோட்டை திரு. கேளப்பன் (முதுபெரும் தேசபக்தர்)
5. டாக்டர் குருபாதம் (பின்னர் அமைச்சராக நியமிக்கப்பெற்றவர்)
6. திரு. கே. அருணாசலம்
7. திரு. கோ. வெங்கடாசலபதி

---

1. தகவல்: டாக்டர் குருபாதம், திரு. குருசாமி.

8. திரு. விநாயகம் பிள்ளை (பிரகாசம் ஆட்சியில் அலுவல் பார்த்து, ஓ. பி. ஆர். வந்ததும் விலகிக்கொண்டவர்)

இக்குழுவினர் கருத்துக்களை நிறைவேற்ற, ஓ. பி. ஆர். ஆவன அனைத்தும் செய்தார்.

## கோ. வெ. நியமனம்

கல்லுப்பட்டியில் ஆசிரமம் அமைத்து காந்தியடிகள் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வந்த ஊழியர் திரு. கோ. வெங்கடாசலபதியை வரவழைத்து, கிராமப்புற வளர்ச்சி இயக்குநராக ஓ. பி. ஆர். நியமித்தார்.

"உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டும்?" என்று முதலமைச்சர் கோ. வே. யைக் கேட்டாராம்.

"நூறு ரூபாய் இருந்தால் போதாதா?" என்று தொண்டர் கோ. வெ. பதிலுக்குக் கேட்டாராம்.

"பைத்தியக்காரா, நீ நூறு ரூபாய் சம்பளத்தில் சென்னையில் வாழ முடியாது. அப்படி வாழ முடிந்தாலும்கூட, நீ நூறு ரூபாய்தான் வாங்குகிறாய் என்றால், உன்னை இங்குள்ள ஐ. சி. எஸ். அதிகாரிகள் மதிக்கமாட்டார்கள். உனக்கு துணைச் செயலாளருக்குக் குறையாத அந்தஸ்தும், அதற்குத் தகுந்த சம்பளம் முதலியனவும் இருந்தால்தான், கிராமப்புற வளர்ச்சி வேலைகள் ஒழுங்காக நடக்கும். இல்லாவிட்டால் உன் உத்தரவுகள் செக்ரடேரியட்டிலிருந்து கடல்காற்றில் பறந்துவிடும் என்ற கருத்தில் ஓ. பி. ஆர். பேசினாராம்.[1]

## பயிற்சியும் மறுபயிற்சியும்

ஊழியர்களுக்கு மூன்று மாதம் ஆழமான பயிற்சி கொடுக்க சத்திய விஜயநகரம், பவானிசாகர், கிருஷ்ணகிரி அணை ஆகிய இடங்களில் கிராமசேவகர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப் பெற்றன. இங்கு பயிற்சி பெற்றவர்கள் ஓராண்டுக் காலம் வேலை பார்த்த பிறகு, அவர்களுக்கு மறுபயிற்சி கொடுக்க ஓமந்தூரார்

1. ஆதாரம்: திரு. கோ. வெ. வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள திரு. செல்வராஜ், இந்நூலாசிரியருக்கு எழுதிய கடிதம்.

கல்லுப்பட்டியில் மறுபயிற்சிக் கேந்திரம் அமைத்தார். அக் கேந்திரத்தில், திரு. குருசாமியை கௌரவ முதல்வராக, மாதம் நூறு ரூபாய்ச் சன்மானத்தில் நியமித்தார்.[1, 2]

கல்லுப்பட்டிப் பகுதிக்கு வந்த இந்திய அரசின் சமுதாய வளர்ச்சி நிர்வாகி திரு. எஸ். கே. டே, ஏரி குளம் சீர்திருத்த வேலைகளைப் பார்த்து வியந்துபோய் மிகவும் பாராட்டி அறிக்கை வெளியிட்டார்.

மாநிலமெங்கும் மொத்தம் 22 பிர்க்காக்களில் பிர்க்கா வளர்ச்சிப் பணிகள் தொடங்கப்பெற்றன. சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்ட பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் சரிவர நடைபெற வேண்டுமானால் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று டாக்டர். குமரப்பா தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டி அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது. 1948-இல் முதல் மந்திரியாக இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் கல்லுப்பட்டியில் ஆசிரமச் சூழ்நிலையில் கிராம சேவக் பயிற்சி நிலையம் நடக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்துடன் பயிற்சிக்கு வேண்டிய ஷெட்டுகள் போடவும் நடத்தவும் உத்தரவிட்டார். தமிழ்நாடு கிராம சேவக் வித்தியாலயம் என்ற பெயருடன் அரசாங்க கிராம சேவக் பயிற்சி நிலையம் ஆரம்பமாயிற்று.

## பிற பணிகள்

கைக்குத்து அரிசி நிலையங்களும் பல இடங்களில் தொடங்கப்பட்டன. வேளாண்மை முறைகளை மேம்படுத்தும் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. மண்பாண்டம் செய்வோர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. கொல்லுப்பட்டறைகள் தொடங்கப்பட்டன.

## மதுவிலக்கு

திரு. பிரகாசம் ஆட்சியில் சென்னை மாநிலத்தில் எட்டு மாவட்டங்களில் மட்டுமே மதுவிலக்கு அமுலில் இருந்தது. அண்டை மாவட்டங்களில் கள்ளுக்கடைகள் இருந்ததால், அந்த மதுவிலக்குச் சட்டத்தால் பயன் ஏற்படவில்லை.

---

1, 2. தகவல்: திரு. ஆர். குருசாமி,
காந்தி நிகேதனத்தின் அறிக்கை.

ஓ. பி. ஆர். முதலமைச்சரானதும், எஞ்சிய 17 மாவட்டங்களிலும் மதுவிலக்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. இதனால் 25 பெரிய மாவட்டங்களைக் கொண்ட பரந்த சென்னை மாநிலம் முழுவதும் ஒரே நாளில் கள் அரக்கன் ஒழிக்கப்பட்டான். சட்டம் சரியாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக, இந்திய தேயிலைக் கழகத்தாரை ஓ. பி. ஆர். அணுகி, எல்லா மாவட்டங்களிலும் ஏழை மக்களுக்கு ஓரிரு மாதங்களுக்கு இலவசமாக தேநீர் வழங்குவதற்கு இயங்கும் வாகனங்களை அனுப்பித் தேயிலை குடிக்கும் பழக்கம் உண்டாக்கப் பிரசார இயக்கத்தை ஏற்பாடு செய்தார்.[1] கள் குடிப்பதைக் கைவிடுவதால் ஏற்படும் பயன்களை நாடகங்கள் மூலமாகவும், கதா காலட்சேபங்கள், பஜனைகள் வாயிலாகவும் கிராமப்புறங்களில் பிரசாரம் செய்ய ஓ. பி. ஆர். ஆவன அனைத்தும் செய்தார்.

சடுகுடு, பிள்ளையார் பாண்டு, கிளித்தட்டு, தெருக்கூத்து முதலியவற்றை கிராமப்புற மேம்பாட்டு அலுவலர்கள் வாயிலாக ஓ. பி. ஆர். கிராமங்களில் மீண்டும் பரப்பி, மதுவிலக்கு வெற்றி பெற பொழுதுபோக்கு ஏற்பாடுகள் செய்தார்.

பனைவெல்லம் காய்ச்சவும், பதநீர் விற்கவும் பல நூறு சங்கங்கள், அரசின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டன. 'இதனால் கள்ளத்தனமாகக் கள் இறக்க வழி பிறக்கும், இந்தச் சங்கங்கள் வேண்டாம்' என்று ஓமந்தூரார் கண்டித்தார். கோடிக்கணக்கான பனைமரங்கள் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புக் கருதி இந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்று டாக்டர் குருபாதம் ஓ. பி. ஆரிடம் சமாதானம் சொல்லி, அவருடைய சம்மதத்தைப் பெற்றார்.[2]

## ஒருங்கிணைந்த கிராம நிலையங்கள்

கஸ்தூரிபா நிதியின் தமிழ்நாடு பிரதிநிதியாக திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன்[3] இருந்தார். அப்போது

1. தகவல்: டி மார்க்கட் எக்ஸ்பான்ஷன் போர்டு வெளியிட்டுள்ள அறிக்கைகள் (1949-50)
2. தகவல்: டாக்டர். குருபாதம்.
3. திருமதி. சௌந்தரம் இராமச்சந்திரன், திரு. டி. வி. சுந்தரம் அய்யங்காரின் மகள் சிறந்த சமூகசேவகி. நாட்டுத் தொண்டில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். இந்திய அரசில், கல்வித்துறைத் துணை அமைச்சராக இருந்தவர். இவரும், இவர் கணவர் திரு. ஜி. இராமச்சந்திரனும் சேர்ந்து காந்திகிராமத்தை ஈடும் இணையுமில்லாத முறையில் உருவாக்கியுள்ளனர். காந்திகிராமம் டிரஸ்டில் உள்ள கல்விக்கூடங்கள் திருமதி சௌந்தரம் பொறுப்பில் இயங்கி வருகின்றன.
- இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் திருமதி சௌந்தரம், திரு. நா. மகாலிங்கம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் உள்ளன. (22—1—78)

கிராமப்புறங்களிலிருந்து, முக்கியமாக மகாத்மா காந்தியின் கிராமச் சீரமைப்புத் திட்டத்தில் பங்கு கொண்டவர்களின் குடும்பங்களிலிருந்து பெண்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அவர்களுக்கு 1945-ஆம் ஆண்டில் கல்விப் பயிற்சியும், பிறகு கிராமசேவிகா, ஆரோக்கிய சேவிகா, நூற்பு ஆசிரியைப் பயிற்சிகள் கொடுத்து, பல இடங்களில் கஸ்தூரிபா ஒருங்கிணைந்த கிராம நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

காந்தி கிராமத்தில் அமைந்த இத்தகைய நிலையத்தை ஓ. பி. ஆர். 1945-இல் பார்த்தார். அது அவரை மிகவும் கவர்ந்தது. அதுமுதல் அதன் வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து அறிவுரைகள் கூறிவந்தார்.

இவ்வளவு பெண்களுக்கும் போதிய அளவில் தங்கும் விடுதிகள் கட்டப்படவேண்டும் என்பதை ஓ. பி. ஆர். வற்புறுத்தினார்.

1948-இல் முதலமைச்சராக ஓ. பி. ஆர். காந்திகிராமத்துக்கு வந்தபோது, இந்தப் பயிற்சியாளர்கள் கூட்டத்தில் பேசினார்:

> "இப்போது சுதந்திர பாரதத்தை உருவாக்கும் நற்பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இந்த இடத்திலேயே ஒரு நல்ல கட்டிடம் கட்ட நூறு சதவிகிதம் சர்க்கார் மானியம் கொடுக்க நான் அனுமதித்துவிடுகிறேன்"

என்று கூறினார். அதேபோன்று, நிர்வாகத் தாமதம் சிவப்பு நாடா முதலிய சுணக்கங்கள் எதுவுமின்றி, அரசு ஆணை நான்கு நாட்களில் காந்திகிராமத்துக்கு வந்துவிட்டது!

## கல்லுப்பட்டியும் வடலூரும்

வடலூருக்குப் போய் நிலையாகத் தங்கிய பிறகு, கல்லுப்பட்டியில் போல வடலூரிலும் குடிசைத் தொழில்களைத் தொடங்க ஓ. பி. ஆர். விரும்பினார். ஆனால் "அருகே நெய்வேலியில் புத்தம் புதிய இயந்திரத் தொழில்கள் உருவாகி வருவதால் குடிசைத் தொழில் பயிலும் மாணவர்கள் சில மாதங்களில் அங்குச் சென்றுவிடுவார்கள், நீடித்து இதில் ஈடுபடமாட்டார்

கள்'' என்று பலரும் அவரிடம் கூறினர். அது உண்மை என ஒப்புக்கொண்டு, கல்லுப்பட்டி காந்திநிகேதனப் பாணியில் நிறுவனம் அமைக்கும் எண்ணத்தை ஓமந்தூரார் கைவிட்டார்.[1]

## சுதேசியத்தில் நம்பிக்கை

நம்நாட்டுப் பொருள்களையே மக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் மகாத்மா காந்தி எழுதிய 48 கட்டுரைகளைத் தொகுத்து, திரு. கா. திரவியம்[2] அவர்களைக் கொண்டு நல்ல தமிழில் மொழிபெயர்க்க ஓ. பி. ஆர். ஏற்பாடு செய்தார். பிர்க்கா அபிவிருத்தி இலாகா மூலமாக இந்நூல்கள் அரசாங்க வெளியீடாக வெளியிடப்பெற்றன.[3]

---

1. தகவல் : திரு வி. எஸ். சண்முகசுந்தரம்

2. திரு. கா. திரவியம்: தேசிய உணர்ச்சி பெற்று, கல்லூரிப் படிப்பை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டவர். தமிழ்நாட்டு அரசாங்கத்தில் பல்வேறு பொறுப்புக்களைத் தலைமைச் செயலகத்திலும் மாவட்டங்களிலும் வகித்தவர் ஐ. ஏ. எஸ். அலுவலர். இப்போது போர்டு ஆஃப் ரெவினியூ உறுப்பினர் சிறந்த எழுத்தாளர்.

3. 'பூர்ண சுதேசி' — மகாத்மா காந்தி
தமிழாக்கம் : கா. திரவியம், சென்னை சர்க்கார் வெளியீடு, 1950.

'குடி உயரக் கைராட்டைக் கொடிகண்ட காந்திமுனி
அடி பரவிப் பொருளதனின் அடிப்படையை வளர்ப்போம்'

# 17

# கதர்த் துறை

ஓமந்தூரார் தம் இருபதாவது வயதிலேயே கதர் கட்டத் தொடங்கினர். நூல் நூற்பதிலும் மக்களைக் கதர் ஆடையைக் கட்டச் செய்வதிலும் ஈடுபட்டார். கதர் ஆடைகளையே உடுப்பேன் என்ற உறுதி மொழியைப் பலரிடம் எழுதி வாங்கிய விவரத்தையும் சீமைத்துணி மறியலில் ஈடுபட்ட வரலாற்றையும் முன் கட்டுரைகளில் தெரிவித்துள்ளோம்.

## தலைமீது துணிமூட்டை

ஓ. பி. ஆர். 1924 ஆம் ஆண்டு அளவில் தம் தலைமீது கதர்த் துணி மூட்டைகளைச் சுமந்து, பல ஊர்களில் கதர் விற்பனை செய்வதில் தம் நேரத்தைச் செலவிட்டார். கதர்க் கொள்கையில் நம்பிக்கை இல்லாத ஏனைய கட்சிகாரர்களும் கூட ஓ. பி. ஆரிடம் வைத்திருந்த பெரிய மதிப்பின் காரணமாக, கதர் வாங்கி அதை மற்றவர்களுக்கு வழங்கினர்கள். கடலூரில்

'ரெட்டி ஹாஸ்டல்' உள்ளது. அந்தக் காலத்தில், வசதியான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே அதில் தங்கிப் படித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஓ. பி. ஆரிடம் (1924 ஆம் ஆண்டு விலையில்) ஐம்பது ரூபாய்க்குக் கதர் வாங்கினர்.[1]

## கதர்க் கூப்பன்கள்

1939 ஆம் ஆண்டின் துவக்கத்தில் தமிழ்நாடு சர்க்கா சங்கக் கிளைகளிலே சுமார் ஏழு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் தேங்கிக் கிடந்தது.

நடைமுறைச் செலவுகளுக்கும்கூட ரொக்கக் கையிருப்புப் போதாமல் இருந்தது.

கதர்க் கூப்பன்கள் அச்சிட்டு விற்றால் பின்னர் அக்கூப்பன்களைப் பெற்றுக்கொண்டு அவற்றின் கிரயத்துக்குக் கதர் வழங்கலாமென்று ஒரு யோசனை கோவை திரு. அ. அய்யாமுத்து அவர்களுக்குத் தோன்றிற்று. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த ஓ. பி. இராமசாமி ரெட்டியாரும் இந்த யோசனையை ஆமோதித்தார்.[2]

## கதர்த் துறை

ஓ. பி. ஆர். முதலமைச்சராக வந்தவுடன் கதர் உற்பத்திக்கும் விற்பனைக்கும் அரசாங்கத்தில் தனித் துறை ஒன்றைத் தொடங்கினார்.

## கிசானா? குஷனா?

கிசான் சர்க்காக்கள் வாங்கவேண்டும் என்று கிராமப்புற வளர்ச்சி ஆணையர் திரு. கோ. வெங்கடாசலபதி, அந்தத் துறைக்கு உரிய அரசாங்கச் செயலருக்கு எழுதினார். செயலர், ஐ. சி. எஸ். காரர், கிசான் என்ற சொல்லை அவர் கேள்விப்

---

1. தகவல்: திரு. பி. என். ஞானசம்பந்த முதலியார், 17 எல்லைக்கல் தெரு, குறிஞ்சிப்பாடி.

2. ஆதாரம்: கோவை அ. அய்யாமுத்து, 'எனது நினைவுகள்', பக். 547.

பட்டதில்லை. சர்க்காவைப் பற்றியும் அவருக்கு ஒன்றும் தெரியாது. குஷன் (cushion) நாற்காலிகளிலேயே இருப்பார். ஆகையால் அவர் குஷன் சர்க்கா என்று நினைத்துவிட்டார்.

பலரிடமிருந்து விலைவிவரம் கேட்டு, குறைந்த ஏலக் கேள்விக்கு விற்கத் தயாராக இருப்பவரிடம் கதர் ராட்டைகளை வாங்கும்படியும் செயலர் ஆணை பிறப்பித்துவிட்டார். உடனே ஓ. பி. ஆர்., திரு. கோ. வெங்கடாசலபதியை அழைத்து, ஐ. சி. எஸ். காரர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கிக் கூறினார். இவை 'டெண்டர்' கோரி வாங்கும் பொருள்கள் அல்ல என்றும், நகல் ஆணையை கோ. வே. தயாரித்து ஐ. சி. எஸ். காரரிடம் இனிமேல் கையெழுத்து வாங்கவேண்டுமென்றும் சொல்லியனுப்பினார்.

கதர் உற்பத்தியாளர் கூட்டம்

பிரகாசம் ஆட்சியில் கதர் உற்பத்திக்குப் பல தடைகள் இருந்தன. அந்தச் சிக்கல்களுக்கு ஒரு தீர்வு காண, ஓ. பி. ஆரின் அமைச்சர் திரு. குருபாதம், சென்னை மாகாணத்தில் கதர் உற்பத்தி, வினியோகத் தொழில்களில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் அனைவரும் தம்மைச் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். 15—10—1948 இல் இந்த மாநாடு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கதர் இயக்கத்திலிருந்து கதர் வியாபாரிகளை நீக்கிய பிறகு கதர் உற்பத்தியும் வினியோகமும் குறைந்து வருவதை அமைச்சர் குருபாதம் சுட்டிக்காட்டினார்.

எப்போதும்போலவே கதர் உற்பத்தி செய்து விற்கத் தாங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று வந்திருந்த வியாபாரிகள் எல்லோரும் விரும்பினார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்ட சட்டசபை உறுப்பினர் திரு. குமாரசாமி ராஜா பேசுகையில், கதர் வியாபாரிகள் செய்து வந்த வேலையை சர்க்கா சங்கத்தில் பூர்த்திசெய்ய முடியவில்லையென்றும், உதாரணமாக இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் பிரதேசங்களில் சுமார் பத்தாயிரம் நூற்பவர்கள் இருக்கிறார்கள் என்றும், இவர்கள் நூற்ற நூல் அனைத்தையும் வியாபாரிகள் வாங்கிவந்தார்கள் என்றும், ஆனால் வியாபாரிகளை விலக்கிய பிறகு சுமார் 2000 பேரிடமிருந்துதான் சர்க்கா சங்கத்தினரால் நூல் வாங்க முடிந்துள்ளது என்றும் சொன்னார்.

வியாபாரிகளுக்கு லைசன்சு வழங்கி, கதர் உற்பத்தியைப் பெருக்குவதைவிட வேறு வழியில்லை என்று அமைச்சர் கூறி விஷயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்.[1]

## கதர் வேலை

ஓ. பி. ஆரும் (அவரைத் தொடர்ந்து அவர் நியமித்த) பி. எஸ். குமாரசாமி ராஜாவும் முதலமைச்சர்களாக இருக்கும் வரை கதர், கிராமப்புறத் துறைகளை மட்டும் திரு. கோ. வெங்கடாசலபதி கவனித்து, அப்பணிகளைச் செம்மை யாகச் செய்துவந்தார் இது குறித்து, அகில இந்திய சர்க்கா சங்கத்தில் தமிழ்நாட்டுக் கிளைச் செயலரும் தமிழ்நாட்டில் கதர் இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டவருமான திரு. அய்யாமுத்து பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"கோ. வெங்கடாசலபதி, ஓமந்தூர் ரெட்டியார் முதல் மந்திரியாக இருந்தபோது 'பிர்கா டெவலப்மெண்ட்' ஆபீசராக சென்னை சர்க்காரில் சேர்ந்தார். அப்போது ஒழுங்காகக் கதர் வேலைகளைக் கவனித்து வந்தார்.

1952 இல் ராஜாஜி அவரை, அந்த வேலையோடு மாதர்நல இலாகா டைரக்டராகவும் போட்டார்.

1955 இல் காமராஜ் அவரை 'ஜாயிண்ட் செக்ரடரி', 'ஜாயிண்ட் டெவலப்மெண்ட் கமிசனரா'கப் பதவி உயர்த்தினர். பிறகு அவரால் கதர் வேலைகளைப் பார்க்க முடியவில்லை. மற்ற வேலைகளுக்கே நேரம் போதவில்லை."

---

1. கோவை அய்யாமுத்து – எனது நினைவுகள் ப. 780

"பர்ச்சூரே சாஸ்திரி என்றவர் குஷ்ட நோயாளி. காந்திஜி தம் கையாலேயே அவர் புண்களுக்கு வைத்தியம் செய்தார். அரசியலில் பல பெரிய நெருக்கடிகள் இருந்த நாளிலும் பாபுஜி யின் மனம் இந்த நோயாளியை நாடிச் சென்றது. பிறர் பெரி தென்று நினைக்கும் விஷயங்கள் பாபுஜிக்குச் சிறியவை. பிறர் சிறிதென்று நினைக்கும் விஷயம் பாபுஜிக்குப் பெரிது"

— த. ந. ஜகதீசன்

# 18

# குஷ்ட நிவாரணம்

வள்ளலார் கருத்துக்களை வேதவாக்காகக் கொண்ட ஓ. பி. ஆர்.நீடிய பிணியோர்க்கு ஒல்லும் வகையால் உதவுவதைத் தன் கடமையாகக் கொண்டார்.

காந்தியடிகளுக்குக் குஷ்ட நிவாரண வேலையில் இருந்த அக்கறையையும் ஓமந்தூரார் உணர்ந்தார்.

திரு. கோ. வேங்கடாசலபதி நடத்திவந்த 'கிராமராஜ்யம்' என்ற இதழில், குஷ்ட நிவாரணத் தொண்டர் திரு. ஜகதீசன் எழுதிய கட்டுரையைப் படித்து ஓ. பி. ஆர். உள்ளம் நெகிழ்ந்தார்.

1944-ஆம் ஆண்டில் நிர்மாணத் திட்டத்தில் குஷ்ட நிவாரணப் பணியை ஒரு பகுதியாக காந்திஜி சேர்த்துக் கொண்டார்.

## கஸ்தூர்பா நிதி

தேசப்பிதாவின் மனைவி கஸ்தூர்பா காந்தி இறந்ததும் அவர் நினைவாக நிதி திரட்டப்பட்டது. நாடெங்கும் திரண்ட நிதியை, குஷ்ட நிவாரணத்துக்குப் பயன்படுத்த வேண்டுமென்று மகாத்மா விரும்பினர்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கஸ்தூர்பா நிதிக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஓ. பி ஆர் ஏற்றிருந்தார்.

## தென் ஆர்க்காடு மாவட்டத்தில் குஷ்ட நிவாரணம்

தமிழ்நாட்டில் குஷ்ட நோயாளிகள் பெரிய அளவில் காணப்படும் மாவட்டங்களில் முதலிடம் வகிப்பது தென்ஆர்க்காடு. எனவே இம்மாவட்டத்தில் ஏதாவது ஓரிடத்தில் குஷ்டநிவாரண நிலையம் திறக்கவேண்டும் என்று தமிழ்நாடு குஷ்ட நிவாரண சங்கத்தின் செயலாளரும், அனைத்திந்திய குஷ்ட நிவாரண சங்கத்தின் அமைப்புச் செயலாளருமான திரு. ஜகதீசன் கருதி, ஓ. பி. ஆரை 1944 இறுதியில் ஓமந்தூரில் போய்ப் பார்த்தார். ஓமந்தூரார் திரு. ஜகதீசனின் யோசனையை வரவேற்றுத் தம்மாலான உதவிகளைச் செய்வதாக வாக்களித்தார். அதன் பின்னர், பரங்கிப்பேட்டையில் குமாரி பாட்டர்சன் நடத்திய காந்தி ஆசிரமத்தில் மாவட்டக் கஸ்தூரிபா நிதிக் கூட்டம் கூட்டப் பெற்றது. அக்கூட்டத்தில், திரு. ஜகதீசனின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து மாகாணக் குழுவும் தீர்மானம் செய்தது. மகாத்மா காந்தியும் தக்கர் பாபாவும் இந்தத் திட்டத்தை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அதன் விளைவாக மழவந்தாங்கலில் குஷ்ட நிவாரண நிலையம் ஏற்பட்டது.

---

**இக்கட்டுரைக்கு ஆதாரங்கள்:**

1. ஹிந்த் குஷ்ட நிவாரண சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டக் கிளையின் 1973-74 ஆம் ஆண்டு அறிக்கை.
2. காந்திநிகேதன் திரு. குருசாமி – பேட்டி.
3. ஆதம்பாக்கம் இராமகிருஷ்ணய்யர் – பேட்டி
4. தேசத் தந்தைக்கு மனமுவந்த சேவை – த. ந ஜகதீசன் கட்டுரை (இந்திய குஷ்ட நிவாரண சங்கம், தமிழ்நாடு கிளை, 13/2 புஷ்ப நகர், மெயின் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034)
5. ஆற்றுப்பாக்கம் எம். இராமகிருஷ்ண ரெட்டியார் – பேட்டி
6. திரு. த. ந. ஜகதீசன் – பேட்டி
7. ௸ – கடிதம் 15—1—78, 8—3—78
8. திரு. ஜி. வாகீசம்பிள்ளை – பேட்டி

## மழவந்தாங்கல்

தமிழ்நாட்டில் முதலாவதாக குஷ்ட நிவாரண நிலையம் இவ்வூரில்தான் தொடங்கப் பெற்றது.

இது செஞ்சி வட்டத்தில் விழுப்புரம், திருவண்ணாமலை நகர்களுக்கு நடுவே (எங்கிருந்தும் 20 மைல் தொலைவில்) உள்ளது. கண்டாச்சிபுரம் என்னும் ஊர் அருகேயுள்ள அடுக்கம் என்னும் சிற்றூர் ஓரமாக அமைந்த குக்கிராமம் மழவந்தாங்கல்.

மழவந்தாங்கல் கஸ்தூரிபா குஷ்ட நிவாரண நிலையம், 1945–46-இல் சிறுஅளவில் தொடங்கப்பெற்றது. முதல் அமைச்சரான பிறகு ஓ. பி. ஆர். குஷ்ட நிவாரண வேலைகளில் காட்டிய ஆர்வம் மிகுதியானது என்றுதான் சொல்லவேண்டும். திரு. ஜகதீசனுடன் நாள்தோறும் தொலைபேசியில்பேசி, அரசாங்கம் குஷ்ட நிவாரண வேலைகள் குறித்து என்ன செய்யலாம் என்று கேட்டுக் கொண்டிருந்தார். பிர்க்கா வளர்ச்சித் திட்டத்தில் குஷ்ட நிவாரண வேலையை இணைப்பதற்கு ஒரு திட்டம் தீட்டித் தருமாறு திரு. ஜகதீசனைக் கேட்டுக் கொண்டார்.

கிராம மருத்துவமனையில் உள்ள டாக்டருக்கு குஷ்ட நிவாரண வேலையில் ஒரு மாதத்திற்குப் பயிற்சி அளிக்கவேண்டும். குஷ்ட நிவாரண சேவகர் ஒருவரும் ஊசி போடுகிற ஆள் ஒருவரும் நியமிக்கப்பட்டு, ஆறுமாத காலத்துக்குப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். பிர்க்காவிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் இந்த மூவரும் பணியாற்றவேண்டும் என்பது ஏற்பாடு.

## குஷ்ட தடுப்பு அமைப்பாளர்

சென்னை அரசாங்கத்தில் குஷ்ட தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கான ஊதியம் பெறாத அமைப்பாளராக, ஓ. பி. ஆர். திரு. ஜகதீசனை நியமித்தார். குஷ்ட நிவாரண சம்பந்தமான பல நடவடிக்கைகள் எடுக்க இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த நியமனத்துக்கான ஆணைகள் பிறப்பிக்கப் பட்டபோது, பைல்கள் மின்னல் வேகத்தில் ஓர் அலுவலரிட மிருந்து மற்றொரு அலுவலருக்குச் சென்ற வண்ணமாக இருந்தன, அவ்வளவு விரைவாக செயல்கள் நடக்கவேண்டும் என்பதில் ஓமந்தூரார் கண்டிப்பாக இருந்தார்.

## அரசாங்க அமைப்பில் மாறுதல்

மாவட்டம் தோறும் குஷ்ட நிவாரணத்துக்கு அமைக்கப் பட்ட குழுவில், மாவட்ட ஆட்சித் தலைவர் குழுவின் தலைவராகவும் மாவட்ட சுகாதார அலுவலர் செயலராகவும் வேறு சில அதிகாரிகள் உறுப்பினர்களாகவும் இருந்து வந்தனர். பொது மக்களையும் இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஓ. பி. ஆர். ஆணை பிறப்பித்தார்.

## கௌரவ சுகாதார பார்வையாளர்கள் நியமனம்

குஷ்ட மருத்துவ மனைகள் நடைபெறுவதை அடிக்கடி நேரில் போய்ப் பார்த்து, நோயாளிகளின் குறைகளைக் களைய சமூக சேவை மனம்படைத்த சிலரை 'ஹானரரி ஹெல்த் விசிட்டர்' என்று நியமனம் செய்யும் முறையை ஓ. பி. ஆர் வகுத்தார்.

## மழவந்தாங்கலுக்கு வருகை

முதலமைச்சர் என்ற முறையில் ஓமந்தூரார் மழவந்தாங்கல் கஸ்தூர்பா குஷ்ட நிவாரண நிலையத்துக்குச் சென்றார். அப்போது எவ்வித ஆரவாரமோ, விளம்பரமோ, மாலை மரியாதையோ கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். முதலமைச்சர் வந்துவிட்டுச் சென்றதற்காக, நிவாரண நிலையத்துக்கு ஏற்பட்ட செலவு இரண்டு இளநீர் மட்டுமே!

## திருமணி குஷ்டநோய் மருத்துவ மனை

செங்கற்பட்டு மாவட்டம் திருமணி என்னும் ஊரில் குஷ்டநோய் மனையில், டாக்டர்கள் குஷ்ட நோயாளிகளைச் சரி வரக் கவனிக்கவில்லை. அவர்களை தொடாமலேயே வைத்தியம் செய்துவந்தனர்.

இதை அறிந்த ஓமந்தூரார், ஆதம்பாக்கம் என். இராமகிருஷ்ண அய்யர் என்பவருக்கு மாதம் நூறு ரூபாய் அலவன்ஸ் கொடுத்து அவரை கௌரவ பார்வையாளராக நியமித்தார். அவரும் கைம்பெண்ணான அவருடைய சகோதரியும்

நோயாளிகளுடன் தங்குதடையின்றி பழகியும் அவர்கள் (நோயாளிகள்) கொடுத்த காப்பியை வாங்கி குடித்தும், அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமானார்கள்.

நோயாளிகளின் வாழ்க்கையில் கசப்பு நிறைந்திருந்தது. பார்க்கவே அருவருப்பாக இருந்ததால் அந்த நோயாளிகளை அவர்களுடைய குடும்பத்தார் கூட, பாசத்துடன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையால், ஒரு பக்கம் நோய் நீக்கத்திற்கு ஊசி போட்டுக் கொண்டபோதிலும், மறுபக்கம் கள்ளத்தனமாக மாற்று மருந்து தடவி, தொடர்ந்து மருத்துவமனையிலேயே இருந்துவர ஏற்பாடு செய்துகொண்டனர்.

இத்தகைய நோயாளிகளுக்கு திரு. இராமகிருஷ்ண அய்யர், கடிதம் எழுதிக் கொடுத்தார். ராட்டை வாங்கிக் கொடுத்து, நூல் நூற்கும் முறையைக் கற்பித்தார். நெசவாளர்க்குத் தறிகள் வழங்க ஏற்பாடு செய்து அந்தத் துணிகளை அரசினர் மருத்துவமனை களுக்கு அனுப்பினார். காய்கறிப் பண்ணையும் ஏற்படுத்தினார்.

இதனால் குஷ்ட நோய்வாய்ப்பட்டவர்கள் தங்கள் நோயின் கொடுமையை மறந்து, புதியதொரு உலகில் வாழ்ந்தது உண்மையிலேயே ஒரு சமுதாயப் புரட்சியாகும்.

திருமணி குஷ்ட மருத்துவ மனை ஓமந்தூரார் காலத்தில் அடைந்த வளர்ச்சியின் விளைவாக இப்போது இந்திய அரசின் நேர் பொறுப்பில் ஆராய்ச்சி நிலையமாகவும் இருந்து வருகிறது.

உளுந்தூர் பேட்டை இராணுவ மருத்துவமனை

குஷ்ட நோய் நிவாரண இயக்கத்தின் பொதுச் செயலாளர் டோனல் மில்லர் என்பவரும் உலகப்புகழ்பெற்ற குஷ்ட நோய் நிபுணர் டாக்டர் கோச்ரேனும் தாங்கள் தமிழ் நாட்டில் ஸ்கெய்ப்பெலின் குஷ்ட நோய்க் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டங்களை விவாதிப்பதற்காக ஓமந்தூராரைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்- குஷ்ட நோய் நிவாரணத்தில் ஓமந்தூராருக்கு இருந்த பற்றுதலைக் கண்டு அவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். ஓமந்தூராருடைய கனிவும் இரக்க சிந்தனையும் அவர்களுடைய உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்தன. உளுந்தூர்ப்பேட்டை விமான நிலையம் போருக்குப் பிறகு பயன்படாமல் இருந்து வருவதையும், அங்கு ஏற்படுத்தப் பட்ட இராணுவ ஆஸ்பத்திரிக்

கட்டிடத்தையும், அதிலுள்ள விலைமிக்க கருவிகளையும் இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று திரு. ஜகதீசன் ஓ. பி. ஆரிடம் கூறினர். உடனே ஓமந்தூரார், தம் அரசின் தலைமை சர்ஜனாக இருந்த மேஜர் ஜெனரல். எஸ். எல். பாட்டியா என்பவரிடம் சொல்லி மறுநாளே உளுந்தூர்ப் பேட்டைக்குப் போய் பார்வையிட்டு, இந்திய அரசுக்கு ஒரு திட்டம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார். அடுத்த சில நாட்களில் ஓமந்தூரார் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இந்திய அரசில் சுகாதாரத்துறை அலுவலர்கள் உடனே அந்தக் கட்டிடங்களை ஏலத்தில் விற்று, கட்டிடத்தை வாங்குபவர் சில நாட்களுக்குள் இடித்து விடவும் வழி செய்துவிட்டனர்.

## வடலூரில் பணி

வடலூருக்கு ஓமந்தூரார் போய்த் தங்கிய பிறகு, வடலூர் நெய்வேலிச் சாலையில் சேப்பாளநத்தத்தில் குஷ்ட நோயாளிகள் நலத்துக்காக புனர் வாழ்வு நிலையம் அமைக்க ஏற்பாடு செய்தார். கட்டிடச் செலவுக்கு பின்னலூர் திரு. வாகீசம்பிள்ளை முதலியவர்களிடம் நன்கொடை பெற்று, அரசாங்கத்துக்கு தெரிவித்து 30 ஏக்கர் நிலம் வழங்கச் செய்தார். அங்கு 28—3—1960-இல் புனர் வாழ்வு நிலையம் தொடங்கப்பெற்றது. நோயாளிகள் பயிர் செய்தும் துணி நெய்தும் உடைகளைத் தைத்துக் கொடுத்தும் மறுவாழ்வு வாழ்கின்றனர்.

## புற்றுநோய் நிலையம்

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியின் சமூகப் பணிகளில் ஓ. பி. ஆர். பெருமதிப்பு வைத்திருந்தார். அவர் மகன் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி[1] (பி.1920), அமெரிக்காவுக்குப் போய் புற்று

1. தகவல்: டாக்டர். கிருஷ்ணமூர்த்தி. இவர் இப்போது அடையாறு, புற்றுநோய் நிலையத்தின் இயக்குநராக உள்ளார்.

காஞ்சிபுரத்தில் சத்திய ஞானசபை அமைக்க ஏற்பாடு நடைபெற்ற போது அந்நகரில் (9—12—1968) ஒரு விழாவுக்கு ஓ. பி. ஆர். எழுதி அனுப்பிய தலைமை உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் :

"வள்ளலார் நெறிக்கு ஒரு வழிபாட்டுக்கோயில்-சத்திய ஞானசபை இந்நாள்வரை காஞ்சியில் தோன்ருதது வியப்பே:அங்ஙனமே உடல் நோய்க்கு (புற்றுநோய்க்கு) ஒரு மருத்துவமனை இன்றுவரையில்லாதது. இனி கட்டி எழுப்பப்படும் என்ற மற்றொரு செய்தியும் பெருமகிழ்ச்சிக்கு உரியதாகும். காஞ்சித் தலைவர் திரு. அண்ணாதுரை முதலமைச்சர் ஆனது, புற்று நோய் மருத்துவமனை உடனடியாகத் தோன்றுவதற்கு அரிய வாய்ப்பாகும் என்று கருதுகிறேன்.

நோய் மருத்துவக் கல்வி பயின்று, 28ஆவது வயதில் 1948-இல் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அக்காலத்தில், இந்தியாவில் இவர் ஒருவர்தான் புற்று நோய் மருத்துவராக இருந்தார்.

அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும், டாக்டர். கிருஷ்ணமூர்த்தியை அவர் தாயார் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி, முதலமைச்சர் ஓமந்தூராரிடம் அழைத்துக்கொண்டு போனார். இளைஞர் கிருஷ்ணமூர்த்தி, புற்று நோயின் தன்மையையும் அதைக் குணப்படுத்தத் தாம் சென்னையில் ஒரு நிறுவனம் தொடங்க விரும்புவதாயும் கூறினார். ஓமந்தூரார் எல்லா விவரங்களையும் அமைதியாகவும் பொறுமையாகவும் கேட்டுக் கொண்டார்.

சென்னைப் பொது மருத்துவ மனையில் புற்று நோய்ப் பிரிவு அமைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு ஓ. பி. ஆர் ஆணை பிறப்பித்தார்.

திரு. குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தபோது, இந்தப்பிரிவு தொடங்கப்பெற்றது.

## பிணியாளரிடம் பரிவு

நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த வி. வி. ரெட்டி என்பவர் திருப்பதியில் கட்டப்பட்டுள்ளதுபோல தாமும் அங்கு ‘காட்டேஜ்’ கட்டி ஒரு தர்மம் செய்ய விரும்புவதாக ஓமந்தூராரிடம் கூறினார். அதைவிட நோயாளிகளுக்கு உதவுவது சாலச் சிறந்தது என்று ஓமந்தூரார் யோசனை சொன்னார். அதை ஒப்புக்கொண்டு, திரு. வி. வி. ரெட்டி இராயப்பேட்டையில் அரசினர் மருத்துவமனைக்கு வரும் ஏழை நோயாளிகளுக்குப் பயன் படும் வகையில் பீட்டர்ஸ் சாலையில் ஒய். எம். சி. ஏ-க்கு அருகே இடம் வாங்கிச் சத்திரம் கட்டினார். ஏழை எளியவர்களுக்கு எல்லா வசதிகளும் உள்ளதும் சமையல் செய்ய இடமும் கூடியதுமான அறைகள் மிகவும் மலிவான வாடகைக்கு இங்கு விடப்படுகின்றன. ஓமந்தூரார் தான் இதற்கு அடிக்கல் நாட்டினார். இன்றும் இந்த விடுதி செம்மையாக இயங்குவதை அனைவரும் காணலாம். பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர், பயன்படுத்திக் கொள்ளலாம் தொலைபேசியும் உளது.

எக்ஸ்-ரே கருவி

ஓமந்தூரார் காலத்தில் சென்னைப் பொது மருத்துமனையில் 500 எம். ஏ. ஆற்றலுள்ள எக்ஸ். கதிர் கருவி பொருத்தப்பட்டது. அதைத் தொடங்கிவைத்த போது, ஓ. பி. ஆர். பின்வருமாறு பேசினர்:

> "பெரும் பணம் போட்டு இதை வாங்கியிருக்கிறோம். இது ஏழைகளுக்குப் பயன்பட வேண்டும். இந்தக் கருவியை உபயோகித்துக்கொள்ள நோயாளிகளிடம் ஒருவரும் லஞ்சம் கேட்கக்கூடாது."

'ஊருக்குழைப்பேன், அதனல் வந்துறும் இன்னலைப் பொறுப்பேன்' என்ற உறுதி படைத்த உள்ளத்தினர்.

—'திராவிட நாடு' இதழில்
அறிஞர் சி. என். அண்ணுதுரை.

# 19

# பதவியேற்றல்

"கள்ளங் கபடற்ற கிராமவாசி அரசியல் சூதாட்டத்திற்கு அப்பாற்பட்டவர். தியாக முத்திரையை அரசியற் சந்தையிலே விற்கத் துணியும் வணிகராக இருக்க மறுப்பவர். சொந்த வாழ்க்கையையும் நலனையும் மிகமிகக் குறைவான அளவினமாக்கிக் கொண்ட துறவுமனப் போக்கினர். நெடுங்காலமாக நாட்டுப்புற வாழ்வை நேரடியாக, அவருடன் பழகியது மட்டுமன்று, அவர்களில் ஒருவராக இருந்து அறிந்து கொண்டவர். உள்ளொன்று வெளியொன்று கொண்டுழலும் உலுத்தர் போலன்றி, 'ஊருக்குழைப்பேன், அதனல் வந்துறும் இன்னலைப் பொறுப்பேன்' என்ற உறுதி படைத்த உள்ளத்தினர். எளிய வாழ்க்கையும் சீரிய குணங்களும் கொண்டவர்-இவரே நம் முதலமைச்சர் என்று சொன்னலொழிய யாராலும் அவ்வளவு பெரிய பதவியில் அமர்ந்திருப்பவர்

என்று கண்டதும் உணரக்கூடிய விதமான உருவமோ, உடையோ, நடையோ கொண்டவரல்லர், தன்னடக்க முள்ள தமிழர் ஓமந்தூரரார்.''

—'திராவிட நாடு' இதழில்
அறிஞர் சி. என். அண்ணாதுரை.

## 1946-பொதுத் தேர்தல்

1945-இல் போர் முடிவடைந்தது. அதைத் தொடர்ந்து 1946-இல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. சென்னை மாகாண சட்டசபையில் காங்கிரஸ் கட்சியே மிகப் பெரும்பாலான இடங்களைப் பெற்றது. அந்நாளில் கம்யூனிஸ்டுக் கட்சி தோன்ற வில்லை. காங்கிரசைத் தவிர குறிப்பிடத்தக்க கட்சி வேறு ஒன்றும் இல்லை.

## கட்சித் தலைவர் தேர்தல்

காங்கிரஸ் மேலிடம் இராஜாஜியைக் கட்சித் தலைவராக்கிப் பதவியேற்க வேண்டுமென்று விரும்பியது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள பெரும் பாலான காங்கிரசுக்காரர்கள் 1942-ஆம் ஆண்டு இயக்கத்தின்போது கட்சியை விட்டு ஒதுங்கி யிருந்த ஒருவர், அதிலும் சட்டசபை உறுப்பினராக இல்லாதவர் பதவியை ஏற்பதை விரும்பவில்லை என்பதை மேலிடத்திற்குத் தெளிவாகத் தெரிவித்து விட்டனர்.

இந்த நிலையில் திரு. சி. என். முத்துரங்க முதலியார், திரு. டி. பிரகாசம் ஆகிய இருவரும் சட்டசபைக் கட்சித் தலைமைக்குப் போட்டியிட்டனர். ஆந்திரர் அனைவரும் திரு. பிரகாசத்தை ஆதரித்தனர். தமிழரில் இராஜாஜி கோஷ்டியினர் நடு நிலைமை வகித்தனர். இதன் விளைவாக முத்துரங்க முதலியார் தோல்வி அடைந்தார். திரு. பிரகாசம் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராக ஆனார்.

## பிரகாசம் அமைச்சரவை

திரு. பிரகாசம், தமிழ் நாட்டின் நலன்களைப் புறக்கணித்து வந்தார். பதவியேற்றுச் சில மாதங்களிலேயே அவர்மீது அதிருப்தி ஏற்பட்டது.

இராஜாஜி, காமராஜ் இருவரும் கூடிப் பேசி, பிரகாசம் அமைச்சரவையை நீக்குவதற்கு முடிவுசெய்தனர். கட்சித் தலைமையை ஏற்கும்படி ஓமந்தூராரைக் கேட்டுக்கொள்ளலா மென்று இருவரும் கருதினர். இதைக் கேள்விப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் இந்த யோசனையை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

## ஓமந்தூரார் கருத்து

பொறுப்பினை ஓமந்தூரார் ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று சட்டசபை உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். மூன்று நான்கு மாத காலம் பேச்சு நடந்தது. ஓமந்தூரார் எளிதில் ஒப்புக்கொள்ளவில்லை. பிரகாசம் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களும் வேண்டிக் கொண்டதற் கிணங்க ஓமந்தூரார் இதைப்பற்றி யோசிக்கலானார்.

தமிழ் நாட்டில் அந்நாளில் இருந்த குறிப்பிடத்தக்க ஒரே தொழிலாக இருந்தது ஆலைத்தொழில். நூல் ஆலைகளுக்கு மூடு விழா நடத்தியதன் மூலம் திரு. பிரகாசம் தமிழ் நாட்டில் பல நூறாயிரம் கைத்தறியாளர்கள் வேலையை இழக்கும்படி செய்தார். எனவே தமிழராகிய ஓ. பி. ஆர். பதவியேற்க வேண்டுமென்று தமிழ் நாட்டார் அனைவரும் விரும்பினர்.

"நீங்கள் ஒப்புக் கொண்டால் போதுமா? ஆந்திர உறுப்பினர்களின் ஆதரவு வேண்டாமா" என்று ஓ. பி. ஆர். கேட்டார். யாரிடமும் போய் ஆதரவு திரட்டவோ, முண்டியடித்துக் கொண்டு முதல்வராய் வந்தே தீருவேன் என்று முரண்பிடிக்கவோ ஓமந்தூரார் விரும்பவில்லை. தன் தலையில் பதவிப் பொறுப்புச் சுமத்தப்படுமானால், அதைத் திறம்பட நடத்த இறையருள் வேண்டிப் பிரார்த்தனை செய்தார்.

ஆந்திர உறுப்பினர்கள், தமிழர் யாராவது ஒருவர் முதலமைச்சராவதற்குத் தங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்று கூறினர். தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து ஒருவரை நிறுத்தினால் தாங்களும் அவரை முழு மனத்தோடு ஆதரிப்பதாகவும் கூறினர்.

அதன் பின்னர் ஓமந்தூரார் தன்னுடைய குருநாதராகிய இரமண மகரிஷிகளின் ஆலோசனையைக் கேட்டார். பதவியை

ஏற்றுக் கொள்ளும்படி இரமண மகரிஷிகள் கூறிய விவரத்தை இந்நூலில் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஓமந்தூரார் சற்று உறுதியாக இருந்தார். வழக்கமாக ஓமந்தூரில் இவருடன் இருந்த சோதிடரும் "பெரியதொரு பதவி உங்களுக்குக் கிடைக்கும், நீங்கள் அதிலிருந்து தப்ப முடியாது" என்று சொன்னார். "உங்களுடைய புகழுக்கு ஒரு கேடும் வராது" என்றும் சோதிடர் உறுதி கூறினர்.[1]

## தேர்தல்

28—2—1947-இல் சட்டசபைக் காங்கிரஸ் கட்சி கூடிற்று. ஓமந்தூராரும் திரு. பிரகாசமும் போட்டியிட்டனர். ஒரு சில வாக்குகள் மட்டுமே பிரகாசத்திற்குக் கிடைத்தன.

தேர்தலின் கட்சித் தலைவராக ஓமந்தூரார் தேர்ந்தெடுக்கப் பெற்றார். கட்சித் தலைவராகமட்டும் அவர் இருந்து கொண்டு முதலமைச்சர் பொறுப்பை வேறு யாருக்காவது கொடுப்பார் என்று சிலர் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஓ. பி. ஆர். அவ்வித மடத்தனம் எதையும் செய்யவில்லை. அவரிடம் பணிவு உண்டு; அடக்கம் உண்டு. ஆனால் "மற்றவர்களைவிட நான் மட்டமானவன்" என்ற எண்ணம் அவருக்கு எந்தக் காலத்திலும் எழுந்ததில்லை. ஆகையால் அவர் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் தாமே முதலமைச்சராகப் பதவியேற்றார்.[2]

---

1. தகவல்: திண்டிவனம் வெங்கடசுப்பா செட்டியார், முலநூர் மாதவ ரெட்டியார்.

2. ஓமந்தூரார் தலைவராய் மட்டும் இருந்துகொண்டு முதல் மந்திரி பதவிக்கு ஆங்கிலப்பட்டம் பெற்ற ஒருவரை நியமிப்பார் என்று எதிர்ப்பார்த்தார்கள். ஆனால், அவ்விஷயமாக ஒருவரும் அவரைக் கேட்கவில்லை. அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், பலர் அம்மாதிரி எதிர்பார்த்தார்கள். ஆங்கிலப் பட்டம் பெற்றவர்கள்தான் முதல் மந்திரியாய் இருக்க முடியும் என்ற தவறான அபிப்ராயம்தான் அம்மாதிரி எதிர்ப்பார்த்ததற்குக் காரணம். ரெட்டியாரிடம் தான், சிறுமைப் பித்துக் கடுகளவும் கிடையாதே! அதேமாதிரி தன்னம்பிக்கையும் அவரிடம் ஏராளமாய் உண்டு. அதனால் வேறு யாரையும் முதல் மந்திரி பதவியில் போடவில்லை. தாமே முதல்மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் தைரியமாக அம்மாதிரி செய்ததால்தான் பின்னால் குமாரசாமி ராஜாவும், காமராஜும் முதல் மந்திரி பதவிக்கு வருவது சுலபமாய் இருந்தது.

— டி. எஸ். சொக்கலிங்கம்
('முதல் சந்திப்பு' என்ற நூலில்)

## கவர்னருடன் பேட்டி

அன்றைய ஆளுநராக சர். ஆர்ச்சிபால்டு நை என்ற ஆங்கிலேயர் இருந்தார். அமைச்சரவை அமைப்பது குறித்துப் பேச இருவரும் முதல் முறையாகச் சந்தித்தார்கள். அப்போது, திரு. சி. சுப்பிரமணியம், திரு. மீ. பக்தவத்சலம் ஆகிய இருவரையும் ஓ. பி. ஆர். தம்மோடு அழைத்துச் சென்றார்.

அவ்வாறு ஆளுநரைக் காணத் தம்மை உடன் அழைத்துச் சென்றதால், தான் அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று திரு. சி. சுப்பிரமணியம் நம்பினார். அவ்வாறே சில பத்திரிகைகளும் வதந்தியைக் கிளப்பின. பதவியை எதிர்பார்த்து அவர் ஏமாந்தார்.

ஒவ்வொரு தடவையும் ஓ. பி. ஆர். ஆளுநரை சந்திக்கும் பொழுது தம்மை அழைத்துச் செல்லுவார் என்று திரு. பக்தவத்சலம் எதிர்பார்த்தார். ஆனால் ஆளுநரை ஓ. பி. ஆர். தனியாகவே சந்தித்தார். சர். ஆர்ச்சிபால்டு நையும் ஓமந்தூராரும் ஒருவரையொருவர் பெரிதும் மதித்தனர்; நம்பினர்.

சர் ஆர்ச்சிபால்டு நை இங்கிலாந்துக்குச் சென்ற பிறகும் ஓ. பி. ஆருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருந்தார் என்பதை வேறு ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

## அமைச்சரவை

கீழ்க்கண்டவர்களைக் கொண்ட ஓர் அமைச்சரவையை 1947 மார்ச் 23இல் ஓமந்தூரார் அமைத்தார்.

| | | |
|---|---|---|
| 1. | கனம் ஸ்ரீ. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் | – பிரதம மந்திரி |
| 2. | ,, டாக்டர். ப. சுப்பராயன் | – போலீஸ், சட்ட மந்திரி |
| 3. | ,, டாக்டர். தி. சே. சௌ. இராஜன் | – உணவு மந்திரி |
| 4. | ,, ஸ்ரீ. மீ. பக்தவத்சலம் | – பொதுப்பணி மற்றும் தகவல் துறை மந்திரி |
| 5. | ,, ஸ்ரீ. பி. கோபால ரெட்டி | – நிதி மந்திரி |

| | | | |
|---|---|---|---|
| 6. | ,, ஸ்ரீ. டேனியல் தாமஸ் | – | மதுவிலக்கு மந்திரி |
| 7. | ,, ஸ்ரீ. எச். சீத்தாராம ரெட்டி | – | தொழில் மந்திரி |
| 8. | ,, ஸ்ரீ. கே. சந்திரமௌலி | – | ஸ்தல ஸ்தாபன மந்திரி |
| 9. | ,, ஸ்ரீ. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் | – | கல்வி மந்திரி |
| 10. | ,, ஸ்ரீ. கே. மாதவ மேனன் | – | விவசாய மந்திரி |
| 11 | ,, ஸ்ரீ. காலா வெங்கட்ராவ் | – | நில வருவாய்த் துறை மந்திரி |
| 12. | ,, ஸ்ரீ. ஏ. பி. ஷெட்டி | – | சுகாதார மந்திரி |
| 13. | ,, ஸ்ரீ. வி. கூர்மையா | – | கிராமப்புற வளர்ச்சி மந்திரி |

திரு டேனியல் தாமஸ் 1948-இல் இறந்தார். அவருக்குப் பதிலாக டாக்டர். எஸ். குருபாதத்தை மதுவிலக்கு மற்றும் வீட்டு வசதி மந்திரியாக ஓ. பி. ஆர். நியமித்தார்.

ஏனைய அமைச்சர்கள் எல்லோரும் ஓ. பி. ஆர். பிரதம மந்திரியாக இருந்த இரண்டு ஆண்டுக்காலமும் பதவியில் இருந்தனர்.

எல்லா அமைச்சர்களும் வழங்கிய துறைகளை ஒப்புக் கொண்டனர். திரு. அவினாசிலிங்கத்திற்கு ஓ. பி. ஆர்., பொதுப் பணித்துறையை ஒதுக்கினார். உடனடியாக கீழ்ப்பவானி திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கோவை மாவட்டத்தார் ஒருவர் பொறுப்பில் பொதுப்பணித்துறை இருப்பது நலம் என்று பிரதமர் கருதினார். ஆனால் தமக்கு ஈடுபாடு இல்லை என்றும். கல்வித்துறைப் பொறுப்பை ஏற்க விரும்புவதாகவும் திரு. தி. சு. அவினாசிலிங்கம் கூறினார். இதன் விளைவாக திரு. பக்தவத்சலத்திற்குப் பொதுப்பணித் துறை ஒப்படைக்கப்பட்டது.

இந்த அமைச்சரவையில் இருந்தவர்களைப்பற்றிச் சில விவரங்களை இங்கே கூறுவது பொருந்தும்.

டாக்டர். சுப்பராயன் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தவர். திரு. பக்தவத்சலமும், திரு. கோபால ரெட்டியும் பிற்காலத்தில் மாநில முதலமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். திரு. கோபால ரெட்டி இந்தியாவிலேயே பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் ஆளுநராக 1967 முதல் 1971 வரை இருந்தவர். இம்மூவர் தவிர ஏனைய அமைச்சர்களிலும் சிலர் ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்து அனுபவம் பெற்றிருந்தனர்.

கட்சியின் துணைத் தலைவராக, திரு. சஞ்சீவி ரெட்டி தேர்ந் தெடுக்கப் பெற்றார். இவர் பிற்காலத்தில் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராகவும், இந்திய அரசாங்கத்தின் அமைச்சராகவும், காங்கிரஸ் மகாசபைத் தலைவராகவும், லோக் சபையின் சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார் இப்பொழுது இந்தியக் குடியரசின் தலைவராக இருந்துவருகிறார்.

ஓ. பி. ஆர். தன்னுடைய அந்தரங்கச் செயலாளராக ஐ. சி. எஸ். அந்தஸ்துள்ள யாரையும் நியமித்துக்கொள்ளவில்லை. மதுரை மாவட்டம் பெரிய குளத்தில் மாவட்ட முனிசீபாக இருந்த திரு. ஏ. அழகிரிசாமி என்பவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். இவர் பின்னர், சட்டத்துறையின் துணைச் செயலாளராகவும், செயலாளராகவும் ஆனார். 1960-இல் சென்னை அரசாங்க வழக்கறிஞராக நியமிக்கப்பெற்றார். 1966 முதல் 1972 வரை சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகவும், 1972 முதல் இந்திய உச்சநீதிமன்றத்தின் (சுப்ரீம் கோர்ட்) நீதிபதியாகவும் இருந்து 1975-இல் ஓய்வுபெற்றார்.

## பதவியேற்றதும்

ஓமந்தூரார் பதவியேற்றதும் இவரைப்பற்றிப் பலரும் பலவாறு கருதினர் "இவர் ஒரு பட்டிக்காட்டான்; கிராமவாசி. நாம் சொல்லுவதைக் கேட்பார். ஆட்டிவைத்தால் ஆடாதார் யாரோ?" என்று மூத்த அரசியல் தலைவர்கள் பலர் கருதினார்கள். பெரிய பதவிகளுக்கு இன்னார் இன்னாரை நியமிக்கலாம் என்று பரிந்துரை செய்து அரசாங்க முத்திரையுடன் கடிதமும் எழுதினர் கள். ஓமந்தூரார் அவற்றைப் படித்துவிட்டுக் குப்பைத்தொட்டி யில் போட்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள், 'இவர் நம் தயவை எதிர் பார்ப்பார். மாவட்ட அளவில் நாம் ஒரு குட்டி ஆட்சியை

நடத்தலாம்' என்று கனவு கண்டனர். அந்தக் கனவுகள், அல்நாசர் என்ற கண்ணாடி வியாபாரியின் கனவுகளைப் போல பகற் கனவாயின!

தலைமைச் செயலகத்திலுள்ள பெரிய அலுவலர்கள் தங்கள் எதேச்சாதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளலாம். நீட்டிய பைலில் கையெழுத்தை வாங்கிவிடலாம் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர் பிறகு பார்த்தால் இவருக்கு ஒரு பைலை அனுப்பி விட்டால், அது திரும்பிவரும்வரை நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தனர்![1]

இவர் பதவியேற்ற இரண்டொரு நாட்களில் ஒருசில துறைகளின் தலைவர்களை அழைத்துப் பேசினார். அவ்வாறு வந்தவர்களுள் ஒருவர் அப்பாஸ் கலீலி, ஐ. சி எஸ். என்பவர். பரந்த சென்னை இராசதானிக்கு தொழிற்துறை இயக்குநர், மீன்வளத் துறை இயக்குநர் ஆகிய இருபெரும் பதவிகளை அவர் வகித்தார். அப்போது உணவு பற்றுக்குறை நிலவியது. எனவே கடலில் மீன் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அதற்காக ஒரு பேரியக்கம் (புளு ரிவொலுயூசன்) தொடங்கி மீன் செல்வத்தைப் பன்மடங்காக்க வேண்டும் என்று ஓமந்தூரார் சொன்னார். அந்த அதிகாரி மிகவும் அலட்சியமாக, 'அது அவ்வளவு எளிதன்று. கடல் என்றால் அதில் எல்லா இடங்களிலும் மீன் கிடைத்துவிடாது' என்றார்.

"ஆம். கடலிலும் 'கான்டினண்டல் ஷெல்ப்' என்று குறிக்கப்படும் பகுதிகள் மட்டும்தான் மீன்பிடிக்க ஏற்றது. அதற்கும் பல புதிய முறைகள் நார்வே முதலிய நாடுகளில் இப்போது கையாளுகிறார்கள்" என்று பட்டிக்காட்டு முதலமைச்சர் சைவ உணவையே உண்ணும் ஓமந்தூரார் சொன்னதும்

---

1. மிகவும் பழுத்த ஐ. சி. எஸ். அதிகாரிகள்கூட, முதலமைச்சர் ஓ. பி. ஆருக்கு ஒரு பைலை அனுப்பிவிட்டால், அது எப்படி எந்த வடிவத்தில் திரும்பி வருமோ என்று அஞ்சினர். தப்பித்தோம் பிழைத்தோம் என்ற நிலை ஏற்படவேண்டுமே என்று தங்கள் குலதெய்வங்களை வழிபட்டு வந்தனர்.

— பேட்டி: திரு. நெ. து. சுந்தரவடிவேலு

ஐ. சி. எஸ். அலுவலரான கலீலி வாயடங்கிப் போனர். இச் செய்தி தலைமைச் செயலகம் முழுவதும் காட்டுத்தீப் போல் பரவிற்று.[1]

இவரை ஏமாற்றி விடலாம் என்று எண்ணிய அனைவர் கண்களிலும் ஓமந்தூரார் பொடியைத் தூவி விட்டார்!

பைல்கள்

ஓமந்தூரார் பதவியேற்றதும், பாராட்டுக் கூட்டங்கள், சிறப்புக் கூட்டங்கள் வெற்றி விழாக்கள் ஆகிய வாண வேடிக்கை களை நடத்தவில்லை. பத்திரிகைக்காரர்களை அழைத்து, விளம்பர மோகத்தில் ஈடுபடவும் இல்லை. காரியமே கண்ணாயினர்.

அந்நாளில் பல்லாயிரக் கணக்கான பைல்கள் குவிந்திருந்தன. அவற்றையெல்லாம் விடாமல் படித்து, உடனுக்குடன் ஆணை பிறப்பித்தார் என்கிறார் திரு. டி. ஏ. வர்கீஸ், ஐ. சி. எஸ்.[2]

பைல்களை ஓ பி. ஆர். பார்த்தது பற்றி, திரு. மீ. பக்தவத்சலம் பின்வருமாறு கூறுகிறார்:

''அவருக்கு ஆங்கிலத்தில் தேவையான அளவு அறிவு இருந்தது. பைல்களை அவரே படித்துவந்தார். இன்னொருவரைப் படிக்கச் சொல்ல மாட்டார். படித்து முடித்ததும் ஆர்டர் போடுவார்.''

''காமராஜ், ஒரு பைலைப் படிக்கச் சொல்லிக் கேட்ட பிறகு, இப்படி ஆர்டர் எழுதிக்கொண்டு வாருங்கள் என்பார் அல்லது ஆங்கிலத்தில் 'டிக்டேட்' பண்ணுவார். நடையிலும் இலக்கணத் திலும் சரிபண்ணி டைப் அடித்துக்கொண்டு வாருங்கள் என்பார். ஓ. பி. ஆரிடம் அதெல்லாம் கிடையாது.''

---

1. தகவல்: ஜஸ்டிஸ் ஏ. அழகிரிசாமி

2. நூலாசிரியருக்குக் கொடுத்த பேட்டியில் இவ்வாறு கூறினர்.

திரு. வர்கீஸ், ஓ. பி. ஆர். ஆட்சியில் ஐ. சி. எஸ். அலுவலராக இருந்தவர். பின்னர் பல்லாண்டுகள் சென்னை அரசாங்கத்தின் நிதித் துறைச் செயலாளராக இருந்து, தலைமைச் செயலராகவும் பணியாற்றியவர்

"ஓ. பி. ஆர். பைலில் தன் கைப்பட எழுதுவார் "

ஓ. பி. ஆரின் நேர்முகச் செயலர் திரு. பி. வி. கிருஷ்ணய்யா[1] கூறுகிறார்:—

"ஓ. பி. ஆர். எழுதும் ஆங்கிலத்தில் சில பிழைகள் இருக்கும் இதற்காக அவர் கூச்சப்பட்டதில்லை, வருந்தியதில்லை, வெட்கப் பட்டதில்லை. இன்னொருவரைக் கூப்பிட்டு எழுதச் சொல்லவும் மாட்டார். தாம் எழுதியதை மற்றொருவர் திருத்துவதும் அவருக்குப் பிடிக்காது."

ஒரு தடவை இந்திய அரசாங்கம் ஒரு பிரச்சினையில், ஓ. பி. ஆரின் கருத்தைக் கோரியது. "இன் மை ஒப்பினியன்" என்று எழுதி, ஒப்பினியன் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு உள்ள எழுத்துக்களில் ஒன்றைத் தவறாக எழுதியிருந்தார். நான் அதைச் சுட்டிக் காட்டினேன். 'பரவாயில்லை. நான் எழுதியபடியே டைப்புஅடித்து அனுப்பிவிடு. அவர்கள் என்னுடைய ஒப்பினியனைத் தானே கேட்கிறார்கள். ஒப்பினியன் என்பதற்கு எனக்கு ஸ்பெல்லிங் தெரியுமா? என்று கேட்கவில்லையே' என்று ஓ. பி. ஆர். சொன்னாராம்!

## தன்மானமுள்ள தமிழன்

அரசாங்கச் செயலாளர்களில் பலர், போலீசுத் துறைத் தலைவர் (ஐ. ஜி.) போன்ற முக்கியமான அலுவலர்கள் ஆங்கிலேய ராகவே இருந்தனர். எனினும் அவர்களைக் கண்டு அஞ்சவேண்டும் என்ற இழிவான கருத்து ஓ. பி. ஆருக்கு ஏற்பட்டதில்லை. மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம் ஏற்படும். தற்பெருமை, பதவி வெறியால் ஏற்படும் திமிர் முதலியனவும் ஓமந்தூராரிடம் அணுவளவும் குடிபுகவில்லை. சுருங்கச் சொன்னால், தன்மானமுள்ள தமிழனாகவும் தரம் குறையாத இந்தியராகவும் தழும்பாத நிறை குடம் போன்ற மனிதனாகவும் ஓமந்தூரார் விளங்கினார்.

---

1. *திரு. பி. வி. கிருஷ்ணய்யா 1937 முதல் 1939 வரை பிரதம மந்திரி இராஜாஜியிடமும் 1946 முதல் 1966 வரை பிரதமமந்திரிகள் பிரகாசம், ஓமந்தூரார்; முதலமைச்சர்கள் குமாரசாமி ராஜா, இராஜாஜி, காமராசர், பக்தவத்சலம் ஆகியோரிடமும் நேர்முக உதவியாளராக இருந்து பணியாற்றி 1966-இல் ஓய்வு பெற்றார்.*

## ஆளுநருடன் உறவு

ஓ. பி. ஆர். பதவிக்கு வந்தபோது சர். ஆர்ச்சிபால்டு நை, கவர்னராக இருந்தார். அப்போது எல்லா மாநிலங்களிலும் கவர்னராக ஆங்கிலேயர்களே இருந்தனர். 1947 ஆகஸ்டு மாதத்தில் எல்லா மாநிலங்களிலும் ஆங்கிலேயருக்குப் பதிலாக இந்தியர்கள் கவர்னராக நியமிக்கப்பெற்றார்கள். அப்போது சர். ஆர்ச்சிபால்டு நை தொடர்ந்து கவர்னராக இருந்துவரலாமா என்று சர்தார். வல்லபாய் படேல் ஓமந்தூராரைக் கேட்டார். மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருக்கும்போது, சர். ஆர்ச்சிபால்டு நை ஏன் கவர்னராக இருந்து வரக் கூடாது? என்னுடைய அரசாங்க அலுவலில் அவர் ஏதும் தலையிடவில்லை என்று ஓ. பி. ஆர். கூறினார்.

கவர்னர் பதவியை விட்டுவிலகியபிறகு சர். ஆர்ச்சிபால்டு நை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் 'ஹை கமிஷனராக' (தூதராக) நியமிக்கப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓமந்தூரார் சைவ உணவு மட்டுமே உண்பவர். ஆதலால் இறைச்சி உணவையும் உண்பவர்களோடு சேர்ந்து அதே மேசையில் உணவருந்த இயலாது என்று காரணம் காட்டி ராஜ்பவனத்தில் நடந்த விருந்துகளில் கலந்துகொள்ளவில்லை.[1]

1948 இல் சர். ஆர்ச்சிபால்டு நை பதவியிலிருந்து விலகிக் கொண்டார். பவநகர் சமஸ்தானத்தின் முன்னாள் மன்னரான மேன்மை தங்கிய சர். கிருஷ்ணகுமார் சிங்ஜி, சென்னை மாநிலத்தின் கவர்னராகப் பதவியேற்றார்.

இந்த ஆளுநருடனும் ஓமந்தூரார் நல்லுறவு கொண்டிருந்தார். ஓமந்தூரார் பதவியை விட்டு விலகிய பிறகு, ஓமந்தூர்ப் பண்ணையில் வந்து அவரைச் சந்தித்து மரியாதை செலுத்த விரும்புவதாக பவநகர் மஹாராஜா சொல்லியனுப்பினார். பல முறை இவர் தடுத்தும், பவநகர் மஹாராஜா ஓமந்தூருக்கு வரவேண்டுமென்று பிடிவாதம் செய்தார்.

---

1. தகவல்: திரு பி. வி. கிருஷ்ணய்யா

வேறு வழியின்றி, ஓ. பி. ஆர். அதற்கு இணங்கினார். பவநகர் மஹாராஜாவின் வருகைக்காக ஓமந்தூரார் ரூ. 12,000 வரை செலவு செய்ய நேர்ந்தது.[1]

## அந்தக் காலம்

ஓமந்தூரார் பதவியேற்றபொழுது தலைமைச் செயலாளரும் அரசாங்கத்தின் வேறுபல துறைகளில் செயலாளர்களாகவும் ஆங்கிலேயர் இருந்தனர். ஆங்கிலேயர்களும், இந்தியர்களுமாக மொத்தம் 102 ஐ. சி. எஸ். காரர்கள் அன்றைய சென்னை மாநிலத்தில் பணியாற்றினர்.

## ஐ. சி. எஸ். வர்க்கம்

ஐ. சி. எஸ். என்பது இன்றைய ஐ. ஏ. எஸ். என்ற பதவிக்குச் சமமானது. ஆனால் அந்தக் காலத்தில் அவர்களுக்கு அளவுகடந்த அதிகாரம் இருந்தது. அவர்கள் போட்ட உத்தரவுகளை ஆண்டவனால்கூட மாற்ற இயலாது. தாங்கள் தேவலோகத்தில் இருந்து இந்த உலகில் உள்ள மக்களை ஆளுவதற்காக, இங்கிலாந்தின் வழியாக அனுப்பப்பட்ட தேவ தூதர்கள் என்று தங்களை நினைத்துக் கொண்டார்கள்.

இலண்டனிலுள்ள (பிரிட்டிஷ் அரசாங்கத்தின்) இந்திய அமைச்சரும் சர்தார். வல்லபாய் படேலும் இந்தியா சுதந்திரம் பெற்ற போது ஐ. சி. எஸ். அதிகாரிகள் குறித்துக் கீழ்கண்டவாறு ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

> "பிரிட்டிஷாரான ஐ. சி. எஸ். காரர்கள், தாங்கள் விரும்பினால் தொடர்ந்து இந்தியாவில் வேலை பார்க்கலாம்."

இந்தியர்களான ஐ. சி. எஸ். காரர்களுக்கும் மேற்கண்ட சலுகையைக் கொடுக்கலாமென்று (பிரிட்டிஷ் அரசாங்கத்தின்) இந்திய அமைச்சர் சொன்னார். சர்தார். வல்லபாய் படேல் அந்த ஏற்பாட்டுக்கு இணங்கவில்லை. "அவர்கள் எங்கள் நாட்டுக் குடிமக்கள். எங்கள் நாட்டிற்குப் பணிபுரிய அவர்கள் கடமைப் பட்டவர்கள். விருப்பம் என்ற பேச்சுக்கே இடமில்லை" இக் கருத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

---

1. தகவல் : திரு ஆ. ச. ரெங்கா ரெட்டியார், திரு. முலதூர் மாதவ ரெட்டியார்

"ஐ. சி. எஸ். காரர்களான இந்தியர்கள் தொடர்ந்து பணியாற்றக் கட்டாயப்படுத்துவதற்காக, அவர்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்துள்ள பதவிச் சலுகைகள் முதலிய எல்லாவற்றையும் தொடர்ந்து வழங்குவோமென்று நான் உறுதி கூறுகிறேன். ஆனால் கால மாறுதல்களுக்குத் தக்கவாறும் சுதந்தர மான எங்கள் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டதாகவும் இந்த உறுதிமொழி கடைப்பிடிக்கப்படும்" என்றார் சர்தார். வல்லபாய் பட்டேல்.[1]

உறுதிமொழியில் கண்ட மேற்கண்ட வாசகத்தைப் பயன் படுத்திக் கொண்டு, பிரிட்டிஷ் ஆட்சியோடு இரண்டறக் கலந்து விட்ட ஐ. சி. எஸ். அதிகாரிகளின் போக்கை மாற்ற ஓ. பி. ஆர். பெரிதும் முயன்றார். பிரிட்டிஷ் ஐ. சி. எஸ். அலுவலர்கள் பெரும்பாலும் இந்தியாவைவிட்டு வெளியேறினர். வேறு சிலர் தாங்கள் 6 மாதம், ஓர் ஆண்டு, மூன்று ஆண்டுகள் என்ற குறிப்பிட்ட காலம்வரை இந்தியாவில் இருப்பதாகச் சொன்னார் கள். அவர்களை ஓ. பி. ஆர். அழைத்து, "இவ்வாறு கால எல்லையை உங்கள் விருப்பப்படி வகுக்க உங்களுக்கு உரிமை கிடையாது. உங்கள் பணி எங்களுக்குத் தேவையில்லை. மூட்டை கட்டிப் புறப்படுங்கள்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார் ஓ. பி. ஆர்.[2]

பிஷப் என்ற பெரிய ஐ. சி. எஸ். அதிகாரி இருந்தார். இவர் ஆங்கிலேயர். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீசு என்ற பெரும் பதவியில் இருந்தார். தொடர்ந்து இவரே இருக்கட்டும் என்று தலைமைச் செயலகத்திலுள்ள போலீசுத் துறையினர் குறிப்பு எழுதி வைத்தனர். போலீசு அமைச்சர் டாக்டர். சுப்பராயன் கையெழுத்துடன் அந்த பைல் ஓமந்தூரா ருக்கு வந்தது. சர்தார் பட்டேலைக் கலந்து ஆலோசித்து விட்டு, ஓ. பி. ஆர். அந்த அதிகாரியைக் கப்பலேற்றியனுப்பினார்.[3]

---

1. We Guarantee to continue all the service privileges given to them by you subject to changed conditions and our constitution.

2. தகவல்: டி. ஏ. வர்கீஸ், ஐ. சி. எஸ்.

3. தகவல்: திரு. சடகோபன்

கீழ்க்கண்ட இந்திய ஐ. சி. எஸ். அலுவலர்கள்மீது சில குற்றங்கள் கூறப்பட்டதால் அவர்களுக்கு ஓ. பி. ஆர். கட்டாய ஓய்வு கொடுத்தார்.[1]

திரு. ஆர். எம். சேஷாத்திரி, ஐ. சி. எஸ்.

திரு. டி. எஸ். சுவாமிநாதன், ஐ. சி. எஸ்.

திரு. கே. எம். ராஜகோபால், ஐ. சி. எஸ்.

திரு. அப்பண்ட ராஜா, ஐ. பி. எஸ்.

திரு. எஸ். வெங்கடேசுவரன் என்ற ஐ. சி. எஸ். அலுவலரை உயர் பதவியில் இந்திய அரசாங்கம் நியமித்துக் கொள்ள விரும்புவதாக, சென்னை அரசாங்கத்திற்கு எழுதியது. அவரைப்பற்றிய சில விவரங்களை எழுதி, ஓ. பி. ஆர். அந்த ஏற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.[2]

ஸ்காட்டு பிரவுன் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி, தலைமைச் செயலராக இருந்தார். போர்டு ஆப் ரெவின்யூ எனப்படும் நில வருவாய்க் கழகத்தின் உறுப்பினர்களை நியமிப்பது குறித்துச் சிபார்சு செய்யத் தன்னைக் காண விரும்புகிறார் என்று அறிந்து, அவருக்குப் பேட்டி கொடுக்க ஓ. பி. ஆர். மறுத்தார்.[3]

பைல்கள் மீது வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் ஓ. பி. ஆர். கண்ணும் கருத்துமாக இருந்தார். அதற்காகவே பேட்டிகள் கொடுப்பதைக் குறைத்துக் கொண்டார்.

சட்டசபை உறுப்பினர்கள், ஓ. பி. ஆரைப் பார்க்க வேண்டும் என்று சொன்னால் 'சரிதான் போங்கள், உங்களுக்கு வேறு வேலை இல்லையா?' என்பார்!

பைல்களில் விரைவாக ஆணை பிறப்பிக்கப்பட வசதியாக, தலைமைச் செயலர் பதவியையும் ஓ. பி. ஆர். ஒழித்தார். மிக முக்கியமான கொள்கை குறித்த பைல்கள் தவிர, ஏனைய பைல்

1. தகவல்: டாக்டர். பா. நடராஜன்
2 தகவல்: ஜஸ்டிஸ் அழகிரிசாமி
3. தகவல்; திரு. பி. வி. கிருஷ்ணய்யா

களை, அந்தந்த அமைச்சர்களுக்கே செயலர்கள் அனுப்பி விடலாம் என்று ஆணையிட்டார். மிக முக்கியமான கொள்கைகள் சம்பந்தபட்ட பைல்கள் முதலமைச்சருக்கு அனுப்பப்படவேண்டும் என்றும் கட்டளையிட்டார். சில வாரங்களுக்குப் பின்னர், ஏனைய அமைச்சர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க, தலைமைச் செயலர் பதவியை மீண்டும் ஏற்படுத்தினர்.

மூத்த ஐ. சி. எஸ். அதிகாரிகள் சிலர் தலைமைச் செயலகத்தில் இருப்பது நிர்வாகத்துக்கு உகந்ததாக இல்லை என்றும் அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமிக்க விரும்புவதாயும் ஓ. பி. ஆர். சர்தார். பட்டேலுக்கு எழுதினர். சர்தார் இக் கருத்தை ஏற்றுக் கொண்டதோடு, இதை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றும்படி எல்லா மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பினர்.

## அமைச்சர்களுடன் உறவு

'மக்களுடைய நன்மைக்காகத்தான் நாம் பதவியில் இருக்கிறோம். பெரிய ஆட்களுக்குச் சலுகை காட்டுவதற்காக அல்ல' என்று ஓ. பி. ஆர். தம் சகாக்களுக்கு நினைவூட்டி வந்தார்.

அதிகாரிகள் நம் நாட்டின் தேவையை உணராமலும் மக்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்காமலும் பழைய பாணியிலேயே பைல்களில் 'நோட்ஸ்' எழுதி வந்தனர். எனவே, அமைச்சர்கள் சுற்றுப்பயணங்களை மிகவும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் பைல்களைக் கவனிக்கவேண்டும் என்பதிலும் ஓ. பி. ஆர். கண்டிப்பாக இருந்தார்

ஓர் அமைச்சர் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு நெல் கடத்தி வருவதை அறிந்து அதைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கும்படி கிருஷ்ணு மாவட்டத்து ஆட்சித் தலைவருக்கு ஓ. பி. ஆர். ஆணையிட்டார்.

தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியிலிருந்து அபின் கடத்தி வந்தார், செல்வாக்குமிக்க ஒருவர். அவருக்கு ஒரு அமைச்சர் உடந்தையாக இருந்ததைக் கேள்விப்பட்டு, உடனே குற்றத் துறையின் இரகசிய போலீசாரை வேவு பார்க்கச் சொன்னர்.

காலா வெங்கடராவ் என்று ஓர் அமைச்சர் இருந்தார். அவருடைய சுற்றுப் பயணத்திட்டத்தின் நகலை ஓ. பி. ஆருக்கு அனுப்பியிருந்தார். உடனே அவரைக் கூப்பிட்டார்.

"எவ்வளவோ வேலை இருக்கு.........அதைப் பார்க்காமல் ஏன் வீணே ஊர் சுற்றுகிறீர்கள்?"

"7ஆ முதல் 9ஆ வரை கிருஷ்ணா, கோதாவரி மாவட்டங்களில் முக்கியமான அணைகள் முதலியவற்றைப் பார்வையிட்டாக வேண்டும். பிறகு விஜயவாடாவிலிருந்து... ... ..."

"விஜயவாடாவிலிருந்து என்ன ... ..........?"
"என் மைத்துனர் மகளுக்கு திருமணம் .........."

"சரி, அப்படியானால் விஜயவாடாவிலிருந்து அந்த ஊருக்குப் போய் மூன்று நாள் கழித்து வரும்வரை, அமைச்சரின் சொந்த வேலை என்று சுற்றுப் பயணத்திட்டத்தைத் திருத்தி ...... விஜயவாடாவிலிருந்து சென்னைக்குத் திரும்பி வருவதற்கு, அரசுப் படி பெறத் தடையில்லை" என்று அதில் எழுதிக் கையெழுத்திட்டார் ஓ. பி. ஆர்.[1]

## தில்லிப் பயணம்

முதலமைச்சர் பதவியேற்றபின் ஓ. பி. ஆர். முதல் தடவையாக, தில்லிக்குப் போனார். அக்காலத்தில் நமது மாநில அரசுக்கு தில்லியில் மாளிகை கிடையாது. வாகனங்களும் இல்லை. இந்திய அரசு ஒதுக்கியிருந்த வெஸ்டர்ன் கோர்ட்டு மாளிகையில் ஓர் அறையில் தங்கினார் ஓ. பி. ஆர்.

தில்லி விமான நிலையத்தில் ஓ. பி. ஆர். போய் இறங்கியதும் அவருக்காக ஒரு பெரிய கார் காத்திருந்தது. அந்த வண்டியின் ஓட்டுனர், ஓ. பி. ஆரிடம் ஓடிவந்து "சென்னைத் தொழில் பிரமுகர் .......... அவர்கள் சொல்லி, ஐயாவுக்கு இந்தக் காரைக் கொண்டு வந்திருக்கிறேன். தில்லியில் இருக்கும் வரை ஓட்டச் சொன்னார்கள். பெட்ரோலுக்கும் பணம் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

---

1. தகவல்: டாக்டர். ரத்தினவேலு சுப்பிரமணியம்

"இல்லே, எனக்குக் கார் வேண்டாம்" என்று ஓ. பி. ஆர். சொல்லி விட்டு உடன் அழைத்துச் சென்றிருந்த திரு. சடகோப னிடம் கூறி வாடகை வண்டியைக் கொண்டுவரச் சொன்னர்.

"ஓசிக் கார் ஏறுவானே ......பிறகு அவர் வந்து ஏதாவது அது.........இது.........என்று கேட்பார்..........தாட்சண்யப் பட வேண்டும். இந்த வம்பே வேண்டாம்" என்று தம்மிடம் கூறிய தாகவும் நாள்தோறும் 100 ரூபாய்வரை வாடகைக் காருக்கு ஓ. பி. ஆர். செலவிட்டதாகவும் திரு. சடகோபன் கூறுகிறர்

## அன்ருட அலுவல்கள்

முதலமைச்சராக இருந்தபோது ஓ. பி. ஆருடன் கூவம் மாளிகையில் தங்கியிருந்த திரு. சடகோபன், ஓ. பி. ஆருடைய அன்ருட அலுவல்கள் குறித்துப் பின்வருமாறு கூறுகின்ருர்.

| | | |
|---|---|---|
| காலே | 5 மணி | துயில் எழுதல் |
| | 5 மணி முதல் 5–30 வரை | பிரார்த்தனே |
| | 5–30 முதல் 6–30 ,, | கடற்கரையில் உலாவுதல் |
| | 6–30 – | நீராடல் |
| | 7–00 – | கோதுமைக்கஞ்சி குடித்தல் அல்லது இட்டலி உண்ணல் |
| | 7–30 – 9–30 | அலுவல்கள், பார்வையாளர்கள் |
| | 10–00 – 1–30 வரை | தலேமைச் செயலகம் |
| பிற்பகல் | 1–30 முதல் 3 வரை | பகலுணவும் ஓய்வும் |
| | 3–00 – 7–00 வரை | தலேமைச் செயலகம் |
| | 7–00 | உணவு |
| | 8–00 – 9–00 வரை | முக்கிய அலுவல்கள், பேட்டிகள் |
| | 9–00 – 10 வரை | சமய நூல்களேப் படித்தல் |

## வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே!

கூட்டங்களுக்குப் போவது, அங்கு தன் புகழைக் கேட்பது என்ற தொத்துநோய் ஓ. பி. ஆரை அணுகவில்லே.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் முதலமைச்சரைக் காணச் சென்ருர் ஒரு மணிநேரம் காத்திருந்தார். பிறகு பேட்டி கிடைத்தது. வந்த விஷயம் என்ன என்ருர். வ. உ. சிதம்பரனுருக்கு விழா நடத்துவதாகவும் அந்த விழாவுக்கு முதலமைச்சர் வரவேண்டும் என்றும் திரு. ம. பொ. சி. வேண்டினர் "அரசாங்கத்தை நடத்துவதா, மீட்டிங்குகளில் பேசிக் கொண்டிருப்பதா?" என்று ஓ. பி. ஆர். கேட்டார். 'இரண்டும்தான் செய்யவேண்டும்' என்ருர் சிலம்புச் செல்வர்.

"இரண்டையும் எப்படிச் செய்வது? அது முடியாது"

"வ. உ. சி. கப்பலோட்டிய தமிழர். சிறந்த தேசபக்தர் முதலமைச்சர் வந்து அவருக்கு அஞ்சலி செலுத்தினல் பெருமை யாக இருக்கும்."

"நான் வர இயலாது. எவ்வளவோ வேலை குவிந்திருக் கிறது. வேறு யாரையாவது கூப்பிட்டு பேசச் சொல்லுங்கள்" என்ருர் ஓ. பி. ஆர்.

"வேறு யாரையும் அழைக்க வில்லை, நானே பேசுகிறேன்." என்று சொல்லிவிட்டு, ஓ. பி. ஆரிடமிருந்து ம. பொ. சி. விடை பெற்ருர்.

பாராட்டிப் பேசுவதுதான் ஒரு தியாகிக்கு அஞ்சலி செலுத்தும் முறை என்று ஓ. பி. ஆர். நினைக்கவில்லை. அவர் பதவியேற்ற சில நாட்களுக்குள் வ. உ. சி. மகன் திரு. ஆறுமுகத்தை, திருநெல்வேலி மாவட்டத்தில் பிர்க்கா வளர்ச்சி அலுவலராக நியமித்திருந்தார்.

### அன்றைய முதலமைச்சரின் வசதிகள்

அந்நாளில் முதலமைச்சருக்கு ஒரு தொலைபேசிமட்டுமே இருந்தது. அந்த டெலிபோனையும் முதலமைச்சர் அனுமதி இன்றி ஒருவரும் உபயோகிக்கக் கூடாது என்று ஓ. பி. ஆர். கண்டிப்பாக உத்தரவு போட்டிருந்தார்.

அவ்வளவு பெரிய சென்னை மாநில முதலமைச்சருக்கு ஒரு கார் மட்டுமே இருந்தது. அந்தக் காரை ஓட்டுவதற்கு அரசாங்கத்தில் ஆள் நியமித்திருந்தார்கள். பெட்ரோல் செலவை யும் காரைப் பழுதுபார்க்கும் செலவையும் ஓமந்தூராரே ஏற்றுக் கொண்டார்!

முதலமைச்சர் இல்லத்தில் அந்த நாளில் நான்கு சிறு மேசைகளும் சாதாரணமான நாற்காலிகள் மட்டுமே அரசினரால் போடப்பட்டிருந்தன. இவற்றை முதலமைச்சர் அலுவலகத்தில் பணி புரிந்தவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பார்வையாளர்கள் அமருவதற்காக சோபா செட் மற்றும் சாப்பாட்டு அறையில் பயன்படும் மேசை முதலியவற்றை ஓமந்தூரார் ஸ்பென்சர் கம்பெனியிலிருந்து மாதம் அறுபது ரூபாய் வாடகைக்கு எடுத்திருந்தார். மாதாமாதம் சம்பளத்திலிருந்து இந்தப் பணத்தைக் கட்டிவந்தார்.[1]

## பொருள்கள் தட்டுப்பாடு

ஓ. பி. ஆர். பதவியேற்றபோது இன்றியமையாத பல பொருள்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. மக்களுக்கு இவற்றைக் கிடைக்கச் செய்ய ஓமந்தூரார் பல நடவடிக்கைகளை எடுத்தார்.

கிருஷ்ணு, குண்டூர் மாவட்டங்களில் கம்யூனிஸ்ட்டுக் கட்சியினர் பல குழப்பங்களை விளைவித்தனர். அவற்றை அடக்குவதிலும் ஓமந்தூரார் தக்க கவனம் செலுத்தி வெற்றி கண்டார்.

## ஆலைக் கதிர்கள்

1946-இல் திரு. பிரகாசம் முதலமைச்சராக இருந்தார். அப்போது சென்னை அரசாங்கம் நூல் ஆலைகளுக்கு ஏற்கெனவே ஒதுக்கிய கதிர்களைத் திருப்பி அளித்தது. இதை இந்திய அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை. சென்னை அரசாங்கம் நம்பிக்கைத் துரோகம் செய்ததாகச் சம்பந்தப்பட்டவர்கள் வழக்குத் தொடர நேரும் என்று கூறியது. ஆயினும் இந்திய அரசாங்கத்தின் இந்த யோசனையைப் பிரகாசம் அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய அரசாங்கம் தனது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று எழுதியது. இவ்வாறு ஒரு இணக்கமான முடிவுக்கு வர இயலாமல் இரு அரசாங்கங்களும் தங்கள் தங்கள் கருத்தையே எழுதிக்கொண்டிருந்தன.

இந்தக் கட்டத்தில் சென்னை மாநிலத்தில் அமைச்சரவை மாறியது. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தலைமையின் கீழ்ப் புது அமைச்சரவை பதவி ஏற்றபோது, சரண் செய்த கதிர்களைத்

---

1. தகவல்கள்: திரு. சடகோபன்

திருப்பிப் பெறுவது என்று முடிவு செய்தது. காந்திஜி கூறிய நிபந்தனைகளை ஏற்காமலே தீவிர கதர்த் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஓ. பி. ஆர். ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டார். "குறிப்பாக, அப்போது பிர்க்கா வளர்ச்சி அதிகாரியாக இருந்த கோ. வெங்கடாசலபதியின் பொறுப்பில் இது வந்தது. சர்க்கா சங்கத்தின் ஒத்துழைப்போடு அவர் அதைத் திறம்பட நடத்தி வைத்தார். கதருக்காக காந்திஜி வகுத்த திட்டங்களிலேயே தீவிர கதர் உற்பத்தித் திட்டம்தான் உச்சாணி என்று கூறப் படுகிறது" என்கிறார்.

"தமிழ் நாட்டில் காந்தி" என்ற நூலில், திரு. அ. இராமசாமி (பக்கம் 454).

## புள்ளி விவரம்

புள்ளிவிவரங்கள் செம்மையாக இருந்தால்தான் அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பது எளிது என்பது ஓ. பி. ஆரின் உறுதியான கருத்து. எந்த அதிகாரியைச் சந்தித் தாலும் ஏதாவது புள்ளிவிவரங்களைக் கேட்பது ஓ. பி. ஆரின் பொழுதுபோக்காக இருந்தது.

ஒரு நாள் வேளாண்மைத் துறை இயக்குநர் ஓ. பி. ஆரிடம் வசமாகச் சிக்கிக்கொண்டார்.[1]

நமது மாநிலத்தில் எத்தனை பொலிகாளைகள் இருக்கின்றன? உடனே கணக்கு எடு என்றார்.

கிணறுகள் வெட்டுவதற்கு உத்தேசச் செலவு எவ்வளவு ஆகும் என்று மதிப்பீடு அனுப்பச் சொன்னார். மதிப்பீட்டை அனுப்பினார்கள். என்ன அடிப்படையில் மதிப்பீடு போட்டிருக் கிறீர்கள்? ஒரு கிணற்றின் குறுக்களவு (டயாமீட்டர்) என்ன என்று ஓ. பி. ஆர். கேட்டார். ஏதோ கீழே உள்ளவர்கள் தயாரித்த பைலை, வேளாண்மை இயக்குநர் முதலமைச்சர் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டார். அவரால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை.

'இதெல்லாமா ஒரு முதலமைச்சர் கேட்கும் கேள்வி?' என்று அன்று 100 பேரிடம் அவர் சொன்னாராம்.

---

1. தகவல்: வி. பி. கிருஷ்ணய்யா

ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்தபோது திரு. நெ. து. சுந்தரவடிவேலு[1] சென்னை மாநகராட்சியில் கல்வி அலுவலராக இருந்தார். அப்போது வண்ணாரப்பேட்டையில் தொடக்கப் பள்ளிக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைக்க முதலமைச்சர் ஓமந்தூரார் வந்திருந்தார். "கல்வித் துறையில் பெரும் புரட்சி செய்திருக்கிறோம். பள்ளிக்குச் செல்லும் வயதினரில் 88 சதம் வரை பள்ளியில் சேர்த்துவிட்டோம்" என்றார் திரு. சுந்தரவடிவேலு. ஓ. பி. ஆர். பேசும்போது "திரு. நெ. து. சு. கூறும் கணக்குச் சரியாக இருந்தால், பள்ளிக்கூட நேரத்தில் சாலைகளில் இவ்வளவு குழந்தைகளைக் காண இயலாது. எனவே அவர் கூறும் புள்ளி விவரத்தை ஏற்பதற்கு இல்லை" என்றார்.

கூட்டம் முடிந்ததும் எப்படிக் கணக்குப் போட்டீர்கள் என்று ஓ. பி. ஆர். திரு. சுந்தரவடிவேலுவைக் கேட்டார். மக்கள் தொகை ஓராண்டுக்கு இவ்வளவு சதவிகிதம் கூடும் என்று மதிப்பிட்டு அதற்கு ஏற்றாற்போல இத்தனை குழந்தைகள் பள்ளியில் சேரும் வயதினர் என்று முடிவு செய்கிறோம் என்றார் சுந்தரவடிவேலு.

"ஏதாவது ஒரு வார்டில், வீட்டுக்கு வீடு போய், மொத்தம் பள்ளி வயதுப் பிள்ளைகள் எத்தனை பேர்? பள்ளியில் சேர்ந்தது எத்தனை பேர்? என்று கணக்கு எடுங்கள். உங்கள் புள்ளிவிவரம் தப்பு என்பது தெரியவரும்" என்றார் ஓ. பி ஆர். அப்படியே கணக்கு எடுத்துப் பார்த்தார்கள். ஓ. பி. ஆர். சொன்னது சரியாக இருந்தது; என்கிறார் திரு. சுந்தர வடிவேலு.

## நிர்வாகத் திறமை

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் ரெங்கநாதபுரம் என்ற ஊரில் போலீசாரின் ஆதரவுடன் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டு வந்தது. இதைப் பற்றி, திரு. கொடுமுடி

1. திரு. சுந்தரவடிவேலு பல்லாண்டுகள் கல்வித்துறை இயக்குநராக இருந்தார். ஆயிரக்கணக்கில் தொடக்கப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் தொடங்கினார். பகல் உணவுத் திட்டத்தை ஆரம்பித்தார். கல்விச் சீரமைப்பு மாநாடுகளை நடத்தினார். இந்திய அரசின் கல்வி ஆலோசகராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் இருந்திருக்கிறார்.

ராஜகோபாலன்[1] முதலமைச்சர் ஓ. பி. ஆருக்கு விவரமாக எழுதினார். ஓ. பி. ஆர். அவருக்கு ஒரு பதிலும் எழுத வில்லை. திருச்சி மாவட்டக் கலெக்டர் ஓர் ஆளை திரு. கொடுமுடி ராஜ கோபாலனுக்கு அனுப்பி, "முதலமைச்சர் உங்களைச் சந்திக்க வேண்டுமென்கிறார். உடனே புறப்பட்டுவரச்சொல்லி 'டிரங்கால்' வந்திருக்கிறது" என்று தெரிவித்தார்.

திரு. கொடுமுடி ராஜகோபாலன் அன்றிரவே சென்னைக்குப் போனார். முதலமைச்சர் அவரிடம் எல்லா விவரங்களையும் பொறுமையாகக் கேட்டு, சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் முதல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வரை எல்லோருடைய பெயர்களையும் குறித்துக் கொண்டார்.

"ஒருவரிடமும் இதைப்பற்றிப் பேசாதீர்கள். ஐந்து நாட்கள் சென்னையிலேயே தங்கியிருந்துவிட்டுப் பிறகு ஊருக்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்று ஓ. பி. ஆர். கூறினார்.

அன்று இரவே அந்த ஊர் முழுவதும் வேட்டையாடப்பட்டு கள்ளச் சாராயம் காய்ச்சிய அனைவரும் பிடிக்கப்பட்டனர். சம்பந்தப்பட்ட போலீசார் அனைவரும் உடனே வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப் பட்டது.

கொடுமுடி ராஜகோபாலன் மனுச் செய்து கொண்டார் என்பது எந்த அதிகாரிக்கும் தெரிவிக்கப்படவில்லை. அவருடைய கடிதத்தை, ஓ. பி. ஆர் அரசாங்கப் பைலில் வைக்கவும் இல்லை.

"வேறு சில முதலமைச்சர்கள்-இராஜாஜி போன்றவர்களாக இருந்தால் என் கடிதத்தை அப்படியே ஐ. ஜி. அல்லது மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பி விசாரித்து உடனே நடவடிக்கை எடுக்கவும் என்று கைப்பட என் மனுவிலேயே எழுதி விஷயத்தைக் குட்டிச் சுவராக்கி எனக்கும் கெடுதல் விளைவித் திருப்பார்கள்" என்கிறார் திரு. கொடுமுடி ராஜகோபாலன்.

---

1. *இவர் திருச்சி மாவட்டத்தில் விடுதலைப் போரில் பெரும் பங்கு கொண்ட தியாகி. சிறந்த எழுத்தாளர், பல ஆண்டுகள் தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் உறுப்பினராக இருந்திருக்கிறார்.*

## மீண்டும் தேர்தல்

அந்தக் காலத்தில் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.[1] 1948 மார்ச் மாதத்தில் மீண்டும் தேர்தல் நடைபெற்றது.

ஓமந்தூராருக்கும் திரு. பிரகாசத்திற்கும் கடுமையான போட்டியிருந்தது. இறுதியில் ஓமந்தூரார் மகத்தான வெற்றிப் பெற்றார். தேர்தலின் போது நடந்த சூழ்ச்சிகளையெல்லாம் கவனித்த கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் பின்வரும் பாடல் களை 'நேர்மையின் வெற்றி' என்ற தலைப்பில் 'தினசரி' நாளிதழில் வெளியிட்டார் :

1. இமயமே சாய்ந் திட்டாலும்
இம்மியும் நேர்மை நீங்கார் :
அமைதியின் வடிவமானார்
அன்பினால் ஆளவந்த
தமிழகக் காந்தி ராம
சாமி நம் முதலமைச்சர்
கமழ்தரும் புகழால் மீண்டும்
கட்சியின் தலைவ ரானார்.

2. சுயநலக் கூட்டத் தாரின்
சூழ்ச்சியின் வீழ்ச்சி கண்டோம் :
வியன் பகை வகுப்புவாத
வெறியர் நம்முறையும் கண்டோம்
துயரற உதவும் உண்மைத்
தொண்டரின் துணிவு தூண்ட
அயற்விலார் ஓமந்தூரார்
அரும் பெரும் வெற்றிகண்டார் :

---

1. இந்த ஏற்பாடு 1949-இல் கைவிடப்பட்டு, கட்சித் தலைவரின் பதவிக்காலமும் சட்டசபையின் ஆயுட்காலமும் ஒன்றே என்று கட்சியின் விதிகள் திருத்தப் பட்டன.

3. தேர்தலில் ஓமந்தூரார்
திறம்பெறக் கண்ட வெற்றி
நேர்மையின் வெற்றி, அன்பு
நெறியதன் வெற்றி ; என்றும்
சீருயர் வெய்தத் தூண்டும்
செம்மன வெற்றி ; குன்று
ஆர்வமும் அறமும் பொங்கும்
ஆட்சியின் மாட்சி யாலே :

அண்ணுவின் பாராட்டு

இக் கவிதையைப் படித்துப் பார்த்து உணர்ச்சிவசப் பட்டார், அன்று திராவிடக் கழகத்தின் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய திரு. சி. என். அண்ணுதுரை, 'திராவிட நாடு' இதழில் 'காந்தி ராமசாமியும். பெரியார் ராமசாமியும்' என்ற தலைப்பில் அவர் ஒரு தலையங்கம் எழுதி, ஓமந்தூராரைப் பாராட்டினர்.[1]

---

1. இந்தத் தலையங்கத்தின் ஒரு பகுதியை இக்கட்டுரையின் தொடக்கத்தில் மேற் கோளாகக் கொடுத்துள்ளோம்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று"
— பாரதியார்.

# 20

# விடுதலையும் விளைவுகளும்

1947 - ஆகஸ்டு 15 இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஆங்கிலேயரிடமிருந்து அடிமைத் தளைகளை அறுத்து விடுதலை பெற வேண்டுமென்ற நெடுநாளைய அவா நிறைவேறிற்று. கோடிக் கணக்கான இந்தியர்களின் கனவு நனவாயிற்று. மகாத்மா காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமையில் 25 ஆண்டுகளாக நடைபெற்ற பெரும் போராட்டம் வெற்றியாக முடிந்தது.

## கைதிகள் விடுதலை

சுதந்திர நாளன்று ஆயிரக்கணக்கான கைதிகளை ஓமந்தூரார் விடுதலை செய்தார். எனினும் ஒரு சில கைதிகளை விடுதலை செய்யாமல், தண்டனைக் காலத்தை மட்டும் பெயரளவுக்குக் குறைத்தார். வேறு சிலரை சேவாசதனம் நடத்திய விடுதிகளுக்கு அனுப்பிவைத்தார்.

## பிரச்சினைகளும் குழப்பங்களும்

சுதந்திரம் பெற்றோம் என்று மக்கள் முழுமையாக மகிழ்ச்சி அடையவில்லை. எதிர்பாராத சிக்கல்கள் இந்த மகிழ்ச்சியை மட்டுப்படுத்தின.

பாகிஸ்தான் என்ற புதிய நாடு ஏற்பட்டதால் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்துக்களும் சீக்கியர்களும் மேற்குப் பாகிஸ்தானில்[1] இருந்தும் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும்[2] இந்தியாவிற்கு அகதிகளாக ஓடிவந்தனர். அதேசமயம் இந்தியாவிலிருந்தும் திரளான முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்கு வெளியேறினர் இதைத் தொடர்ந்து இந்து முஸ்லீம் கலகங்கள் நடந்தன. கலகங்களை அடக்குவதத்கு, மாநில அரசுகளும் இந்திய அரசுக்கு உதவவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று.

பாகிஸ்தானின் பொருளாதாரமும் இந்தியாவின் பொருளாதாரமும் ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் இருந்ததால், இந்தியாவின் பொருளாதாரம் நாட்டுப் பிரிவினையால் சீர்கெட்டது. மக்கள் உபயோகிக்கும் இன்றியமையாத பொருள்கள் கிடைக்கவில்லை. தொழிற்சாலைகளை நடத்துவதற்குத் தேவையான மூலப் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது.

வட இந்தியாவில், வரலாறு காணாத கலவரங்கள் மூண்டதால் அந்தப் பகுதியிலிருந்து தென்னிந்தியாவிற்கு வரவேண்டிய பொருள்கள் தடைப்பட்டன.

அகதிகளை, முகாம்களுக்கு அனுப்புவதற்கே இரயில் போக்குவரத்து அமைச்சகம் முன்னுரிமைப் பொறுப்பேற்றது. இதனால் வட இந்தியாவுக்கும் சென்னைக்கும் இடையே இயங்கிவந்த இரயில் போக்குவரத்து மிகவும் சுருங்கிற்று.

மேற்கண்ட ஒவ்வொரு சிக்கலும் சென்னை அரசாங்கத்தின் அன்றாட ஆட்சியைப் பெரிதும் பாதித்தது. எதிர்பாராத இந்தச் சவாலை ஓமந்தூரார் துணிச்சலுடன் சமாளித்தார்.

---

1. மேற்குப் பாக்கிஸ்தான் : இன்றைய பாக்கிஸ்தான்

2 கிழக்குப் பாக்கிஸ்தான் : இன்றைய பங்களா தேஷ்

# ஹைதராபாத் பிரச்சினை

## ஹைதராபாத் சமஸ்தானம்

ஹைதராபாத் என்பது அந்தக் காலத்தில் ஒரு தனி சமஸ்தானமாக, ஆங்கிலேயருக்கு உதவியாக இருந்த நிஜாமின் ஆட்சியில் இருந்தது. இந்தியாவில் இருந்த 600 சுதேச சமஸ்தானங்களில் இதுவே பெரியதாக இருந்தது.

பூகோள ரீதியில் ஹைதராபாத் இந்தியாவின் நெஞ்சம் போல் இருந்தது. இந்த சமஸ்தானத்திற்கு வடக்கே மத்திய மாகாணமும், மேற்கே பம்பாய் மாகாணமும் தெற்கேயும் கிழக்கேயும் சென்னை மாகாணமும் இருந்தன. இதில் அடங்கிய மாவட்டங்கள் இப்போது மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேஷ் ஆகிய மொழிவழி மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹைதராபாத் சமஸ்தானத்தின் தலைநகராக இருந்த ஹைதராபாத் நகரம், இப்போது ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகராக இருந்து வருகிறது.

சுதேச சமஸ்தானங்கள் எல்லாவற்றிலும் மக்கள் தொகையாலும் வருமானத்தாலும் முக்கியத்துவத்தாலும் ஹைதராபாத் சமஸ்தானம்தான் முதலிடம் வகித்துவருகிறது.[1]

இந்த சமஸ்தானத்தின் மக்கள்தொகை ஒரு கோடி அறுபது லட்சம் வருமானம் 26 கோடி ரூபாய். பரப்பளவு 82,000 சதுர மைல். ஹைதராபாத் சமஸ்தானம் சொந்தமான நாணயங்களையும் கரன்சி நோட்டுக்களையும் தபால் ஸ்டாம்புகளையும் வெளியிட்டுவந்தது.

சமஸ்தானத்து மக்களில் 85 சதம் இந்துக்களாக இருந்தனர். ஆனால் அங்கு ஆட்சி செய்த நிஜாம் முஸ்லீமாக இருந்தார். முக்கியமான அரசாங்கப் பதவிகளிலெல்லாம் முஸ்லீம்களே இருந்தனர். போலீஸ், இராணுவம் ஆகியவற்றில் முஸ்லீம்கள் மட்டுமே இருந்தனர். ஹைதராபாத் சட்டசபையில் மொத்தம் 132 இடங்களில் 61 இடங்கள் இந்துக்களுக்கும் 71 இடங்கள்

---

1. ஆதாரம்: வி. பி. மேனன் எழுதி 'தி ஸ்டோரி ஆப் தி இன்டெக்ரேஷன் ஆப் இந்தியன் ஸ்டேட்ஸ்' (ஓரியண்ட் லாங்மன் வெளியீடு) பக். 816.

முஸ்லீம்களுக்கும் ஒதுக்கப்பட்டன. அரசாங்கப் பணத்திலிருந்து நிறுவப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகம் முஸ்லீம்களிடம் இருந்தது. உருது மொழியே ஆட்சி மொழியாக இருந்தது. உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் உருது மொழியே பயிற்சி மொழியாக இருந்தது.

## நிஜாம்

நிஜாம் பதவியிலிருந்த 'ஹிஸ் எக்ஸால்டம் ஹைனஸ் நிஜாம் மிர் உஸ்மான் அலிகான் பகதூர், உலகத்திலேயே பெரும் செல்வர்களுள் ஒருவராக இருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் விசுவாசத்திற்கு உரியவர் (பெயித்புல் அல்லை ஆப் தி பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்) என்ற சிறப்புப் பட்டமும் அவருக்கு வழங்கப் பட்டிருந்தது.

## பேச்சு வார்த்தைகள்

இந்தியா சுதந்திரம் பெற்றதும், (1) வெளிநாட்டு உறவு (2) பாதுகாப்பு, (3) நாணயம் வெளியிடுவது ஆகிய மூன்று துறைகளில் ஹைதராபாத் சமஸ்தானம் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்து சுதந்திர இந்தியாவோடு இணைந்து ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்று இந்திய அரசாங்கம் விரும்பிற்று.

சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மௌண்ட் பேட்டன் பிரபுவும் அவ்வாறே அறிவுரை கூறினர். இந்த அறிவுரைக்குச் சரியான பதில் சொல்லாமல் ஹைதராபாத் சமஸ்தானத்தார் தாங்கள் ஒரு சுதந்திர நாடுபோல நடந்து வந்தார்கள். அதேசமயம் அவர்கள் பாக்கிஸ்தானின் தலைவர் களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

## ரஜாக்கர்கள்

ஹைதராபாத்தில் ஆயுதங்கள் குவிந்தன. இஸ்லாமிய மத வெறியூட்டும் அரசாங்கத்தை நிறுவும் நோக்கம் கொண்ட இத்திஹாட்-உல்-முஸ்லிமின் என்ற ஸ்தாபனத்தை காசிம் ரஜ்வி தொடங்கினர். இந்த ஸ்தாபனம் பிறகு ரஜாக்கர்கள் என்று பெயர் பெற்றது. ரஜாக்கர்கள் நாள்தோறும் இராணுவப் பாணி பயிற்சிகளில் ஈடுபட்டு ஹைதராபாத் சமஸ்தானத்து இந்துக் களை அச்சுறுத்தி வந்தனர்.

1947 அக்டோபர் 27-இல் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஹைதராபாத் அரசாங்கத்தைச் சேர்ந்த மூன்று பெரும் தலைவர்கள் டில்லிக்குப் புறப்படுவதாக இருந்தனர். அப்போது ரஜாக்கர்கள் 35,000 பேர் அந்தத் தலைவர்களின் வீடுகளை சுற்றிக்கொண்டு அவர்கள் டில்லிக்குப் புறப்படாதவாறு தடுத்தனர். சமஸ்தானப் போலீசார் இதில் தலையிடவே இல்லை. எனவே நிஜாமும் சமஸ்தானஅரசாங்கமும் ரஜாக்கர்களும் சேர்ந்து இந்த நாடகத்தை நடத்தினர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ஹைதராபாத் சமஸ்தானத்தின் வழியாகச் சென்ற இரயில்கள் நிறுத்தப்பட்டு இரயில் பிரயாணம் செய்தவர்கள் கொள்ளையடிக்கப்பட்டனர். அவர்களுடைய உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது.

ரஜாக்கர் இயக்கத்தின் தலைவரான காசிம் ரஜ்வி சொன்னபடி 1947 நவம்பர் மாதத்தில், லெய்க் அலி என்பவரை தன்னுடைய நிர்வாகத்துறைத் தலைவராக (பிரதம மந்திரியாக) நிஜாம் நியமித்தார். அதுமுதல் ஹைதராபாத் அரசாங்கம் ரஜாக்கர்களின் வசப்பட்டது.

இந்தச் சமயத்தில் நிஜாம் அடிக்கடி பாக்கிஸ்தானின் தலைவராக இருந்த ஜின்னாவுடன் ஆலோசனை நடத்தி வந்தார். பாக்கிஸ்தானுடன் ஹைதராபாத் சமஸ்தானம் எந்த நிமிஷமும் இணைந்துவிடக்கூடும் என்ற வதந்தி நிலவியது.

## ஓமந்தூரார் தலையீடு

ஹைதராபாத்தின் நிலைமையை ஓமந்தூரார் கூர்ந்து கவனித்து வந்தார். சென்னைப் பகுதியில் தளபதி மேஜர் ஸ்ரீ. நகேஷுடன் நாள்தோறும் ஹைதராபாத் தகவல்களை விசாரித்துவந்தார்.[1]

சென்னை உயர் நீதிமன்றத்து முஸ்லிம் நீதிபதிகள் சிலரும் சென்னை அரசாங்கத்தின் முஸ்லிம் ஐ. சி எஸ். அதிகாரிகள் சிலரும் ஹைதராபாத் சமஸ்தானத்தில் பணிபுரிய விரும்புவதாயும், தங்களை விடுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். இவர்களை எல்லாம் ஓமந்தூரார் சந்தேகப் பட்டார். இவர்களுடைய நடவடிக்கைகளை கண்காணிக்கும்படி துப்பறியும் துறைக்கு ஆணையிட்டார்.[2]

---

1. தகவல்: திரு. சடகோபன்
2. தகவல்: திரு. திரு. டி. ஏ. வர்கீஸ், ஐ. சி. எஸ்.

ஆந்திர மாவட்டங்களில், அதாவது ஹைதராபாத் எல்லைப் பகுதிகளில் பணிபுரிந்த அதிகாரிகளில் சந்தேகப்பட்ட அவ்வளவு பேர்களையும் உடனே வேறு மாவட்டங்களுக்கு மாற்றினார்.[1]

'ஹோம் கார்டு' என்ற காவல் படையை ஓமந்தூரார் திரட்டி அவர்களுக்குப் பயிற்சிக் கொடுத்தார். ஹைதராபாத் எல்லையில் பணிபுரிவதற்காக ஆயுதம் தாங்கிய விசேஷ போலீஸ் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தினார்.[2]

இவ்வாறு புதிதாக நியமனமான 'ஹோம் கார்ட்ஸ்', 'சிவில் கார்ட்ஸ்', 'ஸ்பெஷல் போலீசு' ஆகியவற்றிற்காக ஓராண்டுக்கு மூன்று கோடி ரூபாய்ச் செலவை அனுமதித்தார்.[3]

ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு இந்திய அரசாங்கம் பெட்ரோல் சப்ளை செய்யக்கூடாது என்று இந்திய அரசாங்கத்திற்கு ஓர் அவசரக் குறிப்பு அனுப்பினார்.[4]

காஷ்மீர் பிரச்சினையை நாம் சரியாகக் கவனிக்கவில்லை; ஹைதராபாத்திலும் கோட்டை விடக்கூடாது என்று சர்தார் பட்டேலை ஓமந்தூரார் எச்சரிக்கை செய்தார்.[5] கர்நூல் மாவட்டத்தில் நமது போலீசாருக்கு ஆயுதங்கள் கொடுத்து, ரஜாக்கர்களுக்குப் பதிலடி கொடுத்தார். அதன் விளைவாக, சென்னை, பம்பாய், மைசூர் மாநிலங்கள் மூன்றிலும் இருந்து ஒரே சமயத்தில் தாக்கி போலீஸ் நடவடிக்கை எடுக்கலாம் என்ற முடிவுக்கு சர்தார் பட்டேலும், ஓமந்தூராரும் வந்தனர். இருவரும் இரும்பு மனிதர்கள். உறுதியான கொள்கைகளை உடையவர்கள். பிடிவாதக்காரர்கள்.

## நள்ளிரவில் இராணுவ விமானங்கள்

ஒரு நாள் இரவு 10–30 மணிக்கு ஓமந்தூராருக்குத் தொலைபேசியில் அனுமதேயத் தகவல் வந்தது. ரஜாக்கர்களும் தெலிங்கானா கம்யூனிஸ்டுகளும் சென்னை மாகாணத்தில் எல்லைப் பகுதிக்குள் நுழைந்து தாக்கப்போவதாகச் சொல்லப்பட்டது.

---

1. *தகவல்: திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை (அப்போது சென்னை அரசின் ஊழியர் தேர்வு ஆணைக் கழகத்தின் தலைவராக இருந்தவர்)*
2. *தகவல்: திரு. ஏ. அழகிரிசாமி*
3. *ஆதாரம்: ஓ. பி. ஆர். வானொலியில் நிகழ்த்திய உரை*
4. *தகவல்: திரு. அழகிரிசாமி*
5. *தகவல்: திரு. முத்துலிங்க ரெட்டியார்*

ஒருமணி நேரத்திற்குள் ஓமந்தூரார் 8 இராணுவ விமானங்களைச் சென்னையிலிருந்து ஹைதராபாத் எல்லைக்கு அனுப்பி வைத்தார். ஹைதராபாத் சமஸ்தான அரசாங்கத்தார் இதை கடுமையாக ஆட்சேபித்தனர். இராணுவ விமானங்களை அனுப்பிவைத்ததற்கு, சர்தார் வல்லபாய் பட்டேல் பொறுப் பேற்றுக்கொண்டு, ஹைதராபாத் அரசாங்கத்திற்குச் சமாதானம் கூறினார்.

## கம்யூனிசமா? காலித்தனமா?

தெலிங்கானாவில் கம்யூனிஸ்டுகள் செல்வாக்குப் பெற்று வந்தனர். ஆனால் அவர்கள் நிஜாம் அரசாங்கத்தின் கையாட் களாகவே செயல்பட்டு வந்தனர். ஒரு ஆளை வெட்டிக் கொன்று அவருடைய பிரேதத்தை நடுத்தெருவில் காட்சியில் வைத்து, "நிஜாம் ஆட்சியை நீக்குபவர்களுக்கு நேரும் கதி" என்று எழுதி வைத்திருந்தார்கள். இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, ஓமந்தூரார் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசும் போது கம்யூனிசம் என்பதற்கும் காலித்தனம் என்பதற்கும் வித்தியாசம் இல்லை என்றார்.[1]

ஹைதராபாத் நிலைமை முற்றிக் கொண்டு போவதைக் குறித்து ஓமந்தூரார் பெரிதும் கவலைப்பட்டார்.

## போலீஸ் நடவடிக்கை

போலீஸ் நடவடிக்கை மூலம்தான் ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைக்க முடியும் என்று ஓமந்தூரார் உறுதியாக நம்பினார். கர்நூல் மாவட்டத்திலிருந்து ஹைதராபாத் சமஸ்தானத்திற்குச் செல்வதற்குரிய பாலத்தைப் பாதுகாப்பதில் ஓமந்தூரார் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

## படைக்குவிப்பு

ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஏராளமான படையும் ஆயுதங்களும் இருப்பதாக 1947 அக்டோபர் மாதத்திலேயே ஓமந்தூரார் இந்திய அரசாங்கத்திற்கு அறிவித்தார். ஆனால்

---

1. தகவல்: திரு. சாம்பசிவ ரெட்டியார்

அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. அல்லது நம்பவில்லை. இந்தியாவின் ஏஜென்ட் ஜெனரலாக திரு. கே. எம். முன்ஷி நியமிக்கப்பட்டு 1947 டிசம்பர் 24-இல் ஹைதராபாத்திற்குப் போய்ச் சேர்ந்தார். ஓமந்தூரார் ஏற்கெனவே தெரிவித்த தகவல் சரியானது என்று அவர் உறுதிப்படுத்தினார்.

## சூழ்ச்சிகள்

அடுத்த ஓரிரு நாட்களில் இந்திய நாணயம் ஹைதராபாத் சமஸ்தானத்தில் செல்லாது என்று நிஜாம் அரசாங்கம் அவசரச் சட்டம் பிறப்பித்தது. பாக்கிஸ்தானின் தலைநகராக அப்போது இருந்த கராச்சியில் ஹைதராபாத் சமஸ்தானத்தின் பொது உறவு அலுவலர் ஒருவரும் நியமிக்கப் பட்டார். பாக்கிஸ்தான் அரசாங்கத்திற்கு நிஜாம் 20 கோடி ரூபாய் கடன் கொடுத்தார். விலைமதிப்புள்ள பல உலோகங்களை ஹைதராபாத்திலிருந்து ஏற்றுமதி செய்யவும் திட்டமிடப்பட்டது.

## நாள்தோறும் எச்சரிக்கை

1948 பிப்ரவரி மாதத்தில் நிலைமை மோசம் அடைந்தது. நாள்தோறும் ஓமந்தூரார் இந்திய அரசாங்கத்தை எச்சரித்து வந்தார். இதுபற்றி திரு. வி. பி. மேனன் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.[1]

## ஹாஸ்பட் பாலம்

பெல்லாரி மாவட்டத்தில் உள்ள ஹாஸ்பட் இரயில்வே பாலத்தை ரஜாக்கர்கள் நொறுக்கி விடக்கூடும் என்று ஓமந்தூரார் சந்தேகப்பட்டார். உடனே அவர் மைசூர் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டார். அதன் பயனாக, சென்னை அரசாங்கத்தின் ரிசர்வ் போலீசும் மைசூர் காலாட்படையும் மைசூர் சமஸ்தானப் படையின் தலைமைத் தளபதி பிரிகேடியர் எல். பி. பால் என்பவரின் தலைமையில், கண்ணை இமை காப்பது போல, இரயில்வேப் பாலத்தை அல்லும் பகலும் பாதுகாத்து வந்தனர். பெல்லாரி மாவட்டத்தின் கலெக்டராக இருந்த திரு. கே. என். அனந்தராமன், ஐ. சி. எஸ். உடனும் பெல்லாரி

---

1. Disquieting Reports had been Received from the Government of Madras of the Activities of the Razakars on Their Borde (P. 341).

யில் இருந்த போலீஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலுடனும் ஓ. பி. ஆர். ஒவ்வொரு நாளும் தொடர்பு கொண்டிருந்தார். இந்திய அரசாங்கத்தை எதிர்பாராமல் சென்னை அரசாங்கத்துப் போலீசுப்படை ஹைதராபாத் சமஸ்தானத்திற்குள் நுழைய வேண்டும் என்றும் ஓ. பி. ஆர். சொன்னார்.[1]

## ஆயுதம் செய்வோம்!

ஹைதராபாத் எல்லையிலுள்ள சென்னை அரசாங்க போலீசாரிடம் "நீங்கள் ரஜாக்கர்களை திருப்பித் தாக்குங்கள் என்று ஓ. பி. ஆர். சொன்னார். அவர்களிடம் இருக்கும் போர்க் கருவிகள்போல எங்களிடம் இல்லையே எப்படித் தாக்குவது" என்று அவர்கள் ஓமந்தூராரிடம் கூறினார்கள்.

சென்னை மாகாணத்திலேயே ஆயுதங்கள் செய்யவேண்டும் என்ற எண்ணம் ஓமந்தூராருக்கு ஏற்பட்டது.

பெரம்பூரில் அந்த நாளில் ஒரு சாதாரண இரயில்வே தொழிற்கூடம் இருந்தது. அதில் வேலைபார்த்த திரு. நடராசன் என்பவர் நாட்டுத் துப்பாக்கி செய்வதில் பயிற்சிபெற்றிருந்தார் என்பதை அறிந்து ஓமந்தூரார் அவரை ஊக்கப்படுத்தினார்.

கோயம்புத்தூரில் டெக்ஸ்டூல் என்ற தொழிற்சாலை 1945 இல் தான் ஏற்பட்டது. ஆலைக்கதிர்கள் உற்பத்தி செய்யும் அந்தத் தொழிற்சாலையைப் போர்க்கருவிகள் செய்யும் தொழிற்சாலையாக இயங்கச் செய்யலாம் என்று ஓமந்தூரார் நினைத்தார். அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர் திரு. சுந்தரம் என்பவர் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர். அவரிடம் பேசி அங்கேயே இயந்திரத் துப்பாக்கி முதலிய ஆயுதங்களைச் செய்யச் சொன்னார். டெக்ஸ்டூலில் உற்பத்தியான துப்பாக்கிகளை போலீசார் பயன்படுத்திப் பார்த்து அவற்றின் தரம் திருந்த வேண்டும் என்று கூறினர்.[2]

---

1. மேற்கண்ட தகவல்களைத் தந்தவர் அப்போது பெல்லாரியில் டி. ஐ. ஜி. ஆக இருந்த திரு. எஸ். பார்த்தசாரதி ஐயங்கார்.

2. தகவல்: திரு. பார்த்தசாரதி ஐயங்கார்.

கோவை டெக்ஸ்டூல் கம்பெனியார் ஆயுதங்கள் செய்வதை அறிந்ததும் பிரதமமந்திரி ஜவஹர்லால் நேரு, "அவர்கள் அப்படி ஆயுதங்கள் செய்யலாமா?" என்று ஓமந்தூராரைக் கேட்டார். ஓமந்தூரார் அதற்குப் பின் வருமாறு பதில் கூறினார்.[1]

> "ஆயுதங்கள் செய்ததற்காக நீங்கள் என்னைப் பாராட்டவேண்டும். பாராட்டி நன்றி கூருவிட்டாலும் சும்மாவாவது இருக்கலாம். ஆனால் நீங்கள் குறை காணுகிறீர்கள். நீங்களும் ஆயுதங்கள் செய்ய மாட்டீர்கள். மற்றவர்களையும் செய்யவிடமாட்டீர்கள்."

தமிழ்நாட்டில் பெரியதொரு ஆயுதத் தொழிற்சாலை ஏற்படும் வாய்ப்பை இழந்துவிட்டோம் என்றுதான் இப்போது நினைக்கவேண்டியிருக்கிறது.

ரஜாக்கர்கள் சென்னை மாநிலத்துக்குள் தாக்கியதும் அவர்களை எதிர்த்துத் தாக்க, ஓமந்தூரார் இந்திய அரசாங்கத்தாரிடம் ஆயுத உதவி கேட்டார்.[1] அந்த உதவி கிடைக்காததால் தான், தாமே உற்பத்தி ஏற்பாடுகளைச் செய்தார்.

## முதலமைச்சர்கள் மாநாடு

ஓமந்தூரார் வற்புறுத்தலின்பேரில் சென்னை, பம்பாய், மத்திய மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களின் முதலமைச்சர்களும் திரு. கே. எம். முன்ஷியும் ஒரு மாநாட்டை சர்தார் பட்டேல் தலைமையில் 1948 பிப்ரவரி 21-இல் நடத்தினர்.

இந்த மாநாட்டில் ஓமந்தூரார் சில கடுமையான கருத்துக்களைக் கூறினார். வி. பி. மேனன், தம் நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

---

1. தகவல்: புலவர் சீரமான். இவர் வண்டலூர் கிரசெண்ட் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருப்பவர். வள்ளலாரிடம் ஈடுபாடு உடையவர். ஓமந்தூராருடன் வடலூரில் சில ஆண்டுகள் இருந்தவர். நெருங்கிப் பழகியவர்.

"சென்னை – ஹைதராபாத் எல்லையிலுள்ள மாவட்டங்களில் கம்யூனிஸ்ட்டுகள் பலம் பெற்று, கண்ணும்பூச்சி விளையாடுவதைச் சென்னைப் பிரதமர் சுட்டிக்காட்டினார். அந்தப் பகுதியில் பகலில் ரஜாக்கர் ஆட்சியும் இரவில் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியும் நடப்பதாகப் பொதுமக்கள் பேசுகிறார்கள். சென்னைஅரசாங்கம் உடனடியாக இராணுவ உதவி கேட்டது. ஆனால் இந்திய அரசாங்கம் அப்போது இராணுவத்தை அனுப்பும் நிலையில் இல்லை. இராணுவப் போலீசைக் கொண்டு எல்லைகளைப் பாதுகாக்கும்படி மாநிலஅரசுகள் கேட்டுக்கொள்ளப் பட்டன. முக்கியமான வேறு சில முடிவுகளும் இம் மாநாட்டில் செய்யப்பட்டன."

(வி. பி. மேனன் – பக். 342)

ஓமந்தூராரின் இடைவிடாத முயற்சியால், ரஜாக்கர் இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் என்று ஒரு கோரிக்கையை இந்திய அரசாங்கம் நிஜாமுக்குத் தெரிவித்தது. இக்கடிதத்தை 1948 மார்ச்சு 26-இல் திரு. கே. எம். முன்ஷி, நிஜாமிடம் நேரில் கொடுத்தார். ஆனால் இவ்வேண்டுகோளால் எதிர் விளைவுகளே ஏற்பட்டன.

## பாக்கிஸ்தானிலிருந்து விமானங்கள்

பாக்கிஸ்தானிலிருந்து விமானங்களில் ஹைதராபாத்துக்கு ஆயுதங்கள் வந்துகொண்டிருந்ததாக ஓமந்தூரார் இந்திய அரசாங்கத்துக்கு எச்சரித்தார். அவர் எச்சரித்துச் சில மாதங்களுக்குப் பிறகு ஜோசி என்பவர் ஹைதராபாத் சமஸ்தான நிர்வாகக்குழுவிலிருந்து விலகிக்கொண்டு எழுதிய கடிதத்திலிருந்து ஓமந்தூரார் கூறியது உண்மை என்பது தெரியவந்தது.[1]

---

1. About this time, the Government of Madras Asked for Military Assistance in Border Areas to ward off Incursions of the Razakars and Hyderabad Troops into Indian Territory (V. P. Menon P. 341)

   Attempts were Being made to Smuggle arms and Ammunition in to Hyderabad. An Australian by the name of Sidney Cotton was Reported to be engaged in Aerial Gun-Running with Karachi as his base. The Supplies were made by Night and Bidar and Warangal were the Receiving Airfields.

   — **V. P. Menon, P. 370**

இதுகுறித்து, அனுமான் என்ற கட்டுரையில் (இந்நூலில்) விவரமாகக் கூறுவோம்.

## ஆச்சாரிய பட்வர்தன்

ஆச்சாரிய பட்வர்தன் என்ற சோசியலிஸ்ட்டுத் தலைவர், சில இளைஞர்களை அழைத்துக்கொண்டு ஹைதராபாத் சமஸ்தானத்துக்குள் நுழையத் திட்டமிட்டு, சென்னைக்கு வந்து உட்லண்ட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்தார். அவரிடம் இயந்திரத் துப்பாக்கிகளும் இருந்தன. அவற்றைப் பறிமுதல் செய்யவும் அவரைக் கைது செய்யவும் சென்னைப் போலீசார் முடிவுசெய்தனர். தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு ஹைதராபாத்துக்குச் செல்ல இருப்பவரைக் கைது செய்யவேண்டாம் என்று ஓ. பி. ஆர். உத்தரவிட்டார்.[1]

## ஹைதராபாத் படையெடுப்பு

1948 செப்டம்பர் 13-ஆம் நாள், இந்தியப் படைகள் பம்பாய் மாகாணத்தில் சோளாப்பூரிலிருந்தும் சென்னை மாகாணத்தில் கர்நூலிலிருந்தும், விஜயவாடாவிலிருந்தும் ஹைதராபாத் சமஸ்தானத்துக்குள் புகுந்தன. செப்டம்பர் 17 ஆம் நாள் மாலையில் ஹைதராபாத் படைகள் சரணடைந்தன. 18-ஆம் நாள், மேஜர் ஜெனரல் சவுத்ரி தலைமையில் இந்தியப் படை ஹைதராபாத் நகருக்குள் நுழைந்தது. ஓ. பி. ஆர். வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தார். சர்தாருக்குப் பாராட்டுக் கூறினார். பாராட்டு உங்களுக்குத்தான் உரியது என்றார் சர்தார். ஹைதராபாத் பிரச்சினையைத் தீர்த்ததில் ஓமந்தூரார் பங்கு, குறிப்பிடத் தக்கது என்பது சுதேச சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைப்பதில் சர்தார் வல்லபாய் பட்டேலின்

---

1. தகவல்: திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம். இவர் புதுச்சேரியில் 1915-இல் பிறந்தவர். 1933-இல் ஹரிஜன சேவா சங்கத்திலும், ஓமந்தூரார் நடத்திவந்த தூயவாழ்க்கைப் பயிற்சிக் கழகத்திலும் சேர்ந்தார். 1935-இல் புதுச்சேரியில் சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் அமைத்தார். 1942-இல் தலைமறைவானார். 1948-இல் கோயம்புத்தூரில் தொழிலாளர் தலைவரானார். 1948-இல் தமிழ்நாடு சோசியலிஸ்டுக் கட்சியின் செயலராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1952-இல் பூதான இயக்கத்தில் சேர்ந்தார். இப்போது சென்னைநகர சர்வோதய மண்டலின் செயலராக உள்ளார்.

வலதுகரமாக விளங்கிய அமைச்சரவைச் செயலர் திரு. வி. பி மேனனின் நூலிலிருந்தும் பிற்காலத்தில் ஆந்திரப்பிரதேச முதலமைச்சராக இருந்த திரு. கோபாலரெட்டியின் கடிதத்திலிருந்தும்[1] வேறுபல ஆதாரங்களிலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது.

டாக்டர் சுப்பராயன் விவகாரம்

ஹைதராபாத் பிரச்சினையின் எதிரொலியாக டாக்டர். சுப்பராயன் விவகாரம் ஏற்பட்டது.

டாக்டர். சுப்பராயன் ஓமந்தூரார் அமைச்சரவையில் போலீசு அமைச்சராக இருந்நார். அவருடைய மக்கள் மோகன் குமாரமங்கலமும், பார்வதி குமாரமங்கலமும் கம்யூனிஸ்ட்டுக் கட்சியில் இருந்தனர். ஹைதராபாத்தில் கம்யூனிஸ்ட்டுகள் ரஜாக்கர்களுடன் இணைந்து வேலைசெய்து வந்தனர்.

டாக்டர். சுப்பராயன் வீட்டிலேயே மோகனும், பார்வதியும் தங்கியிருந்தனர். எனவே அரசாங்கத்தின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் ரஜாக்கர்களுக்கு அம்பலமாகி விடும் என்று ஓமந்தூரார் அஞ்சினர்.

ரஜாக்கர்களுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் டாக்டர். சுப்பராயன் வீட்டுக்கு அருகேயிருந்த தபால் பெட்டியில் போடப்பட்டு, துப்பறியும் துறையினர் மூலம் ஓமந்தூராருக்குக் கிடைத்தது.[2] உடனே டாக்டர் சுப்பராயனிடமிருந்து போலீசுத் துறையை, ஓமந்தூரார் தாமே எடுத்துக் கொண்டார்.

இதற்குச் சில நாட்கள் முன்னராக கம்யூனிஸ்டுகள்மீது நடவடிக்கை எடுக்கவும் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்யவும் இந்திய அரசு முடிவு செய்திருந்தது. உடனே சென்னை

---

1. O. P. R. took personal interst at the time of the Police action in to Hyderabad, both from Kurnool side and from Vijayanade side, when Indian forces Marched in to Hyderabad state, and also in Dealing with the law and order situation arising out of the Activities of the Communists then from Hyderabad side.

— Dr. B. Gopala Reddi, Governor of Uttarpradesh, in a letter to Mr. N. Mahalingam (Rajbhavan, Lucknow, Sep. 21. 1970)

2. தகவல்: ஊரன் அடிகள்

மாகாணத்தில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமறைவாகி விட்டனர். டாக்டர். சுப்பராயன் தம் மக்கள் மூலமாக, அரசாங்கத்தின் முடிவைக் கம்யூனிஸ்டுகளுக்கு அறிவித்திருக்க வேண்டுமென்று ஓ. பி. ஆர். நினைத்தார்.[1]

ஓமந்தூரார், நாட்டு நலனில் மட்டுமே கருத்தாக இருப்பவர். நாட்டு நலம் கருதி எடுக்கும் முடிவுகளால் யாருக்கு என்ன கேடு நேர்ந்தாலும் பின் வாங்கமாட்டார். ஜவஹர்லால் நேரு நாட்டு நலனைப்போல நண்பர்களின் நலத்தையும் பேண விரும்பியவர். டாக்டர். சுப்பராயன் அவருக்கு நெடுநாள் நண்பர். இராஜாஜியும் டாக்டர். சுப்பராயன் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். எனவே இப்பெரும் தலைவர்கள் ஓமந்தூரார் எடுத்த நடவடிக்கையை வரவேற்கவில்லை. மீண்டும் அந்தத் துறையை அவரிடம் கொடுத்துவிடச் சொன்னார்கள். மகாத்மா காந்தியும் இதுகுறித்து ஓமந்தூராரிடம் பேசினார். 'சம்பந்தப்பட்ட பைலை உங்களுக்கு அனுப்புகிறேன். படித்துப் பாருங்கள்' என்றார், ஓ, பி. ஆர். 'பைலை அனுப்ப வேண்டிய தில்லை' என்று மகாத்மா கூறிவிட்டார்.

திரு. காமராஜ், திரு. எஸ். என். சோமயாஜுலு, திரு மட்டப்பாறை வெங்கட்டராம அய்யர் முதலிய பலரும் ஓமந்தூராரிடம் முறையிட்டனர். திரு. பக்தவத்சலமும் தலையிட்டுப் பார்த்தார். ஆனால் ஓ. பி. ஆர். அணுவளவும் அசையவில்லை.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் மேஜர் ஜெனரல் சவுத்ரி, அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மறுநாள், யாருடைய சிபார்சும் இல்லாமல் போலீசுத் துறையை ஓமந்தூரார் டாக்டர். சுப்பராயனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

## தலைமை நீதிபதி நியமனம்

நாடு சுதந்தரம் அடைந்ததும், வெள்ளைக்காரர்கள் வெளியேறினார்கள். அவர்கள் வகித்த உயர்பதவிகளுக்கு இந்தியர் களை நியமிக்க வேண்டியது வந்தது.

---

1. தகவல்: திரு. எஸ். என். சோமயாஜுலு

ஒவ்வொரு பதவிக்கும் பலர் முயன்றனர். எனவே; பதவி கிடைக்காதவர்கள் ஏதாவது குறை கூறினர். ஆங்கிலேயர் வகித்த பதவிகளுக்கு உரியவர்கள் தாங்கள் மட்டுமே என்று குறிப்பாக, பிராமணர்கள் கருதினர்கள்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் முதல் இந்தியத் தலைமை நீதிபதியாக ஒரு பிராமணரே நியமிக்கப்படவேண்டும் என்று, பிராமணர் பலர் விரும்பினர். இப்பதவிக்கு திரு. பி. வி. இராஜமன்னர் நியமிக்கப்பட்டதை அவர்கள் விரும்பவில்லை. ஓமந்தூரார் தலையிட்டார் என்றும் பிரசாரம் செய்தனர். இதுகுறித்து, இந்நூலாசிரியருக்கு 14—11—1977 இல் அளித்த பேட்டியில் திரு. பி. வி. இராசமன்னர் கூறியதாவது:

> "சர். பிரடரிக் ஜெண்டில் என்ற ஆங்கிலேயர் எனக்கு முன் தலைமை நீதிபதியாக இருந்தார். அப்போது நான் ஐந்தாவது நீதிபதியாக இருந்தேன்.
>
> முதல் மூன்று பேரும் ஆங்கிலேயர் நான்காவது குன்சி ராமன் என்ற மலையாளி. அவர் ஓய்வுபெற இன்னும் மூன்று மாதங்களே இருந்தன. ஆகையால் சீப் ஜெஸ்டிஸ் சர். பிரடரிக் ஜெண்டில் என் பெயரைப் பரிந்துரைத்தார். ஓ. பி. ஆரும் கவர்னர் சர் ஆர்ச்சிபால்டு நையும் ஒப்புக் கொண்டனர்."

## ஏனைய நீதிபதிகள் நியமனம்

நீதிபதிகளை நியமனம் செய்ய முதலமைச்சருக்கு அதிகாரம் கிடையாது (இதைப்பற்றிப் பிறகு கூறுவோம்). ஆனல் நீதிபதியாக ஒருவர் நியமிக்கப்படுவதைச் சுணக்கவோ தடுக்கவோ முதலமைச்சரால் இயலும்.

ஆந்திரா வழக்கறிஞர் ஒருவர் பெயர் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனப் பட்டியலில் இடம்பெற்றிருந்தது. தலைமை நீதிபதி தம் பெயரைப் பரிந்துரைத்தாலும் முதலமைச்சர் ஓ. பி. ஆர். மறுத்துவிடக்கூடுமே என்ற அச்சம் அவரை வாட்டியது.

ஓ. பி. ஆருக்கு வேண்டியவர்கள் யார்? என்று ஓமந்தூருக்கே போய் விசாரித்தார். அங்கே ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியர் – நாள்தோறும் அவருடன்தான் ஓ. பி. ஆர். நெடுந்தூரம் நடந்துசென்று பல் துலக்கிக்கொண்டும் பேசிக் கொண்டும் நெடுநேரம் பொழுதுபோக்குவார் என்பதைக் கேள்விப்பட்டார். அவரைச் சென்னைக்கு அழைத்துவந்து ஓமந்தூராருக்கு தூது அனுப்பினர்.

உடனே ஓமந்தூரார், கவர்னருக்கும் தலைமை நீதிபதிக்கும் இந்திய அரசுக்கும் பின்கண்டவாறு கடிதங்களை எழுதினர்:

> "...........என்பவர் நீதிபதியாக வரவிரும்புவதாகத் தெரிகிறது. இம்முயற்சியில் எனக்குப் பரிந்துரைக்க இவர் ஏற்பாடு செய்துள்ளார்........... என்பவர் இன்று வந்து என்னைச் சந்தித்தார். இவர் என் ஊர்க்காரர். ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியரைப் போய்ப் பார்த்து என்னிடம் பரிந்துரைக்க முயற்சி செய்திருக்கும் இவர் உயர்நீதிமன்ற நீதிபதியானல் என்ன என்ன செய்வார்? பதவிக்கு முற்றிலும் தகுதியில்லாதவர்"[1]

## நீதிபதி நியமன முறை

உயர் நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை நியமிப்பதற்குச் சில முறைகள் உள்ளன. இன்னாரை நியமிக்கலாம் என்று தலைமை நீதிபதி பரிந்துரை செய்து ஆளுநருக்கு எழுதுகிறார். அதைக் குறித்து முதலமைச்சரின் கருத்துக்களை ஆளுநர் கோருகிறார். இந்த பைல்களை ஆளுநர் இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கிறார். அவர்கள் இந்தியாவின் தலைமை நீதிபதியைக் கலந்துகொண்டு ஆணை பிறப்பிக்கின்றனர்.

## நீதிபதியாக திரு சோமசுந்தரம் நியமனம்

சென்னை உயர் நீதிமன்றத்தில் 1948 இல் ஒரு நீதிபதிப் பதவி காலியாக இருந்தது. அந்த இடத்திற்குப் புகழ்பெற்ற

---

1. தகவல்: திரு. சடகோபன்

கிரிமினல் வழக்கறிஞர் திரு. என். சோமசுந்தரம் பெயரைத் தலைமை நீதிபதி சிபாரிசு செய்தார்.[1] முதலமைச்சர் ஓ. பி. ஆர். அதை ஏற்றுக்கொண்டார்.

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சரும் நேருவின் இனிய நண்பருமான திரு. என். கோபாலசாமி அய்யங்கார் தம் மருமகன் திரு. வி. கே. திருவேங்கடாச்சாரிக்கு நீதிபதி பதவி கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டார். நேருவிடம் குறைகூறினார். நேரு, ஓமந்தூராரைச் சந்தித்தபோது, பட்டேல் முன்னிலையில் "நீங்கள் பிராமணரல்லாதார்- அரசாங்கத்தை, சாதி அடிப்படையில் நடத்தப் பார்க்கிறீர்கள்" என்றார், "சொன்னதை வாபஸ் வாங்குங்கள் அல்லது என்னுடைய ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார் ஓ. பி. ஆர். "ஓ. பி. ஆர். ராஜினாமா செய்தால் பல புதிய அரசியல் விளைவு கள் இருக்கும், அதற்கு இடம் கொடுக்கக்கூடாது" என்று சொல்லி, சர்தார் பட்டேல் அந்த அளவில் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.[2]

இது குறித்து, திரு. பி. வி. இராசமன்னார் பின்வருமாறு கூறுகிறார் :

"திரு. சோமசுந்தரத்தை நியமித்ததில் பிராமணர் களுக்குக் கோபம். யாராவது ஒரு பிராமணரைப் போட்டிருக்கலாமே என்று.

"அதற்கு ஓ. பி. ஆர். பொறுப்பு அல்ல. அவர் தலையிடவில்லை. சிபார்சு செய்தவன் நான்தான்."

"ஓ. பி. ஆர். பிராமண விரோதி இல்லை. ஆனால் சட்ட விரோதமாக நீதிக்குப் புறம்பாகப் பிராமணர் களுக்குச் சலுகை காட்டமாட்டார்."

## பிராமண விரோதியா ?

ஓ. பி. ஆர்க்கு ஒருவன் யோக்கியனா அயோக்கியனா என்பதில்தான் அக்கறை இருந்தது. பிராமணன் என்பதற்காக யோக்கியனை ஒதுக்கமாட்டார். அயோக்கியன் என்று தெரிந்து பிராமணரல்லாதவரை ஆதரிக்கமாட்டார்.

---

1. தகவல்: தலைமை நீதிபதி இராசமன்னார்
2. தகவல்: முத்துலிங்க ரெட்டியார்

டாக்டர். டி. எஸ். எஸ். ராஜன், ஓமந்தூராரின் நம்பிக்கைக்குரிய அமைச்சராக இருந்தார் திரு. எஸ். வெங்கடேசுவரன் என்ற ஐ. சி. எஸ். அதிகாரியை நம்பிய அளவு ஓமந்தூரார் வேறு எவரையும் நம்பியதில்லை.

'ஹிந்து' நாளிதழ் ஓமந்தூரார் சாதி உணர்ச்சியுடையவர் என்று எழுதியிருந்தது. உடனே அந்த இதழின் ஆசிரியர் திரு கஸ்தூரி சீனிவாசனைத் தலைமைச் செயலகத்துக்கு அழைத்தார். 'உங்கள் பத்திரிகையில் எவ்வளவு பேர் வேலை பார்க்கிறார்கள்? எத்தனைபேர் என்ன என்ன சாதியினர்? பிராமணர்கள் எத்தனை பேர்?'' என்று நேருக்கு நேரே கேட்டார். உலகப் புகழ் பெற்றப் பத்திரிகை ஆசிரியர் திரு கே. சீனிவாசன் ஒரு பதிலும் சொல்ல வில்லை. 'அப்படியிருக்க நான் சாதி உணர்ச்சியுடையவன் என்று எழுதியிருக்கிறீர்களே?' என்றும் ஓ. பி. ஆர். கேட்டார்.[1]

கோழைகள்தான் முதுகுக்குப் பின்புறமும், ஆளில்லாத இடத்திலும் பேசுவார்கள். ஓமந்தூரார் போன்ற வீரர்கள் எதையும் யாரிடமும் நேரில்தான் கேட்பார்கள்.

## நீதிபதிக்குப் பேட்டி மறுப்பு

உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர், ஓமந்தூராரைக் காண வந்தார். ஓமந்தூரார் அவருக்குப் பேட்டி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். அவர் இவ்விவரத்தை கவர்னராக இருந்த பவநகர் மஹாராஜாவிடம் போய்ச் சொன்னாராம். பிறகு ஓமந்தூரார். கவர்னருடன் பேசிக்கொண்டிருந்தபோது கவர்னர் இதைப்பற்றிக் குறிப்பிட்டார். "கொடுத்தனுப்பிய சீட்டில், என்ன வேலையாகப் பார்க்க விரும்புகிறீர் என்ற பகுதி நிரப்பப் படாமல் இருந்தது. எனவே தவறுதலான சிபார்சுக்கு வருகிறார் என்று முடிவு செய்து, பார்க்க மறுத்தேன். அமைச்சர்களும் நீதிபதிகளும் ஒருவர் கடமையில் ஒருவர் குறுக்கிடாமல் இருப்பது நன்று,'' என்று ஓ. பி. ஆர் கூறினார்.

## சிவப்பு நாடா ஒழிக

அரசாங்கம் விதிகளின்படி நடைபெறுகிறது; அந்த விதிகள் மக்களின் தேவைக்கு ஏற்ப, சுதந்திர இந்தியாவின்

---

1. தகவல் : திரு. டீ. ஏ. வர்கீஸ், ஐ. சி. எஸ்.

குறிக்கோள்களுக்கு இணங்க வளைந்து கொடுக்கவேண்டும் என்று ஓமந்தூரார் விரும்பினர்.

சில உத்தரவுகளைப் போடும்போது, அரசாங்க இலாக்காக்களின் காரியதரிசிகள் சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக் காட்டி 'அந்த உத்தரவு போட முடியாது' என்பார்கள் 'சர்க்கார் உத்தரவு போடலாம் இல்லையா? நான்தான் சர்க்கார், உத்தரவு போடுகிறேன்' என்று சொல்லுவாராம்.[1]

## விவசாயிகள் பிரச்சினை

கிசான் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான திரு. கே பி. எஸ். மணி, ஓர் இயக்கம் நடத்தியதற்காக அவரை ஓ. பி. ஆர். கைது செய்யச் சொன்னர். திரு. மணி, ஓ. பி. ஆரைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிருர்:

> "சாதாரண ஊழியனுன என்னை. 'வாரண்ட்' கொடுக்கப்பட்டிருந்த கைதியை அழைத்து முதலமைச்சராக இருந்த ஓ. பி. ஆர். ஒரு மணிநேரம் பேசினர். கிசான் இயக்கத்தில் என் இலட்சியம் என்ன என்று கேட்டார். 'எஜுகேட், ஆர்கனைஸ், அஜிட்டேட்' என்று என்னுடைய மூன்று இலட்சியங்களைச் சொன்னேன்! தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அவர்களுக்காக விடுதி நடத்திவருகிறேன் அரசாங்க உதவி மூன்று ஆண்டுகளாகக் கிடைக்கவில்லை என்றேன் உடனே உத்தரவு போட்டு வாரண்டையும் ரத்துச் செய்தார்."

## மற்றுமொரு பேரிடி

இவ்வாறு பல பிரச்சினைகளைச் சமாளித்துக் கொண்டிருந்த போது, மகாத்மா காந்தியின் திடீர் மரணச் செய்தி ஓமந்தூராருக்கு ஒரு பேரிடியாக எட்டியது.

---

1. ஆதாரம்: தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள் (26—8—1970)

“வாழ்கநீ : எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா: நீ வாழ்க: வாழ்க:”

— பாரதியார்

# 21

# மகாத்மாவின் மரணம்

30—1—1948 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மகாத்மா காந்தி, தம் பேத்திகள் உடன்செல்ல, டில்லி பிர்லா மாளிகையில் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்றுகொண்டிருந்தார்.

காந்தியைக் கரம் கூப்பி வணங்கிய கை அடுத்த நொடியில் ரிவால்வரால் காந்தியின் மார்பைப் பார்த்துக் குறி தவறாமல் சுட்டது. இரத்தம் பீறிட்டது!

“ஹே! ராம்! என்று சொல்லி அண்ணல் காந்தி, தரையில் விழுந்தார். அவருடைய ஆருயிர் பிரிந்தது.

அருகேயிருந்தவர்கள் அலறினர்.

பாரதத் தாய் புலம்பினாள்.

உலகமக்கள் விம்மினார்கள்.

முதலமைச்சராக இருந்த ஓமந்தூரார், செய்தியைக் கேட்டதும் துடித்தார்; கதறினர்; அழுதார். 'காந்தியைப் பிழைக்க வைக்க முடியாதா?' என்று எண்ணினர். மகன் இறந்த போதும், மனைவி இறந்தபோதும், தாய் தந்தையர் இறந்த போதும் அவர்களை மீண்டும் உயிர்பிழைக்கச் செய்ய நினைக்காத ஓ. பி. ஆர். இப்போது அப்படிப்பட்ட சிந்தனையில் ஈடுபட்டார்.[1] அன்றிரவே 8 மணிக்குப் புறப்பட்டுத் தலைநகரத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

இதுவரை அறியாத ஓர் இருள், ஓமந்தூராரைச் சூழ்ந்து கொண்டது. ஜவஹர்லால் நேரு கூறியதுபோல, ஒளிகாட்டிய விளக்கு அணைந்து விட்டதை உணர்ந்தார்.

காந்தி சொன்னர்; கதர் கட்டினர். காந்தி சொன்னர், சீமைத்துணி மறியல் செய்தார். காந்தி சொன்னர்; கிராம்பு பகிஷ்காரத்தில் இறங்கினர். காந்தி சொன்னர்; காங்கிரசில் சேர்ந்தார். காந்தி சொன்னர்; மதுவிலக்கை அமுல் செய்தார் காந்தி சொன்னர்; சிறை புகுந்தார்.

காந்தியின் அஹிம்சைக் கொள்கைப்படி போலீசார் நடந்து கொள்ள வேண்டும் என்றுகூட ஓ. பி. ஆர். ஆணை பிறப்பித்திருந்தார்.[2]

## அஸ்தி கரைப்பு

காந்தி மகானின் அஸ்தியுடன் ஓமந்தூரார் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அஸ்தியைக் கடலில் கரைக்கும் வரை தன்னுடைய பூஜை அறையிலேயே அதை வைத்திருந்து, பய பக்தியுடன் வழிபட்டு வந்தார்.[3]

---

1. தகவல் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம்

2. போலீசார் முழங்காலுக்குக் கீழேதான் துப்பாக்கியால் சுட வேண்டும் என்று ஓ. பி. ஆர். உத்தரவிட்டிருந்தார். அவ்வாறு செய்வது, பலன் தராது என்றும் ஏற்கனவே உள்ள விதிகள் 100 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல இடங்களில் கலவரங்களை அடக்குவதில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் அமுலில் இருப்பதாகவும் மன்ருடி, உத்தரவை அமுல் செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம்.

— திரு. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார்.

3. தகவல்: திரு. சடகோபன்.

காந்தியடிகளின் அஸ்தி குறிப்பிட்ட நாளில் இந்தியா முழுவதும் கரைக்கப்பட்டது. தம்மிடம் இருந்த அஸ்தியைச் சென்னை மாநிலத்தின் பல முக்கியமான இடங்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். ஒரு பகுதியை, காந்தி மகானுக்குச் சென்னையில் எழுப்ப விரும்பிய நினைவுச் சின்னத்தின் கீழே போட ஒதுக்கிவைத்துக்கொண்டார்.

சட்டை போடாமல் பனியன் மட்டும் அணிந்து கொண்டு, அஸ்திக் கலசத்தைக் கையில் ஏந்தியவாறு ஓ. பி. ஆர். ஊர்வலத்தில் கடற்கரைக்குச் சென்றார். முதலமைச்சர் இவ்வாறு (சட்டை இல்லாமல்) செல்லுவது அரசாங்க மரபுக்கும் சம்பிரதாயத்துக்கும் (புரோடோகோல்) முரணானது என்று ஐ. சி. எஸ் வர்க்கமும் போலீசு அலுவலர்களும் சொன்னார்கள். அவர்கள் கருத்தை ஓ. பி. ஆர். புறக்கணித்தார்.[1]

அஸ்தி கரைத்த இடத்தில் 4, 5 பேர் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியதாகக் கேள்விப்பட்டு, போலீஸ் ஐ. ஜி. யைக் கண்டித்து விளக்கம் கேட்டார்.[2]

## நினைவுச் சின்னம்

உலகம் உள்ள அளவும் காந்தி மகானை நினைவூட்டக் கூடிய ஒரு சின்னத்தை, சென்னையில் எழுப்பவேண்டுமென்று ஓ. பி. ஆர் விரும்பினார்.

டில்லியிலுள்ள குதுப்பினார் ஓ. பி. ஆர் உள்ளத்தைப் பல்லாண்டுகளாகக் கவர்ந்திருந்தது. மழை, வெப்பம், காற்று, பனி ஆகியவற்றால் பாதிக்கப்படாமல் இந்தத் தூண் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. இதன் அபூர்வமான உலோகக் கலவையை ஆராய்ந்து இதுபோலச் சென்னைக் கடற்கரையில் அமைக்கத் திட்டமிட்டார்.

காந்தியடிகளின் அஸ்தியை அடித்தளமாக வைத்து அதன் மீது ஸ்தூபி கட்டவேண்டுமேன்று ஓமந்தூரார் கருதினார்.

---

1. தகவல்: திரு. சாம்பசிவ ரெட்டியார்,

2. தகவல்: திரு. பி. வி. கிருஷ்ணய்யா.

அதுவரை, அஸ்தியைப் பத்திரமாக வைத்திருக்கும்படி திரு. பகீரதன் மூலம், ஓமந்தூரார், காந்தியின் அஸ்தியைக் கல்கி அலுவலகத்துக்கு அனுப்பினர்.[1]

கல்கி அலுவலகத்தில் திரு. பகீரதன் பொறுப்பில், அஸ்திக் கலசம் ஓராண்டுக்கு இருந்து வந்தது. ஒவ்வொருநாளும் கலசத்துக்கு முன்னல், வழிபாடு நடத்தப்பெற்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆசிரியர் திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் அந்தக் கலசம் இருந்த இடத்தில் 'ராம்துன்' பஜனை நடத்தப்பெற்றது.

பல்கலைக்கழகக் கட்டிடத்திற்கு எதிரில் 79 ஆண்டுகள் காந்திஜி வாழ்ந்ததைக் குறிக்கும் வகையில் 79 அடி உயரத்தில் ஒரு ஸ்தூபியை வைக்கவேண்டுமென்று 1949 ஜனவரி 30–இல் காந்தி நினைவாக வெளியிடப்பெற்ற கல்கி இதழில், கல்கி ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி எழுதினர். அதை ஓமந்தூரார் வரவேற்ருர். அதைச் செயல்படுத்துவதற்குமுன் பதவியிலிருந்து விலகினர்.

இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது ஸ்தூபித் திட்டத்தைக் கைவிட்டு கிண்டியில் காந்தி மண்டபம் அமைக்க ஆணை பிறப்பித்தார்.[2]

காந்தி மகானின் அஸ்தியைக் கடலில் கரைத்த ஓமந்தூரார் "பிற்காலத்தில் மகாத்மா நினைவாக ஒரு மண்டபம் கட்ட வேண்டும்" அப்போது அடித்தளத்தில் காந்தியடிகளின் அஸ்தியைப் போட்டு அதன்மீது மண்டபத்தை அமைக்க வேண்டும்" என்று விரும்பினர் ஓமந்தூரார். அதற்காக அஸ்தியின் ஒரு பகுதியைப் பேணியும் வைத்திருந்தார். அவ்வாறு சென்னை கிண்டியில் கட்டப்பெற்றுள்ள காந்தி மண்டபம் சில நூறுயிரம் ரூபாய் செலவிட்டு திரு. நா. மகாலிங்கம் அமைத்திருக்கும் மேற்கூரையுடன் இனிது காட்சிதருகிறது.

---

1 திரு. பகீரதன் அப்போது கல்கி இதழில் துணை ஆசிரியராக இருந்தார். இவர் தலைசிறந்த எழுத்தாளர்; 'சத்திய கங்கை' ஆசிரியர்; ஓமந்தூராரிடம் நிறைந்த ஈடுபாடு கொண்டவர். திரு. நா மகாலிங்கம் அவர்களின் நம்பிக் கைக்குப் பாத்திரமாகி, இராமலிங்கர் பணிமன்றத்தின் செயலாளராக சீரிய பணி புரிந்து வருகிருர்.

2. சந்தா—பொன்னியின் புதல்வர்

13—3—1948-இல் அதாவது காந்திஜி இறந்த ஆறு வாரங்களில் காந்திஜிக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவுவது குறித்து ஏற்பாடுகள் செய்ய வர்தாவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஜவஹர்லால் நேரு ராஜேந்திர பிரசாத் முதலிய பெருந் தலைவர்களும் எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்களும் அக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அக்கூட்டத்திற்கு, ஓமந்தூரார் திரு க. அருணாசலத்தையும் அழைத்துச் சென்றார். அதன் விளைவாக மதுரை திரு. ந. ம ரா சுப்பராமனை, அமைப்பாளராகக் கொண்ட தமிழ்நாடு காந்தி சங்கராலய நிதி தொடங்கப் பெற்றது. இந்த நிதியின் ஆதரவில் மதுரையில் பிற்காலத்தில் காந்தி மியூசியம் ஏற்பட்டது

''இந்தியா இரண்டு நாடுகளாகத் துண்டிக்கப்பட்டதன் காரணமாக, நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் தள்ளாட்டமடைந்துள்ளன. பொதுமக்களுக்கு மேலும் துன்பம் விளைவிக்கும் வழியில் இறங்கவேண்டாம் என்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.''

— ஓ. பி. ஆர்.

# 22

# வேலை நிறுத்தங்கள்

## அரசிதழ் பதிவு பெரு ஊழியர் வேலை நிறுத்தம்

ஓமந்தூரார் ஆட்சியின் இரண்டாம் ஆண்டை, வேலை நிறுத்த ஆண்டு என்று சொல்லுவது பொருந்தும். அந்த ஆண்டில் எத்தனையோ வேலைநிறுத்தங்கள் நடந்தன. அவற்றுள் முக்கியமானது, அரசிதழ் பதிவுபெரு ஊழியர் (என். ஜி. ஓ.) களின் வேலைநிறுத்தம்.

அரசிதழ் பதிவுபெரு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது என்பது அப்போதுதான் முதல் தடவையாக நடைபெற்றது. 200 ஆண்டுக்காலம் ஆங்கிலேயரின் அடக்கு முறைக்கு அடங்கி ஒடுங்கி, சுதந்திர இயக்கத்தை ஒடுக்க அயலவனுக்கு உதவிய ஒரு கூட்டம் நாடு உரிமைபெற்றதும் கிளர்ச்சி செய்யத் துணிந்தது. அதற்கு முந்தின ஆண்டில்தான் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டு, மூன்றரைக் கோடி ரூபாய் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.

அரசிதழ் பதிவுபெரு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவராக திரு. கே. ஜகதீச அய்யர் என்பவர் தீவிரமாக முயன்று வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்தார். அவருடனும், சங்கத்தின் ஏனைய தலைவர்களுடனும் ஓமந்தூரார் நிதானமாகப் பேசி, தமக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். சங்கத் தலைவர்கள் அதற்கு இணங்கவில்லை.[1]

வேலை நிறுத்தம் செய்யப் போவதாக, சங்கத்தார் அறிவித்த வுடனேயே அரசாங்கத் துறைகள் பலவற்றின் தலைவர்களின் மாநாடு கூட்டி, பைல்களை வாங்கி வைத்துக் கொள்ளும்படி சொன்னார்.[2]

ஓ. பி. ஆர். கொடுக்க முன்வந்த சம்பள உயர்வு போதாது என்று அவரிடம் சிலர் கூறினர்- "ஆம், நாள்தோறும் 4 வேளை காப்பி குடித்தால், எவ்வளவுதான் சம்பளம் உயர்த்தினாலும் போதாதுதான்" என்றார் முதல்வர்.[3]

அரசிதழ் பதிவு பெரு ஊழியர்களின் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் ஐ. சி. எஸ். அலுவலர் ஒருவர் கலந்துகொண்டு, "விடாதீர்கள். வேலை நிறுத்தம் செய்யுங்கள்" என்று பேசி அவர்களைத் தூண்டிவிட்டார் ஓ. பி. ஆரிடம் ஈடுபாடு நிறைந்த ஓர் இளைஞன் அவர் பேசியதை ஒரு வார்த்தை கூட விடாமல் சுருக்கெழுத்தில் எழுதி டைப் அடித்து ஓ. பி. ஆரிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டான்.

உடனே முதலமைச்சர் அந்த ஐ. சி. எஸ். காரரை வரச் சொன்னார் "நீங்கள் ஒரு ஐ. சி. எஸ் அதிகாரி. என். ஜி. ஓ. க்கள் கூட்டத்தில் நீங்கள் பேசக்கூடாது என்ற விதி, சட்ட நுணுக்கம் உங்களுக்குத் தெரியாதா?"

"நான் சும்மா போயிருந்தேன்........... ஒன்றுமே பேசலீங்க............"

---

1. தகவல் : ஓய்வுபெற்ற என். ஜி. ஓ. திரு புத்தனேரி சுப்பிரமணியம்

2. " திரு. எஸ். கே. லெட்சுமிநாராயண ரெட்டியார், சிறுவந்தாடு.

3. தகவல் : ஜஸ்டிஸ் அழகிரிசாமி.

"என்ன ஐயா, ஐ. சி. எஸ். அதிகாரி பேசக்கூடாது. மீறிப் பேசினுல் நான் இன்னதுதான் பேசினேன் என்று தைரியமாக ஒப்புக் கொள்ளவேண்டும். இது என்ன பேடிமாதிரி" என்று சொல்லி டைப்பு அடித்த அவருடைய பேச்சை அவர்மீது வீசினுர், ஓமந்தூரார்.

முதல் 4, 5 வரிகளை மட்டும் படித்துப் பார்த்துவிட்டு எஞ்சியதைப் படிக்காமல் சாஷ்டங்கமாக ஓ. பி. ஆர் முன் விழுந்தார். ஐ. சி. எஸ் அதிகாரி.[1]

இரண்டு ஆண்டுகளுக்குள் வேலையிலிருந்து ஓய்வுபெறப் போகிறவர்கள் எத்தனைபேர் என்று உடனே ஓ. பி. ஆர். புள்ளி விவரம் எடுத்தார். மொத்த ஊழியர்களில் மூன்றில் இரு பங்கினர் ஓய்வு பெறப் போகிறவர்கள் என்று தெரிந்தது. அவர்களுக்குப் பதில் வேறு ஆட்களை நியமிப்பதாக அறிவித்து, வேலையில் சேர விரும்புபவர்கள் மனுச்செய்யலாம் என்று அறிவித்தார். 40, 000 பேரிடமிருந்து மனு வந்தது. இத் தகவல் வெளியான 24 மணி நேரத்தில், பெரும்பாலோர் வேலைநிறுத்தத்திலிருந்து விலகிக் கொண்டு அலுவலகங்களுக்கு விரைந்தனர்.[2]

வட்ட அலுவலகங்களில் அவசரமான வேலைகளைக் கவனிக்கும்படி கிராமக் கர்ணங்களை ஓ. பி. ஆர். கேட்டுக் கொண்டார்.[3]

வகுப்புவாதக் கண்ணேட்டத்தோடு ஓமந்தூரார் அமைச்சரவைக்குத் தொந்தரவு கொடுக்கவே திரு. ஜெகதீச அய்யர் வேலைநிறுத்தத்தை நீடிக்கிருர் என்ற தகவல் பரவியதும், வேலை நிறுத்தம் பிசுபிசுத்தது. ஊழியர்கள் மளமளவென்று வேலைக்குத் திரும்பினர். வேறு வழியின்றி, திரு. ஜெகதீச அய்யர் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

ஓமந்தூரார் இவ்வாறு கண்டிப்பாக நடந்து கொண்டதால், அடுத்த இருபது ஆண்டுகளுக்கு நமது மாகாணத்தில் அரசிதழ் பதிவுபெரு ஊழியர் வேலை நிறுத்தம் என்ற பேச்சே எழவில்லை.

---

1. தகவல்: டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம்

2. தகவல்: சிறுவந்தாடு லெட்சுமிநாராயண ரெட்டியார்

8 தகவல்: முத்துலிங்க ரெட்டியார்

குமாரசாமி ராஜாவும், இராஜாஜியும், காமராஜரும் அமைதியாக அரசாங்கஇயந்திரத்தை நடத்திச் செல்ல முடிந்தது.

## அரசாங்க பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

இந்த வேலைநிறுத்தத்தின் போது, ஓமந்தூரார் இராணுவ லாரிகளை வரவழைத்து ஓட்டி, மக்களுக்கு இடையூறு இல்லாமல் செய்தார்.

வேலைநிறுத்தம் நான்கு நாட்களில் முறியடிக்கப்பட்டது.

## மாணவர் கிளர்ச்சிகள்

பல கல்லூரிகளில் மாணவர் வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. கல்லூரிகளின் நிர்வாகத்தினருக்கு எல்லா வகையிலும் ஓ. பி. ஆர். ஆதரவு நல்கினார்.[1]

## சூளை மில் நிறுத்தம்

சென்னை–சூளையில் ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் நடைபெற்றது. தொழிலாளர் தலைவர்களில் ஒருவரான திரு. வி. க., ஓ. பி. ஆரின் பெருமதிப்புக்கு உரியவர். அவரிடம் பேசிப் பார்த்தார். வேலைநிறுத்தத்தை அவர் கைவிட ஒப்புக்கொள்ளவில்லை. திரு. வி. க. வைச் சிறையில் வைக்காமலும் தொழிலாளர் தலைவர்களான மற்றவர்கள் அவருடன் தொடர்புகொள்ள முடியாமலும் தந்திரமாக ஓ. பி. ஆர். நிலைமையைச் சமாளித்தார்.[2]

## கோவை ஆலைத்தொழிலாளர் போராட்டம்

கோவையில் பஞ்சாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் நடைபெற்றது. தொழிலாளர் தலைவர்களான (புதுச்சேரி) திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் முதலியவர்களுடன் பேசி, வேலை நிறுத்தத்தை ஓ. பி. ஆர். முடிவுக்குக் கொண்டு வந்தார்.[3]

---

1. தகவல் : திரு. கோபால ரெட்டி
2. தகவல்: டாக்டர் ப. நடராசன்
3. தகவல்: திரு. எஸ். ஆர். எஸ்.

ஆலைத் தொழிலாளர் தலைவராகவும் தேசியவாதியாகவும் இருந்த திரு. என். ஜி. இராமசாமி 1942 போராட்டத்தில் கலந்து கொண்டு சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டதும்இறந்தார். அவருடைய குடும்பத்துக்கு உதவி வழங்கவும் ஓ. பி. ஆர். ஆவன செய்தார்.[1]

## தபால் தந்தி ஊழியர் வேலைநிறுத்தம்

தபால் தந்தி ஊழியர் வேலைநிறுத்தம் செய்தனர். உடனே தந்திக் கம்பிகளை யாரும் அறுத்துவிடாமல் பார்த்துக் கொள்ளும் படி, கிராம அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். காங்கிரஸ்காரர் களும் பொதுநலத்தில் ஆர்வமுள்ள மற்றவர்களும் அஞ்சலகங் களில் குவிந்துகிடக்கும் கடிதங்களை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் படி வானொலியில் உரை நிகழ்த்தி ஓ. பி. ஆர். கேட்டுக்கொண்டார்.

## போலீசார் வேலைநிறுத்தம்

போலீசார் வேலைநிறுத்தம் செய்தனர். ரிசர்வு போலீசுப் படையைப் பயன்படுத்தி ஓமந்தூரார் நிலைமையைத் திறமையாகச் சமாளித்தார்.

## முடிவுரை

இவ்வாறு பல பிரச்சினைகள் தோன்றியபோதும் இந்திய அரசை எதிர்பாராமலும் அவர்களுடைய தலையீட்டைக் கோராம லும் ஓமந்தூரார் தன் கடமைகளைச் சரிவரச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. ஆதாரம்: அரசாங்க ஆணை, 1791

"அறிவும் அருளும் பெருகுமாயின் பலமுடைய மனிதர்கள் பண்பு உடையவர்கள் ஆவார்கள். ஆணவம் முதலிய மலங்கள் அகன்று மக்கள் இந்த மண்ணுலகில் வானவர்போல் வாழ்வர்."

— வள்ளலார்.

# 23

# ஊழல் ஒழிப்பு

வில்லுக்கு விதுரன், சொல்லுக்கு அரிச்சந்திரன் எனின் நேர்மைக்கு ஓ. பி. ஆர். ரெட்டியார் என்று சொல்லலாம். அவருடைய பரம்பரைப் பகைவன்கூட அவர்மீது ஊழல் குற்றச் சாட்டைக் கூறியதில்லை. அவர் அவ்வளவு நாணயமாகவும் எளிமையாகவும் வாழ்ந்துவந்தார்.

ஒரு நீதிபதி நடுநிலைமையாக நடந்துகொள்வது மட்டும் முக்கியம் அன்று. அவர் நடுநிலைமையாக நடந்துகொள்ளுகிருர் என்று குற்றவாளியின் மனத்தில்கூட நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதாக ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. இந்தப் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஓமந்தூரார்.

ஓமந்தூராரை முதல் தடவையாகப் பார்த்த அளவிலேயே, இவர் நேர்மையானவர் என்ற எண்ணம் அனைவருக்கும் தோன்றும்.

ஓமந்தூராருடைய நேர்மை அளவுக்கு மீறியதாகவும் பிறருடைய நேர்மையைப் புண்படுத்துவதாகவும் இருந்ததாகச் சிலர் கருதுகின்றனர்.[1]

ஒவ்வொருவரும் தங்கள் திறமையால், முறையாக, படிப் படியாக யாருடைய தயவும் இல்லாமல் முன்னேற வேண்டும் என்பது ஓ. பி. ஆரின் கொள்கையாக இருந்தது.[2]

## பைல்கள்

அரசாங்கபைல்கள்மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் ஓ. பி. ஆர். அக்கறை காட்டினார். சுற்றுப் பயணம், பேட்டி, சட்டசபைக் கூட்டம் ஆகியவை குறைக்கப் பட்டால், அரசாங்க இயந்திரம் நன்றாகச் செயல்படும் என்று கருதினார்.

ஒரு துணைச் செயலாளர், ஒரு கோப்பின்மீது நடவடிக்கை எடுக்காமல் சுணக்கிவந்தார். அவரைக் கூப்பிட்டார். ஓ. பி. ஆர். "உன்னிடம் இந்தக் கோப்பு எவ்வளவு நாளாக இருக்கிறது?"

"ஒரு மாதம்"

"சரி, இன்னும் எவ்வளவு நாளாகும்?" என்று கேட்டார் ஓ. பி. ஆர்."

"செக்ரடரியிடம் கையெழுத்து வாங்கி நாளைக்கு முதலமைச்சரிடம்......" என்றார் துணைச் செயலர்.

மறுநாளும் கோப்பு வரவில்லை. ஓ. பி. ஆர். மீண்டும் துணைச் செயலாளரை வரவழைத்தார். "எங்கே ஐயா கோப்பு?" உனக்கு 24 மணிநேரம் கொடுக்கிறேன். கோப்பு இங்கு வர வேண்டும் அல்லது நாளை இதே நேரம் உன் வேலைக்குச் சீட்டு கிழிந்துவிடும்." என்றார்.

சீட்டுக் கிழிவதற்குக் குறிப்பிட்ட கெடுவுக்குமுன் கோப்பு வந்து விட்டது.[3]

---

1. திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை மற்றும் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டியார்.
2. ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டியார்
3. தகவல்: டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம்

உனக்கும் 'பெப்பெபே...

தம் கட்சிக்காரர்கள் சிபாரிசு செய்கிறார்கள் என்பதற்காகவோ, தமக்கு ஈடுபாடுள்ள கொள்கையைச் செயல்படுத்தினார்கள் என்பதற்காகவோ ஓ. பி. ஆர். ஊழலான பேர்வழிகளுக்குத் தஞ்சம் கொடுக்கமாட்டார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஹரிஜனங்கள் நுழைவதற்கு திரு. ஏ. வைத்தியநாதய்யர் ஏற்பாடு செய்தபோது, அந்த முயற்சிக்கு அங்கிருந்த நிர்வாக அதிகாரி ஆதரவாக இருந்தார். அதைக் காரணம் காட்டி, தமக்கு மீண்டும் பதவி நீடிப்பு வேண்டும் என்று ஓமந்தூராரிடம் வற்புறுத்தினார். அவர் பெயரில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டி, தொடர்ந்து வேலைகொடுக்க மறுத்து அவர் ஓய்வுபெறும்படி ஓ. பி. ஆர். ஆணையிட்டார்.[1]

சிறு தவறுகளையும் ஓமந்தூரார் சகிக்கமாட்டார். லஞ்சம் வாங்கிய அதிகாரிகளை அவர் எளிதில் விடமாட்டார். ஒருவர் காந்தியடிகளுக்கே முறையிட்டார். உடனே பைலை காந்திக்கு அனுப்பினார். காந்தி 'நீ செய்தது சரி' என்று பதில் எழுதினார்.[2]

## "எது ஊழல்?" ...அண்ணன் தம்பி வாக்குவாதம்

பண்ணைகளில் உபயோகிக்க அரசாங்கத்து வேளாண்மைத் துறையினர் எண்ணெய்யில் இயங்கும் இயந்திரங்களை (ஆயில் எஞ்சின்கள்) வாடகைக்கு கொடுக்கிறது. 1947-48-இல் பலர் கேட்டதற்கு ஏற்றவாறு வழங்குவதற்கு அரசினரிடம் அவ்வளவு இயந்திரங்கள் இல்லை. எனவே யார்யார் கேட்கிறார்களோ அவர்களுடைய தேவை பதிவு செய்யப்பட்டு, வரிசை முறையில் கொடுக்கப்பட்டது.

ஓமந்தூரார் தம்பி லெட்சுமிநாராயண ரெட்டியார், நேரே வேளாண்மைத் துறை இயக்குநரிடம் போய், தன் வயலுக்கு அந்த இயந்திரம் தேவை என்று சொன்னார். இன்ன தேதியில் வாடகை கொடுத்து கடலூரில் இயந்திரத்தை எடுத்துச் செல்லும்படி வேளாண்மைத் துறை இயக்குநர் ஆணையிட்டார்!

---

1. தகவல்: கல்லுப்பட்டி திரு. குருசாமி
2. ,, ,,

தகவல் ஓ. பி. ஆருக்கு எட்டியது. தம்பியைக் கூப்பிட்டார். "நீ செய்தது சரியில்லை. என் பெயரைக் கெடுக்கிறாய்? இது ஊழல்" என்றார்.

"ஊழல் என்ன, அண்ணன்? வாடகை கொடுத்து இயந்திரம் பெறுகிறேன். நான் அவருக்கு லஞ்சம் எதுவும் கொடுக்கவில்லை: வேறு யார் பெயராலும் மனு கொடுக்கவில்லை. எல்லாம் முறைப்படி நடந்துவந்திருக்கிறது" என்றார் தம்பி.

"500 பேர் காத்திருக்கும்போது, நீ முதலமைச்சர் தம்பி என்ற முறையில் அவரைப் பார்த்து முன் உரிமையாகப் பெற்றது ஒழுங்கீனம்–ஊழல்–அதிகார துஷ்பிரயோகம்" என்றார் அண்ணன்.

தம்பி போன பிறகு வேளாண்மைத்துறை இயக்குநரை முதலமைச்சர் வரவழைத்து மிகவும் கடிந்துகொண்டார். "நீர் போட்ட ஆணையை உடனே ரத்துச் செய்து எனக்கு அதன் நகல் வந்து சேரவேண்டும்" என்றார்.[1]

## என் பெயரைக் கெடுக்கவா, இங்கு வந்தாய்?

ஓமந்தூராரின் உறவினரும் இளமை முதல் இவருடன் தொடர்ந்து தொடர்புகொண்டவருமான ரெட்டணை சுப்பராம ரெட்டியார் பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்:[2]

> "இவர் முதலமைச்சராக இருந்த போது நான் இவர் வீட்டுக்குப் போயிருந்தேன். பகல் 12 மணி. சமையற்காரன் சொன்னான்–சர்க்கரை தீர்ந்துவிட்டது. இம்மியும் இல்லை என்று. உடனே சர்க்கரை அனுப்பும் கடைக்கு போன் பண்ணினேன். அவன் சில நிமிடங்களில் லாரியில் ஒரு மூட்டை சர்க்கரையைக் கொண்டுவந்து போட்டான். பணமும் கேட்கவில்லை.
>
> பகல் 1-30 மணிக்கு ஓ. பி. ஆர். தலைமைச் செயலகத்திலிருந்து கூவம் மாளிகைக்கு வந்தார். ஸ்டோர் ரூமுக்குள் வேவு பார்த்தார். என்ன மூட்டை புதிதாக

1. தகவல்: டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம்

2. இவர் 1938 முதல் 1946 வரை ஓ. பி. ஆருடன் இருந்தார். 1952 முதல் சில ஆண்டுகள் வடலூரில் விவசாய வேலைகளுக்கு ஓ. பி. ஆருக்கு உதவியாக இருந்து அவரிடம் பரிசும் பாராட்டும் பெற்றார்.

இருக்கிறது என்று கேட்டு, வாக்கிங் ஸ்டிக்கால் மூட்டையைக் குத்திப் பார்த்து என்ன என்று கேட்டார். நடந்ததைச் சொன்னேன். உடனே என்னைக் கடிந்து கொண்டார். கடைக்காரனுடன் போனில் பேசினார். 'என் கோட்டாவுக்கு ரேஷன் கார்டில் உள்ள 15 வீசை சர்க்கரையையும் பில்லையும் அனுப்பிப் பணம் வாங்கிக் கொண்டு, மூட்டையைத் தூக்கி போ'' என்றார்.

அன்றைக்கே என்னையும் ஊருக்கு அனுப்பி விட்டார். 'நீ இங்கு இருந்தால் என் பெயரைக் கெடுத்து விடுவாய்' என்று சொன்னார்''

## பொதுப் பணித்துறை

பொதுப்பணித் துறையினர்தான் அரசாங்கத்தில் லஞ்சத்தையும் ஊழலையும் வளர்ப்பவர்கள் என்ற முடிவு ஓமந்தூரார் உள்ளத்தில் உறுதியாக இருந்தது. இதை அவர் மூடி மறைக்கவில்லை. தலைமை எஞ்சினீயரிடம் பேசும்போதும் 'நீங்கள் எல்லோரும் ஊழல் பேர்வழிகள்' என்று அவர் சொன்னார். இதனால் அவர்கள் முதலமைச்சரைச் சந்திப்பதையே தர்மசங்கடமான கடமையாகக் கருதினர்.

## சிபாரிசா? எட்டிப்போ!

ஓமந்தூரார், நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதில் அக்கறை காட்டினார். அந்தத் துறையில் நிபுணராக இருந்த ஓய்வுபெற்ற தலைமை எஞ்சினீயர் திரு. எல். வெங்கடகிருஷ்ண அய்யரிடம் மிகவும் மதிப்புவைத்திருந்தார். அடிக்கடி அவருடைய ஆலோசனையைக் கேட்டார். அவரை தம்முடைய இனிய நண்பராகக் கருதினார். எனினும் அவர் மகனுக்குப் பொறியியல் கல்லூரியில் இடம் கொடுக்க, தாம் சிபாரிசு செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்.[1]

## தலைமைச் செயலர்மீது நடவடிக்கை

அமெரிக்காவிலிருந்து பொதுப்பணித் துறைக்குச் சில இயந்திரங்களை வரவழைப்பதில் திரு. எஸ். வி. ராமமூர்த்தி

---

1. தகவல்: ஜஸ்டிஸ் அழகிரிசாமி

பேரில் பிரகாசம் ஆட்சியில் புகார் இருந்த விவரம் தெரிந்தது.[1] உடனே ஓ. பி. ஆர். அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

"இவ்வளவு பெரிய அதிகாரிகளின் விஷயத்தில் சற்று நிதானமாக நடந்துகொள்ளவேண்டும்" என்று ஜவஹர்லால் நேரு ஓமந்தூராரிடம் தொலைபேசியில் சொன்னார்.

"இதைப்பற்றி நான் உங்களிடம் பேசத் தயாராக இல்லை" என்று சொல்லி தொலைபேசிக் கருவியை ஓ. பி. ஆர். தொங்கப் போட்டுவிட்டாராம்.[2]

## அரசு ஊழியர் நியமனம்

ஓமந்தூரார், தம் அதிகாரத்தில் மற்றவர்களைத் தலையிட விடமாட்டார். பிறர் அதிகாரங்களிலும் இவர் தலையிட மாட்டார்.

திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை இந்நூலாசிரியரிடம் பின்வருமாறு கூறினார்:

"ஓ. பி. ஆரின் ஆட்சியில் முதல் ஆண்டில் நான் சென்னை அரசாங்கத்து ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆணைக் கழகத்தின் உறுப்பினராகவும், இரண்டாவது ஆண்டில் தலைவராகவும் இருந்தேன்: எந்த ஒரு நியமனத்தைக் குறித்தும் அவர் என்னிடம் நேராகவோ, மறைமுகமாகவோ பேசியதில்லை." (பேட்டி 26—12—1977)

## ஒழுங்கு நடவடிக்கை நடுவர் குழு

அரசு ஊழியர்மீது நடவடிக்கை எடுக்க, டிஸ்சிபிளனரி டிரிபியூனல் என்ற அமைப்பை ஓ. பி. ஆர். தான் ஏற்படுத்தினார். லஞ்ச ஊழல் ஒழிப்புக் குழு ஒன்றையும் இவர் ஏற்படுத்தினார். இக்குழுவில் ஒரே உறுப்பினராக திரு. டி. அனந்தாச்சாரி என்பவரை நியமித்தார்

---

1. தகவல்: சுவாமி சித்பவானந்தா
2. தகவல்; திரு. சடகோபன்

"ஓ. பி. ஆரைப் போல ஒரு சத்தியசீலரை, அவதார புருஷனை நான் இன்றுவரை பார்த்ததில்லை" என்று இவர் கூறுகிறார்.[1]

## அயோக்கியத்தனத்திற்கு முற்றுப்புள்ளி

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஆகாசம்பட்டுப் பகுதியில் சாலைபோடும் பணி தம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று ஒரு செல்வர் குறைப்பட்டார். சரளைக் கற்கள் முதலியவற்றைக் காலிகளைக் கொண்டு அள்ளிச் சென்று சாலை போடுவதற்கு இடையூறு செய்தார்.

இதை அறிந்த ஓ. பி. ஆர். அவரை அழைத்து "உன் அயோக்கியத்தனத்தை நிறுத்துகிறாயா அல்லது உன்னைக் கைது செய்து வழக்குத் தொடுத்து உன்னுடைய மரியாதையை நான் கெடுக்கவேண்டும் என்று விரும்புகிறாயா?" என்று கேட்டார். அந்த அளவில் அவர் கொட்டம் அடங்கியது.[2]

## நீதிபதியைப் பதவியில் நீடிக்க மறுப்பு

ஒருவர் தற்காலிக நீதிபதியாக இருந்துவந்தார். அப்பதவி வகிக்குமுன் இன்சால்வென்ட் எஸ்டேட்டுகளின் ரிசீவர், அபிஷியல் அசைனி என்ற பதவிகளில் இருந்தார். அப்பதவிகளை வகித்த போது அவர் லஞ்சம் வாங்கியதாகத் தெரிந்தது. எனவே இவருடைய நீதிபதிப் பதவியை உறுதிப்படுத்தக் கூடாது என்று ஓமந்தூரார் இந்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டார்.[3]

---

1. திரு. டி. அனந்தாச்சாரிக்கு வயது 97. இவர் 1946 வரை சென்னை அரசாங்கத்தின் ஊழியர் தேர்வு ஆணைக் கழகத்தின் உறுப்பினராக இருந்தார். ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடன் இணைந்த பிறகு, அங்குள்ள நிருவாகத்தை சீர் செய்ய ஒரு தனி அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று சர்தார் வல்லபாய் பட்டேல் விரும்பினார். ஓமந்தூராரைக் கலந்து ஆலோசித்து, சர்தார் இவரை நியமித்தார். திரு. அனந்தாச்சாரி 26—11—1977 இல் இந்நூலாசிரியருக்குப் பேட்டி கொடுத்தார்.
2. தகவல்: ஓய்வுபெற்ற எஞ்சினீயர் திரு. இராமசாமி ரெட்டியார்.
3. தகவல்: ஜஸ்டிஸ் அழகிரிசாமி

## வீணான நாட்களுக்கு வாடகை

ஓ. பி. ஆரின் தம்பி லெட்சுமிநாராயண ரெட்டியார், சென்னை அரசாங்கத்தின் வேளாண்மைத் துறையினரிடமிருந்து பவர் ட்ரில்லை வரவழைத்து, கிணறு தோண்டத் துளை போட்டார். தண்ணீர் வரவில்லை. வேறு ஓர் இடத்தில் போட்டுப் பார்க்கலாம் என்று வீணாக அந்த இயந்திரத்தை நிறுத்தி வைத்திருந்தார். இதை அறிந்த ஓமந்தூரார், உடனே இயந்திரங்களை அங்கிருந்து அகற்றவும், பயன்படுத்தாமல் இருந்த நாட்களுக்கும் வாடகை வசூலிக்கவும் ஆணையிட்டார்.[1]

## வேண்டுதல் வேண்டாமையிலான்

சுப்பராயன் என்பவர் ரயில்வே போலீஸ் துறையில் டி. ஐ. ஜி யாக இருந்தார். நேர்மையும் திறமையும் மிக்கவராக விளங்கினர். அவர் ஓ. பி. ஆரின் நண்பராகவும் திகழ்ந்தார். எனினும் அரசாங்கத்தின் ஆணையை மீறி நடந்ததாகத் தெரிந்தது; ஓ. பி. ஆர். அவருடைய பதவியைக் குறைத்தார். திரு. சுப்பராயன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தும், பயனில்லாமல் போயிற்று.[2]

## சத்தியப்பிரமாணம்

சட்டசபை உறுப்பினர் ஒருவர்மீது வழக்குத் தொடரும்படி ஓ. பி. ஆர். ஆணையிட்டிருந்தார் வழக்கைத் திருப்பிப் பெறும்படி முதல் அமைச்சரிடம் மாகாணக் காங்கிரஸ் தலைவர் வேண்டிக் கொண்டார். ஓமந்தூரார் இணங்கவில்லை

“பதவி ஏற்றபோது சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டேன்- நீங்களும் வந்திருந்தீர்கள். இப்போது நீங்கள் சொல்லுகிறபடி நான் செய்தால் அந்தச் சத்தியத்திற்கு என்ன மரியாதை?” என்று கேட்டாராம்.[3]

---

1. தகவல்: திரு. முத்துலிங்க ரெட்டியார்

2. தகவல்: திரு. சடகோபன்

3. தகவல்: - ஷ -

அரசாங்க நிருவாகத்தில் தவருன முறையில் குறுக்கிட்டனர் என்று திருநெல்வேலி மாவட்டத்தில் சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர் நான்கு பேர்மீது விசாரணை செய்யும்படி ஓ. பி. ஆர். உத்தரவிட்டார்.[1]

## சலுகைக்கு இடமில்லை

எழுத்தாளர் திரு. சாவி ஒரு நூலில் பின்வருமாறு எழுதி யிருக்கிருர்:

> "ஆந்திராவைச் சேர்ந்த சஞ்சீவ ரெட்டி போன்ற முக்கியமான காங்கிரஸ்காரர்கள் ஓமந்தூராரை ஆதரித் தார்கள். ஆனுலும் ரெட்டியார் ஆட்சியின்மீது வேறு சில காங்கிரஸ்காரர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. வெறுப்புக்குக் காரணம் ரெட்டியார் மிகக்கண்டிப்பானவர். அவரிடம் போய் ஒருவரும் எவ்விதமான சலுகையையும் பெற்றுவிட முடியாது. எனவே ரெட்டியார்மீது சில காங்கிரஸ்காரர்களுக்கு கோபம் இருந்ததில் வியப்பில்லை.

---

1. தகவல்: திரு. ஏ. பி. சி. வீரபாகு, தூத்துக்குடி

*"அந்த (இராமயணத்து) இராமர் இலங்கைக்குச் செல்ல, கடலைக் கடக்க உதவிய அனுமன் போல இந்த இராமர் (ஓ. பி. ஆர்.) தில்லிக்குச் செல்ல, ஹைதராபாத் சமஸ்தானத்தைக் கடக்க இந்த அனுமான் உதவட்டும்"*

— ஓ. பி. ஆர்.

# 24

# அனுமானின் கதை

## சென்னை தில்லி விமானப் பயணம்

இந்தியா சுதந்திரம் பெறுவதற்குமுன், சென்னை-ஹைதரா பாத்- நாகபுரி தில்லி விமானப் போக்குவரத்து, டெக்கான் ஏர் வேஸ் என்ற கம்பெனியாரால் நடத்தப்பட்டு வந்தது. அந்தக் கம்பெனி, ஹைதராபாத் சமஸ்தான அரசாங்கத்திற்குச் சொந்த மானது.

1948-இல் ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவுக்கு எதிரான பல நடவடிக்கைகளை எடுத்தது. எனவே சென்னை யிலிருந்து நேரடியாக தில்லிக்கு விமானப்பயண வசதி இருக்க வேண்டும் என்று ஓ. பி. ஆர். கருதினார். சென்னை அரசாங்கத்துக்கு ஒரு விமானம் வாங்குவது நல்லது என்று எண்ணினார். இது தொடர்பாக, காப்டன் சுந்தரம் என்பவரோடு ஓமந்தூரார் தொடர்பு கொண்டார்.

## காப்டன் சுந்தரம்

காப்டன் சுந்தரம் 1936 முதல் விமானம் ஓட்டுபவராக 36 ஆண்டுகள் பணிபுரிந்து 1972-இல் ஓய்வுபெற்ருர்.

இவர் பெங்களூரில் விமானம் ஓட்டப் பயிலும் பள்ளியில் பயிற்சியாளராக இருந்து, 1946 முதல் 1952 வரை மைசூர் அரசாங்கத்தின் விமானப் போக்குவரத்து இயக்குநராகச் செயல் பட்டார். சர்தார் வல்லபாய்ப்பட்டேலின் நம்பிக்கைக்கும் நட்புக் கும் உரிய விமானியாக விளங்கினுர். இவருடைய மனைவி திருமதி உஷா சுந்தரம் என்பவரும் விமானம் ஓட்ட வல்லவர். கணவன் விமானம் ஓட்டும்போது, வானெலிக் கருவியை இயக்கி, விமான நிலையங்களுக்குச் செய்தி அனுப்பியும் அங்கிருந்துசெய்தி வாங்கி யும் பணிபுரிபவர். (ரேடியோ ஆபீசர்).[1]

## ஓ. பி. ஆரும் சுந்தரமும்

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் சீடரான ஓமந்தூராருக்கு விமான ஓட்டிய இவர், யார்? தெருவில் நசுக்கப்பட்ட நாய்கள், குறும்புக்காரர்களால் துன்புறுத் தப்பட்ட பூனைகள், அடிப்பட்ட ஆடுகள், காயப்படுத் தப்பட்ட மாடுகள் ஆகியவற்றுக்கு வாழ்வளிக்கும் கருணைமிக்க வராகவும் உள்ளவரான திரு. சுந்தரம். திரு. சுந்தரம் இப்பணி களுக்காக சென்னை அடையாற்றில் புளூ கிராஸ் ஆப் இந்தியா என்ற அமைப்பை நடத்தி வருகிருர்.

## விமானம் வாங்க ஏற்பாடு

அந்தக் காலத்தில் இந்தியாவில் விமானங்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. லண்டனில் விமானம் கிடைத்தால் வாங்க ஏற்பாடு செய்யும்படி ஓமந்தூரார், காப்டன் சுந்தரத்திடம் கூறி யிருந்தார்.

---

1. இக்கட்டுரையிலுள்ள தகவல்கள் திரு சுந்தரம் இந்நூலாசிரியருக்கு அளித்த பேட்டி, அவரிடம் உள்ள ஆதாரங்கள், 'ஹிந்து' நாளிதழில் வெளிவந்த செய்திகள், கட்டுரைகள், இந்நூல் ஆசிரியருக்கு வந்த கடிதங்கள் ஆகிய வற்றின் அடிப்படையில் எழுதப்பட்டன.

சுந்தரம் தம்பதிகள், சென்னை தியாகராய நகர், பசுலுல்லா சாலையில் வாழ்கின்றனர்.

காப்டன் சுந்தரம் டி ஹாவிலண்டு என்ற விமான உற்பத்தியாளர்களுக்குத் தகவல் கொடுத்தார்.

ஒரு நாள் இரவு 8 மணிக்கு காப்டன் சுந்தரத்துக்கு ஒரு தந்தி வந்தது. "மேன்மை தங்கிய ஆகா கான் ஒரு விமானத்துக்கு ஆர்டர் கொடுத்திருந்தார். அதைச் செய்து தயாராக வைத்திருக்கிறோம். ஆனால் அந்தக் கோடீசுவரர் இன்னும் வசதிகள் நிறைந்த விமானம் தேவை என்கிறார். ஆகையால் ஏற்கெனவே அவர் ஆர்டர் கொடுத்தபடி செய்யப்பட்ட விமானம் இப்போது விற்பனைக்குக் கிடைக்கும்" என்பது தந்தியின் வாசகம்.

இரவு 8–30க்கு பெங்களூரிலிருந்து காப்டன் சுந்தரம், சென்னை முதலமைச்சருடன் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு, தந்தியில் தெரிவிக்கப்பட்ட தகவலைச் சொன்னார். "மேற்கொண்டு ஆக வேண்டியதை செய்" (Go Ahead) என்றார் ஓமந்தூரார்.

மறு நாள், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. நிதி அமைச்சர் கோபால ரெட்டியின் எதிர்ப்பைப் புறக்கணித்து விமானம் வாங்குவதென்று அமைச்சரவை முடிவுசெய்தது.

விமானத்தின் விலை மூன்று லட்சம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

அநுமான் என்று அந்த விமானத்திற்குப் பெயரிடும்படி ஓமந்தூரார் காப்டன் சுந்தரத்துக்கு யோசனைகூறினார்.[1]

## அநுமானுக்கு முன்

அநுமான் விமானம் வாங்குவதற்குமுன், தில்லிக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டபோது, ஓ. பி. ஆர். பெங்களூருக்குத் தகவல் கொடுத்து, காப்டன் சுந்தரம் மூலம் விமானம் ஏற்பாடு செய்து சென்னைக்கு அதை வரவழைத்துக் கொண்டார்.

---

1. திரு. மகாலிங்கம், தாம் நடத்தும் ஏ. பி. டி. லாரி கம்பெனிக்கு இந்த இலச்சினையை வைத்துள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.

முதல் தடவையாக அவர் காப்டன் சுந்தரம் ஓட்டிய விமானத்தில் பயணம் செய்த போது, இருவருக்கும் மன ஒருமைப்பாடு ஏற்பட்டு விட்டது. சிறந்த முறையில் சான்றிதழ் ஒன்றையும் ஓமந்தூரார் வழங்கிவிட்டார் (பார்க்க போட்டோ)

மைசூர், திருவாங்கூர், கொச்சி ஆகிய சமஸ்தானங்களின் முதலமைச்சர்களும் ஓ. பி. ஆரைப் பின்பற்றி, தனி விமானங்களில் நேரே தில்லிக்குப் பறப்பது என்பதைப் பழக்கமாகக் கொண்டனர். 1948 மே மாதத்திற்குப் பிறகு எந்த இந்திய அரசியல்வாதியும் ஹைதராபாத் வழியாகப் பயணம் செய்யவில்லை.


அநுமான்


அநுமான், 'டவ்' என்ற விமானவகையைச் சேர்ந்தது. எட்டுப் பேரை ஏற்றிச் செல்லக்கூடியது. ஒரு மணிநேரத்தில் 180 மைல் தூரம் பறக்கக்கூடியது. ஒரு மணிநேரம் பறப்பதற்கு 28 காலன் (ஒரு காலன் என்பது 4·546 லிட்டருக்குச் சமம்) பெட்ரோல் மட்டுமே தேவைப்படும். பிரிட்டிஷ் விமானக் கம்பெனிகளும் ஐரோப்பாவில் பல நாடுகளின் விமானக் கம்பெனிகளும் இந்த வகை விமானங்களையே அப்போது பயன் படுத்தி வந்தன.

விமானத்தை உடனே சென்னைக்குக் கொண்டு வந்து சேர்க்க, காப்டன் சுந்தரம் லண்டனுக்குப் போக வேண்டும் என்று ஓ. பி. ஆர். விரும்பினார். காப்டன் சுந்தரம், மைசூர் அரசின் ஊழியராக இருந்ததால், முதலமைச்சர், திரு. கே. சி. ரெட்டியிடம் தகவலைச் சொல்லி இசைவு பெற்று லண்டனுக்குப் புறப் பட்டார்.

காப்டன் சுந்தரம் டி–ஹாவிலண்டு தொழிற் சாலைக்குப் போய்ச் சேர்ந்ததும், விமானத்தைச் சரிபார்த்து சென்னை அர சாங்கம் என்ற பெயரை விமானத்தின் இருபக்கங்களிலும் எழுத ஏற்பாடு செய்தார். சுதந்தர இந்திய அரசாங்கத்தின் கொடி, விமானத்தின் வலது இடது பக்கங்களிலும் இறக்கைகளின்மேல் கீழ்ப் பகுதிகளிலும் வரையப்பட்டது.

அநுமான் என்ற பெயர் விமானத்தின் மூக்கில் தீட்ட பட்டது. 1948-ஜூன் 4-ல் விமானம் விலைக்கு வாங்கப்பட்டது.





Mr Sundaram is one of the best pilots in our country. I had the opportunity of travelling in his plane to Delhi and back. May God give him strength and wisdom to serve our country

O. P. Ramaswamy Reddy

24/11/47

சென்னை மாநில அரசுக்கு ஓமந்தூரார் வாங்கிய 'அநுமான்' என்ற விமானமும், அந்த விமானத்தை ஓட்டிய விமானி திரு. சுந்தரத்துக்கு ஓமந்தூரார் வழங்கிய சான்றிதழும்.

விமானம் சென்னைக்கு வந்துசேர்ந்த மறுநாள் ஓமந்தூராரும் வேறு சில அமைச்சர்களும் அதைப் பார்வையிட்டு மகிழ்ச்சியடைந்தனர். விமானம் பெங்களூரில் வைத்துப் பேணப்பட வேண்டும் என்றும், தேவையான போது சென்னைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்றும் முடிவாயிற்று.

மாகாண அரசாங்கத்துக்குச் சொந்தமாக ஒரு விமானம் வாங்கப்பட்டிருப்பது மக்களுக்கு ஒரு பெருமையாக இருந்தது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சென்னைவாசிகள் அநுமானைப் பார்க்க, மீனம்பாக்கம் விமானநிலையத்துக்குச் சென்றனர்.

இந்த விமானத்தில் எட்டுப்பேர் தில்லிக்குப் போவதற்குப் பெட்ரோல் (100 காலன்) உள்பட மொத்தச் செலவு ரூ. 420/- தான் ஆகும் என்பது மிகவும் சிக்கனமான செலவு என்பதை அறிந்து அரசாங்க வட்டாரங்கள் திருப்தியடைந்தன.

## பின்தூங்கி முன்எழுந்த கதை

1948 ஜூலை 25 இல் காரைக்குடியில் மத்திய மின்சார இரசாயன ஆராய்ச்சிக்கூடத்தை, ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார்.

பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அன்று காலையில் விமானப்படை விமானத்தில் மீனம்பாக்கத்திலிருந்து செட்டிநாடு விமான நிலையத்திற்குப் புறப்பட்டார். முதலமைச்சர் ஓ. பி. ஆர். அவரை அன்புடன் வழியனுப்பினர்.

வழியனுப்பிய ஐந்து மணித்துளிகளில், அநுமான் விமானத்தில் புறப்பட்டு செட்டிநாடு விமான நிலையத்துக்குப் பறந்தார் ஓமந்தூரார். 280 மைல் தூரத்தை 75 நிமிஷங்களில் பறந்து, ஓமந்தூரார் செட்டிநாடு விமானநிலையத்தை அடைந்தார். அங்கு வந்து இறங்கிய பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு, தம்மை ஓமந்தூரார் வரவேற்றதைக் கண்டு வியப்படைந்து அநுமானின் வேகத்தைப் பாராட்டினர்.

## விமான விபத்து

1948 செப்டம்பர் 16-இல் ஒரு முக்கியமான கூட்டத்தில் கலந்து கொள்ள சென்னை முதலமைச்சர் ஓமந்தூராரும் மைசூர் முதலமைச்சர் திரு. கே. சி. ரெட்டியும், திருவாங்கூர்

முதலமைச்சர், கொச்சி முதலமைச்சர் ஆகியோரும் அநுமான் விமானத்தில் சென்னையிலிருந்து டில்லிக்குப் புறப்பட்டனர். அமைச்சர் டி. எஸ். எஸ். இராஜனும் சென்னை அரசாங்கத்தின் அலுவலர் இருவரும் ஏனைய பயணிகள் ஆவர்.

காப்டன் சுந்தரம் அன்று விமானம் ஓட்டவில்லை. பல்லாண்டுகள் சென்னை–டில்லி விமானங்களை ஓட்டி அந்தப் பாதையை நன்கு அறிந்த காப்டன் ஹெல்லட் அன்று அநுமானை ஓட்டிச் சென்றார்.

இரவு 8 மணிக்கு, காப்டன் சுந்தரத்துக்கு டில்லியிலிருந்து வானொலிச் செய்தி வந்தது. 'ஆக்ராவிலிருந்து 20 மைல் தொலைவில் அநுமான் விமானம் இறங்கிவிட்டது. பயணம் செய்தவர்கள், விமானிகள் ஆகியோர் நிலைபற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை' என்பது செய்தி.

இரவு உணவு அருந்தத் தயாராகிக் கொண்டிருந்த காப்டன் சுந்தரத்தின் பசியெல்லாம் பறந்துவிட்டது. பறந்து சென்றவர்களின் நிலை, அழகான அநுமான் விமானத்தின் காட்சி ஆகியவை அவர் மனத்தை ஆட்டின.

இரவு 11 மணிக்கு தொலைபேசி '...ரிங்...ரிங்...ரிங்...' என்று ஒலித்தது. "பயணம் செய்தவர்களும் விமானிகளும் பத்திரமாக இருக்கிறார்கள்" என்று அறிந்து பெருமூச்சு விட்டார் காப்டன் சுந்தரம்.

மறுநாள் செப்டம்பர் 17 – அதிகாலையில் காப்டன் சுந்தரம் பெங்களூரிலிருந்து பறந்து ஐந்துமணி நேரத்தில் ஆக்ராவுக்குப் போய்ச் சேர்ந்தார்.

'கெரலி' என்ற சின்னஞ்சிறு இரயில் நிலையத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் ஓர் இடத்தில் அநுமான் இறங்கி விட்டது. இரயில் நிலையத்திற்கும் அந்த இடத்திற்கும் இடையே ஒரு காட்டாறு ஓடிற்று, சேரும் சகதியும் நிறைந்திருந்தது.

காப்டன் சுந்தரம் ஆக்ராவில் பரத்பூர் மஹாராஜாவின் அரண்மனைக்குச் சென்று அவர்களுடைய ஜீப்பில் அநுமான் நின்ற இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

விமானத்திற்கு ஒரு பழுதும் ஏற்படவில்லை என்று அறிந்து சுந்தரம் மகிழ்ந்தார்.

நாகபுரியைத் தாண்டியபோது, விமானம் எந்த இடத்தில் இருந்தது என்று தெரியாமல், டில்லி விமான நிலையத்திலிருந்து தகவல் பெறும்படி காப்டன் ஹெல்லட் தன்னுடைய வானொலி அதிகாரியைக் கேட்டிருந்தார். விமானம் அப்போது 2,000 அடி உயரத்தில்மட்டுமே சென்றுகொண்டிருந்ததால், வானொலித் தகவல்களைப் பெற முடியவில்லை. வானொலி அலுவலர் டில்லியுடன் தொடர்பு கொள்ளவே இல்லை. இதனால் காப்டன் ஹெல்லட் நிலை தடுமாறினார். அவர் மூளை வேலை செய்யவில்லை; பயம் அவரை வாட்டியது. விமானம் அதன் போக்கில் போய்க் கொண்டிருந்தது. பெட்ரோல் தீர்ந்துவிட்டதாக எல்லோரும் நினைத்தார்கள். ஆக்ராவிலிருந்து 20 மைல் தொலைவில் ஒரு இரயில் தண்டவாளத்தில் விமானம் மோதிக்கொண்டு, வயல் வெளியில் இறங்கியது. மரத்துடனோ மலைமீதோ மோதாதது இறைவனின் அருள் என்றுதான் சொல்லவேண்டும். சூரியன் அஸ்தமனமாகி இருள் சூழும் நேரம். விமானம் தலைகீழாக விழாமல், அதிலுள்ள ஏர் பிரேக்கர் அதைக் காப்பாற்றிவிட்டது

## மீண்டும் பறந்தது!

காப்டன் சுந்தரம் மறுநாள் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்த சமயம் அங்கு மழை பெய்வதற்கான அறிகுறிகள் இருந்தன. மழை பெய்து விட்டால் அந்த இடத்திலிருந்து விமானத்தை எடுக்க முடியாது. பகுதி பகுதியாகக் கழற்றி ஆக்ராவுக்கு லாரியில் கொண்டுபோய் மீண்டும் ஒன்று சேர்க்க ஒரு மாதம் இரண்டு மாதம் கூட ஆகலாம். ஆகையால் அடுத்த சில நிமிடங்களுக்குள் பறந்தாக வேண்டும். 50 கெஜமாவது தரையில் ஓட்டித்தான் விமானத்தை மேலே ஏற்ற முடியும். ஆகையால் வேடிக்கை பார்க்கவந்த கிராமவாசிகள் உதவியால் வயல் வரப்புகளை அப்புறப்படுத்தி, முதலில் ஜீப்பை ஓட்டிப் பார்த்தார். ஆங்காங்கு இருந்த குழிகளை அடைத்துவிட்டு விமானத்தை ஓட்டிப் பார்க்க முடிவு செய்தார். விமானத்தின் எடையைக் குறைப்பதற்காக, திரு. சுந்தரம் மட்டுமே விமானத்தில் சென்றார். மேலும் தேவையில்லாத பொருள்கள் கருவிகளையெல்லாம் இறக்கிக் கீழே போட்டார். பெட்ரோல் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தார். 40 காலன் இருந்தது. டில்லிக்குப் போவதற்குக்கூட இதுபோதும். விமானத்துக்குள் குதித்தார். பிரேக்குகளை நீக்கினார்... இயந்திரங்களை முடுக்கிவிட்டார்! இறக்கைகளை உயர்த்தினார்! பத்து நிமிஷங்களில் விமானம் பத்திரமாக ஆக்ரா விமானநிலையத்தில் இறங்கியது! காப்டன் சுந்தரம் விரைவாகவும், சமயோசிதமாகவும் செய்த முடிவை ஆக்ரா விமான நிலையத்தில் அனைவரும் பாராட்டினர்.

விமானத்தை முற்றிலும் சரிபார்த்த பிறகு, பயணம் டில்லிக்குத் தொடர்ந்தது.

## பயணிகளின் நிலை

ஓமந்தூராருடனும் ஏனைய பயணிகளுடனும் இவ் விமானம் வயலில் இறங்கியதும் அருகேயிருந்த கிராமவாசிகள் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் வழிகாட்ட, அனைவரும் மூன்று மைல் நடந்து இரயில் நிலையத்தை அடைந்து டில்லிக்குத் தெரிவித்தனர். இதற்கிடையில் கவர்னர் ஜெனரல் இராஜாஜி, விமானம் வந்துசேர வில்லை என்பதைஅறிந்து கவலைப்பட்டு,விமான நிலையத்து வானொலி மூலம் விமானம் இருக்கும் இடத்தை அறியவும், விமானத்தைத் தேடவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டார். பரத்பூரில் அரசாங்க அதிகாரிகளுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

இரயில் நிலையத்தை அடைந்து மூன்று மணிநேரத்தில் ஓமந்தூராரையும் மற்றவர்களையும் தில்லிக்கு அழைத்துச் செல்ல ஒரு இரயில், அந்த நிலையத்துக்கு அனுப்பப்பட்டது. அங்கிருந்து தில்லி நூறு மைல் தொலைவு.

தில்லியில் அவர்களுக்குப் பெரிய வரவேற்பு காத்திருந்தது. அநுமான் விமானம் ஆக்ராவுக்கு வந்துசேர்ந்த செய்தியை அவர்களுக்குத் தெரிவித்தபோது ஒருவரும் அதை நம்பவில்லை. அவர்கள் சென்னைக்கு ஒரு 'டகோட்டா' விமானத்தில் திரும்பிய போது, காப்டன் சுந்தரம் அந்த விமானத்தை ஓட்டினார்.

சென்னைக்கு வந்து சேர்ந்ததும் ஓ. பி. ஆருக்குப் பெரிய வரவேற்பு நடந்தது. விமான விபத்தைப்பற்றி விவரம் அறிய, பத்திரிகைக்காரர்களும் பொதுமக்களும் சூழ்ந்துகொண்டனர்.

## கராச்சி–ஹைதராபாத் துப்பாக்கிக் குவியல்

அநுமான் விமானம் வாங்குவதற்குச் சில மாதங்கள் முன்னரே ஆகாயவிமான நுணுக்கங்களையும் அதன் தொடர்பான ஹைதராபாத் சமஸ்தானத்து நடவடிக்கைகளையும் ஓமந்தூரார் கூர்ந்து கவனித்து வந்தார். ஹைதராபாத்துக்கு 'டக்கோட்டா' விமானம் ஒன்றில் கராச்சியிலிருந்து ஆயுதங்கள் கடத்தப்படுவ தாக ஓமந்தூரார் இந்திய அரசுக்குத் தெரிவித்தார் 'அது இயலாது; உங்கள் கூற்றை நாங்கள் நம்பவில்லை' என்று தில்லி யிலுள்ள சிலர் கூறிவிட்டனர். இதைப்பற்றி ஓமந்தூரார், விமானம் ஓட்டுபவர்கள் பலருடன் கலந்தாலோசித்து அவர்களைக் கொண்டு 'ஹிந்து' முதலிய நாளிதழ்களில் கடிதங்கள் வெளிவரச் செய்தார்.[1]

---

பேட்டி: (1) சாமி. (2) பேராசிரியர் திருப்பதி.

"புதுச்சேரியும் கோவாவும் இந்தியாவின் முகத்தினில் உள்ள வடுக்கள். இவற்றை அகற்றியாகவேண்டும்"

— ஜவஹர்லால் நேரு

(ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாடு ஜினீவா, 1935.)

# 25

# புதுச்சேரி

## ஐரோப்பிய வல்லரசுகள்

18-ஆம் நூற்றுண்டின் இறுதிக்காலம் இந்திய வரலாற்றில் மிகவும் சோதனையான காலமாக இருந்தது. மொகலாயர்களும் சீக்கியர்களும் சிவாஜியின் மராத்தியப் படைகளும் ஒன்றுடன் ஒன்று போரிட்டுக் கொண்டிருந்தபோது, நாட்டின் கிழக்கிலும் மேற்கிலும் கடலோரப் பகுதிகளில் துறைமுகங்களுக்கு ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் கப்பல்களையும் வணிகர்களையும் அனுப்பி, தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொண்டன. ஸ்பெயின், டென்மார்க்கு, பிரிட்டன், பிரான்சு, போர்ச்சுகல் ஆகிய நாடுகள் இவ்வாறு இந்தியாவில் கால்கொண்டன.

## பிரிட்டிஷ்–பிரெஞ்சுப் போர்

வியாபாரத்துக்காக வந்தவர்கள், பின்னர் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட முயன்றனர். தமிழ் நாட்டைப் பிடித்துக்கொள்ள ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் பல்லாண்டுகள் போரிட்டனர்.

அந்தப் போர் ஓய்ந்து சமரசம் ஏற்பட்ட நாளில், எந்தெந்த ஊர்கள் பிரெஞ்சுப்படை வசம் இருந்தனவோ அவையெல்லாம் பிரெஞ்சு ஆளுகையில் இருந்துவர ஆங்கிலேயர் சம்மதித்தனர்.

## பிரெஞ்சு இந்தியா

இவ்வாறு பிரெஞ்சு ஆட்சியில் தங்கிவிட்ட பகுதி பிரெஞ்சு இந்தியா என்றும், அதன் தலைநகரின் பெயரால் புதுச்சேரி என்றும் இருபெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

இப்பகுதி 1816 முதல் 1954 வரை, 138 ஆண்டுகள் பிரெஞ்சுக்காரரின் ஆட்சியில் இருந்தது.

முன்னுள் பிரெஞ்சு இந்தியா அல்லது புதுச்சேரியில் அடங்கியுள்ள பகுதிகள் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | புதுச்சேரி | ... | பரப்பளவு | 113·1 | சதுர மைல் |
| 2. | காரைக்கால் | | ஷை | 62·8 | ஷை |
| 3. | மாஹி | | ஷை | 3·5 | ஷை |
| 4. | ஏனம் | | ஷை | 7·8 | ஷை |
| | | | மொத்தம் | 187·2 | ச. மைல் |
| | | | | அல்லது 485 | சதுர கி. மீ. |

தமிழ்நாட்டில் ஒரு மாவட்டத்தின் சராசரி பரப்பளவு 3,500 சதுர மைல்; ஒரு வட்டத்தின் பரப்பளவு 250 ச. மைல், எனவே முன்னுள் பிரெஞ்சு–இந்தியா என்பது இப்போது யூனியன் பிரதேசமாக ஒரு லெப். கவர்னர், ஒரு அமைச்சரவை, 30 உறுப்பினர் கொண்ட சட்டசபை, 6 ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மற்றும் ஏராளமான உயர் அதிகாரிகளைக் கொண்ட பகுதி. தமிழ்நாட்டில் ஒரு தாலுகாவைவிடச் சிறியது என்பதை நாம் தெரிந்து கொள்வதும் அடிக்கடி நினைவூட்டிக் கொள்வதும் நன்று. செய்தித்தாளில் அளவுகடந்து இப்பகுதி விளம்பரம் பெறுவதால், புதுச்சேரியைப்பற்றிச் சரிவரத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அரிதாக உளது.

மேலும் காரைக்கால் என்பது, புதுச்சேரியிலிருந்து 135 கி. மீ. தொலைவிலும், கேரள மாநிலத்திலுள்ள கள்ளிக்கோட்டை அருகேயுள்ள மாஹி புதுச்சேரியிலிருந்து 720 கி. மீ. தொலைவிலும்

ஆந்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள காக்கிநாடாவுக்கு அருகே கோதாவரி ஆற்றங்கரையிலுள்ள ஏனம், புதுச்சேரியிலிருந்து 800 கி. மீ. தொலைவிலும் உள்ளன. எனவே ஏனைய பகுதிகளை, 113 சதுர மைல் பரப்புள்ள புதுச்சேரியின் சுற்றுப்புற நிகழ்ச்சிகளே பாதிக்கின்றன.

113 சதுர மைல் பரப்புடைய புதுச்சேரி (அந்த யூனியன் பிரதேசத்தின் மொத்தப் பரப்பில் மூன்றில் இரண்டு பங்காக இருந்தபோதிலும்) ஒரே தொகுதியாக இல்லை. இதில் 11 திட்டுக்கள் உள்ளன என்பதை இந்த நூலிலுள்ள படத்தால் அறியலாம். இந்த 11 திட்டுக்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு தென் ஆர்க்காடு மாவட்டத்தின் வழியாகவே செல்லவேண்டும். தென்ஆர்க்காடு மாவட்டத்துக் கடலூர் வட்டம், திண்டிவனம் வட்டம் ஆகிய இரண்டு தாலுகாக்களுக்கு இடையே உள்ள பல கிராமங்கள் சேர்ந்ததுதான் புதுச்சேரித் தொகுதி என்று சொல்லலாம்.

## ஓமந்தூராரும் புதுச்சேரியும்

திண்டிவனம் வட்டத்தினராகவும், அந்த வட்டம் அடங்கிய தென் ஆர்க்காடு மாவட்டத்தின் அரசியல், பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராகவும் இருந்ததால் ஓமந்தூராருக்குப் புதுச்சேரியைப் பற்றித் தெரியாதது ஒன்றும் இல்லை. மேலும் அங்குச் செல்வாக்குப் பெற்றவர்கள், ரெட்டியார் இனத்தவரே ஆவர். புதுச்சேரியில் அரசியல் தலைவர்கள் யார், தொண்டர்கள் யார், கலகம் செய்பவர் யார், பிரெஞ்சுக்காரரின் கைக்கூலிகள் யார், பொருள்களைப் புதுச்சேரியிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கள்ளத்தனமாகக் கடத்துபவர்கள் யார், தமிழ் நாட்டிலிருந்து பொருள்களைப் புதுச்சேரி வழியாக ஏற்றுமதி செய்பவர் யார் என்பதெல்லாம் ஓ. பி. ஆருக்கு மனப்பாடம். அவர்களுடைய ஜாதகங்களைக்கூட ஒப்புவிப்பார். புதுச்சேரி, தனியான (பிரெஞ்சு) ஆட்சியில் இருப்பதால் சமுதாயத்திற்கு நிகழும் கேடுகளையும் ஓமந்தூரார் கண்கூடாக அறிந்திருந்தார். ஆகையால், ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவைவிட்டு அகன்ற அந்தக் கணமே, பிரெஞ்சு ஆட்சியும் சுண்டைக்காய்ப் புதுச்சேரியிலிருந்து விரட்டப்பட வேண்டும் என்று கருதினார்.

## நேருவும் ஓ. பி. ஆரும்

"பிரெஞ்சுப் பண்பாட்டின் நிலைக்களம் புதுச்சேரி...... சிறப்பான அம்சங்கள் நிறைந்த பிரெஞ்சு நாகரிகத்தின் சின்னம் புதுச்சேரி......பிரெஞ்சு அரசுடன் இணக்கமான முறையில் பேச்சு வார்த்தை நடத்துவோம்" என்றெல்லாம் 1947–1948–1949-ஆம் ஆண்டுகளில் ஜவஹர்லால் நேரு வேதாந்தம் பேசியபோது, அதைக் கேட்கவே ஓமந்தூராருக்கு அருவருப்பாக இருந்தது. "பண்டிட்ஜி, புதுச்சேரி என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியாது? சுத்தமாகத் தெரியாது. நிச்சயமாகத் தெரியாது" என்று பலர் முன்னிலையில் ஆசியாவின் ஜோதி நேருவிடம் நேருக்கு நேர் சொல்லி அவரைத் தர்மசங்கடமான நிலையில் வைத்திருக்கிறார்.[1]

"பிரெஞ்சு இராணுவத்திலும் அரசாங்கத்திலும் புதுச்சேரியிலும் பிரான்சின் வெளிநாட்டுக் காலனிகளிலும் வேலை பார்த்து ஓய்வு பெற்றுப் பெரிய தொகைகளை ஓய்வுச் சம்பளமாக வாங்குபவர்கள் புதுச்சேரியில் ஏராளமாக இருக்கிறார்கள். புதுச்சேரி சுதந்தர இந்தியாவுடன் இணைந்து விட்டால் தங்களுக்குக் கிடைத்துவரும் பென்சன் போய்விடும் என்று சொல்லி அவர்களைப் பிரெஞ்சுக்காரர்கள் பயன்படுத்தி இணைப்பு இயக்கத்திற்கு எதிர்ப்பைத் தூண்டி விடுகிறார்கள்."


"இந்தியாவுடன் இணைந்து விட்டீர்களாயின் பிரெஞ்சுமொழி படிப்பது நிறுத்தப்படும் என்று சொல்லி, பிரெஞ்சு மொழியில் பாண்டித்தியம் உள்ளவர்களிடம் கவலையை உண்டாக்குகிறார்கள்."

"புதுவையில் தொழிலும் வர்த்தகமும் ஒழிந்துவிடும் என்று ஒரு பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு, கிளர்ச்சி செய்யச் சொல்லுகிறார்கள். கிளர்ச்சி செய்பவர்களுக்கு வகை வகையான மது புட்டிகளை ஆற்று வெள்ளம்போல வழங்குகிறார்கள். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது பண்டிட்ஜி" என்றார் ஓமந்தூரார்.

## கிராம்பு சத்தியாக்கிரகம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தனிப்பெரும் அரசியல் தலைவர் என்ற முறையில் ஓமந்தூராரை, புதுச்சேரிப் பகுதியினர்

1. தகவல். திரு. எல். ஆர். சுப்பிரமணியம்




மத்திய அரசின் நேரடி நிர்வாகத்துக்கு உட்பட்ட புதுச்சேரி மாநிலத்தின் ஒரு பகுதியான புதுச்சேரிப் பிரதேசம். கோடு போட்டிருப்பவை, புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவை. இடையே உள்ள வெள்ளைப் பகுதிகளில் அடங்கிய ஊர்கள் யாவும் தென் ஆர்க்காடு மாவட்டத்துத் திண்டிவனம் வட்டத்தையும் கடலூர் வட்டத்தையும் சேர்ந்தவை.

1925 முதல் அறிந்திருந்தனர். 1932-இல் அங்கு 'ஹரிஜன சேவக் சங்' தொடங்கப் பட்டபோது, ஓ. பி. ஆர். புதுச்சேரிக்குப் போயிருந்தார்.

ஆனால் குறிப்பிடத்தக்க ஒரு தொடர்பு ஓ. பி. ஆருக்குப் புதுச்சேரியுடன் ஏற்பட, கிராம்பு சத்தியாக்கிரகம் வாய்ப்பு அளித்தது.

ஜான்சிபார் என்பது ஆப்பிரிக்கா என்னும் பெருநிலப் பரப்பில் அடங்கிய சிறு தீவு. அந்நாட்டின் முக்கிய விளைபொருள் கிராம்பு. நறுமணப் பொருள்களிலும் மருந்துகளிலும் வெற்றிலை போடும் போதும் கிராம்பு பயன் படுத்தப்படுகிறது. மந்தத்தை நீக்கும் ஆற்றலும் உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் தன்மையும் கிராம்பிற்கு உண்டு. தலைவலி, பல்வலி முதலியவற்றைப் போக்க கிராம்பு உதவுகிறது. உலகின் கிராம்பு உற்பத்தியில் 100-க்கு 90 பங்கு ஜான்சிபாரில் உற்பத்தியாகிறது. இதில் சரி பாதி இந்தியாவில் செலவாகிறது.

1936-ஆம் ஆண்டில் ஜான்சிபார் அரசு அங்கு வாழ்ந்த இந்தியர்களுக்குச் சில இன்னல்களை விளைத்தது. அதனால் காங்கிரசு மகாசபை ஜான்சிபார் இந்தியருக்கு உதவ சர்தார் வல்லபாய்பட்டேலைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழு சென்னைத் துறைமுகத்திலும் பம்பாய்த் துறைமுகத்திலும் மறியல் நடத்தி, ஜான்சிபார் கிராம்பை கப்பலிலிருந்து இந்திய மண்ணில் இறங்கவிடாமல் தடுத்தது.

இந்த சமயத்தில் தந்திரமாக, கிராம்பைப் புதுச்சேரியில் இறக்கி விடுவதென்று முடிவுசெய்து, கிராம்பு ஏற்றிய கப்பலை அந்தத் துறைமுகத்துக்குத் திருப்பிவிட்டனர்.

ஓமந்தூரார் உடனே புதுச்சேரிக்குச் சென்று, கிராம்பை இறக்கவிடக்கூடாது என்று கிளர்ச்சி செய்தார். இப்போது சர்வோதயத் தலைவராக விளங்கும் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் கம்யூனிஸ்ட்டுக் கட்சித் தலைவராகத் திகழும் (புதுச்சேரி அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்) திரு. வி. சுப்பையா, எம். எல். ஏ. ஆகிய புதுச்சேரிக்காரர்களை இப்பணியில் ஊக்கப் படுத்தினார். புதுச்சேரியில் பெரியதொரு பொதுக்கூட்டத்திலும்

ஓ. பி. ஆர் பேசினர். இதன் விளைவாக, கிராம்பைப் புதுச்சேரித் துறைமுகத்திலும் இறக்க முடியாமல் கப்பல் திருப்பியனுப்பப் பட்டது.

அதே ஆண்டில் புதுச்சேரியில் நடைபெற்ற தொழிலாளர் இயக்கங்களுக்கும் ஓ. பி. ஆர். ஆதரவு கொடுத்தார்.

## புதுச்சேரி தொண்டர்களுடன் தொடர்பு

1937-இல் சென்னைச் சட்டசபைத் தேர்தல்கள் நடந்தன. தென் ஆர்க்காடு மாவட்டத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்யும் பொறுப்பை ஓமந்தூரார் ஏற்றுக் கொண்டிருந்தார். இந்தத் தேர்தலிலும் 1938-இல் கடலூர் நகராண்மைக் கழகத்திற்கு நடைபெற்ற தேர்தலிலும் புதுச்சேரியிலிருந்து தேசியத் தொண்டர்களையும் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் போன்ற பேச்சாளர்களையும் வரவழைத்துக் கொண்டார். திரு. எஸ். ஆர். எஸ். அந்தக் காலத்தில் தேசபக்திப் பாடல்களை உணர்ச்சியுடன் முழங்கும் பாடகராகவும் விளங்கினர்.

கடலூரில் தேர்தல் நடந்த சமயத்தில் புதுச்சேரியில் தொழிலாளர் கலகம் ஒன்று நடைபெற்றது. அதில் சம்மந்தப் பட்டதாக திரு. எஸ் ஆர். சுப்பிரமணியம்மீது பிரெஞ்சு-இந்திய அரசாங்கத்தார் வழக்குத் தொடர்ந்தனர்.

கலகம் நடந்தபோது திரு. எஸ். ஆர். எஸ். கடலூரில் இருந்தார் என்று ஓமந்தூரார் நீதிமன்றத்தில் சாட்சியம் கூறினர். அதனல் எஸ். ஆர். எஸ். மீது தொடரப்பட்ட வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

## 10,000 பேர் சென்னைக்கு நடந்தனர்

தொழிலாளர் கிளர்ச்சியின் அடிப்படைக் காரணம் பிரெஞ்சு—இந்தியாவில் காங்கிரஸ் ஸ்தாபனம் தடைசெய்யப் பட்டிருந்ததே ஆகும்.

அந்த ஆண்டில் அங்கு கவர்னராகப் பொறுப்பு ஏற்றிருந்த ஒரு பிரெஞ்சுக்காரர் கொடுங்கோன்மை ஆட்சி நடத்தி மக்களுக்குப் பலவாறு துன்பம் கொடுத்துவந்தார். இத்தகைய கொடுங்கோன்மை ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் புதுச்சேரி நிலைமையை

இந்தியாவிலுள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தவும் புதுச்சேரி மக்கள் புதுவகையான ஒரு கிளர்ச்சியை நடத்த விரும்பினார்கள். ஓமந்தூராரைக் கலந்து ஆலோசித்தும் அவருடைய ஆதரவுடனும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

புதுச்சேரியிலிருந்து பத்தாயிரம் பேர் வெளியேறி, சென்னைக்கு நடந்து சென்றனர். சென்னையில் பொதுக்கூட்டம் நடத்தியும் பத்திரிகைநிருபர்களைச் சந்தித்தும் தங்கள்பிரச்சினையை உலகத்தார் அறியச் செய்தனர். இதைத் தொடர்ந்து, சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தில் ஜவஹர்லால் நேரு, புதுச்சேரி நிலைமையைப்பற்றிப் பேசினார். அவர் பேசியதன் எதிரொலியாகப் பிரெஞ்சு அரசாங்கம் புதுச்சேரியில் இருந்த தங்கள் கவர்னரைத் திருப்பி அழைத்துக்கொண்டு புதிய கவர்னரை நியமித்தது.

## 1942 இயக்கம்

1942 இயக்கம் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் தொடங்குவதற்கு முன்னரே ஓ. பி. ஆர். தடுப்புக் காவல் கைதியாக வேலூர்ச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அவரால் உணர்ச்சிபெற்ற தென் ஆர்க்காடு மாவட்டம் மற்றும் புதுச்சேரி தேசபக்தர்கள் சிலர் தலைமறைவாக இருந்து புதுச்சேரியில் தேசியப் பிரசுரங்களை அச்சிட்டு, தமிழ்நாட்டின் சில பகுதிகளில் வழங்கினர்.

## முதலமைச்சரானதும்

ஓ. பி. ஆர். 1947-இல் சென்னை அரசாங்கத்தின் முதலமைச்சரானார். அப்போது இந்தியா சுதந்தர நாடாயிற்று. ஆனால் போர்த்துகீசிய ஆட்சியில் இருந்த கோவா சுதந்திரம் பெறவில்லை. கோவாவை இணைப்பதற்கான முயற்சியில் சுதந்திர இந்திய அரசாங்கத்தார் தீவிரமாக ஈடுபடவில்லை. காங்கிரஸ் கட்சியோ தேசிய இயக்கமோ கோவாவில் செயல்படவில்லை. இந்த நிலையில் புதுச்சேரியில் மோசம் போய்விடக்கூடாது என்று ஓமந்தூரார் கவலைப்பட்டார்.[1]

புதுச்சேரியில் கொம்யூன் எனப்படும் ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. சில ஜீப்களையும். லாரி

1. தகவல்: திரு. மூலதூர் மாதவ ரெட்டியார்

களையும், தென் ஆர்க்காடு மாவட்டப் பகுதிகளுக்குப் போவது போல், புதுச்சேரிப் பகுதிக்கு அனுப்பி அங்குள்ள நிலைமையை ஓமந்தூரார் வேவு பார்த்தார்.[1]

சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. விஜய ராகவன் மூலமாகப் புதுச்சேரி காங்கிரசுக்கு மறைமுக ஆதரவு கொடுத்தார்.

## நேருவுடன் மோதல்

மேற்கண்ட தலையீட்டைக் குறித்துப் பிரெஞ்சு அரசாங்கம் ஜவஹர்லால் நேருவுக்கு தன்னுடைய ஆட்சேபணையை தெரிவித்தது.

புதுச்சேரிப் பகுதியை இந்தியாவுடன் இணைத்துக்கொள்ள, பிரெஞ்சுக்காரர்கள் எவ்விதத் தடையையும் சொல்ல வில்லை என்றும் சமாதானமான முறையில் பிரெஞ்சுச் சட்டங்களில் திருத்தங்கள் செய்து அதிகார மாற்ற ஒப்பந்தம் கையெழுத்தாகி இணைப்பை அமுல் செய்ய (De Jure Merger) காலம் பிடிக்கும் என்றும் அதுவரை பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் ஜவஹர்லால் நேரு ஓமந்தூராரிடம் கூறினார். சென்னை அரசாங் கத்தில் மதுவிலக்குக் கொள்கையைப் புதுச்சேரி அரசாங்கத்தார் முறியடித்தனர் என்றும் அது தொடர்பாகவே சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் புதுச்சேரிக்குச் சென்றிருக்கவேண்டும் என்றும் ஓ. பி. ஆர். சமாதானம் கூறினார்.

## பிரெஞ்சுக் கவர்னர்–ஓ. பி. ஆர். சந்திப்பு

மேலே சொன்ன நிகழ்ச்சிக்குச் சில வாரங்களுக்குப் பின்னர், பிரெஞ்சு இந்திய கவர்னர் புதுச்சேரியிலிருந்து சென்னைக்கு வந்திருந்தார். புதுச்சேரி கவர்னர், சென்னைக்கு வரும்போ தெல்லாம் மரியாதைக்காக முதலமைச்சரைச் சந்தித்து உபசார வார்த்தைகள் பேசி தேனீர் அருந்திவிட்டுச் செல்லுவது நீண்ட நெடுங்கால வழக்கமாக இருந்தது. அந்த மரபை ஒட்டியே, பிரெஞ்சு இந்தியக் கவர்னர், ஓமந்தூராரைச் சந்தித்தார்.

---

1. தகவல்: புதுச்சேரி எல்லையிலுள்ள சிறுவந்தாடு மணியக்காரர் திரு. எஸ். கே. லெட்சுமிநாராயண ரெட்டியார்.

ஓமந்தூராருக்கு இத்தகைய சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் உபசாரங்களிலும் நம்பிக்கை கிடையாது. "நீங்களும் உங்களுடைய ஆட்களும் இந்தியாவின் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்தவேண்டும். இமயம் முதல் குமரிவரை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களே வெளியேறி விட்டபிறகு கையகலப் பகுதியை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எப்போது மூட்டைக் கட்டப் போகிறீர்கள்? டி பாக்டோ மெர்ஜர், டி ஜூர் மெர்ஜர் என்றெல்லாம் வேதாந்தம் பேசுவதற்கு என்ன உரிமை உங்களுக்கு இருக்கிறது?" என்று ஏகவசனத்தில் ஓமந்தூரார் பேசினார்.[1]

"சென்னையிலுள்ள உங்கள் முதலமைச்சர் இங்கிதம் தெரிமல் பேசுகிறார்" என்று ஜவஹர்லால் நேருவிடம் பிரெஞ்சு இந்தியக் கவர்னர் குறை கூறினார். ஓமந்தூரார் சார்பாக ஜவஹர்லால் நேரு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

## 1951-க்குப் பின்

1951 முதல் புதுச்சேரியை பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்பட்டது. தேசியத்துக்கு ஆதரவாக இருந்த தலைவர்களுக்கெல்லாம் பிரெஞ்சு அரசாங்கம் அளவுகடந்த தொல்லை கொடுத்தது.

ஓமந்தூராரின் ஆதரவுடன் புதுச்சேரியில் முது பெரும் தலைவரான குபேர்[2] நெடுங்காலம் கடலூரில் தங்கினார்.[3]

புதுச்சேரியில் சில காலம் அமைச்சராக இருந்த நெட்டப்பாக்கம் முத்துக்குமரப்ப ரெட்டியார் சுதந்தர இந்தியாவுடன் புதுச்சேரி இணைவதை ஆதரித்தார். உடனே அவரை துரோகி என்று அறிவித்து அவருடைய தலையைக் கொண்டு வரும்படி பிரெஞ்சுக் கவர்னர் உத்தரவிட்டார்.

ஓ. பி. ஆரின் ஆலோசனையின் பேரில் திரு முத்துக்குமரப்ப ரெட்டியாரைப் பத்திரமாகக் கடத்தி சென்னைக்குக் கொண்டு

---

1. தகவல்: திரு. பி. வி. கிருஷ்ணய்யா மற்றும் ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் எழுதிய கட்டுரை.
2. குபேர்: புதுச்சேரியில் மேயராகவும் முதலமைச்சராகவும் இருந்திருக்கிறார்.
3. தகவல்: திரு. எஸ். ஆர். எஸ்.

வரவும் லாரிலாரியாக அவருடைய பொருள்களை வெளியேற்றவும் கிளியனூர் திரு. கே. எஸ். வெங்கடகிருஷ்ண ரெட்டியார் ஆவன அனைத்தும் செய்தார்.

## திண்டிவனத்தில் புதுச்சேரி தலைவர்களின் முகாம்

புதுச்சேரி விடுதலை இயக்கம் சூடுபிடித்தபோது இந்தியா முழுவதும் கம்பி அடைப்புச்செய்து முக்கியமானவர்கள் இந்தி லில் உள்ள தலைவர்களோடு தொடர்பு கொள்வதைப் பிரெஞ்சு அரசாங்கத்தார் தடை செய்தனர். அப்போது குபேர், மற்றும் புதுச்சேரி முதல் அமைச்சராகப் பிற்காலத்தில் இருந்த மடுகரை வெங்கடசுப்பா ரெட்டியார், முத்துப்பிள்ளை முதலிய புதுச்சேரித் தலைவர்கள் பலர் திண்டிவனத்தில் தங்கி மூன்று மாதங்கள் திண்டிவனத்தையே தலைநகராகக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்கு ஓ. பி. ஆர். நல்ல பல ஆலோசனைகளைச் சொன்னார்.[1]

## முடிவுரை

1954-இல் புதுச்சேரி, இந்தியாவுடன் இணைந்தது. அப்போது ஓ. பி. ஆர். நிம்மதி அடைந்தார் எனினும் மகிழ்ச்சி அடையவில்லை. தேவையில்லாமல் இந்தப் பிரச்சினை ஆறு ஆண்டுகள் தாமதிக்கப்பட்டதாகக் கருதினார்.

ஒரு தாலுக்கா அளவுகூட இல்லாத புதுச்சேரிப் பகுதிக்குத் தனி ஆட்சி அந்தஸ்துக் கொடுக்கப்பட்டு அதற்காக ஆண்டுதோறும் கோடிக் கணக்கில் நிர்வாகச் செலவு ஆவதை அவர் சற்றும் விரும்பவில்லை. அவர் காலத்தில் இணைப்பு ஏற்பட்டிருந்தால் அவர் புதுச்சேரியின் சுற்றுப்புறமான 11 திட்டுக்களையும் தென் ஆர்க்காடு மாவட்டத்துடனும் காரைக்கால் பகுதியைத் தஞ்சை மாவட்டத்துடனும் சேர்த்திருப்பார். இதைவிடப் பெரிய பரப்பளவு உள்ள புதுக்கோட்டைத் தனி அரசைத் தனி மாவட்டமாக வைக்க சர்தார். வல்லபாய் பட்டேல் ஒப்புக்கொண்டிருந்தும் ஓமந்தூரார் திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியாக்கி விட்டார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

---

1. தகவல்: திண்டிவனம் திரு. வெங்கடசுப்பர் ரெட்டியார்.

"தென் ஆர்க்காடு மாவட்டம் திருஆமாத்தூர்க் கோயிலில் சோழர் காலத்தில் திருப்பதிகங்கள் பாடுவதற்குக் கண்ணொளி இழந்தவர்கள் 12 பேரும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக கண்ணொளி உடையவர் இருவருமாக மொத்தம் 14 பேர் கோயில் ஊழியராக இருந்தனர்"

— வரலாற்றுப் பேராசிரியர்.
கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி

# 26

# இந்து சமய அறநிலையச் சட்டம்

## தமிழ்நாட்டுக் கோயில்கள்

தமிழ்நாட்டில் கோயில்கள் மக்களுடைய எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றி வந்தன. கல்விக் கழகங்களாகவும், கலை வளர்க்கும் நிலையங்களாகவும், ஆவணக் காப்பகங்களாகவும், பலவகையான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிறுவனங்களாகவும் திகழ்ந்தன. இக்காரணத்தால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி ஏற்பட்டது.

செங்கற்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் வைகுந்தப் பெருமாள் திருக்கோயிலில் குடவோலை என்னும் தேர்தல் முறை பற்றி முதலாம் பராந்தகச் சோழன் கல்வெட்டு உளது. இதே மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் வெங்கடேசப் பெருமாள்

கோயிலில், இராசராசச் சோழன் கட்டிய செம்பியன் மாதேவி பெருமண்டபம், ஊர்ச்சபை கூடுவதற்குப் பயன்பட்டது என்று அங்குள்ள கல்வெட்டு உணர்த்துகிறது.

எண்ணாயிரம் முதலிய கோயில்களில் இராசேந்திரச் சோழன் சிறந்த நூல் நிலையங்களை அமைத்திருந்தான் என்பதையும் திருக்கோயில்களே சோழர்காலத்தில் சிறந்த நூல்களைப் பாதுகாக்கும் சேமநிலையங்களாக விளங்கின என்பதையும் வரலாறு நமக்கு அறிவுறுத்துகிறது. பழங்காலத்தில் கோயில்களில் ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்ற நூல்கள் இருந்ததாயும் இவை 'சரசுவதி பண்டாரம்' என்று பெயர் பெற்றிருந்ததாயும் அறிகிறோம்.

மருத்துவ நிலையங்கள் கோயில்களில் இயங்கின. இது போல இன்னும் ஏராளமான துறைகளில் வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கோயில்கள் சிறந்துவிளங்கின

## 19, 20 ஆம் நூற்றாண்டுகளில்

மேற்கண்டவாறு மக்களுக்குப் பணிபுரிந்து வந்த கோயில்கள் பிற்காலத்தில், குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டில் ஒருசில சடங்குகளுக்கும், சாத்திரங்களுக்கும் ஏற்பட்ட அமைப்புக்களாக மாறிவிட்டன. எந்தக் காரணத்துக்காக சேர, சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்கள், கோயில்களுக்குச் சொத்துக்கள் வழங்கினார்களோ, அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.

கோயில் சொத்துக்கள் பலரால் அனுபவிக்கப்பட்டு வந்தன.

## ஓமந்தூரார் கருத்து

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு கோயிலின் சொத்துக்கள், ஒரு ஜாகிர்தாரின் சொந்தப் பட்டாவில் சேர்க்கப் பட்டிருந்தன. இதை அறிந்தபோது ஓமந்தூரார் பெரிதும் கவலைப்பட்டார்.

வேதாரண்யம் என்று இப்பொழுது வழங்கப்பெறும் திருமறைக் காட்டுக்கு ஓமந்தூரார் ஒரு தடவை போயிருந்தார். அவ்வூர்க் கோயிலுக்கு நாற்பத்தைந்து ஊர்களில் 16,000 ஏக்கர்

நிலம் இருந்தும் ரூ. 75.000/– மட்டுமே வருமானம் வந்தது என்பதை அறிந்து வியப்படைந்தார்.

சென்னை அடையாற்றில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி வாழ்ந்து வந்தார். இடையிடையே அவர் வீட்டுக்கு ஓமந்தூரார் போவதுண்டு. அந்த வீட்டுக்கு அருகே உள்ள பகுதிக்கு "அருணாசலபுரம்" என்ற பெயர் உண்டு. இப்பெயர் கொண்ட பகுதியை தியோசாபிகல் சொசைட்டி எனப்படும் பிரமஞான சங்கத்தின் அருகே இன்றும் காணலாம். அருணாசலபுரமென்பது திருவண்ணாமலையில் கோயில்கொண்டிருக்கும் அருணாசல ஈசுவரர் (அண்ணாமலையார் என்பதன் வடசொல்) பெயரால் ஏற்பட்டது. இச்சொத்துக்கள் யாவும் அண்ணாமலையார் கோயிலைச் சார்ந்தன. இங்கு இருந்த தென்னை மரங்கள் கள் இறக்குவதற்குக் குத்தகைக்கு விடப்பட்டன. மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்க வேண்டிய கோயில்கள் தங்கள் தென்னந் தோப்புகளை கள் இறக்குவதற்குக் கொடுத்து, அந்த வருமானத்தைக் கொண்டு கடவுளுக்கு அபிஷேகம் செய்தால் இந்துமதத்துக்கே அது பெரிய இழுக்கு என்று அப்பொழுது ஓமந்தூரார் கருதினார். 1937 இல் முதலமைச்சர் ராஜாஜிக்கு இதுகுறித்து எழுதினார்.

கோயில்களின் நிர்வாக முறையில் அடிப்படையான மாறுதல்கள் தேவை என்ற எண்ணம் ஓமந்தூராருக்கு நெடு நாளாக இருந்தது.

## மடங்களும் மடாதிபதிகளும்

ஓமந்தூரார் ஞானதாகம் பிடித்துத் துறவிகளைத் தேடி அலைந்தார் என்பதை ஏற்கெனவே இந்நூலில் கூறியிருக்கிறோம். துறவிகள் அவருக்குக் கரும்பாக இருந்தாலும், பண்டார சந்நிதிகள், அவருக்கு வேப்பங்காயாக இருந்தனர்.

ஓ. பி. ஆரின் இளமைக்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பிட்ட ஒரு மடத்தில், பண்டார சந்நிதி தவறான ஒழுக்கம் உடையவராக இருந்தார். அதைப்பற்றி அக்காலத்தில் வழக்குகள் நடைபெற்று, செய்தித்தாள்கள் நாள் தவறாமல் நீதிமன்ற நிகழ்ச்சிகளை வெளியிட்டன. சில திரைப்படங்களிலும் பண்டார சந்நிதிகளைக் கேலி செய்யும் காட்சிகள் அப்போது இடம் பெற்றன.

திருமடங்களில் ஆதீனத் தலைவர்கள் பட்டினப் பிரவேசம் என்ற பெயரில் ஆடம்பரமான ஊர்வலங்களை நடத்தியதையும், கூடுமானவரை எல்லா விரல்களிலும் விலைமிக்க வயிர மோதிரங்களையும், கழுத்தில் படாடோபமான நகைகளையும் அணிந்து கொண்டதையும் ஓ. பி. ஆர். விரும்பவில்லை. எளிய வாழ்வுக்கும், உயர்ந்த சிந்தனைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டிய ஆதீனத் தலைவர்கள், சமுதாயத்திலுள்ள மக்களுக்கு ஆன்மீகத் துறையில் வழிகாட்டும் தலைவர்களாக நடந்துகொள்ளாமல், சடங்குகளிலும் சாத்திரங்களிலும் தங்கள் நேரத்தைச் செலவிட்டதையும் தங்களுடைய செல்வத்தை விளம்பரப் படுத்திக் கொண்டதையும் ஓ. பி. ஆர். விரும்பவில்லை.

இந்த ஊழல்களை ஒழிக்க, தமக்கு ஒரு வாய்ப்பு வராதா என்று ஓமந்தூரார் எதிர்பார்த்தார்.

## முதலமைச்சரானதும்

1947 இல் ஓமந்தூரார் முதலமைச்சர் ஆனார். பிர்க்கா வளர்ச்சிப் பணிகளைச் செய்து வந்த திரு. விநாயகம், நிர்மாண வேலைகளில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு ஒரு முகாம் ஏற்பாடு செய்திருந்தார். முகாமின் இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்கு ஓமந்தூராரை, திரு. விநாயகம்பிள்ளை அழைத்திருந்தார். திரு. விநாயகம்பிள்ளை அந்த முகாமைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூரில் நடத்தினார். அந்தச் சமயம், இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவருவதில் ஓமந்தூரார் முனைந்திருந்தார்.

தாம் அந்த முகாமுக்குச் சென்றால் இனாம் ஒழிப்புச் சட்டத்தில் சில மாறுதல்களைச் செய்யும்படி தம்மிடம் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் கூறுவதற்கு அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார் என்று ஓமந்தூரார் ஐயப்பட்டார். ஆகையால் ஓமந்தூரார் அவ்விழாவிற்குப் போகாமல், தமக்குப் பதிலாக அமைச்சர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனை அனுப்பி வைத்தார். ஆதீனத்தாரிடம் எச்சரிக்கையாக இருக்கும்படியும் டாக்டர். ராஜனுக்குச் சொன்னார்.

டாக்டர். ராஜன் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும், அவரை ஆதீனத்தின் சார்பில் சகல மரியாதைகளுடனும், வரவேற்றனர். அவரை ஆதீனத்தார் விருந்துக்கு அழைத்தனர்.

"என்னுடைய முதலமைச்சர் எனக்கு ஏற்கனவே எச்சரித்து விட்டார். ஆகையால் நான் வரமுடியவில்லை" என்று டாக்டர் ராஜன் உளறிவிட்டார்.[1]

## ஓ. பி. ஆரின் நோக்கங்கள்

ஓமந்தூரரார் முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப் பட்ட முக்கியமான சட்டங்களுள் ஒன்று அறநிலையச் சட்டம்.

மடங்களும் கோயில்களும், ஒழுங்காக நடைபெறாத காரணத்தால் நாட்டில் நாத்திகம் பரவி வருகிறது என்று ஓமந்தூரரார் கருதினர். தெரிந்தோ தெரியாமலோ, மடாதிபதி களும் கோயில்களின் அறங்காவலர்களும், அர்ச்சகர்களும், பெரியார் ஈ. வே. ராவின் கொள்கைகள் வலுப் பெறுவதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து வருகிறார்கள் என்று அவர் நினைத்தார்.

மதத்தின் பெயரால் அக்கிரமங்களும், சுயநலச் சுரண்ட லும் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு தடுப்பது தம் கடமை என்றும் அவர் உறுதியாக அபிப்ராயப் பட்டார். தேவதாசி ஒழிப்புச் சட்டத்தையும், ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டத்தையும் அவர் கொண்டுவந்தார்.

"உலகம் முன்னேறி வருகிறது; நாமும் துரிதமாக முன்னேற வேண்டும். மதத்தின் பெயரால் நமது முற்போக்கின் வேகத்தைத் தடுக்க முன்வருபவர்கள் தாங்கள் நம்புவதாகக் கூறும் தங்கள் மதத்துக்கே தீமை செய்தவர்கள் ஆவார்கள்" என்று ஓ. பி. ஆர். கூறினர்.

## அறநிலையச் சட்டம்

ஓ. பி. ஆர். கொண்டுவந்த அறநிலையச் சட்டத்தில் முக்கியமான அம்சங்களாகக் கீழ்க்கண்டவை இடம்பெற்றன:

1. கோயில் சொத்துக்களை குறைந்த குத்தகைக்குக் கொடுப்பதைத் தடுப்பதற்கான நடவடிக் கைகள்.
2. மடங்களில் உள்ள நகைகள், பதிவேட்டில் பதியப்பட்டு அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

---

1. தகவல்: கல்லுப்பட்டி திரு. குருசாமி

3. கோயில் நகைகளுக்கும் இவ்வாறு பதிவேடு வைக்கப்படும். எடையும், விலைமதிப்பும் கணக்கிடப்பட்டு இடையிடையே அதிகாரிகளால் சரிபார்க்கப்பட வேண்டும்.

4. கோயில் நிலங்களை ஏலம் போட்டு ஒருசிலர் தட்டிக் கொண்டு போவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது.

5. சமணர்களுடைய கோயில்களிலும் ஊழல்கள் நடந்துவந்ததால், இந்துக்களின் கோயில்களைப் போல அவற்றையும் இந்தச் சட்டத்தின்கீழ் ஓமந்தூரார் கொண்டுவந்தார்.

6. தனிப்பட்டவர்கள் ஆளுகையில் இருக்கும் திருக்கோயில் நிலங்களையும் மனையிடங்களையும் மீட்க நடவடிக்கை.

7. திருக்கோயில் பணங்கள் ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது கட்டளைக்காக இருந்தபோதிலும் அவற்றை வேறு ஒரு தலைப்பில் செலவு செய்யலாம் (Diversion) என்று சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

8. இந்து சமய மற்றும் தர்மஸ்தாபன பரிபாலன வாரியம் என்று இருந்ததை மாற்றி ஓர் அரசாங்கத்துறையாக கொண்டுவருவது. ஏற்கெனவே இருந்த போர்டுக்கு போதிய அதிகாரங்கள் இல்லை. அக்கிரமங்களை அவர்கள் கண்டுபிடித்தாலும் அவற்றைச் சீர்திருத்த அவர்களுக்கு அதிகாரம் இல்லை. பொதுவாக அதிகாரம் இல்லாத ஆலோசனைக் குழுவாக அது இருந்தது. ஆகையால் அரசாங்கம் அந்த வாரியத்தின் வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஓமந்தூரார் முடிவு செய்தார்.

அரசாங்கத் துறையின்கீழ் கோயில்கள் கொண்டு வரப்படுவதால் மாகாணமெங்கும் உள்ள பல நீதிமன்றங்களில் வழக்காடி தன்னுடைய உத்திரவுகளை நிலை நிறுத்த

வேண்டிய பொறுப்பு போர்டுக்கு ஒழிந்து விடுகிறது. அதாவது இந்தத் துறையின்மீது நீதிமன்றங்களுக்கு இருந்த அதிகாரம் ரத்தாகி விடுகிறது.

எனினும் ஆணையரின் உத்திரவுகளைப் பரிசீலனை செய்ய உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருந்துவர ஓமந்தூரார் வகை செய்தார்

9. எழுத்தறிவே இல்லாத அர்ச்சகர்கள் பூசை செய்யும் தங்கள் உரிமையை விற்கவோ வாங்கவோ முடியாது. பரம்பரையாகச் செய்து வரும் இந்தப் பணிகளில் காலி ஸ்தானம் ஏற் பட்டால், தகுதியும் திறமையும் வாய்ந்த அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவார்கள்.

10. அர்ச்சகர்கள், ஆகமங்களிலும் மற்ற சாத்திரங் களிலும் புலமையும் தேர்ச்சியும் பெற்றவர் களாக இருக்க வேண்டும், இதற்கு வழி செய்யப்படும்.

## ஓமந்தூராரின் வேண்டுகோள்

இந்தச் சட்டம், சட்டசபையில் விவாதிக்கப்பட்ட போது ஓமந்தூரார் பல விஷயங்களைத் தெளிவுபடுத்தினர் :

"நம்முடைய கோயில்கள் கலாச்சாரத்தின், பெரிய நிலைக்களன்களாகும். அவை வழிபாட்டுக்கு மட்டும் உரிய இடங்களல்ல. சமுதாயத்தின் வாழ்வு முழுவதும் அஃதாவது சமூக, அரசியல், பொருளாதார, ஒழுக்கத் துறைகள் யாவும் – கோயிலை மையமாகக் கொண்டே இயங்கின. கோயில்கள் ஜீவகளை பெற்று அறிவுச் சுடர் வீசி நின்றபோது, இந்து சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. அதன் வலிமையும் ஆற்றலும் பெருக்கெடுத்து ஓடின. எனவே, இந்துமதக் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி, சரியான வகை யில் இயங்கவைப்பதைப் பொறுத்துத்தான் நம்முடைய சமுதாய வாழ்வும், ஒழுக்கநெறியும் உருக்கொள்ள முடியும். கோயில்களைப் புணருத்தாரணம் செய்வதென்றால்,

நம்முடைய மக்கள் வாழ்வைச் சீர்படுத்துகிறோம் என்பது பொருள். மனிதனையும், கடவுளையும், சமூகத்தையும் சமயத்தையும், பொதுவான ஒழுக்கத்தையும் தனிப் பட்டவரின் ஒழுக்கத்தையும் ஒன்றுபடுத்தும் அரிய சாதனம் கோயிலேயாம். இவற்றையெல்லாம் தக்கவாறு இணைப்பதன் மூலம்தான் சமுதாயக் கட்டுக்கோப்பு வலிமைபெற்று நிற்கும். நம்முடைய கோயில்கள் ஆக்கப் பண்பை வளர்த்து, சிறந்த லட்சியங்களை எங்கும் பரப்பி, முற்போக்கான கொள்கைகளைக் கடைப்பிடித்து இயங்க வேண்டும். இல்லாவிட்டால் இப்பொழுது குமுறிக் கொண்டு வளர்ந்துவரும் நாத்திகக் கூட்டம் மேலும் ஓங்கி வளரவே நாம் துணை செய்தவர்களாவோம். இந்த அடிப்படையான கொள்கையை மனதிற்கொண்டுதான் இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. நம்முடைய மதம் நம் மூதாதையர்கள் நமக்களித்துச் சென்றுள்ள பெரும் பொக்கிஷமாகும். அந்தப் புனிதமான செல்வத்தை – பரம்பரைச் சொத்தை – அரிய கருவூலத்தை – நாம் என்றும் போற்றிப் பாதுகாக்கவேண்டும். அதனுடைய ஜீவ ஒளி, நந்தா விளக்காய் என்றும் திகழ்ந்து வர வேண்டும். அவ்வாறு செய்வதற்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் நமக்கு இறைவன் அளித்தருள்வானாக.''

## மதம் என்றால் என்ன

அரசாங்கத்தார் மதத்தில் தலையிடுவது கூடாது என்று சிலர் கூச்சல் போட்டனர். பல பத்திரிகைகளும் அவர்களுக்கு ஆதரவாகச் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு தலையங்கங்களும் எழுதின. தென் கன்னடத்திலுள்ள ஒரு மடம் ஓமந்தூராரைப் பதவியில் இருந்து இறக்குவதற்கு பணம் செலவிடத் தயார் என்று சென்னைக்கு ஆட்களை அனுப்பிற்று.

மதத்தில் தலையீடு வன்ற வாதத்துக்கு ஓ. பி. ஆர். சட்டசபையில் பதில் கூறினார் ?

“நமது மூதாதையர்களால் தாராளமாக நன்கொடைகள் வழங்கப்பட்டு நமது பரி பாலனதுக்கு விடப்பட்டிருக்கும் தர்ம ஸ்தாபனங் களையும், சொத்துக்களையும், சீர்கேடாக எப்போதும்

நிர்வகித்து வர வேண்டுமென்பதுதான் மதமா? ஆலயங்களில் நடைபெற வேண்டிய அர்ச்சனைகள், அபிஷேகங்கள், பூசை முதலியவை அலட்சியம் செய்யப்பட்டு அலங்கோலமாக இருந்தபோதிலும் அதை எதிர்த்து யாரும் வாய்கூடத் திறக்கக்கூடாது என்பதுதான் மதமா? கோயில் சொத்துக்களைச் சில நடுவாந்திர ஆசாமிகள் பேரில் குறைவான தொகைக்குக் குத்தகையாக விட்டுவிட்டு ஒருபுறம் விவசாயிகளைச் சுரண்டுவதும், மற்றொருபுறம் கோயிலுக்குச் சேரவேண்டிய பணத்தை ஒருசிலர் கொள்ளையடித்து பங்குபோட்டுக் கொள்வதும், கோயில் கஜானாவுக்குத் தம்பிடிகூடப் போய்ச் சேராதபடி செய்வதுந்தான் மதமா?''

## மடத்தில் தலையீடு

மடங்களில் தலையிடுவது சரியா என்பது குறித்து, பின்வருமாறு ஓ. பி. ஆர். பேசினார்:

“உடுப்பி பூஜாவர மடத்தின் ஏஜண்டுகள் மடத்துக்குச் சொந்தமான நகைகளைத் தங்கள் சொந்தத் தேவைகளுக்காக அடகு வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான அக்கிரமங்களை நம் கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருக்கும் சர்க்கார் கைகட்டி, வாய்ப் புதைத்து, வளாவிருக்க முடியுமா? என்று நான் கேட்கிறேன். எந்த நாகரிக சர்க்காரும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஜனநாயக சர்க்காரும், மக்களின் ஆத்மீக வளர்ச்சியில் சிரத்தைகொண்ட எந்த நேர்மையான சர்க்காரும்,இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு கண்மூடி மௌனி போல் பாராமுகமாய்ச் சும்மா இருக்க முடியாது''

## அரசாங்கமும் மதமும்

அரசாங்கத்தார் மதத்தில் தலையிடக்கூடாது என்ற வாதத்தைக் குறிப்பிட்டு ஓ. பி. ஆர். பேசுகையில் தலையிட வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும் ஈராயிரம் ஆண்டுகளாக அரசாங்கங்கள் கோயில்களில் தலையிட்டுத்தான் வந்திருக்கின்றன என்றும் தெளிவாகச் சொன்னார்.

"நமது கோயில்கள் பிரார்த்தனை இடங்களாக மட்டுமில்லாமல் பள்ளிக்கூடங்களாகவும், அனுதரட்சக நிலையங்களாகவும், நீதிசபைகளாகவும், கலைக் கழகங்களாகவும், சமூகப் பொருளாதார வாழ்வுக்கு நடுநாயகமாகவும் திகழ்ந்து வந்தன. அம்மாதிரியான உணர்ச்சியினுல்தான் நமது சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஏராளமான சொத்துக்களைக் கோயில்களுக்கு எழுதி வைத்தனர். அதே நோக்கத்துடன் தான் திருமடங்களை மேற் படி சொத்துக்களை பார்வையிடும்படி அவ்வரசர்கள் ஏற்பாடு செய்தார்கள். அவர்களுக்குப் பின்னர் வந்த விஜயநகர மன்னர்கள், நாயக்க அரசர்கள், மஹாராஷ்டிர மன்னர்கள், யாவரும் அதேபோலவே நடந்துவந்திருக்கிறுர்கள். வேறுவழியில் அவர்கள் செல்லவில்லை. முஸ்லீம் மன்னர்கள்கூட இந்த தொன்று தொட்டு வந்த கோட்பாட்டுக்குக் கௌரவம் அளித்தனர். அப்படி இல்லையெனின், இந்து கோயில்களுக்கும் சிருங்கேரி மடத்துக்கும் ஏன் திப்புசுல்தான், ஏராளமான மானியங்களும் நன்கொடைகளும் அளிக்கவேண்டும்?"

"பிரிட்டிஷார் காலத்திலும், இந்தக் கொள்கையே தொடர்ந்து பின்பற்றப்பட்டது." இந்த நாட்டுமக்கள் நல்லொழுக்கமுடையவர்கள். மதச்சடங்குகளும், ஆசார அனுஷ்டானங்களும், சரிவர நடத்தப்பட்டு வரவேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டார்கள். அவற்றையெல்லாம் நல்ல அதிகாரிகளின் மூலம் ஒழுங்காக நடந்து வரும்படி செய்ய வேண்டும் என்று அவர்கள் நம்பினுர்கள். ஆகையினுல்தான், இவ்விதத் தலையீடும் கண்காணிப்பும் அவசியமாயிற்று" என்று 'லெயனல், ப்ளேஸ்' என்ற ஆங்கிலேயே கலெக்டர் எழுதியிருக்கிறுர்.

## மதச்சார்பற்ற அரசாங்கம்

மதச்சார்பற்ற அரசாங்கம் அமைப்பதே, சுதந்திர இந்திய அரசியல் அமைப்புக்கான நகல் சட்டத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது ஆகையால் அறநிலையச் சட்டத்தைக் கைவிட வேண்டுமெனச் சிலர் சொன்னுர்கள். இதற்கும் ஆணித்தரமாக ஓமந்தூரார் பதிலளித்தார்.

"மதச்சார்பற்ற அரசாங்கம் அல்லது லௌகிக அரசாங்கம் என்றால், பொதுவான சொத்துக்கள் துர் விநியோகிக்கப்படுவதை, எப்போதும் அனுமதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. கடவுள் வழிபாடு, மனச்சாட்சிவழி ஒழுகல், மதப்பிரசாரம் ஆகியவை சம்பந்தமான சுதந்திரங்களுக்கு நிலைக்களனாக நிற்பதே லௌகிக அரசாங்கமாகும். இது மாத்திரம் நிச்சயம். அதாவது, கோயில் சொத்துக்களையும், பொதுஜன தர்ம ஸ்தாபனங்களையும் துர்விநியோகிக்கச் சுதந்திரம் வேண்டுமென்பதை மதச்சார்பில்லாத அரசாங்கம் சகித்துக் கொண்டிருக்க முடியாது."

குறிப்பாக, தென்னிந்தியாவிலுள்ள நமக்கு இது சம்பந்தமாய்த் தனிப் பொறுப்புக்கள் உண்டு. ஏனெனில், நமது மாகாணம் தனிச்சிறப்பு வாய்ந்தது. நம்மாகாணத்தில் இருப்பதுபோல் புராதனக் கோயில்களும், மடங்களும், மத, தர்ம ஸ்தாபனங்களும் இந்தியாவில் வேறெங்கும் அவ்வளவாக ஏராளமாக இல்லை.

எனவே மதவிஷயங்களில் நடுநிலைமை வகித்தல் என்ற கொள்கையின் அடிப்படையாகவோ, அல்லது மதச் சார்பில்லாத அரசாங்கம் என்ற தத்துவத்தின் காரணமாகவோ இந்த மசோதாவை எவரும் எதிர்க்க முடியாது. ஏனெனில், முதல் கொள்கை அதைப் பிரகடனம் செய்த விக்டோரியா மகாராணியைப் போலவே மறைந்தொழிந்தது. இரண்டாம் தத்துவத்துக்குரிய உண்மைப் பொருள், தற்பொழுது சுயநலக்காரரின் வியாக்கியானத்துக்கு முற்றும் வேறானதாகும். கோயில் நிர்வாகங்களில் ஊழல்கள் இருப்பதை இதுகாறும் எவரும் மறுக்கவில்லை."

## சட்டத்தின் பயன்

ஓமந்தூரார் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியதால் தான் கோயில்களிலும், நம் மடங்களிலும் பல கோடி ரூபாய் பெருமதிப்புள்ள நகைகள் இப்போது உள்ளன. இந்தச் சட்டத்தை நிறைவேற்ற அவர் தவறியிருந்தால் எவ்வளவோ நகைகள், இருந்த இடம் தெரியாமல் கைமாறியிருக்கும்.

சட்டம் நிறைவேறியவுடனேயே கயப்பாக்கம் ஜமீந்தார் திரு. முத்துலிங்க ரெட்டியாரையும், வேறு சிலரையும் கலந்து ஆலோசித்து, நகைகளை மதிப்பீடு செய்வதில் அனுபவம் பெற்ற நேர்மையான ஆளான ஸ்ரீ தனலு நாயடு என்பவரை ஓ. பி. ஆர். நியமித்து, கோயில்களிலும், மடங்களிலும் இருந்த நகைகளை மாற்றுப் பார்த்து, எடை போட்டு, விலை மதிப்பீடு செய்து பதிவேடுகளில் பதிய ஏற்பாடு செய்தார்.

ஓ. பி. ஆர். மேற்கொண்ட மேற்படி நடவடிக்கைகளால் தான் தமிழ் நாட்டிலும், ஆந்திராவிலும், தென் கன்னடத்திலும் ஆத்திகம் நிலைத்தது. நாத்திகம் கால்கொள்ள முடியவில்லை கோயில்களில் செல்வம் பெருகும் அளவுக்கு மக்கள் காணிக்கை களைச் செலுத்தினர்கள் என்று சொல்லலாம்.

## எதிர்ப்பு

ஓ. பி. ஆர். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது குறிப்பிட்ட ஒரு சிலர் கட்டுப்பாடாக எதிர்த்தார்கள். பலவகை களில் ஓமந்தூராருக்குத் தூது அனுப்பினர்கள். சட்டசபைக் காங்கிரஸ் கட்சி உறுப்பினரான திரு. என். எஸ். வரதாச்சாரி, திரு. வைத்தியநாத ஐயர் போன்றவர்களும் அந்தச் சட்டத்தை எதிர்த்துப் பல மேடைகளில் பேசினர்கள். அந்தப் பேச்சுக்களுக் கெல்லாம் பதில்கொடுக்கும் வகையில் திரு. டி. எஸ். சொக்கலிங்கம், திரு. ம. பொ. சி., அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை முதலிய பலர் ஓமந்தூரார் கருத்தைப் பிரதிபலித்து பிரச்சாரம் செய்தனர்.

ஒரு 'துறவி', மசோதா சட்டமாக்கப்படகூடாது என்று கூறி தம் எதிர்ப்பைத் தெரிவிக்க, சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார்.[1] ஓமந்தூரார் இதையெல்லாம் கண்டு அஞ்சவில்லை.

## மடங்கள் பற்றிய ஓமந்தூரார் கருத்து

தமது கருத்தைத் தெளிவுபடுத்தத் தமிழ்நாட்டு மடாதிபதி கள் கோயில் நிர்வாகிகள் அறக்கட்டளைகளை நடத்திவருபவர்கள்

---

1. அந்தச் சாமியார்மீது சிலர் முட்டைகளை எறிந்தனர். அவர் ஒரு முட்டையைத் தின்று உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். அதைச் சித்திரித்து 'சங்கர்ஸ் வீக்லி' ஒரு கேலிப்படம் வெளியிட்டது.

போன்றவர்களின் மாநாடு கூட்டி அவர்களுடைய யோசனைகளை ஓ. பி. ஆர். கேட்டார். அப்போது முதலமைச்சர் பின்வருமாறு பேசினார்;

"நமது தெய்வக் கொள்கையின் பொதுத் தன்மையைக் கைவிட்டு, இடம் பொருள் ஏவலால் ஏற்பட்ட மூர்த்தி பேதம், தர்க்க பேதம் ஆகியவற்றைப் பெரிதாகக் கருதி, அடிப்படையான பொதுக் கொள்கைகளை மறந்தொழிந்து, நமக்குள் பூசல் புரிந்து, சகோதரத் தன்மையை இழந்து அழிவது அழகல்ல. இதுவரைக்கும் நடத்திய சைவ வைணவப் போர்கள், வடகலை தென்கலை விவகாரங்கள் போதும்."

"கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"

என்று வள்ளலார் மக்களுக்குள் வேற்றுமை கற்பித்த நூல்களையும், அவற்றைப் பின்பற்றும் பேதைமையையும் குறித்து வருந்துகிறார். ஆதலால், இப்பேத, புத்தி இனி ஒருகாலும் தலையெடுக்கக்கூடாதபடி எல்லா மக்களையும் உடன்பிறந்தாரைப் போல் பார்த்து, அன்பு செலுத்துவதையே தெய்வ நம்பிக்கையின் முதற் கொள்கையாகக் கொண்டு, தினசரி வாழ்க்கையில் நடந்து, நாட்டில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் வளர்த்தல் வேண்டும்!" ஜீவகாருண்யமே கடவுள் கொள்கை என்பதனையும் ஓமந்தூரார் வலியுறுத்தினார்.

"பழைய கோயில்கள் பலவற்றில் பொறிக்கப்பட்ட தருமங்களில் பலப்பல அநாதிகளுக்கு ஆகாரம் இடுவதற்கும், அவர்கள் நோய் தீர்ப்பதற்கும் ஏற்பட்டிருக்கின்றன. கல்வித் தருமத்தைக் குறித்தவையும் பல. இந்தப்படி மக்களின் பொது நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் கோயில் மடம் முதலியன மேற்சொன்ன மேலான தெய்வ வழிபாட்டிற்காக, அதாவது, பொது மக்களது பசி, பிணி, அறியாமை நீக்குவதற்காக, மேலும்மேலும் பாடுபட்டு வருதல் தவிர்க்க முடியாத கடமையாகும்."

"ஜமீன்தார்களுடைய நிலங்களைக் குறித்து புதியதோர் சட்டம் நடைமுறையில் வரவிருக்கிறது. தமிழ்நாட்டு மடங்கள் பலவற்றிற்கு ஜமீன்வகை நிலங்கள் இருக்கிறதாகத் தெரிகிறது. தகவல் கிடைத்த வரையில் 5 மடங்களுக்கு இனும் ஜமீன் வகை நிலங்கள் சுமார் 30 ஆயிரம் ஏக்கரும், 12 கிராமங்களும் இருக்கின்றன. பயிரிடும் குடிகளின் வறுமையையும் தாழ்வையும் அகற்றவே இச்சட்ட மாறுதல் செய்யப்போவதால், பொதுமக்கள் நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் மடங்களும் குடிகளும் ஒன்று என்ற மனப்பான்மை வரும்படியாக மடங்கள் நடந்துகொள்ள வேண்டும். இங்ஙனம் விரைவில் தொழிற் பட்டால்தான் மடங்களுக்கெனச் சிற்சில வகை சலுகைகள் காட்ட இடம் ஏற்படும்.

மடங்கள், கோயில்கள் இன்னின்னவை செய்ய வேண்டும் என்பதை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

(1) திக்கற்ற குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும், ஏழைகளுக்கும், உண்ண உணவு உதவுவது.

(2) கடவுட் கொள்கையில் சாதிசமய பேதமற்ற பொதுக்கருத்துக்களை நாட்டில் பரப்ப ஏற்பாடு செய்வது.

(3) ஆதரவற்ற நோயாளிகட்கு மருந்து அளிப்பது.

(4) பிறப்புயர்வு பாராட்டாது ஆன்மநேய உரிமை பாராட்டி வேறுபாடின்றி நடந்துகொள்வது.

(5) இரவு பகல் உழைக்கும் ஏழைமக்களின் அறியாமையை நீக்குவதற்குப் பள்ளிக்கூடங்களை நடத்துவது.

(6) அர்ச்சகரும் பட்டரும் வேதாகம வழிபாட்டு முறைகளைச் சொல்பொருள் குற்றமில்லாமல் சொல்லுதல் வேண்டி அவர்களுக்கு வேதாகமக் கல்வியை முறையாகக் கற்பிப்பது.

(7) ஓதுவார்கள் பிரபந்தக்காரர்கள் முதலியோரைச் சரியான முறையில் கற்க ஏற்பாடு செய்வது.

(8) நமது பெரியோர்கள், பின் விட்டுப் போன தெய்வப் பெருநூல்கள் பலப் பல நமது மடங்கள் கோவில்கள் சிலவற்றில் இன்னும் வெளிப்படுத்தாது இருக்கின்றன என்று தெரிகிறது. இவற்றை இதுகாறும் வெளியாக்காதது பெரிய குற்றம். இனியாவது தாமத மின்றி இவற்றை வெளிப்படுத்தி பக்திமான்களது ஆதரவை மடங்களும் கோயில்களும் சம்பாதித்துக் கொள்ளுதல்.

(9) பொதுமக்களுக்கு நூல் நிலையங்களும், படிப்பகங்களும் நிறுவுதல்.

(10) கூடியவரையில் தெய்வ நம்பிக்கை உடையவர்கள், நல்லொழுக்கமுடையவர்கள்; சாதி சமயச் செருக்கற்றவர்கள், ஜீவகாருண்யமுடையவர்கள் ஆகியவர்களைமட்டில் மடம் கோயில்களில் பணிக்கு அமர்த்தல், இவற்றை ஒட்டி இன்னொன்றும் சிறப்பாகச் சொல்ல விரும்புகிறேன். நம் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் அருளிச் செய்த திருவாய்மொழிகள், தேவார திருவாசகங்கள், திருப்புகழ்கள், திருப் பாடல்கள், திருஅருட்பாக்கள் முதலியவற்றுக்குச் சமானமாக இந்நாட்டுப் பொதுமக்கட்குப் பத்திமை உண்டாக்கும் வகையில் வேறெதையும் சேர்த்துச் சொல்ல முடியாது. இவற்றைச் சொற்குற்றம் பொருட்குற்றம், இசைக்குற்றங்களாகிய ஸ்வரலயக் குற்றங்கள் இல்லாமல், தெளிவாகவும் உணர்ச்சி

யோடும் பத்திமையோடும் பாட வைப்பது கோயில் நிர்வாகத்தின் தலிக் கடமை ஆகும்.

"தமிழ் நாடு செழித்தோங்க வேண்டுமானல் தமிழ்நாட்டில் மெய்உழைப்பாளிகள் சச்சரவிடாமல் இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் சமய பேதங்கடந்த தெய்வ உணர்ச்சி வளரவேண்டுமானல். தமிழ் நாட்டில் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்பது ஒழிய வேண்டுமானல், தமிழ் நாட்டில் மொழிவளம், கலைவளம் பெருக வேண்டுமானல், தமிழ் நாட்டில் எந்த ஏழைக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும், இருக்க இடமும், படிக்கப் பள்ளிக்கூடமும் நோய் தீர்த்துக் கொள்ள மருத்துவ நிலையமும் இருக்க வேண்டுமானல், தமிழ் நாட்டில் 'கடவுள் மறுப்பு' ஒழியவேண்டுமானல், தமிழ் நாட்டில் எல்லா மக்கட்கும் உடன் பிறந்தார் உணர்ச்சி நிலைபெற வேண்டுமானல் தமிழ் நாட்டில் முன்காலம் போல் பக்திமான்கள் உதிக்க வேண்டுமானல், இவை எல்லாவற்றிற்கும் நிலைக் களஞக நமது மடங்களும் கோயில்களும் இப்போதிருப்பதைக் காட்டிலும் நூறு மடங்கு விளக்கமுறல் வேண்டும்."

## கோயில்கள் மடங்களின் சொத்துக்கள்

கோவில்களுக்கும், மடங்களுக்கும் இருந்துவரும் சொத்துக்கள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் அவற்ருல் வர வேண்டிய வருமானம் அந்த ஸ்தாபனங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று ஓமந்தூரார் விரும்பினுர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அமைத்த ஜே. சி. குமரப்பா குழுவில், ஓமந்தூரார் உறுப்பினராய் இருந்தபோது கோயில்களுக்கும், மடங்களுக்கும், சொத்துக்கள் தேவை என்பதைச் சுட்டிக்காட்டி ஒரு குறிப்பு எழுதியிருந்தார். அதை இந்த நூலில் பிறிதோர் இடத்தில் கொடுத்திருக்கிருேம்.

கோவில்களுக்குப் பணம் தேவையில்லே. சொத்துக்களும் தேவையில்லே என்று 1947-இல் மகாத்மா காந்தி ஹரிஜன் இதழில் எழுதியிருந்தார். அப்போது ஓமந்தூரார் முதலமைச்சராய் இருந்தார். அந்தக் கட்டுரை வந்த சில நாட்களில் ஓமந்தூரார் டில்லிக்குச் சென்று காந்திஜியைச் சந்தித்தார்.

''கோயில்களுக்கும் மடங்களுக்கும் நிதியும் சொத்தும் கட்டாயம் தேவைப்படுகிறது. கோயில்களேயும், மடங்களேயும் கலேக்க நான் தயாராக இல்லே'' என்று ஓமந்தூரார் காந்திஜியிடம் சற்று வேகமாகப் பேசினர்.[1]

கொள்கை வேறுபாடு ஏற்பட்டபோது யாருடனும் மோது வதற்கு ஓமந்தூரார் தயங்கியதில்லே

தஸ்திக் அலவன்ஸ்

கோயில்களின் நலம் குறித்து, ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் ஓமந்தூரார் ஒரு முக்கியமான ஏற்பாட்டைச் செய்தார். அதன் விவரம் வருமாறு:

> ''கோயில்களுக்கும் மடங்களுக்கும் ஜமீன் அல்லது இனம் கிராமங்கள் இருந்தன. ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி அரசாங்கம் அவற்றை ஒப்புக்கொண்டது.''

> இம்மாதிரி ஒப்புக்கொண்ட கிராமங்களுக்கு, அரசாங்கம் ஒரே தொகையாக நஷ்டஈடு கொடுத்தது. கோயில்களுக்கும் மடங்களுக்கும் இவ்வாறு ஒரே தேதியில் நஷ்டஈட்டுத் தொகையை கொடுத்துவிட்டால், அந்தப் பொறுப்புக்களில் இருப்பவர்கள், அவ்வாறு அரசாங்கத்திடமிருந்து பெற்ற நஷ்ட ஈட்டுத் தொகையை ஏதாவது ஒரு செயலுக்குச் செலவு செய்துவிடுவார்களோ என்று ஓமந்தூரார் அஞ்சினர். ஆகையால் கோயில்களுக்கும் மடங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈடு, ஆண்டு தோறும் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும், தஸ்திக் அலவன்ஸ்என்று இதற்குப் பெயர் என்றும் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் 38(1) என்ற பிரிவின்கீழ் வகை

1. ''தமிழ்நாட்டில் காந்தி'', ஆசிரியர்: திரு. வே. இராமசாமி, பி. ஏ.

செய்தார். இந்தத் தொகையை கணக்கிட சம்பந்தப்பட்ட ஜமீன் மூலமாக சட்டம் அமுலுக்கு வந்த பசலிக்கு முந்தின ஐந்து முழுப் பசலிகளில் கிடைத்த எல்லாவகையான சராசரி வருமானத்துக்கும், ரயத்துவாரிப் பட்டாவின்கீழ் அந்த நிலங்களின் மூலம், மேற்படி நிறுவனங்களுக்கு ஓர் ஆண்டில் கிடைக்கும் வருமானமும் கணக்கிடப்பட்டன.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத் தொகை 38(2) பிரிவின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் கூடுதல் நஷ்ட ஈடாகக் கொடுக்கப் பட்டது. இந்த மானியங்கள் மேற்படி நிறுவனங்கள் இருக்கும்வரை கொடுக்கப்படவேண்டும் என்றும் ஓமந்தூரார் வகை செய்தார்.

"கட்சிவேறு. அரசாங்கம் வேறு.
கட்சிக்காரர்களின் கவலைகள் அன்றாட
அரசாங்கப் பணியில் கலந்துவிடுமானால்
மக்களுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய
நல்ல ஆட்சி பறி போய்விடும்"

— ராஜாஜி (1964 - ல்)

# 27

# சில சாதனைகள்

ஓமந்தூரார் ஈராண்டுகள் பதவியில் இருந்தார். இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள் அந்தக் காலத்தில் நடந்தன. அதேசமயத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் வரலாற்றையும் பொன்னெழுத்துக்களில் பொறிக்கச் செய்த பெருமை ஓமந்தூராருக்கு உண்டு.

ஓமந்தூராரின் சாதனைகள் பல. ஆனால் அவர் அந்தச் சாதனைகளை விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் பதவியை விட்டு விலகி முப்பதாண்டுகளுக்குப் பின்னர் அவர் இறந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு அவரது சாதனைகளை நடுநிலையிலிருந்து எடைபோடக் கூடிய வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கிறது.

## நேர்மையான நிர்வாகம்

ஓமந்தூரார் காலத்தில் அரசாங்கத்தில் எவ்விதமான ஊழலும் நடைபெறவில்லை. அரசாங்க இயந்திரம் செம்மையாகவும், நேர்மையாகவும், சுணக்கமில்லாமலும் நடந்தது.

### ஏழைகளுக்கு நியாயம்

முதலமைச்சரிடம் முறையிட்டால் தங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை நாட்டுமக்கள் எல்லோருக்கும் இருந்தது. எனவே ஓமந்தூரரார் ஒரு 'மனுநீதிச் சோழனக' இருந்தார் என்று சொல்லலாம்.

ஒரு கிழவி, தன் மகனை யாரோ அடித்துக் கொன்று விட்டார்கள், புகார் கொடுத்தும் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்கு கூவம் மாளிகைக்கு வந்து, முதலமைச்சரிடமே முறையிட்டாள். முதலமைச்சர் உடனே தலைமைச் செயலருக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்க அவரைத் தொலைபேசியில் அழைத்தார் ஒன்றும் பதில் கிடைக்கவில்லை. போலீசுத் துறைச் செயலர், மற்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகியோருடனும் அந்த நேரத்தில் தொடர்பு கொள்ள இயலவில்லை. மறுநாள் காலை 6 மணிக்கு முதலமைச்சரே அந்தக் கிழவியின் குக்கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்!

### அழகான கடற்கரை

சென்னைக் கடற்கரை உலகிலுள்ள சிறந்த கடற்கரை களில் ஒன்று என்ற பெருமையுடையது. அந்தக் காலத்தில் குடிசைவாசிகள் கடற்கரையையும், சாலையையும் அசுத்தம் செய்து வந்தனர். காலைவேளைகளில் கடற்கரையில் உலாவி வந்த ஓமந்தூரரார், இவ்வாறு அப்பகுதி அசுத்தம் செய்யப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். அந்த நாளிலிருந்துதான் கடற்கரை சற்று சுத்தமாக இருக்கத் தொடங்கியது.

### கடற்கரைப் பூங்கா

ஓமந்தூரரார் கடற்கரையில் உலாவிச் செல்லும்போது பல்கலைக் கழகத்திலிருந்து இன்றைய காந்தி சிலை வரை உள்ள பகுதியை பொதுப்பணித்துறையின் பொறுப்பில் இருந்து வரும் தோட்டத்தையும் அதில் உள்ள செடிகளையும் கூர்ந்து கவனிப்பார். அதற்குப் பொறுப்பான அலுவலரை அழைத்து எந்தச் செடிக்கு என்ன உரம் போடுகிறீர்கள், எத்தனைபேர் தண்ணீர் ஊற்று கின்றீர்கள், என்றெல்லாம் துருவி விசாரித்தார்.

## தண்ணீரும் மணலும்

கூவம் மாளிகையில் முதலமைச்சர் குளியல் அறையில் குழாயைத் திறந்தார். தண்ணீரோடு மணலும் வந்தது. முதலமைச்சர் வீட்டிலேயே இப்படி இருக்கும் போது நகர் முழுவதும் இதைவிட மோசமாக இருக்கும், ஆனால் பொதுமக்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தார்.

மேற்பார்வைப் பொறியாளரை (எஸ். இ.) முதலமைச்சர் வரச் சொன்னார். செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், பிரிவு அலுவலர் ஆகிய பரிவாரங் களுடன் அவர் கூவம் மாளிகையில் வந்து இறங்கினார்.

"என்ன ஐயா எஸ். இ. வேலை பார்க்கிறீர்கள்? நகர் முழுவதும் தண்ணீர் வழங்குகிறீர்களா? மண்ணை வழங்கு கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை சார், தண்ணீர் வழங்குவதில் ஒரு குறையும் இல்லை. இந்தக் கட்டிடத்திலுள்ள மேல்நிலைத் தொட்டியைச் சுத்தம் செய்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது" என்றார் எஸ். இ.

## மது விலக்கு

ஓமந்தூரார் ஆட்சியில் இருபத்தைந்து மாவட்டங்களிலும் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. மதுவிலக்குச் சட்டம் செம்மையான முறையில் அமுல் செய்யப்படவும், அது வெற்றியாக அமையவும் ஆவன யாவும் செய்தார்.

## நீதி நிர்வாகப் பிரிவினை

அரசாங்க அதிகாரிகளின் தலையீடு இல்லாமல், வழக்குகள் அவற்றின் உண்மையான அடிப்படையில் விசாரித்துத் தீர்ப்பளிக்கப்படவேண்டும் என்று ஓ. பி. ஆர். விரும்பினார். அதற்காக நீதித்துறையை அரசாங்க நிர்வாகத்திலிருந்து பிரித்தார். இந்த ஏற்பாடு ஓமந்தூரார் பதவியை விட்டு விலகிய சில மாதங்களுக்குப் பின்னர் 1949, அக்டோபர் 2–ல் முதலமைச்சர் திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா காலத்தில் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

## ஐ. சி. எஸ். வர்க்கம்

வெள்ளைக்கார அதிகாரிகளையும், வெள்ளைக்கார நீதிபதிகளையும் பதவியிலிருந்து விலக்கி, அவர்களுக்குப் பதிலாக இந்தியர்களை ஓமந்தூரார் நியமித்தார்.

## ஜமீன், இனாம் ஒழிப்பு

ஓமந்தூரார் ஆட்சியில் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டம் இனாம் ஒழிப்புச் சட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டன. அந்தச் சட்டங்களுக்கு உரிய விதிமுறைகளும் வகுக்கப்பட்டன.

எந்தச் சட்டமும் அந்தச் சட்டத்தின்கீழ் விதிமுறைகள் வகுக்கப்படாவிட்டால், அந்தச் சட்டத்தை அமுல் செய்ய முடியாது. இப்போது சில சட்டங்கள் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு அவைப்பற்றி பிரசாரம் செய்யப்பட்ட போதிலும் உரிய விதிமுறைகள், சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறையால் வகுக்கப்பட்டு அரசின் இதழில் வெளியிடப் படாத காரணத்தால் சட்டங்கள் அமுலுக்கு வருவதில்லை. அதாவது சட்டத்தால் பாதிக்கப்படுவோர்கள் நன்மை அடைபவர்கள் ஆகிய இருசாரரும் ஏமாற்றப்படுகிறார்கள். இத்தகைய இரட்டை வேடத்தை ஓமந்தூரார் போட்டதில்லை.

## 1942 கலகம்

1942-இல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தில் பத்து லட்சம் ரூபாய்க்குமேல் பொதுமக்களுக்கு கூட்டு அபராதம் விதிக்கப்பட்டது. இது தவிர நீதி மன்றத்தார் ஏராள மான காங்கிரஸ்காரர்களுக்கு அபராதம் விதித்திருந்தனர். இந்தப் பணங்களையெல்லாம் திருப்பிக் கொடுக்கும்படி ஓமந்தூரார் கட்டளையிட்டார். அந்தப் போராட்டத்தில் இறந்து போன அரசியல் தியாகிகள் 84 பேரின் குடும்பங்களுக்கு ரொக்க உதவி மாதாமாதம் கொடுத்துவரவும் ஆணையிட்டார்.

## தொழில் துறை

பிரகாசம் ஆட்சியில் குற்றுயிராக இருந்த நூல் நெசவு ஆலைகளுக்கு ஓமந்தூரார் புத்துயிர் அளித்தார். சென்னை மாகாணத்தின் எல்லைப் பகுதிகளில் அண்டை மாகாணங்களில் தொடங்க இருந்த தொழில்கள் சென்னை மாகாணத்திலேயே தொடங்கப் படுவதற்கு வகை செய்தார்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டுவதற்கான ஏற்பாடுகளை விரைவு படுத்தினர்.

## விவசாயம்

ஏரி, குளங்களை வெட்டியும் கீழ்பவானி அணைக்கட்டுத் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற ஓமந்தூரார் அடிகோலினர்.

## சட்ட சபைநடவடிக்கைகள்

சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சில அமைச்சர்கள், "கனம் உறுப்பினர் தெரிவித்த தகவலுக்கு 'நன்றி'', "கேள்விக்குப் பதில் சொல்ல அவகாசம் வேண்டும்'', "விவரங்கள் திரட்டப்படுகின்றன'', "பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது'' என்றெல்லாம் பதில் சொன்னால் ஓ. பி. ஆர். அந்த அமைச்சர்களைச் சும்மா விடமாட்டார்.

என்னப்பா, கேள்வி கேட்கிறார்கள் பைலை சரியாய்ப் படிக்காமல் போகிறீர்கள் கடாமாடு மழையில் நனைந்ததுபோல் இருக்கிறீர்கள்?[1] என்று கேட்பாராம்.

## பிற்பட்ட வகுப்புகளுக்குப் பாதுகாப்பு

ஹரிஜனங்களுக்கு அரசியல் சட்டத்தில் பல பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமூக வாழ்வில் கொடுமைப்படுத்தப் படாவிட்டாலும், பொருளாதாரம் முதலிய துறைகளில் பின் தங்கிய சாதியினருக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில பாதுகாப்புகள் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில் ஓமந்தூரார் வற்புறுத்தினர்.[2]

---

1. மனிதன் மழையில் நனைந்தால், துணியால் தன் உடம்பிலுள்ள தண்ணீரைப் போக்கி உலர்த்திக் கொள்கிறான். ஆனால், எருமை மாடு அவ்வாறு செய்வதில்லை. அதுபோலவே எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கும் கேள்விகளால் தங்களுக்கு ஏற்படும் அவமானத்தை அமைச்சர்கள் உணரவில்லை என்பது பொருள்.

2. தகவல்: திரு. சி. சுப்பிரமணியம்,
திரு க. சந்தானம்.

*"பணத்திற்காகவோ பதவிக்காகவோ தனது கொள்கையை மாற்றிக் கொண்டவர்களின் வரலாறு புகழுக்குரியதாக அமைவதில்லை. அவைகளைத் துச்சமாக மதிப்பவர்களின் புகழ் என்றுமே அழிவதில்லை"*

*— நபிகள் நாயகம்.*

# 28

# பதவி விலகல்

## சட்டசபை உறுப்பினர்கள்

சட்டசபை உறுப்பினர்களில் முக்கால்வாசிப்பேருக்கு மேல் காங்கிரஸ் கட்சியில்தான் இருந்தார்கள். காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்துவதற்கு உதவியாகவும், தொகுதிகளில் காங்கிரஸ் காரர்களின் செல்வாக்குப் பெறுவதற்கு வசதியாகவும் அரசாங்கம் நடத்தபட வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஓ. பி. ஆர். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஓமந்தூரார் முதலமைச்சராய் இருந்த போது டாக்டர் சி. ஆர். ரெட்டி ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் இருந்தார். டாக்டர் திரு இலக்குமணசாமி முதலியார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் இருந்தார். இருவரும் சந்தித்தபோது நடந்த உரையாடல் வருமாறு :

டாக்டர். சி. ஆர். ரெட்டி: முதலமைச்சர் ஓமந்தூராரைப் பற்றி நான் நிறைய கேள்விபட்டிருக்கிறேன். ஆனால் நேரடியாக அவரைப் பற்றித்தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. எனக்கு இரண்டு முறைதான் பேட்டி கொடுத்திருக்கிறார்.

டாக்டர். முதலியார்: நீங்கள், இரண்டு முறை பார்த்திருக்கிறீர்களா? அதைக் கேட்கவே பொறாமையாக இருக்கிறதே! சென்னையிலேயே இருக்கிற எனக்கு ஒருமுறைதான் பேட்டி கொடுத்திருக்கிறார்!

ஓ. பி. ஆருடைய ஈராண்டு ஆட்சியில் சட்டசபை 151 நாட்களுக்குத்தான் கூடிற்று. இதுவும் உறுப்பினர்களுக்கு ஒரு குறையாக இருந்தது. இன்னும் கூடுதலான நாட்களுக்குச் சட்டசபைக் கூட்டங்கள் நடந்து எஞ்சிய நாட்களில் அமைச்சர்கள் சுற்றுப் பயணங்களில் ஈடுபடுவார்களேயானால் பைல்களை யார் படித்துப் பார்ப்பது, அவற்றின்மீது யார் உத்தரவு பிறப்பிப்பது என்று ஓமந்தூரார் கேட்டார்.

உறுப்பினர்கள் தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அரசாங்கத்தில் வேலை வேண்டுமென்று ஓ. பி. ஆரிடம் கேட்டார்கள். "ஏற்கெனவே மக்களிடம் வாங்கும் வரிப் பணத்திற்குப் பதிலாக நாம் அவர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்யவில்லை. அரசாங்கத்தின் வருமானத்தில் பெரும்பகுதி சம்பளத்துக்கே செலவாகி விடுகிறது. ஆகையால் மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்களுக்கு அரசாங்கம் தேவையான அளவு செலவு செய்ய இயலாமல் இருக்கிறது" என்று ஓ. பி. ஆர் சுட்டிக் காட்டியதும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

## சுற்றறிக்கை

இந்த நிலையில் ஓ. பி. ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்டப் போலீஸ் அதிகாரிகளுக்கும், தலைமைச் செயலகத்திலுள்ள அலுவலர்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார். அந்தச் சுற்றறிக்கையின் சுருக்கம் வருமாறு:

"சட்டசபை உறுப்பினர்கள் சொல்லுகிற சிபாரிசு களைப் புறக்கணித்துவிடுங்கள். மக்கள் குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளை நிவர்த்திக்க வேண்டும். எது சரியோ அதைச் செய்யுங்கள். தூய்மையான நிர்வாகத்துக்கு நீங்கள் தான் பொறுப்பாவீர்கள்; 'எம். எல். ஏ. தலையிட்டார். அதற்காக இப்படி உத்தரவு பிறப்பித்தேன்' என்று சொல்லக் கூடாது."

## நெருக்கடி


இந்தச் சுற்றறிக்கைச் சட்டசபை உறுப்பினர்களுடைய கடமையில் தலையிடுவதாகவும், தன்மானத்தைப் பாதிப்பதாகவும் இதைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்னார்கள். 'இந்தச் சுற்றறிக்கையின்படிதான் நான் பதவியில் தொடர்ந்து இருக்க விரும்புகிறேன். இல்லா விட்டால் நீங்கள் வேறு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்' என்று ஓ. பி. ஆர். கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

'அவத்தனுக்கு அறுபதண்டுகள் மனைவியாக இருப்பதை விடச் சமர்த்தனுக்கு சிறிது காலம் மனைவியாக இருப்பது மேல்' என்று ஒரு பழமொழி உண்டு.

ஓ. பி. ஆர் நினைத்திருந்தால், பதவியில் இருப்பதுமட்டுமே அவரது குறிக்கோளாக இருந்திருந்தால், 'அழகர்கோவில் மாடு போல் தலையாட்டிக் கொண்டு,' 'பூமாலையைக் கண்டவுடன் கழுத்தைக் காட்டிக் கொண்டு,' 'நீட்டிய தாள்களிலெல்லாம் கையெழுத்துப் போட்டுக் கொண்டு' பல்லாண்டுகாலம் முதலமைச்சராக இருந்திருக்கலாம். ஆனால் அவர் பதவியைத் துரும்பாக மதித்தார். 'என் கடன் பணிசெய்வதே' என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார். குறுகிய காலம் பதவியிலிருந்த போதிலும் பரவாயில்லை, மாசு மறுவற்ற ஆட்சியை நடத்துவதுதான் முக்கியம் என்று நினைத்தார்.

## நீடித்துப் பதவியில் இருந்திருந்தால்

ஓ. பி. ஆர். இன்னும் மூன்று ஆண்டுக்காலம் பதவியில் இருந்திருப்பாரானால்,





மேலே: 1963ஆம் ஆண்டு மகிபாலன் பட்டியில் சைவசித்தாந்த மணி மொழிச்செல்வர் சி. ராம. இராமசாமி செட்டியார் மணிவிழாவில் திரு. கருமுத்து தியாகராசர், திரு. சென்னியப்ப முதலியார், திரு. ஓ. பி. ஆர்., திரு. இராமசாமி செட்டியார், இந்நூலாசிரியர் திரு. சோமலெ.

கீழே : சென்னை மாநில சட்டமன்ற காங்கிரஸ் கட்சி நடத்திய விருந்தில் திரு. ராஜாஜி, திரு. சி. சுப்பிரமணியம், திரு. ஜே. சிவசண்முகம்

(1) மாநில சுயாட்சிக் கொள்கை வலுப் பெற்றிருக்கும்.

(2) கிருஷ்ணாவும் கோதாவரியும் இணைக்கப்பட்டுச் சென்னை வரை கிருஷ்ணா ஆற்றுக்கால் கொண்டு வரப்பட்டிருக்கும்.

(3) உள்நாட்டில் கால்வாய்கள் வாயிலாகப் போக்கு வரத்து வசதி பரவியிருக்கும்.

(4) விவசாய இன்சூரன்ஸ், கால்நடை இன்சூரன்ஸ் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டிருக்கும்.

(5) கிராமப்புற கைத்தொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கும்.

(6) திட்டக்குழு அனைத்திந்தியாவில் ஏற்படுத்தப் பட்டு இந்தியாவுக்கு வழிகாட்டியாக அமைந் திருக்கும்.

## கட்சித் தலைவர் தேர்தல்

ஓமந்தூரார் தாம் தொடர்ந்து பதவியில் இருக்கப்போவ தில்லை என்று அறிவித்ததும் திரு. காமராஜர், கட்சித் தலைவர் தேர்தலுக்கு திரு. பக்தவத்சலத்தை நிறுத்துவது என்று முடிவு செய்தார். திரு. பக்தவத்சலத்தின் தாய்மாமன் திரு. சி. என். முத்துரங்க முதலியார் அப்போது மரணப்படுக்கையில் இருந்தார். அவர் திரு. பக்தவத்சலத்தைஅழைத்து, "ஓமந்தூராரே இருக்கட்டும், அவர் இருப்பது தான் நாட்டுக்கு நல்லது" என்று கூறினார்.[1]

ஜமீன்தார்களும் தென் கன்னட மாவட்டத்திலுள்ள சில மடங்களின் பிரதிநிதிகளும் வகுப்புவாதிகளும், ஓமந்தூராருக்குப் போட்டியாக டாக்டர். சுப்பராயனை நிறுத்துவது என்று முடிவு செய்தனர். இராஜாஜியின்ஆசீர்வாதத்தோடு டாக்டர்.சுப்பராயன் போட்டியிட ஏற்பாடாயிற்று.

---

1. தகவல்: திரு. பக்தவத்சலம் (நூலாசிரியருக்கு அளித்த பேட்டி)

ஓமந்தூராரே பதவியில் நீடிக்கவேண்டும் அல்லது அவர் சொல்லுகிற ஆளை முதலமைச்சராக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை 24 பேர் தெரிவித்தார்கள். இந்த 24 பேருடைய துணை இல்லாமல் காமராசரின் ஆட்களோ இராஜாஜியின் ஆட்களோ பெரும்பான்மை ஆதரவு பெற இயலவில்லை.

மருத்துவ மனையிலிருந்த திரு. பூ. ச. குமாரசாமி ராஜாவைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஓ. பி. ஆர். கூறினார். திரு. குமாரசாமி ராஜா போட்டியிடச் சம்மதித்தால் திரு. பக்தவத்சலம் போட்டியிட மாட்டார் என்றும் அறிவிக்கப் பட்டது. திரு. காமராசர், திரு. ஓமந்தூரார் ஆகிய இருவருடைய வற்புறுத்தலுக்கும் இணங்க திரு. குமாரசாமி ராஜா தேர்தலில் நிற்க இசைவதாக அறிவித்தார்.

தேர்தல் நாளன்று திரு. குமாரசாமி ராஜாவும், டாக்டர். சுப்பராயனும் போட்டியிட்டனர். ஓமந்தூரார் ஆட்சியால் பாதிக்கப்பட்ட தென் கன்னட மடாதிபதிகளும், மற்றும் ஜமீன்தார்களும், இனம்தார்களும் பாரி சக்கரை ஆலையினரும், பிறரும் டாக்டர். சுப்பராயனை ஆதரித்தனர். திரு. குமாரசாமி ராஜா வெற்றி பெற்றார். அதைத் தொடர்ந்து திரு. ஓமந்தூரார் தமது அமைச்சரவையின் பதவி விலகல் கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பினார்.

## பொற்காலம்

திருமதி. டி. எஸ். சௌந்தரம் ராமச்சந்திரன் கூறியிருப்பதுபோல,

> "திரு. ஓ. பி. ஆர். முதலமைச்சராய் இருந்த காலம் தமிழ் நாட்டின் பொற்காலமாகத் திகழ்ந்ததெனக் கூறினால் மிகையாகாது. சுதந்தரம் பெற்றபின் நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்து சமூகப் பணிகளில் ஈடுபட்டு பல தொண்டுகளைச் செய்த திரு. ஓ. பி. ஆர். என்றும் நம் உள்ளங்களில் ஒளியாய்த் திகழ்வார்."

ஓ. பி. ஆர். செய்யாத சில செயல்களும் குறிப்பிடத் தக்கன. அவர் விரும்பியிருந்தால் இன்றைய பரந்த சென்னை மாகாணத்தில், ஆயிரம் ஆயிரம் கட்டிடங்களுக்கும் நிறுவனங்

களுக்கும் பெயர்களை மாற்றியிருக்கலாம். அத்தகைய வாண வேடிக்கைகளை நடத்தி, பொதுமக்களின் கவனத்தை அவர் திசை திருப்பவில்லை.

## விடைபெறல்

1949 ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி ஓமந்தூரார் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அன்றைக்கே திரு. குமாரசாமி ராஜா முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு ஓமந்தூரார் அரசாங்கக் கட்டிடமான கூவம் மாளிகையைக் காலி செய்தார். இக்காலத்தில் சில அமைச்சர்கள் பதவியை விட்டு விலகிப் பல மாதங்களுக்குப் பிறகும் அரசாங்க வீடுகளைக் காலி செய்வதில்லை என்பது இங்கே ஒப்புநோக்கத் தக்கது.

சந்தர்ப்பவாத அரசியல் தலைவர்களைப்போல அவசரமாகக் கையெழுத்துப் போடுவதற்காக ஓமந்தூரார் எந்த பைலையும் கொண்டுவரச் சொல்லவில்லை.

சொந்தப் பணம் ரூ. 1,100/–ஐ பேங்கிலிருந்து எடுத்துவரச் சொல்லி, தமக்குக் கார் ஓட்டியவருக்கும், சமையல்காரருக்கும், மற்ற பணியாளர் பலருக்கும் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

ஓமந்தூராரின் நண்பராகிய முலசூர் மாதவ ரெட்டியார் திரு. குமாரசாமி ராஜாவைச் சந்தித்து, "ஓ. பி. ஆர். தங்களிடம் ஒரு சின்ன உதவி கேட்கச் சொன்னார்கள்" என்றார். 'என்ன?' என்று திரு. குமாரசாமி ராஜா ஆர்வத்தோடு கேட்டார். "கூவம் மாளிகையைக் காலிசெய்து புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஓமந்தூர் வரை அரசாங்கக் காரில் போவதற்குத் தங்களுடைய சம்மதத்தைக் கேட்கச் சொன்னார்கள்." குமாரசாமி ராஜா சிரித்துக்கொண்டே, "பின்வருமாறு பதில் சொன்னாராம்: "இது என்ன பைத்தியமாக இருக்கிறது? ரெட்டியார், காரை ஒரு மாதத்துக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுங்கள்."[1]

மறுநாளே கார் சென்னைக்குத் திரும்பி வந்துவிட்டது.

---

1 தகவல்: முலசூர் மாதவரெட்டியார்

## கூவம் மாளிகையை விட்டுப் புறப்பாடு

அமைச்சர்களும், அதிகாரிகளும் கூவம் மாளிகையில் கூடி ஓ. பி. ஆருக்கு வழியனுப்பினர். 150க்கும் மேற்பட்ட மாலைகள் அவருக்குப் போடப்பட்டன. வழியிலே சென்றவர்கள் புதிய முதலமைச்சருக்கு வரவேற்பு நடந்ததாகக் கருதினர். எவ்வித வெறுப்பும் யார்மீதும் காட்டாமல் மன அமைதியோடு ஓமந்தூரார் புறப்பட்டார்.[1] 'கம்பன் கண்ட ராமனைப்போல', நாம் கண்ட ராமரும் (ஓ. பி. ஆர்.) சிறந்த பதவியைத் துறந்து செல்லும் போது "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை" போன்ற முகத்தின ராகவே காட்சியளித்தார்.

## அதிகாரிகள் கருத்து

அப்போது அரசாங்கத்தின் உயர்அலுவலர்களுக்கு ஏற்பட்ட கருத்தை, திரு. வர்கீஸ் இந்நூலாசிரியரிடம் பின்வருமாறு கூறினார்:

> "ஏற்கெனவே மாவட்டக் கழகத்தின் தலைவராகவோ, நகராண்மைக்கழகத்தின் தலைவராகவோ இருந்த அனுபவம் ஓ. பி. ஆருக்கு இல்லை. அவர் பதவிக்குப் புதியவர். தலைமைச் செயலகம் எவ்வாறு இயங்குகிறது என்பதை அவர் தெரிந்துகொள்ளவும், நாங்கள் அவரை உணர்ந்து புரிந்துகொள்ளவும் 1½ ஆண்டுகளாகிவிட்டன. இருவரும் சேர்ந்து பணிபுரியத் தொடங்கியிருந்த நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவரைப் பதவியிலிருந்து விடுவித்தது, நமது மாநிலத்துக்குப் பெரிய இழப்பு என்று தான் சொல்ல வேண்டும்."

## திரு. குமாரசாமி ராஜாவின் சுற்றறிக்கை

பதவி ஏற்றதும் புதிய முதலமைச்சர் திரு. குமாரசாமிராஜா விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறினார்:

> "ரெட்டியார் அவர்களின் ஒழுக்கம் மனவுறுதி ஆகியவை எனக்கு இல்லை. என்னிடமுள்ள குறைபாடுகளை உணர்ந்தே என்மீது சுமத்தப் படும் பொறுப்பை நான் ஏற்கிறேன்."

---

1. தகவல்: டாக்டர் கோபால்ரெட்டி

சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசும்போது திரு. குமாரசாமி ராஜா பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எனக்குமுன் இப்பதவியை வகித்த நம் பெரு மதிப்புக்குரிய ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய ஒத்துழைப்பையும் உதவியையும் பொறுத்தே, எதிர்காலத்தில் நாம் நமது கடமையைச் சரிவரச் செய்ய முடியும். வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற இரண்டு ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்து அவர் அரும்பணியாற்றி நாட்டின் நலத்தைப் பாதுகாத்ததோடு உயர்ந்த லட்சியங்களை நமக்கு வழங்கியும் இருக்கிறார்."

## விடுதலை இதழில் தலையங்கம்

6—4—1949-இல் விடுதலை என்ற நாளிதழ் பின்வருமாறு தலையங்கம் எழுதிற்று:

### வழியனுப்புகிறோம்

இன்று முதல் நம் முதலமைச்சர் பதவியை விட்டு நீங்கித் தம் கிராமத்தில் மீண்டும் குடியேறப் போகும் ஓமந்தூர் ரெட்டியாரவர்களை இம் மாகாணத் திராவிடர்கள் சார்பில், எல்லாக் கட்சித் திராவிடர்கள் சார்பில், கட்சியற்ற திராவிடர்கள் சார்பில் வணக்கம் கூறி வழியனுப்பி வைக்கிறோம்.

பயணம் கூறிக்கொண்டு 'செக்ரட்டேரியட்'டை விட்டுப் புறப்பட்ட செய்தியைப் படித்ததும், அதைப்பற்றி நேரில் கூறியவர்களிடமிருந்து கேட்டதும் நம் உடல் சிலிர்க்கும்படியாகவும் மனம் புழுங்கும்படியாகவும் செய்து விட்டன.

இம்மாகாணம் எத்தனையோ தலைவர்களையும் முதலமைச்சர்களையும் கண்டுவிட்டது: எத்தனையோ பேர் மந்திரி பதவிகளை விட்டு நீங்கியிருக்கின்றனர்;

நீக்கப்பட்டிருக்கின்றனர். ஓமந்தூராரைவிடப் பன்மடங்கு சிறந்த ராஜதந்திரிகளெல்லாம் மந்திரிகளாக இருந்திருக்கின்றனர். ஆனாலும் இவரது பதவியிழப்பினால் திராவிடப் பொதுமக்கள் கவலைப்படுகிற அளவுக்கு இதுகாறும் வேறு எந்த மந்திரிக்காகவும் கவலைப்பட்டதேயில்லை.

மந்திரி பதவியென்பது நிரந்தரமல்ல. நிரந்தரமாக இருக்கவும் கூடாது. மந்திரிகள் மாறுவதனால் உலகம் மூழ்கிவிடப் போவதுமில்லை. சில நாடுகளில் மாதத்துக்கு ஒரு மந்திரியாகக்கூட மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

இருப்பினும், ஓமந்தூரார் பதவியிழப்பில் மட்டும் ஏதோ ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகத் திராவிடர்கள் தங்களை அறியாமலே உணர்கின்றனரே! அதன் இரகசியமென்ன? அவர், மந்திரியான பிறகு, ரமண ரிஷியுடன் பழகிய அளவுக்குக் கூடத் தம் சகபாடி மந்திரிகளுடன் பழகியதில்லை. அவரைப் பார்க்க முடியாத காரணத்திற்காகவே அவரைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று முடிவுசெய்த காங்கிரஸ் உறுப்பினர்கள் குறைந்த பட்சம் 100 பேராவது இருப்பார்கள். இந்த லட்சணத்தில் திராவிடப் பொதுமக்களோ எதிர்க்கட்சிக்காரர்களோ அவரை நெருங்கவும் முடிந்திருக்குமா? அப்படியிருந்தும் திராவிடப் பொதுமக்கள் அவர் மீது இவ்வளவு பாசத்துடன் இருப்பதற்குக் காரணமென்ன? ராஜகோபாலச்சாரியார் என்ற பெயரைக் கூறியவுடன் பார்ப்பனரின் உள்ளம் எப்படி மகிழ்ச்சிப் பெருக்கினால் பொங்குகிறதோ, அவ்வாறே, ஓமந்தூர் ரெட்டியார் என்று கூறியவுடன் திராவிடர்களின் உள்ளம் தங்களையறியாமலே மகிழ்ச்சியினால் பொங்குவது ஏன்? அப்படியாவது திராவிடர்களுக்கு உரியதைக் கொடுத்ததைத் தவிர, ஒரு குண்டூசி முனையளவேனும், அதிகமாகச் சாதித்திருக்கிறாரா? திராவிடர்களுக்காகப் போராடி வருகிறவர்களுக்குத் தொல்லை தராமலாவது இருந்தாரா? ஆச்சாரியார் காலத்தில்கூட நடக்காத, நடத்தத் துணிய முடியாத, தடியடி தர்பாரையும் நடத்தியவர்தானே. ஆயினும் திராவிட மக்கள்—குறிப்பாக தமிழ் நாட்டுத் திராவிடர்கள்— ஏன் இன்று கண்ணீர் விடுகின்றனர்?

ஏன் தாயை இழந்த சேய்போலத் தவிக்கின்றனர்? சர்க்கார் பதவியிலுள்ள திராவிடர்கள் 100க்கு 10 பேர் ஏன் இன்று தலையில் இடிவிழுந்தது போன்ற நிலையில் காணப்படுகின்றனர் ?

ஒரே பதில்தான். அவர் திராவிடர்களுக்குச் சாதித் ததை நினைத்தல்ல. அவர் பிராமணீயத்திற்குப் பலி யானாரே என்பதைநினைத்துத்தான்!ஆம்!பலியே ஆனாரா? பார்ப்பனீயப் பூசாரியின் அரிவாளுக்கு இரையான ஆடு போல் ஆனார்! "ஒரு நாயைக் கொல்ல வேணுமானால் அதைப் பைத்தியம் என்று கூறிவிடு :" என்பது இங்கிலீஷ் பழமொழி. ஆம்! ஓமந்தூரார் "பிராமண துவேஷி" என்று கூறப்பட்டார். இன்று பிராமண பலிபீடத்தின் மீது நிறுத்திப் பலியிடப்பட்டார்! மற்ற மந்திரிகளைப்போலப் பல்லைக் காட்டிப் பதவி நாற்காலியில் அமர்ந்திருக்கலாம். அவர் விரும்பியிருந்தால்! ஆனால் அவர் தன்மானமே உருவானவர்! அசல் மனிதர்! ஆதலால் கிராமம் நோக்கிப் போகிறார் !

ஓமந்தூர் ரெட்டியார் அவர்களே போய்வாருங்கள் ! கிராமத்திற்குப் போங்கள் ! நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் ! என்று கூறி வழியனுப்புகிறோம் !

ரெட்டியாரவர்களே ! நேர்மையற்ற உலகம் இது. 'நாணயத்திற்கு இந்த உலகத்தில் இடமில்லை' அதிலும் இந்த நாட்டில் தங்கள் கட்சியில் சிறிதுகூட இடமேயில்லை ! அன்று எங்கள் தலைவர் பெரியாரை அழைத்துப் பேசி மிரட்டியனுப்பினீர்களே ! அன்று தாங்கள் கூறிய ஒரு விஷயத்தை நினைவு படுத்துவதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள் ! "நாயக்கர்வாள் ! நீங்கள் காங்கிரசை விட்டுப் போயிருக்கவே கூடாது ! இங்கிருந்தபடியே உங்கள் சமுதாய சேவைகளைச் செய்திருக்க வேண்டும்" என்று சொன்னீர்களல்லவா ? அதற்கு அவர் அன்று என்ன பதில் கூறினார் ?

"தங்களைப் போன்றவர்களே இந்தச் சிறு சேவைக் காகப் பிராமணீயத்தால் பலிவாங்கப்படும் நிலையிலிருக்கும் போது தீவிரமாயுள்ள என்னை ஒரு நிமிஷம் விட்டு வைப்பார்களா? தெரிந்துதானே அதைத் தலை முழுகினேன் ! நீங்கள்மட்டும் என்ன வாழப் போகிறீர்கள் ?"

இந்தக் கருத்தில் தங்களிடம் கூறினாரல்லவா? பெரியார் பெரியார்தான்! "அநுபவமே திரண்டு உருவானவர் அவர்! தங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டதே பார்ப்பணீயம்! அதை நினைக்க நினைக்க எங்கள் நெஞ்சு என்ன துடிப்புத் துடிக்கிறது தெரியுமா? உங்களுக்குத் தெரியாது! நீங்கள் கிராமத்துக்குப் போகும்காட்சியைப் பார்த்தல்ல, நாங்கள் துடிப்பது: அந்தக் காட்சியைப் பார்த்து நையாண்டிச் சிரிப்புச் சிரித்துக் கைதட்டிக் கொக்கரித்து நிற்கும் பிராமணீயத்தைப் பார்த்துத்தான் துடிக்கிறோம்! மனம் வெதும்புகிறோம்;

பிராமணீயத்திற்கு மகான் புத்தரே பலியானார்! சித்தர்கள் பலியானார்கள்! உலக உத்தமர் காந்தியாரே பலியானார்! நீங்கள் எம்மாத்திரம்? பரவாயில்லை. மேலும் மேலும் பலர் பலியானால்தான் வெற்றி கிட்டும்! போய் வாருங்கள்! மின்னலைப்போல் தோன்றினீர்கள். இந்நாட்டின் இருண்ட அரசியல் வானத்தில்! மின்னலைப் போலவே மறைகிறீர்கள்!

ஆனால் ஒன்று. யோக்கியனுக்கு அரசியலில், அதிகாரத்தில் இடமில்லை என்ற உண்மையை, பொய்யாப் புதுமொழியை, நிலைநாட்டி விட்டுச் செல்கிறீர்கள்! அது ஒன்றுதான் தாங்கள் செய்த சேவைகளிலெல்லாம் சிகரம் போன்றது! போய்வாருங்கள்! பெரியாரை – அவர் தம் சேவையை – அவர் தீர்க்க தரிசனத்தை – பிறர்க்குக் கூறமுடியாது, தங்களால்! ஆனால் தாங்கள் மட்டும் மறந்து விட வேண்டாம்!

உங்களைப் பலிகொடுத்த தமிழன் – திராவிடன் – கடுகளவாவது அதிக அறிவுபெற்றிருப்பான், இன்று! இது உறுதி! போய்வாருங்கள்! போர்க்களத்தில் முதுகுப் புறமாகக் குத்தப்பட்ட வீரர் தாங்கள்! காயம்மார்பிலல்ல! முதுகில்! பகைவனாலல்ல! பச்சோந்தித் தோழனால்! பரவாயில்லை! இதுதான் உலகம்! நன்றிகெட்ட உலகம்! போய் வாருங்கள்!

## காஸ்மோபாலிட்டன் கிளப் கௌரவம்

சென்னை மாநகரத்தில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மற்றும் செல்வாக்குள்ளவர்கள் கூடிப் பேசுவதற்காக ஏற்பட்டது

காஸ்மோபாலிடன் கிளப் என்ற சங்கம். இது 70 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. ஆங்கிலேயர்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா, உதகமண்டலம் முதலிய நகரங்களில் தங்கள் இனத்தவர்க்கு மட்டும் ஏற்படுத்திக்கொண்ட சங்கங்களின் அடிப்படையில் —ஆனால் பல கட்டுப்பாடுகளுடனும் ஒழுக்கத்துடனும்—அமைந்தது இச்சங்கம்.

இதன் மாடமாளிகை, அண்ணா சாலையில் (மவுண்ட் ரோடில்) நடுநாயகமாக அமைந்துள்ளது. ஒரு சிறந்த நூலகமும் இங்கு உண்டு. 70 ஆண்டுகளாக வெளிவந்த இந்து நாளிதழ், இங்கு பைண்டு செய்து வைக்கப்பட்டுவந்தது. வெளியூர் உறுப்பினர்கள் சென்னைக்கு வந்தால் தங்குவதற்கு வசதியாக அறைகளும் உள்ளன.

இந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வது எளிது அன்று! உறுப்பினர்க் கட்டணம் செலுத்தினால்மட்டும் போதாது! ஏற்கெனவே உள்ள உறுப்பினர்கள், புதிதாக சேர விரும்புவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். குறிப்பிட்ட இடைவேளைகளில் அந்த மனுக்கள் பரிசீலிக்கபட்டு, தேர்தல் நடைபெறும்.

ஒரு மனுதாரரை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளலாமா? கூடாதா? என்பதற்காக நடைபெறும் தேர்தலில் 999 உறுப்பினர்கள் கலந்துகொள்வதாக வைத்துக்கொள்வோம். அதில் 749 பேர் அவரைச் சேர்த்துக்கொள்ள வாக்களித்து, 250 பேர் கூடாது என்று வாக்களித்தால், அந்த மனுதார் உறுப்பினராக முடியாது. 'கூடாது' என்ற கருத்துடையவர்களின் வாக்குக்கு மூன்று மடங்கு மதிப்பு உண்டு; சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறுபவர்களின் வாக்குக்கு ஒரு மதிப்புமட்டுமே உண்டு. எனவே 749 க்கு எதிராக 750 என்ற நிலை ஏற்பட்டு மனுதார் காஸ்மோபாலிடன் கிளப்பில் சேர இயலாமற் போய்விடும். இவ்வாறு எத்தனையோ பேர், இடம் மறுக்கப்பட்டுள்ளனர்.

இச்சங்கத்தின் 70 ஆண்டு வரலாற்றில் ஒருமுறை மட்டுமே, வாக்குப் பதிவு இன்றி ஓர் உறுப்பினர் சேர்த்துக்கொள்ளப் பட்டார். இவ்வாறு விதிவிலக்குக் கொடுத்துப் பெருமைப் படுத்தப்பட்டவர் ஓமந்தூராரே ஆவார்.

முதலமைச்சர் பதவியை விட்டு விலகிய பிறகு ஓமந்தூரார் சென்னைக்கு வந்தபோதெல்லாம் இங்குதான் தங்கினார்.

மண்ணெல்லாம் சன்மார்க்க மலராட்சி வேண்டும்
மார்க்கமெல்லாம் சன்மார்க்க மணங்கமழல் வேண்டும்
கண்ணெல்லாம் சன்மார்க்கக் காட்சியுறல் வேண்டும்
காதெல்லாம் சன்மார்க்கக் கேள்வி நுழையவேண்டும்
பெண்ணெல்லாம் சன்மார்க்கப் பிள்ளைபெறல் வேண்டும்
பேச்செல்லாம் சன்மார்க்கப் பேச்சாதல் வேண்டும்
பண்ணெல்லாம் சன்மார்க்கப் பாட்டிலெழல் வேண்டும்
பரம்பொருளே ! சன்மார்க்கப் பணிசெய்ய வேண்டுவனே !!

— *திரு. வி. கலியாணசுந்தரனார்*

# 29

# வள்ளலார் கருத்துக்கள்

ஓமந்தூராருக்கு வள்ளலாரின் கொள்கைகளில் அழுத்தமான பற்றுதல் இருந்தது வள்ளலாரின் கொள்கைகள் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்வோம்.

1. கடவுள் ஒருவரே
2. அவர் அருட்பெருஞ் சோதியர்
3. சிறு தெய்வ வழிபாடு கூடாது
4. அத்தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது
5. புலால் உண்ணலாகாது
6. சாதி சமய முதலிய வேறுபாடுகள் கூடா
7. எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைக் கடைப்பிடித்தல் வேண்டும்

8. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்

9. புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா

10. இறந்தவரைப் புதைக்க வேண்டும், எரிக்கக்கூடாது

11. கருமாதி, திதி முதலிய சடங்குகள் வேண்டா

12. எதிலும் பொது நோக்கம் வேண்டும்

## சில நிகழ்ச்சிகள்

1936 ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்யும் பொறுப்பை ஓமந்தூரார் ஏற்றுக் கொண்டிருந்தார். அதற்காகத் தூத்துக்குடி திரு. எஸ். என். சோமயாஜுலு போன்ற சிறந்த பேச்சாளர்களை வரவழைத்திருந்தார். அப்போது நிகழ்ந்த இருநிகழ்ச்சிகள்[1] ஓ. பி. ஆரின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## குதிரையிடம் பரிவு

திரு. சோமயாஜுலு வாயிலாகவே இந்த நிகழ்ச்சியைக் கேட்போம் :

> ‘‘விழுப்புரத்தில் ஒரு மார்வாடி சத்திரத்தை வாடகைக்குப் பிடித்து என்போன்ற பேச்சாளர்களை அங்கே தங்க ஓ. பி. ஆர். ஏற்பாடு செய்திருந்தார். சுற்றுவட்டத்து ஊர்களுக்குப் பிரச்சாரத்திற்குப் போனேன். போய்வர வசதியாக, அந்தச் சத்திரத்தின் சொந்தக்காரரான மார்வாடி வைத்திருந்த குதிரைவண்டியை ஓ. பி. ஆர். ஏற்பாடு செய்திருந்தார். பிரச்சாரத்துக்குப் போகும் வழியில் ஒருநாள் குதிரையின் கால் இடறி, ஒருகால் அநேகமாக ஒடிந்துவிட்டது. நான் கூட்டத்துக்குப் போவதற்கு ஓ. பி. ஆர். வேறு ஏற்பாடு செய்துவிட்டு, ஒரு மொட்டை வண்டியில் குதிரையை ஏற்றி மாட்டு வைத்தியரிடம் கொண்டுபோய் அதற்கு வைத்தியம் செய்தார். அந்தக் குதிரை மேய்வதற்கு ஒரு

1. தகவல் : எஸ். என். சோமயாஜுலு

நிலத்தைவிலைக்கு வாங்கி அந்த மார்வாடிக்குக் கொடுத்தார். அந்த நிலத்தில் மார்வாடி இப்போது பசுமடம் (கோ. சம்ரட்ச சாலா) நடத்தி வருகிறார்.''

## மேடையிலும் சைவத்தொண்டு

திண்டிவனம் வட்டம் ஒலக்கூர்த் தொகுதியில் வழக்கறிஞர் திரு. வெங்கடசுப்ப ரெட்டியார் காங்கிரஸ் வேட்பாளராகத் தென் ஆர்க்காடு மாவட்டக் கழகத்துத் தேர்தலுக்கு நின்றார். ஓர் ஊரில் அவருக்காகத் தலைவர் திரு. சத்தியமூர்த்தி தேர்தல் பிரச்சாரம் செய்தார். நீதிக்கட்சியின் கோட்டையாக இருந்த அந்த ஊரில் அக்கட்சியினர் சிலர் அழுகிய முட்டைகளைத் திரு. சத்தியமூர்த்திமீது வீசினர். கூட்டம் கலைந்தது.

அவ்வூர்க் காங்கிரஸ்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க மறுநாள் எப்படியும் ஒரு கூட்டத்தை நல்ல முறையில் நடத்திவிட ஓ. பி. ஆர். உறுதி கொண்டார். ஆகையால் திரு சோமயாஜுலுவை அழைத்து வந்தார். ''இந்த ஊர்க்காரர்கள், பொல்லாதவர்கள், சற்று நிதானமாகப் பேசு, எச்சரிக்கையாக இரு'' என்று ஓ. பி. ஆர். சொல்லிவைத்திருந்தார். திரு. சோமயாஜுலு பேச ஆரம்பித்தார்.

''நண்பர்களே! நல்லவர்களே! நேற்று இங்கு நடந்த கூட்டத்தில் தலைவர் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் பேசியதாகவும் அவர்மீது நாற்றமெடுத்த முட்டைகளை எறிந்தீர்கள் என்றும் கேள்விப்பட்டேன். அவர் ஐயர், முட்டை சாப்பிடமாட்டார். அவர்மீது முட்டை எறிந்து என்ன பயன்?

நான் முட்டை தின்பேன். நல்ல முட்டைகளைத் தாருங்கள். நீங்கள் நாகரிகம் தெரிந்தவர்கள் என்று பிறர் அறியும் வண்ணம் நடந்து காட்டுங்கள்'' என்றார் சோமயாஜுலு. உடனே கூட்டம் அடங்கி அமைதியாக நடந்தது. அந்த ஊரில் அநேகமாக எல்லா வாக்குகளும் காங்கிரசுக்குக் கிடைத்தன.

கூட்டம் முடிந்ததும் ஓ. பி. ஆர்., திரு. சோமயாஜுலுவைக் கடிந்துகொண்டார். ''இப்படியா, உதாரணம் சொல்லுவது.... சைவ உணவுக்குக் கொள்கைக்கு முரண்பட்டது''

"போர், காதல், தேர்தல் மூன்றிலும் எந்த உத்தியையும் கையாளலாம். தேர்தலில் வெற்றிபெற உதவுமாறுதானே என்னை மேடையில் ஏற்றினீர்கள்" என்று சமாதானம் சொல்லியும் ஓ. பி. ஆர். அமைதியடையவில்லை.

## பாம்புக்கு இரக்கம்

வடலூரில் தாம் நிறுவிய நிலையத்தில் பாம்பை அடிக்கக் கூடாது என்று ஓ. பி. ஆர். ஆணையிட்டிருந்தார். யாராவது பாம்பை அடித்ததாகத் தெரிந்தால் அன்று ஓ. பி. ஆர். உணவு உண்ணமாட்டார்.

## மாடுகளின்பால் அன்பு

சென்னையிலுள்ள கால்நடைக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவமனையில் நோய்வாய்ப்பட்ட மற்றும் காயப்பட்ட உயிரினங்களை மருத்துவமனைக்குக் கொண்டுபோக மாட்டுவண்டி பயன்படுத்தப்பட்டு வந்தது. அதற்குப்பதிலாக மோட்டார் வேனிலேயே அந்த உயிரினங்களைக் கொண்டு போக வேண்டுமென்று ஓ. பி. ஆர். தாம் முதலமைச்சராக இருந்தபோது ஆணையிட்டார்.

## ஆராய்ச்சி

வள்ளலாரைப் பின்பற்றி எத்தனையோ வகைகளில் ஓ. பி. ஆர். ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

சாகா நிலைபற்றி ஆராய்ச்சி, சமாதி வழிபாட்டு முறை, தீபஒளி பற்றி ஆராய்ச்சி, செப்புத் தகடுகளை கோமயத்துடன் கலந்து உருக்குவது முதலிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்.

14 வகை ரசவாதம் குறித்தும் ஆராய்ந்நார்.

## வாயில்லாப்பூச்சிகளுக்கு ஊட்ட உணவு

பறவைகளுக்கும் கால்நடைகளுக்கும் புஷ்டி தீவனம் வாங்க வேண்டுமென்று தனது நாள்குறிப்பில் எழுதிவைத்திருக்கிறார்.

## நாராயண குருவும் வள்ளலாரும்

கேரளத்தில் சமுதாயப் புரட்சி செய்தவர் நாராயண குரு. அவரைப்பற்றிய நூல்களை ஓ. பி. ஆர். படித்ததோடு, நாராயண குரு ஆசிரமத்துக்குச் சென்றிருந்தார். கேரளத்தில் அவருக்கு இருந்த ஆதரவு தமிழ்நாட்டில் இராமலிங்க சுவாமிக்கு இல்லையே என்று அவர் நொந்து கொண்டார்.[1]

வள்ளலார் பிறந்த மருதூரில் வள்ளலாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று விரும்பினர். ஓ. பி. ஆர். தலைமையில் ஒரு திருப்பணிக்குழு அமைக்கப் பெற்றது. கணக்கு களைச் சரிவர வைத்துக் கொள்ள ஒருவரும் முன்வராததால் ஓ. பி. ஆர். அக்குழுவிலிருந்து விலகிக் கொண்டார்.[2]

## அருட்பாவும் இசையும்

அருட்பாவை பக்கவாத்தியமின்றிப் பாடவேண்டும் என்ற கருத்தை ஓ. பி. ஆர். வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் வற்புறுத்தினர்.

## திருச்செந்தூரில் வள்ளலார் திருவுருவம்

சுத்த சன்மார்க்கத்தைப் பரப்புவதிலும், ஆன்மநேய ஒருமைப் பாட்டைப் பலரும் ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் ஓ. பி. ஆர். ஆர்வமாய் இருந்தார். எனவே வள்ளலார் புகழ் பரப்பும் நிகழ்ச்சிகளுக்கு யார் தன்னை அழைத்தாலும் தங்கு தடையின்றிச் சென்றார்.

முதலமைச்சர் பதவியை விட்டு அவர் விலகிய பிறகு திருச்செந்தூரில் இராமலிங்கசுவாமிகள் மடத்தில், வள்ளலார் திருவுருவமொன்று திறந்து வைக்கப்பட்டது. இலங்கை வணிகர் இராமலிங்கம்பிள்ளை என்பவர் இத்தாலியப் பளிங்கில் வள்ளலாரின் திருவுருவத்தை, தம் செலவில் வடித்துப் பிரதிஷ்டை செய்தார். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் முதலிய பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர். இவ்விழாவில்தான் ஓமந்தூரார்

---

1. தகவல்: புலவர் சீ. ராமன்

2. தகவல்: நெய்வேலி திரு வி. எஸ். சண்முகசுந்தரம்- இவர் 1956 முதல் 1963 வரை குருகுலத்தில் ஆசிரியராக இருந்தார்.

முதல் தடவையாகச் சொற்பொழிவுச் சித்தர், அருட்பா அரசு கிரிதாரிப் பிரசாத்தைச் சந்தித்தார்.[1] திரு. கிரிதாரிப் பிரசாத் செய்துவரும் பணிகளை அப்போது ஓமந்தூரார் பெரிதும் பாராட்டினார். அவர் அடிக்கடி வடலூருக்கு வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. கிரிதாரிப்பிரசாத் மலேசியாவுக்குச் சுற்றுப்பயணம் செல்ல இருந்ததை ஓ. பி. ஆர். கேள்விப்பட்டபோது, இராமகிருஷ்ணர் இயக்கம் போல வள்ளலார் கருத்துக்களும் உலக இயக்கமாகப் பரவவேண்டும் என்றும் மலேசியாவில் அவர் அதற்கு அடிகோல வேண்டுமென்றும் அவரைக் கேட்டுக் கொண்டார்.

## வள்ளலார் பற்றிய நூல் வெளியீடுகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தாவரஇயல் பேராசிரியராக இருந்த டாக்டர் சீனிவாசன் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். டாக்டர். சீனிவாசன் வாயிலாகவே இதைக் கூறுவோம்.

> 1954 இல் மலேசியாவிலுள்ள திருவருள் தவநெறி மன்றத்தினருக்காக Introduction to Philosophy of Ramalinga Swami என்ற ஆங்கில நூலை எழுதினேன். கையெழுத்துப் படியை, சத்திய ஞானசபையில் வைத்து அதன் பிறகு மலேசியாவுக்கு அனுப்புவதற்காக வடலூருக்குச் சென்றேன். அப்போது ஓ. பி. ஆர். மைத்துனர் திரு. துரைசாமி ரெட்டியார் வந்திருந்தார். இதைப் பற்றித் தெரிந்தால் ஓ. பி. ஆர். மகிழ்ச்சியடைவார் என்றும் அவரிடம் போவோம் என்றும் சொல்லி என்னை அழைத்துச் சென்றார்.

---

1. திரு. கிரிதாரி பிரசாத் தலைசிறந்த சமயச் சொற்பொழிவாளர், அருட்பாவிலும் கீதையிலும் ஈடு இணையற்ற புலமையுடையவர். பன்மொழிப்புலவர். அலைகடலுக்கப்பால் அமெரிக்காவிலும் சென்று வள்ளலாரின் புகழைப் பரப்பி வருபவர். இவர் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே. இவருடைய அரிய நாவன்மையை, தொழிலதிபர் திரு. நா. ம. தக்கவாறு பயன்படுத்தி வருகிறார்.

   ஒரு காட்டாற்றில் நாலுவிதமான உபநதிகளும் ஒரேசமயத்தில் பெருக்கெடுத்து முட்டி மோதிக்கொண்டு, கரைபுரண்டு, வந்து சங்கமிப்பது போல வேதம், திருமறை, பைபிள், உபநிடதங்கள், இதிகாசங்கள், பிரபந்தங்கள் என்று உலகத்திலே இருக்கிற அத்தனை ஞானச் செல்வங்களும் ஒரேசமயத்தில் இவர் பேச்சில் இடம் பெறும்.

நூல் முழுவதையும் படித்துக்காட்டச் சொன்னார். வரி விடாமல் படித்தேன். மிகவும் பாராட்டினார். ஆங்கில நூல் எனினும், முழுவதும் நன்றாகப் புரிந்துகொண்டார்.

இதையே 'சுத்த சன்மார்க்க விளக்கம்' என்ற பெயரில் தமிழில் வெளியிடும்படி சொன்னார். அதற்கு உதவவும் முன் வந்தார். ஆனால் சில நிபந்தனைகள் குறிப்பிட்டார்.

(1) என் பெயர் எந்த இடத்திலும் கூடாது

(2) என் போட்டோ அதில் இடம்பெறக்கூடாது

(3) முன்னுரை தரமாட்டேன்

இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நூலை எழுதி வெளியிட்டேன்.''

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூல் வெளிவந்ததும், ஓ. பி. ஆர். அந்த நூலின் 100 படிகளை விலைக்கு வாங்கி, தக்கவர்களுக்கு அன்பளித்தார். (தகவல் ம. பொ. சி.)

ஊரன்[1] அடிகள், இராமலிங்க சுவாமிகளின் வரலாற்றை எழுத முன்வந்தபோது ஓமந்தூரார் அந்த முயற்சியை ஊக்குவித்து ஓரளவு பொருளுதவி செய்தார்.

---

1. **ஊரன் அடிகள்:** தவத்திரு ஊரன் அடிகள் தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் சன்மார்க்கப் பணிக்கு அர்ப்பணித்துள்ளார். திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் பெருநிலக்கிழார் குடும்பத்தில் தோன்றி இளமையிலேயே தன் பாட்டனரிடம் வேதாந்த சித்தாந்த நூல்களைக் கேட்டறிந்தவர். அரசாங்கத்தில் பொறுப்பான பதவிகள் வகித்தவர். பின்னர் அவற்றைத் துறந்து சன்மார்க்க ஞானதேசிகன் என்னும் பெயருடன் துறவு பூண்டார்கள். சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தைத் தம் ஊரில் தொடங்கியும் திருச்சிராப்பள்ளி மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் தலைவராகவும், திருச்சிராப்பள்ளி இளைஞர் இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். சென்னை இராமலிங்கர் பணிமன்றம் நடத்திய முத்திங்கள் இதழின் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். 1968 முதல் வடலூரிலேயே இருந்து குருகுலம் முதலிய நிறுவனங்களை மேற் பார்த்து வருகிறார். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். வள்ளலார் வரலாறு, வடலூர் வரலாறு, இராமலிங்கரும் தமிழும் முதலியன முக்கியமானவை. ஊரன் அடிகள் வடலூரில் வந்து நிலையாகத் தங்குவதற்கு முன்னரே அடிகளுக்கும் ஓமந்தூராருக்கும் சன்மார்க்க இயக்கத்தின்மூலமாக நெருங்கிய தொடர்பு இருந்தது.

வள்ளலார் புகழைப் பரப்பவேண்டும் என்ற ஓமந்தூராரின் கனவை நனவாக்க எத்தனையோ எழுத்தாளர்கள்' சிந்தனையாளர்கள் ஆகியோரைக் கொண்டு வள்ளலாரைப்பற்றிப் பலவகையான நூல்களை திரு. நா. மகாலிங்கம் வெளியிடச் செய்திருக்கிறார். பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள் மனத்திலும் வள்ளலாருடைய வாழ்க்கையும், கருத்துக்களும் பதியுமாறு கண்ணுக்குக் குளிர்ச்சியான ஓவியங்கள் வழியாகக் கதைபோல் அமைந்த 'ஓவிய வரிசையில் வள்ளலார்' என்ற நூலை, இராமலிங்கர் நற்பணி மன்றத்தின்மூலம் திரு. நா. மகாலிங்கம் வெளியிட்டிருக்கிறார். பதினைந்து நிமிடங்களில் படித்து முடித்துவிடக் கூடியது இந்த நூல். 'மலர்களின் வண்ணங்கள் வண்டுகளை வசீகரிப்பது போல' இந்தநூலில் உள்ள சித்திரங்கள் சிறுவரைக் கவர்ந்துள்ளன.

பெரியோர்களுக்கு தவத்திரு ஊரன் அடிகள் அவர்களைக் கொண்டு 'இராமலிங்க அடிகள் வரலாறு' என்ற நூலையும், திரு. அ. லெ. நடராஜன் அவர்களைக் கொண்டு, 'வள்ளலார் வாழ்வும் வாக்கும்' என்ற நூலையும், திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா அவர்களைக் கொண்டு 'சத்திய ஞானசபை' என்ற நூலையும் திரு. நா. ம. அவர்கள் எழுதச் செய்து வெளியிட்டிருக்கிறார்கள்.

மாதமிருமுறை வெளிவரும் சத்திய கங்கை, சன்மார்க்க இயக்கத்தின் ஏடாக முழங்கி வருகிறது. வள்ளலாரைப்பற்றி அறிந்துகொள்ள எந்தத் தமிழனாவது ஆர்வமாக இருந்தால், அவருக்குத் தேவையான நூல்கள் இப்போது தங்கு தடையின்றி கிடைக்கின்றன.

இக்காலத்து மக்களுக்குப் புரியும்படி 'திருஅருட்பா'வுக்கு உரை தேவை என்று ஓமந்தூரார் நினைத்தார். திருப்பராய்த்துறையில் 'கடவுட் பணியும் கல்விப்பணியும்' புரிந்துவரும் சுவாமி சித்பவானந்தா அவர்களைத் திருவருட்பாவுக்கு உரை எழுதும்படி ஓ. பி. ஆர். கேட்டுக் கொண்டார்.[1]

ஓ. பி. ஆரின் அந்த வேண்டுகோளுக்குச் சுவாமி சித்பவானந்தா இணங்கவில்லை.

---

1. தகவல்: சுவாமி சித்பவானந்தா

ஓ. பி. ஆரின் இந்தக் கனவையும் திரு. நா. ம. நிறைவேற்றியுள்ளார். சித்தாந்த கலாநிதி உரைவேந்தர் அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்களை, சன்மார்க்கத் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் வள்ளலார் அருளிய திருஅருட்பா ஆறுயிரம் பாடல்களுக்கும் உரை எழுதச் சொன்னார்

திருஉரைவேந்தர் அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள் ஏழு ஆண்டுகள் இந்தப் பணியில் ஈடுபட்டு திருஅருட்பா முழுவதற்கும் உரை எழுதியிருக்கிறார்.

திருஅருட்பா உரை எழுதுவதற்காக உரைவேந்தர் அவர்களுக்கு மாதந்தோறும் சன்மானமாகவும், பேப்பர், டைப் அடித்தல், உதவிக்கு ஆள் முதலியவைகளுக்காகவும் திரு. நா. மகாலிங்கம் சக்தி தர்ம நிறுவனம் மூலம் ஒருலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளார்.

இப்படித் தயாரான இந்த உரைவிளக்கத் தட்டச்சுப் படிவங்களை திரு. மகாலிங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் டாக்டர். ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களுக்கு வழங்கினார். அப்பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினர் திரு. மகாலிங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருப்பதோடு இந்த உரையை அச்சிட்டு பத்துப் பகுதிகளாகக் கொண்டு வருவது என்று முடிவு செய்து, வெளியீட்டுச் செலவுக்காக, ஐந்து லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

வள்ளலார், தன்னைச் சிதம்பரம் ராமலிங்கம்பிள்ளை என்றே கூறிக்கொண்டார். அந்தச் சிதம்பரத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகம் அவருடைய அருட்பா உரையை வெளியிடுவது எல்லா வகையாலும் பொருத்தமாகும். அது, வள்ளலாருக்கும் ஓமந்தூராருக்கும் மனநிறைவு தரும்.

தமிழர் அல்லாதவர்கள், வள்ளலாரைப்பற்றி அறிந்து கொள்ள உதவியாக, (1) மதுரை தியாகராசர் கல்லூரி முதல்வர் டாக்டர். சுப. அண்ணாமலை (2) ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர். கே. ஆர். சீனிவாச ஐயங்கார், (3) புகழ்பெற்ற எழுத்தாளரும் பழுத்த சிவபக்தருமான திருச்சி திரு. வன்மீகநாதன் என்ற ஜீ. வி. பிள்ளை ஆகியோரை

வள்ளலாரைப் பற்றிச் சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் எழுதச் செய்த பெருமையும் திரு நா. ம. அவர்களுக்கே உரியது. இந்த நூல்கள் 'பம்பாய் பாரதீய வித்யா பவன்' வாயிலாக வெளியிடப் பட்டு, ஆழிசூழ் உலகமெங்கும் பரவியிருக்கின்றன.

### பல்கலைக்கழகத்தில் வள்ளலார்[1]

மதுரைப் பல்கலைக்கழகத்தில் காந்தி நூற்றாண்டுவிழா ஆண்டில் திரு நா. மகாலிங்கம் அவர்கள் வழங்கிய நன்கொடையைக் கொண்டு, "காந்தியக் கல்வியும் இராமலிங்கர் தத்துவங்களும்" என்ற ஒரு துறை தொடங்கப்பெற்றது.

இந்தத் துறையினர், கருத்தரங்குகளையும், ஆராய்ச்சிக் கூட்டங்களையும் இப்பல்கலைக்கழகத்தின் பல பகுதிகளிலும் 1973 முதல் நடத்திவருகின்றனர். இவற்றில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை நூலாக வெளியிடவும் ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

இத்துறையின் இயக்குநர் டாக்டர். எம். பி. குருசாமி எழுதியுள்ள 'வள்ளலார் ஓர் அறிமுகம்' என்ற நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

'வள்ளலாரின் கருணை உள்ளம்' என்ற தலைப்பில் செய்யப் பெற்ற ஆராய்ச்சி முற்றுப்பெற்றுள்ளது.

### சென்னையில் வள்ளலார் விழா

வள்ளலார் முதற் சொற்பொழிவு நிகழ்த்தியது சென்னையில் தான். அவர் இளமையில் பல்லாண்டுகள் வாழ்ந்ததும் சென்னையில் தான். எனினும் 'தர்மமிகு' சென்னை என்று அவர் போற்றிய நகரம் அவரை இப்போது நினைத்து வருகிறது என்றால் அந்தப் பெருமையில் நூற்றுக்கு நூறு பங்கு திரு மகாலிங்கத்துக்கே உரியது.

### ஹேமசித்து

தங்கம் செய்வது(ஹேமசித்து)இறையருள் பெறுவதற்கான முதல்படி என்பது ஒரு நம்பிக்கை உண்டு. அதனால் ஓ. பி. ஆருக்கு தங்கம் செய்து பார்க்கவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது.

---

1. ஆதாரம்: மதுரைப் பல்கலைக்கழகத்தின் பத்தாண்டு மலர்

ஓர் இலைத்தாமரையை அடிப்படை உலோகத்தின்மீது வைத்து 108 வராட்டியைப் பயன்படுத்திப் புடம் போட்டால் தங்கமாக ஆகிவிடும் என்று ஒரு நூலில் படித்திருந்தார். ரூபாய் ஆயிரம் கொடுத்து கோடைக்கானலிலிருந்து அந்த அரிய இலையை வரவழைத்திருந்தார்.

அதை டாக்டர் சீனிவாசனிடம் காட்டி, இது என்ன என்றார்.[1]

'தெரியாது' என்றார் டாக்டர் சீனிவாசன்.

'இது தெரியாமல் என்ன ஐயா நீர் ஒரு பல்கலைக்கழகத்தில் தாவர இயல் பேராசிரியராக இருக்கிறீர்?' ஓர் இலைத்தாமரை என்று கேள்விப்பட்டிருக்கிறீரா?

"ஆம், கேள்விப்பட்டிருக்கிறேன். Actinopeteris என்று தாவர இயலில் சொல்லுவோம், பார்த்ததில்லே!"

"இதை வைத்துக்கொண்டு தங்கம் செய்யலாம் பாருங்கள்" என்றார், ஓ. பி. ஆர். ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு.

டாக்டர். சீனிவாசன் அந்தப் புத்தகத்தை வாங்கி முதலில் இது ஓர் இலைத் தாமரை என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ள வேண்டும், இந்தப் புத்தகத்தை பாருங்கள் என்றார்.

"சித்திரை மாதத்தில் பகல் 12 மணி வெய்யிலில் காலில் வைத்து மிதித்து ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தால் சூரியனுக்குப் பக்கத்தில் நட்சத்திரம் தெரிந்தால், அது ஓர் இலைத்தாமரை" என்று அந்நூலில் சொல்லப் பட்டிருந்தது. அப்படியே நெடு நேரம் மிதித்து இருவரும் பார்த்தார்கள். ஒன்றும் தெரியவில்லை. எதையோ பிடுங்கிவைத்து ஓர் இலைத்தாமரை என்று சொல்லி ஏமாற்றப்பட்டதை ஓமந்தூரார் உணர்ந்தார்.

அவருக்கு எல்லா வகையான ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் இருந்தது.

---

1. தகவல்: பேராசிரியர் டாக்டர். சீனிவாசன்

## 1950-இல் குடமுழுக்கு

திருமுருக கிருபானந்த வாரியார் வடலூர் சத்யஞான சபை திருப்பணி செய்வதில் ஈடுபட்டுப் பல ஆண்டுகளுக்குப் பிறகு அதை 1950-இல் முடித்தார். திருப்பணி செய்யப்பட்ட சத்யஞான சபையைத் திறந்துவைக்கும்படி வாரியார் சுவாமிகள், மூதறிஞர் ராஜாஜி அவர்களைக் கேட்டுக் கொண்டார். இந்தத் திறப்பு விழாவை நடத்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்தான் பொருத்தமானவர். அவரையே அழைக்கலாம் என்று ராஜாஜி கூறிவிட்டார்.[1]

அதற்கிடையே சத்யஞான சபைக் கலசத்தில் தண்ணீர் ஊற்றக் கூடாது, அப்படி ஊற்றினுல் அது சடங்காகிவிடும். எந்த விதமான மந்திரத்தையும் சொல்லக்கூடாது. அதுவும் சன்மார்க்கத்துக்கு விரோதம் என்று சிலர் கிளர்ச்சி செய்தனர்.[2]

அப்போது இந்துசமய அறநிலையத்துறை ஆணையாளராக இருந்த திரு. டி. எம். சின்னயாபிள்ளை, வடலூரில் கும்பாபிஷேகம் செய்யலாம் என்று வாய்மொழியாகக் கூறிவிட்டு, எழுத்தில் அதற்கு நேர்மாறுன ஆணை பிறப்பித்து அனுப்பிவிட்டார். வாரியார் சுவாமிகளுக்கு என்ன செய்வது என்று ஒருகணம் கவலை ஏற்பட்டது. உடனே அந்த ஆணையை எடுத்துக்கொண்டு திருவண்ணுமலைக்குச் சென்ருர். அங்கே ரமண ஆசிரமத்திலிருந்த ஓ. பி. ஆரிடம் அதைக் காட்டினர்.[3]

வாரியார் சுவாமிகள் சொல்லுகிருர்கள்: "ஆணையைப் படித்துப் பார்த்ததும் ஓ. பி. ஆர். துடித்தார். அந்த நிமிஷமே திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார், அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர். டி. எஸ். எஸ். ராஜன் ஆகிய இருவருக்கும் கடிதங்கள் எழுதி என்னிடம் தந்தார். அந்தக் கடிதங்களின் பயனுக குடமுழுக்கு விழா நடத்த ஆணைகிடைத்தது.

---

1, 3. தகவல்கள் (வாரியார் சுவாமிகள்): வடலூரில் குருகுலம் ஆரம்பிக்க வாரியார் சுவாமிகள் 3½ ஏக்கர் நிலத்தை வாங்கி ஓமந்தூராருக்கு வழங்கினுர்கள். கடைகள் கட்டி அவற்றின் வாடகை குருகுலத்துக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிருர்கள், சில ஊர்களில் காலட்சேப மூலம் கிடைத்த பணத்தை யும் வடலூர்ப்பணிக்கு வழங்கியுள்ளார்கள்.

2. தகவல்: திரு. கிரிதாரிப்பிரசாத்

### கோவை-பொள்ளாட்சி நிகழ்ச்சிகள்

கோயமுத்தூரில் திரு. வி. சி. சுப்பையா கவுண்டர் ஆரம்பித்த கோவை சன்மார்க்க நிலையத்தில் நடந்த மாநில சன்மார்க்க மாநாட்டிற்கு ஓமந்தூரார் சென்றிருந்தார்.[1] இதைத் தொடர்ந்து கோவையில் நடைபெற்ற விவேகானந்தர் நூற்றுண்டு விழாவிலும் ஓ. பி. ஆர். கலந்து கொண்டார். இந்த இரு நிகழ்ச்சிகளாலும், திரு. நா. மகாலிங்கத்துக்கும் ஓமந்தூராருக்கும் ஏற்கனவே இருந்த தொடர்பு மேலும் உறுதிப்பட்டது.

சன்மார்க்க சங்கங்களில் மாகாண மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற எண்ணமும் கோவையில்தான் உதித்தது.

### கனவும் நனவும்

1950-இல் ஓமந்தூர்ப் பண்ணையில் ஓ. பி. ஆர். இருந்த போது ஒரு கனவுகண்டார். வடலூரிலுள்ள திரு. வாகீசம் பிள்ளையின் வளமனையில் மாடியில் நின்று ஒளியைக் காண்பதாக, அக்கனவு அமைந்தது. எனவே வள்ளலார்ப் புகழைப் பரப்புவதும் அதற்காக வடலூரிலேயே போய் இருப்பதும் தம் கடமை என்று உறுதிகொண்டார்.[2]

### வடலூர் வருகை

1951-இல் ஓமந்தூரார் வடலூருக்கு வந்து அதுமுதல் அவ்வூரையே தம் வாழ்நாள் இறுதிவரை தம் இருப்பிடமாகக் கொண்டார். 7 அல்லது 8 ஆண்டுகள் திரு. வாகீசம்பிள்ளையின் வீட்டிலேயே தங்கியிருந்தார்.[3]

### கிரிதாரி பிரசாத்

அருட்பா அரசு, திரு. கிரிதாரிபிரசாத் அவர்களுக்கும் ஓமந்தூராருக்கும், ஓமந்தூரார் வடலூருக்கு வந்த பிறகு நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

---

1. இப்போது கோவை சன்மார்க்க நிலையத்தின் தலைவராக திரு. நா. மகாலிங்கம் இருந்து வருகிறார்கள்.
2. தகவல்: டாக்டர் சீனிவாசன்
3. தகவல்: திரு வாகீசம்பிள்ளை

அருட்பா அரசு கிரிதாரி பிரசாத், மலேசிய சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, இராமகிருஷ்ணரின் இயக்கம் போல இராமலிங்கரின் இயக்கமும் உலகம் தழுவியதாக அமையவேண்டும் என்ற ஆசையை ஓமந்தூரார் தெரிவித்தார் என்பதை இந்நூலில் பிரிதோர் இடத்தில் சுட்டிக்காட்டியுள்ளோம். இக்கருத்துக்கள் இப்போது நடைமுறையில் பரவி வருவது ஓமந்தூரார் ஆன்மா சாந்தியடையச் செய்யும்.

திரு. ந. ம. இராமலிங்கர் பணி மன்றத்தின் தலைவர் என்ற முறையில் இசையோடு பாடக்கூடியவரும், தமிழ்ப் பேராசிரியருமான டாக்டர் சு. பாலச்சந்திரன், எம். ஏ., எம். லிட்., பி. எச். டி. என்பவரை இலங்கைக்கு அனுப்பி, அருட்பா முரசு கொட்டுமாறு ஆற்றுப்படுத்தினர். இதன் விளைவாக, பின்னர் இவர் அமெரிக்காவுக்கு, யுனெஸ்கோ ஆராய்ச்சியாளராகச் சென்றபோது, அங்கும் தாம் சந்தித்த பெருமக்களிடம் தமிழகத்து மண்ணில் எழுந்த திருவருட்பா தத்துவத்தை விளக்கினுர் என்ற செய்தியை 'அயல் நாடுசளில் என் அனுபவங்கள்' என்ற இவர் நூலிலிருந்து அறிகிரும்.

அமெரிக்காவில் ஆசிரமம் அமைத்து அந்த நாட்டில் பல் வேறு பகுதிகளில் அதன் கிளைகளையும் ஏற்படுத்தி, பெருஞ் செல்வாக்குடன் விளங்கும் சுவாமி சச்சிதானந்தர் மூலமாக திரு. நா. மகாலிங்கம் அந்த நாட்டில் வள்ளலார் உருவச் சிலையை நிலைநாட்டவும், 'ஜோதி வழிப்பாட்டை'ப் பரப்பவும் ஆவன செய்து வருகிருர்.

1977-இல் திரு மகாலிங்கமும், அருட்பா அரசு திரு கிரிதாரிபிரசாத்தும் அமெரிக்கா சென்று வல்லலார் புகழைப் பரப்பியுள்ளனர்.

'எமைநத்து வாயென்று எதிரிகள்கோடி
இட்டழைத்தாலும் தொடேன்''

—'பாவேந்தர் பாரதிதாசன்'

# 30

# வடலூர்ப் பணி

## நான்கு கட்டங்கள்

ஓ. பி. ஆர். 1895-இல் பிறந்தார். 1970-இல் இறந்தார். இந்த இரண்டு ஆண்டுகளையும் சேர்த்துக் கொண்டால், இவருடைய வாழ்க்கைக் காலம் 76 ஆண்டுகள் ஆகும். இக்காலப் பகுதியை ஒவ்வொன்றும் 19 ஆண்டுகள் அடங்கிய நான்கு கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.

## முதல் கட்டம்

1895 முதல் 1913 வரை உள்ள 19 ஆண்டுகள் ஓ. பி. ஆரின் இளமைக்காலம், தந்தையார் இறந்ததால், தாயார் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, இவர் (1) படிப்பை நிறுத்திக் கொண்டார்; (2) சிறு வயதில் திருமணம் செய்துகொண்டார்; (3) குடும்பச் சொத்துக்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றார்.

## இரண்டாவது கட்டம

1914 முதல் 1932 வரை அமைந்த 19 ஆண்டுகள் ஓ. பி. ஆரின் வாழ்க்கையின் சோதனைக்காலம் எனலாம். மனைவியை இழந்து, பொதுப்பணிகளில் ஈடுபட்ட காலம் இதுவே.

சாதாரணமாக மனைவியை இழப்பவர்கள் மறுமணம் செய்துகொள்வர்; அல்லது தம் இல்லத்திலேயே இருந்துகொண்டு துறவிபோல வாழ்வர். ஓ. பி. ஆர். இரு நிலைகளினின்றும் மாறுபட்டு, தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இல்லத்தை விட்டு வெளியேறி, ஆசிரமம் அமைத்துக்கொண்டார். தரிசாக இருந்த நிலங்களில் புன்செய்த் தானியங்களையும் பழத்தோட்டங்களையும் உண்டாக்கி ஒவ்வொரு மாதமும் ஈட்டிய ஈராயிரம் ரூபாய் வருமானத்தை, தூய வாழ்க்கைக் கழகங்கள் அமைக்கவும் கதர்ப் பிரசாரத்துக்கும் அரசியல் மாநாடுகள் நடத்தவும் காந்தியடிகளின் நிர்மாணக் கொள்கைகளைப் பரப்பவும் செலவிட்டார்.

## மூன்ருவது கட்டம்

இரண்டாவது கட்டத்தில் ஓ. பி. ஆர். இன்னார் என்பதை இனம் கண்டு கொண்ட ஆங்கிலேய அரசு, பின்னர் இவரை நான்கு முறை சிறையில் அடைத்தது. மூன்ருவது கட்டமான 19 ஆண்டுகளில் (1933 முதல் 1951) சிறை வாழ்க்கையையும் அதன் விளைவுகளையும் அனுபவித்தார். சிறையிலிருந்து ஒவ்வொரு தடவையும் விடுதலை பெற்றதும், இவருடைய கொள்கைகள் உறுதி பெற்றன. மக்கள் உள்ளங்களில் இவர் நிலைத்த இடம் பெற்ருர். இதனுல் மாவட்டக் கழகமும் நகராண்மைக் கழகமும் இவர் சொற்படி நடந்தன. தமிழ் நாடு மாகாண காங்கிரசின் தலைவர், சென்னைச் சட்டசபை மேலவை உறுப்பினர் பதவிகளை வகித்து, முதலமைச்சரும் ஆனுர். இக் காலமே இவருடைய வாழ்க்கையில் புகழ் ஏணிக் காலம் எனினும், மக்கள் இவர் ஆற்றிய பெரும் பணிகளை உணரவில்லை; அதற்குத் தேவையான விளம்பரத்தை இவர் செய்து கொள்ளவில்லை; இவர் முதலமைச்சராக இருந்தார் என்பதுகூடத் தமிழ் மக்கள் பலருக்குத் தெரியாது. காரணம் சிலைகள், விழாக்கள் முதலிய புற ஆரவாரங்களில் மக்கள் மயங்கி விடுகிருர்கள். பொதுமக்களின் நினைவு ஆற்றல் மிகக் குறுகியது; நேற்றும் சென்ற மாதமும் நடந்தவைதான் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்ற கூற்று ஓ. பி. ஆரைப் பொருத்தவரை உண்மையாகவே உள்ளது.

## நான்காவது கட்டம்

ஓ. பி. ஆரின் வாழ்க்கையின் இறுதிக் கட்டமான 19 ஆண்டுகள் (1951-ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து அவர் உயிர் நீத்தவரை) வடலூரில் கழிந்தன. இது அவருடைய முதிர்ந்த காலம் (இலையுதிர்காலம் என்று சொல்லுவாரும் உள்ளனர்) இக்காலத்தில் அவர் ஆற்றிய பணியே அவர் புகழ் என்றென்றும் நின்று நிலவச் செய்கிறது.

## வடலூர் வாழ்க்கை

ஓமந்தூரார் எத்தகைய சூழ்நிலையில் வடலூருக்கு வந்தார்? அவருடைய குறிக்கோள்கள் என்ன? அவர் வருவதற்கு முன் வடலூர் எவ்வாறு இருந்தது? அவர் வந்தபின் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? அவரே நிறுவிய நிறுவனங்கள் யாவை? அவற்றை நடத்த அவர் பட்ட துயரங்கள் எத்தகையவை? அவர் கையாண்ட கொள்கைகள் என்ன? அவர் முயற்சியால் வடலூரில் ஏற்பட்ட ஏனைய வளர்ச்சிகள் என்னென்ன? இன்னும் நிறைவேற வேண்டிய அவருடைய கனவுகள் எவையெவை? என்பவற்றை இக்கட்டுரையில் தெளிவுபடுத்துவோம்.

## ஓமந்தூரார் வருகை

திரு. வி. க. எழுதிய 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும் என்ற நூலில் வள்ளலாரைப் பற்றிய குறிப்பைப் படித்தபோது ஓ. பி. ஆருக்கு வள்ளலாரிடம் ஈடுபாடு ஏற்பட்டது. அந்த ஈடுபாடு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர் உள்ளத்தில் வளர்ந்து வந்தது. 1930-இல் முதல் தடவையாக அவர் வடலூருக்கு வந்தார் என்று அவருடைய நண்பர்கள் கூறுகின்றனர். 1937-இல் தாம் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் போலீசுத் துறைத் தலைவராக இருந்தபோது, ஓ. பி. ஆருக்கு வள்ளலாரிடம் ஈடுபாடு இருந்ததைக் கண்டதாகத் திரு. பார்த்தசாரதி அய்யங்கார் தெரிவிக்கின்றார்.

1949-இல் பதவியை விட்டு விலகியதும் ஓ. பி. ஆர். ஓமந்தூருக்குப் போனார். குடும்பச் சொத்துக்களைத் தம்பி திரு. ஓ. எம். லெட்சுமி நாராயண ரெட்டியார் நிர்வகித்த முறை இவருக்குப் பிடிக்கவில்லை. இருவரும் பல துறைகளில் தென்

துருவமும் வட துருவமுமாக இருந்தனர். பாகப்பிரிவினை வழக்கு நடந்து, திண்டிவனம் வெங்கடசுப்பா ரெட்டியார் 'ரிசீவர்' ஆக நியமிக்கப் பெற்றார். அப்போதே வடலூரில் சில நிலங்களை வாங்கி ஒரு கிணறும் வெட்டினார்.[1]

இக்காலத்தில் ஓமந்தூரார் ரமண ஆசிரமத்தில் தங்கி வந்தார். அப்போது அங்கு பகவான் ரமணருடைய சகோதரர் சர்வாதிகாரியாக நியமிக்கப் பெற்றார். ஒரு பொது ஸ்தாபனத்தில் சர்வாதிகாரியாக யாரும் இருக்கக்கூடாது என்று கருதி ஓ. பி. ஆர். அங்கிருந்து விடை பெற்றார். வேறு ஒரு கூட்டைத் தம் புகலிடமாகத் தேடிக்கொண்டிருந்தார்.

கிருபானந்த வாரியார் சுவாமிகள், சத்திய ஞானசபைத் திருப்பணியைச் செய்து முடித்தபோது அவ்விழாவிற்காக ஓமந்தூரார் பல நாட்கள் தங்கினார். அப்போதுதான் குருகுலம் ஆரம்பிப்பது என்ற முடிவுக்கு வந்தார். வள்ளலார் வாழ்ந்த வடலூரில் சான்றோர் பலரும் வாழவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

'நாம் இங்கே தங்கினால்தானே, மற்றவர்களையும் இவ்வூரில் இருக்கும்படி கேட்டுக்கொள்ளலாம்' என்று கருதினார்.

வாரியார் செய்த திருப்பணி நிறைவு விழாவுக்கு ஓராண்டு முன்னதாக, சுவாமி சுத்தானந்த பாரதியார் அரவிந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறி விடுவதென்று முடிவு செய்திருந்தார். அந்த முடிவு சுத்தானந்த பாரதியாருக்கும் சென்னியப்ப முதலியாருக்கும்[2] மட்டுமே தெரிந்த மறைவான

---

1. இந்தக் கிணற்று நீர், வாரியார் சுவாமிகள் நடத்திய குடமுழுக்கு விழாவின் போது மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டது என்கிறார் ஆத்தூர் ஏ. எஸ். ரெங்கா ரெட்டியார். இவர் வடலூர் குருகுலத்தில் பணிபுரிபவர்.

2. திரு. சென்னியப்ப முதலியார் ஈரோடு ஊரினர். பிறந்தது 1895 எனவே ஓமந்தூராருக்குச் சம வயதினர். திருச்செங்கோட்டில் ஓர் ஆலை நடத்திவந்தார். சைவசித்தாந்தத்திலும் தமிழ் இலக்கியத்திலும் ஆர்வம்கொண்டவர். சுவாமி சுத்தானந்த பாரதியைப் பாராட்டி இவர் 1950-இல் நடத்திய விழாவுக்கு ஓமந்தூராரை அழைத்தார். அது முதல் இம்மூவரும் சில ஆண்டுகள் ஒன்றாக இருந்தனர். ஓமந்தூராரும் சென்னியப்ப முதலியாரும் இறுதிவரை இணைபிரியா நண்பர்களாய் இருந்தனர். சேர்ந்து பல தலங்களுக்கு யாத்திரை சென்றனர். பல துறவிகளைச் சந்தித்தனர். ஓமந்தூராரின் நிறுவனங்களுக்கு இவர் அவ்வப்போது நன்கொடைகள் வழங்கியுள்ளார். சுத்த சன்மார்க்க நிலையத்தின் துணைத்தலைவராக இருந்துவருகிறார்.

முடிவாக இருந்தது. சுத்தானந்த பாரதியார் தன்னுடைய பல்லாண்டு மௌனத்தைக் கலைத்து மீண்டும் பேசலானார். அதை முன்னிட்டு திரு. சென்னியப்ப முதலியார் புதுச்சேரியில் ஒரு பெரிய விழா நடத்தி, அதற்கு ஓமந்தூராரைத் தலைமை தாங்கும்படி அழைத்திருந்தார். ஓமந்தூரார், பல்லாண்டுகளுக்கு முன்னரே சுத்தானந்தரின் நூல்களைப் படித்திருக்கிறார். இவர் துறவியாகவும், ஏற்கெனவே உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராக இருந்து அனுபவம் உள்ளவராக இருப்பதையும் முன்னிட்டு, சுவாமி சுத்தானந்தர் வடலூரில் தங்க வேண்டுமென்றும், குருகுலத்தை நடத்த அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் ஓமந்தூரார் நினைத்தார்.

ஒரு கூட்டை விட்டு வெளியேறிய சுத்தானந்த பாரதியார் மற்றொரு கூடு தேடும் பறவையாக இருந்த சமயம் அது. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக இருந்தது.

## அரசியலுக்கு முழுக்கு

1920 முதல் 1949 வரை ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் தீவிரமான அரசியல்வாதியாக இருந்த ஓமந்தூரார், இப்போது அரசியலிலிருந்து விலகிக்கொள்ள முடிவுசெய்தார்.

சாதாரணமாக எந்த அரசியல்வாதியும் (மரணம் அவர்களை விலக்கிவைத்தால் அன்றி) அரசியலிலிருந்து விலகுவதில்லை. ஒரு சில சூழ்ச்சிக்கார அரசியல் தலைவர்கள், நெருக்கடியான காலங்களில் ஒதுங்கி மதில்மேல் பூனையாக இருந்து திடிரென்று குதித்துப் பதவியை மீண்டும் கைப்பற்றுவார்கள்.

அரசியலை விட்டு வெளியேறிய பிறகு, மீண்டும் அரசியலில் நுழைய ஓமந்தூரார் விரும்பவில்லை. எக்காரணத்தைக் கொண்டும்

---

**கவியோகி சுத்தானந்த பாரதியார் (பி. 1897)** பல மொழிகள் அறிந்தவர்; பல நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தவர்; இளமையில் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டவர். வ. வே. சு. ஐயர் நடத்திய குருகுலத்தில் ஆசிரியராக இருந்தவர். 25 ஆண்டுகள் புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்தில் மௌனமாக இருந்தவர். சில நூறு நூல்களை இயற்றியவர். வடலூரில் ஈராண்டுகள் தங்கி, சுத்த சன்மார்க்க நிலையத்தின் தலைவராக இருந்தார். இப்போது சென்னை ஸ்ரீராம்நகரில் யோக சமாஜம் நடத்தி வருகிறார். திரு. சென்னியப்ப முதலியார் மூலம் ஓமந்தூராருக்கு அறிமுகமானவர்.

அவர் இந்த முடிவிலிருந்து சற்றும் பிறழவில்லை. சமயத் தொண்டில் ஈடுபடுவதென்றும் அதற்கு உரிய இடம் வடலூரே என்றும் முடிவு செய்தார்.[1]

## அன்றைய வடலூர்

ஓ. பி. ஆர். வடலூரில் வந்து தங்கிய 1951-இல் இந்த ஊர் எப்படி இருந்தது என்பதை இன்று நினைத்துப் பார்க்கவும் இயல வில்லை. இந்த முப்பது ஆண்டுகளில் அத்துணை மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1955-இல் தான் நெய்வேலித் திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. அதற்குமுன், நெய்வேலியில் ஏதோ சில சோதனைகள் மட்டும் – அதுவும் சின்னஞ்சிறு அளவில் – நடந்து கொண்டிருந்தன. நெய்வேலித் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதுகூட ஒரு கேள்விக்குறியாக இருந்தது.

அப்போது வடலூரில் எவ்விதமான தொழிற்சாலையும் கிடையாது. சாப்பிடுவதற்கு ஓட்டல் இல்லை. மின்சார வசதி கிடையாது. பாங்கு கிடையாது. தந்தி நிலையம் கிடையாது. இப்படி அடுக்கிக் கொண்டேபோய் வாசகர்களின் பொறுமையைச் சோதிக்க நான் விரும்பவில்லை. எனவே என்ன இருந்தது என்று சொல்லிவிடுகிறேன்!

சத்திய ஞானசபை

தர்மசாலை

நாலைந்து சத்திரங்கள்

சில சாதுக்கள்

சின்னஞ்சிறு பொருள் வாங்குவதற்குக்கூட, குறிஞ்சிப்பாடிக்குத்

---

1. பதவி ஆசை இல்லாதவரும், அரசியல் சகதியில் சிக்கிக் கொள்ளாமலும் பொது நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டிவந்தார். 1956 இல் பூதான இயக்கத் தலைவர் வினோபா பாவே வடலூருக்கு வந்திருந்தார். அப்போது ஓமந்தூராரும் ஓமந்தூரில் 10 ஏக்கர் நிலத்தை தானம் கொடுத்தார். வடலூரில் சுவாமி சுத்தானந்தபாரதியார், திரு. வாகீசம்பிள்ளை முதலியபலர் ஓமந்தூராரின் வேண்டுகோளுக்கு இணங்கப் பூமிதானம் செய்தனர். (தகவல் : திரு. எஸ். ஆர். எஸ். )

தான் போகவேண்டும்.[1] வடலூர் இரயில் நிலையத்தை மூடிவிடவும் இரயில் நிர்வாகத்தினர் யோசனை செய்துவந்தனர் என்கிறார், அருள்திருவாட்டி சாந்தலெட்சுமி அம்மையார்.[2] அம்மையார் மேலும் சொல்லுவதாவது:

"நான் வடலூருக்கு வருவதற்குச் சில மாதங்கள் முன்னர் ஓ. பி. ஆர். இங்குவந்தார்கள்."

"அந்தக் காலத்தில் வடலூர் வருவோர் ஒரு நாள் தங்குவதற்குக்கூட வசதி இல்லை. பேச்சுத் துணைக்குத் தக்க ஆள் கிடைக்காது."

"கட்டிடம் கட்ட ஒரு சாமானும் இங்கு கிடைக்காது கொத்தனாரைக் குறிஞ்சிப்பாடியிலிருந்து வரவழைக்க வேண்டும். கல், மண், சிமிண்டு, கூலி ஆள் எல்லாம் வெளியூரிலிருந்துதான் வரவேண்டும். இந்தச் சூழ்நிலையில் ஓ. பி. ஆர். எவ்வளவோ இன்னல்களுக்கு இடையில், இந்த அமைப்புக்களை உருவாக்கினார்."

சிலசமயம் ஓ. பி. ஆருக்கே மனக்குழப்பம் ஏற்பட்டுவிடும். உடனே 'புறப்பட்டு வா' என்று ஒரு வரியில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கு அஞ்சலட்டை எழுதுவார். அவர் திருச்சியிலிருந்து வடலூருக்கு விரைந்து சென்று, தக்க ஆலோசனை கூறி, தேவையான உதவிகளைச் செய்வார். 'வரித் தொல்லை, நிலத் தகராறு, மின்சாரத்துறையின் இடையூறு ஆகியவற்றைச் சீராக்குவேன்' என்கிறார் திரு. விசுவநாதம்.

## ஓ. பி. ஆர் தொடங்கிய நிறுவனங்கள்

ஓ. பி. ஆர். வடலூரில் பின்வரும் நிறுவனங்களைத் தொடங்கினார்:

1. சுத்த சன்மார்க்கநிலையம்
2. வள்ளலார் குருகுலம் உயர்நிலைப்பள்ளி
3. அப்பர் சான்றோர் இல்லம்
4. அப்பர் அனாதை ஏழைமாணவர் இல்லம்
5. இராமலிங்கர் தொண்டர் இல்லம்.

---

1. தகவல்: ஆத்தூர் ஏ. எஸ். ரெங்கா ரெட்டியார்
2. திருவாட்டி சாந்தலெட்சுமி அம்மையார், 1951 முதல் வடலூரில் தவயோகியாக இருந்துவருகிறார்கள்.

18—6—1951-இல் இச்சங்கம் பதிவு செய்யப்பெற்றது. இச்சங்கத்தின் நோக்கங்கள் இன்னின்ன என்று அப்போதே ஓர் அறிக்கை அச்சிடப்பட்டது. அது வருமாறு:

# சங்க நோக்கங்கள்

1. இந்த நிலையத்தை வடலூருக்கண்மையில் நிறுவ வேண்டும்.

2. அங்கு சன்மார்க்க சேவை செய்யப் பயிற்சி அளித்தலோடு, ஒரு சிறந்த குருகுலமும் ஏற்படுத்த வேண்டும். சன்மார்க்க சாதகர்களுக்குத் தன்னலமற்ற சேவா மார்க்கம், பக்தி மார்க்கம், ஜீவகாருண்யத் தொண்டு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவேண்டும்.

3. இந்நிலைய அங்கத்தினர்களும், இந்நிலையத்தில் தங்கியிருப்போரும் அருட்பா, கீதை, தேவாரம், திருக்குறள், திருவாசகம் திவ்யப்பிரயந்தம், உபநிஷத்துக்கள், பாரதசக்தி, யோகசித்தி, பைபிள், மகாத்மா காந்தியின் அருள்வாக்குகள் முதலியவற்றின் போதனைகளைப் பின்பற்றி ஒழுகுவர்.

4. ஜாதிபேதமின்றி அனைவரும் பிரார்த்தனை செய்யவும், பஜனை, சொற்பொழிவுகள், கல்வி முதலியவை நடத்தவும் ஒரு தியான மண்டபம் கட்டப்படும்.

5. இது சாதகர்களால் நடத்தப்படும் விவசாயப்பண்ணை ஒன்றையும் கொண்டு சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும். அனைவரும் உணவு உற்பத்தி செய்தாக வேண்டும்.

6. ஒரு இயற்கை ஆரோக்ய ஸ்தலம் ஏற்படுத்தி மக்கள் எப்படி தமக்குத்தாமே வைத்யர்களாக இருந்து ஆரோக்யமாக வாழ்வதென்பது போதிக்கப்படும்.

7. இங்கு யோகமார்க்கத்திலும், கலைகளிலும், விஞ்ஞானத்திலும் பயிற்சி அளிக்கப்பட்ட சாதகர்கள் சுத்த சன்மார்க்க நற்போதகர்களாகக் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் அனுப்பப் படுவார்கள்.

8. தமிழ்நாட்டுத் தீர்க்கதரிசிகளின் பாடல்களில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை உலக முழுமைக்கும் எடுத்துக் காட்டத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகள் நடத்தப்பட வேண்டும்.

9. வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், யோகி சுத்தானந்த பாரதியார் இவர்களது அருமையான எழுத்துக்களைப் பத்திரமாகச் சேகரித்து அச்சிட்டு வெளியிடுவதோடு அதற்கென ஒரு அச்சகம் ஏற்படுத்தவும் வேண்டும்.

10. இந்நிலைய அங்கத்தினர்கள் பிறருக்கு உபகாரம் செய்யவும், வறுமை, அறியாமை, நோய், அடிமைத்தனம் முதலிய பிரச்சினைகளைத் தீர்க்கவும் தொண்டாற்ற முன்வருவார்கள். இத்துடன் பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் முதலியவற்றிலும் ஈடுபடுவார்கள்.[1]

11. இந்நிலையம் திக்கற்றவர்களுக்கும், அனாதைகளுக்கும் ஒரு இல்லம் அமைத்து அவர்களுக்கு வேலை, உணவு அறிவு முதலியவற்றை நல்கும்.

---

1. இப்போது சுத்த சன்மார்க்க நிலையத்தின் தலைவராக இருக்கும் திரு. மகாலிங்கம், இந்தப்பணியைச் செய்து வருகிறார் என்று கூறினால் பலருக்கு வியப்பாக இருக்கும்.

அடிக்கடி புயல் வீசி வெள்ளச்சேதம் ஏற்படும் பகுதி தஞ்சை மாவட்டத்து வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காட்டின் சுற்றுப்புறம். உலக தாவர உணவு உண்பவர்கள் இயக்கத்தினரிடமிருந்து* வேதாரண்யம் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலத்துக்கு இரண்டு லட்சம் ரூபாய் நன்கொடையைத் திரு. மகாலிங்கம் வாங்கிக் கொடுத்திருக்கிறார். இந்த நிதி உதவியில் இப்போது வெள்ளப் பாதுகாப்புக்கூடம் குருகுலத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. வெள்ளம் ஏற்பட்டதும் இவ்வூர் மக்கள் இங்கு தஞ்சமடைய ஏற்றதாக உறுதியாகவும், எல்லா வசதிகளுடனும் இந்தக்கூடம் கட்டப்படும்.

---

* International Vegetarian Congress

12. காந்தியடிகளின் அடிப்படைக் கல்வித்திட்டம் இந் நிலையத்தின் குருகுலத்தில் மேற்கொள்ளப்படும். இக்கல்வி விவசாயம், குடிசைத்தொழில் முதலிய வற்றின் மூலம் போதிக்கப்படும். இங்கு தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் முதலியவைகளும் போதிக்கப் படும்.

13. விவசாயம், தோட்டவேலை, கால்நடை வளர்த்தல். நூற்றல், நெய்தல், தைத்தல், கன்னரவேலை, தச்சு வேலை, கொல்ல வேலை, விவசாயக் கருவிகள் செய்தல், தோல் பதனிடுதல், விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட இதர குடிசைத் தொழில்கள் முதலியவை குருகுலத்தில் கற்பிக்கப்படும். விஞ்ஞான ஆராய்ச்சிக்கான வசதிகளும் செய்து கொடுக்கப் படும். அனைவருக்கும் சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்ளும் இலட்சியத்தை வற்புறுத்திக் கிராமப் புனருத்தாரணத்தை நடைமுறையில் கொண்டுவர முயற்சி செய்யப்படும்.

14. நமது முயற்சிகளின் முக்கியமான நோக்கம் சாந்தி நிகேதனம், காங்கிரி, தயாள்பாக், வார்தா இவற்றைப் போன்ற மேன்மையும், உபயோகமுள்ள ஒரு நிலையம் ஏற்படுத்தலே.

15. மனித சமூகத்திற்கு கடவுள் பிதா ஆவார். மானிடர் கள் அவரது அருட் குழந்தைகளாவர். இங்கு எப்பொழுதும் எவ்விதமான இனப்பாகுபாடோ ஜாதிமத முக்கியத்துவமோ காட்டப்படாது. நாம் இங்கு இராமலிங்கரின் சமரச போதனையைப் பின் பற்றுவோம். ஆத்மநேசமும் ஆத்ம சமத்துவமுமே நமது முக்கிய குறிகோள்களாம்.

16. இப்பெரும் கோட்பாடுகளை நிறைவேற்றப் பணிபுரிய யோகி சுத்தானந்த பாரதியாரவர்கள் ஒத்துக் கொண்டிருப்பதால் அவர்களை நமது தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளோம்.

சங்க அலுவல்களின் பொறுப்பை ஏற்று நடத்தும் நிர்வாகக் கமிட்டியினரின் பெயர்களும், தொழில்களும், விலாசமும் கீழே தரப்பட்டிருக்கின்றன;

1. தலைவர்: சுத்தானந்த பாரதியார், புதுயுக நிலையம், புதுவை.

2. உபதலைவர்: ஓ. பி. ராமசாமி ரெட்டியார், மிராசுதார், ஓமந்தூர், வயா. திண்டிவனம்.

3. காரியதரிசி: ஜி. வாகீசம் பிள்ளை, மிராசுதார், பின்னலூர், பின்னலூர் போஸ்டு.

4. உதவிக்காரியதரிசி: எம். சின்னசாமி ரெட்டியார், மிராசுதார், திருவெண்ணை நல்லூர்.

5. நிதியாளர்: ஓ. பி. ராமசாமி ரெட்டியார், மிராசுதார். ஓமந்தூர்.

6. அமைப்பாளர்: எம். சின்னசாமி ரெட்டியார், மிராசுதார், திருவெண்ணை நல்லூர்.

அங்கத்தினர்கள்

7. சச்சிதானந்தம் பிள்ளை, ரிஜிஸ்டிரார், அண்ணாமலை யுனிவர்சிடி, சிதம்பரம்.

8. திரு. சென்னியப்ப முதலியார், "பாரதி மில்ஸ்" சொந்தக்காரர், புதுவை.

9. திரு. முருக. கிருபானந்தவாரியார், ஆசிரியர், "திருப்புகழ் அமிர்தம்" சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

10. திரு. பி. நாராயணசாமி நாயுடு, டிரஸ்டி, "தெய்வ நிலைய கழகங்கள்" வடலூர், உய்யக்கொண்டராவி.

சந்தா முதலிய கட்டண விபரம்

1. ரூ. 4000மும் அதற்குமேலும் ஒரே தடவையிலோ (அ) 4 வருடத்திற்குள்ளோ செலுத்துபவர்கள் போஷகர்கள் ஆவர்.

2. ரூ. 1000-மும் அதற்குமேல் 4000-க்குள்ளும் ஒரே தடவையிலோ (அ) மூன்று வருடத்திற்குள்ளோ செலுத்துபவர்கள் உபபோஷர்கள் ஆவர்.

3. ரூ 500 செலுத்துபவர்கள் ஜீவிய அங்கத்தினர் ஆவர்.

4. ஆண்டு சந்தா ரூ. 12-ம், சேர்வு கட்டணம் ரூ 1-ம் செலுத்துபவர் சாதாரண அங்கத்தினர் ஆவர்.

சுத்த சன்மார்க்க நிலையத்திற்காக அன்பர்களிடமிருந்து ரூ. 50,000 வரை நன்கொடை கிடைத்தது. பல அன்பர்கள்[1] நன்கொடையாக வழங்கிய நிலமும் அரசாங்கத்தினர் வழங்கிய தரிசும் ஓமந்தூரார் விலைக்கு வாங்கிய நிலமுமாக வடலூர்ப் பகுதியில் 300 ஏக்கர் நிலம் கிடைத்தது. கரம்பாய்க் கிடந்த இந்தக் காடுகளைப் பண்படுத்தும் கடுமையான பணியில் முதுமை வயதில் ஓமந்தூரார் முழுமூச்சாக முனைந்தார். 450 அடி, 500 அடி ஆழம்கூடத் துளைத்துக் குழாய் இறக்கி, அதைச் சுற்றிலும் பெரிய கிணறு வெட்டி, எண்ணெயில் இயங்கும் இயந்திரங்களை வைத்து, நீர்பாசன வசதி செய்து, மா பலா கொய்யா நெல்லி சாத்துக்குடி எலுமிச்சை முதலிய பழச்செடிகளை 20 ஏக்கரில் உண்டாக்கினார்.

சேப்ளாநத்தத்தில் 144·80 ஏக்கரும், மனகதியில் 111·42 ஏக்கருமாக மொத்தம் 256·22 ஏக்கர் தரிசு நிலத்தை ஓமந்தூரார் சென்னை அரசாங்கத்திடமிருந்து, திரு. குமாரசாமிராஜா காலத்தில் சுத்த சன்மார்க்க நிலையத்துக்காகப் பெற்றார். இது தவிர 14·88 ஏக்கரை ஏலத்தில் வாங்கினார்.

தரிசு நிலங்களே ஆயினும், ஓ. பி. ஆர். தொட்டதெல்லாம் துலங்க, பட்டதெல்லாம் பரிமளிக்க வடலூரில் வாழ்ந்து, இந்த நிலங்களைத் தம் உழைப்பால் வளப்படுத்தி, பொன் கொழிக்கும் பூமியாக்கினார்.

"அறம் பழுக்கும் தருவே யென்குருவே யென்றன்
ஆருயிர்க் கொரு துணையே யரசே பூவை
நிறம் பழுக்க அழகொழுகும் வடிவக்குன்றே"

என்று வடலூர் வள்ளலார் இராமனைப் பாடிப் பரவுவார். அந்த

1. உய்யகொண்டராவி திரு. வி. ரங்கசாமி நாயுடு பின்னலூர் திரு. ஜி. வாசிசம் பிள்ளை திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆகியோர் பல ஆண்டுகள் ஓ. பி. ஆருடன் இருந்து வடலூரில் எல்லாவுகையிலும் உதவினர்.

இராமன் பெயர் தாங்கிய ஓ. பி. ஆர். வடலூருக்கு வந்தது, வடலூரின் பேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

வடலூரிலும் சுற்றுப்புறத்திலும் உள்ள விவசாயிகளுக்கு உபயோகமாகக் குழாய்க்கிணறுகள் பல அமைக்க அரசாங்கத்தில் ஏற்பாடு செய்தது, ஓ. பி. ஆரின் பெரிய சாதனை எனலாம். இதனால் இப்பகுதி நிலங்கள் வளமாக இருப்பதை இன்று காணலாம்.

விவசாயிகள் எவ்வாறு நிலங்களைக் கவனிக்கவேண்டும் என்பதற்கு ஓ. பி. ஆர். வழிகாட்டியாக விளங்கினார். மழையாயினும் வெயிலாயினும் நாள்தோறும் இந்த முன்னாள் முதலமைச்சர் தாம் நட்ட செடிகள் அனைத்தையும் நேரடியாகப் பார்த்து—ஒவ்வொரு கன்றாகவும் செடியாகவும் பார்த்து—அவற்றின் குறை என்ன, தேவை என்ன என்பதை அறிந்து, தண்ணீர் ஊற்றவேண்டுமானால் ஊற்றச் செய்து, உரம் போட வேண்டுமானால் போடச் செய்து, கம்பு அடைப்பு தேவையானால் அடைத்து அதன் பிறகு குருகுலத்துக்குத் திரும்புவார். இலை தழைகள்கூட கீழே உதிர்ந்துவிடச் சம்மதிக்கமாட்டார்.

முந்திரிச் செடிகளைத் தாமே நடுவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பனங்கொட்டை வரவழைத்துப் பனைமரம் பயிரிட்டார்.

அமைதியைவிட மேலான ஆனந்தம் வேறு எதுவும் இல்லை. உண்மையான அறிவின் மூலம் மன விடுதலை பெற்றவனுக்கு மனத்திலும் அமைதி இருக்கும், செயலிலும் அமைதி இருக்கும் என்றார் புத்தர். இந்த அமைதியையும் மகிழ்ச்சியையும், மரம் செடி கொடிகளை நட்டபோதும் அவற்றைப் பேணிய போதுமே ஓ. பி. ஆர். அடைந்தார்.

வறட்சிக்குப் புகழ்பெற்ற இராமநாதபுர மாவட்டத்தில் காரைக்குடி முதல் இராமேசுவரம் வரை இரயில் பயணம் செய்தார் ஓ. பி. ஆர்.; இந்த மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் புளியமரங்களையாவது வைக்கலாமே என்றார்.[1]

---

1. தகவல்: டாக்டர் எஸ். சுப்பிரமணியம் காரைக்குடி (சட்டமன்ற உறுப்பினர் 1947-1952)

## வள்ளலார் குருகுலம்

1953 செப்டம்பர் 28, விஜயதசமி நன்ஞளில் வள்ளலார் குருகுலத்தை ஓ. பி. ஆர், ஆரம்பித்தார். அப்போது கட்டிடம் எதுவும் கட்டப்படாததால், பண்ணுருட்டி விழமங்கலம் திரு. சொக்கலிங்கம் செட்டியார் இசைவு பெற்று வடலூரில் உள்ள அவருடைய சத்திரத்தில் வாடகையில்லாமல் நடத்தப் பெற்றது.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அன்புடன் வழங்கிய நிலத்தில் வள்ளலார் குருகுலத்துக்கான பள்ளிக் கட்டிடங்கள், தியான மண்டபம் சமையல் விடுதி முதலியவற்றை ஓமந்தூரார் கட்டினுர்.

பள்ளிக்கட்டிடம் 16—10—1955 இல் தமிழ்நாடு அரசின் கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியன் முன்னிலேயில் ஸ்ரீ சித்பவானந்த சுவாமிகளால் திறந்துவைக்கப்பெற்றது.

இக்குருகுலத்தில் பயிலும் மாணவர்களுக்கு கடவுள் பக்தி யுடன் ஒழுக்கமும் விவசாயம், கூடிய ஆதாரக் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்கள் வாழ்நாளில் தன்னம்பிக்கை யுடன் கண்ணியமாக வாழ்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பது ஓமந்தூராரின் நோக்கமாக இருந்தது.

## கல்வியில் ஆர்வம்

ஓமந்தூராருக்கு எப்போதும் கல்வியில் ஆர்வம் இருந்தது. இது குறித்து 1958 அளவில் தம்மிடம் வடலூரில் ஓ. பி. ஆர். கூறிய ஒரு கருத்தை திரு நெ. து. சுந்தரவடிவேலு தெரிவிக் கிருர். அது வருமாறு:

"குழந்தைகள் 6 வயதில் படிப்பைத் தொடங்குவது என்ற ஏற்பாட்டால் பின்தங்கிய சமூகத்தினர் பாதிக்கப்படுவார்கள். ஐந்து வயதிலேயே பள்ளியில் சேர்த்துவிடவேண்டும். காமராசரிடம் சொல்லி இந்த மாறுதல்களைச் செய்துவிடு என்ருர் ஓ. பி. ஆர். அப்படியே திரு. காமராசரிடம் சொன்னேன். அவரும் ஒப்புக்கொண்டு ஆணை பிறப்பித்தார்."

தமிழ் நாட்டில் கல்வி நிலையங்கள் நிறுவி நன்முறையில் நடத்தியவர்களையெல்லாம் ஓ. பி. ஆர். வடலூரில் தாம் நடத்திய விழாக்களுக்கு அழைத்துப் பெருமைப்படுத்தினார். இப்பெரியவர்கள் பெயர்கள் பின்வருமாறு:

திருப்பராய்த்துறை ஸ்ரீ. சித்பவானந்த சுவாமிகள் மாம்பாக்கம் திரு. இளவழுனர் பெரியநாயக்கன் பாளையம் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் வேதாரண்யம் சர்தார். வேதரத்தினம் மதுரை கருமுத்து தியாகராசச் செட்டியார் வாலாஜாபாத் திரு. மாசிலாமணி முதலியார்

## இராமலிங்கர் தொண்டர் இல்லம்

இராமலிங்கர் தொண்டர் இல்லத்தையும் ஓ. பி. ஆர். நிறுவினார். பசி, பிணி, வறுமை, அறியாமை முதலிய சமூகத் தொண்டும் செய்யவேண்டும் என்பதும் அவருடைய திட்டமாக இருந்தது.

## அப்பர் அனாதை ஏழை மாணவர் இல்லம்

இக்குறிக்கோளை நிறைவேற்ற, முதல் படியாக அப்பர் அனாதை ஏழை மாணவர் இல்லம் 14—9—1961 இல் தொடங்கப் பெற்றது. ஓ. பி. ஆர். இவ்விடுதியின் வாயிலில் ஒரு கேணியை வெட்டி, பொய்கை ஆழ்வார் வாவி என்று அதற்குப் பெயரிட்டார்.

## ஆயுர்வேத வைத்தியசாலை

சுத்த சன்மார்க்க நிலையப் பணிகளில் ஓமந்தூராருக்குப் பல வகையாலும் உதவி ஒத்துழைத்த திரு. வாகீசம் பிள்ளை அவர்கள், தம்முடைய கணபதி இல்லத்தில், ஓர் ஆயுர்வேத வைத்தியசாலை நடத்தி ஏழைப் பிணியாளர்க்கு இலவச சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்கள்.

குருகுலத்தின் செயலாளராக 1956 முதல் 1962 வரை இருந்து அரும்பணி புரிந்த, சுப்பிரமணியபுரம் திரு. திருவடியா

பிள்ளையும் குறிப்பிடத் தக்கவர் ஆவார். இவர் தம் ஊரில் வள்ளலார் பெயரால் இராமலிங்கம் உயர்நிலைப்பள்ளியை நிறுவி நடத்தி வருகிறார்.

## தியான மண்டபம்

1955 இல் ஓ. பி. ஆர். மணிவிழா நடைபெற்றது. விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் கிளியனூர் திரு கே. எஸ். வெங்கடகிருஷ்ண ரெட்டியார், சிறுவந்தாடு திரு. சின்னசாமி ரெட்டியார், சிறுவந்தாடு திரு. லெட்சுமிநாராயண ரெட்டியார் ஆகியோர் ஓ. பி. ஆருக்கு ஒரு பணமுடிப்பு வழங்கத் திட்டமிட்டனர். நான்கு நாட்களில் ரூ. 60,000 வசூலித்து, அவருக்கு வழங்கினர். இந்த நிதியில் ரூ. 25,000, வடபாதிமங்கலம் திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் வழங்கிய ரூ 8,000, புதுவை பாரதி மில்ஸ் திரு. சென்னியப்ப முதலியார் வழங்கிய ரூ 10,000 புலம்பாக்கம் திரு. முத்துமல்லா ரெட்டியார் வழங்கிய ரூ. 3,000 ஆகிய நன்கொடைகளைக் கொண்டும், ஓ. பி. ஆர். அழகியதொரு தியான மண்டபத்தை–திருப்பராய்த்துறையில் சுவாமி சித்பவானந்தர் கட்டியிருப்பதை போல்–கட்டினார். இந்த மண்டபம் 1—9—1958 இல் அன்றைய முதலமைச்சர் திரு. காமராசர் தலைமையில், சித்தலிங்க மடம் தவத்திரு ஞானானந்த சுவாமிகளால் திறந்துவைக்கப் பெற்றது.[1]

## அப்பர் சான்றோர் இல்லம்

வள்ளலார் வாழ்ந்த வடலூரில் அவருடைய கொள்கைகளில் ஈடுபாடு உள்ள சான்றோர் பலர் எப்போதும் இருந்து வரவேண்டும் என்ற எண்ணம் ஓ. பி. ஆருக்கு இருந்தது. அதற்காக ஓர் இல்லம் அமைத்து, உழவாரப் பணி செய்த அப்பர் பெயரை

---

1. ஓ. பி. ஆர். மணிவிழாவில் பல துறவிகளும் பெருமக்களும் வந்திருந்து புதிதாகக் கட்டப்பெற்ற பல கட்டிடங்களைத் திறந்தனர். அப்போது சிறப்புரை ஆற்றிய, வாகீச கலாநிதி திரு. கி. வா. கூறியதாவது:

"..................அவர்கள்..................திறந்தார்கள்.
"..................அவர்கள்..................திறந்தார்கள்.
நான் எதைத் திறக்கப்போகிறேன் என்று நீங்கள் நினைக்கக்கூடும் நான் என் வாயைத் திறக்கிறேன்"

இட்டார். இந்த இல்லம் திருவண்ணாமலை திரு. நாராயண ரெட்டியார், கடலூர் திரு. அழகானந்த முதலியார் முதலிய பல அன்பர்கள் வழங்கிய ரூ. 25,000 நன்கொடையைக் கொண்டு கட்டப்பட்டது. இதை, மயிலம் தவத்திரு. சிவஞான பாலய சுவாமிகள் திறந்துவைத்தார்கள்.

இந்த இல்லத்தில் மிக ஏழையானவர்களையே ஓ. பி. ஆர். சேர்த்துக் கொள்வார். உறவினர் பலர் ஓ. பி. ஆரை அணுகி, உரிமை பாராட்டித் தங்கள் குழந்தைகளை இவ்விடுதியில் சேர்த்துக்கொள்ள வேண்டினர். ஓ. பி. ஆர். அத்தகைய சலுகைகளுக்கு இசையவில்லை. தாய்தந்தையர் இல்லாத ஏழை மாணவர்க்குமட்டுமே இடம் கொடுத்தார் என்கிறார், சுத்த சன்மார்க்க நிலையத்துத் தோப்புக்களின் கௌரவ மேலாளர் வடலூர்ச் செல்வர் திரு. இராமமூர்த்தி ரெட்டியார்.

ஓ. பி. ஆருடன் பல்லாண்டுகள் பழகிய இவர் மேலும் கூறுவதாவது ;

> "இந்த இல்லத்துக்கு ஆண்டு தோறும் அரசாங்க மானியம் கிடைத்துவந்தது. கணக்குகளைத் தணிக்கை செய்ய வந்த அலுவலர் ஒருவர் லஞ்சம் கேட்டதாக அறிந்து, ஓ. பி. ஆர். அரசாங்க மானியம் தேவையில்லை என்று எழுதியதோடு அதைப் பெறவும் மறுத்தார்."

ஓ. பி. ஆர். அமைத்த நான்கு நிலையங்களில், பள்ளிமட்டுமே அரசினர் உதவி பெறுவது. ஏனைய நிலையங்கள் யாவும் அரசினரின் உதவியன்றி நிகழ்வன.

## திலகவதியார் உணவு விடுதி

திருச்சி திரு. சோமசுந்தர ரெட்டியார் வழங்கிய ரூ. 12,000 உள்படக் கிடைத்த நன்கொடைகளைக் கொண்டு, ஓர் உணவு விடுதி கட்டப்பட்டது. சைவம் தழைக்க நிலைத்த பணிபுரிந்த திலகவதியார் பெயரால் விளங்கும், இக்கட்டிடம் 1—9—1958-இல் திறந்து வைக்கப்பெற்றது.

## கொள்கைகள்

ஓ. பி. ஆர். தம் பணிகளுக்குப் பலரிடம் நன்கொடை பெற்ற போதிலும், சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்தார். அறநெறியாளர் பணத்தை மட்டுமே, அறவழியில் ஈட்டப்பட்ட பணத்தை மட்டுமே அவர் நன்கொடையாய் பெற்றுக் கொண்டார்.[1]

ஒரு தடவை, ஒருவர் ஓ. பி. ஆரிடம், குருகுலத்துக்கு நன்கொடை வழங்க முன்வந்தார். "நீ தப்பான ஆள். ஏதோ நீ செய்த தவறுகளிலிருந்து தப்பிக்க வழி பார்க்கிறாய். போ, உன் பணம் வேண்டாம்" என்று சொல்லிவிட்டார்.[2]

அருட்பாவை மாணவர்கள் நல்ல முறையில் பாடவேண்டும் என்று ஓ. பி. ஆர். விரும்பினார். அதற்காக நியமிக்கப்படும் ஆசிரியர் சம்பளத்துக்கு அரசினர் மானியம் கிடைக்காது. எனவே, தம் செலவிலேயே அதற்காக ஓர் ஆசிரியரை நியமித்தார்.

மற்றும், ஓ. பி. ஆர். கடைப்பிடித்த கொள்கைகளையும், குருகுலத்தில் கடைபிடிக்கவேண்டும் என்று அவர் தமக்கு அறிவுரை வழங்கியவற்றையும் ஓ. பி. ஆர். நிலையங்களின் கௌரவச் செயலாளரும் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலைய நிறுவனருமான தவத்திரு ஊரன் அடிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

(1) குருகுலத்து எல்லைக்குள் பத்துத் தேய்க்கவோ பெருக்கவோ வேறு எந்தவித வேலைக்கோ பெண்களை வரவழைக்கக்கூடாது. எக்காரணத் தாலும் இவ்வட்டாரத்தில் பெண்வாடை கூடாது.

(2) நிலங்களைக் குத்தகைக்கு விடக்கூடாது.

(3) வடலூரில் உள்ள எந்த நிறுவனத்திலும் இசை முதலிய நிகழ்ச்சிகளுக்குப் பெண்களை அழைக்கக் கூடாது.

(4) குருகுல வட்டாரத்தில் ஒருவரும் காப்பி குடிக்கக் கூடாது.

---

1. தகவல்: வடலூர் திரு. இராமமூர்த்தி ரெட்டியார்.
2. தகவல்: நெய்வேலி திரு. வி. எஸ். சண்முகசுந்தரம்

(5) பனைவெல்லம் உபயோகிக்க வேண்டும்; ஆலைச் சர்க்கரையைப் பயன்படுத்தக்கூடாது.

(6) சிறப்பு விருந்தினர்க்கு நாட்டுச் சர்க்கரையைப் பயன்படுத்தலாம்.

(7) இறைச்சி உண்ணுதவர்களையும் புகை பிடியாதவர்களையும் மட்டுமே பள்ளி ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும். இக்கொள்கைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதாக அவர்களிடம் உறுதிமொழி எழுதி வாங்கவேண்டும்.

மேலும், பள்ளி ஆசிரியர்கள் முதல் பணியாளர் வரை அனைவரும் தொண்டு உள்ளம் படைத்தவர்களாக இருக்க வேண்டுமே தவிர, பணம் பெறுவதற்காக வேலை செய்பவர்களாக இருக்கக்கூடாது என்று ஓ. பி. ஆர். கருதினுர். 'அவர் தன் சொத்து முழுவதையும் குருகுலத்துக்கு வழங்கினுர். எனவே ஆசிரியர்களும் குறைந்த சம்பளம் பெற்று, குருகுலத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு எளிய வாழ்வு வாழவேண்டும்'' என்று விரும்பினுர்.[1]

## கோபமும் குணமும்

ஓ. பி. ஆரைப்பற்றி இவருடன் பழகியவர்களைக் கேட்டால் "மிகக் கோபக்காரரா்'' என்று சொல்லுவர். இவரிடம் குணங்களும் ஏராளமாக இருந்தன. குணம் இருக்கும் இடத்தில்தானே கோபமும் இருக்கும்.

"குணம் என்னும் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

என்ருர் வள்ளுவர். ஓ. பி. ஆர். நேர்மைக்கும் தியாகத்துக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்ததால் மற்றவர்களும் அவ்வாறே இருக்கவேண்டும் என்று இவர் எதிர்பார்த்தார். நூற்றுக்கு நூறு நேர்மையுடன் இருக்க எல்லோராலும் இயலாது என்பதை இவர் ஒப்புக்கொள்ளவே மாட்டார். இந்தக் காரணத்தால் இவர் பலருடனும் மோத நேரிட்டது.

---

1. தகவல்: புலவர் நடராசன், நெய்வேலி

பட்ட துயரங்கள்

குருகுலத்தை நடத்துவதில் அவர்பட்ட துயரங்கள் பல. முதலாவதாக வடலூரில் 1960-ல் ஒரு பாங்குகூட இல்லை. குறிஞ்சிப்பாடியில் பாங்கில் பணம் போட்டு வைத்திருந்தார். கையில் 50, 100 தான் வைத்துக் கொள்வார். திடீரென்று பணம் போதாமல் இருக்கும்.

அரசு மானியம் உரிய காலத்தில் வராது. ஓ. பி. ஆர். தம்மிடம் இருந்த பணத்தில் நிலம் வாங்கியிருப்பார், கட்டிடங்கள் கட்டும் வேலை நடந்துகொண்டிருக்கும். அப்போதெல்லாம் பள்ளி நடைமுறைச் செலவுகளுக்கு கடலூர் திரு என். வி. பாஷ்யம் ரெட்டியார், சென்னியப்ப முதலியார் ஆகிய குறிப்பிட்ட சிலரின் உதவியை நாடிப் பெற்றார்.

ஓ. பி. ஆருக்கு ஏற்பட்ட வேறுபல பிரச்சினைகளை அவர், சுப்பிரமணியபுரம் அன்பர் திருவடியா பிள்ளை அவர்களுக்கு எழுதிய பின்வரும் கடிதங்களால் உணரலாம்:

8—3—1957

"ஓடுவாங்க 6—3—57-ல் சென்றவர்கள் இன்னும் வரவில்லை.........

சமையல் கூடம் வேலையைப் பூர்த்திசெய்ய கொத்தனார்களை உடனே அனுப்பிவையுங்கள்......

இங்கு இருக்கும் உபாத்தியர்களில் சிலர் ஒழுக்கக் கேடாக இருப்பதால் மூன்று மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

* * *

17—4—1958

நிலையத்திற்காக மரம் அறுக்க உடனே ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல மரமாக கணு இல்லாமல் தேர்ந்து எடுத்து அறுக்க வேண்டும். .............. தச்சர்கள் நாளை வருகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். போஸ்

கலப்பைக்கு ஆணிகள் வளைத்து வாங்கி வரவும்.
வாள்காரர் இருவரை இங்கு வரச்செய்யவும்.
மரம் அளவு $14\frac{3}{4} \times 2 \times 20\frac{1}{2}$

* * *

7—12—1959

இங்கு தேசூர் ஒட்டர்கள் கொலுத்துவேலை செய்பவர்கள் 15 பேர் இன்று மாலை 3 மணிக்கு வந்திருக்கிறார்கள். நான் இரவு 7 மணி இரயிலுக்குச் சென்னைக்குப் போகவேண்டும்.

ஆசாரியுடன் நாளைக் காலையில் வந்து மனையைச் சதுரித்து கடகால் போட ஏற்பாடு செய்யவேண்டும். வந்திருக்கிற வேலைக்காரர்களுக்கு நாளை வேலை கொடுக்காவிட்டால், திரும்பவும் அவர்கள் வருவது சந்தேகம்.

20 கடைகளுக்குக் கடகால் போடவேண்டும். 10 கடைகள் உள்கூடு 10 அடி அகலம், 14 அடி நீளம் தாழ்வாரம் இரண்டு பக்கமும் 7 அடி முன்னும்பின்னும்.

மிகுதி 10 கடைகளுக்கு உள்கூடு அகலம் 11 அடி. நீளம் 14 அடி. தாழ்வாரம் மேலே கண்டபடி.

நான் இல்லாததால் தங்களுக்கு சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

முந்திரி, மா, பலா

நெல் முதலிய விளையும் நிலங்கள் தவிர பின்வரும் தோட்டங்களையும் ஓ. பி. ஆர். சுத்த சன்மார்க்க நிலையத்திற்குத் தேடி வைத்துள்ளார்.

1. சேப்ளாநத்தம் கிராமம் — சுமார் 80 ஏக்கர் பரப்பில் முந்திரிக்காடு.

2. சேப்ளாநத்தம் – பழத்தோட்டம் – 28 ஏக்கர் பரப்பு. முந்திரி, மாமரங்கள், பலா மரங்கள்.

3. பார்வதிபுரம் (வடலூர்) மேற்கு-சுமார் 9 ஏக்கர் முந்திரி.

4. பார்வதிபுரம் (வடலூர்) கிழக்கு-சுமார் 3 ஏக்கர் முந்திரி.

5. பார்வதிபுரம் (வடலூர்) வடக்கு-சுமார் 12 ஏக்கர் முந்திரி.

## சொத்துக் கணக்கு

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறள்வழி. எந்த வேலையையும் இனிது முடிக்க, தக்கவர் களை ஓ. பி. ஆர். பயன்படுத்திக் கொண்டார். இவ்வாறு இவருக்கு உதவியவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஆவார். தமிழ்நாட்டுச் சான்றோர்களுள் ஒருவராகிய இம்மூதறிஞர் ஓ. பி ஆரைப்போல, அரசியலை ஒதுக்கித் தள்ளியவர்; சித்த மருத்துவத்தில் அழுத்த மான நம்பிக்கை உடையவர்; செய்வன திருந்தச் செய்பவர்; தமிழ்ப் பற்றும் தமிழ் மக்களின் நலத்தில் ஆர்வமும் கொண்டவர்.

ஈராயிரத்து ஐநூறு திருமணங்களை நடத்தி வைத்திருக்கும் இவர்தம் மணிவிழாவில், மங்கல நாளை எடுத்துக் கொடுத்துப் புரோகிதராக இருந்து வாழ்த்தியவர் ஓ. பி. ஆரே என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. முத்தமிழ்க்காவலர் அவர்கள் பின் வருமாறு கூறுகிறார்கள்:

"வள்ளலாருடைய கொள்கைகளைப் பரப்புவதில், வாழ்நாள் முழுவதும் ஓ. பி. ஆர். பணி செய்தார். அதற்காகத் தன் சொத்துக்கள் அனைத்தையும் வழங்கி அந்தச்சொத்துக்களை ஒழுங்கு செய்வதிலும் வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்புவதிலும் என்னைப் பயன்படுத்திக் கொண்டார்.

சுத்த சன்மார்க்க நிலையம் நிறுவி மனைகளும் கட்டிடங்களும் நன்செய் புன்செய்களுமாக $10\frac{3}{4}$ லட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்களை இந்த நிலையத்துக்கு எழுதிவைத்தார். இந்தச் சொத்துக்

களின் எண்ணிக்கை 110. இவற்றுக்கு உரிய ஆதாரங்களை என்னிடம் ஒப்படைத்தார். நான் அவற்றுக்கான கணக்குகளை எழுத நேர்ந்தது. அதை வகைப்படுத்தி, முறைப்படுத்தி, தொகைப் படுத்தி ஒவ்வொரு சொத்துக்கும் தனியாக ஆதரவுகளைத் திரட்டி அந்த ஆதரவுகளுக்கும் எண் கொடுத்து சொத்துக்களுக்கும் எண் கொடுத்து இரண்டையும் ஒரு கணக்குப் புத்தகத் தில் எழுதி அவரிடம் ஒப்புவித்தேன். இந்த வேலையை அல்லும்பகலுமாக 22 நாட்களுக்குச் செய்தேன். அதனால் பெரிதும் மகிழ்ந்து, தொடர்ந்து சில காலம் துணைத்தலைவராகவும் செயலாளராகவும் வைத்து என்னை வேலை வாங்கினார்.

தன் காலத்துக்குப் பிறகு சொத்துக்களுக்கு வாரிசாக இருந்து நிர்வகிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். நான் மறுத்து விட்டேன். காரணம், எனக்கும் அவருக்கும் வயதில் சில ஆண்டுகளே வேறுபடும். யார் முந்துவோமோ தெரியாது, ஆகவே நம்பிக்கையுள்ள ஒருவரிடம் ஒப்படைப்பதே நல்லது என்று கூறினேன். கருமுத்து தியாகராசச் செட்டியாரிடம் ஒப்புவிக்க யோசித்தார், அவரும் என்னைப் போலவே வயது முதிர்ச்சியால் மறுத்துவிட்டார்.

கடைசியாக பொள்ளாச்சி தொழிலதிபர் மகாலிங்கம் அவர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற முடிவிற்கு வந்து, அவரை ஒப்புக்கொள்ளும்படி செய்தோம். சொத்துக்கள் யாவும் அவருடைய மேற்பார்வையில் தனக்குப் பின் நடத்திவர எழுதிவைத்தார். நா. ம. தலைவராகவும் சென்னியப்ப முதலியார் துணைத் தலைவராகவும் நான் உள்பட 15 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகத்தில் சொத்துக்கள் இருந்துவருகின்றன.

## நெய்வேலி பழுப்புநிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதினின்றும் விலக்கு

நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கு அறிவிக்கப்பட்ட ஊர்களின் பட்டியலில் 67 ஊர்கள் இருந்தன. ஓமந்தூரார் வேண்டுகோளுக்கு இணங்க 35 கிராமங்கள் நீக்கப் பட்டன. எனினும், சுரங்க வேலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட எஞ்சிய ஊர்களில் கருங்குழியும் வடலூரும் சேர்ந்திருந்தன. இவ்வூரையும் சுற்றுப்புறத்தையும், தோண்டக் கூடாது என்று ஓமந்தூரார், சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். இதுகுறித்து அரசு உடனடியாக ஆணை எதையும் பிறப்பிக்கவில்லை. தாம் கிளர்ச்சி செய்ய நேரும் என்று ஓமந்தூரார் அன்றைய முதலமைச்சர் இராஜாஜிக்கும் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேருவுக்கும் எழுதினர். இதைத் தொடர்ந்து, அவர்கள் நடவடிக்கைகள் எடுக்க முனைந்தனர். எனினும் அரசின் ஆணை 1958 இல்தான் பிறப்பிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் ஓ. பி. ஆர். இதுசம்மந்தமாக தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்தும் மேலவையில் கேள்வி கேட்டும், பிரச்சினையை அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்த வண்ணமாக இருந்தார்.

மேட்டுக்குப்பம் கிராமத்துக்கும் வடலூர் எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியில் பழுப்பு நிலக்கரிக்கு மேலும்கீழும் தண்ணீர் இருப்பதையும், அந்தப் பகுதியில் நிலக்கரி 30 அடி கனத்திற்கு மட்டும் உள்ளதையும், சுத்த சன்மார்க்க நிலையத்துத் தோட்டங்கள் அங்கு போடப்பட்டிருப்பதையும் ஓமந்தூரார் சுட்டிக்காட்டினர்.

அரசாங்கத்தார் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேசனுக்கு இதுகுறித்து எழுதினர். ஆனால் அப்போது நிர்வாக இயக்குநராக இருந்த திரு. டி. என். எஸ். மணி ஐ. சி. எஸ். பின்வருமாறு அரசுக்குப் பதில் எழுதிவிட்டார். "சில ஆண்டுகளுக்குப் பின்னர் சுரங்கம் வெட்டும் அறிவியல் துறை மேலும் வளர்ச்சியடைந்து, இப்பகுதியை வெட்டுவது லாபகரமாக இருக்கலாம் என்ற எண்ணம் உண்டாகக்கூடும். எனவே இப்போதே இந்த ஊர்களையும் 'அக்குயர்' செய்து விடுவதே நல்லது. அப்படிச் செய்யாவிட்டால், பலர் கட்டிடங் களைக் கட்டிவிடுவார்கள். அவற்றுக்கெல்லாம் சேர்த்து நஷ்டஈடு கொடுக்க நேரிடும். நஷ்டஈட்டுத் தொகையும் பெருகும்."

ஓ. பி. ஆர். கொண்ட உறுதியால், அரசாங்கம் திரு டி. என். எஸ். மணியின் யோசனையைப் புறக்கணித்து, பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதற்காக நிலங்களை அக்குயர் செய்ய அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கும் 1953 ஆம் ஆண்டு சட்டத்தினின்றும் கருங்குழி, மேட்டுக்குப்பம் கிராமங்களை விடுவித்து ஆணையிட்டது.

வடலூர் கடலூர் ஆகிறது.

ஓ. பி. ஆரின் முயற்சியால் பின்வரும் நிறுவனங்கள் வடலூரில் ஏற்பட்டுள்ளன:

1. பிரதம சுகாதார நிலையம்[1]
2. கால்நடை மருத்துவமனை
3. பெரிய அஞ்சலகம், தந்தி நிலையம்
4. (அரசாங்க) ஆசிரியப் பயிற்சிப் பள்ளி
5. அம்பர் சர்க்கா நிலையம் (சரஞ்சன் காரியாலயம்)
6. குஷ்ட நிவாரண நிலையம்
7. மின்சார வசதி
8. போலீசு நிலையம்

சேஷசாயி இன்சுலேட்டர்ஸ் லிமிடெட், நெய்வேலி செராமிக் என்ற இரு தொழிற்சாலைகளும் வடலூரில் அமைந்ததற்குப் பொறுப்பு ஓ. பி. ஆர். ஆவார்.

சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (எஸ். ஐ. எல்.) தொழிற்சாலையில், மின்சாரம் பாய்ச்சுவதற்கு இன்றியமையாத இன்சுலேட்டர்களைச் செய்கிறார்கள்.

---

1 இந்த நிலையம் 4—12—1958 இல் திறக்கப்பட்டது. ஆரம்பச் செலவாகக் கட்டிடங்களுக்கு ரூ. 20, 000 செலவு செய்யப்பட்டது. இதில் நான்கில் ஒரு பங்கு ரூ. 5000-ஐ, சுத்த சன்மார்க்க நிலையமும், சுப்பிரமணியபுரம் திரு. எஸ். திருவடியா பிள்ளை அவர்களும் வழங்கினர். அதனாலேயே பிரதம சுகாதார நிலையத்தை வடலூரில் அமைக்க அரசு இசைந்தது.

நெய்வேலி செராமிக்ஸ் அண்டு ரிப்ராக்டரீஸ் லிமிடெட் என்னும் தொழிற்சாலை மேற்கு ஜெர்மனியிலுள்ள செராமிக் நிறுவனத்துடன் தொழில் நுட்பக் கூட்டுறவு உடன்பாடு செய்து கொண்டு நடைபெறுகிறது. வீடுகள் தூய்மையாக இருப்பதற்கு இன்றியமையாத சுகாதார வசதிப் பொருள்கள் இங்கு செய்யப் படுகின்றன.

இந்த இரு நிறுவனங்களையும் திருச்சி சேஷசாயி குழுவினர் ஓமந்தூராரின் ஆலோசனைப்படியே வடலூரில் அமைத்தனர்.

இத்தகைய தொழில் வளர்ச்சியின் விளைவாக, நேரடி யாகவும் மறைமுகமாகவும் ஈராயிரம் தொழிலாளர் இவ்வூரில் வேலை பெறுகின்றனர். சேராக்குப்பம், ஆபத்தாரணபுரம், பார்வதிபுரம் ஆகிய மூன்று ஊராட்சி மன்றங்கள் இணைந்து வடலூர்ப் பேரூராட்சி ஏற்படப்போகிறது; விரைவில் இது நகராண்மைக் கழக நிலை பெறக்கூடும். எனவே, வள்ளலார் கூறியவாறு வடலூர், கடலூராகும் நாள் அண்மையிலேயே உள்ளது. இந்த மாற்றத்திற்கு ஓ. பி. ஆர். ஒரு கருவியாகத் திகழ்ந்தார்.

## மேட்டுக்குப்பம்

வடலூருக்குத் தெற்கே 5 கி. மீ. தொலைவில் உள்ளது மேட்டுக்குப்பம்.

வள்ளற் பெருமான் சித்தி பெற்ற இடம் இது. அவர் திருக்காப்பிட்டுக் கொண்டு, சித்திபெற்ற திரு அறை, ஆண்டுக்கு ஒரு நாள் [தைப்பூசத்தின் மூன்றும் நாள்] திறந்து வழிபடப் பெறுகிறது. இங்கு ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் ஏழாம் நாளில் கொடி ஏற்று விழா நடைபெறுகிறது.

இந்தியன் பாங்கியின் தலைமை அலுவலகத்தில் வேளாண்மை நிதித்துறையின் தலைவராக உள்ள திரு சுந்தரேசன், ஓ. பி. ஆர். வாழ்வில் கடைசிப் பத்தாண்டுகளில் அவரை அடிக்கடி சந்தித்தார் அவருடைய நட்புக்குப் பாத்திரமானார். அவர் பின்வரும் நிகழ்ச்சியை இந்நூலாசிரியரிடம் கூறினார்:

> "1959-இல் நான் மேட்டுக்குப்பத்துக்குப் போயிருந்தேன். சேலம் திரு. பெருமாள் செட்டியார் அங்கு ஒரு தகரக்கூடாரம் போட்டிருந்தார்கள்.

அதில் வேலை இல்லாதவர்கள் பலர் கூடி, கண்டதெல்லாம் பேசி, அந்த இடத்தின் தூய்மையைக் கெடுத்து வந்ததோடு, வள்ளலார் பக்தர்களுக்கு இடையூருகவும் இருந்தனர்.

முன்பின் பழக்கமில்லாத நான் வடலூருக்குப் போய் ஓ. பி. ஆர். அவர்களிடம் இதைச்சொன்னேன். உடனே அவர் போலீசுக்குத் தகவல் கொடுத்தார். மறுநாள் முதல் அந்த இடத்தில் ஈ காக்கைகூட வரவில்லை.''

## சன்மார்க்க சங்கங்கள்

மாவட்டம் தோறும் சன்மார்க்க சங்கங்கள் இயங்க வேண்டும். அவற்றின் கட்டிடங்கள் வடலூரில் கட்டப்பட வேண்டும் என்றெல்லாம் ஓ. பி. ஆர். விரும்பினுர்.

வடலூர்–விருத்தாசலம் நெடுஞ்சாலையில் ஓ. பி. ஆர். தம் பணத்திலிருந்து நிலங்கள் வாங்கி ஒவ்வொரு மாவட்டத்துச் சங்கத்தாருக்கும் அன்பளிப்பாக வழங்கினுர். அவர்கள் அந்த மனையிடங்களில் வீடுகள் கட்டி, மெய்யன்பர்களுக்கு வள்ளலாரின் கருத்துக்களை வழங்குவதோடு, பசியையும் தீர்க்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்.[1]

சுவாமி விவேகானந்தர் நூற்றுண்டு விழாவுக்குக் கோயம்புத்தூருக்கு ஓ. பி. ஆர். சென்றிருந்தார். அப்போது மாகாண சமரச சன்மார்க்க மாநாடும் நடைபெற்றது. அம்மாநாட்டில், ஓ. பி. ஆர். இந்த நிலதானங்களை வழங்கினுர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சன்மார்க்க சங்கமும் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் விவரம் கொண்ட பதிவேட்டைக் காட்டினுல் 6 சென்ட் நிலம் வழங்கினுர் ஓ. பி. ஆர்.

ஓமந்தூராருக்கு நிபந்தனைகளைச் சொல்லுவதில் தனி இன்பம் உண்டு. நிபந்தனைகளோடு இவர் நிலம் வழங்கியதில் வியப்பில்லை. இவர் குறிப்பிட்ட நிபந்தனைகள் வருமாறு:

1. தகவல்: வடலூர் இராமமூர்த்தி ரெட்டியார்

(1) மேற்படி நிலத்தில் கட்டிடம் கட்டிப் பயன்படுத்திக் கொண்டு இராமலிங்க அடிகளின் கொள்கைப்படி சன்மார்க்கத் தொண்டு செய்யவேண்டும்.

(2) சங்கத்தார் தங்கலாம், சங்கப் பணிகளைச் செய்யலாமே தவிர மேற்படி இடத்தை வாடகைக்கோ கிரயத்திற்கோ கொடுக்கக்கூடாது.

(3) இராமலிங்க சுவாமிகளின் நோக்கங்களுக்கு மாருன காரியங்களுக்குப் பயன் படுத்தக் கூடாது.

(4) மேற்கண்ட நிபந்தனைகளுக்கு மாருக நடந்தால் இந்தப் பத்திரம் செல்லத்தக்கதல்ல.

ஓ. பி. ஆர். இரங்கூன்(பர்மா) சன்மார்க்க சங்கத்துக்காக குங்கிலியம் திரு. பழ. சண்முகனுர்க்கு ஆறு சென்ட் நிலம் தானம் செய்ய முன்வந்தார்.

திரு சண்முகனுர், அதை வாங்கிக்கொள்ள மறுத்தார் அவர் கூறிய காரணம்: ''நான் பர்மாவில் இல்லை; தாய் நாட்டில் தமிழ்நாட்டில் இருக்கிறேன்.''

''ஏன் ஐயா, குறிஞ்சிப்பாடியிலிருந்து பத்திரம் பதிகிற உதவிப் பதிவாளரை இங்கு அழைத்துவரச் செலவும் பத்திரச் செலவும் வரும் என்று நப்பிக்கிருய்? நீ, நகரத்தார் அல்லவா? செட்டு (செலவு மிச்சம்) பார்க்கிருயா? நகரத்தார் ஒருவர், இந்த அறக்கட்டளைகளில் கட்டாயம் இருக்கவேண்டும். பத்திரம் எழுதி முடித்துக்கொண்டு பதிவாளரைக் கூட்டி வா, ஐயா'' என்ருர், ஓமந்தூரார்.

''நான் செலவுபற்றிச் சிந்திக்கவில்லை. இன்ன இன்ன விவரம் காட்டும் சங்கங்களுக்கு நிலம் கொடுப்பது என்று நீங்களே சட்டம் வகுத்திருக்கிறீர்கள். நீங்கள் வகுத்த சட்டத்தை நீங்களே மீறலாமா? என்று உங்களை யாராவது கேட்டால்......''

''கேட்டால் சமாதானம் நான் சொல்லவில்லை, 'நீங்கள் சொல்லுகிறீர்களா?''

குங்கிலியம் சொன்ன பதில்:

அரவகல் அல்குலார்பால் ஆசை நீத்தவர்க்கே வ...
தருவம் என்று அளவல் வேதம் சாற்றிய தலைவன் தன்னை
பரவைதன் புலவி தீர்ப்பான் கடுதுகண்படுக்கும் பாழ்நாள்
இரவினில் தூது கொண்டோன் இணையடி முடிமேல் வைப்பாம்

என்பது திருவிளையாடற் புராணத்தில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி. பெண்கள்பால் ஆசை நீத்தவர்களுக்கு மோட்ச(வீடு)ம் அளிப்பதாக வேதத்தில் சொன்ன இறைவனையே, பரவை நாச்சியார்பால் தூது விடுத்தோனுன சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாதார விந்தங்களைச் சிரமேல் தாங்குவோம் என்கிறுர் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்.

"சட்டம் வகுத்தவன் இறைவன். அவனே சட்டத்தை மீறுகிறுன். அதை ஏன் என்று நாம் கேட்க அருகதை இல்லை. நமது வரட்டு அறிவு எதை எதையோ ஆய்வு செய்கிறது. ஆய்வு வேண்டியதுதான். அளவோடு நின்று விடவேண்டும். தெரியாதன எவ்வளவோயிருக்கின்றன. அதன் உண்மை தெரியும்வரை, கமா போட்டுவைத்து காத்திருக்கவேண்டும். ஆனுல் நாம் ஒரு முடிவுக்கு வந்து மேலே போக வழி தெரியாது, புல் ஸ்டாப் போட்டு மேடைகளிலும் பேசி, நூல்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிட்டு விடுகிறேம். ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த திருக்காடைக்காப்பில் "எடுத்த மொழியாலும் ஏதுக்களாலும் மிக்க சோதிக்க வேண்டாம்" என்று. இதில் மிக்க சோதிக்க வேண்டாம் என்பது நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனுல் "மிக்க" என்பதை விட்டு விட்டு சோதிப்பதிலேயே நாட்டம் கொண்டு ஆழ்கிறேம். குதிரை செய்யக் குரங்கு காண்கிறேம். இப்படிக் குரங்கு காண்பவர்கள் ஏதோ ஒரு வகையில் பிரசித்திபெற்றிருக்கக் கூடும். இந்தப் பிரசித்தியை வைத்து அவர் சொல்வதெல்லாம் வேதவாக்கு என, பிறர் முடிவுக்குவந்து பின்பற்றி "குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குருடும் குருடும் குழிவிழுகிறுர்கள்" (திருமந்திரம்)

ஓ. பி. ஆர். இதைக் கேட்டு ரசித்தார். ஆனால் 'இது புராணமாக இருக்கிறது. நடை முறை உதாரணம் ஏதாவது சொல்ல முடியுமா?' என்றார் ஓ. பி. ஆர்.

'எவ்வளவோ சொல்லலாம், ஆனால் ஒன்று மட்டும் சொல்லு கிறேன் நகரங்களில் பல சாலைகள் கூடும் இடங்களில்-சந்திப்புக் களில்-பச்சை சிவப்பு ஒளி விளக்குகள் வைக்கப்பெற்று அதன்படி ஊர்திகள், கைகாட்டி ஆள் இல்லாமலே சென்றும் நின்றும் வரு கின்றன. அந்த வழியில் குடியரசுத் தலைவர் செல்லுகிறார் அல்லது பெரிய ஊர்வலம் செல்லும் எனின், உரிய விளக்குக்குத் திரை போட்டு மூடிவைத்து விடுகின்றனர். போக்கு வரத்தைக் கட்டுப் படுத்த, கைகாட்டும் போலீசாரை நிறுத்துகின்றனர். அரசாங்கம் இப்படிச் செய்வது சரியா என்று ஒருவரும் கேட்பதில்லையே' என்றார் திரு. குங்கிலியம் பழ. சண்முகனார்.

சுவையான இந்த உரையாடல் நடந்த மறுநாள் பத்திரம் பதிவு செய்யப்பெற்றது.

பரங்கி, பூசணி களவு[1]

குருகுலத்து மாணவர்களுக்காக ஓ. பி. ஆர் பரங்கி, பூசணி போட்டு வைத்திருந்தார். களவு போய்விட்டது. விடுதியில் வேலை பார்த்த எழுத்தரை அழைத்து, காவல் நிலையத்தில் புகார் பதிந்து வைத்துவிட்டு வரச்சொன்னார்.

> "ஏன் ஐயா பரங்கியும் பூசணியும் களவு போவதைப்
> பிடிக்கத்தான் காவல் நிலையம் வைத்திருக்கிறோமா?
> சரிதான் போ ஐயா."

என்று காவல் நிலையத்து உதவி ஆய்வாளர் கூறிவிட்டார். 10 நாட்களுக்குப் பிறகு கடலூரிலிருந்து மாவட்டக் காவல்துறைத் தலைவர், ஓ. பி, ஆரைக் காண வந்தார்.

'ஐயா, தாங்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் எனக்குப் பதவி உயர்வு கொடுத்தீர்கள். நான் இப்போது இந்தத் தென் ஆர்க்காடு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டு நேற்று பதவி ஏற்றேன். முதல் வேலையாகத் தங்கள் ஆசீர்வாதம் பெற இங்கு வந்தேன்' என்றார்.

---

1. தகவல்: வயலூர் சுவாமி என்கிற திரு. மீனாட்சிசுந்தரம். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் கொள்ளுப்பேரன் குருகுலத்தில் திருஅருட்பா கற்பித்து வருகிறார்.

'பெரிய அதிகாரியான நீங்கள் என்னிடம் இவ்வளவு மரியாதை வைத்திருக்கிறர்கள். ஆனுல் சிறு பதவிகளில் இருப்பவர்கள் சற்றும் என் வார்த்தையை மதிப்பதில்லை...... இங்கு ஏழைப் பிள்ளைகளை வளர்த்து வருகிறேன். அவர்கள் சாப்பிடுவதற்காக பூசணியும் பரங்கியும் பயிரிட்டுள்ளேன். இது திருட்டுப் போயிற்று. காவல் நிலையத்தில் சொல்ல ஏற்பாடு செய்தேன். பெரிய கேஸ் கொண்டு வந்துவிட்டார்கள் என்று கேலி செய்கிருர்களாம்'என்ருர் முன்னுள் முதலமைச்சர். உடனே டி. எஸ். பி. மாடியிலிருந்து கீழே இறங்கிவந்தார். தம் கார் ஓட்டியிடம் சொல்லி, வடலூர்க் காவல் நிலையத்தில் பணிபுரியும் அத்தனை பேரையும், குருகுலத்தில் ஓ பி ஆர். ஆசிரமத்தின் முன்வந்து நிறுத்தச் சொன்னுர்.

முன் அறிவிப்பு இல்லாமல், டி. எஸ். பி. ...புதிதாய்ப் பதவி ஏற்றவர் திடீரென்று வந்து தனியார் ஒருவர் இடத்துக்குத் தங்களை அழைத்தது அவர்களுக்குப் புதிராக இருந்தது. அவசர அவசரமாக முகங்களைத் தீட்டிக் கொண்டு, மாவட்டக் காவல்துறைத் தலைவர் முன்னிலையில் நின்றனர்.

ஓ. பி. ஆரைப்பற்றி அவர்களுக்கு டி. எஸ். பி. ஒரு சிறு உரை நிகழ்த்திஞர், "அந்தப் பெரியவருடைய வார்த்தைகளை மதித்து நடக்க வேண்டும். இரண்டு நாட்களுக்குள் எப்படியும் பூசணி பரங்கி திருடியவர்களைப் பிடித்தாக வேண்டும்" என்று கண்டிப்பான ஆணையிட்டார்.

பிறகு, டி. எஸ். பி. மாடிக்குச் சென்ருர். 'ஐயா என்னுடைய ஆட்கள் இனி ஒழுங்காக நடந்துகொள்வார்கள் தக்க நடவடிக்கையை உடனே எடுப்பார்கள். நான் இந்த மாவட்டத்திலிருந்து வேலை மாறுதலாக புதியவரிடம் பொறுப்பு ஒப்படைக்கும் போது தங்களைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போவேன். கவலை வேண்டாம்" என்று கூறி விடை பெற்ருர்.

பின்னர், போலீசார் தக்க நடவடிக்கை எடுத்தனர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லையே!

''ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
ஊதிய மில்லை யுயிர்க்கு''
— 'திருக்குறள்'

# 31

# பெரும் பிரிவும் சமாதியும்

## சத்திய ஞானசபைப் பணி

1951-இல் சத்திய ஞானசபைத் திருப்பணி திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் செய்து முடிக்கப் பெற்றது. அதை முடிப்பதிலும் பின்னர் குடநீராட்டு நடத்துவதிலும் எத்தனையோ சிக்கல்கள் எழுந்தன. ஓ. பி. ஆர். அந்தச் சிக்கல்களை யெல்லாம் அறுத்து திருப்பணியும் விழாவும் இனிது நடக்க உதவினர்.

வாரியார் ஞானசபைத் திருப்பணி செய்தபோது சத்திய ஞானசபையின் மேற்கூரை அமைப்பு மாறிவிட்டது என்றும், அதை வள்ளலார் அமைத்தது போலவே மாற்றி அமைக்க வேண்டும் என்றும் சன்மார்க்க அன்பர்கள் கருதினர். மேலும் ஞானசபை முன் மண்டபமும், அதன் கூரையும் அதிக மழையின் போது ஒழுக ஆரம்பித்ததால், அவற்றையும் சீர்திருத்த

வேண்டியதாயிற்று அதற்காகப் புதிய திருப்பணிக் குழு ஒன்று திரு. நா. மகாலிங்கம் தலைமையில் 1967-இல் ஓமந்தூரார் முன்னிலையில் அமைக்கப்பெற்றது.

சன்மார்க்க அன்பர்களைக் கொண்ட இந்த ஞானசபைத் திருப்பணிக் குழு மூன்று ஆண்டுகள் அடிக்கடி கூடி சத்திய ஞானசபையின் பல வரைபடங்களைக் கவனமாகப் பரிசீலித்தது. முடிவில் வள்ளலார் அமைத்த சத்திய ஞானசபையின் அமைப்பின் படி இருந்த ஒரு வரைபடத்தை ஏற்றுக்கொண்டு சத்திய ஞானசபைக்குத் திருப்பணி செய்ய வேண்டிய முறைகளை வகுத்தது.

மீண்டும் சத்திய ஞானசபை திருப்பணி செய்யப்பெறுவதை ஓ. பி. ஆர். வரவேற்று மகிழ்ந்து அவ்வப்போது ஆலோசனை கூறிவந்தார். ஆனால் அது நிறைவேறும் வரை உயிர்வாழும் பேறு அவருக்கு இல்லாமல் போயிற்று.


1970 ஆம் ஆண்டில் ஞானசபைத் திருப்பணிக்குழு திருப்பணி வேலையைத் தொடங்கியது. திரு. கொண்டா ரெட்டியார் வழங்கிய அறுபதாயிரம் ரூபாய் முதல் நன்கொடையுடன் ஞானசபைத் திருப்பணி தொடங்கிற்று.

இந்தத் திருப்பணிக்கு அருள்மிகு பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானம் பத்தாயிரம் ரூபாயும், திரு நா. மகாலிங்கம் மூன்று லட்ச ரூபாயும், திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் ஐம்பதாயிரம் ரூபாயும், திரு. மருதைப்பிள்ளை முப்பதாயிரம் ரூபாயும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பதினைந்தாயிரம் ரூபாயும், திரு. வி. எஸ். பெருமாள் பிள்ளை, திருமதி. பி. சியாலம்மையாள் ஆகியோர் ஏழாயிரத்து ஐநூறு ரூபாயும், திருமதி சாவித்திரி அம்மாள் ஐயாயிரம் ரூபாயும் நன்கொடை அளித்திருக்கிறார்கள்.

சென்னையில் உள்ள ராஜஸ்தானி சங்கத்தார் வடலூர் ஜோதி தரிசனத்துக்கு வரும் மக்களின் தண்ணீர்த் தேவையைத் தீர்த்து வைப்பதற்காக குழாய்க் கிணறு இறக்குவதற்கு ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினர்.

தமிழக மக்கள் ஒரு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரையில் லட்சக்கணக்கான ரூபாய் நன்கொடை வழங்கினர்.





மேலே : வாரியார் தலைமையில் நடைபெற்ற வடலூர் சத்திய ஞானசபைத் திருப்பணி நிறைவு விழாவில் வாரியார் சுவாமிகள் மற்றும் அருளாளர்களுடன் ஓ. பி. ஆர்.

கீழே : ஓ. பி. ஆர். சென்னை மாநில முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய நாளில் அவருடைய அலுவலர்கள், பணியாளர்களிடம் விடைபெற்றபோது எடுத்த படம்.

இந்த நன்கொடைகளைக் கொண்டு சுமார் ஏழு லட்சம் ரூபாய்ச் செலவில், வேலை முடிவடைந்தது. ஞானசபைத் திருப்பணி விழாவும் புதுப்பிக்கப்பெற்ற ஞானசபையில் ஜோதி தரிசனமும் 1975- ஜூன் 19ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தன.

கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வங்கக் கடல், அரபிக்கடல், கருங்குழி ஓடை, தருமச்சாலைக்கிணறு ஆகிய ஒன்பது புனித இடங்களிலிருந்து தீர்த்தங்களைக் கொண்டுவந்து ஜூன் 12 முதல் 18 வரை ஏழு நாட்களும் நடைபெற்ற கோடி அருச்சனையில் வைத்துக் கடைசியில் 19ஆம் தேதி அன்று அந்தத் தீர்த்தங்கள் சத்திய ஞானசபைக் கும்பத்தில் அபிஷேகம் செய்யப்பட்டன.

## முதுமை

வடலூரில் தாம் அமைத்த நான்கு நிலையங்களையும், ஓமந்தூரார் 1951 முதல் 1969 வரை தாமே நிர்வகித்து வந்தார்.

அளவுகடந்த உழைப்பின் காரணமாக, அவருடைய உடல் நிலை குன்றியது. அந்தச் சூழ்நிலையில் நிறுவனங்களைத் தக்கவர் ஒருவரிடம் ஒப்புவிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு 11—6—1969-இல், தமது நிறுவனங்களைப் பொள்ளாச்சி தொழிலதிபர், காந்தியச் செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இதைப் பற்றிய விவரங்களை ஓ. பி. ஆருக்குப்பின் என்ற கட்டுரையில் தெரிவிப்போம்.

## சேறும் சந்தனமும்

ஓ. பி. ஆர். காலமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆனந்த விகடன் வார இதழ், தென் ஆர்க்காடு மாவட்ட இதழ் ஒன்றை வெளியிட்டது. அதில் 'ஒதுங்கி வாழும் ஓ. பி. ஆர்.' என்ற தலைப்பில் பின்வரும் கட்டுரை இடம்பெற்றது :

> ''அது, வடலூர் இராமலிங்க அடிகளின் மடத்திற்கு எதிரே, சற்று தள்ளி நிழல் பூத்துக் குலுங்கும் சிறிய பங்களா.

மாடியில் ஒரு நாற்காலியில் கைகளைக் கோத்தபடி, வானத்தை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறார் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. ஆர்.

எழுபத்தைந்து வயதின் முதுமைப் பருவத்தில் இருக்கிறார் அவர். அவரைச் சுற்றிலும் மத சம்பந்தமான பல புத்தகங்கள் ..............

"ஏன் ஓமந்தூரை விட்டு இங்கே வந்துவிட்டீர்கள்?"

"அங்கே ஒரே தொல்லையாகப் போய் விட்டது. இங்கே வந்தேன். இங்கும் தொல்லைகள் விட்டபாடில்லை."

"மனைவியும், ஒரு மகனும் மறைந்த பிறகு முனிவர் போல ஓமந்தூரை விட்டு கிளம்பி விட்டார். 1951-ல் தான் வடலூர் வந்து, வள்ளலார் குருகுலப் பள்ளியை ஆரம்பித்திருக்கிறார். இந்தப் பள்ளியில் எஸ். எஸ். எல். ஸி. வரை வகுப்புகள் இருக்கின்றன! அதோடு பதினைந்து அநாதைக் குழந்தைகளையும் 'அப்பர் அநாதை இல்லம்' த்தில் தந்தையாக இருந்து வளர்க்கிறார். இந்த இல்லத்திற்கு கிட்டத்தட்ட பத்து லட்ச ரூபாய் சொத்து சேர்த்து வைத்திருக்கிறார் ஓமந்தூரார்! இவருக்கு நடந்த மணி விழாவில் அறுபத்துமூவாயிரம் ரூபாய் கிடைத்தது. அதையும் இந்தப் பள்ளிக்கே கொடுத்து விட்டார்.

"சான்றோர் இல்லம் என்ற ஒன்றையும் நடத்து கிறேன். சான்றோர்கள் மட்டுமே இங்கே தங்கி அமைதியான சூழ்நிலையில் வசித்து தியானத்தில் ஈடுபடலாம். ஆனால் சான்றோர் மட்டும் வருவதில்லை......" என்றார் ஓ. பி. ஆர்.

திடிரென்று எதிரே இருக்கும் நண்பர் ஒருவர், "உங்களுக்கு பிரம்மதேசம் ஜானகிராமய்யரைத் தெரியுமா? அவர் பேரன் நான்........." என்கிறார். ரெட்டியார் அவர்களுக்கு சட்டென்று ஜானகிராமய்யரை நினைவிற்கு வந்துவிடுகிறது. நல்ல ஞாபக சக்தி அவருக்கு. "ஜானகிராமய்யருக்கு இப்போது எண்பது வயது இருக்குமே? நீங்கள் எல்லாம் ஏதாவது உதவி செய் கிறீர்களா? இல்லை, நட்டாற்றில் விட்டு விட்டீர்களா?" என்று பதட்டத்துடன் கேட்கிறார் அவர்.

"அவருக்கு சதாபிஷேகம் கூட கொண்டாடப் போகிறோம்" என்றார் நண்பர்.

"அந்த விழாவெல்லாம் வேண்டாம்! செலவு காட்டி விட்டு பேசாமல் போய் விடுவீர்கள்! அதற்காகும் மொத்த பணத்தையும் அவரிடம் கொடுத்து விடுங்கள்! அரசியலில் விழா நடத்துவது மாதிரி செய்ய வேண்டாம்!" என்றார் அப் பழைய முதலமைச்சர்

"ஏன் அரசியல்மீது அவ்வளவு வெறுப்பு?" என்று கேட்டால்," அரசியல் ஒரு சகதி. அதில் சிக்கினால் சேறு தான் பூசிக்கொள்ள வேண்டியிருக்கும். நானும் பூசிக் கொண்டவன்தான். ஆனால், அப்போது அதை சந்தனம் என்று நினைத்தேன்" என்றார் ஓ. பி. ஆர்.

## மாற்றான் தோட்டம்

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதைச் செடிகள் பல வைத்து வளர்த்த ஓ. பி. ஆர். நன்றாக உணர்ந்தார்.

காமராஜருக்கும் ஓ. பி. ஆருக்கும், அரசாங்க நிர்வாக முறை குறித்தும், அரசியல் கொள்கைகள் பற்றியும் ஆயிரம் ஆயிரம் கருத்துவேறுபாடுகள் இருந்தன. எனினும் தமிழ் நாட்டில் குறிப்பிட்டதொரு சிறுபகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட காமராஜர் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியடைந்ததை ஓமந்தூரார் பாராட்டினார்.

## நிறைவேறாத ஆசை

ஓமந்தூரார் தாம் முதலமைச்சராக இருந்தபோது அசைவ உணவு வழங்கப்படுகிற இடம் என்பதற்காக ராஜபவனத்து விருந்துகளுக்குச் செல்லுவதைத் தவிர்த்தார்.

சாரநாத்திலும், புத்தகயாவிலும் கருணை, கொல்லாமை என்ற கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே வாழ்கின்றனர். இவ்வாறே வடலூர்ப் பகுதியும் உயிர்க்கொலை தவிர்த்த பகுதியாகச் சட்டப்பூர்வமாக ஆக்கப்படவேண்டும் என்று அவரும் திரு. மகாலிங்கமும் விரும்பி, அதற்கான முயற்சியைப் பற்றியும் விவரித்து வந்தனர்.

உலகின் அறிவைக் கவர்ந்து உயர்த்தும் வகையில் வடலூர் ஞானசபைப் பெருவெளியில் ஆராய்ச்சி அரங்கங்களும், நூல் நிலையங்களும், தியானமண்டபங்களும் அமையவேண்டும். இவைகளைச் செம்மையாகச் செயல்படுத்தவும் வேண்டும் என்று ஓமந்தூரார் திரு. நா. மகாலிங்கம் அவர்களிடம் அடிக்கடி கூறுவார்.

## ஆராய்ச்சி மனப்பான்மை

ஓமந்தூரார் பட்டபடிப்பு வரை முறையாகப் படித்து அறிவியல் பாடங்களைப் பயின்றிருப்பாரேயானால், நம்நாட்டின் சிறந்த அறிவியல் மேதைகளுள் ஒருவராக இருந்திருப்பார். நாம் இவ்வாறு சொல்வதற்கு காரணம் உண்டு.

இக்காலத்தில் திரைப்படங்களைப் பார்ப்பவர்கள், ஒரு படத்தை ஏற்கனவே பார்த்தவர்களிடம் கருத்துக் கேட்கிறார்கள். படம் நன்றாக இல்லை என்று அவர்கள் சொன்ன பிறகும், தாங்கள் போய்ப் பார்த்து, அதன் பிறகு, 'ஆம், நன்றாக இல்லைதான், என்று சொல்வார்கள்.

அதுபோல அறிவியல் துறைகளில் ஓமந்தூராருக்கு அக்கறை இருந்தது. அதை ஆங்கிலத்தில் Academic Interest என்று சொல்வார்கள்.

ஓ. பி. ஆர். ரசவாதம் (தங்கத்தைச் செயற்கை முறையில் செய்வது, செம்பைப் பொன்னாக்குவது) என்பது மெய்யா? பொய்யா? என்ற சோதனைகளில் ஈடுபட்டார்.

காயகல்ப ஆராய்ச்சி செய்து பார்த்து அது பொய் என்று விட்டு விட்டார்.

## அன்றாட வாழ்க்கை

மாணவர் இல்லத்தில் இருந்துகொண்டு ஓ. பி. ஆருக்கு அணுக்கத்தொண்டு புரிந்து குருகுலம் உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தற்போது அதிலேயே ஆசிரியராகப் பணியாற்றும் திரு. எஸ். சுந்தரமூர்த்தி இவருடைய அன்றாட வாழ்க்கையைப் பின்வருமாறு விவரிக்கின்றார் :

"அவரது தினசரி வாழ்க்கையை விவரித்தால் அவரது குண நலன்கள் முற்றிலும் அடங்கிவிடும். காலையில் 5 மணிக்கு எழுந்து அவரே ஹீட்டர் சுவிட்சை போட்டுவிட்டு தண்ணீர் சுட்டதும் 'ஆப்' (Off) செய்து விடுவார். பின்பு "பயலே" என்று அழைப்பார். நான் போய் வெந்நீர் பதம் செய்து குளிக்க எடுத்துவைப்பேன். சற்று சூடாகவே தண்ணீர் உபயோகிப்பார். குளித்தபின் காலை 7 மணி வரை பூஜை செய்வார். அதன்பின் நிலையக் கணக்குகள் மற்ற வேலை விபரங்கள் அனைத்தையும் அந்தந்த சிப்பந்திகளை அழைத்து விசாரிப்பார். பின்பு 9 மணிக்கு கோதுமை மாவுக்கஞ்சி; அது கோதுமை மாவும் நாட்டுச் சர்க்கரையும் கலந்து இருக்கும் நீர்மநிலை உணவு ஆகும். பின் 11 மணி வரை தபால் பார்ப்பார். கடிதங்களுக்குப் பதில் எழுதுவார். நாளிதழ், மற்ற சஞ்சிகைகள் புத்தகங்கள் இவற்றைப் படிப்பார். பகல் 12—30க்கு பகல் உணவு அருந்துவார் கைக்குத்தலரிசியை கஞ்சி வடிக்காமல் பொங்க வேண்டும். அதில் கேரட் துண்டுகள், பீட்ரூட் துண்டுகள், கோஸ் துண்டுகள், பச்சைப்பட்டாணி இவைகளையும் சேர்த்து ஒன்றாகப் பொங்கிவிட வேண்டும். இதில் சாம்பார், ரசம் போன்றவற்றை உபயோகிப்பார். புளி, மிளகாய், இவைகளுக்குப் பதில் எலுமிச்சைச் சாறு, மிளகு இவைகளைத்தான் சாம்பார், ரசம் இவைகளில் போடவேண்டும். (நெல்லிக்காய் பச்சடி தினமும் இருக்கவேண்டும். நெல்லிக்காய் காய்க்கும் நாட்களில் அதை அவித்து கொட்டை நீக்கி பின் அரைத்து வடைபோல் தட்டி காயவைத்து வருடம் முழுவதும் தினம் ஒன்றாக உபயோகிப்பார். மதிய உணவிற்குப் பின், பிற்பகல் 3 மணி வரை ஓய்வு எடுப்பார். 4மணிக்குத் தோட்டங்களைச் சுற்றிப்பார்க்கப்புறப்படுவார். 5 மணிக்கு மாலைநேர பூஜைக்குச் சென்று இரவு 8 மணிக்கு முடிப்பார். இரவு உணவாக ஒன்று அல்லது ஒன்றறை சப்பாத்தி சாப்பிடுவார்கள் ஒரு சப்பாத்தி பூனைக்காக தினந்தோறும் எடுத்துச் செல்லப்படும். அதைச் சிறு சிறு துண்டாக்கி அந்தப் பூனைக்கு அவரே போட்டு மகிழ்வார். பின் 15 நிமிடம் மச்சு வராண்டாவிலேயே உலாவுவார். அதுசமயம் மிக்க சந்தோஷமாகப் பேசுவது வழக்கம். நமக்கு உண்டான காரியங்கள் யாவையும் அந்த நேரத்தில் கேட்டால் வெற்றியோடு முடித்துக் கொள்ளலாம். பசு

மாடு தண்ணீர் குடித்ததா? மூங்கில் கன்றுக்குத் தண்ணீர் ஊற்றினார்களா?'' என்றெல்லாம் உலாவும் போதே கேட்டுத் தெரிந்து கொள்வார்.

## சில இயல்புகள்

ஓ. பி. ஆர். தமக்கு நிறைய வசதி இருந்தும் ஓமந்தூரில் மச்சு வீடோ, ஓட்டு வீடோ கட்டிக் கொள்ளவில்லை. கூரை வீட்டிலேயே இருந்தார். இதனால் இவரை மற்ற ரெட்டியார்கள் 'கூரைவீட்டு ரெட்டியார்' என்று குறிப்பிட்டு வந்தார்கள்.

வீட்டை விட்டு வடலூருக்கு ஓ. பி. ஆர். வந்தார். சொந்தபந்தங்கள், வீடு வாசல் என்ற உறவுகளையெல்லாம் அறுத்துக் கொண்டார்.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!

— திருப்புலம்பல், 3.

என்ற மாணிக்கவாசகர் பாடலுக்கு எடுத்துக்காட்டாக இருந்தார்.

வடலூரில் ஓ. பி. ஆர். தமக்கென்று தனியாகச் சமையல் ஆளையோ வேறு பணியாளையோ வைத்துக்கொள்ளவில்லை. தம் வேலைகளைத் தாமே செய்து கொண்டார் தம் கைப்படவே கடிதங்களை எழுதுவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். ஆள் வைத்து எழுதியதில்லை. நாள்தோறும் தோட்டம் வயல்கள் இவற்றையும் கவனித்தார். இக்காரணங்களால் இளமையில் யோகாசனம், சிரசானம், உடற்பயிற்சி ஆகியவையெல்லாம் செய்தும்கூட 1969 முதல் இவருடைய உடல்நிலை குன்றிற்று.

## கண் ஒளி இழத்தல்

மூலநோய், தலைவலி ஆகியவற்றோடு கண்பார்வையும் குலைந்தது.

ஓமந்தூரார் விருப்பப்படி 11—6—69-இல் நடைபெற்ற சுத்த சன்மார்க்க நிலையப் பேரவைக்கூட்டத்தில் திரு. மகாலிங்கம்

அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 20—8—1969-இல் நிலைய சொத்துக்களையும் அன்றாட நிர்வாகப் பொறுப்பையும் செயலாளர் என்ற முறையில் திரு. ஊரன் அடிகள் ஏற்றார்.

இறுதியாக ஓமந்தூரார் தம் சொந்த நிலங்களையும், வடலூரில் தாம் குடியிருந்த கட்டிடத்தையும், தக்க ஆதாரங்கள் மூலம் சுத்த சன்மார்க்க நிலையத்திற்கு ஒப்படைத்தார்.

அவருடைய இறுதிக்காலத்தில் சுத்தசன்மார்க்க நிலையத்தின் ஆட்சிக் குழு வருமாறு:

நிறுவியவர்: திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார்

தலைவர் }<br>பொருளாளர் } திரு. நா. மகாலிங்கம், பி. எஸ்சி., எம். ஐ. இ.

துணைத் தலைவர்: திரு. எஸ். சென்னியப்ப முதலியார்

செயலாளர்: திரு. ஊரன் அடிகள்

துணைச் செயலாளர்: திரு. ஔவை நடராசன், எம்.ஏ ,எம். லிட்.

நிர்வாக உறுப்பினர்கள்:

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

திரு. ஓ. எம். லக்ஷ்மிநாராயண ரெட்டியார்

திரு. ஜி. வாகீசம் பிள்ளை

திரு. க. முத்துலிங்க ரெட்டியார்

திரு. அ. சாம்பசிவ ரெட்டியார்

திரு. வி. வெங்கடசுப்பா ரெட்டியார்

திரு. டாக்டர் கு. ஸ்ரீனிவாசன், எம். எஸ்சி., பிஎச். டி.

திரு. வி. சீதாராம படையாச்சி

திரு. துறவி கந்தசாமி

திரு. வி. அரங்கசாமி நாயுடு

சமாதி யோசனை

1969 செப்டம்பர் மாதத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை, திருவலம் சிவானந்த மௌனகுரு யோகீஸ்வர சுவாமிகள் பின் வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"திருவலத்துக்குக் கொண்டுபோய் அன்னம் கொடுத்து ஆடை கொடுத்து சமாதி ஆகும் காலத்தில் நீ செய்த தவம் வீண்போகாமல் திருவலத்தில் கோயில் கட்டிவைக்கிறேன் என்று சொன்னேம்.

அதற்கு ஓமந்தூர் ரெட்டியார், நான் ரொம்ப பாடுபட்ட வடலூரில் நந்தவனத்திலேயே சமாதி வைத்தால் நன்ருக இருக்கும் என்று சொன்னர்.

1970-இல் ஓமந்தூரார் மறைந்தார். அதற்கு ஏறத்தாழ ஓராண்டு முன்னதாக புரட்டாசி 18-இல் வடலூரில் ஒரு இடத்தில் சுவாமிகள் கடைக்கால் போட்டுக் கொண்டிருந்தபோது ரெட்டியார் அங்கு வந்து, அது என்ன? என்று கேட்டார்.

உங்களுக்கு சமாதி கோயில் என்று சுவாமிகள் சொன்னர்கள்.

நான் சாவதற்கு முன்னேயே எனக்கு கோயில் கட்டுகிறீர்களா? என்று சொல்லிச் சிரித்தார். அதனுல் மகாலிங்கம் பின்வாங்கினர்."

## சென்னைப் பயணம்

1970-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஓமந்தூரார் சென்னைக்குச் சென்று சாந்தோமிலுள்ள தன் தம்பி ஓ. எம். லட்சுமிநாராயண ரெட்டியார் இல்லத்தில் தங்கி டாக்டர். இரத்தினவேலு சுப்பிரமணியத்திடம் வைத்தியம் செய்து கொண்டார். அப்போது திரு. நா. மகாலிங்கம், இராமலிங்கர் பணி மன்றத்தின் செயலாளர் டாக்டர் ஒளவை நடராசனை அடிக்கடி அங்கு அனுப்பி ஓமந்தூராருக்குத் துணையாக இருக்கச் செய்தார். கண் ஒளியை இழந்த நிலையிலும் ஆறுபடை வீடுகளுக்கு யாத்திரை செல்லவேண்டுமென்று ஓமந்தூரார் விரும்பினர். எல்லா வசதிகளுடனும் அவர் அவ்வாறு செல்வதற்கு திரு. நா. மகாலிங்கம் செம்மையாகச் செய்தார்.

முதலமைச்சராய் இருந்த டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி, ஓமந்தூராருக்கு அரசின் செலவிலேயே அனைத்து வைத்தியமும்

செய்ய விரும்புவதாகவும், அவர் அரசினரின் மருத்துவமனையில் சேர்க்கப்படவேண்டுமென்றும் சொல்லியனுப்பினர் ஓமந்தூரார் இவ் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை.

> "என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை;
> இனித் தெய்வமே! உன் செயலே என்று
> உணரப் பெற்றேன்"

என்ற பட்டினத்தார் அருள்வாக்கு, எவ்வளவு உண்மையான அனுபவ வாக்கு என்பதை ஓமந்தூரார் உணர்ந்தார்.

## மறைவு

25—8—1970, சாதாரண ஆண்டு ஆவணித் திங்கள் 9-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை பகல் 12 மணிக்கு ஓமந்தூராரின் உயிர் அன்பர்கள், நண்பர்கள், அரசியல் தலைவர்கள் பலர் சூழ்ந்திருக்கப் பிரிந்தது:

ஓமந்தூராரே தம் நண்பர் வெங்கட்டராம ரெட்டியார் என்பவர் 1947-இல் இறந்தபொழுது எழுதிய பின்வரும் சொற்கள் ஓமந்தூராருக்கும் பொருந்தும்:

> "அவர் எவ்வளவு நேர்மையானவர், நெறியுள்ளவர், அவர் வாழ்நாள் பூராவும் தேசத்துக்காகவும், ஜன சமூகம் ஒழுங்காக இருக்கவேண்டும் என்பதற்காக வும், சங்கங்களையும் சமாஜங்களையும் ஏற்படுத்தி தெய்வத் தொண்டும் தேசத்தொண்டும் ஏற்படுத்தி அல்லும் பகலும் செய்துவந்தார். அதனுல் ஏற்பட்ட அதிர்ச்சியே அவர் பூத உடலை விடும்படியாக வந்தது."

## இறுதி மரியாதை

ஓமந்தூரார் இறந்தவுடனேயே வானொலியில் செய்தி அறிவிக்கப்பட்டது தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டது. சட்டசபையும் மேல்சபையும் ஒத்திவைக்கப்பட்டன. இருசபைகளிலும் அமைச்சர்கள் இரங்கலுரையாற்றினர்கள். இரவு 8 மணி வரை உடல் சென்னையில் அவ்வீட்டிலேயே மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங், முதலமைச்சர் திரு. கருணாநிதி, அமைச்சர் நாவலர்

நெடுஞ்செழியன் ஆகியோரும் திரு. காமராஜ், திரு. சி. சுப்பிரமணியம், திரு. கக்கன் திரு. கருத்திருமன், திரு. கே. சந்தானம் ஆகிய அரசியல் தலைவர்களும் வந்திருந்து மாலை இட்டு இறுதி மரியாதை செய்தனர். கவர்னர் தம்பதிகள் சார்பில் கவர்னரும், தமிழக அரசின் சார்பில் முதலமைச்சரும், மலர் வளையங்கள் வைத்தனர். ஏராளமான அலுவலர்களும் பொதுமக்களும் வந்து குழுமி இறுதி மரியாதை தெரிவித்தனர்.

## வடலூரில் ஏற்பாடுகள்

ஓமந்தூரார் இறந்த அன்று, மிக முக்கியமான அலுவலாகத் திரு. மகாலிங்கம் டில்லிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். தம் இல்லத்திலிருந்து காரில் ஏறி மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குச் செல்லத் தயாராக இருந்தார். அப்போது ஓமந்தூரார் மறைந்த செய்தியைத் திரு. பகீரதன் தெரிவித்தார்.

உடனே திரு. மகாலிங்கம் தம்முடைய டில்லிப் பயணத்தையும் அடுத்த பல நாட்களுக்கு ஒப்புக்கொண்டிருந்த பல நிகழ்ச்சிகளையும் கைவிட்டார்.

வடலூருக்குத் தகவல் கொடுத்து, உடல் அங்கே கொண்டு வரப்படுமென்றும், சமாதி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்படியும் சொன்னார்.

பிரிவுச் செய்தி வடலூருக்கு எட்டியவுடன் வள்ளலார் குருகுலம் பள்ளி மூடப்பட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் மௌன ஊர்வலம் நடத்தினர்.

பத்திரிகை நிலையங்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், ஓமந்தூராருடன் தொடர்புகொண்ட தமிழ்நாட்டுப் பெருமக்கள் அனைவருக்கும் திரு. நா. மகாலிங்கம் தொலைபேசி வழியாக ஓமந்தூராரின் பிரிவுச் செய்தியையும், மறுநாள் வடலூரில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சியைப் பற்றியும் அறிவித்தார்.

திரு. மகாலிங்கம், திருவலம் சுவாமிகளுக்கு தொலைபேசி மூலம் செய்தி அனுப்பி, சுவாமிகள் உடனே வடலூருக்குப் போய்ச் சேர்ந்து சமாதி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் வழிகாட்டி உதவுமாறு வேண்டிக்கொண்டார்.

திருவலம் சுவாமிகள் பொள்ளாச்சி ஆனைமலை சக்தி எஸ்டேட்டில் 26 நாளும், சித்தூர் கரும்பாடி சின்னம்ம ரெட்டியார் சிங்கார நந்தவனத்தில் 96 நாளும் தங்கியிருந்து திருவலம் கிராமவாசிகள் முறையிட்டதால் மீண்டும் திருவலத்துக்கு வந்துசேர்ந்த சமயம் அது.

ஓமந்தூரார் மறைந்த செய்தி, திருவலம் சுவாமிகளுக்குக் கிடைத்ததும், சின்னம்ம ரெட்டியார் கார் வந்தால் புறப்பட்டுப் போக வசதியாக இருக்குமென்று சுவாமிகள் நினைத்தார்கள். நினைத்ததும் திரும்பிப் பார்த்தால், சின்னம்ம ரெட்டியார் அங்கு வந்து சேர்ந்துவிட்டார். அவருடைய காரிலேயே வேலூர் சுகானந்த முதலியாரின் மாளிகைக்கு திருவலம் சுவாமிகள் போய்ச் சேர்ந்தார்கள். வேலூரிலிருந்து திரு. சுகானந்த முதலியார் காரில் ஏட்டு கிருஷ்ணமூர்த்தி துணையுடன் திருவலம் சுவாமிகள் புறப்பட்டார்கள்.

மாலை 6 மணிக்குத் திருவலம் சுவாமிகள் வடலூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஓ. பி. ஆர். வசித்த கட்டிடத்தின் முன்னர் சமாதி வைப்பதற்கு நடந்து கொண்டிருந்த ஏற்பாட்டைத் திருவலம் சுவாமிகள் தடுத்து; அதற்குப் பதில் குருகுலம் உயர்நிலைப்பள்ளியின் முன்னிலையில் கடைக்கால் போட ஏற்பாடு செய்தார்கள்.

## உடல் வடலூருக்கு வருகை

இரவு 8 மணிக்கு ஓ. பி. ஆரின் உடல் மோட்டார்வண்டி மூலம் சென்னையிலிருந்து வடலூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நள்ளிரவுக்குச் சற்று பின்னர், உடலைத் தாங்கிக்கொண்டு வந்த வண்டி வடலூரை அடைந்தது. ஓ. பி. ஆரின் உடல் அவர் நிறுவிய சுத்த சன்மார்க்க நிலையத்தில் அவர் கட்டிய தியான மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டது

## திருவருட்பா பாராயணம்

இரவு முழுவதும், மறுநாள் பகல் 12 மணி வரையிலும் திருவருட்பா பாராயணம் நடைபெற்றது. இரவு 12 மணியி லிருந்தே திரள்திரளாக மக்கள் வந்து குழுமினர். வடலூரிலுள்ள சன்மார்க்க ஸ்தாபனங்கள் அனைத்தும் வந்திருந்து திருவருட்பா

பாராயணம் செய்தன. சுத்த சன்மார்க்க நிலையம், திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையங்களின் நிர்வாகம், வடலூர் பஞ்சாயத்து, வடலூரிலிருக்கும் பல சன்மார்க்க ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் சார்பில் மாலையணிவிக்கப்பட்டன.

'குருகுலம் பள்ளிக்கு அருகே சமாதி வைத்தால் பையன்கள் பயப்படுவார்கள்' என்று சிலர் திரு. மகாலிங்கம் அவர்களிடம் கூறினர். "இதெல்லாம் என் இஷ்டம் இல்லை. திருவலம் சுவாமிகள் சொல்கிறபடிதான் நான் நடப்பேன்" என்று திரு. நா. ம. சொல்லி விட்டார்.

"ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், சாதாரண மனிதர், இவருக்கு சமாதி வைத்தால் 12 வருஷத்துக்கு ஊரில் மழை பெய்யாது" என்று ஒருவர் சுவாமிகளிடம் கூறினர்.

"இங்குதான் சமாதி வைக்கப்போகிறேன். இன்று முதல் 10 நாட்களுக்குள் மழைபெய்து கொட்டு கொட்டு என்று கொட்டும். நீங்கள் எல்லாம் மிரண்டு ஓடுவீர்கள். நம்புங்கள்.

இல்லாவிட்டால் 48 ஆம் நாள் நாங்களே இந்தப் பிரேதத்தை எழுப்பி, என் கையாலேயே காக்கை குருவி களுக்கு இரையாக்கிவிடுவேன்" என்று சுவாமிகள் சபதம் கூறினர்கள்.

"இராமசாமி ரெட்டியார், பெரிய ஞானி, அவரைப் போய் சாதாரண மனிதன் என்று சொல்லுகிருயே" என்று சுவாமிகள் பெருங்கூட்டத்தில் சொல்லி கட்டிடம் எழுப்பி வேண்டிய திரவியங்களைச் சமாதியில் கொட்டினர்கள். சுவாமிகள் முன்னிலை யில் ஊரன் அடிகள் ஓ. பி. ஆர். உடலைச் சமாதியில் வைத்தார் சிலர், கூட ஆதரவாகப் பிடித்தார்கள்.

அப்போது திருவலம் சுவாமிகளுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது ஓ. பி. ஆர். கால் மடங்குமோ மடங்காதோ என்பதுதான், அந்தச் சந்தேகம். சுற்றிலும் திரை போட்டு எல்லோரையும் திரைக்கு அப்பால் இருக்கச் சொல்லி, திருவலம் சுவாமிகள், ஊரன் அடிகள், திரு. மகாலிங்கம் திரு. ஓ. எம். லெட்சுமிநாராயண ரெட்டியார், ஆகியோரைமட்டும் உள்ளே அனுமதித்து, பிரேதத்தைக் கீழே இறக்கினர். கால் மடங்கா

விட்டால் காலை ஒடித்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் திருவலம் சுவாமிகளுக்கு. அதற்காகத்தான் திரை போடச் சொன்னார்.

பள்ளத்தில் இறக்கியதும் கால் தானாக மடங்கிக் கொண்டது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அதன் பிறகு திரையை நீக்கி, ஸ்நானம், கிரிகைகள் எதுவும் கூடாது என்று சுவாமிகள் சொல்லி விட்டார்கள்.

விபூதி, வில்வம், கற்பூரம், உப்பு, செங்கல்தூள், ஒரு வண்டி பூமாலை ஆகியவற்றை யெல்லாம் சமாதியில் கொட்டினார் திரு. மகாலிங்கம். மேல்பகுதியை மூடி 48 நாளில் கோயில் கட்டிப் பூர்த்தியாக வேண்டும் என்று திரு மகாலிங்கத்துக்கும், ஊரன் அடிகளுக்கும் திட்டம் சொல்லிவிட்டு, சுவாமிகள் விடை பெற்றார்கள்

இரங்கற் கூட்டம்

உயர்நிலைப்பள்ளி வெளியில் சுத்த சன்மார்க்க நிலையத் தலைவர் திரு நா. ம. தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. எஸ். சென்னியப்ப முதலியார் ஆகிய அறிஞர்களும் பிரமுகர்களும் இரங்கலுரை ஆற்றினர்.

சமாதிக் கோயில்

திரு. மகாலிங்கம் அவர்கள் திட்டப்படி, சமாதிக்கோயில் கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டு, 48ஆம் நாளில் கட்டிமுடிக்கப் பட்டது. விரைவாக இப்பணியைத் திரு. ஊரன் அடிகளும் வேலூர் திரு. ஊ. வ. தட்சிணாமூர்த்தி அவர்களும் நிறைவேற்றினர். சமாதிக்கோயிலில் பின்வரும் கல்வெட்டுப் பொறிக்கப் பெற்றது

## ஓ. பி. ஆர். சமாதிக் கோயில்

திரு. ஓமந்தூர் பெரிய வளவு இராமசாமி ரெட்டியார் 1—2—1895ல் பிறந்தார். இளமை முதல் தேசபக்தர். தமிழ் நாடு காங்கிரஸின் தலைவர் (1938) நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் 4 முறை சிறை சென்றார். சுதந்திர இந்தியாவில் சென்னை மாநிலத்

தின் முதலமைச்சர் (1947—49) 1949-ல் அரசியலைத் துறந்து ஆன்மீக வாழ்வை நாடி வடலூர் வந்தார். வள்ளற் பெருமானின் சமரச சன்மார்க்கப் பணிகளையே வாழ்வாகக் கொண்டார்.

18—6—1951ல் சுத்த சன்மார்க்க நிலையத்தை நிறுவி அதனைச்சார வள்ளலார் குருகுலம், உயர்நிலைப்பள்ளி, அப்பர் அநாதை மாணவர் இல்லம், அப்பர் சான்றோரில்லம் ஆகியவற்றை அமைத்து, தாமே நிர்வகித்தார். ஒய்வுபெற விரும்பி இவற்றை 11—6—1969ல் பொள்ளாச்சி ந. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். பின் இறுதிவரை வடலூரிலேயே வாழ்ந்தார். 25—8—1970ல் புகழுடம்பு எய்தினர். பூதவுடல் சமாதி செய்யப் பெற்ற இக்கோயில் 11—10—1970ல் திறக்கப் பெற்றது.

சான்றோர் ஓ. பி. ஆர். புகழ் வாழ்க.

## திறப்பு விழா

ஓ. பி. ஆர். இறைவனடி சேர்ந்த 48ஆம் நாளாகிய 11—10—1970-ல் சமாதியின்மேல் கட்டப்பட்ட கோயிலின் திறப்பு விழா நடைபெற்று அக்கோயிலுக்குள் அமைந்த 'அருட்பெருஞ் ஜோதி' வழிபாடும் நிகழ்ந்தது.

தியானமண்டபத்தில் ஓ. பி. ஆர். படம் திறக்கப்பெற்றது. 'சமாதி திருக்கோயில் திறப்பு விழா மலர்' என்ற சிறிய ஆனல் மணம் குறையாத ஒரு மலரும் அச்சிட்டு வெளியிடப்பெற்றது அன்று நடைபெற்ற விழாவில் முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமை வகித்தார்கள். முன்னுள் அமைச்சர்களான திரு. பக்தவத்சலம், திரு. அவிநாசிலிங்கம் திரு. மாணிக்கவேலு ஆகியோரும், ஓ. பி. ஆரின் இனிய நண்பர்களான திரு. என். எம். ஆர். சுப்பராமன், அருட்பா அரசு திரு. என். கிரிதாரிப் பிரசாத், திரு. எஸ்.என். சோமையாஜுலு போன்ற ஏராளமான தியாகிகளும், அறிஞர்களும் உரையாற்றினர்.

## புகழ் அஞ்சலி

ஓமந்தூரார் மறைந்த செய்தி கேட்டும், அதன் பின்னரும் சமாதிக்கோயில் திறப்புவிழாவின் போதும் நூற்றுக்கணக்கான

மக்களும் நிறுவனங்களும் ஓ. பி. ஆர்க்குப்புகழ் அஞ்சலி செலுத்தினர்.

இவ்வாறு ஓ. பி ஆர்க்குப் புகழ் அஞ்சலி செலுத்தியவர் பலர் அவரை நேரில் அறியார் எனினும், அவர்கள் அவரைப் பாராட்டி, அவர் மறைவுக்கு இறங்கியது ஏன்? அவர் தமிழகத்துச் சான்றோர்களில் ஒருவராக வாழ்ந்தார். காந்தியடிகள் புகட்டிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றினார். தவமுனிவராகத் திகழ்ந் தார். பொய் பேசாதவர் என்ற அடைமொழியைப் பெற்றார்.

சுவாமி சுத்தானந்த பாரதியார் பின்வரும் கடிதத்தை எழுதினார்.

16—8—70

அன்பரீர்,

இப்போதுதான் டில்லியிலிருந்து வந்தேன். நமது அருளன்பர் இராமசாமி ரெட்டியார் அருட்சோதி சேர்ந்தது கண்டு திடுக்கிட்டேன். அவர் வடலூருக்கே புது வாழ்வு தந்தார். அவரும் நானும் குருகுலம் நாட்டினோம். குருகுலத்தை காங்கிரி குருகுலம்போல அற்புதமாக வளர்க்க வேண்டும். அதுதான் நாம் அவரது ஆன்மாவுக்குச் செய்யும் கைம்மாறு. குருகுலமே அவரது குழந்தை, அதுவே அவர் சந்ததி—அருளும் பொருளும் அன்பும் அறிவும், கலையும் தொழிலும் குலுங்க குருகுலத்தை வளர்க்க திருவருட் செல்வர் மகாலிங்கம் மனது வைப்பார். உறுதி. குருகுலத்தில் ஓ. பி. ஆர். உருவச்சிலையை நாட்டவேண்டும். அதைக் காணுந்தோறும் மக்களுக்கு ஓர் உண்மையான கர்மயோகியின் நினைப்பு வரவேண்டும்.

ஓ. பி. ஆர். ஆன்மா—அழத்தக்கதன்று; தொழத் தக்கது.

அருட்சோதியிற் கலந்த அந்த ஆவியைச் சுற்றி அறிவுக்கதிர் வீசுக!

சுத்தானந்தபாரதி.

திருவருட்பாவுக்கு உரை எழுதியுள்ள சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பின் வருமாறு எழுதினார் :

"திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியாரவர்கள் 1921-ம் ஆண்டிலிருந்தே நான் அறிந்த தேசத் தொண்டர். ஆண்டு முதிர முதிர அரசியலுரிமைப் போரில் தெளிவும் ஊற்றமும் பெற்று, ஏனைத்தேசத் தொண்டரும் தலைவர்களும் அறிந்து வியக்கத்தக்க பணிபுரிந்து தன்னலமற்ற உயர் பண்பினால் மிக்கு உயர்ந்தார். காந்தியடிகளின் கொள்கைகளில் அழுந்திய பற்றும் பணியும் மேற்கொண்டவர்.


இளமை முதலே நேர்மையிலும் நல்லொழுக்கத்திலும் அசையாத உள்ளமும் பொதுமக்கள் நலம் பேணல் என்பது நேர்மை நெறியில் செயலும் உடையவர்க்கன்றி இனிது கைகூடாது என்ற கடைப்பிடியுமுடையர். தமிழ் நாட்டரசுக்கு முதலமைச்சராய்ப் பணிபுரிந்து "நேர்மை தவறாத நெறியுடையவர் ஓமந்தூரார்" என்ற சிறப்பைப் பெற்றார். அரசியல் தலைவர்களிடையே தன்னலமும் வஞ்சமும் லஞ்சமும் பொய்யும் புனைசுருட்டும் பெருகுதல் கண்டு அவர்தம் அரசியலைப் புறக்கணித்து வடலூர் அருட்பிரகாச வள்ளலின் அருள்நெறியைக் கடைப்பிடியாக மேற்கொண்டு வடலூரரையே தமது வாழ்வின் முடிவிடமாகக் கொண்டு தவவுள்ளத்தராயினர். வடலூரில் சமரசசுத்த சன்மார்க்க நிலையம் கண்டு அதன் ஆதரவில் உயர்நிலைப் பள்ளியொன்று நிறுவி அதன் பணிவகைக்கென்றே தமது பொருளனைத்தும் உரிமை செய்தனர்.

அவர் தாம் மேற்கொண்ட நல்லறத்தைப் பொள்ளாச்சி வள்ளல் மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்ட அறக்குழுவினர் வளர்க்குமாறு ஏற்பாடு செய்து தமது 75-ம் ஆண்டில் வடலூர் இராமலிங்க வள்ளல் காட்டிய அருட்சோதிப் பெருங்கருணை வெள்ளத்தில் திளைத்தருளுகின்றார்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் தொண்டுள்ளம் வாழ்க. அவரது சன்மார்க்க நிலையம் தழைப்பதாக.

அன்புள்ள,

ஔவை. துரைசாமி



மேலே : சமாதி கோயிலுக்குள் இருக்கும் ஓ. பி. ஆர். திருஉருவம், அவர் உபயோகித்த கைத்தடி.

கீழே : வடலூர் சுத்த சன்மார்க்க நிலையத்தில் இருக்கும் ஓ. பி. ஆர். சமாதிக்கோயில், வடலூர்.

முடிவுரை

பரம்பரை மணியக்காரர் குடும்பத்தில் தேவையான அளவு நிலபுலங்களோடு பிறந்த ஓமந்தூரார் வாழ்நாள் முழுதும் வசதியாக வாழ்ந்திருக்க முடியும்.

பிள்ளைப் பருவத்திலேயே இவர் தேசியக் கிளர்ச்சியில் பங்கு பெற்ருர். ஏனைய மனிதர்களிடத்தில் அபிமானம் இல்லாமல் இரக்கமற்ற முறையில் யாராவது நடந்துகொண்டால் இவர் மனம் பதறினுர்.

நடுத்தர வயதிலேயே துறவுச் சித்தாந்தம் இவரிடம் குடி கொண்டது

எதைப் பிறருக்கு உரைத்தாரோ அதன்படியே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

ஏழைகளுக்காகக் கண்ணீர் சிந்திஞர். அவர்களிடம் கருணை காட்டினுர். ஆனுல் உயர் அதிகாரத்தில் இருந்தவர்களுடைய தவறுகளைப் பகிரங்க படுத்தினுர்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உழவனுக்கு அரசு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று முழங்கிய முதல் அரசியல்வாதி ஓ. பி. ஆரே ஆவார்.

ஓமந்தூராரிடம் நாம்கண்டது என்ன? எதிலும், எப்போதும், ஒழுங்கு, நேர்மை, எளிமை, உண்மை.

என்ன நேர்ந்த போதிலும் அவர் ஒழுக்கத்தைத் தம் உயிரைப்போலப் போற்றிஞர். அவர் வாழ்ந்த வாழ்க்கை மனித சமுதாயமே பெருமைப்படக்கூடியது. இதை அவரோடு ஒரு நாள் பழகியவர்கள்கூட அறிவார்கள்.

நெருப்பைப் போல அவர் வாழ்ந்தார்.
சத்தியத்தைப்போல அவர் ஒளிவீசினுர்.
கடிகாரத்தைப்போல ஒரு மணித்துளியும் பிசகாது,
செயலாற்றினுர்.

இடத்துக்கோ, ஆளுக்கோ தகுந்தபடி அவர் சந்தர்ப்பவாதம் பேசவில்லை; தாளம் போடவில்லை; பின்பாட்டுப் பாடவில்லை.

நாள்தோறும் நாழிகை தோறும், ஓமந்தூரார் தன்னையே தராசில் எடைபோட்டுப் பார்த்துக் கொண்டார்.

அடக்கம், பணிவு, உண்மை என்னும் உயரிய குறிக்கோள்களிலிருந்து இம்மிகூடப் பிறழாமல் இருக்கிறேனா என்று தன்னைத் தானே கண்காணித்து வந்தார்.

பணத்திற்காக, பதவிக்காக, அதிகாரத்திற்காக, செல்வாக்குக்காக, பட்டத்திற்காக, பத்துப்பேருடைய கை தட்டலுக்காக, புகழுக்காக, பத்திரிகைகளில் தம் படங்கள் வெளிவர வேண்டும் என்பதற்காக எதையும் செய்யவும், எதையும் இழக்கவும் பக்குவப்பட்டுள்ள மக்கள் மந்தையில் ஓமந்தூரார் ஒரு தனிப்பிறவியாக இருந்தார்!

அவரைப் பார்த்து மற்றவர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற தனிப்பிறவியாக ஓமந்தூரார் இருந்தார்.

அஞ்சாநெஞ்சராக, கருணை நிறைந்தவராக, சன்மார்க்கியாக, கொள்கை வேளாக, பொதுமை நோக்காளராக, சமத்துவ வாதியாக, அருளாளராக, பண்பாட்டின் பிழம்பாக, தியாகச் சுடராக, வாழ்ந்த ஓமந்தூரார் அணையா ஒளிவிளக்கு ஆவார் அந்த ஒளி மங்காமல் பிரகாசிக்கட்டும்! வழி காட்டட்டும்!

"எல்லா உயிர்க்கும் இன்பம்" என்பதே
திரு நா. மகாலிங்கம் அவர்களின் குறிக்கோள்.

— டாக்டர். ந. சஞ்சீவி.

# 32

# ஓமந்தூராருக்குப் பின்

உலகத்தில் தோன்றிய மக்களை வாழ்ந்தும் வாழாதவர்; செத்தும் சாகாதவர் என்று இருகூறுகளாகச் சொல்லலாம்.

## வாழ்ந்தும் வாழாதவர்

நாள்தோறும் நாம் சந்திக்கும் பலர், தங்களால் நாட்டுக்கோ, மொழிக்கோ, மக்கள் சமுதாயத்துக்கோ எவ்விதப் பயனும் இன்றித் தம் வாழ்நாளை ஓட்டிச் செல்கின்றனர்.

பலர் தங்கள் மனைவிமக்கள் நலத்தை மட்டுமே பேணும் தன்னலக்காரர்களாக விளங்குகின்றனர்.

வேறு சிலர், தங்கள் குடும்பத்திற்குக்கூடப் பயன்படாமல் பூமிக்குப் பாரமாக இருந்து வருகின்றனர். இவர்கள் வெந்த சோற்றைத் தின்று, விதிவந்தபோது சாவோம் என்று இருப்பவர்கள், 'என்று வருவான் எமன்' என்று எதிர்நோக்குபவர்கள்,

சுருங்கச் சொன்னால், இவர்கள் நடைப்பிணங்கள் அல்லது நடமாடும் பிணங்கள்!

## செத்தும் சாகாதவர்

மக்களுடைய மேம்பாட்டுக்காகவும், அவர்களுக்கு வழி காட்டுவதற்காகவும், அவர்களை உய்விப்பதற்காகவும், தோன்றியவர்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் என்று போற்றப்பெறுகின்றனர்.

கௌதம புத்தர், மகாவீரர், வள்ளலார், மகாத்மா காந்தி போன்றவர்கள் இந்த வகையில் இடம் பெறுகிறார்கள்.

இவர்கள், சில கொள்கைகளுக்காக வாழ்ந்தவர்கள். அந்தக் கொள்கைகளுக்கு மக்களிடையே ஆதரவு இருக்கும்வரை இவர்கள் வாழ்வதாகவே கருதவேண்டும்

## ஓமந்தூரார்

ஓமந்தூரார், செத்தும் சாகாதவர் என்று சொல்லலாம் அவருடைய பூதவுடல்தான் மறைந்திருக்கிறது. அவருடைய புகழ் உடம்பு வாழ்கிறது.

ஓ. பி. ஆரின் புகழ் உடம்பு என்பது என்ன? அவர் கண்ட நிறுவனங்களே, அவருடைய புகழ் உடம்பு எனலாம்.

அந்த நிறுவனங்களை இப்போது யார் நடத்துகிறார்கள்? எப்படி நடத்துகிறார்கள்? அவற்றின் எதிர்காலம் எத்தகையது. ஓ. பி. ஆர். கண்ட கனவுகள் நனவாகி வருகின்றனவா? என்ற கேள்விகளுக்கு விடை கூறி இந்த நூலை முடிப்போம்.

அனாதைக் குழந்தைகளை வாழவைத்த ஓ. பி. ஆர். தாம் கண்ட நிறுவனங்கள் அனாதை ஆகிவிடாமல், தம் காலத்திலேயே அவற்றைத் தக்கவர் ஒருவரிடம் ஒப்புவித்தார்.

யாரிடம் அவற்றை ஒப்புவிக்கலாம் என்று இரண்டு ஆண்டுக் காலம் தமிழகத்திலுள்ள பலரை நினைத்தார். ஒவ்வொரு காரணத்துக்காக, ஒவ்வொருவரும் மறுத்தனர்; அல்லது அவர்களிடம் ஒப்படைக்க ஓமந்தூரார் தயங்கினார். ஒப்புக்கொண்டு நடத்துபவர் எத்தகையவராய் இருப்பார் என்று ஓ. பி. ஆர். தம்முடைய உரைகல்லில் மாற்று உரைத்துப் பார்த்தார். ஆழ்ந்து சிந்தித்து, விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தம் நிறுவனங்களை, பொள்ளாச்சி தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.

திரு. மகாலிங்கத்தின் தந்தை, பொள்ளாச்சி திரு. நாச்சிமுத்து கவுண்டர் இளமை முதல் வள்ளலாரிடம் ஈடுபாடு கொண்டிருந்தார். கோவை மாவட்டத்தில் சமரச சன்மார்க்க சங்கங்களுக்கு திரு. நாச்சிமுத்து கவுண்டர் பெரிதும் ஆதரவாக இருந்தார். ஓசைப்படாமல் அவர் அந்த இயக்கத்துக்குத் தம்மால் இயன்ற நிதிகளை வழங்கியதோடு வாய்ச் சொல்லும் அருளினார். இவ்வாறு தாம் பிறந்தபோதே, வள்ளலார் தொடர்பில் தோன்றியவர் திரு. நா. மகாலிங்கம்.

## சொத்துக்களைப் பேணல்

ஓ. பி. ஆர். விட்டுச் சென்ற சொத்துக்களைப் பேணுவதில், திரு. மகாலிங்கம் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறார்.

ஓர் ஆண்டில் பலமுறை வடலூருக்குச் செல்கிறார்.

வேலைகள் மலைபோலக் குவிந்திருப்பினும், அந்த வேலைகளின் பொருட்டு பொள்ளாச்சி, கோயம்புத்தூர், கொச்சி, ஆப்பக்கூடல், பெங்களூர், மேட்டுப்பாளையம், சென்னை, டெல்லி போன்ற எத்தனையோ நகர்களுக்கு செல்லவேண்டியிருந்தபோதிலும், ஓ. பி. ஆர். நிறுவிய நிறுவனங்களின் வேலைகளுக்கும், வடலூர்ப் பணிகளுக்கும் நேரம் ஒதுக்க திரு. மகாலிங்கம் தவறுவதில்லை.

## பார்ப்பீர் வடலூரை!

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தம்மைக் காண வருபவர்களுக்கு வடலூரைக் காட்டவும், வள்ளலார் கொள்கைகளை அவர்களுக்கு விளக்கிக் கூறவும் திரு மகாலிங்கம் மறந்துவிடுவதில்லை.

தாமே அந்த விருந்தினர்களை வடலூருக்கு அழைத்துச் செல்வார். தாம் செல்ல இயலாவிட்டால், மகாலிங்கம், மகாலிங்கத்தை[1] அனுப்புவார்.

தக்காரைத் தேர்ந்தெடுத்த ஓமந்தூரார் புகழ் வாழ்க!
வளர்க! நிலவுக!
திருஅருட்பா உலகம் எங்கும் பரவி மனிதகுலத்திற்கு வழி காட்டட்டும்!
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!

---

1. *திரு. பகீரதனின் இயற்பெயர் — கி. மகாலிங்கம்*

# பிற்சேர்க்கை

## தேதிகள் சொல்லும் செய்திகள்

1895 ஓமந்தூரில் பிறந்தார் (ஜய–தை–20 வெள்ளிக்கிழமை)

1901 ஓமந்தூரில் பள்ளிப் படிப்பு ஆரம்பம்.

1905 திண்டிவனத்தில் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார்.

1908 தகப்பனார் முத்துராம ரெட்டியார் இருந்தார், திண்டிவனம் படிப்பை முடித்துக் கொண்டு, குடும்பத் தலைவராகப் பொறுப்பு ஏற்றார். விவசாயத்தில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்.

1909 சிறிய தந்தையார் கிளியனூர் சின்னசாமி ரெட்டியார் என்ற முத்து வெங்கட்டராம ரெட்டியார் இவரை, சென்னையில் ஓர் உயர்நிலைப்பள்ளியில் ஓராண்டு படிக்க வைத்தார்.

1910 திருமணம்.

1916 மகன் சுந்தரம் பிறந்தான்.

1917 ஒரு திருமண வீட்டில் கோவை ஆர். கே. சண்முகம் செட்டியாரைச் சந்திக்க நேர்ந்தபோது அவருடன் அன்றைய அரசியல் நிலைமைகளை விவாதித்தார்.

1919 பெண்குழந்தை பிறந்து, பிறந்து 27-ஆம் நாளில் இறந்தது.

" காங்கிரசில் சேர்ந்தார்.

" மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்கீழ், சென்னை இராசதானி லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலுக்குத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி (புறக்கணிக்கும்படி) ஓ. பி. ஆர். தென் ஆர்க்காடு மாவட்டத்து வாக்காளர்களை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டார்.

1920 மனைவி இறந்தாள். உடனே ஓ. பி. ஆர். வீட்டை விட்டு வெளியேறி தம் பண்ணைக்குள் 'கந்த ஆசிரமம்' என்ற பெயரில் ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வரலானார்.

" நாகபுரியில் (சேலம் சி. விஜயராகவாச்சாரியார் தலைமையில்) நடைபெற்ற காங்கிரஸ் மகா சபை மாநாட்டுக்கு நண்பர்களுடன் சென்றார்.

" தென் ஆர்க்காடு மாவட்ட அரசியல் மாநாட்டை விழுப்புரத்தில் நடத்தப் பெரிதும் காரணமாக இருந்தார்.

1921 கடலூரில் டாக்டர் அன்னிபெசன்ட் தலைமையில் நடைபெற்ற பிரம்ம ஞானசபை மாநாட்டுக்குச் சென்று அங்கு பெசன்ட் அம்மையாரைச் சந்தித்தார்.

" தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மகாத்மா காந்தி சுற்றுப்பயணம்.

1922 திண்டிவனம் காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார்.

" ஈ. வே. ரா. தலைமையில் சிதம்பரத்தில் நடைபெற்ற தென் ஆர்க்காடு மாவட்ட காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1923 கிராமங்களில் தூயவாழ்க்கைப் பயிற்சி நிலையங்கள் தொடங்கி கதர்ப் பிரசாரமும் நன்னடத்தைப் பிரசாரமும் செய்தார்.

1926 தீவிர காங்கிரஸ்வாதி ஆனார். நண்பர் பலரைச் சேர்த்து, கிராமம் கிராமமாக நடந்து சென்று தாங்களே தண்டோரா போட்டுக் கொண்டு கூட்டங்கள் நடத்தி தேசிய பிரச்சாரம் செய்தார். கடலூர்ச் சிறையில் இருந்த தேசபக்தர் சுதர்சன நாயுடுவுக்குச் சிறைக்கு உணவு கொண்டுபோய்ப் படைத்தார்.

1927 தென் ஆர்க்காடு மாவட்டக் கழகத் தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர் இராமச்சந்திரப் படையாச்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து அவரை ஓ. பி ஆர். தோற்கடித்துப் புகழ் பெற்றார்.

1928 மகன் சுந்தரம் பெங்களூரில் இறந்தான்.

1930 மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு 1937 வரை அப்பதவியை வகித்தார்.

,, திண்டிவனத்தில் கதர் விற்பனை செய்தார். திண்டிவனம், விழுப்புரம், கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் வட்டங்களில் கிராமம் கிராமமாகச் சென்று உப்புச் சத்தியாக்கிரகத்தின் நோக்கத்தை எடுத்துச் சொல்லி சுயராஜ்யம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு விளக்கினார். முதல் தடவையாக வடலூருக்கு வந்தார்.

விருத்தாசலம் வட்டம் நல்லூர் என்னும் ஊரில் 144ஆம் எண் விதிப்படி தடை உத்தரவை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டார்.

1931 காந்தி இர்வின் உடன்பாடு ஏற்பட்டு விடுதலை செய்யப் பட்டார்.

1932 காந்தி இர்வின் உடன்பாடு தோல்வியடைந்ததின் விளைவாக, விழுப்புரத்தில் சீமைத்துணி விற்பனை செய்த ஜவுளிக்கடைகளின் முன்பாக, ஓ. பி. ஆர். தொண்டர்களைத் திரட்டி மறியல் செய்தார். சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக கடலூரிலுள்ள மாவட்ட மாஜிஸ்ரேட்டால் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்.

1934 ஹரிஜன நிதி திரட்டவும் ஹரிஜனங்களிடையே பணி புரியவும் மகாத்மா காந்தி இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது சிதம்பரத்தில் சுவாமி சஹஜானந்தா தொடங்கிய ஹரிஜன ஆசிரமத்திற்கு ஓ. பி. ஆர். உறுதுணையாக இருந்தார்.

1934 டில்லி மத்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திரு. சி. என். முத்துரங்க முதலியார் வெற்றி பெறச் செய்தார்.

1936 ஜில்லா போர்டுகள் (எனப்பட்ட மாவட்டக் கழகங்களுக்கு) தேர்தல்—ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாக இருந்த தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற காரணமாக இருந்தார்.

" புதுச்சேரியில் கிராம்பு சத்தியாக்கிரகம் நடத்தினார்.

" தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்த ஜில்லா போர்டுகளைக் கண்காணிக்க, மாகாண காங்கிரஸ் கமிட்டி அமைத்த மூவர் குழுவில் இடம்பெற்று, திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா, திரு. மீ. பக்தவத்சலம் ஆகியோருடன் சேர்ந்து தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்தார்.

" தென்ஆர்க்காடு மாவட்டத்துப் படையாச்சிகளைக் குற்ற பரம்பரையினராகக் கருதி, ஜஸ்டிஸ் கட்சி அரசு சட்டம் கொண்டு வந்தது. அதை எதிர்த்து நடந்த கிளர்ச்சிக்கு ஓ. பி. ஆர். ஆதரவாக இருந்தார்.

1937 தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு உறுப்பினர் ஆனார். மாகாண சட்டசபைத் தேர்தல்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டார்.

" வத்தலக்குண்டு மாநாட்டில் தமிழ் நாடு காங்கிரசின் துணைத் தலைவர் ஆனார்.

1938 தென் ஆர்க்காடு மாவட்டம் நிலச்சுவான்தார் தொகுதி இடைத் தேர்தலில் சென்னை மேல்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

" (டிசம்பர் 31) ராஜபாளையத்தில் மாகாண அரசியல் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். பிறகு மாகாண காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940 தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஓமந்தூரில் கைது செய்யப் பட்டார்.

1941 வேலூர்ச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

1942 வெள்ளையனே இந்தியாவைவிட்டு வெளியேறு இயக்கத்தில் கைது செய்யப்பட்டார். அடுத்த மூன்று ஆண்டுகள் தஞ்சாவூர் திருச்சி சிறைகளில் கழிந்தன.

1945 சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

" இராமநாதபுரம் மாவட்டம் கோட்டையூரில் திருப்பத்தூர் தாலுகா தேசிய விவசாயிகள் மாநாட்டிற்கு தலைமை தாங்கினார்.

1946 திருப்பரங்குன்றம் மாநாடு – இராஜாஜிக்குத் தீவிர எதிர்ப்பு.

" சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

" சென்னை மாகாண சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு. டி. பிரகாசம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் முதலமைச்சரானார். ஓ. பி. ஆர். சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாய அமைச்சர் பொறுப்பை ஏற்கும்படி பிரகாசம் கேட்டுக் கொண்டதை ஏற்க மறுத்தார்.

1947 மார்ச்சு 23 – சென்னை மாகாணத்தின் பிரதமராகப் பதவி ஏற்றார்.

" ஆகஸ்டு 15 – இந்தியா சுதந்திரம் பெற்றது, அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினரானார்.

1948 மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய அஸ்தியை ஓ. பி. ஆர். சென்னைக்குக் கொண்டுவந்தார்.

" சென்னையிலிருந்து டில்லிக்குச் செல்லும்போது போப்பாலுக்கு அருகே விமான விபத்து ஏற்பட்டு உயிர் தப்பினார்.

" ஹைதராபாத் சமஸ்தானம் சுதந்திர இந்தியாவுடன் இணைவதற்கு அரும்பாடுபட்டார்.

" செப்டம்பர் 9-ஆம் நாளில் போலீஸ் நடவடிக்கையால் ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவின் ஒரு பகுதியாயிற்று.

1949 ஏப்ரல் 6 – முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

" திரு. பி. எஸ். குமாரசாமி ராஜாவை முதலமைச்சர் ஆக்கினார்.

" ஜூன் – நிலச்சீர்திருத்தங்கள் செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்பற்றிப் பரிந்துரைக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நியமித்த ஜே. சி. குமரப்பா அறிக்கையில் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்திலிருந்து மாறுபட்டு, தம்முடைய எண்ணத்தை ஆணித்தரமாக வெளியிட்டார்.

1950 வடலூரில் நிலம் வாங்கினார்.

" ஏப்ரல் 24 – வடலூரில் கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஞானசபை கும்பாபிஷேகம் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தார்.

" புதுச்சேரி இணைப்பு இயக்க ஆதரவாளர்களுக்கு ஆலோசனை கூறினார்.

1951 சென்னை காஸ்மோபாலிட்டன் கிளப் இவரை கௌரவ உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது.

" குன்றக்குடியில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

" தமிழ் நாட்டிலிருந்து இந்தியப் பாராளுமன்றத்துக்கும், சென்னைச் சட்டசபைக்கும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் ஓ. பி. ஆர். நியமிக்கப் பட்டார். இச்செய்தியைப் பத்திரிகைகளில் படித்ததும், தாம் குழுவில் இருக்க விரும்பவில்லை என்று ஓ. பி. ஆர். அறிவித்து, தலைவர் காமராசருக்கும் அவ்வாறே எழுதினார். காங்கிரசுக்கு எதிர்க்கட்சியாக, ஆச்சாரியா ஜே. பி. கிருபாளனி முதலிய தலைவர்கள் தொடங்கிய பிரஜா கட்சியில் சேர மறுத்தார்.

" வடலூரில் சுத்த சன்மார்க்க நிலையம் நிறுவினார்.

1952 சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி ஆட்டம் கண்டது. கட்சியின் நலனை முன்னிட்டு, இராஜாஜியை முதலமைச்சராக்க ஓ. பி. ஆர். மிகவும் காரணமாக இருந்தார்.

” அரசை நடத்துவதில் ஓ. பி. ஆருடைய ஒத்துழைப்பை வேண்டி, இராஜாஜி இவரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்தார்.

” மேலவைத் தலைவராக இருக்கும்படி இராஜாஜி கேட்டுக் கொண்டும் இவர் அப்பதவியை ஏற்க மறுத்தார். இவர் விரும்பியவாறு டாக்டர். பி. வி. செரியனை மேலவைத் தலைவராக்க இராஜாஜி இசைந்தார்.

” வடலூர்ப் பகுதியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப் படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளர்ச்சி செய்து, வடலூர்ப் பகுதியை நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் திட்டத்திலிருந்து விலக்க முயன்று வெற்றி கண்டார்.

” செங்கற்பட்டு மாவட்டம் மீஞ்சூரில் நடைபெற்ற சென்னை மாகாண விவசாயிகள் மாநாட்டைத் திறந்துவைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

1953 சிறுவந்தாடு என்னும் சிற்றூரில் ஓமந்தூரார் ஆஸ்பத்திரியை முதலமைச்சர் இராஜாஜி திறந்துவைத்தார்.

1954 ஆனி 28 – ஓமந்தூரில் கும்பாபிஷேகம் நடத்திவைத்தார்.

1955 வடலூரில் மணிவிழா நடைபெற்றது.

” ரெட்டியார்கள் குழு, மணிவிழாவில் இவருக்கு வழங்கிய பண முடிப்பு ரூ. 60,000/–ஐக் கொண்டு வடலூர்ப் பணிகளுக்கு வாங்கிய நிலங்களைச் செம்மைப்படுத்தினார்.

” சென்னைக்கு வரும் வழியில் செங்கற்பட்டுக்கு அருகே விபத்து நேர்ந்தது.

1958 உறவினர்கள் வீடுகளுக்குச் செல்லுவதை நிறுத்திக் கொண்டார்.

1958 வடலூரர் சுத்த சன்மார்க்க சேவாசிரமக் கட்டிடங்கள் திறப்புவிழா.

1962 அரசியலிலிருந்து விலகிக்கொண்டார்.

1963 இராஜாஜி தொடங்கிய சுதந்தராக்கட்சியில் சேரமறுத்தார்.

1964 சட்டமன்ற மேலவை உறுப்பினராக,ஆளுநரால் நியமிக்கப் பட்டார். ஆனல், இவர் அப்பதவியை ஏற்கவில்லை.

1967 கோயம்புத்தூரில் விவேகானந்தர் நூற்ருண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினர்.

1969 தொழில் அதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினரிடம் 11—6—1969-இல் வடலூரர்ப் பணிகளை ஒப்படைத்தார்.

1970 ஆறுபடை வீடுகளுக்கு யாத்திரை சென்ருர்.

„ ஆகஸ்டு 25: சென்னையில் காலமானுர்.

„ ஆகஸ்டு 26 வடலூரில் சமாதி வைக்கப்பட்டது.

„ அக்டோபர் 10: சமாதி திருக்கோயில் திறப்பு விழா.

# பேட்டி வழங்கியவர்கள்

## சென்னை மாநகரம்

1. திருமுருக
கிருபானந்தவாரியார்
சுவாமிகள்
ஆசிரியர்,
'திருப்புகழ் அமிர்தம்'
சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை 600 002

2. சுவாமி
சுத்தானந்த பாரதியார்
'யோக சமாஜம்'
ஸ்ரீராம் நகர்
கிண்டி, சென்னை 600 025

3 திரு. வீ. வி. கிரி
கிரி சாலை
சென்னை 600 017

4. திரு. க. சந்தானம்
(முன்னாள் லெப்டினன்ட்
கவர்னர், விந்தியப்
பிரதேஷ்)
அபிராமபுரம்
சென்னை 600 004

5. திரு.
சி. சுப்பிரமணியம், எம். பி.,
(முன்னாள் நிதியமைச்சர்,
இந்திய அரசு)
கோட்டூர்புரம்
சென்னை 600 085

6. திரு. மீ. பக்தவத்சலம்
வாரன் சாலை
சென்னை 600 004

7. திரு.
சென்னியப்ப முதலியார்
போக் சாலை
சென்னை 600 017

8. திரு.
எம். ஏ. மாணிக்கவேலு
நாயக்கர்
முன்னாள் அமைச்சர்
சென்னை 600 017

9. டாக்டர். ப. நடராசன்
ஹாரிங்டன் சாலை
சேத்துப்பட்டு
சென்னை 600 031

10. டாக்டர்.
வி. சண்முகசுந்தரம்
பொருளாதாரப்
பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

11. சிலம்புச் செல்வர்
ம. பொ. சி.
சென்னை 600 018

12. திரு. சேலம்
அ. சுப்பிரமணியம்
முன்னாள் எம். எல். ஏ.
தி. நகர், சென்னை 600 017

13. சொர்ணூர்
திரு. கே. சந்தானம்
1 மகாராணி
சின்னம்மா சாலை
தேனாம்பேட்டை
சென்னை 600 018

14. திரு. அனந்தாச்சாரி
மௌபிரேஸ் சாலை
சென்னை

15. திரு. பி. வி. இராசமன்னார்
(முன்னாள் தலைமை நீதிபதி,
சென்னை உயர்நீதிமன்றம்)
விக்டோரியா கிரெசன்ட்
சென்னை 600 008

16. திரு. ஏ. அழகிரிசாமி
ஓய்வுபெற்ற
சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி
7/3 அபிராமபுரம்
நான்காவது தெரு
சென்னை 600 018

17. திரு. என். கிருஷ்ணசாமி
ரெட்டியார்
ஓய்வுபெற்ற நீதிபதி
அண்ணா நகர்,
சென்னை 600 040

18. திரு. சடகோபன்
(நிதிக் கட்டுப்பாடு
அலுவலர், தமிழக அரசின்
உயர்நிலைப்பள்ளிக் கல்வி
இயக்குநர் அலுவலகம்)
29 சீத்தம்மா
எக்ஸ்டென்சன்
செனடாப் சாலை
2-ஆவது தெரு
சென்னை 600 018

19. திரு. பி. வி. கிருஷ்ணய்யா
209 தம்பு செட்டித் தெரு
சென்னை 600 001

20. திரு.
உத்தண்டராம பிள்ளை,
ஐ. ஏ. எஸ். (ஓய்வு)
கற்பகாம்பாள் நகர்
சென்னை 600 004

21. திரு. கே. திரவியம்,
ஐ. ஏ. எஸ்.
நில வருவாய் வாரிய
உறுப்பினர்
தமிழ்நாடு அரசு
சென்னை 600 005

22. திரு. டி. ஏ. வர்கீஸ்,
ஐ. ஏ. எஸ்.
(முன்னாள் தலைமைச்
செயலாளர்)
காந்திநகர்,
சென்னை 600 020

23. திரு. வி. கார்த்திகேயன்,
ஐ. ஏ. எஸ்.
தலைமைச் செயலாளர்
தமிழ்நாடு அரசு
சென்னை 600 009

24. திரு. ஆர். குழந்தைவேலு,
ஐ. ஏ. எஸ்.,
நகராண்மைக் கழகங்களின்
தலைமை அலுவலர்
சென்னை

25. திரு. எஸ். பார்த்தசாரதி
அய்யங்கார்
ஓய்வுபெற்ற டி. ஐ. ஜி.
தேனாம்பேட்டை,
சென்னை 600 018

26. திரு. பொன். பரமகுரு
போலீஸ் கமிசனர்
சென்னை 600 008

27. திரு.
நெ. து. சுந்தரவடிவேலு
(முன்னாள் துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்)
செனாய் நகர்,
சென்னை 600 030

28. காப்டன் சுந்தரம்
விமானம் ஓட்டுநர்
பசுலுல்லா சாலை
சென்னை 600 017

29. டாக்டர். கிருஷ்ணமூர்த்தி
இயக்குநர், புற்றுநோய்
மருத்துவ நிறுவனம்
அடையாறு,
சென்னை 600 020

30. டாக்டர். இரத்தினவேலு
சுப்பிரமணியம், எம். டி.,
எப். ஆர். சி. பி. (எல்)
கீழ்ப்பாக்கம்,
சென்னை 600 010

31. திரு. வி. பலராமையா
ஓய்வுபெற்ற நீதிபதி
அரும்பாக்கம்
சென்னை

32. திரு. வி. எஸ். தியாகராஜ
முதலியார்
14 ஸ்டர்லிங் சாலை
சென்னை 600 034

33. திரு. மாணிக்கவாசக
ரெட்டியார்
(செயற்பொறியாளர்,
பொதுப்பணித்துறையின்
மானிட்டரிங் பகுதி -
நீர்ப்பாசனம்)
4 தீத்தாரப்ப
முதலியார் தெரு
சென்னை 600 005

34. திரு. லெட்சுமிநரசிம்மன்
127 அரண்மனைச் சாலை
சாந்தோம்,
சென்னை 600 004

35. டாக்டர்.
அவ்வை நடராசன்,
எம். ஏ., பிஎச். டி.
மொழிபெயர்ப்புத் துறை
இயக்குநர்
தமிழ்நாடு அரசு
சென்னை 600 009

36. திருமதி
வி. மீனாட்சி அம்மாள்
சென்னை 600 084

37. டாக்டர்.
ஆர். வேங்கடசாமி
பிளாஸ்டிக் அறுவை
சிகிச்சை நிபுணர்
75 டாக்டர். அழகப்ப
செட்டியார் சாலை
சென்னை 600 084

38. சீர்காழி திரு.
ஆர். சுந்தரேசன்
வேளாண்மை நிதித் துறைத்
தலைவர்
இந்தியன் பாங்கு
சென்னை 600 001

39. திரு. ஏ. என். சிவராமன்
ஆசிரியர், 'தினமணி'
சென்னை 600 002

40. திரு. சௌரிராசுலு
முன்னாள் ஆசிரியர்
'நவமணி' நாளிதழ்
சென்னை 600 028

41. திரு. சின்ன அண்ணாமலை
சென்னை 600 017

42. காரைக்குடி டாக்டர்.
எஸ். சுப்பிரமணியம்
லெட்சுமிபுரம்
சென்னை 600 004

43. திரு. எஸ். டி. சுந்தரம்
(முன்னாள் எம். எல். சி.)
லெட்சுமிபுரம்
சென்னை 600 014

44. திரு. வரதன்
தலைமுடி அலங்காரக் கடை
மூர் மார்க்கெட் எதிரில்
சென்னை 600 003

45. திரு. ஏ. வரதப்ப
செட்டியார்
தெற்கு மாடவீதி
மயிலாப்பூர்,
சென்னை 600 004

46. திரு. வி. வி. ரெட்டி
ரெட்டி சத்திரம்
பீட்டர்ஸ் சாலை
சென்னை 600 014

47. திரு. மு. அருணாசலம்
இயக்குநர்
தமிழ், சமஸ்கிருதம், இந்திய
மொழிகள் ஆராய்ச்சி
நிலையம்
சென்னை 600 008

48. திரு.
ம. ப. பெரியசாமித்தூரன்
கஸ்தூர்பா நகர்
சென்னை 600 020

49. திரு.
எஸ். ஆர். சுப்பிரமணியம்
சர்வோதய மண்டல்
520 திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை
சென்னை 600 005

50. திரு. பகீரதன்
செயலாளர்
இராமலிங்கர் பணி மன்றம்
சென்னை 600 086

51. பேராசிரியர்
நாரண துரைக்கண்ணன்
23-அ, கங்கையம்மன்
கோயில் தெரு
சூளைமேடு,
சென்னை 600 033

52. கலைமாமணி புத்தனேரி
இரா. சுப்பிரமணியம்
37 சீத்தம்மா விரிவு
சென்னை 600 018

53. வாகீச கலாநிதி
கி. வா. ஜகந்நாதன்
ஆசிரியர், 'கலைமகள்'
சென்னை 600 004

54. திரு. வேலூர் நாராயணன்
ஆசிரியர், 'அலை ஓசை'
சென்னை 600 029

55. திரு. கொடுமுடி
ராஜகோபாலன்
நந்தனம்,
சென்னை 600 035

56. திரு. ஏ. கே. செட்டியார்
ஆசிரியர், 'குமரி மலர்'
100 மௌபரேஸ் சாலை
சென்னை 600 018

57. திரு. கோபாலன்
குமரி மலர்
100 மௌபரேஸ் சாலை
சென்னை 600 018

58. திரு. வி. திருநாவுக்கரசு
தகவல் அலுவலர்,
பத்திரிகைச் செய்தி
அலுவலகம்
இந்திய அரசு,
சாஸ்திரி பவன்,
சென்னை 600 006

59. திரு.
எஸ். ஆர். வெங்கட்டராமன்
செயலாளர்,
இந்திய ஊழியர் சங்கம்
சென்னை 600 014

60. திரு. மீ. ப. சோமசுந்தரம்
அனைத்திந்திய வானொலி
நிலையம்
சென்னை 600 004

61. தாமரைச் செல்வர்
திரு. வ. சுப்பையா பிள்ளை
தலைவர், தென் இந்திய
சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்
பிரகாசம் சாலை
சென்னை 600 001

62. ஆதம்பாக்கம்
இராமகிருஷ்ணய்யர்
3 அய்யா பிள்ளை தெரு
சென்னை 600 005.

63. திரு. புலியூர் உடையான்
கூடுதல் நேர்முக
உதவியாளர்
இந்துசமய
அறநிலையத்துறை
சென்னை 600 034

## செங்கற்பட்டு மாவட்டம்

64. திருமதி பி. டி. கமலம்மாள்
இராமலிங்கத் தாயார்
சின்னம்மையார் இல்லம்
50 A/2 செட்டித் தெரு
சின்னக் காஞ்சிபுரம்

65. திரு.
முத்துலிங்க ரெட்டியார்
பெருநிலக்கிழார்
கயப்பாக்கம்
மதுராந்தகம் வட்டம்

66. திரு முத்துமல்லா ரெட்டி
'மல்டி கிரோ பண்ணை'
புலம்பாக்கம், மதுராந்தகம்
வட்டம்

67. திரு. எம். இராமகிருஷ்ண
ரெட்டியார்
ஆற்றுப்பாக்கம்.

68. திரு. ஆர். சீனிவாச
அய்யர், பி. ஏ., பி. எல்.,
உழவர் மன்றம்
ஆத்தூர்

69. புலவர் கோ. சீராமன்,
பி. ஏ., பி. லிட்.,
தமிழாசிரியர், வளர்பிறப்
பள்ளி,
வண்டலூர்,
சென்னை 600 048

70. திரு. அழகர் அடிகள்
குருகுலம், மாம்பாக்கம்
மதுராந்தகம் வட்டம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

71. திருவலம் மௌன
சுவாமிகள்
திருவலம்

72. திரு. வி. வி. திலக்
சாஸ்த்திரி
41 தேரடி வீதி
திருவண்ணாமலை

73. திரு.
டி. என். வெங்கட்டராமன்
மேலாளர், ரமணஆசிரமம்,
திருவண்ணாமலை.

74. திரு. வி. கணேசன், எம். ஏ
ஆசிரியர், 'மௌண்டன்
பாத்'
ரமண ஆசிரமம்
திருவண்ணாமலை.

75. திருமதி
பெரோசா தலையார்கான்,
திருவண்ணாமலை.

76. புவனகிரி திரு. இராமசாமிப்
பிள்ளை
திருவண்ணாமலை.

77. திரு. குஞ்சு சுவாமி
ரமண ஆசிரமம்
திருவண்ணாமலை

78. சுவாமி ரெங்கநாதனந்தஜி
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
நாட்டறம்பள்ளி

## கோவை மாவட்டம்

79. திரு தி.சு. அவினாசிலிங்கம்
செட்டியார்
இராமகிருஷ்ண
வித்யாலயம்,
பெரியநாயக்கன் பாளையம்
கோயம்புத்தூர் 641 020

80. தியாகி திரு.
எஸ். திருஞானசம்பந்தம்
ஆசிரியர், 'அருள்முரசு'
சன்மார்க்க சபை
சூளூர் (பல்லடம் வட்டம்)

81. "அருட்பா அரசு" திரு.
கிரிதாரி பிரசாத்,
கோயம்புத்தூர்

## சேலம் மாவட்டம்

82. டாக்டர் எஸ். குருபாதம்
சூரமங்கலம்
சேலம்

83. திரு. சாம்பசிவ ரெட்டியார்
முன்னாள் எம். எல். ஏ
ஆத்தூர்

## தஞ்சை மாவட்டம்

84. திரு அ. கிருஷ்ணசாமி
வாண்டையார்
பூண்டி

85. துளசியா வாண்டையார்
பூண்டி.

86. திரு. சே. மனைத்துணைநாத
தேசிகர்
நிலக்கிழார்
முன்னாள் எம். எல். ஏ.
வலிவலம்

87. திரு. வே. அப்பாக்குட்டி,
கஸ்தூர்பா காந்தி கன்யா
குருகுலம்
வேதாரண்யம்

## திருச்சி மாவட்டம்

88. திரு.
டி. எம். நாராயணசாமி பிள்ளை
ஓய்வுபெற்ற துணைவேந்தர்
தில்லைநகர்
திருச்சி

89. சுவாமி சித்பவானந்தா
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை 639115

90. முத்தமிழ்க் காவலர் திரு.
கி. ஆ. பெ. விசுவநாதம்
திருச்சி

91 திரு.
பி. பீ. கே ராஜா சிதம்பர ரெட்டியார்
பெருவளநல்லூர்
பெரம்பலூர்

92. திரு சா. இராமகிருஷ்ணப் பிள்ளை
தியாகி
அங்கராயநல்லூர்
ஜெயகொண்டம் வட்டம்

## மதுரை மாவட்டம்

93. திரு. ந. ம. ரா. சுப்பராமன்
வல்லபாய் தெரு
மதுரை – 2

94. திரு. க. அருணசலம்
தலைவர்
தமிழ்நாடு காந்தி ஸ்மரக் நிதி
மதுரை – 20

95. திரு. எஸ். அழகிரிசாமி
செயலாளர்
தமிழ் நாடு காந்தி சமரக் நிதி
மதுரை – 20

96 டாக்டர்
ஜி. இராமச்சந்திரன்
துணைவேந்தர்
காந்தி கிராமம் பல்கலைக்கழகம்
காந்திகிராமம் 624 302

97. டாக்டர் திருமதி
சௌந்திரம் ராமச்சந்திரன்
9 ஜவஹர் சாலை
சொக்கிகுளம்
மதுரை – 2

98. பத்மஸ்ரீ டாக்டர்
ஜி. வேங்கடசாமி
அரவிந்த் கண் மருத்துவமனை
240 நாயக்கர் புதுத் தெரு
மதுரை

99. திரு. ரா. குருசாமி
தலைவர்
காந்தி நிகேதன் ஆசிரமம்
டி. கல்லுப்பட்டி

100. திரு. ஆர். ஆர். செய்தான்
சர்வோதய ஆசிரமம்
வத்தலகுண்டு

101. திரு. சந்தானம்
நிர்வாக இயக்குநர்
கிராம ராஜ்யம்
108 திருப்பரங்குன்றம்
நெடுஞ்சாலை
மதுரை 625 001

102. திரு. வி. செல்வராஜ்,
பி. ஏ., பி. டி.,
தலைவர், கிராமராஜ்யம்
108 திருப்பரங்குன்றம்
நெடுஞ்சாலை
மதுரை 625 001

## இராமநாதபுரம் மாவட்டம்

103. திரு. எஸ். ஜெயராம்
ரெட்டியார்
முன்னாள் எம். எல். சி.
விருதுநகர்

104. கம்பன் அடிப்பொடி திரு.
சா. கணேசன்
கம்பன் கழகம்
காரைக்குடி – 2

105. திரு. டி. ஆர். அருணாசலம்
9, எட்டாவது தெரு
சுப்பிரமணியபுரம்
காரைக்குடி – 2.

## திருநெல்வேலி மாவட்டம்

106. திரு. ஏ. பி. சி. வீரபாகு
முன்னாள் எம். எல். ஏ.
தூத்துக்குடி

107. திரு.
எஸ். எம். சோமயாஜுலு
தலைவர்
தமிழ்நாடு சுதந்திரப்
போராட்ட வீரர்கள் சமிதி
54–எப், பெருமாள் புரம்
திருநெல்வேலி 627 007

108. திரு. பி. ஸ்ரீ.
விட்டலா புரம்
செய்துங்க நல்லூர்(வழி)

109. பேராசிரியர்
கே. எஸ். சோணச்சலம்
சிவகிரி இல்லம்
குற்றாலம் 627 802

110. திரு வேங்கடசாமி
ஓய்வுபெற்ற கதர்
அலுவலர்
சங்குபட்டி
திருவேங்கடம்
கோயில்பட்டி வட்டம்

## கன்யாகுமரி மாவட்டம்

111. திரு.
ரா. வெ. ருத்தரப்பசுவாமி
பயனீயர் குமாரசாமி
கல்லூரி
நாகர்கோயில் 629 003

## தென் ஆர்க்காடு மாவட்டம்

112. திரு. ஆர். வெங்கடசுப்பா
ரெட்டியார்
முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர்
6 காமாட்சி அம்மன்
கோயில் வீதி
திண்டிவனம் 604 001

113. திரு. பொன்னப்ப நாயுடு
முன்னாள் எம். எல். சி.
திண்டிவனம்.

114. திரு. மண்டி சிங்காரம்
பிள்ளை
தியாகி
திண்டிவனம்

115. திரு.
ஓ. எம். வெங்கட்டராமன்
ஓமந்தூர்

116 திரு. ஏ. சி. ஜனார்த்தன
ரெட்டியார்
ஜெயபுரம் குடியிருப்பு
திண்டிவனம்

117. திரு முலசூர் மாதவ
ரெட்டியார்
நெமலி (திருவக்கரை)

118. திரு. முத்துராம
ரெட்டியார்
கிளியனூர்
திண்டிவனம் (வட்டம்)

119. திரு. ஆர். வைத்தியலிங்க
ரெட்டியார்
உப்பு வேலூர்
வானூர் ஒன்றியம்
திண்டிவனம் வட்டம்

## வடலூர்

120. திரு. ஊரன் அடிகள்
செயலாளர்
சுத்த சன்மார்க்க நிலையம்

121. திரு. மு. இராமமூர்த்தி
ரெட்டியார்
பெருநிலக்கிழார்
(கௌரவ
மேற்பார்வையாளர்,
சுத்த சன்மார்க்க நிலையத்
தின் தோப்புகள்) பங்கஜ
விலாசம்

122. வயலூர் சுவாமி என்ற
திரு. மீனாட்சிசுந்தரம்

123. திருமதி சாந்தலெட்சுமி
அம்மையார்

124. திருமதி விசாலாட்சி
அம்மையார்

125. திரு. நாகரெத்தினம்
பிள்ளை

126 திரு. எஸ். சுந்தரமூர்த்தி
இடைநிலை ஆசிரியர்
வள்ளலார் குருகுலம்
உயர்நிலைப்பள்ளி

127. குங்கிலியம் திரு. பழ
சண்முகனார்

128. சேலம் திரு. பெருமாள்
செட்டியார்
நிறுவனர்
அனாதை இல்லம்

129. திரு. ஞானசம்பந்த
முதலியார்
குறிஞ்சிப்பாடி.

## நெய்வேலி

130. திரு. ரெங்கசாமி நாயுடு
உய்யக்கொண்டராவி
சேப்ளாநத்தம்

" புலவர் திரு. நடராஜன்
தமிழாசிரியர்
என். எல். சி. உயர்நிலைப்
பள்ளி.

131. திரு. எஸ். திருவடியா
பிள்ளை
நிறுவினர்
இராமலிங்க
உயர்நிலைப்பள்ளி
சுப்பிரமணியபுரம்

132. திரு. எல். வெங்கடராம
ரெட்டியார்
30-ஏ, பாஷியம்
ரெட்டி தெரு
மஞ்சக்குப்பம்
கடலூர் 607 001

133. தியாகி சுதர்சனம் நாயுடு
சுதர்சனம் நாயுடு தெரு
உப்பளவாடி தெரு
மஞ்சக்குப்பம்
கடலூர் 607 001

134. திரு பார்த்தசாரதி
நாயுடு
சென்னை சட்டமன்றத்தின்
முன்னாள் துணை
சபாநாயகர்
கள்ளக்குறிச்சி

135 திரு. எஸ். கே.
லெட்சுமிநாராயண
ரெட்டி
கிராம முன்சீப்
சிறுவந்தாடு 605 105

136. திரு. கே. சீனிவாச
ரெட்டியார்
சிறுவந்தாடு

137. திரு. சி. சுப்பராயலு
ரெட்டியார்
சிறுவந்தாடு

138. திரு. எஸ். பி. வீராச்சாமி
ரெட்டியார்
சிறுவந்தாடு

139. திரு இராமலிங்க
ரெட்டியார்
கூட்டு ரோடு
விழுப்புரம் வட்டம்

140. திரு. எஸ். ஏ அண்ணாமலை
உடையார்
முன்னாள் எம். எல். ஏ
சிறுமதுரை
திருவெண்ணெய் நல்லூர்
(வழி)

141. திரு. கே சுப்பராயலு
நாயுடு
பொதுச் செயலாளர்
மாவட்ட சுதந்திரப்
போராட்ட வீரர்கள்
சங்கம் மற்றும் தமிழ் நாடு
சுதந்திர போராட்ட
வீரர்கள் சமீதி
1, சப்பாணிசெட்டித்தெரு
பண்ணுருட்டி 607 106

142. டாக்டர் சே. சீனிவாசன்,
எம். எஸ்ஸி., பிஎச். டி.,
எம்.பி.பி.எஸ்.(லண்டன்),
ஓய்வுபெற்ற தாவர இயல்
பேராசிரியர்
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

143. திரு. டி. கோவிந்தசாமிப்
படையாச்சி
8 வேங்கான் தெரு
சிதம்பரம்.

144. பின்னலூர் திரு
ஜி. வாகீசம் பிள்ளை
கனகசபை நகர்
சிதம்பரம்

145. திரு
இரா. விநாயகம்பிள்ளை,
எம் ஏ., பி. எல்.,
மனக்குடியான் இருப்பு
சிதம்பரம் வட்டம்

146. திரு பட்டாபிராம
ரெட்டியார்
கோழிப்பாக்கம்.

147. திரு
தி. சு. கலியாணராமன்
131, சேலம் சாலை
விருத்தாசலம் 606 001

148. திரு. ராஜாராம்
ரெட்டியார்
ரெட்டணை

149. திரு பெருமாள் நாயனார்
பஸ் உரிமையாளர்
செஞ்சி

150. திரு. டி. என். ஜகதீசன்
கஸ்தூர்பா குஷ்ட
நிவாரண நிலையம்
மழவந்தாங்கல் 605 701

151. திரு. லெட்சுமிநாராயண
ரெட்டியார்
சொர்ணூர்

152. திரு தி. கி. நாராயணசாமி
நாயுடு
1 சீதாராம் நகர்
கடலூர் என். டி.

153. தியாகி விட்டல்
சீனிவாசராவ்
சிறுகிராமம்
ஆனத்தூர் (வழி)

154. திரு. எம். வீராச்சாமி
ரெட்டியார்
கொல்லியங்குணம்

155. திரு. சுப்புராம
ரெட்டியார்
ரெட்டணை

156. திரு. சிதம்பர அய்யர்
வக்கீல்
விழுப்புரம்

157. திரு. ஜி. ஆதிநாராயண
சுதந்திரப் போராட்ட
வீரர்
4. கமலா நகர்
விழுப்புரம்

158. மகாவித்துவான்
கி. வேங்கடசாமி
ரெட்டியார்
வி. பூதூர் (அஞ்சல்)
வளவனூர் (வழி)
605 108

159. திரு. ஆர். எம். சின்னசாமி
ரெட்டியார்
ராம்பாக்கம்
கண்டமங்கலம் ஒன்றியம்

160. திரு. அஸ்வத்தராமா
ரெட்டியார்
மணம்தவிர்த்த புத்தூர்

## தமிழ் நாட்டுக்கு வெளியே

161. டாக்டர் பி. கோபால
ரெட்டி
சுதர்சன மஹால்
நெல்லூர்
(ஆந்திரப் பிரதேஷ்)

162. திரு. புல்லா ரெட்டி,
ஐ. சி. எஸ்.
8—2—544
பஞ்சாரா ஹில்ஸ்
ஹைதராபாத் – 34

163. திரு. சி. அண்ணராவ்
தலைவர்
திருமலை திருப்பதி
தேவஸ்தானம்
திருப்பதி
(ஆந்திரப் பிரதேசம்)

164. திரு ரெங்கராமானுஜம்
ஓய்வுபெற்ற புள்ளிவிவரத்
துறைத் தலைவர்
ஹைதராபாத்

165. திரு. வெங்கடசுப்பா
ரெட்டியார்
முன்னாள் புதுவை
முதலமைச்சர்
மடுகரை
(புதுச்சேரி மாநிலம்)

166. டாக்டர். அறம்
நாகாலாந்து சமானக் குழு
கோஹிமா
நாகலாந்து

## உதவிய நூல் நிலையங்கள்

1. தலைமைச் செயலக
நூல்நிலையம்
சென்னை 600 009

2. தமிழ்நாடு சட்டப் பேரவை
நூல்நிலையம்
சென்னை 600 009

3. கன்னிமாரா நூல்நிலையம்
சென்னை 600 008

4. மறைமலையடிகள்
நூல்நிலையம்
சென்னை 600 001

5. ஆவணக் காப்பக
நூல்நிலையம்
தமிழ்நாடு அரசு
சென்னை 600 008

6. அண்ணாமலைப் பல்கலைக்கழக
நூல்நிலையம்
அண்ணாமலை நகர்

7. சுத்த சன்மார்க்க நிலைய
நூல்நிலையம்
வடலூர்

8. ஊரன் அடிகள் நூல்நிலையம்
வடலூர்

9. காந்தி மியூசிய நூல்நிலையம்
மதுரை

10 காந்தி கலைமன்றத்து
நூல்நிலையம்
இராஜபாளையம்

11. திரு. அஸ்வத்தராம
ரெட்டியார் நூல்நிலையம்
மணம்தவிர்த்த புத்தூர்

12. மஹாஜன சபை
நூல்நிலையம்
சென்னை 600 002

## பயன்பட்ட பழைய இதழ்கள்

1. ஹிந்து
2. கல்கி
3. விடுதலை
4. தேசாபிமானி, கடலூர்
5. மெட்ராஸ் இன்ஃபர்மேஷன்
6. செந்தமிழ்ச் செல்வி
7. சன்மார்க்க விவேக விருத்தி
8. செங்கோல்
9. சத்தியகங்கை

## மற்றும் உதவியவர்கள்

1. திரு. சிவராமகிருஷ்ணன்
ஜே. சி. குமரப்பா நினைவு
நிலையம்
சாந்தோம்
சென்னை 600 004

2. திரு.
இரா. முத்துக்குமாரசாமி,
எம். ஏ., பி. லிட்.,
நூலகர்
மறைமலையடிகள்
நூல்நிலையம்
சென்னை 600 001

3. திரு.
மு. பி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ.
தமிழ்த் துணைப்பேராசிரியர்
கந்தசாமிக் கல்லூரி
521 அண்ணுநகர்
சென்னை 600 040

4. திரு. ஏ. கி. பாப்புராஜா
நூலகர்
காந்தி கலைமன்றம்
இராஜபாளையம்

5. திரு. முத்துக்கிருஷ்ணன்
ஹரிஜன சேவா சங்கம்
தக்கர் பாபா வித்தியாலயம்
சென்னை 600 017

6. திரு. சொக்கலிங்கம்
'சொனு' துணிக்கடை
நெய்வேலி

7. டாக்டர். ந. சுப்பு
ரெட்டியார்
தலைமைப் பதிப்பாசிரியர்
தமிழ்க் கலைக்களஞ்சியம்
(இரண்டாம் பதிப்பு)
சென்னை 600 005

8. திரு. இரா. சம்பந்தம்
பிள்ளை
வடக்கு வீதி
சிதம்பரம்

9. திரு.
ச. மெய்யப்பன், எம். ஏ.,
வாகீச நகர்
சிதம்பரம்

10. பேராசிரியர்
சி. எஸ். மகாதேவன்
ஆசிரியர்
கிஸான் வொரல்டு
சென்னை 600 086

11. திரு. இ. எம். சுப்பிரமணிய
ரெட்டியார்
முன்னுள் எம். எல். ஏ.
இருவேலப்பட்டி

12. திரு. சங்கர ரெட்டியார்
வீரப்பெருமாள் நல்லூர்

13. திரு. எஸ். வெங்கட்டராமன்
முன்னுள் மானேஜர்
தமிழ்நாடு காங்கிரஸ்
கமிட்டி
சென்னை

14. திரு. பொன்னுச்சாமி
பாதுகாப்பு அதிகாரி
நெய்வேலி பழுப்பு
நிலக்கரிச் சுரங்கம்
நெய்வேலி

15. திரு. வள்ளியப்பன்
தமிழ் நாடு காங்கிரஸ்
கமிட்டி
சென்னை

16. திரு. சி. இராம. நாகப்ப
செட்டியார்
85 ஜி. இராமநாதபுரம்சாலை
மதுரை – 9

17. திருமதி. என். சாரதா
26 அனந்தராம லே அவுட்
லிங்கராஜபுரம்
பெங்களூர் 560 005

18. திரு. எஸ். சரவணன்
சண்முகநாதபட்டினம்
623 405

19. திரு. எஸ். பெரியகருப்பன்,
பி. பி. ஏ.,
நெற்குப்பை
622 405

20. திரு. வ. சம்பந்தம்
இணை ஆசிரியர்
'தமிழரசு', செய்தித்துறை,
தமிழக அரசு
சென்னை 600 002

21. தென் இந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்
140 பிரகாசம் சாலை
(பிராட்வே)
சென்னை 600 001

22. திரு. கிருஷ்ணபாரதி,
துணை இயக்குநர்,
செய்தி மக்கள்
தொடர்புத்துறை,
தமிழக அரசு, சென்னை – 9

23. கலைமாமணி டாக்டர்.
உளுந்தூர்ப்பேட்டை
சண்முகம்
இயக்குநர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
தமிழக அரசு, சென்னை

# REDDIAR, O. P. RAMASWAMI

(1895 - 1970)

O. P. RAMASWAMI Reddiar was born in 1895 in a peasant family of the Reddiar Community in the Village of Omandur in South Arcot District. Popularly known as Omandur after his native village he was of Telegu descent and brought up in Orthodox Hindu traditions. He studied upto middle school in his home village. Taking interest in politics, he came under the influence of the leaders of the moderate group in the freedom movement. As a member of the Indian National Congress, since 1926, he turned into an excellent party worker, organiser and speaker. Because of his role in the freedom agitation, he was sent to jail four times.

In 1938 he was elected President of the Tamil Nadu Congress Committee in which capacity he made the party popular among the Villagers. Since 1946 he was in the Madras Legislative Council either as an elected or as a nominated member. For two years from March 1947 he served as the Premier of the Composite Madras Province. By 1962 he ceased to be an active member of any political party. In 1964 he was nominated to the Council for the last time but he resigned his membership because of illness. Yet he remained as a factor in Madras politics till his last day.

With Madras as the centre of his activity, the period of his contribution to Nationalist activities was from 1940 to 1962. In the meetings he addressed, he explained to the learned as well as the illiterate that the British policy of exploition and people's dependence on foreign goods ruined the economy of the village. To promote the welfare of the people, rural industry should be rehabilitated agriculture and commerce should be promoted and villages should be made self-reliant economically with Khadi as a major scheme. Freedom was essential for the attainment of this objective. He propagated the ideas of the Congress Party with stress on Gandhism and advocated non-violent methods, centred on Sathyagraha for the attainment of Independence. A believer in moss movement, he declared.

**"Every one should realise that it is his duty to do his bit to secure Freedom."**

Omandur took an abiding interest in agriculture, education and religion. He missed no opportunity of championing the cause of the peasantry. While he considered the caste system to an evil to be felt he believed that education would mitigate it. He suppor -ted the introduction of basic education and compulsory primary education. Eager to promote the cause of Hindu religion, he founded two organisa- tions. The Jyothi Ramalinga Mission Samarasa Sanmargha Sangham and the Vallalar Illam. A man of simple tastes and pleasing manners, he bequeathed all his property to the Samarasa Sanmargha Sangam.

Directory of National Biography
Vol. III.
(M-R) P. 526
Edited by S. P. Sen,
Institute of Historical Studies
CALCUTTA (1974)

# பெயர் அகர வரிசை

அசுவத்தராம ரெட்டியார் – 121
அண்ணாத்துரை, சி. என். – 123, 228, 231, 232, 254
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – 70, 76, 99
அத்வைதானந்த சுவாமிகள் – 146
அப்பண்ண சுவாமிகள், வடகரை – 146
அப்பர் – 16
அப்பாஸ் கலீலி, ஐ. சி. எஸ். – 238
அப்பாஜி ரெட்டியர், ராதாபுரம் – 22, 25
அப்பண்ட ராஜா – 244
அய்யாமுத்து, கோவை – 70, 191, 220, 222
அரவிந்தகோஷ் – 146
அரியலூர் மாநாடு – 55
அருட்பிரகாச சுவாமிகள், ராஜமன்னார்குடி – 147, 157
அருணாசலம், க. – 82, 142, 207, 213, 278
அருணாசலம் டி. ஆர். – 54
அவினாசிலிங்கம் செட்டியார் – 55, 58, 65, 111, 236,
அழகிரிசாமி, மதுரை – 145, 210
அழகிரிசாமி, ஏ. (நீதிபதி) – 237, 239, 244, 260, 280, 288, 290,

அன்பழகன், பேராசிரியர் – 140
அனந்தாச்சாரி – 290
அன்னிபெசன்ட் – 26
ஆச்சார்ய பட்வர்தன் – 266
ஆகாகான் – 295
ஆண்டிரூஸ் – 122
ஆதித்தனுர், சி. ப. – 44
ஆதிநாராயணு –19, 28, 90, 101,
ஆற்றுமகான் சுவாமிகள், பூண்டி – 147
ஆறுமுகம், வ. உ. சி. – 248
ஆனந்த விகடன் - 393
இந்தி – 45,
இந்திராகாந்தி – 71
இரத்தினவேலு சுப்பிரமணியம், டாக்டர் – 88, 246, 287, 285, 400
இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை – 83
இராமகிருஷ்ணய்யர், ஆதம்பாக்கம் – 224, 226
இராமகிருஷ்ண ரெட்டியார், ஆற்றுப்பாக்கம் – 224
இராமச்சந்திரன், ஜி. – 207, 211, 213,
இராமகிருஷ்ண வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம் – 145
இராமசாமி ரெட்டியார், அழிஞ்சிப்பட்டு – 143, 176, 290
இராமசாமி, என். ஜி – 283
இராமமூர்த்தி, எஸ். வி. – 288
இராமமூர்த்தி ரெட்டியார் – 166, 377, 386
இராமலிங்கம்பிள்ளை, திருச்செந்தூர் – 350
இராஜமன்னுர், பி. வி. – 100, 269, 271
இராஜாஜி – பார்க்க இராஜாஜி
இராஜேந்திரப் பிரசாத் – 35, 150
ஈ. வே ரா. – 19, 60, 113, 200, 315, 344
உடுப்பி பூஜாவர மடம் – 319
உத்தண்டராமப்பிள்ளை – 172
உஜ்ஜல்சிங், சர்தார் – 401
ஊரன் அடிகள் – 267, 352, 399, 404
எக்கனுமிஸ்ட், லண்டன் – 197
எலுமிச்சம்பழம் – 1
ஏனுதிமங்கலம் மாணிக்க சுவாமிகள் – 146
ஐயர், வ. வே. சு. குருகுலம் – 19
ஓசூர் கால்நடைப் பண்ணை – 172

ஓமந்தூர் – 5, 121, 205
ஓமந்தூரார் குடும்பம் – 7, 14
ஓமந்தூரார் திருமணம் – 13
ஓமந்தூரார் படிப்பு – 8, 10, 16, 18,
ஓமந்தூரார் பெற்றோர் – 8, 9, 10
ஓமந்தூரார் மகன் – 19, 20
கசவனம்பட்டி மௌன சுவாமிகள் – 147
கடலூர்ச் சிறை – 45, 46
கடலூர் மைதானக் கிளர்ச்சி – 32, 33
கணபதி சாஸ்திரி – 23
கணேசன், வி. – 152
கணேசன், சா. – 168
கதர்ப்பிரச்சாரம் – 28
கபூர், ஐ. சி. எஸ். – 184
கமலாநகர் (விழுப்புரம்) – 35
கரியப்பா, ஜெனரல் கே. எம். – 90
கரையாளர் எல். எஸ். – 53
கருணாநிதி, மு. – 140, 400, 401
கல்கி சதாசிவம் – 20
கல்கி கிருஷ்ணமூர்த்தி – 51, 110, 113, 116, 117, 277
கல்கத்தா – 26
கல்யாணசுந்தர முதலியார் (திரு. வி. க.) – 282, 362
கவர்னர் நை துரை – 80, 235, 241
கள்ளுக்கடை மறியல் – 27
காசி – 26
காஞ்சி காமகோடி பீடம் – 9, 145
காந்தி – பார்க்க : மகாத்மா
காந்தி நிகேதனம், கல்லுப்பட்டி – 99, 208, 211, 218
காந்தி மியூசியம், மதுரை – 278
காமராஜ் – 71, 116, 176, 233, 240, 268, 282, 337, 338, 373, 375, 402
காரைச்சித்தர், கும்பகோணம் – 147, 158
காளா வெங்கடராவ் – 236, 246
காஸ்மோபாலிட்டன் கிளப் – 70, 93, 344
கிராம்பு சத்தியாக்கிரகம் – 304
கிரி, வி. வி. – 182
கிரிதாரி பிரசாத் – 351, 357
கிருபாளனி, ஆச்சார்ய – 44

கிருபானந்த வாரியார் சுவாமிகள் – 76, 96, 121, 124, 357, 363, 370, 373
கிருஷ்ணசாமி ரெட்டியார், நீதிபதி – 285
கிருஷ்ணய்யா, பி. வி. – 241, 244, 250, 276, 309
கிருஷ்ணமூர்த்தி, டாக்டர். – 228
கிருஷ்ணமாச்சாரி, டி. டி. – 70
கிளப்புவாலா ஜாதவ் – 136
கிளியனூர் – 11
கீழ்பவானித் திட்டம் – 175, 236
குபேர் - 309
குமரப்பா, ஜே. சி. – 129, 167, 178, 213, 326
குமாரசாமி ராஜா – 37, 40, 117, 152, 175, 221, 222, 282, 331, 338, 339, 340
குருகுலம், மாம்பாக்கம் – 83
குருசாமி, கல்லுப்பட்டி – 165 170, 203, 207, 208, 215, 216, 224, 286, 315
குருபாதம், டாக்டர். – 72, 123, 211, 213, 216, 236
குலசேகரதாஸ் – 204
கூர்மையா – 236
கெய்த்தான், ஆர். ஆர். – 207, 213
கொடுமுடி ராஜகோபாலன் – 252
கொண்டாரெட்டியார் சுவாமிகள் – 146
கோபாலசாமி அய்யங்கார், என். – 271
கோபால ரெட்டி – 112, 125, 176, 186, 192, 235, 237, 267, 282 295, 340
கோவிந்த ராமானுஜ ஏகாங்கி சுவாமிகள் – 146, 155
கோவிந்த ரெட்டியார், ரெட்டிக்குப்பம் – 25
கேளப்பன் – 213
சங்கரானந்த சுவாமி – 146
சச்சிதானந்த சுவாமிகள் (அமெரிக்கா) –
சச்சிதானந்த சுவாமிகள் (கண்டமங்கலம்) – 146
சஞ்சீவ ரெட்டி – 237, 292
சடகோபன் – 164, 189, 243, 247, 249, 259, 270, 275, 289, 291
சண்முகனூர், குங்கிலியம் பழ. – 85, 387, 389
சண்முகம் செட்டியார், ஆர். கே. – 22, 105
சண்முகசுந்தரம், வி. எஸ். – 218, 350, 377
சத்தியமூர்த்தி, எஸ். – 348
சதாசிவ ரெட்டியார், மேல்பாக்கம் – 26

சந்திரமௌலி – 236
சந்தானம், க. – 333
சர்மா, பி. ஆர். கே. – 162
சர்தார் வல்லபாய் படேல் – 68, 125, 177, 186, 241, 243, 245, 264, 266, 305
சரசுவதி மஹால் – 137, 141
சஹஜானந்தா, சுவாமி, – 146
சாந்தானந்த ரெட்டியார், குச்சிப்பாளையம் – 25, 145
சாம்பசிவ ரெட்டியார், ஆத்தூர் – 261, 276
சாந்தலெட்சுமி அம்மையார் – 366
சாவி – 292
சிங்காரம்பிள்ளை, மண்டி – 27
சிதம்பர ஐயர் (விழுப்புரம்) – 27, 35, 50
சித்பவானந்த சுவாமி – 96, 99, 146, 289
சிதம்பரம் பிள்ளை, வ. உ. – 248
சிவஞானபாலைய சுவாமிகள், மயிலம் – 146
சிவஞானம், ம. பொ. சி. – 46, 248, 322, 352
சின்னச்சாமி ரெட்டியார் (கிளியனூர்) – 10, 11, 12, 13
சின்னச்சாமி ரெட்டியார் (சிறுவந்தாடு) – 31
சின்னையாபிள்ளை, டி. எம் – 357
சின்ன அண்ணாமலை – 111
சிறுவந்தாடு – 27, 29, 31, 33, 46
சீதாராம சாஸ்திரி – 146
சீதாராம ரெட்டி – 187, 236
சீராமன், புலவர் – 264, 350
சீமைத்துணி மறியல் – 33
சீனிவாச ரெட்டியார், கே. – 31
சீனிவாசன், டாக்டர் கு. – 76, 86, 351, 356, 358
சீனிவாச ரெட்டியார் (முலகூர்) – 202
சீனிவாசராவ் (விட்டல்) – 204, 209
சுந்தரம், காப்டன் – 294, 300
சுந்தரமூர்த்தி சுவாமிகள் – 15
சுந்தரேசன், சீர்காழி – 157, 385
சுந்தரவடிவேலு, நெ. து – 138, 238, 251, 373
சுத்தானந்தபாரதியார் – 77, 146 158, 363, 364, 370
சுதர்சனம் நாயுடு – 27, 47, 90, 209
சுதந்திராக் கட்சி – 44
சுப்பராயலு, கே. – 122
சுப்பராயலு ரெட்டியார் – 7, 24

சுப்பிரமணிய ஐயர், கடலூர் – 45
சுப்பராம ரெட்டியார், ரெட்டணை – 287
சுப்பராமன், நா. ம. ரா. – 54, 58–62, 211, 278
சுப்பையாபிள்ளை, வ. – 98
சுப்பிரமணியம், புத்தனேரி – 114, 253, 280
சுப்பிரமணியம். சேலம் – 38
சுப்பிரமணியம், சி. – 235, 333, 373
சுப்பிரமணியம் டாக்டர். எஸ். – 372
சுப்பிரமணியம், எஸ். ஆர். – 266, 275, 282, 304, 306, 309
சுப்பராயன் (டி. ஐ. ஜி.) - 291
சுப்பராயன், டாக்டர். – 28, 235, 237, 243, 267, 337, 338
சுப்பு, கொத்தமங்கலம் – 210
சுந்தரமூர்த்தி, குருகுலம் ஆசிரியர் – 396
சுப்பையா கவுண்டர் – 358
சுப்பையா, வி. – 305
செரியன், டாக்டர். பி. வி. – 70
சென்னியப்ப முதலியார் – 97, 157, 363, 370, 399, 405
சென்னை ராஜதானி – 24
சேதுராமன், அருட்கவி – 98, 99, 122, 146
சேதுப்பிள்ளை, ரா. பி. – 117, 212
சேவா மந்திர் (பரங்கிப்பேட்டை) – 207
சேஷாத்திரி சுவாமிகள் – 153
சேஷாத்திரி ஆர். எம்., ஐ. சி. எஸ். – 244
சொக்கலிங்கம், டி. எஸ். – 117, 234, 309, 322
சொர்ணூர் – 30
சௌந்தரம் ராமச்சந்திரன் – 97, 216, 338
சோமயாஜுலு, எஸ். என். – 30, 37, 268, 347
சோமசுந்தரம், என். நீதிபதி – 270
சோமசுந்தரம் ரெட்டியார் – 376
ஞானசம்பந்த முதலியார் – 85, 220
ஞானியார் அடிகள் – 119, 145
ஞானானந்தகிரி, திருக்கோவலூர் – 145, 147
டெக்ஸ்டூல் கம்பெனி – 263
தண்டபாணி சுவாமிகள் – 146
தஸ்திக் அலவன்ஸ் – 327
திண்டிவனம் – 5, 8, 9, 27
தியாகராஜச் செட்டியார், கருமுத்து – 97
தியாகராஜ முதலியார், வி. எஸ். – 357, 375

திருவாரூர் – 15, 121, 122
திருப்பதி – 102
திருவொற்றியூர் 98,
திருவலம், மௌனசுவாமிகள் – 146, 153, 155, 399, 403
திருத்தணி மௌன சுவாமிகள் – 146
திரவியம், கா. – 218
திருவேங்கடாச்சாரி – 271
திருமறைக்காடு – பார்க்க : வேதாரண்யம்
திருவண்ணாமலை – 313
திருவாவடுதுறை ஆதீனம் – 314
திரு. வி. க. – பார்க்க : கல்யாணசுந்தர முதலியார்
திருவடியாபிள்ளை – 374, 379, 384
துரைசாமி ரெட்டியார் (மைத்துனர்) – 86, 351
துரைக்கண்ணன், நாரண – 113, 114, 116, 210
துரைசாமிபிள்ளை, அவ்வை – 322
தூயவாழ்க்கைப் பயிற்சிக் கழகம் – 95
தேசியப் பாடசாலை – 27
தேவநாயக ஐயா – 27, 31, 47
நடராஜ ஐயர், கடலூர் – 50
நடராஜன், டாக்டர் ப. – 70, 100, 162, 183, 187, 188, 244, – 28
நடராஜன், புலவர் – 91, 378
நடராஜன், பெரம்பூர் – 263
நடராஜன், டாக்டர் அவ்வை – 399, 400
நாகபுரி மாநாடு – 25, 26
நாயுடு, ஜி. டி. – 90, 140
நாகபுரி சத்தியாக் கிரகம் – 45
நாராயண குரு – 350
நாராயணசாமி நாயுடு தி. கி. – 167, 200
நாராயணசாமி, டாக்டர் பி. வி. – 187
நாராயணசாமிப்பிள்ளை, டி. எம். – 260, 285, 289
நிரஞ்சனாநந்தா – 153
நெடுஞ்செழியன், நாவலர் – 55, 402
நெய்வேலி – 365, 383, 385
நெல்லிக்காய் – 84
நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் – 39, 42, 70
பகீரதன் – 277
பஷீர் அகமது சாயீத் – 9
பண்ணுருட்டி – 27, 102
பவநகர் மகாராஜா – 68, 242, 272

பலாப்பழத் திருட்டு – 92
பலராமையா – 139
பக்தவத்சலம், மீ. – 36, 37, 125, 211, 235, 237, 240, 268, 337
பார்த்தசாரதி அய்யங்கார் – 50, 263, 275
பாஷ்யம் ரெட்டியார், ஏ. வி. – 158, 379
பிரகாசம் – 167, 175, 177, 191, 192, 215, 221, 232, 249, 253, 289, 337
புல்லா ரெட்டி, ஐ. சி எஸ். – 89
பூமிதானம் – 365
பெருமாள் செட்டியார், சேலம் – 73
பெரோஸா தலையார்கான் – 152
பெரியகுளம் பழ ஆராய்ச்சிப்பண்ணை – 166
மணம்தவிர்த்த புத்தூர் – 15
மகாத்மா காந்தி – 35, 39, 40, 150, 274, 277, 286, 327
மகாலிங்கம், நா. – 94, 101, 155, 216, 351, 358, 393, 412
மனோகரன் பு – 140
மலம்புழாத் திட்டம் – 177
மணி, டி. என். எஸ். – 384
மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் – 24
மாதவ ரெட்டியார், மூலகூர் – 25, 26, 28, 55, 74, 242, 307, 339
மார்க்கண்டன்பிள்ளை – 90
மாத்தூர் சுவாமிகள் – 151, 146, 156
மாதவ மேனன் – 236
மீனுட்சிசுந்தரம் (திருஅருட்பா கற்பிப்பவர்) – 389
முன்ஷி, கே. எம். 264
முத்துராம ரெட்டியார் – 13, 164
முத்துக்குமரப்ப ரெட்டியார், 14
முத்துக்குமரப்ப ரெட்டியார் (கட்டளை) – 26
முத்துக்குமரப்ப ரெட்டியார், நெட்டப்பாக்கம் – 309
முத்துரங்க முதலியார் – 35, 71, 232, 337
முனிசாமிபிள்ளை (ஐ) – 39
முத்துலெட்சுமி ரெட்டி, டாக்டர் – 90, 229
முகுந்தானந்த சுவாமிகள் – 146,
முத்துமல்லா ரெட்டியார் – 161
முத்துலிங்க ரெட்டியார் (கயப்பாக்கம்) – 184, 260, 271, 281, 291
மௌண்ட்பாட்டன் பிரபு – 17, 24
மெய்யப்பன், ஏவி. எம். – 112, 113, 114, 115
மைசூர் மகாராஜா – 77, 81.

டேனியல் தாமஸ் – 236
யோகியார், ச. து. சு. – 114
ரங்கா ரெட்டி – 26, 242
ரமண ஆசிரமம்
ரமண மகரிஷிகள் } 35, 146, 147 – 153, 159, 167, 363
ராஜகோபால் கே. எம். – 244
ராஜமகேந்திரபுரம் – 26
ராஜம் செட்டியார் – 27, 90, 158
ராஜாஜி 31, 33, 40, 41, 42, 44, 55, 69, 71, 88, 113, 150, 152, 232, 233, 268, 282, 300, 337, 338, 383
ராஜபாளையம் – ப.
ராமுண்ணி மேனன், ஐ. சி. எஸ். – 90,
ராமசாமிச் செட்டியார், சி. ராம. – 97
ராஜன், டி. எஸ். எஸ். 146,235, 272, 298, 314, 340, 357
ராமமூர்த்தி ரெட்டியார், வடலூர் – பார்க்க இராமமூர்த்தி ரெட்டியார்
ரெங்கசாமி நாயுடு – 121
ரெங்கா ரெட்டியார், எஸ் – 363, 366
ரெங்கசாமி அய்யங்கார் (ஹிந்து ஆசிரியர்) – 27
ரெங்கநாத ஆனந்த்ஜி சுவாமிகள் – 146
ரெட்டி, கே. வி. – 296, 297
ரெட்டி, வி. வி. – 229
ரெட்டியார்கள் – 6
ரெட்டி, சி. ஆர். – 67
ரெட்டியாபட்டி சுவாமி – 146, 157
லலிதானந்த சுவாமிகள் – 146
லால் பாகதூர் சாஸ்திரி – 70
லெட்சுமிநாராயண ரெட்டியார்(ஓ. எம்.) – 14, 15, 20, 26, 209, 286, 291, 362, 400
லெட்சுமிநாராயண ரெட்டியார் (சொர்ணூர்) – 30, 176, 189
லெட்சுமிநாராயண ரெட்டியார் (எஸ். கே.) – 31, 121, 280, 281
வர்கீஸ், டி. ஏ. – 177, 243, 259, 272,
வரதன் – 87
வரதாச்சாரி, என். எஸ். – 322
வல்லநாட்டு சுவாமிகள் – 147
வல்லபாய் பட்டேல் – பார்க்க, சர்தார்
வாகீசம்பிள்ளை – 121, 224, 228, 358, 365, 370, 371, 399
விரஸ்தானந்தசுவாமி – 146, 158
விஜயராகவாச்சாரி, சி. – 26, 42

'விடுதலை' தலையங்கம் – 341–344
விழுப்புரம் மாநாடு – 26, 34
விநோபாவே – 50, 365
விநாயகம்பிள்ளை, இரா. – 51, 208, 211, 214, 314
விசுவநாதம், கி. ஆ. பெ. – 85, 107, 140, 366, 381
விட்டோப சுவாமிகள் – 146
வீராச்சாமி ரெட்டியார் – 31
வீரபாகு, ஏ. பி. சி. – 292
விஜயராகவன் (ஐ. ஜி) – 308
வெங்கடசுப்பா ரெட்டியார் (மடுகரை) – 7–310
வெங்கட்ட்ராம ரெட்டியார் (ஓ. எம்.) – 14
வெங்கட்டராமன், டி. என். – 150, 151
வெங்கடசுப்பா ரெட்டியார் (திண்டிவனம்) – 171, 234, 310, 363
ஜெயராம ரெட்டியார் – 198
வெங்கடேசுவரன், ஐ. சி. எஸ். – 244, 272
வெங்கட்டராமய்யர், மட்டப்பாறை – 268
வெங்கடகிருஷ்ணய்யர், எல். – 288
வேங்கடராம ரெட்டியார், நெமிலி – 25, 401
வேதாரண்யம் } 28, 47, 48, 312
வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகம் }
வேதரத்தினம், சர்தார் – 58–211
வேங்கடசாமி ரெட்டியார், மகாவித்துவான் – 56
வேங்கடசாமி, கண் டாக்டர் – 83
வேங்கடாசலபதி, கோ. – 211, 212, 213, 221, 222
வைத்தியநாத அய்யர் – 286, 322
ஹெல்லட், காப்டன் – 298, 299
'ஹிந்து' ஆசிரியர் கே. சீனிவாசன் – 272
'ஹிந்து' – 300
ஸ்காட் பிரவுன் – 244
ஷெட்டி, ஏ. பி. 236
ஜகதீச அய்யர் – 280, 281
ஜகதீசன், த. ந – 223 225
ஜகந்நாதன், கி. வா. – 375
ஜனார்த்தன ரெட்டியார் – 68, 169
ஜவஹர்லால் நேரு – 78, 122, 135, 192, 197, 264, 268, 271, 297, 301, 304, 308, 383

# ஓமந்தூராரால் அரசின் மேற்பார்வைக்குள் கொண்டுவரப் பெற்ற சமண ஆலயங்களும் அறக்கட்டளைகளும்

செங்கற்பட்டு மாவட்டம்:

1. அருள்மிகு திருலோக்கியநாதசுவாமி ஆலயம்,
திருப்பருத்திக்குன்றம்,
காஞ்சிபுரம் வட்டம்.

2. அருள்மிகு தர்ம தீர்த்தங்கர் சமண ஆலயம்,
அருங்குளம் கிராமம்,
திருத்தணி வட்டம்.

வடஆர்க்காடு மாவட்டம்:

1. அருள்மிகு அருகர் ஆலயம்,
வெண்குன்றம் கிராமம்,
வந்தவாசி வட்டம்.

2. அருள்மிகு அருகர் ஆலயம்,
பிருதூர் கிராமம்,
வந்தவாசி வட்டம்.

3. அருள்மிகு அருகர் ஆலயம்,
பூண்டி கிராமம்,
ஆரணி வட்டம்.

4. அருள்மிகு வர்த்தமானேஸ்வரர் ஆலயம்,
தேசூர் கிராமம்,
வந்தவாசி வட்டம்.

5. அருள்மிகு ரிடப சுவாமி ஆலயம்,
கோகிலம்பட்டி கிராமம்,
செய்யாறு வட்டம்,

6. அருள்மிகு குன்றுநாதசுவாமி மற்றும் தேவராஜ
சுவாமி ஆலயம்
கரந்தைக் கிராமம்
செய்யாறு வட்டம்.

7. அருள்மிகு அருகர் ஜெயின் ஆலயம்,
இராமசமுத்திரம் கிராமம்,
வந்தவாசி வட்டம்.

8. அருள்மிகு திருலோக்கியநாத சுவாமி ஆலயம்,
தெள்ளாறு கிராமம்,
வந்தவாசி வட்டம்.

தென்ஆர்க்காடு மாவட்டம்:

1. அருள்மிகு ஆதீஸ்வரர் என்னும் அருகர் ஆலயம்
மேல்மலையனூர் கிராமம்,
செஞ்சி வட்டம்

தஞ்சாவூர் மாவட்டம் :

1. அருள்மிகு தீபநாயகி அம்மன் ஆலயம்,
தீபங்குடி கிராமம்,
நன்னிலம் வட்டம்.

இராமநாதபுரம் மாவட்டம் :

1. அருள்மிகு மணவாளநாத சுவாமி ஆலயம்,
அம்மத்தான்குடி கிராமம்,
திருவாடானை வட்டம்

பெரியார் மாவட்டம் :

1. அருள்மிகு அம்மணீஸ்வரர் ஆலயம்,
திங்களூர் கிராமம்,
ஈரோடு வட்டம்.

2. அருள்மிகு சந்திரபிரபா தீர்த்தங்கர் ஆலயம்,
மேட்டுப்புதூர் (விஜயமங்கலம்),
ஈரோடு வட்டம்.

3. அருள்மிகு பஸ்திக் கோயில், ஆதீஸ்வரர் ஆலயம்,
(ஆதிநாதர் ஆலயம்),
சீனாபுரம் கிராமம்,
ஈரோடு வட்டம்,

# யார் அந்த இளைஞர்?

“இந்தியா உலகிற்கு அளிக்கும்!” என்றார் புரட்சிக் கவி பாரதி. இப்படிக் கூறியதில் அவரது உள்ளம் நிறைவு கொள்ளவில்லை. எனவே அழுத்தம் கொடுத்து.

“இந்தியா உலகிற்கு அளிக்கும்-ஆம்
இந்தியா உலகிற்கு அளிக்கும். ஆமாம்
இந்தியா உலகிற்கு அளிக்கும்!”

என்றார். ‘எல்லோரும் அமர நிலை எய்தும் முறையை’ இந்தியா உலகிற்கு அளிக்கும் என்பதில் மகாகவி பாரதிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

பிறப்பால், நிறத்தால் பேதம் பார்க்கும் நிறவெறியர்களை உலக மன்றத்தில் அம்பலப்படுத்துவதற்கு முதன் முதலாக இந்தியா உலகிற்கு ஒரு வழியைக் காட்டியது. தென்னாப்பிரிக்க அரசாங்கம், இன்று போலவே 1937-ம் ஆண்டிலும், ‘நிறவெறி கோர தாண்டவம்’ ஆடிக் கொண்டிருந்தது. அங்கே இந்தியர்களும், அம்மண்ணிலேயே பிறந்து வளர்ந்து, அம்மண்ணுக்குரிய மக்களாகிய தென்னாப்பிரிக்க (நீக்ரோ) மக்களும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். உலக மக்களின் கண்டனக் குரலோ, காந்திஜியின் கோரிக்கையோ, நிறவெறி அரசாங்கத்தின் செவிட்டுக் காதுகளில் விழவேயில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி அந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தியது. தென்னாப்பிரிக்க அரசாங்கத்திற்கு உலகின் கண்ணோட்டத்தைத் திருப்பும் முறையில் பாடம் புகட்டுவது என்று தீர்மானித்தது.

அப்போது, தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குக் கப்பல் கப்பலாகக் கிராம்பு இறக்குமதியாகிக் கொண்டிருந்தது. அந்நியத் துணிகளைப் பகிஷ்கரிப்பது போன்று, தென்னாப்பிரிக்கக் கப்பல்களையும் பகிஷ்கரிப்பது என்று முடிவு எடுத்தது.

இந்த முடிவைச் செயல்படுத்த முடியுமா? ஆட்சிபீடத்தில் இருப்பதோ பிரிட்டிஷ் அரசாங்கம்! இந்த முடிவைச் சிதறடிப்பது சுதந்திரப் போராட்டத்தையே சோர்வடையச் செய்யும் என்று அந்நிய அரசாங்கம் தப்புக் கணக்குப் போட்டது. மேலும், துறைமுகத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தீர்மானம் செயலாக முடியும். தொழிலாளர்கள் கூலிக்கு வேலை செய்பவர்கள் தானே! தென்னுப்பிரிக்கக் கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்க மறுத்தால், வேலைக்கே வேட்டு வைத்து விடுவோம்' என்று வெள்ளை அதிகாரிகள் திட்டம் போட்டிருந்தனர்.

பல்லாயிரம் ரூபாய் மதிப்புள்ள கிராம்பு மூட்டைகளை ஏற்றிய தென்னுப்பிரிக்கக் கப்பல் ஒன்று, பம்பாய் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சியது. அன்றைய பாம்பாய்த் துறைமுக நிர்வாகத்தினரின் துணைகொண்டு, தொழிலாளர்கள் சிலரைப் பிடித்து கூலி அதிகம் கொடுப்பதாகக் கூறி, வெள்ளை அதிகாரிகள் கப்பல் துறைக்கு அகமகிழ்வோடு அழைத்துச் சென்றனர். தொழிலாளர்களும் கப்பல் நிற்கும் இடத்திற்குச் சென்றனர்.

"வந்தேமாதரம்!"

ஒரு தொழிலாளி முழக்கமிட்டார்; ஏக காலத்தில் எல்லாத் தொழிலாளர்களும் முழக்கமிட்டனர்.

"போலோ! பாரத் மாதா கீ!" ஒரு தொழிலாளி முழக்கமிட்டார்; 'ஜே!' என்று எல்லாத் தொழிலாளர்களும் வான் அதிர முழக்க மிட்டனர். பின்னர் பீடு நடை போட்டு துறைமுகத்திலிருந்து வெளியேறினர்! வெளியே அவர்களை வரவேற்கப் பம்பாய் தொழிலாளர் 'மக்கள்கடல்' காத்திருந்தது. வெள்ளை அதிகாரிகள் வெட்கித் தலை குனிந்தனர். தென்னுப்பிரிக்கக் கப்பலில் வந்த வெள்ளையர்கள் அசடு வழிய விழித்தனர்.

தென்னுப்பிரிக்கக் கப்பலிலிருந்து கிராம்பை இறக்குவது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தன்மானப் பிரச்சினையாகியது. சென்னைத் துறைமுகத்திற்குக் கப்பலை அனுப்பிக் கிராம்பை இறக்குவது என்று திட்டம் தீட்டினார்கள்.

சுதந்திர உணர்வில் பம்பாய்த் தொழிலாளர்களுக்கு சென்னைத் துறைமுகத் தொழிலாளர்கள் சளைத்தவர்களா? சென்னையில் இரண்டாவது முறையாக பிரிட்டிஷ் அரசாங்கம் தோல்வியைக் கண்டது.

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்த பாண்டிச்சேரி. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நினைவிற்கு வந்தது. எப்படியும் பாண்டிச்சேரி துறைமுகத்தில் கிராம்பு மூட்டைகளை இறக்கி விடுவதென்று கங்கணம் கட்டியது. பிரெஞ்சு ஆட்சியும் பேருதவி செய்ய முன்வந்தது. பாண்டிச்சேரியில் ஒரு வியாபாரியும் பிடிக்கப்பட்டார். சென்னையில் தூங்கி வழிந்த கப்பல், பாண்டிச்சேரிக்குப் பயணமாகியது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு இப்போது உண்மையிலேயே அச்சம் பிறந்தது.

"தென்னுப்பிரிக்கக் கப்பலிலிருந்து கிராம்பு மூட்டைகளை இறக்குவதை எப்படியும் தடுத்தே தீர வேண்டும். அதனைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு" என்று, தமிழக வாலிபர் ஒருவருக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சி தாக்கீது அனுப்பியது.

தென்னுப்பிரிக்கக் கப்பல் பாண்டிச்சேரிக்கு வந்து சேர்ந்தது. அந்த வாலிபரும் பாண்டிச்சேரியில் அடியெடுத்து வைத்தார். துறைமுகத் தொழிலாளர்களைச் சந்தித்து உரையாடினுர். தென்னுப்பிரிக்கக் கப்பலை பகிஷ்கரிப்பது, சுதந்திரப் போராட்டத்திற்கு எவ்வளவு உத்வேகம் அளிக்கும் என்பதனை உணர்ச்சி பொங்க எடுத்துக் கூறினுர்.

கப்பலிலிருந்து சரக்கை இறக்கும் நாள்! பாண்டிச்சேரி துறைமுகத் தொழிலாளர்கள் அணிவகுத்து வந்தார்கள். ஆனுல் துறைமுகத்திற்குள் நுழையவில்லை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தைப் பாண்டிச்சேரி தொழிலாளர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொடுத்தனர். அதற்கு முன்னின்ற இளைஞர்—அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் ஆணை பெற்றவர், வேறு யாருமல்ல! முன்னுள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள்தான்!

—சோலை

**ஆனந்த விகடன் 7—3—1965**

# சுத்த சன்மார்க்க நிலையம்

## வடலூர் அஞ்சல் – தென் ஆர்க்காடு மாவட்டம்

(நிறுவியவர்: திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார், முன்னாள் முதலமைச்சர்.)

**நா. மகாலிங்கம்,** பி. எஸ்ஸி., எம். ஐ. இ.
தலைவர்

21—10—77

அன்புடையீர்,

வணக்கம். நலம். சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் ஒருவரும் 1947 முதல் 1949 வரை நமது மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்தவரும், வள்ளலார் புகழ் பரப்பியவருமான சான்றோர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களின் விரிவான வாழ்க்கை வரலாற்றை உருவாக்கும் பணியை விஜயதசமியாகிய இந்த நன்னாளில் தொடங்கியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுத்தாளர் திரு. 'சோமலெ' இதற்காகத் தகவல்கள் சேகரித்தும், தங்களைப் போன்று ஓ. பி. ஆர். அவர்களுடன் நெருங்கிப் பழகிய பெரியவர்களைச் சந்தித்தும், வருகிறார். தங்கள் நினைவில் உள்ள செய்திகளை அவருக்குத் தெரிவித்தால் பயனுடையதாக இருக்கும். ஓ. பி. ஆர். அவர்கள் வரலாறு நன்றாக அமைவதற்குத் தங்களுடைய மேலான யோசனைகளையும் வரவேற்கிறோம். அவற்றை நிறைவேற்ற எங்களால் இயன்றவரை முயலுவோம்.

தங்களிடம் புகைப்படங்கள் இருப்பின் அவற்றைத் தந்து உதவினால் பயன்படுத்திக் கொண்டு திருப்பித் தருவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒழுக்க சீலராகவும் அஞ்சாநெஞ்சராகவும் நம் நாட்டின் பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்கிய ஓ. பி. ஆர். அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை இளைஞர்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டால், நலம் விளையும் என்றும் எனவே இறையருளால் இப்பணி தங்கள் ஒத்துழைப்புடன் இனிது நிறைவேறும் என்றும் நம்புகிறேன்.

அன்புள்ள,
நா. மகாலிங்கம்

# சோமலெ நூல்கள்

※

## பயண இலக்கியம் (10)

நான்கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்
ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்
நமது தலைநகரம்
பிரயாண இலக்கியம்
பர்மா
அமெரிக்காவைப்பார்!
என் பிரயாண நினைவுகள்
பிரயாணம் ஒரு கலை
நான்கண்ட விழாக்கள்
இமயம் முதல் குமரி வரை

## மாவட்ட வரிசை (10)

சேலம்
கோயம்புத்தூர்
கன்னியாகுமரி
தஞ்சாவூர்
வட ஆர்க்காடு
தென் ஆர்க்காடு
செங்கற்பட்டு
திருநெல்வேலி
இராமநாதபுரம்
மதுரை (அச்சில்)

## உலக நாடுகள் வரிசை—10

## ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—12

## இலக்கியம்

செட்டிநாடும் தமிழும்
வளரும் தமிழ்

## வாழ்க்கை வரலாறு

| | |
|---|---|
| பண்டிதமணி | ஓமந்தூர் இராமசாமி-ரெட்டியார் |
| | சர்தார் வேதரத்தினம் (அச்சில்) |

## நாட்டுப் புற இயல்

தமிழ்நாட்டு மக்கள் மரபும் பண்பாடும்

தாலாட்டுப் பாடல்கள் (அச்சில்) — தமிழக அரசின் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் வெளியீடு

## குழந்தை இலக்கியம்

ஒரு சில கதைகள்

## பிற

| | |
|---|---|
| தமிழ் இதழ்கள் | நெய்வேலி |
| நீங்களும் தூதுவர் ஆகலாம் | பல்சுவைக் கட்டுரைகள் |

அலை கடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்.

## பதிப்பித்தவை

| | |
|---|---|
| குடமுழுக்கு மலர்கள்: வெளிவந்தவை | – 12 |
| அச்சில் | – 1 |
| பிற மலர்கள் | – 10 |
| மொழிபெயர்ப்பு நூல்கள் | – 3 |
| ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூல்கள் | – 10 |
| ஆங்கிலத்தில் பதிப்பித்துள்ள பெருமலர்கள் | – 6 |

## எமது வெளியீடுகள் :

1. வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகம் ரூ. 10-00
(ராஜாஜி, T. R. பத்மனுபன்)

2. இறை வணக்க பாடல்கள் ரூ. 2-50

3. காந்திஜி ஒரு சொற்சித்திரம் ரூ. 7-00
(P. V. ஜானகி, M. A. B. T.,)

4. நேரு தம்மைக்குறித்து தம்சொற்களில் ரூ. 10-00
(அ. லெ. நடராஜன்)

5. தம்மபதம் ரூ. 7-00
(அ. லெ. நடராஜன்)

6. நஞ்சுண்டவர் ரூ. 5-50
(நெ. து. சுந்தரவடிவேலு)

7. விவசாய முதலமைச்சர்
(ஓமந்தூரார் வாழ்க்கை வரலாறு)
("சோமலெ")

8. கருவில் வளரும் குழந்தை
(பெ. தூரன்)

மனிதர்கள் தங்களுடைய சகோதர மனிதர்களை அவமானப் படுத்துவதன் மூலம் தாங்கள் கௌரவிக்கப் படுவதாக எப்படி நினைக்கிறார்கள் என்பது, எனக்கு ஒன்றுமே புரியாத மர்மமாக இருந்து வருகிறது.

*  *  *

சேவையின் மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்பதை அறிந்தேன். ஆகையால் சேவையையே என்னுடைய மதம் ஆக்கிக் கொண்டேன்.

*  *  *

ஒருவர் சேவையைச் செய்வதில் இன்பம் கொண்டாலன்றி சேவை செய்வதில் அர்த்தமே இல்லை. வெளிப்பகட்டுக்காகவோ பொதுஜன அபிப்பிராயத்திற்குப் பயந்தோ இதைச் செய்வதாயின் அப்படிச் செய்பவரின் ஆன்ம வளர்ச்சியை அது குன்றச் செய்து உணர்ச்சியையும் நசுக்கி விடுகிறது சந்தோஷமில்லாமல் செய்யும் சேவையினால் செய்கிறவருக்கும் நன்மை இல்லை. சேவையைப் பெறுகிறவருக்குப் நன்மை இல்லை.

மகாத்மா காந்தி
சுயசரிதையில்

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம். போன்: 27–A